
தில்லானா
மோகனாம்பாள்
கலைமணி

# தில்லானா மோகனாம்பாள்

(இரண்டாம் தொகுதி)

139 563



"கலைமணி"

கொத்தமங்கலம் சுப்பு

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை

14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14

கிளைகள் :

திருச்சி - 620 002 சேலம் - 636 001

கோயமுத்தூர் - 641 001 மதுரை - 625 001

ஈரோடு - 638 001

# பொருளடக்கம்

(இரண்டாம் பாகம்)


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | துள்ளி வருகுது வேல் ! | 5 |
| 2. | உள்ளத்தால் பெரியோரே உலகில் பெரியோர் | 15 |
| 3. | தின்றால் தித்திக்கும் திருவைந்தெழுத்து | 26 |
| 4. | கோடாலியும் கம்பும் கூடின | 33 |
| 5. | திருமணம் திருவாரூரில் | 37 |
| 6. | காதலர் பாதையிலே....! | 44 |
| 7. | வைத்திஜியின் வரட்டு தர்பார் | 49 |
| 8. | வம்பும் வழக்கும் வழி மறித்தனவே ! | 62 |
| 9. | வாழ்வை வென்றது காதல் | 74 |
| 10. | குழந்தைப் பிள்ளையின் குறுக்குக் கேள்விகள் | 80 |
| 11. | மஞ்சளழகே ! மல்லிகைப் பூ மணமே ! | 87 |
| 12. | ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே ! | 99 |
| 13. | "அழையாமல் வந்த விருந்தாளி" | 112 |
| 14. | இசையால் வழிபடுவீர்; இறைவன் வருவான் ! | 124 |
| 15. | இன்றைக்கு ஆடலாம் ! | 129 |
| 16. | பரதம் பிறந்த கதை | 132 |
| 17. | கலைக்குப் பகையாமோ காதல் ! | 139 |
| 18. | பணம் படமெடுத்தாடியது | 151 |
| 19. | "வலது பாதம் எடுத்து வை அம்மா" | 158 |
| 20. | காய்ச்சும் நறும் பாலில் கற்கண்டுப்பொடி தூவி | 165 |
| 21. | தீயவர் கேண்மை தீயினும் கொடிது | 173 |
| 22. | கல் ஒன்றில் காய் இரண்டு | 178 |
| 23. | நண்பரைக் காணாது நடுங்கினான் | 185 |
| 24. | கலியாண வீட்டில் கரடி புகுந்தது ! | 191 |
| 25. | புண்ணுக்கு மருந்திடலாம்; புத்திக்கு மருந்தேது? | 198 |
| 26. | எரிமலை குமுறினும் இடம் மாறாத இமயமோ? | 201 |
| 27. | புண்பட்ட நெஞ்சில் புளியிட்டதே போல் | 203 |

28. வர்ணம் ஆடலாம், வழக்காட இயலுமோ? ... 212
29. "அடித்த பாம்பு கடிக்குமா?" ... 224
30. மலக் குரங்கும் மரக் குரங்கும் ... 236
31. உண்மை மறைந்தது உபசரிப்பில் ... 245
32. அலையில் மறைந்தது கடல் ஆழம் ... 249
33. தலையெழுத்தும் கையெழுத்தும் தனித்தனிதானே ! ... 260
34. யாரோ? அவர் யாரோ? ... 264
35. வாங்கினார் வைத்தி ! ... 272
36. செங்கற்பட்டு சந்திப்பு ... 282
37. மாதரே அறிவார் காதலின் பெருமை ... 284
38. கலக்கம் தெளிந்தது ... 290
39. நட்பின் சிகரம் நடேசன் ... 295
40. உள்ளத்தால் நீங்கெண்ணா உத்தமப் பிறவிகள் ... 299
41. வந்ததெல்லாம் வரட்டும் ... 307
42. வடிவேலன் கிருபை இருக்கட்டும் ... 310
43. "அழகிய சிக்கல் சிங்காரவேலன்" ... 314
44. சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் வினை தீர்த்தான் ... 317
45. பாரி பொழிந்தது பண்மாரி ... 329
46. அழகுமலைப் போட்டியிலே அமுத மழை பெய்ததுவே ! ... 340
47. ஆடியும் பாடியும் அடியிணை தொழுவோம் ... 348
48. மனைக்குச் செல்வம் மகப்பேறே ! ... 352
49. மோகனா என் மேல் கோபமா? ... 355
50. "கவனிக்கக்கிறேன் சார்" ... 363
51. சோதிடத்தின் ஆசையிலே சொக்கினார் மகாராஜா ! ... 375
52. வடிவாம்பாள் அன்பே வடிவானாள் ... 385
53. வைத்தியும் வம்பனும் ... 395
54. தியாகத்தில் போட்டி ... 405
55. பகையை மறந்தவரே பாரில் பெரியோர் ... 418
56. அன்னையே ஆடல் அரசி ... 432



## துள்ளி வருகுது வேல் !



கொடியில் மலர் இல்லையேல் குழந்தைகளும் சண்டை பிடிப்பதில்லை. ஆனால் ஒருநாள் காலை ஒரு கொடியில் ஒரே பூ மட்டும் மலர்ந்ததென்று வைத்துக் கொள்வோம். அதற்குத்தான் எத்தனை போராட்டம்? எல்லாக் குழந்தைகளும் அதைப் பறித்துச் சூட்டிக்கொள்ள ஆசைப் பட்டுப் போரிட ஆரம்பிக்கிறார்கள். ஆம், வீட்டுக்குப் பொது அந்த மலர். நாட்டுக்கே பொது என்ற ஒரு குலத்தில் பிறந்த பாவம் தான் மோகனாவை வாட்டியது. இதனால்தானே நாகலிங்கத்தின் பகையும் மகாராஜாவின் விரோதமும் ஏற்பட்டன?

உதாரணமாக ஆற்றில் அவளுக்குக் கிடைத்த ஒரு மாணிக்கத்தையே எடுத்துக்கொள்வோம்.

ஆறு எல்லோருக்கும் பொது. அதில் கிடந்த ஒரு மாணிக்கம் வடிவாம்பாள் கையில் கிடைத்தது. ஆனால் அதைப் பார்த்தவுடன் அந்தக் கூட்டத்திலும் ஆளுக்கோர் எண்ணம் வந்தது. அவள்தான் எடுத்தாளே, வேறு யாருக்காவது கொடுத்தாளா? தன் மகளுக்குத்தான் கொடுத்தாள்.

''இந்தாங்க, இதைப் பாருங்க'' என்றுகூட அதை தம் கண்ணில் காட்டவில்லையே என்று நினைத்தார் மைனர்.

மைனரே இப்படி நினைத்தால் அவர் மாமா நினைக்காமல் இருப்பாரா? 'அது கல்லு, அதற்குத்தான் தராதரம் தெரியாது. இருந்தாலும் எடுத்தவளுக்குப் புத்தி வேண்டாமா? இந்தக் கல்லைப் போட்டுக்கொள்ள அவளுக்கு ஒரு தகுதி இருக்குதா? இதுவே என் மரகதம் கையில் கிடைத்திருக்கட்டும். அவ கையிலே போட்டுக்கிட்டால் இந்தக் கல்லுக்கும் ஒரு மகிமை உண்டு' என்று நினைத்தார் கடம்பவனம்.

மங்கையர் திலகமாகிய மரகதம் சிறிதும் பொறாமைப் படவில்லை. மோகனாவுக்கு இந்த மாணிக்கம் கிடைத்ததில் அவள் அளவற்ற ஆனந்தம்தான் அடைந்தாள். ஆனால், 'தனக்கும் இம்மாதிரி ஒன்று கிடைத்திருக்கலாமே!' என்று அவள் ஆசைப்பட்டதில் வியப்பில்லை. பண்பு படைத்த இவர்கள் நெஞ்சமே இப்படியென்றால், பாவம், ஏழை தருமனைப்பற்றி என்ன சொல்வது? அவன் ஏதோ எச்சில் இலையை மிதித்துவிட்டதாகக் காரணம் கூறி இரண்டாவது முறை ஆற்றில் முழுக இறங்கிவிட்டான். அன்று அவன் முழங்கால் தண்ணீரில் முக்குளித்ததில்

அவனுடைய மூவேழு இருபத்தொரு தலைமுறைகளும் கரையேறின, அவனுக்கோ கரையேறவே மனமில்லை.

எல்லோரும் அந்த மாணிக்கம் தமக்குக் கிடைக்கவில்லையே என்று தான் ஏங்கினார்கள்.

மோகனாவும் ஒரு மாணிக்கம்தான். அவளுடைய மாணிக்கம் சண்முகம். 'இடுப்பில் இருக்கும் மாணிக்கம், என்றோ கிடைக்கப் போகிறது. ஆனால் என் இதயத்தில் இருக்கும் இதய மாணிக்கமே இன்னும் கிடைக்கவில்லையே!' என்று எண்ணினாள். அப்போது, ''உங்கள் மகள் வயிற்றில் மாணிக்கம் பிறக்கும்'' என்று குமாரசாமி கூறிய வார்த்தைகள் அவள் காதில் ஒலித்தன. 'அடேயப்பா, இந்தக் கிழவர்களுக்கு வார்த்தையின் விலையே தெரியாது. இதெல்லாம் பழக்கம். வாய் வார்த்தைதானே, நல்லதைச் சொல்லுவோமே என்ற தாராளம். யாரையாவது வாழ்த்துவது என்று வந்துவிட்டால் வாய் கொள்ளாமல் வாழ்த்துவார்கள். ஏதோ மாணிக்கம் கிடைத்துவிட்டது. நாமும்தான் இடுப்பில் முடிந்துகொண்டுவிட்டோம். கிடைத்தால் மட்டும் போதுமா? அது நிலைக்க வேண்டாமா? இது கை நழுவாமல் இருக்க வேண்டும். கள்வர்கள் கவராமல் இருக்கவேண்டும். நகையைக் கட்டக் கொடுத்த இடத்தில் திரும்பி வரவேண்டும். கையில் மோதிரமாய்ப் போட்டால் நழுவி விழாமல் இருக்க வேண்டும். ஒரு கல்லுக்கே இத்தனை கஷ்டங்கள்! நமக்குக் கிடைத்த மாணிக்கம் லேசானதா? கல்லின் ஒளி கண்ணுக்கெட்டிய தூரந்தான் தெரியும். கலையின் ஒளி கடல் தாண்டிக்கூட வீசுகிறதே! இதோ கதிர்காம வேலன் வாசலுக்கும் வந்துவிட்டோம். இனி அவர் கையைப் பிடிக்க வேண்டியதுதான் பாக்கி. இதய மாணிக்கத்தை அடைந்தால்தானே இடுப்பு மாணிக்கம் உட்காரும்' என்று நினைத்தாள். புன்முறுவல் பூத்தாள். அப்போது சிறிது பயமும் வந்தது.

இந்தப் பயத்திற்குக் காரணம் என்ன? யாரைப் பார்த்து மகிழ வேண்டுமோ, அவரைப் பார்த்தே பயம் வந்தால் இதைப் பேதைமை என்பதா, பெண்மை என்பதா? அருள்வடிவான பரமானந்தப் பரதேசியார் அங்கு வந்ததில் அவளுக்குப் பயம் வந்தது.

மருந்தைக் கண்ட குழந்தை பயப்படுவது போல், நல்லாரைக் கண்டதும் அந்த நங்கை நடுங்கினாள். 'இடுக்கண் களையவரும் ஈசன் அருள் போன்றவர், அவர். அவர் ஏன் இப்போது வந்தார்?' என்ற அச்சம் உண்டாகியது. இது என்ன பேதைமை? 'கதிர்காமத்தில் நமக்கென்ன ஆபத்து வரப்போகிறது? இங்கு எந்த எதிரி இருக்கிறான்?' என்று தேறினாள். இருளில் நடப்பவருக்குப் பயமே கிடையாது. ஆனால், இருட்டுக்குப் பயந்து விளக்கை எடுத்துப் போகிறவர்கள் தம் நிழலைக் கண்டே பயப்படுவார்கள். இந்த நிலையில்தான் அவளும் தன் விதியை எண்ணி நடுங்கினாள்.



அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம் வருங்காலத்தில், பலருக்கு அதுவே பெரிய போதையாகிவிடும். நான் என்பது வலுப்படும். எல்லாம் என் செயலால்தான் நடந்தது என்று சொல்வார்கள். நன்மையின் சிகரத்தை எட்டிப் பிடிக்கும்போது, ஆணவம் அவர்களை எட்டிப் பிடித்துவிடும். குடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் அவர்களைப் பாதாளத்தில் அழுத்திவிடும். ஆனால், மோகனா அப்படிப்பட்டவள் அல்ல. செயல் மாத்திரம் தன்னுடையது, பலன் கடவுள் தருவது என்ற நம்பிக்கையுடையவள்.

அயல்நாட்டுக்குப் புறப்பட்ட யாத்திரை, ஆறுமுகன் கோவிலுக்குச் செல்லும் யாத்திரையாக அமைந்ததிலேயே அவள் எதையோ புரிந்து கொண்டுவிட்டாள். சிற்றம்பலத்துக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் சீமைக்குப் போவது அவளுக்கு அப்போதே பிடிக்கவில்லை. 'அவர் கொடுத்த அட்வான்சைத் திருப்பிக் கொடுக்கலாம். ஆனால், நாம் கொடுத்த வாக்கைத் திருப்பி வாங்க முடியுமா?' என்று எண்ணினாள். அவள் சீமைப் பயணம் தடைப்பட்டது. சண்முகத்தோடுகூடத் தானும் இலங்கையில் இறங்குவோம் என்று அவள் கனவுகூடக் காணவில்லை. சென்ற பதினைந்து நாட்களாக சண்முகமும், அவளும் ஒரே ஊரில் ஒரே வீட்டில் இருந்தும் அடிக்கடி சந்திக்காமல் இருப்பதை எண்ணி எண்ணி அவள் இதயம் வருந்தியது. ஆயினும், கடலும் காதலும் நல்லது என்று உலகத்தார் ஏன் சொல்கிறார்கள்? இரண்டும் கட்டுப்பட்டிருப்பதால்தானே! கடல் பொங்கினால் உலகம் அழிந்துவிடும். காதலும் அதே கதிதான். காதல் பொங்கினால் கட்டுப்பாடு போய்விடும். கணவன், மனைவிகூட இப்படித்தானே இருக்கிறார்கள்? தனிமையில் மனைவி கணவனோடு பேசுகின்றாள். அவனோடு சிரித்து விளையாடுகின்றாள். அப்போதுகூட அவள் அடக்கத்துடன் சிரிக்கிறாள். அதுதானே பெண்மை? இரண்டு பேருடன் அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, மனைவி எதிரில் போய் நிற்கிறாளா? எப்பொழுதும் அவர் முன் குலுக்கி மினுக்குகிறாளா? அதைப் போலத்தான் நாங்களும். எங்களுக்குள் உள்ளம் ஒன்றாக இருக்கிறது, உடல் வேறாக இருக்கிறது. இது ஒன்றுதானே வித்தியாசம். நாங்கள் கதிர்காம வேலன் கருணைக்கு விரதம் இருக்கிறோம்' என்று எண்ணிய போது அவள் சிரிப்பில் கள்ளம் குமிழ்த்தது.

உடனே எதிர்பாராத விதமாக நேற்று நடந்த அந்த நிகழ்ச்சி அவள் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. 'அம்ம, அந்த யானை ஓடி வந்த வேகம் தான் என்ன? நான் போய் அவரை அணைத்துக்கொண்ட வேகம்தான் என்ன? அவர் என்னை இறுகத் தழுவிய அந்த ஒரு கணத்தில் நான் எங்கிருந்தேன்? அவர் கையை விரித்தார். நான் அந்தக் கையில் போய் விழுந்தேன். அதற்குப் பிறகு என்னை மறந்துவிட்டேனே! நான் பயப்படுகிறேன் என்று அவருக்கு எப்படித் தெரிந்தது? அதற்குள் அவர் எப்படிக் கையை விரித்தார்? இருவரும் சிந்திக்க முடியாத கணநேரத்தில்

அல்லவா கட்டி அணைத்துக்கொண்டுவிட்டோம். சேசே ! கூட இருந்தவர்கள் எல்லாரும் என்ன நினைப்பார்கள்? வெட்கம், என்று நினைத்தவுடனே அவள் உடல் ஒரு சாணாய்க் குன்றியது. அந்தச் சாண் உடலில் மாமேரு போல் இன்பம் நிறைந்தது. 'நினைத்தால் நினைக்கட்டுமே ! யார் என்ன நினைத்தால் என்ன ? அதற்காக அவர் அருகில் இருக்க, யானைக் காலில் மிதிபட முடியுமா ? உடுக்கை இழந்தவன் கை, தானே உதவிக்கு வருவது போல் அல்லவா அவர் கைகள் அணைத்துக்கொள்ள வந்தன ! ஆம், இந்த நட்புத்தான் அக நட்பு. இது இருந்தால் போதும். கண்ணால் பேசுவதும் கை கோத்துக்கொண்டு உலாவுவதும்தானா காதல் ? என்னையே மறந்துவிட்டேன் ! அப்பா, இந்தப் பிறவி எடுத்ததற்கு இது ஒன்றே போதும். அந்த யானை நல்ல யானை. காதலர் பாதைகளில் அது வந்துகொண்டே இருக்க வேண்டும் ! ஊருக்குப் போனதும் அவரிடம் சொல்லி ஆசாரியிடம் நல்ல தேக்கு மரமாக வாங்கிக் கொடுத்து நம் வீட்டு வாசலிலே லட்சுமியைச் செய்து வைத்து இருபுறமும் இரண்டு யானைகளை வைக்க வேண்டும்' என நினைத்தபோது அவளையறியாமல் ஒரு பெருமூச்சு வந்தது.

'அவராம், அவர் ! எல்லாம் ஒழுங்காய் நடக்கட்டும், பார்ப்போம். என் ராஜா. அடேயப்பா ! வாத்தியத்தில்தான் தன்னை மறக்கிறார் என்றால், அவர் பாட்டிலும் தன்னை மறந்துவிட்டாரே ! சே ! கொஞ்சம் கூட அடக்கமே இல்லை. கோபம் வந்தாலும் அப்படித்தான் ஆடுகிறது. பக்தி வந்தாலும் அப்படித்தான் பாடுகிறது. ஆமாம், உணர்ச்சி அதிகமாக இருப்பதால்தான் உள்ளம் பால் போல் இருக்கிறது. வாழை நார் போல் அவரும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருப்பாரானால் அதுவும், ச...ரி...க...ம...ப... த...நி...ஸ வோடு நின்று இருக்கும். இவ்வளவு கற்பனையும் எங்கிருந்து வரும் ? அழகு, அறிவு எல்லாவற்றையும் அதிகமாகக் கொடுத்திருக்கிறான். அதனால்தான் அவரிடத்தில் நானே மயங்குகிறேன் .. அதென்ன பார்வை, அடக்கம் ஒடுக்கமே இல்லை !

'மாணிக்கம் பிறக்கப் போகிறது என்ற வார்த்தையைக் கேட்டதும் என்னை ஏன் அப்படிப் பார்க்க வேண்டும் ? குமாரசாமியை அல்லவா பார்க்க வேண்டும் ? குழந்தை என்ற வார்த்தையைக் கேட்டவுடனே எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது. ஆனால், அவர் முகத்தைப் பார்த்தவுடனே அந்தச் சிரிப்பிலே என் கண்ணீர் வருகிறது ? இது என்ன முடிச்சு ? இது என்ன ரகசியம்? இந்த ரத்தினம் நம் கையில் அகப்பட்டதன் கருத்து என்ன? இதற்கு மேல் ஆறு கோடுகள் இருப்பதன் அர்த்தம் என்ன? கல் சிறியதாக இருந்தாலும் என் நெஞ்சில் இது இவ்வளவு கனம் கனக்கிறதே! கழுத்தில் மாலை கனத்தால்தானே கையில் செல்வம் கனக்கும் ! கதிர்காம வேலா, கருணை செய்' என்று அவள் நினைத்த போதுதான் ''ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும் !'' என்ற அருள் மொழிகள் கேட்டன.



அவள் உள்ளத்தில் நினைத்த கருத்தை யாரோ இருந்தமாய்ச் சொல்வதைக் கண்டாள். ''அந்தக் குரல் நம் சித்தைக் குரல் !'' யார் பாடுவது என்று அவள் நோக்கினாள். அங்கே உதய சூரியனே பூமியில் வந்து நிற்பது போலத் தவத்தால் பேரொளி வீசும் பரமானந்தப் பரதேசியார் நிற்பதைக் கண்டாள். உள்ளம் அடைபட்டது. நாக்குத் தடைபட்டது. கண்கள் பார்க்க மறுத்தன. காது எதையும் கேட்கும் சக்தி அற்றதாயிற்று. அவள் உடல் அவர் சேவடியில் போய் விழுந்தது. சண்முகசுந்தரம் தொடர்ந்தான். அடுத்த கணத்தில் எல்லோரும் பரதேசியாரின் முன் போய்க் காலில் விழுந்தார்கள்.

''என்னை ஏன் கும்பிடுகிறீர்கள் ? அதோ இருக்கிறான். அவனைக் கும்பிடுங்கள்'' என்றார் பரதேசியார்.

''சுவாமி, வணக்கம். தாங்கள் எப்பொழுது வந்தது ?'' என்றான் சண்முகம்.

''எங்காவது போயிருந்தால் அல்லவா இப்பொழுது வருவதற்கு? எப்பொழுதும் அவன் காலடியில்தான் கிடக்கிறேன்.''

''சுவாமி, எனக்குத் தாங்கள் உயிர்ப்பிச்சை அளித்த பிறகு நான் உங்களைப் பார்க்கவே இல்லையே ! இப்போதுதான் ஆண்டவன், அடியார் என்ற இருவரையும் ஒரே இடத்தில் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. என் கையால் மீண்டும் நாதஸ்வரத்தைத் தொடும்படி செய்தது நீங்கள்தானே!'' என்று மனமுருகி வணங்கினான் சண்முகம்.

''சண்முகம், எடுப்பவனும் கொடுப்பவனும் அவனே ஒருவன்! உன் கை இசைக்குத் தொண்டு செய்த கை. அது இருக்க வேண்டும் என அவன் திருவுளம். அதனால்தானோ என்னவோ என் மருந்து பலித்தது. என்ன, கதிர்காமத்திலே ஏதாவது கச்சேரியா ?''

''இல்லை சுவாமி, முத்துராக்கு கதிர்காமத்தைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவராலே....''

''ஆமாம் அவன் லய- வித்துவான். லயித்து இருக்கிறான். ஏதோ பக்க வாத்தியம் வாசித்து உன் காலை வாரிவிடாமல் கதிர்காமக் கோயிலுக்கு அழைத்து வந்திருக்கிறான் அல்லவா ?''

''என்ன குழந்தாய் ? ஏது நீகூட கதிர்காமத்துக்கு வந்திருக்கிறாய் போலிருக்கிறதே?'' என்று மோகனாவைக் கேட்டார் பரதேசியார்.

இதுவரை சும்மா நின்ற மோகனா, ''பாட்டின் வழியில் ஆடுபவள் நானே தான். யாரோ கூட்டி வந்தார்கள். வந்தேன்'' என்றாள்.

''ஏன் சாமி, நீங்க ரயில் ஏற மாட்டீங்களே. எப்படி இங்கே வந்தீங்க?'' என்றான் வரதன்.

''இந்தக் கட்டை கட்டையில் ஏறிக் கடலைத் தாண்டியது.''

வரதன் சிரித்தான். மோகனா விழித்தாள்.

"ஆமா, அவுங்களுக்கு என்ன ரயிலுக்குப் போவணுமா? டிக்கட்டு வாங்கணுமா? பாதக்குறடுக் கட்டையிலே ஏறி நின்னுக்கிட்டுப் 'போ கதிர்காமத்துக்கு' என்று ஒரு வார்த்தை சொன்னால் பறக்குது!" என்றாள் வடிவாம்பாள்.

"என்ன, முத்துக்குமரா! உன் பல் வலி எப்படி இருக்கிறது? சௌக்கியமாகிவிட்டதா?" என்றார் பரதேசியார்.

வடிவாம்பாளுக்கு இதைக் கேட்டதும் சுரீரென்றது. 'தங்கத்துக்கு ஆசைப்பட்டுக் காட்டுச்செடியெல்லாம் பிடுங்கினோமே, அதை எல்லவா கட்டிக் காட்டுகிறார்!' என்று எண்ணினாள். உடனே இப்பொழுது தண்ணீரில் கிடந்து அகப்பட்ட மாணிக்கமும் பரதேசியாரின் மாயம்தானோ என்று சந்தேகம் வந்தது.

"இந்தா மோகனா, மடியிலே கல்லை முடிஞ்சுக்கிட்டியே, அதை எடுத்துச் சாமிகிட்டே கொடு. அவுங்க கையாலே கொடுத்து வாங்கிக்க வேண்டாம்?" என்றாள்.

மோகனா அந்தக் கல்லை எடுத்தாள். பரதேசியாரின் கையில் கொடுத்தாள். அவருடைய கடைக்கண் பார்வை இந்தக் கல்மீது விழுந்தது. வடிவாம்பாளின் வயிறு குளிர்ந்தது. மோகனாவுக்கும் அப்பொழுது ஏதோ ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

"வடிவாம்பாள் எங்கே வந்தாலும் சரி, அவளுக்கு வேண்டியது அங்கு கிடைக்கும்" என்றார் பரதேசியார்.

"அதுக்கு என்னங்க பலன்?"

"சாளிக்கிராமம் கிடைத்தால் எனக்கு நல்லது, மாணிக்கம் கிடைத்தால் உங்களுக்கு நல்லது. பலன் என்பது ஆளைப் பொறுத்தது தானே? என்ன, சண்முகம், கோவிலுக்குப் போகவில்லையா?"

"சுவாமி, நீங்களும் வரலாமே!" என்றான் சண்முகசுந்தரம்.

அதற்குள் மரகதமும், கடம்பவனம் பிள்ளையும், மைனர் முதலியவர்களும் அங்கே வந்து நின்றார்கள். மரகதமும், மைனரும் பரதேசியாரை வணங்கினார்கள்.

"சிங்கபுரம் மைனர், பெஞ்சாதி மரகதம்" என்று சண்முகம் வாயைப் பொத்திக்கொண்டு அறிமுகம் செய்து வைத்தான் பரதேசியார் சிரித்துக் கொண்டார்.

"நல்ல மரகதம். என்ன மகளே, உன் புருஷன் வழி தவறி ஓடினால் நீ அவனைப் பிடித்து இழுக்க வேண்டாமா?"

"போங்க சாமி, என் புருஷன் ஏன் வழி தவறிப் போறாரு? அவர் தங்கம்" என்று பரதேசியாரையும் அடக்கினாள் அந்த மரகதம்.

"தாயே, நீ ரொம்பப் பெரியவள். எனக்குக்கூட இறைவனிடம் உன் கணவனிடம் உனக்கு இருக்கும் அளவு பக்தி வரவில்லை. உன் பக்தியை அசைக்க முடியாது. நீ கணவனிடம் கொண்ட நம்பிக்கையில் ஆயிரத்தில்



ஒரு பங்கு எனக்குக் கடவுளிடம் நம்பிக்கை இருந்தால் அந்தக் கடவுளை என் பிறகே ஓடிவரச் செய்திருப்பேன்!" என்றார் பரதேசியார். எல்லோரும் மரகதத்தைப் பார்த்தனர். மரகதம் மைனரைப் பார்த்துச் சிரித்தாள். எல்லோரும் கோவிலுக்குப் போவதற்குப் புறப்பட்டார்கள்.

தமிழுக்கு உயிர் திருவாசகம். சுவை சொட்டுவது திருவாசகம். இந்தத் திருவாசகத்தைத் தந்தது திருப்பெருந்துறை. குதிரை வாங்கப் போன மாணிக்கவாசகரின் மனக் குதிரையைக் கட்டுப்படுத்தியது அந்தத் தலம். அந்த ஆவுடையார் கோவிலில் தொண்டைமான் மண்டபம் உண்டு. அகோர வீரபத்திரர் சிலை உண்டு. எண்ணெய்க் கிணறு, அக்கினி தீர்த்தம், குருந்த மூலம், குதிரை மண்டபம், கல் சங்கிலி, கல் கொடுங்கை என்ற அழகெல்லாம் உண்டு. பன்னிரண்டு கலம் அரிசியை வேகவைத்து அந்த அமுதைப் படை கல்லில் பரப்பி, பாகற்காய் கறியும் கீரையமுதும் வைத்து இறைவனுக்குப் படைப்பது உண்டு. ஆனால், அங்கே சுவாமிக்குச் சிலை கிடையாது; இறைவன் சிலையில் இல்லை, சிந்தையில் இருக்கிறான் என்பதை எடுத்துக் காட்டும் தத்துவம் அது. ஆத்மா கண்ணுக்குத் தெரியாது. ஆவுடையார் கோவில் சுவாமி பெயரும் ஆத்மநாதர்தான்.

சிதம்பரத்திலும் இவ்வாறேதான் இருக்கிறது. அதைச் சிதம்பர ரகசியம் என்பார்கள். ரகசியத்துக்குள்ளே பரவெளி. ஈசன் மோன வடிவாய் நிற்பவன் என்பதை அங்கு காட்டுகிறார்கள். கல்லைக் கடவுளாகக் கருதும் மனம் ஒருவருக்கு வாய்க்குமேயானால், அவர் எல்லாவற்றையும் கடவுளாகக் காண்பார். "இல்லை"யென்பதிலும் இறைவன் இருப்பதைக் காண்பார். எல்லாம் சிவமயம் என்பதை எடுத்துக் காட்டுவதுதான் இந்த வழக்கங்கள். தமிழ் மக்களுக்குக் கோவில், சிதம்பரம்; குருவடிவம் திருப்பெருந்துறை. இதே மாதிரி உருவம் இல்லாமல் ஒளி வடிவமாக விளங்குவதுதான் கதிர்காமமும். கதிர் என்றால் ஒளி என்று பொருள். ஒளி என்பது ஞானம். ஞானபண்டிதன் கதிர்காமத்திலே ஒளி வடிவமாகத்தான் இருக்கிறான்!

கோவிலுக்குள் நுழைந்ததும், "என்னங்க, கோவிலையே காணோமே!" என்றாள் வடிவாம்பாள்.

"உன் உடம்புதான் கோவில். இதயம்தான் இறைவன் இருப்பிடம். கதிர்காமத்திலே நீ கொண்டுவரும் நெஞ்சமே கோவில். அதில் அவனைக் குடிவரச் செய்" என்றார் பரதேசியார்.

"ஊருக்குப் போனாக்க அங்கே நாலு பேர் கேக்கிறபோது, கதிர்காமத்துக்குப் போய்விட்டு வந்தேன். அங்கே கோவில் அப்படி இருக்குது, குளம் இப்படியிருக்குது என்று சொல்லக்கூட இங்கே ஒன்றும் இல்லியே!" என்றாள் வடிவாம்பாள்.

எட்டடிக் குச்சுக்குள்ளே - வேலவா
எத்தனை நாளிருப்பேன்?

என்றார் ஒரு பக்தர். அந்த பக்தர் உடல் போல்தான் கதிர்காமக் கோவிலும் இருந்தது. அது மிகவும் சிறிய கோவில்.

இரு ஓட்டு வில்லைக் கட்டடம். அந்த ஓடு, பொன் ஓடும் அல்ல. என்றும் உள்ள மண் ஓடுதான். அந்த மண் ஓட்டிலே, மூன்று தங்க ஸ்தூபிகள் மாத்திரம் இருந்தன. ஆனால் அங்குதான் பக்தி வெள்ளம் பாற்கடல் போல் பொங்கியது.

கோவிலுக்குள்ளே வந்தார்கள். கூட்டம் தாங்க முடியவில்லை. தலையை மொட்டை அடித்துக்கொண்டும், தாடியும் சடையுமாகவும் பலர் 'அரோஹரா' என்று ஆவேசத்தில் துதித்துக்கொண்டிருந்தார்கள். குழந்தைகளோடு கோவிலுக்கு வந்த பலர், ''உன்னருட் செல்வமும் உன் பெயர் மறவாத உள்ளமும் எங்கள் குழந்தைகளுக்கும் அருள்வாய்'' என வேண்டிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்கள். கட்டி கட்டியாகக் கற்பூரத்தைக் கொளுத்தி, மடக்குகளில் வைத்துப் பலர் தலைமேல் வைத்துக்கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் கற்பூரமணம் கமழ்ந்தது. கற்பூர ஜோதி திகழ்ந்தது. தீப மங்கள ஜோதியாக விளங்கினான் முருகன்.

கதிர்காம வேலன் சந்நிதி வாசலிலே ஒரு திரை தொங்கியது. அந்தத் திரையிலே புள்ளிமயில்மீது வள்ளி மணவாளன் அமர்ந்திருக்கும் கோலத்தில் ஓர் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. பல குத்துவிளக்குகள் அந்தத் திரைக்கு முன்னே இருந்தன. எல்லோரும் அதைப் பார்த்து, ''அரோஹரா'' என்றார்கள். எதிரில் நிற்கும் திரையைக் கண்டவுடன் மனத்திரை விலகியது. அகத்தின் கண்ணே ஒளி புகுந்தது. விழி திறந்தது. ஆறுமுகப் பெருமான் அனைவருக்கும் காட்சி தந்தான்.

அந்தக் கோவிலுக்கு ஒரு குருக்கள். அவர் கழுத்தில் உத்திராட்சம் இல்லை, கையில் மணி இல்லை, நெற்றியில் நீறில்லை. மேலே ஷர்ட்டும் தலையில் தலைப்பாகையும் கட்டிக்கொண்டு நின்றார். அவருக்குக் கப்புராளை என்று பெயர். அவர் இந்துவும் அல்ல, சைவரும் அல்ல; புத்த மதத்தினர். ஞானம் எல்லோருக்கும் பொது. ஞானபண்டிதன் எம்மதத்தினருக்கும் பொது. அந்தக் கப்புராளைக்கு முன்னே எல்லோரும் தேங்காய் பழத்தட்டுகளை நீட்டினார்கள். அவர் அவைகளை வாங்கிக் கொண்டு திரைக்குள்ளே சென்று தேங்காய்களை உடைத்து வந்தார். எல்லோருக்கும் தீர்த்தம் வழங்கினார்.

பரதேசியார் இன்னொரு முருகனைப் போல விளங்கினார். கதிர்காமக் கந்தன் சந்நிதியில், எல்லோரும் வணங்கி திருநீறு பெற்றுக் கொண்டு வள்ளி அம்மை கோவிலுக்குச் சென்றார்கள்.

வள்ளியின் கோவிலில் ஒரு விசேடம். வள்ளி வேடர்குலப் பெண் அல்லவா ? ஆதலால் அங்கு பல வேடர் குலப் பெண்கள் வள்ளியின் பாங்கிகளாக நின்றுகொண்டிருந்தார்கள். வேலன் வீரன். வேட்டையில் கெட்டிக்காரன். 'அவன் வேலை ஏந்தி வந்த அழகைப் பார்த்துத்தான் எங்கள் வள்ளியம்மை காதல் கொண்டாள்' என்பதற்கிணங்க அங்கே வேடப் பெண்கள், தோழிப் பெண்களாக நின்று வள்ளியம்மைக்கு ஆடிப் பாடி உபசாரம் செய்தார்கள்.



''வனமுறை வேடன் அருளிய பூசை
மகிழ்கதிர் காமம்.....
உடையோன்தானே அவன்...''

''ஆடித் திருவிழாவின்போது கதிர்காம வேலன் சந்நிதியிலிருந்து ஒரு பேழையை அந்தக் கப்புராளைமார் தூக்கி வருவார்கள். அந்தப் பேழை கறுப்பு ஆடையால் மூடப்பட்டிருக்கும். யானைமேல் அதை வைத்துக் கட்டுவார்கள். ஊர்வலம் வள்ளியம்மை கோவிலை நோக்கி வரும். இங்கு வந்ததும் கப்புராளைகள் தங்கள் கண்களைக் கட்டிக்கொண்டு முருகப் பெருமானை யானைமீது இருந்து இறக்கி, திரையிட்டு மறைத்த வண்ணம் வள்ளியம்மை கோவிலுக்குள்ளே கொண்டுவந்து வைப்பார்கள். முரசுகள் முழங்கும், மணிகள் ஒலிக்கும், சேமக்கலங்கள் தட்டப்படும். ஆடலும், பாடலும் நிறைந்திருக்கும். எல்லோரும் கீழே விழுந்து மண்டியிட்டு வணங்குவார்கள். பிறகு வள்ளியம்மன் கோவிலுக்குள்ளிருந்து இறைவன் வெளியே வருவார்'' என்றார் குமாரசாமி.

''ஆமா, பள்ளியறை சேவைக்கு வந்துட்டுப் போவாரு !'' என்றான் வரதன்.

''மத்தளக்காரரே, நீங்க மத்தளத்தை அடிச்சுக்கிட்டு சும்மா இருங்க. என்னமோ இவருக்கு இன்னும் கல்யாணமே ஆகலே...!'' என்றான் தருமன்.

மரகதம் மோகனாவைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்ன மரகதம், சிரிக்கிறாய் ?'' என்றார் பரதேசியார்.

''அக்காவுக்குக் கல்யாணம் எப்போ ஆகுமோன்னு பாக்கிறேன்.''

''அது என்ன, கல்யாணத்தைப்பற்றி இப்போது உனக்கு ஞாபகம் வந்தது ?''

''அக்கா கல்யாணத்தையும் கதிர்காமத்திலேயே செஞ்சுட்டா என்ன சாமி ?'' என்று மரகதம் சாமியாரைப் பார்த்துக் கேட்டாள்.

''கல்யாணம்னா நினைச்ச போது செய்கிறதா ? அதுக்கு ஒரு நாளு நட்சத்திரம் எல்லாம் பார்க்க வேண்டாமா ?'' என்றாள் வடிவாம்பாள்.

''முருகனைப் பார்த்த நாளைவிட பெரிய நாள் இருக்கிறதா ?'' என்றார் பரதேசியார்.

''இல்லீங்க, 'கார்த்திகை' மாதத்திலே !''

''அவனே கார்த்திகை மைந்தன்தானே...!''

''பரணி கார்த்திகையிலே கல்யாணம் என்கிற பேச்சே பேசப்படாதுங்க !''

''நான் என்ன செய்யும் ?''

''அப்படியில்லைங்க. கோவில் கண்ட இடத்தில் தாலி கட்டுவாங்களா ? பத்துப் பொருத்தமும் பாத்துத்தானே...''

''வினைதான் என்ன செய்யும் ?''

''சாமி, கோவிச்சுக்கப்படாது. நீங்க பரதேசி. நாங்க குடியும் குடித்தனமுமா இருக்கிறவங்க. நல்லது பொல்லாது எல்லாம் பாத்துச் செய்யணும். ஏதாவது கெட்ட கிரகங்கள் பார்த்தால் ?...''

''வடிவாம்பாள், யாருடைய பார்வையும் முருகன் அடியார்களை எதுவும் செய்யாது. ராகு பார்வையிருந்தாலும் சரி, கேது பார்வை இருந்தாலும் சரி, அவையிரண்டும்தான் பொல்லாத கிரகங்கள். ஆனால், இந்த இலங்கைக்குள்ளே நுழைந்துவிட்டால், திருக்கேதீச்சரத்தைக் கண்டவுடன் கேது நல்லவனாகிவிடுவான். மயில் வாகனப் பெருமான் அலகில் பாம்பைக் கொத்திப் பிடித்துக்கொண்டு இருக்கிறார். ஆகவே, கதிர்காமத்தில் நாகப்பாம்பின் கோளாறும் விலகிவிடும்'' என்று சொல்லி ஏதோ சிந்தித்தார். பிறகு,

''நாள்என் செயும்வினை தானென்
செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென்
செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே''

என்று கந்தர் அலங்காரத்தைக் கை கூப்பிய வண்ணம் பாடினார் பரதேசியார். அவர் பாடப் பாட எல்லோருடைய சிந்தையும் உருகியது. முந்தை வினைகள் கருகின. அவர் குரலின் இனிமையும் உள்ளத்தின் குழைவும் அவர் பாடிய பைரவி ராகத்தின் பழுத்த சுவையும் உருகா மனத்தையும் உருக்கின. இறைவனை உணரா மனத்திலும் உணர்த்தின. முருகா என ஒருகால் ஓதா நாவும் ஓதியது. உள்ளம் உவந்து எல்லோருக்கும் கண்ணீர் வெள்ளம் பெருகியது. ஆனால் வடிவாம்பாள் கண்ணுக்கு மாத்திரம் அந்தச் சிங்கமுகம் தோன்றியது. நம்மை அறியாமல் மோகனாவை ஏதோ ஒரு கிரகம் விரட்டிக்கொண்டிருக்கிறது என்பதைத் தாய் உணர்ந்தாள்.

எல்லோரும் ஜாகைக்குச் சென்றார்கள். பரதேசியார் படித்துறைக்குப் போய்விட்டார். ஜாகைக்குள்ளே சென்றதும் வடிவாம்பாள், நடந்துவந்த அலுப்புத்தீரத் தூங்கிவிட்டாள். மரகதம், மோகனா இருவரும் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சத்திரத்தில் அகல் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. பிறகு அவர்களும் தூங்கிவிட்டார்கள். சண்முகம், முத்துராக்கு முதலியவர்கள் இறைவனைத் தரிசித்த ஆனந்தத்தில் மெய்ம்மறந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். க்ஷேத்திரங்களுக்குச் சென்றாலே மன வேதனை விலகி எல்லோரும் குழந்தை போல் தூங்குவார்கள்.



இப்படி எல்லோரும் தூங்கும் தருணத்தில் அவர்கள் இருந்த சத்திரத்தின் பின்புறத்தில் பாம்பு நுழைவது போல, ஒரு கரிய உருவம் வந்து நின்றது. அதனுடைய சிங்கக் கண்கள் பக்கத்திலிருந்த ஒரு பெரிய அரச மரத்தின்மீது சென்றது. அந்த மரத்தின் மீதிருந்து இருபது பேர்கள் சரசரவென்று இறங்கினார்கள். அதன் அருகில் வந்தார்கள்.

இரண்டாவது அத்தியாயம்

## உள்ளத்தால் பெரியோரே உலகில் பெரியோர்



வௌவால்களிலும்கூட பணக்கார வௌவால் என்று ஒன்று உண்டு. அதற்குப் பழம் தின்னி வௌவால் என்று பெயர். பகல் எல்லாம் தூங்கும். இலைகளும், கிளைகளும் அதிகமாக உள்ள மரத்தில் போய்த் தலை கீழே நிற்கும். மரத்தில் அது தொங்குவதைப் பார்ப்பவர்கள், ஏதோ பழங்கள் பழுத்துத் தொங்குகின்றன என்றுதான் நினைப்பார்கள்.

சிங்க முகமூடிக்காரனின் கையாட்கள் இருபது பேரும், அப்படித்தான் அந்த அரச மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தார்கள். முகமூடிக்காரன் கீழே வந்து அவர்களை அழைத்தவுடனே, அவர்கள் எல்லோரும் சந்தடி செய்யாமல் இறங்கி வந்தார்கள். தன்னை அவர்கள் சுற்றிக்கொண்டவுடனே முக மூடிக்காரன் அவர்களிடம் பின்வருமாறு கூறினான்:

''நேற்று நான் களத்துமேட்டில் காட்டிய பெண் உள்ளே படுத்திருப்பாள். அவளைத் தூக்கிக்கொண்டு வந்துவிட வேண்டும். ஏதேனும் கலகம் வந்தாலும் சரி, கொலை விழுந்தாலும் சரி, நீங்கள்தான் சமாளித்துக்கொள்ள வேண்டும்'' என்று எச்சரிக்கை செய்தான்.

''நீங்களும் உள்ளே வருவீங்களில்லே ?'' என்றான் அதில் ஒரு ஆள்.

''நான் எதற்கு ? நான்தான் அடையாளம் காட்டிட்டேனே !''

''சரி, முதலிலே பணத்தை முழுக்கக் கையிலே கொடுத்துடுங்க!''

''நான்தான் கூட இருக்கிறேனே, பணத்தைப் பத்தி என்ன !''

''நீங்க ஜெயிலிலேயும்தான் கூட இருப்பீங்க ! நீங்கள் இருந்தா பணமாகுமா? போலீஸ்காரங்க பிடிக்கக்கிட்டாங்கன்னு வக்கக்குங்க!''

''சரி, இந்தா'' என்று இரண்டு நோட்டுகளை அவனிடம் கொடுத்தான். அதை வாங்கி நம்பிக்கையான ஒரு ஆளிடம் கொடுத்தனுப்பினான் அவன். அதன் பிறகு, ''இந்தாங்க, எங்களை உள்ளே விட்டுட்டு நீங்க

ஓடிட்டா எங்க கதி என்ன ஆகிறது ? நீங்களும் வந்தாத்தான் உண்டு'' என்றான்.

''என்னப்பா தகராறு செய்கிறாய் ?''

''தகராறு இல்லீங்க. எங்களை மட்டும் தனியாக விட்டு ஆழம் பாக்கிறீங்களே !''

''சரி, வா'' என்று எல்லோரும் சேர்ந்து மரத்தில் ஏற ஆரம்பித்தார்கள்.

அந்தச் சத்திரம் ஒரு பழங்காலத்துக் கட்டடம். கிழக்குப் பார்த்தது. தெற்கு வடக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும் நீள அறைகளும், தாழ்வாரங்களும் இருந்தன. மேற்குத் திசையில் சத்திரத்தின் இரண்டாங்கட்டு இருந்தது. இரண்டாங்கட்டில் ஒரு சிறிய முற்றம். இரண்டாங்கட்டில்தான் மரகதமும், மோகனாவும் வடிவாம்பாளும் படுத்திருந்தார்கள். வாடை அடிக்காமல் இருக்க அங்கு சாக்குப் படுதா கட்டியிருந்தார்கள். முதல் கட்டில் உள்ள வராந்தாவில் ஆண் பிள்ளைகள் படுத்திருந்தார்கள். சத்திரத்தின் பின்புறம் இருந்த அரச மரத்தில் ஏறினால் ஓட்டு வழியாக உள்ளே இறங்கிவிடலாம்.

அரசமரத்தில் எல்லோரும் ஏறினார்கள். பாவம், சிங்கமுகமூடிக்காரனால் ஒரு முழம்கூட ஏற முடியவில்லை. ஏற ஏற, அவனுடைய ஒரு கால் மரத்தில் பாவாமல் வழுக்கிவிட்டது. உயிரைப் பிடித்துக்கொண்டு ஏறினான். பொத்தென்று விழுந்தான். அவன் விழுந்த வேகத்தில், அவன் முகமூடி கழன்று, ஒருபுறம் விழுந்தது. அவன் வேறு யாரும் அல்ல, ஸ்ரீமான் நாகலிங்கம்தான் ! மரத்தில் ஏற முடியாமல் தோல்வியுற்ற அவனுக்குத் தோல்வியில், மேலும் ஆத்திரம் பொங்கியது. கையில் இன்னொரு நோட்டை எடுத்தான்.

''இந்தாருங்கள், போய் அவளைக் கொண்டுவாருங்கள்'' என்று அந்த ஆளிடம் கொடுத்தான்.

''தூக்கத்தில் விழிப்பு, விழிப்பில் தூக்கம்'' என்று இரு வகைகள் உண்டு. ஒருவர் விழித்துக்கொண்டே இருப்பார். அவரிடம் நாம் குறைகளைச் சொல்லிக்கொண்டே இருப்போம். கால் மணி கழித்து ''என்ன சொன்னீர்கள் ?'' என்று கேட்பார். இது, அவருடைய மனம், தானே வேலை செய்ய மறுக்கும் ஒரு நிலை. இன்னொன்று : உடல் உறங்கும். ஆனால் மனம் உறங்காது. தீபாவளியன்று சரியாகக் காலை நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டுமென்று படுத்துக்கொள்ளுவார்கள். மனம் விழித்துக்கொண்டே இருக்கிறது. சரியாக நான்கு மணிக்கு ஒருவரும் எழுப்பாமலே எழுந்துவிடுவார்கள். சாதாரண விவகாரங்களுக்கே இப்படி என்றால் காதலைப்பற்றிக் கேட்க வேண்டுமா ? தனியே படுத்திருந்த மரகதம் இன்று அதே நிலையில்தான் இருந்தாள்.

ஆணுக்கு ஆயிரம் அலுவல்கள். பெண்ணுக்கு அன்பு ஒன்றுதான் அலுவல். ஆணுக்கு நாளை என்ன என்ற கவலை. பெண்ணுக்கு அடுப்பை



அணைத்தவுடன் அன்றைய கவலை தீர்ந்தது. கணவனும் மக்களும்தான் அவள் கவலையெல்லாம். ஆகவே காதலும் வீரதாபமும் பெண்ணைக் கொண்டுதான் பெருமையடைகின்றன. அன்று முழுவதும் மரகதத்துக்குத் தூக்கமே இல்லை. தூங்காமல் தூங்கிக் கிடந்தாள் மரகதம். ஏதோ ஒரு உணர்ச்சி அவளுடைய தூக்கத்தைக் கலைத்தது. தூக்கம் கலைந்தவுடன், சற்று வெளியே போய்விட்டு வர வேண்டும் என்றும் தோன்றியது. அவள் மாத்திரம் வெளியே சென்றாள். வெளியே சென்ற போது, அவளுடைய பார்வை தன் கணவன் மீது விழுந்தது. கணவனைப் பார்க்கத்தான் சென்றாள் என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? யதேச்சையாகப் பார்த்தாள்.

''என்னம்மா, இன்னுமா தூங்கலியே ?'' என்று குரல் கேட்டது. இது அவளுடைய அப்பா கடம்பவனம். மரகதம் தூங்காமல் இருந்ததற்கு, அவளுடைய வாலிப வயதையும், கணவன் மீதுள்ள அன்பையும் காரணங்களாகக் கூறலாம். அந்தக் கிழவர் ஏன் தூங்கவில்லை ? அதுதான் பெற்ற பாசம். தன் குழந்தை உள்ளே படுத்திருக்கிறாள் என்ற எண்ணத்தில் அவருக்குத் தூக்கம் வரவில்லை. மரகதத்தை இரவில் பார்த்தவுடனே, ''ஏம்மா, இங்கே வந்தே ?'' என்று பதறி அரைத் தூக்கத்தில் அவர் கேட்டார்.

''ஒன்றுமில்லேப்பா, உள்ளே காத்தே வரவில்லை'' என்று சொல்லிவிட்டுத் தன் கணவனையே பார்த்தாள் மரகதம். கோவிலிலிருந்து வந்த களைப்பில், அவர் அசந்து தூங்குவதைக் கண்டாள். ஆனால் பட்டு மெத்தையில் படுத்துத் தூங்கும் தன் கணவன், இன்று தலையணைகூட இல்லாமல் தான் நினைத்தபடி தரையில் தூங்குவதைக் கண்டவுடனே, அவளுக்கு என்னவோ போலிருந்தது. அங்கு படுத்திருந்தவர்கள் எல்லோருமே களைப்பினால் படுக்கையைக்கூட விரித்துக்கொள்ளாமல், பேசிக்கொண்டே தூங்கிவிட்டார்கள் என்பதை அறிந்தாள். கணவனை எழுப்பத்தான் முடியவில்லையென்றாலும் ஒரு தலையணையாவது அவருக்குக் கொடுப்போம் என்று தோன்றியது. உள்ளே வந்தாள்.

ஒரு தலையணையை எடுத்துக்கொண்டு போய், தகப்பனாரிடம் கொடுத்து, ''அப்பா, அத்தானுக்குக் கொடுங்க'' என்று சொன்னாள்.

அந்தத் தகப்பனும், 'நான் தலையணையில்லாமல் தூங்குகிறது மகளுக்குத் தெரியலே. அவ புருஷனுக்கில்லே தலையணையைக் கொண்டாந்து கொடுக்கிறாள் !' என்று அன்றைக்குக் கோபிக்காமல் மாப்பிள்ளையின் தலைக்கு அடியில் தலையணையை வைத்தார்.

மரகதம் உள்ளே வந்து கட்டிலில் படுத்தாள். தூக்கம் பிடிக்கவில்லை. ஒருமுறை புரண்டு எழுந்தாள். அவளுடைய பார்வை படுதாவுக்குள் சென்று எதிர்ப்புறத்தில் இருக்கும் கூரை மேல் சென்றது. சற்று நேரம் கவனித்துப் பார்த்தாள். ''அக்கா அக்கா !'' என்று மோகனாவை எழுப்பினாள்.

''என்ன மரகதம் ?'' என்று எழுந்தாள் மோகனா.

''அக்கா, அத்தான் தலகாணிகூட வச்சுக்காம படுத்திருக்காரு'' என்று மெதுவாகச் சொன்னாள்.

''இல்லேன்னா, கொண்டு போய்க் கொடேன்.''

''எங்க அத்தானைச் சொல்லல்லே, உங்க அத்தானைச் சொல்றேன்.''

''போ மரகதம், உனக்கு வேறு வேலையில்லை.''

''வேறு வேலைதான் என்ன ? எங்க அத்தான் தரையிலே படுத்துத் தூங்கினாரு. நான் கொண்டுபோய்த் தலகாணியைக் கொடுத்துட்டு வந்தேன். உங்க அத்தான் தரையிலே தூங்கறாரு. நீ கொண்டுபோய்த் தலகாணியைக் கொடுத்துட்டு வா'' என்றாள்.

மோகனாவுக்கும் மரகதத்தைப் பின்பற்ற வேண்டுமென்ற ஆசை தான். ஆனால் மரகதம் செய்ததைப்பற்றி ஒருவரும் சிரிக்கமாட்டார்கள். அது இயற்கை. கணவனுக்குப் பணிவிடை செய்கிறாள் என்று கேலி வேண்டுமானால் செய்வார்கள். 'நான் கொண்டுபோய் அவருக்குத் தலையணை கொடுக்க முடியுமா ? அவரை என்ன சொல்லி அழைப்பது? அந்தச் சமயம் பார்த்து, இந்தக் கிழவர் விழித்துக்கொண்டால், அவர்கள் என்ன நினைப்பார்கள் ? சே, ஒரு தலையணையைக் கொண்டுபோய் கொடுக்கக்கூட நமக்கு உரிமையில்லை' என்று ஏங்கினாள்.

''அவர் ரயிலில்கூட வெல்வெட்டுத் தலையணை வைத்துப் படுப்பவராயிற்றே. வெறுந்தரையில் எப்படித்தான் தூங்குகிறாரோ?''

''மரகதம், நீதான் ஒரு தலையணையைக் கொண்டுபோய்க் கொடுத்துடேன்.''

''எங்க அத்தான் முழிச்சுக்கிட்டா? 'உனக்கென்னடி அவ்வளவு அக்கறை'ன்னு கேட்டால்...? நீ கொண்டுபோய்க் கொடு'' என்று குறும்புப் புன்னகை அரும்பினாள்.

''நான் எப்படிப் போகிறது மரகதம் ? அம்மா முழிச்சுக்கொண்டால் ஒண்ணுக்குப் பத்தா கண்ணு, மூக்கு, காது எல்லாம் வச்சு கதை கட்டு வாங்களே !''

''கதையென்ன ? நாளைக்கு நடக்கப் போகிறதைத்தானே இன்னிக்குச் சொல்றாங்க ?''

''என் வரதன் இருக்கானா ?''

''இருப்பாரு, நான் எங்கே பார்த்தேன் ?''

''நான் போய் வரதன்கிட்டே கொடுத்துக் கொடுக்கச் சொல்லறேன்'' என்று சொல்லிக்கொண்டே மோகனா தன் படுக்கையில் இருந்து, ஒரு நல்ல தலையணையை எடுத்துக்கொண்டு சென்றாள். எத்தனை நடுக்கம்! அவள் உடம்பு குப்பென்று வியர்த்தது. வீட்டுக்கு வந்த விருந்தாளிக்குக் கூட பாய் தலையணை கொடுப்பது நமது மரபு. ஆனால் இதற்கு மோகனா இவ்வளவு பயப்படுவானேன்? திடீர் என்று ஒரு சந்தேகம் வந்தது. 'நம் தலையணையைக் கொடுக்கிறோமே, அதில் மன்னார்குடிச் செண்பகப்பூ மணக்கிறதே ! சே ! அவர் ஏதாவது நினைத்தால்? இல்லை, யாராவது கேலி செய்தால்... சேச்சே, இதெல்லாம் என்ன சந்தேகம். நாம் எதலம் தடவிக்கொள்கிறோம். நமக்குத் தெரிகிறது. அவருக்குத் தெரியவா போகிறது ?'



மோகனா, கதவு ஓரத்தில் வந்து நின்றாள். நிலா வெளிச்சத்தில், அவர்கள் எல்லோரும் படுத்திருப்பது தெரிந்தது. வரதன், முத்துராக்கு, தருமன் எல்லோரும் ஒரு ஓரத்தில் படுத்திருந்தார்கள். வைனி, சண்முகசுந்தரம், குமாரசாமி மூவரும் ஒருபுறம் படுத்திருந்தார்கள். கடம்பவனம் பிள்ளை தெற்கே தலைவைத்து வடக்கே கால் நீட்டி குறுக்கே படுத்திருந்தார். கதவு ஓரம் வரையில் வந்த மோகனா, சிறிது நேரம் தயங்கினாள். எப்படி அவரை எழுப்புவது ? 'உனக்கு என்னடி இவ்வளவு அக்கறை' என்று அம்மா கேட்டால் ? நாம் நல்ல எண்ணத்தோடு தலையணையைக் கொடுக்கத்தான் வந்திருக்கிறோம் என்பதை அவுங்க கண்டாங்களா? அவரை எழுப்பிப் பேசத்தான் வந்தேன் என்றுதானே எண்ணுவாங்க ?

'ஒருநாள்தானே. அவர் தலையணையில்லாமல் தூங்கினால்தான் என்ன ? பாவம், நடந்து வந்த களைப்பு, அந்தக் கால்களுக்குத்தான் என்ன வலி வலிக்கும் ? இது என்ன தூக்கம் ? வரதனை எப்படி எழுப்புவது? இந்தக் கடம்பவனம் பிள்ளை நம்மை இங்கே பார்த்தால், நாளை முழுவதும் இதையே கச்சேரி செய்துகொண்டிருப்பார். என்னத்துக்கு இவ்வளவு சந்தேகம் ? யார் என்ன சொன்னால்தான் என்ன? எழுப்பித்தான் கொடுத்துவிடுவோமே! இந்தாங்க, சே சே, கூப்பிட்டால் அவர் விழித்துக் கொள்ள மாட்டார். வேறு யாராவது விழித்துக்கொள்வார்கள். சரி, கூப்பிடவே வேண்டாம்' என்று தலையணையுடன் திரும்பினாள் மோகனா. இருந்தாலும் மனசு கேட்கவில்லை. மறுபடியும் மெல்ல நடந்து வந்தாள். கதவின் ஓரத்தில் போய் நின்றுகொண்டாள்.

''வரதா, வரதா !'' என்று மெதுவாகக் கூப்பிட்டாள்.

குழந்தை கூப்பிட்டவுடனே, தாய் எப்படி எழுந்திருப்பாளோ, அம்மாதிரி உணர்ச்சியில் ''என்ன தங்கச்சி'' என்று எழுந்தான் வரதன். கடம்பவனம் பிள்ளை விழித்துக்கொண்டிருந்தாலும், இந்த நேரத்தில் தாம் பேசுவது சரியல்ல என்று நினைத்துப் பேசாமலிருந்தார்.

''என்ன தங்கச்சி ?'' என்றான் வரதன்.

''இதோ பாரு, இந்தத் தலகாணியை அவங்ககிட்டே கொடுத்துடு'' என்று மோகனா வெட்கத்தில் கிண்டாடித் கிசுகிசுச் சொன்னாள். வரதன் தலையணையைக் கையில் வாங்கிக்கொண்டான்.

தன் காதலனுக்குச் செய்த இந்தச் சிறிய பணிவிடையிலேயே மோகனாவின் மனம் சந்தோஷத்தால் நிறைந்தது.

'யார் கொண்டுவந்து வச்சது' என்று அவர் யோசிப்பார். மோகனாவாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணுவார். அடேயப்பா, அவர் மனது என்ன சந்தோஷப்படும்! ஆனால் அவர் திருமன்தான் தலையணையை வைத்தான் என்று எண்ணினால்?' அவளையறியாமல் சிரிப்பு வந்தது. ஆனந்தப்பட்டுக்கொண்டே தங்கள் அறையின் உள்ளே அடியெடுத்து வைக்கப் போனாள். அவளுடைய கால்கள் கூசின. 'இந்த மரகதம் கேலி செய்வாளே! ஏன் இவ்வளவு நேரம் என்று என்று கேட்டுக் கடகட வென்று சிரிப்பாளே! என்ன உங்க அத்தான் முழிச்சுக்கிட்டாரா என்று கேட்டால்?' சற்றுத் திகைத்தாள். கேட்டால் என்ன, பதில் சொல்வோமே என்ற தைரியம் வந்தது. ''மரகதம்'' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே சென்றாள். பதிலில்லை. அந்த மரகதத்தைக் காணோம்.

அப்போது வாயில் துணி அடைக்கப்பட்டு மரகதம் கைமாறிக் கொண்டிருந்தாள். அவளால் அலறவும் முடியவில்லை; காலை உதறிக் கொண்டாள். கையால் அவர்கள் உடம்பைக் கிழித்தாள். அவள் உடம்பை ஒரு போர்வையால் போர்த்தியிருந்தார்கள். என்ன செய்வது? வாய் திறக்க முடிந்தால்தானே! கூரையின் மேலிருந்து, அவளைத் தூக்கிக் கொண்டு ஒருவன் குதித்தான். நாகலிங்கம் அவன் அருகில் ஓடி வந்தான். எல்லோரும் பக்கத்தில் இருந்த மனைமேல் பதுங்கிப் பதுங்கி ஓடினார்கள்.

நாகலிங்கத்துக்கு இருந்த ஆவலில் அப்போதே மோகனாவைத் தன் கையில் வாங்கிக்கொண்டு ஓட வேண்டும் எனத் தோன்றியது. ஆனால் தன் உடலைத்தூக்கிக்கொண்டே ஓட முடியாததால் தடுமாறிக்கொண்டே ஓடினான்.

அறையில் நுழைந்த மோகனா, 'மரகதம் மரகதம்' என்று கூப்பிட்டாள். இதைக் கேட்டவுடன் ''இப்பொழுதுதானே உள்ளே வந்தாள்'' என்று சொல்லிக்கொண்டே கடம்பவனம் பிள்ளை உள்ளே ஓடி வந்தார். விளக்குகள் தூண்டப்பட்டன.

'மரகதத்தைக் காணோம்'' என்றதும் வடிவாம்பாள் ''அய்யோ'' என்று அலறினாள்.

இதற்குள் எல்லோரும் எழுந்துவிட்டார்கள். ஆளுக்கொரு பக்கம் ஓடினார்கள். கடபுடா கடம்பவனம் கதறியே விட்டார். கம்பை எடுத்துக் கொண்டு ஓடும்போது அவருக்கு ஓடுகள் சரிந்து விழுந்து கிடப்பது தெரிந்தது. அதற்குள் கொல்லைக் கதவைத் திறந்த வரதன் அரச மரத்தடியில் கிடந்த சிங்க முகமூடியை எடுத்து வந்தான்.

கடம்பவனம் கிராமத்துப் பேர்வழி. மாட்டுத் திருடர்களின் காலடியைப் பார்த்தே தொடர்ந்து போய்த் திருடாதவனைத் துரத்திப் பிடித்துப் பழக்கப்பட்டவர்.

''அடியைப் பார்! அடியைப் பார்!'' என்றார்.



இருபது, முப்பது காலடிகள் தெரிந்தன. அதன் வழியே எல்லோரும் தொடர்ந்தார்கள். நல்ல நிலவு. காற்றில்லாத நேரம். காலடிகள் கலையாமல் தெரிந்தன. சண்முகத்தின் முகத்தில் ஈயாடவில்லை. தன் மேல் அன்பு கொண்டு இலங்கை வந்த ஒருவரின் துயரத்தை அவன் சகிப்பானா? மைனருக்கும் தாங்க முடியாத வேதனை.

செல்லக் கதிர்காமத்தில் முருகப் பெருமான் வள்ளியைச் சிறைப்பிடித்துக்கொண்டு வந்து இருவரும் மகிழ்ந்து விளையாடுவார்கள் என்று ஓர் இடம் உண்டு. அநேகமாய் அதற்கு ஆட் பாதத்தில்தான் போக முடியும். அவ்வளவு பெரிய காடு.

அந்த நடுக்காட்டில் ஒரு குகையில் கொண்டுவந்து போட்டார்கள் மரகதத்தை. இதுவரையில் கூடவே ஓடி வந்த நாகலிங்கம் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தான். தொண்டிக்கொண்டே ஒரு காலால் தாவித் தாவி கெக்கலி கொட்டினான். அவள் அருகில் அவன் நெருங்கி வருவதே ஓர் அரக்கன் வருவது போலிருந்தது. இறைவனையே நேரில் கண்டும் இதயம் மாறாத காமப் பேயாம் இலங்கையரக்கன் போல் இவனும் தோன்றினான். அவளைப் பிடித்து அள்ளி விழுங்குபவன் போல் அந்தத் துணி மூட்டையருகில் ஓடி வந்தான்.

''அடியே, தாசி மகளே! என் கையிலிருந்து தப்பவா பார்த்தே? இவன் யாரு தெரியுமா? ஒருத்தன் பூமியிலே பிறந்தா பொண்ணுக்குச் சாகணும், இல்லாட்டி மண்ணுக்குச் சாகணும்! அந்தப் பழக்கத்திலே வந்தவனடி நான்! இப்ப வரச் சொல்லு, அந்தக் கருப்பாயியை. இப்ப வரச் சொல்லு, அந்தப் பண்டாரப் பயலை'' என்று கூறிக்கொண்டே வரும்போது, ''நாகலிங்கம், என்னைக் கூப்பிட்டாயா?'' என்று குரல் கேட்டது. நாகலிங்கம் திரும்பினான். அங்கு நின்றார் பரமானந்தர்.

''அப்பனே! செல்லக் கதிர்காமத்தைத் தரிசிக்க வந்தேன். வள்ளிக் குகையிலிருந்தேன். நீ அழைப்பது கேட்டேன்.''

''அடப்பாவி, நீ இங்குமா வந்தாய்!'' என்று, தான் ஊன்றி நடக்கும் கட்டையை எடுத்து ஓங்கினான். அவர் தலையில் அடிக்க வந்தான்.

''அப்பனே! அது நான் சீவிக் கொடுத்த கம்பு.''

''ஆம், உன்னைக் கொல்லத்தான் இதை வைத்திருக்கிறேன்'' என்று நெருங்கினான் நாகலிங்கம். அப்போது 'நில் அப்படியே' என்ற குரல் கேட்டது. ஏட்டு கண்ணையா நாயுடுவும் இருபது சிங்களப் போலீஸ்காரரும் உள்ளே நுழைந்தார்கள். அதைக் கண்ட நாகலிங்கம் வெலவெலத்து நின்றான்.

''மோகனா, உன்னைப் பிடித்த கஷ்டங்கள் கதிர்காமத்திலே ஒழிந்துவிடும் என்று சொன்னேன் அல்லவா?'' என்று சொல்லிக் கொண்டே கீழே கிடக்கும் பெண்ணின் போர்வையை எடுத்ததும் பரதேசியாருக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. ''தாயே, நீயா?'' என்றார். மரகதத்தின் வாயில் இருந்த துணியை எடுத்தார். மரகதம் கடகட வென்று சிரித்தாள்.

"சாமி, எப்படித் தூக்கிக்கிட்டு வந்தாங்க தெரியுமா? குழந்தையைத் தூக்கற மாதிரி ஜம்ஜம்னு தூக்கிக்கிட்டு வந்தாங்க" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

அவளைப் பார்த்தவுடனே நாகலிங்கத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் இப்பாடு பட்டதும் தூக்கி வந்ததும் மோகனா அல்ல என்பதை உணர்ந்தான்.

அதேசமயத்தில் மரகதம் பேசினாள். "ஏய்யா, நீ ஒரு தமிழன்தானா? உனக்கு வெட்கமா இல்லே! பிறத்தியான் பெண்டாட்டியைத் தூக்கிக்கிட்டு வந்திருக்கியே. சே, ஆசை வந்தா கண்ணுமா தெரியாது? உங்க ஆட்களைக் கூரையிலே கண்டுக்கிட்ட பிறகுதானே, அக்காளைத் தலகாணியை எடுத்துக்கிட்டுப் போகச் சொன்னேன். என்னதான் செய்றீங்கன்னு பார்த்தேன்."

"அம்மா, ஆபத்தை நீயே விலைக்கு வாங்கிக்கொண்டாயா? தெரிந்தே திருடர்களிடம் அகப்பட்டுக்கொண்டாயா?"

"யாராவது அகப்படுவாங்களா சாமி, எனக்கு ஒரு ஆசை. திருடன் எப்படி இருப்பான், அவனைப் பார்க்கணும்னு ஒரு எண்ணம் கூட. எந்தத் திருட்டுப் பயலாக இருந்தாலும்கூட, ஒரு பொம்பளை இன்னொருத்தர் மனைவின்னு தெரிஞ்சா விட்டிடுவான், அப்படின்னு ஒரு நம்பிக்கை."

"என்னம்மா, திருடனுக்குக்கூட அந்த விசுவாசமெல்லாம் உண்டா?"

"திருடனும் மனுஷன்தானே. பத்துத் திருடன்லே ஒரு திருடன் கூடவா தாய்க்குப் பிறந்தவன் இருக்க மாட்டான்?" என்று சொல்லிக் கொண்டே நாகலிங்கத்தின் அருகில் நெருங்கினாள்.

"என்னய்யா சொல்லுறே இப்போ? நான் வீட்டுக்குப் போகலாமா?" என்றாள்.

கொடிய நாகலிங்கம், பாம்பைப் போன்ற குணம் படைத்த நாகலிங்கம், கொலைக்கு அஞ்சாத நாகலிங்கம், தானே காதலித்த கருப்பாயியைக் கொலை செய்யத் துணிந்த நாகலிங்கம், தனக்கு எதிரியான சண்முகத்தைக் கொலை செய்யத் துணிந்த நாகலிங்கம், மோகனாவையும் தனக்கு இணங்கச்செய்வது அல்லது அவளைக் கொன்றுவிடுவது என்று எண்ணியிருந்த நாகலிங்கம் - இன்றைக்கு மரகதத்தின் முன்னே, கண்ணைத் திறந்து பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தான்.

போலீஸ் ஹெட்கான்ஸ்டேபிள் கன்னையா நாயுடு நாகலிங்கத்தைக் கைது செய்தார். "நாகலிங்கம்! உன்னைத் தண்டிக்கவோ, உன்னைக் கைதியாக்கிச் சிறையில் தள்ளவோ எனக்கு விருப்பமில்லை. என்றைக்கு உன் கால் போயிற்றோ அன்றைக்கே உன் கண் திறக்குமென்று நினைத்தேன். 'பரமானந்தா, அகங்காரம் கொள்ளாதே, அவன் என் படைப்பு' என ஆண்டவன் கூறிவிட்டான்.



"இப்பொழுது நீ அனுபவிக்கப் போகும் கஷ்டம் இன்னொரு நல்லவருக்கு நன்மையாகப் போகப் போகிறது. உன்னால் ரமாமணி சிறையில் கஷ்டப்படுகிறாள். அவள் வெளியே வரட்டும். உன்னைக் கணவனாக அடைந்த பாவத்திற்கு அவள் இத்தனை நாள் தண்டனை அனுபவித்தது போதும். நாயுடு, அவனைப் பிடித்துச் செல்லலாம்" என்றார் பரதேசியார்.

"மரகதம், மரகதம்" என்று பலர் அலறும் சத்தம் கேட்டது. மோகனா, மைனர், சண்முகம், வடிவாம்பாள் எல்லோரும் அந்தக் குகைக்குள் ஓடி வந்தார்கள்.

கடம்பவனம் பிள்ளை அவர்களுக்கு முன்னே ஓடி வந்தார்.

வந்த வேகத்திலே வடிவாம்பாள், "ஐயோ, நாகலிங்கம்! அடப்பாவி, நீ இங்கேயுமா வந்தே?" என்று கையைக் காட்டி அவனைத் திட்டினாள்.

"அயோக்கிய ராஸ்கல், உனக்கு எவ்வளவு துணிச்சல்? என் மகளைத் தூக்கிட்டுப் போக!" என்று சொல்லிக்கொண்டே, தன் தடியை ஓங்கி அவன் தலையில் படார் என்று ஒரு போடு போட்டார் கடம்பவனம். கண்மூடித் திறக்கும் அந்த நேரத்திற்குள், இன்னொரு உருவம் அந்த அடியை வாங்கிக்கொண்டது. "சிவா, திருச்சிற்றம்பலம்" என்று அலறியது. மண்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அப்படியே கீழே விழுந்தது அந்த உருவம். "சாமி, சாமி" என்று எல்லோரும் அலறிக்கொண்டு அதன் அருகில் ஓடினார்கள்.

ஆமாம், அந்தப் பாவியின் மேல் விழுந்த அடியை, தாமே வாங்கிக் கொண்டார் பரமானந்தப் பரதேசியார். அவருக்குப் பிரக்ஞை தவறிவிட்டது. மயக்கமுற்றுக் கீழே கிடந்தார்.

சண்முகசுந்தரம் ஓடி வந்தான். "சாமி, ஐயோ! உங்களுக்கா அடி விழுந்துவிட்டது. நான் யாரிடம் போவேன்? யாரைக் கொண்டு மருந்து போடச் சொல்வேன்?" என்று அவரைத் தூக்கி மடியிலே வைத்துக் கொண்டான்.

மோகனா அலறிய வண்ணம் அவர் அருகில் உட்கார்ந்தாள். அவள் பட்டுப் புடைவையைப் பிரித்து, முந்தானையால் அவர் தலையில் வழிந்த ரத்தத்தைத் துடைத்தாள். மைனர் ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தார். பரதேசியாரின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள். பரதேசியார் மெல்ல, ஆனால் தெளிவுடன், பின்வரும் பொன் மொழிகளைப் புகன்றார்.

"கடம்பவனம், கடவுள் ஒருவருக்குத்தான் தண்டிக்க உரிமையுண்டு. அவர் கையிலிருந்து நீதியை நீ எடுத்துக்கொள்ள நினைத்தது தப்பு, கன்னையா நாயுடு" என்றார்.

ஹெட் கன்னையா நாயுடு பரதேசியார் அருகில் ஓடி வந்தார். "நாகலிங்கத்தைக் கைது செய்துகொண்டு போங்கள். நல்ல வக்கீல்

வைத்து, வாதாடி, ரமாமணியை விடுதலை செய். நாகலிங்கம், பாம்புக்குக்கூட சில சத்தியங்கள் இருக்கின்றன. அதனால்தான் நல்ல பாம்பு என்கிறார்கள். அது எல்லோரையும் கடித்துவிடுவதில்லை. ஒன்று மிதித்தால் கடிக்கும், அல்லது மிதித்தால் கடிக்கும். நீ அப்படிக்கூட இல்லையே. அப்பா, கடல் கடந்தும் உன் காமம் தணியவில்லையே! சிறையில் இருக்கும்போது, சிவனை நினைத்துக்கொண்டே இரு. விடுதலையாகி வெளியே வந்ததும், நெற்றியிலே திருநீற்றைப் பூசு. இதுவரையில் நீ செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகப் பிறருக்கு நன்மை செய்துகொண்டே இரு'' என்று தடுமாறிக்கொண்டே உரைத்தார். இந்தக் கடைசி வார்த்தையைச் சொல்லும்போது, பரதேசியாரின் கண்கள் செருகின. உடல் தள்ளாடியது. அப்படியே சாய்ந்தார்.

''சாமி !'' என்று அலறினாள் மோகனா.

''என் கையை எரிச்சுடுங்க மாப்பிள்ளை, என் கையை நெருப்பிலே வச்சிடுங்க. நான் தெரியாம செஞ்சுட்டேன் மாப்பிள்ளை. ஐயோ, பரதேசியார்னு தெரிஞ்சா அடிப்பேனா ?'' என்று கடம்பவனம் பிள்ளை 'ஹோ' என்று அலறினார். அவர் மகள் மரகதம், ''அப்பா, இந்த மாதிரி ஏதாவது செஞ்சிடுவீங்கன்னுதானே நான் உங்களை வர வேண்டாம்னு சொன்னேன் ; ஐயோ !'' என்று அலறினாள்.

வைத்தியனுக்கு நோய் வந்துவிட்டால், யாரால் என்ன செய்ய முடியும்? தெய்வமே பயந்து ஒளிந்துகொண்டால், பக்தர்கள் என்ன செய்வார்கள்?

எவர் துணையை நம்பி சண்முகம், மோகனா எல்லோரும் உலகத்தில் வாழ்கின்றனரோ, அவருக்கே அடிபட்டது என்றால், யார் என்ன செய்வது? இதற்குள் குமாரசாமி கதிர்காமத்திலிருந்து யாரோ ஒரு நாட்டு வைத்தியனை அழைத்துக்கொண்டு வந்தார்

அவன் கையைப் பிடித்துப் பார்த்தான். சாமியாரின் முகத்தைப் பார்த்தான். தலைக் காயத்தைப் பார்த்தான். ''என்னாலே இவருக்கு வைத்தியம் பண்ண முடியாது'' என்றான்.

''ஏன்?''

''இது மனித உடம்பல்ல. அதற்கு மேற்பட்டது. இது முப்புக் கட்டு ஏறிய உடம்பு. வீரம், பூரம், பாஷாணம் முதலான எந்த மருந்தும் இந்த உடம்பில் பலிக்காது !''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''என்னாலே வைத்தியம் செய்ய முடியாதுங்க'' என்று அவன் சொல்லவே கடம்பவனம், ''இரண்டாயிரம் ரூபாய் தரேன். வைத்தியம் பண்ணு'' என்றார்.

''சாமி பதினாயிரம் கொடுத்தாலும் மருந்து பலிக்காது. அந்த ரத்தத்தைப் பாருங்க. சிவப்பாவா இருக்குது? பச்சை கலந்திருக்கே. பச்சிலைச் சந்து எல்லாம் அங்கே செல்லாது.''



''அவர் தேக நிலை எப்படி இருக்கிறது ?'' என்றாள் மோகனா.

''எல்லாம் சரியாக இருக்குது அம்மா. மூன்று நாடியும் சரியாகப் போகுது. மூச்சும் தடையில்லாமே வருது. கையிலே அழுத்தமும் இல்லை, துடிப்பும் இல்லே. மயக்கத்திலே இருக்காரா, நிட்டையிலே கிடக்காரா, என்னாலே சொல்ல முடியாது.''

அதற்குள் வடிவாம்பாள், ''எப்பா, சாமியார்களுக்கெல்லாம் மண்டையிலே தேங்காய் உடைச்சு கபால மோட்சம் பண்ணுவாங்களே, இவருக்கும் மண்டையிலே காயம் பட்டிருக்கே, அது சரிதானா?'' என்றாள்.

''அம்மா, அது அவருக்குத்தான் தெரியும். எப்படியாகும்னு நான் எப்படிச் சொல்லறது ? பிழைச்சாலும் பிழைக்கலாம். நீங்க சொல்லற மாதிரியானாலும் ஆகலாம்'' என்று சொல்லிவிட்டு மருந்துப் பையைக் கட்டிவிட்டான் வைத்தியன்.

''சாமி, இந்த ஏழையின் உயிரை வாங்கியிருக்கக்கூடாதா ? ஐயோ உங்களால் எத்தனை பேருக்கு உபகாரம். என் தோளில் காயம் பட்ட போது காப்பாற்றினீர்கள். காட்டில் அகப்பட்ட மோகனாவைக் காப்பாற்றினீர்கள். கஷ்டம் வரும் இடத்தில் எல்லாம் கடவுளைப் போல வந்து காப்பாற்றினீர்களே ! உங்களுக்கு இப்போது யாரைக் கொண்டு வைத்தியம் பார்ப்பேன் ? நான் என்ன செய்வேன் ?'' என்று அலறினான் சண்முகசுந்தரம்.

''உங்களாலே எனக்கு விடியும்னு நினைச்சேன், சாமி, என் மனது போல நடக்கும்னு ஆசைப்பட்டேன். ஆரம்பம் முதல் தாங்கள் ஒருவர் தாமே, என் விருப்பத்தைப் புரிந்துகொண்டு ஆசீர்வாதம் செய்தீர்கள். இந்தப் பாவியாலே உங்கள் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டதே. ஐயோ, இனி திருநாட்கள் எல்லாம் வெறும் நாட்களாகிவிடுமே. எந்த ஊரிலே திருவிழா, கொடியேற்றம் நடந்தாலும் அந்த ஊரிலே தெய்வமாகக் காட்சியளிக்கும் தங்கள் திருமேனியை இனிமேல் எங்கு பார்ப்போம் சாமி ?'' என்று கத்திக்கொண்டே, ஓடிப்போய் அவருடைய கால்களைக் கட்டிக்கொண்டு கதறினாள் மோகனா.

# தின்றால் தித்திக்கும் திருவைந்தெழுத்து



**வெ**ள்ளத்தோடு கலந்து ஓடும் நுண்ணிய மணல்தான் மண்ணாங்கட்டியாகிறது. பிறகு இன்னொரு வெள்ளத்தில் அந்த மேடு கரைந்து, மறுபடியும் மணலாகி, எங்கோ இழுத்துச் செல்லப்படுகிறது. இந்தச் சிறு மணல் போன்றவைதாம் ஜீவராசிகளும்.

ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிறகு சொல் துணையாக வந்தது. மொழி பிறகு சேர்ந்தது . அதன் பின், தாயும், தம்பியும் தந்தையும் உறவினர்கள் ஆனார்கள். சில நாளில் அவளுக்குக் கல்யாணம் ஆயிற்று. எங்கோ பிறந்த ஒருவன் துணை சேர்ந்தான்! அதன் பின் பிறந்த வீடு மறந்தது, புகுந்த வீடு உறவாயிற்று. மாமன், மாமி முதலியவர்கள் பழுப்பு உதிர்வதுபோல் உதிர்ந்தார்கள். அவளே வீட்டுக்காரியானாள். அவள் பிள்ளைகளும் பெண்களும் மருமக்களும் மருமகளும் பிறகு துணை ஆனார்கள். பேரன் பிறந்தான், அவள் பாட்டியானாள்.

சில நாளில் முதலில் துணை வந்த சொல் தடுமாறியது; நடை தடுமாறியது; அவள் குழந்தை நிலைக்கு வந்தாள். தனி மணல் ஆனாள். அந்தத் தனி மணலைக் கால வெள்ளம் இழுத்துக்கொண்டு போயிற்று. ஆட்டி வைப்பவன் யாரோ, நாம் ஆடுகின்றோம். கூட்டுவிப்பவன் யாரோ, நாம் கூடுகின்றோம். கூடிப் பிரியும் கண நேரத்தில், ஆசைகளைக் கொட்டி அளந்து ஆசைக் கடலில் அகப்பட்டுத் தவிக்கிறோம். இந்தத் தகராறு நமக்கு எதற்கு ? உலகம் மாயை என்று கருதித்தான் பரமானந்தர் பரதேசியானார். ஆனால் அன்பைச் சொரிந்தார். அதுவே ஆபத்தாயிற்று.

அவர் உலகைத் துறந்தாலும் உலகம் அவரைப் பிடித்துக்கொண்டது. பரதேசியார் காயம்பட்டு விழுந்தவுடன், அங்கிருந்த ஒவ்வொருவருடைய உள்ளக் கதவும் திறந்தது. கதறினாள் மோகனா. பிறரைத் தொடக்கூசும் பெண் அவர் காலைப் பிடித்துக்கொண்டு கதறினாள். ஒரு வண்டியில் வந்ததற்காகச் சந்தேகித்த அந்த ஆண் மகன், பக்கத்தில் நின்றுகொண்டு கூடவே கதறினான்.

''ஐயோ, நாம் ஏன் கதிர்காமத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். வந்தவிடத்திலே இவ்வளவு பெரிய ஆபத்து வந்துவிட்டதே. நாம் ஒரு பெரிய பாவத்திற்குக் காரணமாக இருந்தோமே !'' என்று துடித்தார் முத்துராக்கு.



கம்பால் ஓங்கி அடித்த கடம்பவனம், கன்னிப் பெண் போலக் கதறி அழுதார். கல் கரைந்தாலும் கரையும், காரைக்கால் நடேசன் கரையாதவர்; அவருக்கே கண் கலங்கியது.

ஒரு பக்கம் இவ்வாறு கண்ணீர் பொங்கி வழிகின்றது. அப்பொழுது மோகனாவின் இதயத்தில் ஒரு கருத்து பொங்கியது. ''அம்மா, அழுது பயனில்லை. அவரைத் தூக்கிக்கொண்டு போய் எப்படியாவது பிழைக்க வைக்க வேண்டும். அன்றைக்கு அவருக்குக் காயம் பட்டபோது, ஓடிப்போய் சாமி பச்சிலை கொண்டுவந்தாங்க. இன்றைக்கு நாம் எந்தப் பச்சிலையைத் தேடுவது ? 'அரும் மருந்து ஒரு தனி மருந்து, தில்லை அம்பலத்தே தான் கண்டது' என்று நட்டுவனாரய்யா ஒரு பாட்டுப் பாடுவாரே, அந்த மருந்துதான் அவரைக் காப்பாற்ற வேண்டும்'' என்று அவள் அலறியவுடனே எல்லோரும் சேர்ந்து பரதேசியாரைத் தூக்கினார்கள்.

அந்தத் திருமேனி சிறிதுகூட ஆடவில்லை. சிறிதுகூட அசையவில்லை. ஆனால் உடம்பைச் சுற்றி இருந்த பேரொளி மட்டும் சற்றும் குன்றவில்லை. அவர் உயிருடன் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள மூச்சு மாத்திரம் ஓடிக்கொண்டிருந்தது. எப்படித்தான் தூக்கிக் கொண்டு வந்தார்களோ ! இரண்டு மைலை இரண்டே நிமிஷத்தில் கடந்தார்கள்.

சத்திரத்தின் வாசலில் வந்தவுடன், திடீரென்று சண்முகம் எல்லோரையும் கையமர்த்தினான். ''அழாதீர்கள் ! யாருக்கு யார் அழுவது? சாமி எல்லோருக்கும் பெரியவர். அவருக்கு வைத்தியம் செய்ய எவன் இருக்கிறான் ? அவருக்கு மேல் பெரியவன் யாரோ அவன் தான் அவருக்கு வைத்தியம் பார்க்க வேண்டும். கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முருகன் அதோ இருக்கிறான். அவன் காலடியில் கொண்டுபோய்ப் போடுவோம். அவன் காப்பாற்றுகிறானா இல்லையா என்று கேட்போம்'' என்று அவன் ஆவேசத்துடன் சொல்லவே, மோகனா, சண்முகம், மைனர் எல்லோரும் சேர்ந்து பரதேசியாரைத் தூக்கிக் கொண்டு போய், கதிர்காமவேலன் சந்நிதியில் கிடத்தினார்கள்.

தூங்கிக்கொண்டிருந்த கப்புராளைகளை எழுப்பி விபூதியைக் கொண்டுவரச் சொன்னார்கள். பரதேசியாரின் காயத்தில் திருநீற்றை வைத்து அப்பினார்கள்.

''காலன் எனை அணுகாமல், உனதிரு காலில் வழிபட அருள்வாயே!'' என்று அருணகிரிநாதர் எவன் காலடிகளைத் தஞ்சம் அடைந்தாரோ, அந்தப் பேரருட் கடவுள் திருவடியிலே பெரியார் கிடந்தார். தில்லை நடராஜனும், கதிர்காமவேலனும், தென்திசையை நோக்கித்தான் நிற்கின்றார்கள். ''காலா, என் அடியார்களிடம் வாலாட்டாதே'' என்று கண் திறந்து அவனைப் பார்க்கின்றார்கள். அந்த முருகன் சந்நிதியில் பரதேசியார் கிடத்தப்பட்டவுடனே ஒவ்வொரு

வரும். "முருகா, முருகா, முருகா !" என்று உள்ளம் உருக, ஓதி வணங்கினார்கள். "ஐயோ, இப்போ சாமி முழிச்சிட்டிருந்தா, அவுங்கதானே முதல்லே முருகான்னு சொல்லுவாங்க" என்றாள் வடிவாம்பாள். அவளுடைய கல் மனமும் கரைந்தது. "மாணிக்கம் வரும்னு சொன்னாங்களே அதுக்குப் பரதேசியார் பாட்டுச் சொல்லிக் குடுக்கணும்னு நினைச்சேனே ! என்னுடைய ஆசையெல்லாம் வீணாப்போச்சே ஐயா, குமாரசாமி ஐயா. இங்கே யாராவது இங்கிலீஸ் டாக்டர் இருப்பாங்களா?" என்று அவள் குமாரசாமியிடம் மன்றாடினாள்.

அந்தச் சமயத்தில் சண்முகம் ஆவேசம் கொண்டான். "நில்லுங்கள். மடியிலே மருந்தை வைத்துக்கொண்டு மற்ற இடங்களில் தேடுவதா? நெஞ்சிலே மருந்திருக்க நிலத்திலே தேடுவானேன்? மருந்து என் கையில் இருக்கிறது. என் குருநாதன் தந்திருக்கிறான்" என்று கூறி, பின்வருமாறு வீராவேசத்துடன் மொழிந்தான்.

"முருகா, இந்தச் சிக்கல் சண்முகசுந்தரம் நாத உபாசனை செய்தது உண்மையானால், ஏழு இசையே கடவுள் என்று எண்ணியது உண்மையானால், ஒவ்வொரு ஸ்வரங்களும் ஜீவன் உள்ளவை என்று கருதியது உண்மையானால், நாபிக் கமலத்தில் உதிக்கும் நாதமே நாரணன், அதுவே உலகைக் காக்கும் என்று நான் நினைத்து, நெஞ்சிலே குழைத்து, நினைவிலே தாலாட்டிக் கொஞ்சிக் கொஞ்சி அதனோடு விளையாடியது உண்மையானால், இரவு-பகல், காலை-மாலை, தூக்கம்-விழிப்பு என்று பாராமல் எந்த நேரத்திலும் சப்த சுரங்களே என் சப்த நாடிகள் என்று இருப்பது உண்மையானால், என் ஒவ்வொரு மூச்சும் ஆரோகணம் ஆகட்டும். இதோ ஊதுகிறேன். எடுங்கள் என் வாத்தியத்தை! ஊதி ஊதி என் காற்று முழுவதையும் கொடுக்கிறேன். நாதப் பிரம்மம் எங்கும் நிறையட்டும். அந்த ஜீவநாதத்திலே ஜீவன் தழைக்கட்டும். ஒன்று, அவர் பிழைக்க வேண்டும். அல்லது ஊதி, ஊதி, இவன் இதயம் வெடித்து மடிய வேண்டும். தருமண்ணே, கொண்டு வா, என் வாத்தியத்தை !"

தருமன் ஓடினான். தேடினான். திரும்பாமல் அங்கேயே நின்றான். "எங்கே வாத்தியம்?" என்று மறுபடியும் சண்முகம் கதறினான். ஏன் வருகிறான் தருமன்? ஆம், என்றைக்கும் சண்முகத்தை விட்டு நீங்காத அந்த வாத்தியம் இன்று திசைமாறாவிலே தங்கிவிட்டது.

"இதோ, ஓடிப்போய் ஒரு எட்டிலே எடுத்துக்கிட்டு வரேனுங்க, வண்டியிலே இருக்குது. என்றான் தருமன்.

"ஐயோ, என் செல்வத்தை வண்டியில் வைத்துவிட்டீர்களா ! உங்களை என்ன சொல்வது ? அதைக் கொண்டுவருவதற்குக்கூட உங்களுக்குச் சிரமமா ? என்னிடம் கொடுத்திருந்தால் என் தோளில் பையைச் சுமந்து வந்திருப்பேனே! என்ன தவறுதல் செய்துவிட்டீர்கள் !



உங்களைச் சொல்லி என்ன பயன் ? என் விதி, என் விதி" என்று தலையில் அடித்துக்கொண்டான் சண்முகம்.

அப்பொழுது சத்திரத்திற்கு ஓடினார் மைனர். தன் படுக்கையைப் பிரித்தார். அதற்குள்ளிருந்து ஒரு வெல்வெட் உறை போட்ட ஏதோ ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தார். "பிள்ளை, அன்றைக்கு நான் தங்க நாயனம் கொடுத்தேன். நீங்க தங்க நாயனத்திலே இசை பொருந்திவிடாது என்று சொன்னீர்கள். இதோ, பாரி நாயனம். இதைக் கதிர்காம வேலன் வாசலிலே கொடுக்க வேண்டுமென்றுதான் கொண்டுவந்தேன். இதை வாங்கி வாசியுங்கள்" என்று வெல்வெட் பையைத் திறந்து, ஒரு வாத்தியத்தை எடுத்தார்.

அந்த நாதஸ்வரத்தைப் பார்த்தவுடன் சண்முகத்தின் உடல் சிலிர்த்தது. மயிர்க்கூச்செறிந்தது. விழிநீர் சுரந்தது. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் ஒரு ஜீவசக்தி ஓடியது. ஏன் இந்தப் பரவசம் ? ஆம், எம்பெருமான் தியாகராஜரே எதிரில் வந்து நிற்பது போல் அவன் எதிரிலே நின்று காட்சி அளித்தது, திருவாரூர் பாரி நாயனம். "ஹா! எங்க ஊர்ப் பாரி நாயனம்" என்று இரைந்து கத்தினாள் வடிவாம்பாள்.

சண்முகம், அதை ஆவலுடன் இரு கையால் வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டான். மோகனா திகைத்தாள். எல்லோரும் பிரமித்தனர். "ஐயோ தம்பி, இதைத் தொட்டு ஊதாதீங்க. தியாகராஜாவுக்காகது. அதை அவரு சந்நிதியிலேதான் ஊதணும். வேறே ஊரிலே ஊதப்படாது" என்று ஓடிப்போய் அவன் கையைத் தடுத்தாள் வடிவாம்பாள்.

"அம்மா !" என்று ஓடி வந்தாள் மோகனா. "அம்மா, தெய்வம் பொல்லாததாக இருக்குமா ? அதிலும் தியாகராஜா பொல்லாதவராக இருப்பாரா ? தடுக்காதே அம்மா !"

"அட, நீ அப்படிப் போ பொண்ணே ! சாமி குத்தம் வந்தா, ஒவ்வொருத்தரும் தனக்குக் கிடைக்கவில்லையென்றால் தட்டிக் கழிக்கத்தான் நினைப்பாங்க. தம்பி, இதை ஊதாதீங்க !"

"அத்தை, தடுக்காதீங்க. இதில் நான் ஊதிய குற்றத்துக்காக எனக்கு அவர் என்ன தண்டனை தந்தாலும் அனுபவிக்கிறேன்" என்றான் சண்முகம்.

அப்போது மைனர், "அம்மா, இது திருவாரூர் நாயனமில்லே. அந்த வாத்தியத்தை வாங்கிக்கிட்டுப் போய், திருநாகேசுவரத்திலே கொடுத்து அப்படியே ஒன்று செய்யச் சொன்னேனுங்க. மாசிலாமணி ஆசாரி போட்டுக் கொடுத்தார். சண்முகம், சும்மா ஊதுங்க !" என்றார்.

அது திருவாரூர் பாரி நாயனத்தைவிடச் சற்று சிறியதாக இருந்தது. திருவாரூர் தேர் முழுத்தேர். ஆரூர் நாதஸ்வரம் முழு நாதஸ்வரம்.

அதைச் செய்த ஆசாரியார் பண்பாடு உடையவர். ஆதலால், அதன் நீளத்திலும் வீசம் குறைத்து பாரி போல ஒன்றைச் செய்திருந்தார். வேண்டுமென்றே ஒரு விரற்கடை நீளத்தைக் குறைத்திருந்தார். சுருதியும் இன்னும் சற்றுக் குறைவாக இருக்கும்படி செய்திருந்தார்.

சண்முகம் ஓடினான். கதிர்காமவேலனுக்கு முன்னே அதை வைத்தான். விழுந்து வணங்கினான். எடுத்துக்கொண்டான். பரதேசியாரிடம் ஓடி வந்தான். "நாத வடிவமே, நாத யோகியே, நாதமூர்த்தியே நாதம் உங்களுக்கு ஜீவநாதத்தை அளிக்கட்டும். தேவரும் வேதமும் நாதத்தில்தான் பிறந்தன. நாதமும் நாதாந்த முடிவும் அவனே என்பதை உலகம் அறியட்டும்" என்று கூவி, சீவாளியில் வாயை வைத்து, 'பீ, பீ' என்று ஊதினான். அதைக் கேட்டவுடனே, காலன் ஓடினான். அந்த வாசிப்பை என்ன சொல்வது? எப்படி எழுதுவது? தேனைக் குழைத்துச் செந்தமிழில் மத்தித்து வானைப் பிழிந்து வடித்த பெருஞ் சுவை என்பதா? அமுத மழை பெய்தது என்று சொல்வதா? ஆறுமுகப் பெருமான் பன்னிரண்டு கண்களிலிருந்து அருள் மழை பொழிந்தது என்று கூறுவதா? வானகத்துத் தேவர்கள் வாழ்த்துகின்றார்கள் என்று சொல்லுவதா? என்ன சொல்லி எழுதுவேன்? இசையை எழுத முடியுமா? ஈசனை எழுத முடியுமா? முடியவில்லை, முடியவில்லை! உரை தடுமாறுகிறது. என் உள்ளம் நினைக்கின்றது. உணர்ந்துகொள்ளுங்கள், உள்ளத்தில் எண்ணுங்கள், உருகுங்கள், கருணை வெள்ளத்தைக் காணுங்கள்.

**"பொங்கிவரும் பாற்கடலோ**
**பூரண சந்திரனோ**
**சங்கொலி முழங்கியதோ?**
**சாரங்கம் ஆர்த்ததுவோ - என**
**எங்கும் நிறைநாதம்**
**எழும்பியது ஈசனைப்போல்"**

எங்கிருந்துதான் இந்தப் பாடல் தோன்றியதோ அவன் இதயத்தில்? எத்தனையோ பாடல்கள் இருக்க, பின்வரும் பாடலை ஏன் தேர்ந்தெடுத்தானோ? அவனா எடுத்தான்? அதுவே வந்தது. இந்தச் சமயத்திற்கென்றேதான், நாவுக்கரசர் தீட்டி வைத்தாரோ! அவன் குழலில் கொல்லிப் பண் முழங்கியது. அழலில் வீழ்ந்தவன் போல் அலறினான் காலன். ஐயனின் சூலப்படை 'காலா, உனைக் கொல்வேன்' என எழுந்தது போல் சீறியது நாதசுரம்.

**"கூற்றாயினவாறு விலக்ககிலீர்**
**கொடுமைபல செய்தன நானறியேன்"**

எம்பெருமானே, வினையை விலக்கு, உன்னை எக்கணமும் பிரியேன், உன் காலைப் பிடித்தேன், இனிக் கையை எடுக்கமாட்டேன்' என்று சண்முகம் நெஞ்சுருக ஊதினான். அந்தப் பாடலில் உள்ள

**"சலம்பூ வொடு பூசை மறந்தறியேன்**
**தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்**
**நலம்தீங் கிலுமுன்னை மறந்தறியேன்**
**நாமம்என் நாவில் மறந்தறியேன்"**

என்ற அடிகளை வாசிக்கையில் இந்தப் பாடல்தானே பரதேசியாரின் திருக்குணங்கள் என நினைத்தான். கண்ணீர் பொங்கியது, நாக் குழறியது.



நாதசுரம் தடைப்பட்டது. ஹாவென்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டான் சண்முகம்.

அவன் கண்கள் ஊதி ஊதிச் சிவந்தன. குகையில் பொன்னை வைத்து, பொன் பழுக்க ஊதும் பொற்கொல்லர் போல் அவன் பரதேசியாரின் இதயக் குகையில் இருக்கும் ஜீவ சோதியைப் பழுக்க வைக்கப் பார்க்கிறான். ஆனால் பொறி பற்றவில்லை. ஊத ஊத அவன் நெஞ்சு பிளந்துவிடும் போல் ஒரு வலி வலித்தது. உடல் வியர்த்தது. தள்ளாடினான். 'சிவபெருமானே, நீதான் துணை. என் நாவில் நின்று அவரைக் காப்பாற்று!' எனக் குழைந்தான். ஆறாத் துயரத்திலே அவன் அஞ்செழுத்தை ஓதினான்.

**"நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே**
**பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**யாவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்**
**கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே."**

வானகத்திலே பளீரென்று ஒரு மின்னல் வெடிக்கிறது. அந்த மின்னலிலே ஒரு வெள்ளிப் பிழம்பு விரிகின்றது. அது ஒரு பாதை போல் அமைகின்றது. அந்தச் சாலையின்மீது சிவப்பு, பச்சை, மஞ்சள், காய்ம்பூ, காவி, நீலம், ஊதா என்று ஏழு வர்ணங்களில் ஏழு பச்சிளங் குழந்தைகள் விளையாடுகின்றன. ஒவ்வொரு குழந்தையும், ஒன்றையொன்று தொட்டும் தொடாமலும் வட்டமிட்டுக்கொண்டு பறக்கின்றன. செண்டை வரிசை போல் வரிசை வரிசையாக வருகின்றன. வீணையின் நாதம் எழுகின்றது. அந்த நாதத்திற்கேற்ப அந்தக் குழந்தைகள் நடனமாடுகின்றன. அப்போது ஒருபுறம் மத்தளம் முழங்குகின்றது. நந்தி தேவர் வந்து நிற்கின்றார். மத்தளத்தை முழக்குகின்றார். உலகைப் படைத்த பிரம்மதேவன் தனது நான்கு வாய்களாலும் நமச்சிவாய, நமச்சிவாய என்று ஓதுகின்றான். ஓங்கி உலகளந்த மாயன் கையில் தாளமிசைக்கின்றான். தாத்த திமித்த தீத்தி என்ற அடை வுஜதிகள் முழங்குகின்றன. ஆட்டம் சத்தம் கேட்கின்றது. விரித்த செஞ்சடையாட, எம்பெருமான் நடராஜ மூர்த்தி ஆடிக்கொண்டு வருகின்றார். அஞ்செழுத்துப் பொருளாம் அவனைக் கண்டவுடனே

மலைகள் குமுறுகின்றன, ஓம் நமச்சிவாய. அலைகள் புரளுகின்றன, ஓம் நமச்சிவாய. வானவெளி பாடுகின்றது. ஓம் நமச்சிவாய மோனவெளி முழங்குகின்றது ஓம் நமச்சிவாய கல்லும் மலையும் காடும் மேடும் புல்லும் புனலும் புலம்புகின்றன ஓம் நமச்சிவாய.

கிண்கிணி ஆர்ப்ப, புலித்தோல் ஆட, பலவினை ஓட, நாவினுக் கருங்கலமாம் நமச்சிவாயப் பொருள் அங்கு ஆடுகின்றது.

சிவகாமி அம்மை ஓடி வருகின்றாள். "நீ மாத்திரம் ஆடுகிறாயா? நான் ஆட மாட்டேனா?" என்று கேட்கின்றாள். காலில் சலங்கையைக் கட்டினாள். கைகளில் அஞ்சலி கூட்டினாள். சக்தி, வேல் எனத் துள்ளி

விளையாடினாள். ஆம், மோகனா ஆடிக்கொண்டே இருக்கிறாள். அவள் கண்ட கனவில் அம்மை சிவகாமி ஆட ஆரம்பித்தவுடனே, அவள் தன்னை மறந்தாள். சண்முகம் நாதஸ்வரத்திலே ஆட ஆரம்பித்து விட்டான். எவ்வளவு நேரம் ஆட்டம் நடந்தது என்று சொல்ல இயலாது. ஆனால் அப்போது எங்கும் திருமேனி, எங்கும் சிவசக்தி, எங்கும் சிதம்பரம் எங்கும் திருநடனமாகவே இருந்தது. நாதப் பிரம்மத்தில் எல்லாம் கலந்து ஒன்றாகி நிற்கும் அந்நிலையில் ஒரு குரல் எழுந்தது. குரல் வந்த திக்கை எல்லோரும் நோக்கினார்கள். அங்கு தென்றல் போலத் தீஞ்சுவைக் குரலில்,

**''ஒன்று கண்டேன்,**
**இவ்வுலகுக்கு ஒருகனி**
**நன்றுகண் டாய்அது**
**நமச்சிவா யக்கனி**
**மென்றுகண் டால்அது**
**மெத்தென் றிருக்கும்**
**தின்றுகண் டால்அது**
**தித்திக்கும் தானே.''**

என்று, அருள் வடிவமான பரமானந்தப் பரதேசியார் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, படுத்த படுக்கையிலேயே பஞ்சாக்கரக் கூத்தைப் பார்த்துப் பரவச நிலையில் திருமந்திரம் பாடினார். காலனைக் காலால் உதைத்த கங்காளன் வந்து நின்றான். ஏழு இசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய் நிற்கும் எம்பெருமான் ''பரமானந்தா, எழுந்திரு'' என்று பகர்வது போல, அருள் பொங்கிய காட்சி அவர் முகத்தில் தெரிந்தது. இதைப் பார்த்த எல்லோருடைய சிந்தையும் குளிர்ந்தது.

வெறுப்பு, நெருப்பைக்காட்டிலும் கொடியது. அதற்கு இடம் கொடுத்தவனை ஒழித்துவிட்டுத்தான் அது தணியும். தன் கண் முன்பே அந்தப் பரதேசியார் விழித்துக்கொண்டதைக் கண்டான் நாகலிங்கம். ஒரு திமிறு திமிறினான். ''பாவி, நீதானே என்னைப் பிடித்துக் கொடுத்தாய்; இந்த உயிர் இருக்கிற வரையிலே அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்வதைப் பாத்துடறேன்'' என்று சத்தம் போட்டான். ஆனால் சிங்களப் போலீஸ் இன்ஸ்பெக்டர் கொடுத்த அடியில் ஒரு முறை உருண்டு விழுந்தான். அவனைக் குகைக்கு இழுத்துச் சென்றார்கள். அவனுடைய உடைமைகள் சோதனை போடப்பட்டன. வைத்தியிடமிருந்து களவுபோன பணத்தில் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் அங்கிருந்து கிடைத்தது. கன்னையா நாயுடு அவன் பையில் கைவிட்டுத் தடவினார். அதிலிருந்து ஒரு சிறிய கவரை எடுத்தார். அதன்மேல் ''வக்கீல் கிட்டாவய்யர் அவர்களுக்கு.....'' என்று மேல் விலாசம் எழுதப்பட்டிருந்தது. ஆமாம், அது வெறும் கடிதமல்ல, மதன்பூர் மகாராஜாவின் காயத் தீயே அதற்குள் இருந்தது.

நான்காவது அத்தியாயம்

## கோடாலியும் கம்பும் கூடின



முதல் வகுப்பில் யாழ்ப்பாணம் போன வைத்தி, மூன்றாம் வகுப்பிலே ஏறி கொழும்புக்கு வந்தார். சண்முகம் கொடுத்த நூறு ரூபாயில் அறுபது ரூபாய்க்குமேல் வைத்திக்குச் செலவாகிவிட்டது. ஆனாலும் கொழும்புக்கு ஒரு ஸ்டேஷன் இருக்கும் போதே கீழே இறங்கி, தன்னுடைய பிரயாணத்தை முதல் வகுப்பிலே தொடங்கினார். பையில் இருப்பது முப்பதே ரூபாய். இந்த முப்பது ரூபாய்க்குள் கொழும்பில் ராஜ்யம் நடத்த வேண்டும். பணமில்லை என்றால் என்ன? படாடோபத்தில்தான் பிழைக்க வேண்டும். இதற்கு என்ன செய்யலாமென்று பல திட்டங்கள் வகுத்துக்கொண்டார். நேரே தான் இறங்கியிருந்த பெரிய ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தார். தன் அறையில் இருந்துகொண்டு, 'பாய்' என்றார். ஹோட்டல் வேலையாள் வந்து நின்றான்.

''உன் மானேஜரை இங்கே வரச்சொல்.''

''அவரு வேலையாக இருக்காருங்க, வரமாட்டாரு.''

அவனுக்கு மானேஜரிடம் போய்ச் சொல்லவே பயம். ஆனால் வைத்திக்கோ, நாம் போவதைவிட, அவரை இங்கே வரவழைப்பது தான் நல்லது என்ற எண்ணம்.

''எனக்கு உன் பதில் வேண்டாம் அப்பா. மானேஜர் பதில் சொல்லட்டும். நீ நான் கொடுக்கிற சீட்டை அவரிடம் கொடு'' என்று சொல்லி, லெட்டர் பேப்பரைத் தேடினார். அவருக்கோ விலாசம் கிடையாது. மகாராஜாவின் விலாசத்தில் இன்னும் அவர் லெட்டர் பேப்பர் அடித்துக்கொள்ளவும் இல்லை. ஆதலால் அந்த ஹோட்டலில் உள்ள லெட்டர் பேப்பரிலேயே நாலு வரி எழுதினார்.

''மிஸ்டர் மானேஜர். சில முக்கியமான விஷயங்கள் பேசவேண்டும். காலை ஒன்பதே முக்காலுக்குமேல் பத்து மணிக்குள் தங்களுக்கு சௌகரியப்பட்ட நேரத்தில் என்னைச் சந்திக்கவும். வைத்தி, செகரட்டரி, மதன்பூர் மகாராஜா, ரூம் நெம்பர் 404'' என்று எழுதி கையொப்பமும் இட்டார். கடிதத்தைக் கொண்டுபோனான் வேலையாள். அவன் போனவுடன் வைத்தி அவருடைய சின்னக் கைப்பெட்டியை எடுத்தார். அது ஒரு தோல் பெட்டி. அதைப் பூட்டினார்.

செவ்வரக்கை மெழுகுதிரியில் உருக்கி அந்தப் பெட்டிப் பூட்டின்மீது ஒரு சீல் வைத்தார்.

அப்போது வைத்தி இருந்த அறையின் வாசலில், டக், டக் என்று மூன்று முறை தட்டும் சத்தம் கேட்டது. அதுவரையில் மானேஜரின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்த வைத்தி, நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, ஏதோ எழுத ஆரம்பித்தார். கதவு மறுபடியும் தட்டப்பட்டது.

"பிளீஸ், வெயிட்" என்று சத்தம் கொடுத்தார். சரியாக ஒரு நிமிஷம் கழித்து, எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

"யார் நீங்கள்?" என்று மிடுக்காய்க் கேட்டார்.

"நான் தான் இந்த ஹோட்டல் மானேஜர்."

"ஹோ, நீங்களா! சாரி; நான் வேலையாக இருந்தேன். நான் உங்களை இங்கே வரச் சொன்னேனல்லவா?" என்று அரைச் சந்தேகத்துடன் அவரையே பார்த்து ஒரு கேள்வி கேட்டார். அந்த மானேஜருக்கு 'அடேயப்பா, ரொம்பப் பெரிய மனிதர்; இல்லாவிட்டால் இவ்வளவு மறதி இருக்குமா?' என்று தோன்றியது.

"அதாவது, நான் உங்களை எதுக்கு வரச் சொன்னேன்னு கேட்டா?" பாவம், மானேஜருக்கு என்ன தெரியும்? விழித்தார்.

"மகாராஜா பாரின் டூர் போயிருக்கிறார். நான் இங்கேயே இறங்கி, கொஞ்சம் ஆர்ட்டிஸ்ட் செலக்ட் பண்ணணும். ஐ வாண்ட் தி பெஸ்ட் டான்ஸர்ஸ் ஆப் சிலோன். அதிக ஆள் கூடாது. ஒன்லி இருபத்தைந்து பேர். ஆனால் அந்தக் கலைஞர்கள் ராஜான்னு சொன்னவுடனே, பணத்தைக் கண்டபடி எதிர்பார்ப்பார்கள். எங்கள் மகாராஜாவோ அல்லது நானோ பணத்தை அள்ளிக் கொடுப்பவர்கள் அல்ல."

"இல்லே, அதெல்லாம் பாத்துக்கலாம்."

"ஒரு ஆளுக்கு ஐயாயிரத்துக்கு மேலே முடியாது."

'அடேயப்பா! 25 பேருக்கு, ஆளுக்கு ஐந்தாயிரம் மேனிக்கு ஒன்றேகால் லட்சம் ரூபாய் ஆயிற்றே! மகாராஜாவுடைய செகரட்டரியில்லியா?' என்று பிரமித்தார் அந்த ஹோட்டல்காரர். அவரையறியாமலே அவர் கைகள் கட்டிக்கொண்டன.

"நீங்கள் என்ன உத்தரவிட்டாலும் செய்யக் காத்திருக்கிறோம். இங்கே, உங்களுக்கு எல்லாம் சௌகரியமாக நடக்கிறதா?" என்று குழைந்துகொண்டே கேட்டார் மானேஜர்.

"எனக்கு வாண்ட்ஸ் குறைச்சல். வெந்நீர் இருந்தால் வெந்நீரிலே குளிப்பேன்; இல்லே பச்சைத் தண்ணீரிலே குளிப்பேன்."

"இல்லே, இல்லே, அப்படிச் சொல்லக் கூடாது. உங்களுக்கு சௌகரியம் செய்யறதுக்குத்தானே நாங்க எல்லாம் இங்கே இருக்கோம்."

"ஆமாம், இங்கே எத்தனை ரூம்கள் இருக்கு?"

"8 ரூம்கள்."



"அது என்ன ஃபோர்னு நம்பர் எனக்குக் கொடுத்திருக்கீங்களே?"

"ஆமாம்! நாலாவது மாடியிலே நாலாவது ரூம்."

"ஓ, பிளீஸ்லா? அது இருக்க வேண்டியதுதான். நான் இதையெல்லாம் பொய் என்று கருத மாட்டேன். ஆமா, இங்கு ஒன்றும் திருட்டுப் பயம் இல்லையே?"

"சே, அதெல்லாம் கிடையாது."

"ஆர் யூ ஷ்யூர்?"

"எஸ் ஸார்."

"இன்றைக்கு என் பர்ஸ் ரயிலில் களவு போய்விட்டது. அதில் இருந்து எனக்கு ஒரு பயம்."

"இந்த ஹோட்டலிலே எங்களுக்குத் தெரியாமல் எதுவும் போகாது ஸார்."

"சரி, பின்னே யு டேக் திஸ் பாக்ஸ்" என்று சொல்லி அந்தச் சீல் போட்ட கைப்பெட்டியை ரொம்ப சாக்கிரதையாக அவரிடம் கொடுத்தார். "இதற்குள்ளே என் உயிரே இருக்கிறது. விலை மதிக்க முடியாத சரக்கு. ஜாக்கிரதை! இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்."

அந்த ஹோட்டல் மானேஜர் அதைக் கோஹினூர் வைரத்தை வாங்குவது போல் கை நடுங்க வாங்கிக்கொண்டார். உடனே வைத்தி, "ஆமாம், பை தி பை, இதற்கு ஒரு காப்பி டைப் பண்ணணுமே, உங்க டைப்பிஸ்டை இங்கு அனுப்பறேளா?"

"இதோ அனுப்பறேன்."

"தோ, இந்த ரூமிலே வந்து, கடபுடான்னு அடிச்சுக்கிட்டு இருக்கிறது பெரிய வேதனையாக இருக்கும். இந்த டாக்குமெண்டை ஒரு காப்பி எடுக்கச் சொல்லுங்க. ரகசியம்" என்று வைத்தி அவர் கையில் இருந்த ராம பாணத்தைத் தூக்கி அந்த மானேஜரிடம் கொடுத்தார். அதுதான் மகாராஜாவின் பவர் பத்திரம்.

வணங்கி விடை பெற்றுக்கொண்டு சென்ற ஹோட்டல் மானேஜர், தன் அறைக்குப் போனவுடன், அந்த 'டாய்லட் பாக்'கை இரும்புப் பெட்டியில் வைத்து இரட்டைப் பூட்டுப் பூட்டினார். அந்தப் பத்திரத்தை ஒரு முறை எடுத்துப் படித்துப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. அதிலே மகாராஜா தன்னுடைய காரியதரிசி வைத்திஜி என்று கண்டிருப்பதும், அவருக்குப் பவர் கொடுத்திருப்பதும் தெரிந்தது. 'சபாஷ், பெரிய புள்ளி, விட்டுவிடக்கூடாது' என்று நிச்சயித்துக்கொண்டார். அதே சமயத்தில் வைத்தியும், 'இவனை விட்டுவிடக்கூடாது' என்று நிச்சயம் செய்து கொண்டார். அசலையும், டைப் அடித்த நகலையும் கொடுத்துவிட்டு மானேஜர் சென்றவுடன் வைத்தி, அந்தக் காப்பியைக் கையால் கிழித்து எறிந்தார். அவர் தந்திரம் பலித்தது. அது முதல் அவருக்கு ஏது

வேண்டுமோ அது அந்த ஹோட்டலில் நடந்தது; மணிபர்ஸைத் திறக்க வேண்டிய அவசியமே இல்லை. அந்த ஹோட்டல் மானேஜர், அவர் சொல்படி ஆடினார். ஆனால் வைத்தியோ அதிகம் சொல்வதில்லை. ஹோட்டலுக்குச் சொந்தமான, இரட்டைக் குதிரைபூட்டிய கோச் வண்டி ஒன்று அவர் சவாரிக்கென்றே ஒதுக்கப்பட்டது.

அடிக்கடி வெளியே போய்க்கொண்டிருப்பார். கவர்னர், ஸர். ஜே.பி. முதலியவர்களைப் பார்த்ததாகச் சொல்வார். இன்று வண்டியை விட்டு இறங்கியவுடன் வைத்தி, "மானேஜர்!" என்று மெதுவாகக் கூப்பிட்டார். மானேஜர் அவசரமாக ஓடி வந்தார். இருவரும் அறைக்குச் சென்றார்கள்.

"உனக்கு ஸர் டிமெல்லோவைத் தெரியுமோ?"

"யாரு, டிமெல்லோவா?"

"அவன்தான், டில்லோவின் தம்பி மெல்லோ. சரி, பாதகமில்லே, உனக்குத் தெரியுமோன்னு நினைச்சேன்."

"ஏன்?"

"இல்லே, மணி மேட்டர், ஒரு கை மாத்து, இரண்டு லட்சம் ரூபாய் வேணுங்கிறான். நீ சொன்னா கொடுக்கலாம்னு தோணித்து. சரி, நீ அர்ஜண்டா ஒரு ஆயிரம் ரூபாய் எனக்கு அனுப்பு" என்று சொல்லி விட்டுத் தன் வேலையைக் கவனிக்கலானார். அடுத்த நிமிஷமே ஆயிரம் ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு மானேஜர் ஒரு சலாமும் செய்தார். கீழே போய்த் தன் ஆசனத்தில் அமர்ந்தார். மானேஜர் உட்காரும்போது, வக்கீல் குமாஸ்தா ராமசாமி உள்ளே நுழைந்தார்.

"மிஸ்டர் வைத்திஜி இங்கே இருக்கிறாரா?"

"யெஸ் சார்."

"நான் அவரைப் பார்க்க வேண்டுமே!"

"எங்கேஜ்மெண்ட் இருக்கா?"

"கிடையாது. நீங்க, வக்கீல் குமாஸ்தா ராமசாமி ஐயர் வந்து இருக்கிறார்ன்னு சொல்லுங்க."

"வக்கீல் குமாஸ்தாவையா அவர் பார்க்கப் போகிறார்? அவரை ஒருத்தரும் தொந்தரவு செய்யப்படாதுன்னு சொல்லியிருக்காரு."

"நான் தொந்தரவு செய்யலே. அவரைப் பார்த்து ஒரு வார்த்தை பேசினாப் போதும்" என்று தணிந்து கேட்டார் ராமசாமி.

அவர் கொடுத்த சீட்டை வாங்கிக்கொண்டு வந்து, வைத்தியிடம் கொடுத்தான் ஹோட்டல்காரப் பையன். அதைப் பார்த்தவுடனே வைத்தி திகைத்தார். "5.40க்கு வரச் சொல்" என்றார்.



## திருமணம் திருவாரூரில்



"முதல்லே சாமி உடம்பு சௌக்கியமாகட்டுங்க. மற்றதெல்லாம் அப்புறம் பார்த்துப்போம்."

"இந்தக் கட்டைக்காக எதையும் தள்ளி வைக்காதே, அம்மா!"

"அப்படியில்லிங்க, உங்க உடம்பு இப்படியிருக்கும்போது, நான் எப்படிக் கலியாணத்தை நடத்தறது? நீங்க எந்திரிச்சு வந்து உங்க கையாலே ரெண்டு அட்சதை போட வேண்டாமா?"

"வடிவாம்பா, நானே அரிசிப் பிச்சையெடுக்கும் ஆண்டி. நான் பிறருக்கு அட்சதை போட முடியுமா? இதையெல்லாம் கவனியாதே. நான் உங்களோடுகூட முருகன் கோவிலில் இருக்கும் போது எப்படி இருந்தேன், பார்த்தாயா? என் உடம்பில் ஏதாவது காயம் பட்டிருந்தது? ஏன், குகைக்குள் நீ வரும்போதுகூட நான் கல் போல்தானே நின்றுகொண்டிருந்தேன்?"

"ஆமாம், சாமி"

"ஆனால் திடீரென்று என் உடல் என்னவாயிற்று?"

"ஆமாங்க. ஒரு விநாடிக்கு முன்னே நல்லா இருந்தீங்க, அடுத்த விநாடி உசிருக்கே ஆபத்து வந்துடுத்தே."

"அதான் உலக வாழ்க்கை. நிற்பவன் விழுவதும், விழுந்தவன் எழுவதும் எப்பொழுது என்று நமக்குத் தெரியாது."

"நீங்க சொல்றது எல்லாம் நிஜம்தானுங்க."

"நிஜமா பொய்யா என்று உன்னிடம் நான் கேட்கவில்லை. இதைப் பார்த்தாவது நீ படித்துக்கொள்ள வேண்டாமா?"

"கண்ணுக்கு முன் பார்ப்பனவைகளிலிருந்து அறிவைப் பெற வேண்டும். அதுதான் கண் படைத்த பயன். எனக்கு நேர்ந்த கதி உனக்கு நேர்ந்திருந்தால்......?"

"ஐயோ, உங்க வாயாலே அப்படிச் சொல்லாதீங்க!" என்று துடித்தாள் வடிவாம்பாள்.

"எண்ணிப் பார். எனக்கு நேர்ந்த கதி உனக்கு நேர்ந்திருந்தால், உன் பெண்ணுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? நீ நல்ல நிலையில் இருக்கும்போதே, அவளைத் தக்கவரிடம் ஒப்படைக்க வேண்டாமா?"

''இதுக்கெல்லாம் வியாழ நோக்கம் வரணுங்க. கலியாணம்னா சும்மாவா இருக்குது?'' என்று ஏதோ சமாதானம் கூறினாள் வடிவாம்பாள். ஆயினும் அவள் மனத்துக்குள்ளே 'ஆமாம், அவர் சொல்வது உண்மைதான். அவருக்கு நேர்ந்த கதி நமக்கு நேர்ந்தால், நம் மோகனாவுக்கு யார் கதி? அவர் பிழைத்துவிட்டார். அந்த அடியை நினைத்தாலே நம்மால் பிழைக்க முடியாது. யாக்கை நிலையாதது! கலியாணம் செய்துவிட வேண்டியதுதான்' என்று அவள் அறிவு கூறியது.

''அதெல்லாம் சரிதானுங்க. எந்த நேரத்திலே ஊரை விட்டுப் புறப்பட்டேனோ, ஒண்ணுக்கு மேலே ஒண்ணா ஆபத்துகள் வந்துக்கிட்டே இருக்குது. ஊருக்குப் போயி, திருவாரூர் மண்ணை மிதித்து, எல்லையம்மனுக்கு ஒரு கும்பிடு போடணும். அதுக்கப்புறம் மலையான சோசியர் இருக்கவே இருக்கிறாரு. சொன்னா ஒரு நாளைப் பாக்கிறாரு.''

''ஏன், கலியாணத்தை அங்கே போய்ச் செய்வோம்; முகூர்த்தத்தை முருகன் சந்நிதியிலே வைக்கலாமே!'' என்றார் கடம்பவனம்.

''ஏல், சொன்ன சொல்லை மாற்றிவிடுவேன்னு பாக்கறீங்களா? முருகன் சந்நிதியிலே எதுக்குச் சத்தியம் பண்ணச் சொல்றீங்க?'' என்று சிடுசிடுத்தாள் வடிவாம்பாள்.

''உங்களை யார் அத்தே சத்தியம் பண்ணச் சொன்னாங்க? சாமிக்கு முன்னாலே நாள் குறிப்பிடுவமேன்னு சொன்னாங்க!'' என்றாள் மரகதம்.

''ஆமாம், மரகதம். எனக்கு ஒரு மோகனா போதாதுன்னுட்டு நீ வேறே புத்தி சொல்லு. நானா கலியாணம் பண்ணிக்கப் போறேன்? சிக்கல் தம்பியாச்சு, மோகனாவாச்சு. அவங்க பாத்து, எப்போ முகூர்த்தம் வைக்கணும்னாலும் வச்சுப்போம்'' என்று அரை மனத்துடன் கூறினாள் வடிவாம்பாள்.

ஆனால் மோகனாவோ வெட்கத்தால் சத்திரத்தின் இரண்டாங் கட்டுக் கதவோரத்திலேயே நின்றுகொண்டிருந்தாள்.

''இப்பொழுதுதான் நீ உண்மையிலேயே வயதுக்கேற்றபடி பேசினாய்'' என்றார் பரதேசியார்.

''அதுக்கு இல்லிங்க, ஒரு கலியாணம் காட்சின்னு திருவாரூரிலே வச்சா, நாலு பேரு வருவாங்க. நம்ம கையாலே எத்தனையோ பேருக்கு பத்து, ஐஞ்சுன்னு மொய் எழுதியிருக்கோம். அவங்களும் கொண்டாந்து திருப்பி எழுதுவாங்க. அதுக்குத்தான் சொல்லறேன்'' என்று அவளை அறியாமலே உண்மையைக் கூறினாள்.

ஆனால் இதை உணராமல், ''அதெல்லாம் முடியாது. கலியாணத்தை எங்கள் யாழ்ப்பாணத்தில்தான் நடத்த வேண்டும்'' என்றார் குமாரசாமி.

''ஐயா! முதல் காரியம், கலியாணத்துக்கு நல்ல சீரகச் சம்பா அரிசியாகச் சமைக்கணும். உங்க ஊரிலே வெறும் சோறே புளியோதரை



மாதிரி இருக்குது. யாழ்ப்பாணத்திலே கலியாணமென்கிற பேச்சை விடுங்க'' என்று குறுக்கே புகுந்தான் வரதன்.

''சாமி, உங்க வாயாலே ஒரு நல்ல நாளாச் சொல்லுங்க!'' என்று கையில் ஒரு காகிதத்தோடு வந்து பரதேசியார் அருகில் உட்கார்ந்தார் சிங்கபுரம் மைனர்.

காரைக்கால் நடேசனோ, ''நாள் நட்சத்திரம் இதிலே எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லீங்க'' என்றார்.

பரமானந்தப் பரதேசியாருக்கு இன்னும் உடம்பு குணமாகவில்லை. ஆனால் அவரோ, மருந்து போட்டுக்கொள்ளவும் மறுக்கிறார். தன் தலையிலே பட்ட காயத்தை யார் தலையிலோ பட்டிருப்பது போல எண்ணிக்கொண்டு அவர் எல்லோருடனும் சிரிக்கிறார். மற்றவர்களுக்கு இவருடைய சிரிப்பும் விளையாட்டும் ஆச்சரியமாக இருந்தன. ஆனால், உடல் வேறு, ஆத்மா வேறு என்று அவர் அறிந்தவர் ஆதலால் ஒன்றும் நடக்காதவர் போல் பேசிக்கொண்டிருந்தார்.

''என்ன, சிங்கபுரம் மைனர், ஏன் இந்தக் கல்யாணத்தில் உங்களுக்கு இவ்வளவு அக்கறை?'' என்றார் பரதேசியார்.

''மரகதத்துடைய சந்தோஷத்தை மோகனாதான் திருப்பிக் கொடுத்தது. அப்படின்னு அதுக்கு எண்ணம். எனக்கு, கடவுள் என்னைக் காப்பாற்றினார் என்கிற எண்ணம். ஆகவே நாங்க இரண்டு பேரும் சேர்ந்து மோகனா கலியாணத்தை சிங்கபுரத்திலேயே நடத்தறதுன்னு நிச்சயம் பண்ணிவிட்டோம்.''

''மாப்பிள்ளை, ரொம்பச் சரி. நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கிறேன், 'மானேஜ்மெண்'டை'' என்றார் கடம்பவனம் பிள்ளை.

''ஆமா, ஒரு பெரிய கம்பை மட்டும் ஐயா கையிலே குடுத்துடுங்க. நாலுகளைச் சவுக்கத்திலே வெளுத்து வாங்கிடுவாங்க'' என்றான் வரதன்.

''என்னங்க, தம்பி நாட்டுக்கே பெரிய வித்வான். அதுக்கு ஒரு கலியாணம்னா நூறு வித்துவான்கள் வரமாட்டாங்களா? அவங்களை யெல்லாம் கவனிக்க வேண்டாமா? எது எங்கே வேணுமானாலும் நடக்கட்டுங்க. தம்பி கல்யாணம் சிக்கலிலேதான் நடக்கணும்'' என்று அழுத்தமாகப் பேசினார் தருமன்னை. பாவம், ஆத்திரத்தில் இன்று அவருக்குப் பேச்சிலும் பிசிர் அடித்தது.

''வேண்டாம் ஒத்துக்காரரே, அதிலே எதுக்கு சிக்கல்?'' என்றான் வரதன்.

''இந்தாங்க முட்டுக்காரரே, என்னைப்பத்தி எது வேணுமானாலும் கேவலமாப் பேசுங்க. என் ஊரைப்பத்தி மட்டும் பேசாதிங்க.''

''உங்களாலேதானே ஊரைப்பற்றிப் பேசறோம்! இல்லாட்டிப் பேசுவோமா?'' என்றான் வரதன்.

''சரி, விளையாட்டுக்கு இது நேரமில்லே. பெரியவங்க வாயாலே ஒரு முகூர்த்தத்தைப் பார்த்துச் சொல்லட்டும்'' என்று பவுண்டன் பேனாவை உதறி எழுத ஆரம்பித்தார் வைவர்.

''என்ன அத்தான், மையை மேலே எல்லாம் உதறுறீங்க? சும்மா எழுதினாப்பிலே போதுமா, பொண்ணுக்கு மாப்பிள்ளை என்ன நகை போடறாங்கன்னு தெரிய வேண்டாம்?'' என்று கேட்டுக்கொண்டே, மரகதம் இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு எதிரில் வந்து நின்றாள்.

சண்முகத்துக்கு இந்த நேரடி நடவடிக்கையைக் கண்டவுடன் அதிர்ச்சியாகிவிட்டது. நாத்தி கொத்தரவு நமக்கும் உண்டா என்று சிரித்துக்கொண்டான்.

''ஏன், உங்க வீட்டுப் பெண்ணுக்கு நான் நகை போடணுமோ?'' என்று குறும்புடன் கேட்டான்.

''ஏன், நீங்களே போதும்னு நினைக்கிறீங்களோ?'' என்று திருப்பிக் கேட்டாள் மரகதம்.

''இந்தச் சிக்கல் சண்முகமே பெரிய வைரம், தெரியுமில்லே?''

''அதுக்கெல்லாம் நாங்க ஏமாந்துடமாட்டோம். நீங்க வைரம்னா எங்க வீட்டுப் பொண்ணு உட்டாணி வைரம்! சரி, நாயனக்காரரே, என்ன நகைபோடறீங்க, சொல்லுங்க!''

''இதுக்கு என்ன யோசனை, ஒரு ஜோடி முருகு, காதுக்கு ஒரு ஜோடி பாம்பட்டம், கழுத்துக்கு ஒரு காரை, கைக்கு ஒரு கொலுசு, வேணும்னா ஒரு நத்தும் வாங்கிப் போட்டுட்டா போவுது.''

''என்னங்க, இது எல்லாம் இந்தக் காலத்து நகையா? எங்கேயோ கோவில் சிலையைப் பார்த்துட்டில்லே சொல்லறீங்க? பழைய தோடியும் பைரவியும்தானே ஊதுவாரு இவரு. 'கர்னாடகம்''' என்றாள் மரகதம்.

எல்லோரும் சிரித்தார்கள். வடிவாம்பாள், ''அப்படிக் கேளு'' என்றாள். ஆனால் மோகனாவோ, ''சீ, கொஞ்சங்கூட மரியாதையே தெரியவில்லை இவளுக்கு'' என்று முணுமுணுத்தாள். இதற்குள் முத்துராக்கு சண்முகத்தின் பக்கம் பேச முன் வந்தார்.

''சரி தங்கச்சி, எந்த நகை பெண்களுக்கு ஒசந்த நகையோ, எப்பவும் போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று எந்த நகையை விரும்புவாங்களோ, எந்த நகையைக் கண்டால், நம்ம ஊரிலே திருடன்கூடத் தொடப் பயப்படுவானோ அந்த நகையை அவரு கையாலே போடுவாரு. அதுக்கு நான் கெட்டிமேளம் கொட்டறேன்'' என்றார் முத்துராக்கு.

எல்லோரும் கடகட வென்று சிரித்தார்கள்.

''தவுல்காரத் தம்பி, ரொம்பத் தாராளமாப் பேசிட்டிங்க. அதைத்தான் ஏன் போடறீங்க? அரைப்பவுன் செலவாகுமே! பொண்ணையே குடுக்கறவ இரண்டு குந்துமணிப் பொன்னையா பாக்கப்போறேன்'' என்றாள் வடிவாம்பாள்.



''அத்தே, நீங்க பேசப்படாது. நான் கேக்கிறேன். பதில் சொல்லட்டும். என்ன நாயனக்காரரே, தலைக்கு வைரத்திலே திருகுவில்லை. கெம்பும் பச்சையும் வெச்ச சடநாகம். உள்ளங் கை அகலத்திலே ராக்கொடி, சந்திரப் பிரபை, சூரியப் பிரபை.''

''அது என்னங்க தங்கச்சி, சந்திரப் பிரபை, சூரியப் பிரபை?'' என்றான் தருமன்.

''அது ஏதோ ரவை சம்பந்தப்பட்ட பலகாரம்'' என்றான் வரதன்.

''பலகாரமில்லே. எல்லாம் நகை. என்ன நாயனக்காரரே, சும்மா உக்காந்திருக்கீங்க?'' என்று அதிகாரம் செய்தாள் மரகதம்.

''என் தங்கச்சி, இந்த நாயனக்காரன் பயந்து ஓடணும்னு எண்ணமா உனக்கு?''

''ஓடினா உங்களை யாரு விடுவாங்க? சும்மா, இது பிபீ ஊதறதுன்னு பார்த்தீங்களா? கலியாணம்! எழுதுங்க அத்தான். கழுத்துக்கு ஒரு அட்டிகை, வைர நெக்லெஸ், மூக்குத்தி, புல்லாக்கு, பேசரி, வைரத்தோடு, மாட்டல் ஜிமிக்கி, கை இரண்டுக்கும் சிவப்புலே கல் இழைத்த வங்கி. இவ்வளவையும் மாப்பிள்ளை செய்து, எங்க அக்காவுக்குப் போடணும்.''

''மரகதம்!'' என்று மோகனா ரகசியமாகக் கூப்பிடுவது கேட்டது. மரகதம் உள்ளே வேகமாகச் சென்றாள். மோகனா வெட்கத்தோடு, ''இவ்வளவையும் என் மேலே போட்டா, நான் கனம் தாங்காமல் விழுந்திடுவேனே!'' என்றாள்.

''ஓஹோ, அதுவா!'' என்று மரகதம் இரைந்து சொல்லிவிட்டு ''இதோ சொல்லறேன் அக்கா!'' என்று சொல்லிக்கொண்டே அங்கு நிற்காமல் ஓடி வந்தாள்.

''மரகதம்!'' என்று அடித்தொண்டையில் கூப்பிட்டாள் மோகனா. 'ஐயோ, என்ன சொல்லப் போகிறாளோ' என்ற பயம் அவளுக்கு.

திண்ணைக்கு வந்த மரகதம், ''அக்கா சொல்லறாங்க, அவங்களுக்குக் கைக்கு கோகர்ஜான் வளை வேண்டுமாம்'' என்றாள்.

''அம்மா, நான் அதெல்லாம் கேட்கவில்லையம்மா'' என்று சொல்லிக்கொண்டே மோகனா, முகத்தைச் சுளுக்கிக்கொண்டு தாயின் அருகில் வந்தாள்.

''அது சரிங்க, நான் ஒண்ணு கேக்கிறேன்'' என்றான் தருமன்.

''சும்மா கேளுங்க'' என்றான் வரதன்.

''அட, உங்ககிட்டே யாரையா கேட்கிறாங்க. நான் மைனர் ஐயா கிட்டே கேட்கிறேன். மாப்பிள்ளைக்கு அவுங்க என்ன நகை போடப் போறாங்க?''

''ஓஹோ, போடலாமே. அவருக்கு ஒரு மூக்குத்தி, காதுக்கு ஒரு தோடு'' என்றாள் மரகதம்.

''எய் மரகதம், உனக்கு வேறே வேலையில்லையா?'' என்று மோகனா சீறினாள்.

''நான்சொல்றேன் கேளுங்க. மோகனா கையாலே அவர் கழுத்துக்கு ஒரு அழகான ரோஜாப் பூ மாலை.... அது நம்ம உபயம்'' என்று வரதன் சொல்லவே சண்முகம் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன அத்தான், பெண்ணுக்குப் போட வேண்டிய நகையெல்லாம் எழுதிக்கிட்டிங்கல்லே?'' என்றாள் மரகதம்.

''எழுதிக்கிட்டாச்சே.''

''எத்தனை ரூபாய் ஆகும்?''

''கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் ஆகுது.''

''சரி, இதுகள் எல்லாம் போட வேண்டியதுதானே?''

''உன் இஷ்டம், நீ சொல்லிட்டியானா....''

''சரி அத்தான், ஊருக்குப் போனதும், இவ்வளவுக்கும் ஆர்டர் கொடுத்துடுங்க. மாப்பிள்ளை தரப்பிலே இவ்வளவையும் செய்து நம்ம அக்காவுக்கு நாம் போட்டுவிடுவோம்'' என்று மங்கையர்க்கரசி மரகதம் வாய் நிறையச் சொல்லவே, பரதேசியார் உள்பட எல்லார் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. ஆனால் சண்முகம் ஒருவன் மாத்திரம், ''தங்கச்சி, இதுக்கெல்லாம் இப்போ அவசரம் இல்லே. உனக்கு மகள் பிறக்கட்டும், அதுக்கு வந்து ஊதறேன். அப்போ நீ நிரம்ப சன்மானம் பண்ணலாம். இப்போ அவ்வளவு நகையும் நானே போடறேன்'' என்றான்.

''பிள்ளை, உங்களுக்குப் பேச அதிகாரம் கிடையாது!'' என்றார் சிங்கபுரம் மைனர்.

''ஆமாம், நான் என்ன செய்யறது?'' என்றார் நடேசன்.

''சொல்லவா. கலியாணத்துக்கு வேட்டி, புடவை, வெல்வெட்டுலே மெத்தை தலைகாணி எல்லாம் நீங்க கொண்டாந்துட வேண்டியது'' என்று மரகதம் கூறவே, அதைக் கேட்ட மோகனா வெட்கத்தால் உள்ளே ஓடினாள்.

''சரி, கலியாணத்திலே சாப்பாட்டுச் செலவு முழுக்க என்னுடையது.''

இதைக் கேட்ட சண்முகசுந்தரம், ''என்னய்யா, எல்லோரும் என்னைக் கேலியா செய்யறீங்க? சாப்பாட்டுக்கு ஒருத்தர் பணம் கொடுக்கிறது, நகையை ஒருத்தர் பண்ணிப் போடறது, கலியாணம் மாத்திரம் நான் பண்ணிக்கிறதா?''

''சண்முகம் பிள்ளை, இது எல்லாம் எங்க காணிக்கையா ஏத்துக்கோங்கோ'' என்று நடேசன் சொல்லவே, சண்முகம் கோபத்தை அடக்கிக்கொண்டான்.

''அது சரிங்க. சமையல் எப்படி?'' என்றான் வரதன்.



''உனக்குச் சைவமா இருந்தா என்ன, மிலிடரியா இருந்தா என்ன? நீதான் பச்சைக் காய்கறியைத் தின்கறவன் ஆச்சே'' என்றான் தருமன்.

''எல்லாத்தையும் நிச்சயம் பண்ணிட்டீங்க. ஆனால் நான் ஒன்னு கேட்கிறேன். இந்தக் கலியாணத்திலே யாரு மேளம், யாரு சதிர்? அதை நிச்சயம் பண்ணுங்க'' என்று நட்டுவனார் கேட்கவே எல்லோரும் திகைத்தார்கள்.

''மேளமா? நான் சொல்லவா?'' என்றான் தருமன்.

''ஏன், நீங்களே ஊதலாமென்று நினைக்கிறீங்களா?'' என்று வரதன் கேட்கவே தருமனுக்கு முகம் சுண்டியது.

''முட்டுக்காரரே, உங்க கலியாணமாயிருந்ததுன்னா நானே வந்து ஊதுவேன்.''

''இதுக்குப் பயந்துதானே நான் கல்யாணமே வேண்டாமுன்னு இருக்கேன்.''

''சரி, நீங்க சும்மா இருங்கோ. நான் சொல்றேன், யாரு மேளம்னு. சாமிக்கண்ணு அண்ணேன் ஊதட்டும்.''

''அவங்களா? அவங்க கலியாணத்துக்கு வரணும், மாப்பிள்ளையும் பெண்ணும், அவங்க காலிலே விழுந்து கும்பிடணும், அவங்க ஊதப்படாது!'' என்றார் முத்துராக்கு.

''அட, முகூர்த்தமே இன்னும் வைக்கலே, அதுக்குள்ளே மேளத்துக்குப் போயிட்டீங்களே!'' என்று வடிவாம்பாள் கேட்கவே, எல்லோரும் பரதேசியாரின் முகத்தைப் பார்த்தார்கள்.

''குழந்தைகளா, இந்தக் கலியாணம் திருவாரூரிலேதான் நடக்க வேண்டும். தியாகராஜப் பெருமான் சந்நிதியிலே பெண்ணும் மாப்பிள்ளையும், மஞ்சள் ஆடையுடன் போய் வணங்கவேண்டும். திருவாரூர் தேர், திருவாரூர் குளம், திருவாரூர் நாதஸ்வரம் என்பது போல, திருவாரூர் கலியாணமும் பெரிய அளவில் நன்றாக நடக்க வேண்டும். சாப்பாடு முதலியவைகளைப்பற்றிச் சொல்லவில்லை. அங்கு சங்கீத மழை பொழிய வேண்டும். கலியாணம் ஐந்து நாளும் அற்புதமான கச்சேரிகள் நடக்க வேண்டும்.

''இது ஒரு அருமையான கலியாணம். மாப்பிள்ளையோ, இசையே உருவானவன். மணப் பெண்ணோ, லயமே உருவானவள். இசையும் தாளமும் ஈசனும் சக்தியும் போல் ஒன்று சேருவதைக் காண அங்கு உலகமே திரண்டு வரும். ஆதலால், சிங்கபுரம் மைனரே, உமது நல்ல கையால் எழுதிக்கொள்ளும். தில்லை நடராஜன் திருவருள் காக்க. திருமண அழைப்பிதழ். ஸ்ரீகமலாம்பிகை சமேத, தியாகராஜப் பெருமான் திருவருளால், நிகழும் தை மாதம் பதினைந்தாம் தேதி.'' என்றார் பரதேசியார்.

தேதி வைத்தவுடன், சண்முகத்துக்கு அந்தத் தேதி, நாளையே வந்துவிடக்கூடாதா என்று தோன்றியது. மோகனாவுக்கு அப்படியல்ல, 'இன்றே வந்துவிடாதா' என்று எண்ணினாள்.

தருமன் வேஷ்டியை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, எல்லோருக்கும் சந்தனம் கொடுப்பது போல எண்ணினான். முத்துராக்குவோ, வருபவர்களுக்கு எல்லாம் இலை போட்டு, தன் கையால் பரிமாறுவது போல எண்ணினான்.

வடிவாம்பாளும் எண்ணாமல் இல்லை. கலியாணத்துக்குப் பரிசு வந்திருக்கிற வெள்ளிக்குடம், குத்துவிளக்கு, டம்ளர், டபரா எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டே வந்தாள்.

ஆறாவது அத்தியாயம்

## காதலர் பாதையிலே......!



**தை** மாதம் நாலாம் தேதியன்று யாழ்ப்பாணத்தில் குமாரசாமி அவர்கள் வீட்டுக் கல்யாணம் நடைபெற்றது. அன்று கலியாணம் வெகு சீக்கிரத்தில் முடிந்துவிட்டது.

ஆனால் சண்முகத்தின் கச்சேரியும் மோகனாவின் ஆட்டமும் எட்டு மணி நேரம் நடந்தன. சிற்றம்பலம் குமாரசாமி தன்னுடைய அன்பை அள்ளிச் சொரிந்தார். இவர்களுடைய கலியாணத்துக்கு எந்தெந்தப் பொருள்கள் பிரயோசனப்படுமோ அவைகளையெல்லாம் பரிசாகத் தந்தார்.

அக்காலத்தில் கொழும்புக்குப் போகிறவர்கள் ஆள் மட்டுந்தான் திரும்பி வரவேண்டுமென்று கண்டிப்பு இல்லையாதலால், அவர்களுக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களையெல்லாம் சேர்த்து மூட்டை கட்டினாள் வடிவாம்பாள்.

எல்லோரும் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். வடிவாம்பாளுக்கோ, எப்பொழுது கப்பலேறப் போகிறோம் என்று இருந்தது. இந்த முகூர்த்தம் வைத்தபின், அவள் ஒரு சுற்று இளைத்தாள்.

கலியாணம் என்று தேதி வைத்தது முதல், அவள் பட்டுப் புடைவை கட்டவில்லை; சாதாரண நூல் புடைவை கட்ட ஆரம்பித்தாள். ஒவ்வொரு காசையும் எண்ணிச் செலவழித்தாள். தலைக்குப் பூ வைத்துக்கொள்ளுவதை அறவே நிறுத்திவிட்டாள். அவள் முகத்தில் வயோதிகத்தின் அறிகுறியாக, சிறிய கோடுகள்கூடத் தெரிய ஆரம்பித்தன.

இரவும் பகலும் அவளுக்கு மகளின் கலியாணமே எண்ணமாக இருந்தது. தன் வீட்டு வாசலில் பெரிய கலியாணக் கொட்டகை போட்டு



இருப்பது போலவும், அதிலே தன் மகளும் மாப்பிள்ளையும் மணவறையில் அமர்ந்து இருப்பது போலவும் தூங்காமலே கனவு கண்டாள்.

கொழும்பில் தருமனும், முத்துராக்குவும் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். வடிவாம்பாளும் அவர்களோடுகூடப் புறப்பட்டாள்.

''அம்மா, நானும் வரவா?'' என்று கேட்டாள் மோகனா.

இப்போதெல்லாம் மோகனாவை வடிவாம்பாள் நாலு பேர் கண்களில் பட விடுவதில்லை. ஆதலால், ''நீ என்னோடு வரவேண்டாம் கண்ணு. நான் கடைவீதிக்குப் போயிட்டு வர்ரேன்'' என்று சொல்லிவிட்டு, அவள் சென்றுவிட்டாள்.

இந்த நேரம் பார்த்துத்தானா, சிற்றம்பலம் குமாரசாமியின் சாரட்டு, ஓட்டல் வாசலில் வந்து நிற்க வேண்டும். அவருடைய வேலையாள், ஹோட்டலுக்குள்ளே வந்து, சண்முகத்திடம், ''உங்களையும் மோகனாவையும் குமாரசாமி அழைத்து வரச் சொன்னார்'' என்று கூறினார்.

''எதுக்கு? உனக்கு ஏதாவது தெரியுமா?''

''எனக்குத் தெரியாது. ஐயா அழைத்து வரச் சொன்னாரு'' என்று வணக்கமாக அவன் கூறவே சண்முகம் எழுந்து மோகனா அறைக்கு வந்தான்.

''அத்தே, அத்தே!'' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவனைக் கண்ட மோகனா சரேலென்று எழுந்தாள். அறையில் ஒரு மூலையில் போய்த் தலை குனிந்துகொண்டு நின்றாள். சண்முகம், அவள் நிற்பதைப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டான். ஒன்றும் தெரியாதவன் போல், ''உங்க அம்மா இல்லியா?'' என்றான்.

''இருந்தா வருவீங்களா?'' என்று அவன் காதில் பாதி கேட்கும்படி கூறினாள் மோகனா.

''இல்லே, அவங்க இங்கே இருப்பாங்கன்னுதான் வந்தேன்....''

''என்ன விஷயம்? என்னிடம் சொல்லக் கூடாதா?''

''இது எனக்கும் அத்தைக்கும் சம்பந்தப்பட்ட விஷயம்.''

''அடாடா, அத்தை மேலே என்ன அன்பு! நேற்று வரையிலே அவங்களைக் கண்டா உங்க முகம் அழுகாக மாறுமே!''

''எப்படி மாறும்?''

''அம்மாவைக் கேட்டா தெரியும்!''

''ஏது, உனக்குக்கூட உங்க அம்மா மேலே பிரியம் வந்துட்டுது!''

''என்ன இருந்தாலும் எங்கம்மா இல்லியா?''

''ஆமாம், கலியாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்க, இல்லே?''

"மாப்பிள்ளை கெட்டிக்காரத்தனத்தைப் புரிஞ்சுக்கிட்டாங்க. போனாப் போகுதுன்னு சம்மதம் கொடுத்தாங்க."

"என்ன புரிஞ்சுது?"

"அசட்டு மாப்பிள்ளை, யாருக்கும் அடங்கிப் பிழைக்கத் தெரியாது. நம்ப பொண்ணுதான் அவரைக் காப்பாற்றணும், அப்படின்னு பேசிக்கிட்டிருந்தாங்க."

"தேவலையே, உன் பழைய துடுக்கு இருக்கே."

"அம்மாடியோ! அவடத்திலே பழைய கோபம் வந்துடப் போகுது! ஏன் நிக்கிறீங்க? உட்காருங்களேன், பாவம், அத்தே வந்து விடுவாங்களோன்னு பயம்."

"பயமா? நான் எதற்கும் பயப்பட்டதில்லை" என்று சொல்லிக் கொண்டே சண்முகம், "யானை! யானை!" என்று கத்தினான். மோகனா கைகளை உதறிப் பயந்தவள் போல ஓடிவந்தாள். ஒரு தூணைக் கட்டிக் கொண்டு சிரித்தாள். சண்முகமும் சிரித்தான்.

"ஒரு நாளைக்கு ஏதோ அப்படின்னா.... ..... ..... இப்பவும் நான் ஏமாந்திடுவேன்னு பார்த்தீங்களா?" என்று கடைக்கண்ணால் அவனை நோக்கினாள்.

"காப்பி சாப்பிட்டீங்களா?"

"உம்."

"வெற்றிலை போட்டீங்களா?"

"உம்."

"எதைக் கொடுத்தாலும் பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டினா?"

"நீ எதைக் கொடுத்தாலும் சாப்பிடுகிறேன்."

"ஓஹோ, காப்பியை இப்பவே என் கையாலே கொடுக்கலாம். வெற்றிலையை என் கையாலே கொடுக்கப்படாதே!"

"ஏன், கொடுத்தால் என்ன? வாய் வெந்து போகுமா?"

"கலியாணத்துக்கு அப்புறம்தானே கொடுக்கலாம்?"

"மோகனா, நீதான் என்னை அழகர் கோயிலிலேயே கலியாணம் செய்துகொண்டுவிட்டாயே, இப்பொழுது நடக்கும் கலியாணம் ஊருக்காகத்தானே!"

"போங்க அத்தான், அழகர் கோயிலை ஞாபகப்படுத்தாதீங்க."

"ஏன்? இந்த ஆள் இவ்வளவு முரடன்னு தெரிந்திருந்தா ஆசைப்பட்டிருக்க மாட்டாயா?"

"என்னைப் பார்த்துச் சொல்லுங்க, நான் ஆசைப்பட்டேனா, நீங்க ஆசைப்பட்டீங்களா?"

"என்னடா கேள்வி, பதில் சொல்ல முடியாது போலிருக்கே."

"சும்மா சொல்லுங்க."



"நீதான்."

"ஆமாம், நான்தான் யாரைக் கலியாணம் செய்துகொள்வது என்று அலைந்து திரிந்து அழகர் கோயிலுக்கு வந்தேன். உங்கள் அழகைப் பார்த்து அப்படியே மயங்கிவிட்டேன். வேணும், எனக்கு நல்லா வேணும்!"

சண்முகமும் அவளையே பார்த்தான். அவள் கண் கலங்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தாள். "கண்ணே, என்னவோ வேண்டும் என்றாயே, என்ன வேணும்?" என்றான்.

"அத்தான், வேறு எனக்கு என்ன வேணும்? எண்ணம் நிறைவேற வேணும். நம் இதயம் களிப்பாக வேணும். உங்களுடைய வித்தைக்கும், அழகுக்கும் நான் எவ்வளவு தூரம்" என்று சொல்லிக்கொண்டே அவன் தோள்மீது சாய்ந்தாள் மோகனா. நேற்று வரையில் நெருங்காமல் பேசிய சண்முகசுந்தரம் இப்பொழுது அவளை இரு கைகளாலும் அணைத்துக்கொண்டான்.

"கண்ணே, வருகிறாயா? சிற்றம்பலம் குமாரசாமி வண்டி அனுப்பியிருக்கிறார். போய்விட்டு வருவோம்."

"எங்கே, எவ்வளவு தூரம் போக வேண்டும்? அம்மா வருவதற்குள் வந்துவிடலாமா?"

"அது எனக்குத் தெரியாது."

"போங்க அத்தான், விளையாட்டு அம்மா வந்து ஏதாவது பேசினால்?"

"ஏன் பேசுகிறார்கள்? இப்பொழுது ஒன்றுமே சொல்ல மாட்டார்கள்."

"உங்களுக்குத் தெரியாது அத்தான். அவங்க ஒரு சந்தேகக் குடுக்கை."

"சரி, நீ வரவில்லையென்கிறாயா?"

"நான் வரமாட்டேன்னா சொன்னேன். இதோ, கொஞ்சம் இருங்க" என்று சொல்லிவிட்டு மோகனா அவசரமாக உள்ளே ஓடினாள்.

அவளுடைய பொன் மேனிக்கு ஏற்ப ஒரு நீலப் பட்டுப் புடைவையை எடுத்துக் கட்டிக்கொண்டாள். தலையை இறுக வாரிப் பின்னாமல், நெகிழக் கூந்தலைப் பின்னினாள். நெற்றியிலே சந்திரப் பிறை போல பொட்டு இட்டாள். தலையில் இரண்டே இரண்டு பூவை எடுத்துச் செருகினாள். அரை நிமிஷத்தில் முழு சௌந்தர்யத்துடன் அவன் எதிரில் வந்து நின்றாள்.

இருவரும் ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தார்கள். ஹோட்டல்காரரிடம், "அம்மா வந்தவுடன், 'குமாரசாமியின் கடைக்குப் போய் இருக்கிறார்கள்' என்று சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, இருவரும் வந்து வண்டியில் ஏறினார்கள்.

அந்தப் பீட்டன், அற்புதமான ஒரு குதிரை வண்டி. கன்று மடக்கிவிடப்பட்டிருந்தது. அந்தக் குதிரைகள்கூட காதலர்கள் செல்கிறார்கள், நாம் காலடிச் சத்தத்தை அதிகமாகப் போடக்கூடாது என்று எண்ணியனபோல ஒரே சீராகக் கால்களை எடுத்து வைத்தன. ஒரே தானத்தில் வண்டி ஓடியது. "அத்தான், இரண்டு குதிரைகளும் காலை எப்படி எடுத்து வைக்கின்றன பார்த்தீங்களா?" என்றாள் மோகனா.

"ஆமாம், இதே மாதிரிதான் இந்த இரண்டு குதிரைகளும் ஓடணும்" என்று சொல்லிவிட்டு, கடைக்கண்ணால் அவளைப் பார்த்தான் சண்முகம்.

"போங்க அத்தான். நம்ம ஏன் வண்டி இழுக்கப் போறோம்?"

"ஆமாம், மோகனா. வாழ்க்கை ஒரு வண்டின்னுதானே சொல்றாங்க! அதை நானும் நீயும்தானே இழுக்க வேண்டும்?"

"நம்ப இரண்டு பேரும் இழுத்தால் வண்டியிலே யாரு உட்கார்ந்திருப்பது?"

"அதான், குமாரசாமி சொல்லியிருக்கிறாரே, யாரோ குல மாணிக்கம், என்று."

"ஆசையைப் பாரு, ஆசையை, அதற்குள்!"

"மோகனா, உன் மாதிரி இவன் கையை வீசிக்கிட்டு ஆடறவன் இல்லே. எப்பொழுதும் தோளிலே தூக்கிலே பழக்கம்."

அவள் பதில் சொல்லவில்லை. வெட்கம் ஒரு புறம், ஆனந்தம் ஒரு புறம். அவன் பக்கத்திலிருந்து முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"என்ன மோகனா? ஏன் முகத்தைத் திருப்பிக்கிட்டே?"

"போங்க அத்தான். நீங்க என்ன என்னமோ பேசறீங்க!"

"நானா பேசினேன்? குமாரசாமி சொன்னதைத்தானே சொன்னேன். இப்படித் திரும்பு" என்று அவள் முகத்தைப் பிடித்துத் திருப்பினான். அவளுடைய கண்களின் ஓரத்தில் இருக்கும் ஆனந்தக் கண்ணீரைப் பார்த்தான்.

"மோகனா, உனக்குக் கிடைத்த மாணிக்கத்தை என்ன செய்தாய்?"

மோகனா சிரித்தாள்.

"எங்கு வைத்திருக்கிறாய்?"

"ஹூம்........!"

"உங்க அம்மா பெட்டியிலா?"

"இல்லே."

"பிறகு, உன் பெட்டியிலேயா?"

"அதுவும் இல்லே."

"ஓஹோ, புரிந்துவிட்டது. இன்னும் இடுப்பிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா?"



"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"எனக்குத் தெரியாதா! இவ்வளவு இடைஞ்சல்கள் வந்தும் என்னை இதயத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாயே, இதை உன் இடுப்பை விட்டு எடுப்பாயா?" என்று சொல்லி அன்பொழுக அவள் முகத்தையே பார்த்தான். அவளும் அவனையே பார்த்தாள்.

அந்த ஆனந்த வேளையிலே, 'ஏய், ஏய்' என்று ஒரு வண்டி ஓட்டியின் குரல் கேட்டது. இருவரும் சடக் என்று திரும்பினார்கள். ஒரு வண்டி அவர்களைத் தாண்டிக்கொண்டு வெகு வேகமாகச் சென்றது.

"அட., வண்டியிலே, வைத்திஜி!" என்றான் சண்முகம்.

எங்குதான் போயிற்றோ, இருந்த சந்தோஷம். அவள் முகம் எவ்வாறுதான் சிவந்ததோ, இந்தப் பெயரைக் கேட்டவுடனே பிரமை பிடித்தவள்போல் ஆனாள் மோகனா.

ஏழாவது அத்தியாயம்

# வைத்திஜியின் வரட்டு தர்பார்



நல்ல வைரம், உள்ளே மறுவில்லை. துரை இல்லை. கறுப்புப் புள்ளி இல்லை. அம்மாதிரியுள்ள வைரம் நல்ல நகையில் போய்ச்சேரும். மேலே சொன்ன குற்றங்கள் எல்லாம் உள்ள வைரம் பட்டைக் கடைகளில் போய்ப் புகுந்து கண்ணாடிகளை அறுத்துக் கொண்டு இருக்கும். வைத்தியும் ஒரு வைரம்தான். அதனிடத்தில் கறைகள் அதிகம். அதனால் அது அறுப்பு வேலை செய்து கொண்டிருந்தது.

பீ.ஏக்கு வக்கீல் குமாஸ்தா உள்ளே நுழைந்தார். அப்பொழுதுதான் வைத்தி தனக்கு மகாராஜா கொடுத்த பவர்பத்திரத்தை அக்கறையோடு படித்துக்கொண்டிருந்தார். குமாஸ்தா உள்ளே நுழைந்தவுடன் கடைக் கண்ணால் ஒரு முறை அவரைப் பார்த்தார். பார்த்துவிட்டுத் தன் வேலையைக் கவனித்தார். குமாஸ்தாவுக்கு இது சிறிது கோபத்தை உண்டாக்கியது. ஆயினும் இடம், பொருள், ஏவல் தெரிந்தவரானதால் கோபத்தை அடக்கிக்கொண்டார். சற்று நேரம் நின்றார்.

"வெல், அடேடே, உங்களை உட்காரச் சொல்லவில்லையே!" என்று சொல்லிக்கொண்டே வைத்தி திருப்பினார்.

"அதனால் பாதகமில்லே. ஏதோ முக்கியமான வேலையாக இருக்கிறீர்கள்" என்று குமாஸ்தா திருப்பினார்.

"உட்காருங்கள். தாங்கள் எப்பொழுது வந்தீர்கள்?"

"நான் வந்து ஒரு வாரமாகிறது. உங்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில்தான் இவ்வளவு தாமதம் ஏற்பட்டது."

"என்னைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம்?"

"உங்கள் மூலமாக மகாராஜா எங்களுக்குப் பணம் அனுப்பியிருப்பதாய் எழுதி இருந்தார். பணமும் வரவில்லை, தாங்களும் வரவில்லை."

"ஏன், ஆள் எங்கேயாவது பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிப் போய் இருப்பானோன்னு பார்த்தீர்களா?"

"சே, சே, அப்படியில்லே. உங்களுக்கு ஒரு ஆபத்துன்னா எங்களுக்கு வந்தமாதிரி இல்லையா? அயல் நாட்டிலே இறங்கி இருக்கிறேள். திடீரென்று ஒரு 'ஆக்ஸிடெண்ட்' வந்துடுத்து. உங்க உயிருக்கு ஏதாவது என்றால் எங்களுக்கு வருத்தமாக இருக்காதா? 'அடே வைத்தி நமக்கு ரொம்பத் தெரிந்தவர். எதுக்கும் நீ சிலோனுக்குப் போய் அவர் இருக்காரான்னு பார்த்துவிட்டு வா' என்று வக்கீல் அய்யர்வாள் சொன்னார்."

"உங்கள் வக்கீலுக்கு என்னிடம் அவ்வளவு பழக்கமில்லையே!"

"அதுவும் சொன்னார். பொய்க்கால் குதிரையடா! ஞாபகம் வைத்துக்கொள். நல்ல மனிதர். அப்படியெல்லாம் பணத்தை எடுத்துக் கொண்டு போய்விடக்கூடியவரல்ல. ஏதாவது ஆபத்துதான் வந்திருக்க வேணும். அதனாலேதான் காகிதம் போடவில்லை' என்றும் சொல்லி அனுப்பினார்."

வைத்திக்குக் கிண்டல் புரிந்தது. இருந்தாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், "நான் கடிதம் போடாமல் இருந்ததற்குக் காரணமில்லாமல் இல்லை. ஐ-யாம்-இன்-ட்ரபிள்" என்றார்.

"என்ன ட்ரபிள் சார் உங்களுக்கு? உங்கள் கஷ்டத்தைத் தீர்க்கத்தானே நாங்கள் இருக்கிறோம்!"

"என்னிடமிருந்த பணத்தையெல்லாம் யாரோ ஒருவன் திருடி விட்டான். அதை நீங்கள் தருவீர்களா?"

"உங்க கிட்டவா திருடினான்? ஆச்சரியமாயிருக்கிறதே!"

"ஆமாம் சார். மாங்குளம் ஸ்டேஷனில் மணிபர்சைக் காணோம். உங்க வக்கீலுக்கு மகாராஜா கொடுத்த லெட்டரும் அதிலே இருந்தது. லெட்டர் இல்லாமே அவரை எப்படி அறிமுகம் செய்துகொள்வது என்று தெரியாமல்தான் பேசாமல் இருந்துவிட்டேன்."

பணம் திருடு போய்விட்டது என்ற செய்தியைக் கேட்டதும் குமாஸ்தா திகைத்தார். வைத்தி சரடு விடுகிறாரோ என்ற சந்தேகமும் வந்தது. "இந்தச் சட்டம் இருக்கிறதே இது ரொம்பப் பொல்லாதது சார், அதுக்குப் புருப் ஆகும் வரையில் இன்னொருத்தன் திருடினானா,

......, சென்னை-35.



நீங்களே திருடிவிட்டீர்களா என்ற வித்தியாசம் தெரியாது" என்று சொல்லிவிட்டு வைத்தியைக் கருட பார்வை பார்த்தார்.

"அப்படியானால் என்னைத் திருடன் என்று சொல்கிறீர்களா?"

"ஐயோ, நானா சொல்கிறேன்? சட்டம் உங்களைத்தாம் திருடன் என்று சொல்லும் என்பதைச் சொல்கிறேன்."

"ஓய், நீர் குமாஸ்தா, கோர்ட்டார் அல்ல. ஐ ஹாவ் நோ டைம் டு ஆன்ஸர் சில்லி கேள்விகள்" என்று வைத்தி ஆசனத்தை விட்டு எழுந்திருந்தார்.

"சரி. கோபித்துக்கொள்ளாதீர்கள். திருட்டுப் போச்சுன்னு நான் எப்படி சார் நம்பறது?"

"நீங்கள் நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். சண்முகத்துக்கிட்டே நூறு ரூபாய் வாங்கியிருக்கேன் சார்."

"வாங்கினீர்களா?" 139563 | 484 3707

"ஆமா!"

"அதுதான் எங்களுக்குச் சந்தேகம். மகாராஜா சண்முகத்துமேல் கேசு போடச் சொல்லி உங்களிடம் சொன்னார். நீங்கள் அவர்கிட்டே பணத்தை வாங்கிக்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டீர்கள். இதுதான் என் கட்சி."

வைத்தி நன்றாகப் பிடிபட்டுவிட்டார்.

"சார். எனக்குப் பணம் களவு போனதே பெரிய வருத்தம். நீங்க இப்படி என்னை 'மிஸ்அண்டர்ஸ்டாண்ட்' பண்றது அதைவிடப் பெரிய வருத்தம். இந்தாங்க, மகாராஜா எனக்குக் கொடுத்த பவர். நீங்க என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அவன் மேல் நடவடிக்கை எடுத்துக்குங்கோ" என்று வைத்தி தன் பவர் பத்திரத்தைத் தூக்கி ராமசாமி ஐயரிடம் கொடுத்தார்.

"பவர் மாத்திரம் இருந்தால் போதாதே! ஸ்டாம்பு வாங்கப் பணம் வேண்டாமா?"

"பணத்துக்காக மகாராஜாவுக்குக் 'கேபிள்' கொடுத்திருக்கிறேன். அந்தப் பணம் கிடைக்கும். அதற்காகத்தான் இப்பொழுது ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். நீங்கள் இந்தப் பவரை வைத்துக்கொண்டு உடனே சண்முகத்தின் மேல் ஒரு 'ஸ்டே ஆர்டர்' வாங்குங்கள். இந்த ஊரிலே அவன் வாசிக்காத இடம் கிடையாது" என்று வைத்தி கெஞ்சும் குரலில் சொன்னார்.

"சரி, இப்போ உங்க கிட்டே எவ்வளவுதான் பணம் இருக்கு? 'என்னடா ராமசாமி, பணம் எங்கே, பவர் பத்திரம் மாத்திரம் வாங்கி அனுப்பி இருக்கிறாயே' என்று வக்கீல் கேட்டால் நான் என்ன சொல்லுவது?"

"இந்தாங்க 500 ரூபாய். இதை வச்சுக்குங்கோ. அவன் மேலே ஒரு ஸ்டே ஆர்டர் எடுத்து அனுப்பச் சொல்லுங்கோ. இனிமே இங்கே

வாசிக்கவிடாமே நான் பார்த்துக்கிறேன்'' என்று வைத்தி கூறி, ராமசாமியிடம் ஐந்நூறு ரூபாய் பணம் கொடுக்கவே, அவரும் சரியென்று ஒப்புக்கொண்டார். அது மாத்திரம் அல்ல. போலீஸ் ஸ்டேஷனில், களவு போன விஷயத்தைத் தான் எழுதி வைத்திருப்பதையும் அவருக்கு நிரூபித்துக் காட்டினார்.

சட்டம் தயவு தாட்சண்யம் பார்க்காது. அதற்கு நட்பு என்றும் உறவு என்றும் கிடையாது. வேண்டியவன், வேண்டாதவன் என்பதும் கிடையாது. தர்ம சங்கடம் என்று சொன்னால் இன்று வக்கில் கிட்டா வய்யர் அனுபவிப்பதுதான் அது.

சண்முகத்தின் சங்கீதத்தின் மேல் அவருக்குள்ள பிரியம் கணக்கிலடங்காதது. ஆனால் தான் வக்காலத்து வாங்கிக்கொண்டிருக்கும் மகாராஜாவின் கட்சியைக் காப்பாற்றுவதில் உள்ள கடமையுணர்ச்சியும் அவரை விட்டுவிடவில்லை. இதுசெய்து இந்த வழக்குக்கு மாத்திரம் ஆஜராக மாட்டேன் என்று சொல்வதற்கும், சமாதானம் செய்து வைப்பதற்கும் மகாராஜா இங்கு இல்லை. இப்போது வழக்கை நடத்தி விடலாம். மகாராஜா வந்தவுடன் ராஜி செய்து வைத்துவிடலாம் என்ற எண்ணம்தான் அவருக்குத் தோன்றியது. அவர் சென்னை நீதி மன்றத்திலே தன் கையிலிருந்த ஒப்பந்த நகலைக் காண்பித்து, 'சண்முகம் ஒப்பந்தத்தை மீறிவிட்டார்' என்பதை எடுத்துக் காட்டினார். அவன் மகாராஜாவிடம் வாசியாமல் வேறு இடங்களில் வாசிப்பது ஒப்பந்தத்துக்கு விரோதம் என்று வாதாடி, தடையுத்தரவு வாங்கினார்.

தடையுத்தரவு வந்தவுடனே வைத்திக்கு கனகாபிஷேகமே செய்தது போல இருந்தது. அவருடைய குதர்க்க மூளையும் உடனே வேலை செய்தது. ''என்ன ராமசாமி ஐயர்வாள் யாழ்ப்பாணத்துக்குப் போயிட்டு வரலாமா?'' என்றார் வைத்தி.

''எதற்கு சார்?''

''உமக்குப் பயம்; எதிரியைப் பார்த்து நீர் பேசிக்கொண்டிருக்கும் போது யாராவது போட்டோ எடுத்துவிட்டால்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் வைத்தி.

''அப்படி ஒண்ணும் இல்லே சார். எதுக்கும் ஜாக்கிரதையாயிருக் கணும் பாருங்கோ.''

''உங்களுக்குப் பயமாயிருந்தா, நானே வேண்டுமானால் போய் இந்தத் தடையுத்தரவைக் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு வைத்தி, யாழ்ப்பாணம் சென்றார். சண்முகம் கதிர்காமம் போயிருக்கும் விவரம் தெரிந்தது. அவன் இருந்த ஜாகையின் வாசலில் உத்தரவை ஒட்டச் சொன்னார். படிக்காத இருவரிடம் சாட்சிக் கையெழுத்து வாங்கிக் கொண்டார். நேரே கொழும்புக்கு வந்துவிட்டார்.

ராமசாமி ஐயர், தன்னுடைய நிலைக்குத் தகுந்தபடி கொழும்பில் உள்ள ஒரு கடைக்காரர் வீட்டில் தங்கியிருந்தார். அடிக்கடி வைத்தியைப்



பார்த்து, மகாராஜாவிடமிருந்து பணம் வந்ததா என்று விசாரிப்பார். வைத்தியும் இன்று வரும், நாளை வரும் என்பார்.

ஆனால் ஹோட்டல் மானேஜர் பணத்தைப் பற்றிக் கேட்கவேயில்லை. ஆயினும் முன்பெல்லாம் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்தவர் இப்பொழுது கூப்பிடாமலே ஓடி வந்தார். முதலில் இந்த ஆயிரம் ரூபாயை எப்படியாவது கொடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் ஏமாற்றியிருக்கிறோம் என்பது வெளியாகிவிட்டால் இது பெரிய மோசம் என்று வைத்தி கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அந்த ஹோட்டலில் இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அவருக்கு நெருப்பின் மேல் இருப்பது போலிருந்தது. கீழே பெட்டகம் திறக்கும் சத்தம் கேட்கும்போதெல்லாம் தம் ரகசியம் வெளியாகிவிட்டதோ என்ற பயம் ஏற்பட்டது. அந்த மானேஜர், சாதாரணமாகப் பார்க்கும் பார்வையும் அவருக்கு விஷப்பார்வையாகத் தோன்றியது. இந்த நிலையில் ஹோட்டல் பையன் உள்ளே நுழைந்தான்.

''என்னப்பா?''

''நீங்க இருக்கீங்களான்னு பார்க்கச் சொன்னாரு மானேஜர்.''

''ஏன்? நான் எங்கே போயிட்டேன்? இங்கேதானே இருக்கேன்''

''இல்லை, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்காங்க!''

இந்த மூன்று எழுத்துகளுக்குத்தான் எத்தனை சக்தி! போலீஸ் என்றவுடனே, வைத்தியின் உடல் வியர்த்தது. அடிவயிற்றைக் கலக்கியது. ''என்ன, என்ன விசேஷம்?'' என்றார்.

''எனக்குத் தெரியாதுங்க. மானேஜர் கிட்டே பேசிக்கிட்டு இருந்தாங்க. உடனே நீங்க இருக்கீங்களான்னு பார்க்கச் சொன்னாங்க'' என்று அந்தப் பாவி சொன்னான். வைத்தி திடுக்கிட்டார். பாழும் மானேஜர் காட்டிக் கொடுத்துவிட்டானே, தோல் பெட்டியைத் திறந்து அதிலுள்ள சோப்பு, ஷேவிங் செட்டு எல்லாவற்றையும் வெளியே கொட்டியிருப்பானோ என்று பயந்தார்.

''ஏன் தம்பி, இந்த ஹோட்டலுக்குப் பின்பக்கத்திலே ஒரு தோட்டம் இருக்குதில்லே, அது எத்தனை ஏக்கர்?'' என்றார்.

''எனக்குத் தெரியாதுங்க. எஞ்சினீயரைக் கேக்கணும்'' என்றான் பையன்.

''சரி, நீ போய் முதலிலே ஒரு கப் காப்பி கொண்டா, நான் சீக்கிரமாகப் போயிட்டு வந்துடறேன்.''

''இல்லே சார், அவங்க உங்களை அர்ஜண்டா பார்க்கணும்னாங்க.''

''பார்க்க வரவங்க யார்தான் அப்பா அவசரம் இல்லேங்கிறான்? எல்லோருக்கும்தான் அவசரம்.''

''மானேஜர் கோபிச்சுப்பாரு சார்.''

"மானேஜர் உன்னைக் கோபிச்சுக்கிறதுக்கு நீ என்ன குற்றவாளியா? அவர் என்கிட்டே சொல்லச் சொன்னார். சொல்லியாச்சு; இப்ப நான் காப்பி கேட்கிறேன். நீ கொண்டு வரவேணும்.' அதுவும் உன் ட்யூட்டி தானே? மானேஜர் கோபிச்சுக்கொண்டால், நான் சும்மா விடுவேனா? 'லேபர் லா' தெரியுமா உனக்கு? இந்தா, அப்படியே ஒரு இரண்டணா வுக்கு ஸ்டாம்பு வாங்கிக்கோ. மிச்சம் 14 அணாவை நீயே எடுத்துக்கோ" என்று சொல்லி அவனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்தார். பையனை அது வெளியே அனுப்பியது.

உடனே, மாட்டியிருந்த தன் சட்டையை எடுத்துக்கொண்டார். ரூமை இழுத்துப் பூட்டிக்கொண்டு கொல்லை வழியே இறங்க ஆரம்பித்தார்.

அந்த ஓட்டல் கொல்லைப் புறத்தில் சமையல் அறை. ஹோட்டல் முன்புறம் எவ்வளவு சுத்தமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கும் எதிரிடை பின்புறம். அதற்குள் வைத்தி இறங்கிப் போகும்போதே, "சார், சார்! அங்கேயெல்லாம் ரொம்ப டர்ட்டியாக இருக்கும் சார். அந்தப் பக்கம் போகாதீங்க!" என்று மானேஜர் கூறிய குரல் கேட்டு திடுக்கிட்டு நின்றார்.

ஆமாம், அவர் கண்ட காட்சி அவரை வெலவெலக்க வைத்தது. அவருக்குப் பக்கத்திலேயே இரண்டு போலீஸ்காரர்களும், ஒரு இன்ஸ்பெக்டரும் நிற்பதைக் கண்டார்.

"ஐ வான்ட் டு ஸீ ...." என்று மேலே என்ன சொல்வதென்று தெரியாமல் திணறினார் வைத்தி.

"அவங்க ஒரு முக்கியமான விஷயமா வந்திருக்காங்க சார்" என்று உற்சாகத்துடன் கூறினார் மானேஜர். அவருடைய உற்சாகத்தைப் பார்க்கப் பார்க்க வைத்தி நடுங்கி உளறினார்.

"எல்லாம்தான் முக்கியம். எதுதான் முக்கியமில்லே? என்ன விஷயம்?"

"ஒரு திருட்டு?"

"என்ன, திருட்டா?" வைத்தியின் தலை சுற்றியது.

"ஆமாம், உங்களிடத்திலிருந்து ஏதோ மணிபர்ஸ் திருட்டுப் போய் விட்டது என்று நீங்கள் எழுதி வைத்தீர்களே, அது கிடைத்துவிட்டது. நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தால் அதைப் பார்க்கலாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நீங்க நினைச்ச நேரத்திலே எல்லாம் நான் வர முடியுமா சார்? யூ கோ டு தி ஸ்டேஷன். ஐ வில் கம் வித்தின் ட்வெண்டி மினிட்ஸ்" என்று அந்தப் பய வேகத்திலேயே வைத்தி சொன்னார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் திரும்பிச் சென்ற அரை மணிக்குப் பிறகு தான் வைத்தியின் மனம் அவரிடம் திரும்பி வந்தது. 'பணம் தொலைந்தால் சம்பாதித்துக்கொள்ளலாம், மனம் தொலைந்தால் திரும்பி வருமா? நாம் ஏன் இவ்வளவு பதறிவிட்டோம்?' என்று நினைத்தார் வைத்தி. ஆனால் பக்கத்தில் நின்ற மானேஜரோ, 'களவு



போன பொருள் கிடைத்த போதுகூட இந்த மனிதர் அதைப் பொருட்படுத்தாமல் நிம்மதியாய் இருக்கிறாரே! அடேயப்பா, எவ்வளவு பெரிய மனிதர்' என்று வியந்தார்.

"மிஸ்டர் மானேஜர், பின்பக்கத்திலே வண்டிகள் நிறுத்த இடமிருக்கோ?" என்றார் வைத்தி.

"ஏன் சார்?"

"மகாராஜா திரும்பறபோது இங்கே வந்து ஒரு மாதம் தங்குவார்னு நினைக்கிறேன். ஏழெட்டு வண்டிகள் நிற்கணும். அதுக்குத்தான் பின்னாலே இடம் இருக்கான்னு பார்க்கப் போனேன்."

"பின்னாலே கிடையாது சார். ஆனால் நான், எதிரே இருக்கிற காம்பவுண்டிலே ஏற்பாடு செய்கிறேன் சார். மகாராஜாவுக்கு எவ்வளவு சௌகரியம் வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறோம் சார்."

"வெரிகுட்" என்று சொல்லிக்கொண்டே, வைத்தி வாசலில் வந்து வண்டியில் ஏறினார். 'இந்தக் களவு போன பணம் கிடைத்தது நல்லது. முதலில் இவரிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அந்தப் பெட்டியைத் திருப்பி வாங்கிவிட வேண்டும்' என்று நிச்சயம் செய்துகொண்டார்.

போலீஸ் ஸ்டேஷனுக்குள் வந்ததும் "வரவேண்டும் வரவேண்டும் இப்படி அமருங்கள்" என்று மரியாதை செய்து ஓர் ஆசனத்தில் வைத்தியை உட்கார வைத்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"சவடால் வைத்தி, உன்னை என்ன செய்கிறேன் பாரு" என்ற நாகலிங்கத்தின் குரல் கேட்டது. வைத்தி திரும்பவில்லை. வேறு ஆட்களாக இருந்தால், இந்தக் குரல் வந்ததுமே, சடக்கென்று திரும்பி ஏமாந்திருப்பார்கள். ஆனால் வைத்தியின் நிதானம் அவரைத் திரும்ப விடாமல் தடுத்தது. "என்னய்யா, திரும்பிப் பார்க்கமாட்டேங்கறேளோ?" என்று சொல்லிக்கொண்டே எதிரில் வந்து நின்றான் நாகலிங்கம்.

அவனை இரண்டு போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டிருந்தார்கள். "இந்த ஆளை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"எஸ், ஐ நோ."

"என்னய்யா கேட்கிறீங்க? என் கையாலே மூவாயிரம் ரூபாய் வாங்கிக்கிட்டு, அந்தப் பொண்ணை பாரிஜூருக்குக் கூட்டிகிட்டு வந்து போலீசுக்கும் இம்பர்மேஷன் கொடுத்தவனில்லே இவன்?" என்றான் நாகலிங்கம்.

"ச்சே மரியாதையாகப் பேசு. இவர் மதன்பூர் மகாராஜாவின் ஏஜண்ட்" என்று சிங்கள இன்ஸ்பெக்டர் சீறினார்.

வைத்தி அவனை ஒரு முறை பார்த்தார். இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பினார். "சாரி, எனக்கு ஸோமெனி அர்ஜண்ட் மாட்டர்ஸ். இங்கே ஸ்டே பண்ண நேரம் கிடையாது. சீக்கிரம் விஷயத்தை முடியுங்கள்" என்றவுடன் இன்ஸ்பெக்டர் தன்னுடைய மேஜை டிராயரைத் திறந்து,

அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்தார். "இந்தக் கடிதம் உங்களிடமிருந்து களவு போனதுதானே?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"இந்த மணி பர்ஸ் உங்களுடையதுதானே?"

"ஆமாம்."

"இதில் எத்தனை ரூபாய் வைத்திருந்தீர்கள்?"

"என் செக்ரடரியைக் கேக்கணும்."

"அப்படியானால்?"

"ரூபாய், அணா, பைசா எல்லாம் என்னாலே சொல்லமுடியாது சார், நான் என்ன குமாஸ்தாவா? மணிபர்ஸிலே கொஞ்சமா இருந்தால் தான், நாலு ரூபாய், இரண்டே முக்காலணா இருந்தது என்று சொல்லுவாங்க. நாங்க எல்லாம் ஆயிரக்கணக்கிலே புழங்கிறவங்க சார். அதில் காலணா எத்தனை, அரையணா எத்தனை, முழு ரூபாய் எத்தனை என்று கேட்டால் சொல்ல முடியுமா?"

"இல்லே சார், இவ்வளவு என்று தெரிந்திருக்குமல்லவா சுமாராக?"

"சுமாராக ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் இருந்தது சார்."

இன்ஸ்பெக்டர் மணிபர்ஸைத் திறந்தார். வைத்தி தன் கஷ்டம் தீர்ந்தது என்று எண்ணினார். வைத்தியின் கண்முன்னே நோட்டுகளை எண்ணினார் இன்ஸ்பெக்டர்.

"இரண்டாயிரத்து முந்நூறுதான் சார் இருக்கிறது" என்றார்.

"ஆடிட்டருக்கு சிரமமில்லே. எனக்கும் அக்கௌண்ட் எழுத வேண்டிய அவசியம் இல்லே. அவன் கிட்டயே ஒரு 'வவுச்சர்' எழுதி வாங்கிக்கோங்கோ. மீதிப் பணத்தையெல்லாம் எந்த சப்ஜெக்டிலே செலவழிச்சானாவது தெரியட்டும்" என்று வைத்தி கூறவே எல்லாரும் சிரித்தார்கள்.

"ஓய்! மிச்ச நோட்டை நீ என்ன செய்தாய்?" என்று நாகலிங்கத்தைப் பார்த்து இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என்னய்யா, என் பணத்துக்கே நான் கணக்கு வச்சுக்கிறதில்லே. எடுத்த பணத்துக்கா கணக்கு எழுதப் போறேன். இருக்கிறது போக மிச்சத்தைச் செலவு பண்ணினேன்னு வச்சுக்கங்களேன்" என்று அவன் சொன்னான்.

"சரி சார், மன்னிக்க வேண்டும். உங்களை இதற்குத்தான் சிரமப்படுத்தினேன். நீங்கள் போய் வரலாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"பணத்தைக் கொடுங்கோ. அதைக் கொடுக்காமே, போய்வாங்கன்னு சொன்னா?"

"இது எல்லாம் கேஸ் சம்பந்தப்பட்ட விஷயம் சார். கோர்ட்டு மூலமாக வந்து சேரும்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லவே வைத்திக்கு, வந்த பணம் கையை விட்டு நழுவியது போலத் தோன்றியது. 'இந்த ஓட்டல்காரனுக்கு அதிர்ஷ்டமில்லே' என்று மனத்தில் திட்டினார்.



"சரியாப்போச்சு, இந்தக் கோர்ட்டிலே கேஸ் நடந்து முடிவதற்குள்ளே இந்த கவர்ன்மெண்ட் மாறி, வேறே கவர்ன்மெண்டு வந்தாலும் வந்துவிடும்!"

"அப்பொழுதும் சட்டப்படி நோட்டு செல்லும்" என்றார் இன்ஸ்பெக்டர். வைத்தி சோர்ந்த முகத்துடன் எழுந்து புறப்பட்டார்.

கைக்கு எட்டிய பொருள் வாய்க்கு எட்டவில்லையே என்ற கவலை அவருக்கு. இப்பொழுது இருக்கும் பணமுடைக்கு இந்த இரண்டாயிரம் ரூபாய் கிடைத்திருந்தாலும் போதுமே. இன்னும் என்ன காரணத்தைச் சொல்லி மானேஜரிடம் பணம் வாங்குவது என்ற வருத்தத்தோடுகூட வண்டியில் ஏறினார் வைத்தி.

கடை வீதியில் வண்டியில் செல்லும்போது, அங்கே வடிவாம்பாள் ஒரு கடையில் இருப்பதைக் கண்டார் வைத்தி. திடுக்கிட்டார். "வண்டியை நிறுத்து!" என்றார்.

வண்டி நிறுத்தப்பட்டது. "என்ன வடிவாம்பா, இந்த ஊரிலே வண்டியில்லாமல் வரலாமோ? உங்கள் அந்தஸ்தென்ன? யோக்கியதை என்ன? இந்தாங்கோ, நம்ம வண்டியிலே போய் எங்கே இறங்கணுமோ அங்கு இறங்கிக்கொண்டு வண்டியை அனுப்புங்க" என்று அதிகாரத்துடன் உத்தரவிட்டார் வைத்தி.

இவரை இங்கு பார்த்ததில் வடிவாம்பாளுக்கு வியப்புத் தாங்கவில்லை. அதைக்காட்டிலும் அதிகமான வியப்பை அளித்தது அந்த வண்டி.

அடடா, என்ன சிங்காரம்! பாலிஷ் போட்டுப் பளபளவென்று விளங்கும் அதன் கைப்பிடிகளும் நாற்புறமும் கட்டப்பட்டிருந்த வெல்வெட்டுப் படுதாக்களும், வண்டியினுள்ளே கூட்டிலும் ஓரங்களிலும் தைக்கப்பட்டிருந்த சாட்டின்துணிகளும், ஆசனத்தில் தைக்கப்பட்டிருந்த சிவப்புத் துணியும் திண்டு, தலையணைகளும், அதன் இரு ஓரங்களிலும் தொங்கிய பட்டுக் குஞ்சம் வைத்த கைப்பிடிகளும் அவள் உள்ளத்தை அள்ளின. அது ஹோட்டல் வண்டி என்பதையும், ஒரு மணிக்கு ஒன்பது ரூபாய் வாடகை என்பதையும் அவள் அறிவாளா?

வடிவாம்பாள் வண்டியை ஆவலுடன் பார்ப்பதைப் பார்த்த வைத்தி, "என்ன, வண்டியை அப்படிப் பார்க்கிறீர்கள்? பெரிய இடம், பெரிய இடம்தான். மகாராஜாவின் வேலைக்காரன் போகவே இவ்வளவு பெரிய வண்டி என்றால் மகாராணிக்கு எந்த வண்டி வரும் என்று பாருங்கள் என்றார்!"

"சரிதான் வைத்தி, இனிமேல் எதுக்கு அந்தப் பேச்சு? அவுங்க அவுங்களுக்குக் குடுத்து வச்சதுதானே கிடைக்கும்?" என்றாள் வடிவாம்பாள்.

"அப்படிச் சொல்லாதீங்க அம்மா. உங்க ஜாதகம் நல்ல ஜாதகம்தான். ஆனால் அந்தக் கேது பார்வை உங்களைக் கெடுக்கிறது."

''அதென்னங்க கேது பார்வை?''

''ஆமா. அந்த நாயனக்காரன் பார்வைதான். அது விழுந்த பிறகு தானே ஆபத்தெல்லாம்!''.

''இந்தாங்க வைத்தி, அந்தப் புள்ளையும் நல்லதுதான்.''

''எதுதான் அம்மா நல்லதில்லை? நம்மைக் கடிக்காமல் இருக்கிற வரையிலே பாம்புகூட நல்லதுதான்....''

''சும்மாயிருங்க வைத்தி! உங்களுக்கு விஷயம் தெரியாது'' என்று கோபத்துடன் அவரை ஒரு பார்வை பார்த்தாள், வடிவாம்பாள்.

''யாருக்கு? எனக்கா விஷயம் தெரியாது? உங்கள் மனது தங்கமல்லவா? அந்த ஆபத்திலே, யாழ்ப்பாணம் ஸ்டேஷனிலே நீங்க குடுத்தது நூறு ரூபாய்தான் என்றாலும், அதுவே ஆயிரம். இந்தாங்கோ, நூறுக்கு இருநூறாகத் தந்துவிடுகிறேன்'' என்று அவசரமாகப் பையில் கை விட்டார் வைத்தி.

வடிவாம்பாளுக்கு இதில் சிறிது சந்தோஷம் பிறந்தது. இருந்தாலும், ''இல்லீங்க, அது நான் குடுக்கல்லே, அவருதான் குடுத்தனுப்பினார்'' என்று சிரித்துக்கொண்டே கூறினாள்.

''யாரு?''

''அதுதான் சிக்கல் தம்பி.''

''அவனுக்கு எப்பவாவது யாருக்காவது குடுத்துப் பழக்கமுண்டா? நீங்களே பணத்தையும் கொடுத்துவிட்டு, புகழுக்கு ஆசைப்படாமல் இல்லையென்றும் சொல்லுகிறீர்களே! இதுதான் பெரிய மனிதத்தன்மை. நிஜமாகக் கேட்கிறேன், நீங்கள்தானே கொடுக்கச் சொன்னது? உண்மையாகச் சொல்லுங்க!''

பாவம், இந்தப் புகழ் இருக்கிறதே இது பொய்யாயிருந்தால்கூட ஒப்புக்கொள்ளச் செய்யும். இல்லை, நான் கொடுக்கவே இல்லையென்று வடிவாம்பாள் சொல்லவில்லை........

''ஆமாங்க... என் கிட்டப் பணமில்லை, அது குடுக்கறேன்னு வந்தது. நான் அந்த...''

''அதுதானே பார்த்தேன்.... ஆமா, ஏது கதிர்காமம் எல்லாம் போய் இருந்தாப் போலிருக்கிறதே?''

''ஆமா, முருகன் கோவிலிலே கல்யாணமும் நிச்சயமாயிடுச்சு. பதினைந்தாம் தேதி முகூர்த்தம்'' என்று புகழ்ச்சி கிடைத்த மகிழ்ச்சியில் வைத்தியிடம் சொல்லிவிட்டாள் வடிவாம்பாள்.

''அப்படியா! யாருக்கும் யாருக்கும்?''

''மோகனாவுக்கும் சிக்கலாருக்கும்தான்.''

''அய்யோ!''

''ஏன் அய்யா தோசித்தனமா?''

''நீங்களும் ஒப்புக்கொண்டுவிட்டீர்களா?''



''பின்னே, நான் சரி சொல்லாமே நீங்களா சொல்லணும்?''

ஆனால் வைத்தி இதைக் காதில் வாங்கவே இல்லை. அவர் மனம் ஏதோ கடுமையாய் வேலை செய்துகொண்டிருந்தது.

தன் கைச் சீட்டில் துருப்பு கைதவறி விட்டதென்று அவருக்குத் தோன்றியது. 'இந்தத் துருப்பின் பலத்தில்தானே மகாராஜாவின் சீட்டுகளையும் நோட்டுகளையும் வெட்டி வந்தோம்? இது தவறிவிடும்போல் இருக்கிறதே' என்ற எண்ணம் வந்தவுடனே வைத்தி ஆத்திரத்தோடு தன் வண்டியில் ஏறி அமர்ந்தார். வண்டி புறப்பட்டது. வடிவாம்பாள் இதைப் பார்த்துப் பிரமித்தபடி நின்றாள்.

அங்கிருந்து வண்டியில் வேகமாக வரும்போதுதான் எதிர் வண்டியில் சண்முகம் மோகனா இருவரும் தனித்துச் செல்வதையும் கண்டார்.

''பத்து நாளில் கல்யாணம்! பார்த்துவிடுகிறேன் ஒரு கை!'' என்று சீறினார்.

''ஏய்! இன்னும் வேகமாக விடு வண்டியை'' என்றார்.

''இனிமேல் ஓடினால் வண்டி கவிழ்ந்துவிடும்'' என்றான் வண்டிக்காரன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ''அவசரம், ஆபத்து, விஷயம் தலைக்கு மீறிவிட்டது. இரண்டு கைகளும் சேருவதற்குள் நான் பிரிக்க முயல்கிறேன். உங்கள் உத்தரவை எதிர்பார்க்க நேரமில்லை. பணம் அனுப்பவும்; வைத்திஜி.''

என்று ஒரு தந்தி பறந்தது, மதன்பூர் மகாராஜாவுக்கு.

✤ ✤ ✤

நம் தமிழ் மக்கள் எங்கு சென்றாலும் தமிழையும் தமிழ்ப் பண்பையும் கூடவே தூக்கிச் செல்வது வழக்கமல்லவா? ஸ்ரீ விஜயத்துக்குச் சென்ற சோழ மன்னன் அங்கு எந்த நல்ல வேளையில் கோவில் கட்டிக் கும்பிட்டானோ அன்று முதல் எந்த நாட்டுக்குத் தமிழன் சென்றாலும் அங்கு ஒரு கோவிலும் குளமும் தமிழன் பேரால் ஆக்கிவிடுவது வழக்கம்.

இன்று கொழும்பு கோவிலின் வாசலில் சண்முகத்தைக் கண்டவுடனே அந்தக் கோவில் நாதசுரக்காரர் கும்பிட்டார். வரவேண்டும் என்று அழைத்தார்.

கோவிலின் முன்மண்டபத்தில் அந்தக் கோவில் தருமகர்த்தாக்களும் உபயக்காரர்களும், ஸ்ரீராமன் செட்டியாரும், சிற்றம்பலம் குமாரசாமியும் கூத்தாப் பாய் விரித்து அமர்ந்திருந்தார்கள். அதன் நடுவே சண்முகம் அமர்ந்தான். மோகனா ஒரு புறத்தில் நின்றாள்.

கோவில் தருமகர்த்தா முதலில் பேசினார்:

''தாங்கள் நாளை ஊருக்குப் போவதாக ராமன் செட்டியார் உரைத்தார்கள். இவ்வளவு தூரம் வந்துவிட்டு நமது கோயிலில் உங்கள் வாசிப்பு இல்லாமல் செல்வது சரியல்ல.''

சண்முகம் விழித்தான். இதைப் பார்த்த ராமன் செட்டியார், ''சரிதான் பிள்ளை, ஒப்புக்கொள்ளுங்கள், சாமி காரியம்'' என்றார்.

குமாரசாமியோ, ''ஐயா, உங்கள் பிரயாண அவசரம் எனக்குத் தெரியும். நான் சொல்லிவிட்டேன். ரசிகர்களுக்கும் இசைக்கும் நடுவில் இருக்க எனக்கு ஏது அதிகாரம்? அதனால்தான் உங்களையே அழைத்தேன்'' என்றார்.

''இல்லீங்க, ஊருக்குப் போய் கல்யாண வேலை இருக்கிறது'' என்றான் சண்முகம்.

''முடியாது! நாளை வாசிக்கத்தான் வேண்டும்'' என்று எல்லோரும் வற்புறுத்தவே சண்முகம் ஒப்புக்கொண்டான்.

மோகனாவின் ஆட்டம் நடக்க வேண்டும் என்றார்கள். இரண்டு நிகழ்ச்சிகளும் இருந்தால் நேரம் அதிகமாய்விடும். ஆதலால் அடுத்த நாள் புறப்பட நேரம் இருக்காது என்று அவன் கூறவே அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

இம்மாதிரிப் பயணம் ஒரு நாள் தாமதப்பட்டதில் யாரும் கவலைப் படவில்லை. வடிவாம்பாள் இந்த ஒரு நாளையும் கலியாணச் சாமான் வாங்குவதில் செலவழித்தாள். வரதன் மோகனாவிடம் ஓடி வந்தான். நாலைந்து கிழிசல் துணிகள் அவனிடம் இருந்தன. அத்தனையும் வெல்வெட்டுத் துண்டுகள்.

''இந்தா தங்கச்சி, இதை ஒண்ணே ஒண்ணு உன் கையிலே வளையாட்டம் வச்சுக்க'' என்றான்.

''ஏன் வரதா?''

''இல்லே, உன் கைக்குக் கறுப்பு வளைதான் நல்லாயிருக்கும்னு நான் சொன்னேன். அம்மா, சிவப்புத்தான் நல்லா இருக்கும்னாங்க. இதைக் கையில் வைச்சுப் பார்.''

''போ வரதா, உனக்கென்ன அவங்களோட சண்டை?''

''இல்லை தங்கச்சி, சண்டை இல்லை..... விளையாட்டாத்தான் சொன்னாங்க.''

''என்ன வரதா, உனக்கு வேலை இல்லை; சின்னப் புள்ளை மாதிரி தையல் கடையில் கிடக்கிற துணியெல்லாம் எடுத்தாந்துட்டியே?''

''நான் சின்னப் புள்ளை மட்டுமில்லே தங்கச்சி. இனிமேல் தாயில்லாக் குழந்தைகூட'' என்று அவன் சொன்னபோது என்ன நினைத்தானோ, அவன் உள்ளம் என்ன பாடு பட்டதோ! அவன் கண்கள் கலங்கின. இதைக் கவனித்த மோகனாவுக்கும் கண் கலங்கியது. ஆம், அண்ணனுக்குத்தானே தெரியும் தங்கையின் அருமை? இருவரும்



உடன்பிறப்பல்ல. ஆனால் உடன்பிறப்பில் உள்ள உத்தமமான பாசம் இருவரிடமும் இருந்தது.

அவன் சொல்லியபடியே மோகனா அந்த வெல்வெட்டுத் துணிகளைத் தன் கையில் வைத்துக்கொண்டாள். இதைப் பார்த்த வரதன் எதோ முடிவுக்கு வந்தான். கடை வீதிக்கு ஓடினான். அவன் கையில் இருந்த எட்டு ரூபாய்க்கும் முக்கால் கஜம் நீலம் கலர் வெல்வெட்டுத் துணி ஒன்றை வாங்கினான்.

இதைக் கொண்டுவந்து மோகனாவிடம் கொடுத்தபோது அவனால் பேச முடியவில்லை. கண்ணீரும் விட மனமில்லை. இதுதான் அவன் கொடுத்த கலியாணப் பரிசு.

இவை ஒருபுறம் நடைபெறும் போது சண்முகம் அன்றைய இசைக் கச்சேரிக்காகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு புறப்படத் தயார் ஆனான். தருமனும் முத்துராக்குவும் உள்ளே வந்தார்கள்.

''என் முத்துராக்கு, கொழும்புக்கு வந்ததுலே உனக்குக் கதிர் காம தரிசனம் கிடைத்தது...'' என்றான் சண்முகம்.

''இந்த ஜன்மத்துக்கு அது போதுமே!'' என்றார் முத்துராக்கு.

''ஆமா, வீட்டுலே கொண்டு போய் புள்ளைங்களுக்கு விபூதியை மட்டுமா கொடுப்பீங்க. இந்தாங்க அண்ணே, ஆளுக்கு இரு நூறு ரூபா எடுத்துக்குங்க. வேணுங்கறதை வாங்கிக்குங்க. அந்தத் தாளக்காரப் பையனுக்கு ஒரு நூறு ரூபாய்க்குச் சட்டைத் துணி எடுங்க...''

''ஆமா, அவன் தூங்கற தூக்கத்துக்கு துணி வேறேயா?'' என்றான் தருமன்.

''நீங்க என் மறைவிலே தூங்கறது தெரியாது என்று நினைக்கிறீங்க...'' என்று சண்முகம் சொல்லவும் எல்லோரும் சிரித்தார்கள்.

இந்தச் சமயத்தில் அறைக் கதவைத் தள்ளிக்கொண்டு, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு ஜவான்களும் உள்ளே நுழைந்தார்கள். கூடவே வைத்தியும் வந்தார். இன்ஸ்பெக்டர், ''நீங்கள்தானே சண்முகம் பிள்ளை?'' என்றார்.

''ஆம்.''

''இப்பொழுது எங்கே புறப்படுகிறீர்கள்?''

''சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கச்சேரி. அதற்குப் புறப்படுகிறேன்.''

''அங்கு நீங்கள் நாதஸ்வரம் வாசிக்கப் போகிறீர்களா?''

''ஆம், ஊருக்கெல்லாம் தெரிகிறது. உங்களுக்குத் தெரியாதா?'' என்றான் சண்முகம்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர், ''நாதஸ்வரம் சண்முகம் பிள்ளை, தடையை மீறி வாசிக்கும் குற்றத்திற்காக உங்களைக் கைது செய்கிறோம்'' என்று அவன் அருகில் வந்து அவன் கையைப் பிடித்தார். அப்போது ''அத்தான்'' என்று அலறிக்கொண்டே உள்ளே ஓடி வந்தாள் மோகனா.

# வம்பும் வழக்கும் வழி மறித்தனவே !



கலைஞர்களின் உணர்ச்சி பூப்போன்றது. ஒரு சிறு வண்டு பட்டாலும் வாடிவிடும் மலர் போல, அவர்களால் ஒரு சிறு அவமானத்தையும் பொறுக்க முடியாது. சங்கீதம், கவிதை, ஜவ்வாது, ஜரிகை வேஷ்டி, சந்தனம், பூமாலை, புன்முறுவல், சிரித்த முகம் இவைகளுடனேதான் அவர்கள் அதிகமாகப் பழகிக்கொண்டு இருப்பதால், குற்றம், போலீஸ், கைது, எனவும் இவைகளை அவர்களால் ஒரு சிறிதும் சகிக்க முடியாது. ரசிகர் அல்லாத ஓர் அதிகாரி நின்றுகொண்டிருக்கும் போதோ அல்லது எதிரில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர் அமர்ந்திருக்கும் போதோ, அவர்களால் தங்களுடைய கலையைக்கூடச் செவ்வனே கையாள முடியாது. வித்தைக்கு வெட்கம் சத்துரு என்பார்கள். வெட்கம் மாத்திரமல்ல. பயம், கோபம் எல்லாமே சத்துருக்கள்தாம். ஆதலால், கலைஞர்கள் கூடிய வரையில் அவர்களுடைய வாழ்க்கையை மிகவும் சுத்தமாகவும், அதனால் நிம்மதியுடையதாகவுமே வைத்துக் கொள்ளுவார்கள்.

இன்று தன் அருகில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தவுடனே சண்முகத்தின் உடல் எண் சாணும் ஒரு சாணாகக் குறுகியது. அவனுடைய தைரியம் எங்கோ பறந்தது. ஆத்திரத்தில் கோபம் வரும் போலத் தோன்றியது. விவேகம் தோன்றவில்லை.

அவன் பேச முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் தருணத்தில் எங்கிருந்தோ ஓடி வந்தாள் மோகனா. ''அத்தான்! என்ன இது ? யாரு இவர்கள் ?'' என்று கேட்டாள். அதிகாரத்திற்குப் பதில் சொல்லி விடலாம். அன்புக்குப் பதில் சொல்ல முடியுமா ? சண்முகசுந்தரம் பதிலே சொல்லவில்லை. ஆனால் அவளோ, எதிரில் நின்ற வைத்தியின் பக்கம் திரும்பினாள். ''ஐயா, உங்களுக்கு இரக்கமே இல்லையா? ஏன் எங்களை இப்படிப் பாடாய்ப் படுத்துகிறீர்கள்? உங்களுக்கு நாங்கள் என்ன கொடுமை செய்தோம் ?'' என்று கேட்டாள்.

''ஒன்றும் கொடுமையில்லை மோகனா. சங்கீதம் தன் வேலையைக் காட்டினால், சட்டம் தன் வேலையைக் காட்டுகிறது. அதற்குச் சங்கீத ஞானம் கிடையாது பாரு ? எங்கே, உங்கள் ரசிகர்களையெல்லாம் இப்பக் காணோமே!'' என்று வீறாப்புடன் கூறினார் வைத்தி.



''ஏன் ஐயா காணோம் ? இதோ இருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே முத்துராக்கு நுழைந்தார். அவர் கண்களுக்கு முன்னே போலீஸ் இன்ஸ்பெக்டர் காலனைப் போல் தோன்றினார். தான் நடுநாயகமாக வைத்து வணங்கும் தெய்வம் இன்று இன்ஸ்பெக்டர் அருகில் நிற்பதைக் காணவே அவருக்குப் பிடிக்கவில்லை. ''ஐயா, நான் நிற்கிற இடத்திலே நீங்கள் நிற்காதீங்க. குணம் மாறிடப் போகுது. எதுக்காகக் கைது செய்யறீங்க ? அவரு என்ன குற்றம் செய்தாரு ?'' என்று கேட்டார்.

''அவர் தடையை மீறப் போகிறார். அதற்காக நாங்கள் கைது செய்கிறோம்'' என்றார் வைத்தி.

''தடை ஒன்றும் எங்களுக்குக் கொடுக்கலியே ! இப்படி உத்தரவு இருக்கு என்கிறதே எங்களுக்குத் தெரியாதே !''

''உனக்கல்ல தடை. நீ எங்கே வேணுமானாலும் வாசிக்கலாம். சண்முகசுந்தரம் நாதஸ்வரம் வாசிக்கக்கூடாது என்பதற்குத்தான் தடை'' என்றார் வைத்தி.

இதற்கு முன் இந்தச் செய்தி காட்டுத் தீ போல் ஹோட்டல் முழுவதும் பரவியது. சண்முகத்தைக் கைது செய்யப் போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று வரதன் ஓடிப் போய் வடிவாம்பாளிடம் சொன்னான்.

''ஐயோ, நான் நினைச்சது வந்துவிட்டதே. இந்தப் பாவி நேசம் மோகனாவைக் கெடுத்துவிடும்னு நினைச்சேனே ! இத்தனை பிடிவாதம் இந்த மனுஷனுக்கு உதவாதுன்னு அப்பவே சொன்னேனே ! கேட்டானா? அவன் சட்டத்தை மதிச்சானா? மகாராஜாவை மதிச்சானா? ஜனங்களைத்தான் மதிச்சானா? இல்லே, என்னைத்தான் மதிச்சானா? அட கஷ்டமே, கல்யாணத்தை வேறு வச்சுப்பிட்டோமே. சங்கீதக்காரன்னு சொன்னா, நாலு பேரை நல்லது பண்ணிக்கணும். சிரிச்சுப் பேசி அடக்கமாக நடந்துக்கிட்டா, அத்தனை பேரும் பிரியமாக இருப்பாங்க. தானே ராஜான்னு நினைச்சான். இப்ப ராஜாங்கமே வந்து பிடிச்சுக்கிட்டது. இதை ஓடி வந்து எங்கிட்டச் சொல்ல வந்திருக்கியே நீ....'' என்று வரதன் மேல் சீறி விழுந்தாள் வடிவாம்பாள்.

''அதுக்கென்னமா செய்யறது? அவர் வைத்தியைக்கூட கும்பிடணுமா ?''

''ஏன் ? கும்பிட்டுட்டா போவுது! நல்லவங்க பகை வந்தாப் பாதகமில்லே. கெடுதல் செய்ய மாட்டாங்க. கெட்டவங்க நேசங்கூடக் கெடுதல் பண்ணும். கெட்டவங்களைத்தான் முதல்லே நல்லது பண்ணிக்கணும். வைத்தி என்ன மட்டமா ? சும்மா திருவாரூர் வீதியிலே திரிஞ்ச வைத்தி, இன்னிக்குப் பாரு, வெல்வெட்டு வண்டியிலே வாராரு. அவர் வெள்ளைக் குதிரை விலை பெறுவானா இந்த ஆளு ? கெட்டிக்காரத்தனம் வேணும் வரதா ! நிமிர்ந்துதான் நிற்பேன்னா தலையிலே இடிக்கும்.''

"அட எம்மா, அங்கே போலீஸ்காரங்க ஒரு பக்கம் பிடிச்சு இழுக்கிறாங்க, நீங்க வேறு இன்னொரு பக்கம் புடிச்சு இழுக்கிறீங்க, சும்மா மத்தளத்துக்கு வார் புடிச்ச மாதிரி."

"என்னையும் கட்டிக்கிட்டு அழச் சொல்லறியா ? என் மகள் அழுகிறது போதாதா ? நான் ஒண்ணும் அங்கே வல்லே. எனக்குப் போலீஸ்காரனைக் கண்டாலே ஒரு மாதிரியா இருக்கும். ஆமாம், மோகனா எங்கே இருக்குது ?" என்று வடிவாம்பாள் பயந்தோடு கேட்டாள்.

"அது வேறெ எங்கே இருக்கும் ? அங்கேதான் இருக்குது."

"அடப்பாவி, ஏண்டா, அவளை மாத்திரம் கைது பண்ணினார்களா, இல்லே அதையும்...." என்று கேட்டுக்கொண்டே "மோகனா, மோகனா!" என்று அலறியபடி வடிவாம்பாள் சண்முகத்தின் அறைக்கு ஓடி வந்தாள். அங்கே மோகனா நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள்.

"இந்தா, இங்கே வா, உனக்கு இங்கே என்ன வேலை ?" என்றாள்.

மோகனா பதில் சொல்லவில்லை. "வா, உன்கிட்டே ஒரு சேதி சொல்லணும்" என்றாள் வடிவாம்பாள்.

"வர்றேன் அம்மா, நீங்கள் போங்க."

அதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர், "வாங்க சார். இருட்டிவிட்டது" என்றார்.

"இப்பொழுது என்னை எங்கே அழைத்துப் போகப் போகிறீர்கள்?" என்றான் சண்முகம்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கு !"

"தயவு செய்து முதலில் யாரேனும் ஒருவரை அனுப்பி, 'செட்டித்தெரு சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் இன்று வாசிக்க நான் வர இயலாது' என்பதைத் தெரிவியுங்கள். அங்கே ஏராளமான மக்கள் காத்திருப்பார்கள்."

"ஆமாம், மகாவித்வானில்லியா ? நிரவலில் இறங்குகிறார். அங்கே போய் நாங்க கூட்டத்துக்கிட்டே உங்களைக் கைது செய்துவிட்டதாகச் சொல்லணும். உடனே எல்லோரும் ஓடி வந்து இந்த வைத்தியை மரியாதை செய்யணும். அதுதானே உன் எண்ணம்..." என்றார் வைத்தி. சண்முகம் வைத்தியை ஒரு பார்வை பார்த்தான்.

"வைத்தி சார் ! இந்த சண்முகத்துக்கு இன்னும் என்ன கேவலம் ஏற்பட்டாலும் உம்மை ஒரு மனிதராக மதித்துப் பேசும் அளவுக்கு வந்துவிட மாட்டேன் நான். நான் இந்த அதிகாரியிடம் சொல்கிறேன்."

"அடேடே, அவருக்குப் புத்தி சொல்ல ஒரு இலாகாவே இருக்கு சார். வாங்கோ ! இந்த வைத்தியின் வாசிப்பு பெரிசா, உங்க வாசிப்பு பெரிசாங்கிறதை இந்த உலகமே சொல்லட்டும். ஏன், இன்ஸ்பெக்டர், ஏன் இன்னும் டிலே பண்ணறீங்க ?" என்று வைத்தி அதிகாரத்துடன்



சொல்லவே, சண்முகத்தை அழைத்துக்கொண்டு அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"அத்தான், உங்களை எங்கே கூட்டிக்கிட்டு போறாங்க ?" என்று பதறினாள் மோகனா.

"மோகனா, பதறாதே ! எப்பொழுதுமே இந்த ஜாதகத்துக்கு பத்துப் பேர் நடுவிலே இருக்கவேணும். எப்பவும் சங்கீத ரசிகர்கள் சுற்றி இருப்பார்கள். இப்பொழுது சட்டை போட்ட ரசிகர்கள் இருப்பார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்" என்று வருத்தத்தை அடக்கிக்கொண்டு சிரித்த முகத்துடன் உரைத்தான் சண்முகம்.

"ஐயோ, எல்லாக் கஷ்டமும் தீர்ந்தது, நாளை ஊருக்குப் போகலாம் என்று எண்ணினேனே ! இப்படி வந்துவிட்டதே !"

"மேகம் எப்பொழுது மழை பொழியப் போகிறது என்று நாம் சொல்ல முடியுமா ? இல்லை, இன்பமும் துன்பமும் எப்பொழுது வரும் என்றுதான் சொல்ல முடியுமா ? நான் வருகிறேன்."

"அத்தான், என்னையும் அழைத்துக்கொண்டு போகச் சொல்லுங்கள். நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்."

"என் கிட்டே அதைச் சொல்லாதே மோகனா, இந்தப் புண்ணியவான் வைத்திஜியிடம் சொல்லு. ஏதோ இன்று உன் விஷயத்தில் தயவு காட்டியிருக்கிறார். அதற்குக் காரணமும் அவருக்குத்தான் தெரியும்."

"சார், எங்களுக்கும் மனசிலே கொஞ்சம் கருணை உண்டு சார். நீங்கள் இல்லாததாலே மோகனாவுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாதுன்னு நான் உங்களுக்கு கியாரண்டி கொடுக்கிறேன், சார்."

"இந்தக் கியாரண்டி எனக்குக் கொடுக்கல்லே சார். என்னிடம் பேசுகிற மாதிரி மோகனாவுக்கும், அவளுடைய தாயாருக்கும் சொல்லுகிறீர்" என்று சண்முகம் கூறவே, இந்தச் சோக நிலையிலும் கூட அவனுடைய துடுக்கான பேச்சைக் கேட்டு வைத்தியே பிரமித்தார்.

"மோகனா, என்னை ஊதக்கூடாதென்று இதுவரையில் சட்டம் தடுக்கவில்லை. இன்றைக்கு நான் சட்டத்தை மீறி ஊதப்போவேன் என்பது செல்லாது. இதை நான் மாஜிஸ்ட்ரேட்டிடம் சொல்லிவிட்டு உடனே வந்துவிடுகிறேன். வரதா, குமாரசாமியும் நடேசனும் சுப்ரமணியஸ்வாமி கோவிலில் இருப்பார்கள். அவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச்சொல்" என்று சொல்லிவிட்டு, "ஐயா, நான் தயார்" என்று தன் கைகள் இரண்டையும் முன்னால் நீட்டினான் சண்முகம்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார். "இது என்ன?" என்றார்.

"ஆமாம், விலங்குகள் இருந்தால் மாட்டுங்கள். வீரகண்டாமணி போட்ட கைகளில் விலங்குகள் போட்டுக்கொள்வதற்கும் நான் கூசமாட்டேன். ஏனய்யா வைத்தி, சும்மா இருக்கிறீர்? என்னை

அவமானப்படுத்த வேண்டுமென்றுதானே உமக்கு எண்ணம்? விலங்குகளைப் போட்டு வீதியில் இழுத்துச் செல்லலாமே!''

''எஸ் சார். அதுவும் செய்ய வேண்டிய சமயத்திலே செய்யப்படும்.''

''அட, சீ நீ ஒரு மனுஷனா? தம்பி ஏதோ பேச்சுக்குச் சொன்னா பதிலா சொல்றே நீ? உன்னை நொறுக்கிடறேன் பாரு'' என்று புலியைப் போல உறுமினார் முத்துராக்கு. அவருக்கு வந்த கோபத்திலே வைத்தியின் தலையைப் பிடித்து, தவுலைத் தன் முழங்காலில் மோதுவது போல, மோதிவிடுவாரோ என்று தோன்றியது. வைத்தி வெலவெலத்தார்.

''சார், இன்ஸ்பெக்டர் சார், பாருங்க சார், பாருங்க சார், அந்த மனுஷன் எப்படி கோபிச்சுக்கிறான் பாருங்க சார்'' என்று சொல்லிக்கொண்டே, வெளியேறினார் வைத்தி.

''நான்தான் அப்பவே சொன்னேனே, பாரி நாயனத்தைத் தொடாதீங்கன்னு. தியாகராச சாமிக்குக் கோபம் வந்தா சும்மா விடுவாரா?'' என்றாள் வடிவாம்பாள்.

''அத்தே, தெய்வம் கோபித்தாலும் கூட இருக்கும். ஆனால் என்றைக்கு இந்த வைத்தியை உங்கள் வீட்டில் காலடி வைக்க விட்டீர்களோ, அன்றைக்கே தெய்வம் உங்கள் வீட்டை விட்டு ஓடிவிட்டது என்று நீங்கள் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். சரி, அது உங்கள் விஷயம். ஐயா, ஏன் தாமதம்?'' என்று சண்முகம் கூறினான்.

''வாங்க சார் போகலாம்'' என்று சண்முகத்தை அழைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் புறப்பட்டார்.

''அத்தான், என்னைத் தனியாக விட்டுச் செல்லாதீர்கள். நானும் வருகிறேன்! என்னையும் அங்கேயே அடைத்து வைக்கட்டும்'' என்று மோகனா அலறிய வண்ணம் அவன் பின்னே ஓடி வந்தாள்.

அவளை வடிவாம்பாள் இறுகப் பிடித்துக்கொண்டாள். ''என்ன அது? உனக்கு மூளையா கெட்டுப்போச்சு. வா, பேசாமே...!'' என்று தன் மகளை அடக்கினாள். ஆனால் மோகனா திமிறினாள்.

''அம்மா, அன்றைக்கே நான் கடலிலே விழுந்திருக்கக் கூடாதா? ஆசை இடம் கொடுக்கவில்லை. இன்றைக்கு அவரைப் போலீசில் ஒப்புவித்துவிட்டு, நான் எப்படியம்மா உயிரோடு இருப்பது?''

''அட, நீயா ஒப்பிச்சே. அது செஞ்ச பாவம், அதைப் பிடிக்குது; நீதான் அதுக்காக நாற்பதாயிரம் ரூபாயை வேண்டாமுன்னுட்டே. சீமைக்குப் போற பயணத்தையும் நிறுத்திக்கிட்டே. நாளைக்கு என்ன நடக்கும் என்கிறதைப் பத்தி அந்தப் புள்ளே யோசிச்சாத்தானே?''

இதைக் கேட்ட சண்முகம் சரேல் என்று திரும்பினான். ''அத்தே, உங்கள் அருமையான யோசனையைப் பிறகு கேட்டுக்கொள்கிறேன், நான் இல்லாத நேரத்தில், அவளைத் துன்புறுத்த வேண்டாம்!'' என்று அவளிடம் ஆத்திரத்தோடு கூறினான்.



''ஆமாம் தம்பி, எனக்குச் சொல்லிக் குடுங்க. நீங்கதானே பெத்து வளர்த்து, பெயரிட்டு இருபது வருசம் வளர்த்திருக்கீங்க? ஐயோ, இந்தப் போலீஸ்காரங்க உங்க இரண்டு பேரையும் விட்டுட்டு என்னைப் புடிச்சுக்கிட்டுப் போகப்படாதா'' என்று புலம்பினாள் வடிவாம்பாள்.

''உங்களுக்கும் வைத்தி ஏதாவது வைத்திருப்பார். மோகனா, கவலைப்படாதே. போலீஸ்காரர்களும் மனிதர்கள்தான். அவர்களிலும் சங்கீதத்தை மதிப்பவர்கள் உண்டு. எனக்கு ஒரு கெடுதலும் வராது'' என்று சொல்லி, அந்தக் கூட்டத்தில் இருக்கப் பிடிக்காமல், சரசரவென்று வெளியேறினான் சண்முகம்.

''அத்தான், அத்தான்!'' என்று அலறினாள் மோகனா. அப்படியே கதவின்மீது சாய்ந்தாள். நட்டுவனாரும், மற்றவர்களும் அவளைப் பிடித்துக்கொண்டார்கள். வெளியேயிருந்த போலீஸ் வண்டியில் சண்முகம் ஏற்றிச் செல்லப்பட்டான்.

கொழும்பில் உள்ள தமிழர்கள் எல்லோரும் சண்முகத்தின் சங்கீதத்தைக் கேட்பதற்காகவும், தமது ஊர்க் கலைஞனைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவும் சுப்பிரமணிய சுவாமி கோவில் வாசலில் பதினாயிரக்கணக்கில் கூடியிருந்தார்கள். மைனரும், நடேசனும் அந்தக் கூட்டத்தைப் பார்த்துப் பார்த்துப் பரமானந்தப்பட்டார்கள். சண்முகம் உட்கார்ந்து வாசிப்பதற்கென்று கோவில் வாசலில் ஓர் ஆள் உயரத்திற்கு ஒரு பெரிய 'பிளாட்பாரம்' போடப்பட்டு, அதன்மேல் பட்டுச் சமுக்காளம் விரிக்கப்பட்டு, ஏராளமான காந்த விளக்குகளும் பொருத்தப்பட்டிருந்தன. மக்கள் உட்காருவதற்குத் தரையெங்கும் சமுக்காளம் விரித்திருந்தார்கள். எல்லோரும் உட்கார்ந்துகொண்டு, சண்முகத்தின் வருகைக்குக் காத்திருந்தார்கள்.

இந்தச் சமயத்திலே வரதன் ஓடிவந்தான். நடேசனிடம் ஓடினான். ''அண்ணா, ஆபத்து! புள்ளையைக் கைது பண்ணி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போறாங்க'' என்று ரகசியமாகத்தான் சொன்னான். ஆனால் பக்கத்திலிருந்த கடபுடா கடம்பவனம், ''என்ன கைது பண்ணிட்டாங்களா? சண்முகத்தையா?'' என்று ஆத்திரத்தில் கேட்கவே, கூட்டத்தில் பத்துப்பேர் காதில் விழுந்துவிட்டது.

பாம்பும் பதற்றமான செய்தியும், ஒரே இனத்தைச் சேர்ந்தவை. அவை எவ்வளவு சீக்கிரம் பரவும் என்பதைச் சொல்ல முடியாது. கூட்டம் முழுவதுக்கும் இந்தச் செய்தி பரவிவிட்டது. பெரும் குழப்பம் வரும்போல் இருந்தது. ராமன் செட்டியாரும், குமாரசாமியும், ''அமைதி அமைதி'' என்று சொல்லிக்கொண்டே நின்றார்கள். ஆனால் கூட்டமோ அவர்களது பேச்சுக்குச் செவி சாய்க்கவில்லை. ''இந்த வித்துவான்களே இப்படித்தான், சொன்ன வரமாட்டாங்க'' என்றன பல குரல்கள். ''கோவில்காரன் ஏமாத்திட்டாண்டா'' என்றன பல குரல்கள்; எங்கும் ஒரே பரபரப்பும், கூச்சலுமாகவே காணப்பட்டன. அதற்குள் குமாரசாமியின்

வண்டி வந்து நின்றது. வைணரும், நடேசனும், குமாரசாமியும் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி வண்டியில் புறப்பட்டார்கள்.

ஆனால் வண்டியைச் சுற்றிலும் பெரிய கூட்டம் சூழ்ந்துகொண்டது. வண்டியைத் தொடர்ந்துகொண்டே, ஆயிரக்கணக்கானவர்கள் ஓடிவந்தார்கள். குமாரசாமி வண்டியை வேறு பாதையில் திருப்பி விட்டார். ஒரு வழியாகக் கூட்டத்தைச் சமாளித்துக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

சண்முகம் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான். குமாரசாமியைப் பார்த்தவுடனே, இரு கண்களில் கண்ணீர் ததும்பப் பின்வருமாறு கூறினான். "நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? மக்கள் அங்கே காத்திருப்பார்களே!" என்றான்.

"நான் அங்கே இருந்து என்ன செய்வது? உங்களைக் கூட்டிக்கிட்டுப் போகத்தான் வந்தேன்" என்று சொல்லிவிட்டு; "ஸர்க்கிள் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார்.

அவரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள், போலீஸ்காரர்கள். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் அறைக்குள் குமாரசாமி நுழைந்தவுடன், அவர் எழுந்து மரியாதையுடன் வரவேற்றார். "என்ன விசேஷம்? ஏது இவ்வளவு தூரம் வந்தீர்கள்?" என்றார்.

"ஒன்றும் இல்லை. ரொம்ப சாதாரண விஷயம். சண்முகசுந்தரம் என்னுடைய நண்பர். அவருக்குப் பிணை நிற்க வந்திருக்கிறேன்."

"ஐயோ! நீங்கள் பிணை நிற்பதா? உங்கள் காரியஸ்தரை அனுப்பி இருந்தால் போதாதா?" என்றார் கமிஷனர்.

"அவருடைய உண்மை மதிப்பு எனக்குத்தானே தெரியும்?"

"வாருங்கள், மாஜிஸ்ட்ரேட்டு குணவர்த்தனாவிடம் போவோம்" என்று குமாரசாமியை அழைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் புறப்பட்டார்.

ஆமாம், வைத்தியின் சூழ்ச்சி அப்பொழுதுதான் வெளியாயிற்று. அவர் இவ்வளவு முன்னேற்பாடாகக் காரியங்கள் செய்வார் என்று குமாரசாமி கனவிலும் எண்ணவில்லை. அன்று சனிக்கிழமை. பிற்பகல் கோர்ட்டு கிடையாது. ஆனால் மாஜிஸ்ட்ரேட் வீட்டுக்குப் போனவுடனேதான் அவர்களுக்கு விஷயம் முழுவதும் புரிந்தது. அன்றைய தினம் மாஜிஸ்ட்ரேட் ஊரில் இல்லை. அவர் அப்பொழுதுதான் புறப்பட்டு, கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு வந்தனை செலுத்தப் போயிருக்கிறார் என்பதை அறிந்தவுடனே, குமாரசாமி திடுக்கிட்டார்.

"இப்பொழுது என்ன செய்வது?"

"வேறு என்ன செய்ய முடியும்? இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாள். மாஜிஸ்ட் ரேட் ஊரில் இருந்தால், நீங்கள் ஜாமீன் கொடுத்து விடுவிக்கலாம். இனி எதுவும் முடியாது.



நாளை முழுவதும் அவர் வாக்கப்பில்தான் இருக்க வேண்டும்" என்று சர்க்கிள் வருத்தத்தோடு தெரிவித்தார்.

குமாரசாமியின் உள்ளம் குமுறியது. தனக்கு இத்தனை செல்வம் இருந்தும், சட்டத்தின் முன் தன் செல்வமும் செல்வாக்கும் சாம்பலாகிப் போய்விட்டதே என்று வருந்தினார். "நீங்கள் எப்போது கைது செய்ய உத்தரவு கொடுத்தீர்கள்?" என்று அவரைப் பார்த்துக் கேட்டார்.

"நான் காலையிலேயே உத்தரவு கொடுத்துவிட்டேனே"

"ஆனால் ஏன் காலையிலேயே கைது செய்யவில்லை?"

"அது மகாராஜாவின் மானேஜரைத்தான் கேட்கவேண்டும்."

காலை முதல் மாலை ஆறு மணிவரையில் சப்-இன்ஸ்பெக்டரைக் கூட்டிக்கொண்டு, ஒவ்வொரு ஹோட்டலாக அலைந்திருக்கிறார் வைத்தி. மாஜிஸ்ட்ரேட் ஊருக்குப் போகும் வரையில், கைது செய்யாதவாறு ஏற்பாடு செய்திருக்கிறார். அவருடைய நோக்கம் சண்முகம் பிள்ளை ஒரு நாளைக்காவது உள்ளே இருக்க வேண்டும் என்று இருக்கும் போலிருக்கிறது.

இதைக் கேட்ட குமாரசாமி, உள்ளம் வெதும்பினார். சண்முகத்தைப் போய்ப் பார்ப்பதற்கும் அவர் மனம் கூசியது. அப்படியே பிரமித்து நின்றார்.

இதே சமயத்தில் மோகனா இருக்கும் ஜாகையில் வேறு ஒரு கதை நடந்தது.

"எப்படி அய்யா, இப்படி செஞ்சீங்க?" என்றாள் வடிவாம்பாள்.

"இந்த வைத்தி எதைச் செய்தாலும் ஒரு பிளானோடுதான் செய்வான்."

"என்ன பிளான்?"

"இந்தச் சண்முகத்தின் விஷயத்திலே உனக்கு அக்கறை இல்லேன்னு எனக்குத் தெரியும். நீ செய்ய வேண்டிய வேலையை நானே செய்தேன். அவ்வளவுதான்."

"ஐயோ, மெள்ளப் பேசுங்க. அந்தப் பொண்ணு மயக்கமாய் படுத்துக்கிட்டு இருக்குது."

"இந்த மயக்கம்தானே உங்களை இந்தக் கதிக்குக் கொண்டு வந்து விட்டது. நீ ஒரு தாயார். உன்னுடைய பெண்ணின் லாப நஷ்டத்துக்கு நீதான் பொறுப்பு. நான் உன் முகத்துக்காகத்தான் பார்க்கிறேன். இல்லாவிட்டால்?"

"என்ன செய்வீங்க?"

"என்ன செய்வேனா? மோகனா கதிர்காமத்தில் ஆடினாளா இல்லையா? யாழ்ப்பாணத்திலே ஆடினாளா இல்லையா? சண்முகத்தைக் கைது செய்த சட்டம், மோகனாவை மாத்திரம் விட்டுவிடுமா?"

இதைக் கேட்ட வடிவாம்பாள் அடிவயிற்றில் நெருப்புப் பற்றியது.

''வைத்திய்யா, உங்களுக்குப் புண்ணியம். நீங்க அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க.''

''இல்லே வடிவாம்பாள். அன்னிக்கு நீ ஆபத்திலே உதவினே, ஒரு நூறு ரூபாய் கொடுத்தே. அதுக்குத்தான் இன்னிக்கு நான் உன்னைச் சும்மா விடறேன். இல்லாட்டி உன் பெண்ணையும் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனிலேயே உட்கார்த்தி வச்சிருப்பேன்.''

''ஐயோ, சாமி, உங்களை இரண்டு கையாலேயும் கும்பிடறேன். அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க என் உயிரே போயிடும்'' என்று வைத்தியை இரு கைகளாலும் கும்பிட்டாள்.

''நீ கும்பிட்டுப் பிரயோசனம் இல்லே. இப்பவே உன் மகளை அடுத்த கப்பலிலே சீமைக்குப் புறப்படச்சொல்.''

''ஐயா, அப்படிச் சொல்லாதீங்க. அவள் கடலிலே விழுந்திடுவாள்.''

''அவள் கடலிலே விழுந்தாப்லே காண்டிராக்டு விட்டுடுமா? காண்டிராக்ட்டுன்னா காண்டிராக்டுதானே?''

''எப்படிங்க சீமைக்குப் போறது, யாரை நம்பிப் போறது?''

''ஏன், என்னை நம்புவது. மைனர் பணத்தை வாங்கிக் கொடுக்கும் போது, என்னை நம்பவில்லையா? வைர அட்டிகையை வாங்கிக் கொடுக்கும்போது என்னை நம்பவில்லையா? அந்த நம்பிக்கை இப்ப எங்கே போச்சு?''

''பதினைந்தாம் தேதி கலியாணம் வைச்சிருக்கோமே!''

''கலியாணமா! வடிவாம்பாள், அந்தக் கனவெல்லாம் காணாதே. இந்தக் கலியாணம், சட்டம் சாஸ்திரம் இரண்டுக்கும் பொருந்தாது. அதனாலே உனக்கும் நல்லது இல்லை, ஊருக்கும் நல்லது இல்லை.''

''அம்மாவை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? என்னைக் கேளுங்கள். எனக்கு அது நல்லது'' என்று சொல்லிக்கொண்டே எதிரில் வந்து நின்றாள் மோகனா.

''இன்னும் மயக்கம் தெளியவில்லை போலிருக்கு!''

''இந்த மயக்கம் தெளியவே தெளியாது. உம்மைக் கண்டதற்காகவும் ஒடி ஒளியாது. எங்கே வந்தீர்?''

''நாளைக்குக் கப்பலில் நீ சீமைக்குப் புறப்பட வேண்டும். மகாராஜாவின் கோஷ்டியில் நீயும் இருக்க வேண்டும். இல்லையேல்....''

''உம், இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது உண்டா?''

''இனிமேல் நீ சொல்...''

''என் கையிலும் விலங்கு போட்டு இழுத்துச் செல்லலாம்.''

''கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாய், ஆறு மாதம் காண்டிராக்ட். அந்தப் பயணம் முடிந்து வந்த பிறகு நீ எது வேண்டுமானாலும் செய்துகொள்.''



''வர முடியாது!''

''உன் தலையெழுத்து நன்றாக இருந்தால், அந்த ராஜயோகத்தை உதறித் தள்ளுவாயா?''

''ஐயோ, என்ன கருணை! என்னைப் பெத்தவங்களுக்குக்கூட இவ்வளவு கருணை இல்லியே! என்னய்யா, உங்களால் என்ன செய்ய முடியும்? அவரைப் பிரிக்கக் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கலாம். ஆனால் என் மனத்தை விட்டு அவரைப் பிரிக்க முடியாது. இந்தக் கலியாணத்தை நீங்கள் தடுத்துவிட்டதாகச் சந்தோஷப்படலாம். ஆனால் எங்கள் கருத்தை நீங்கள் பிரிக்க முடியாது. ஒரு வைத்தியல்ல, ஆயிரம் வைத்தி வந்தாலும் முடியாது. எழுந்திருங்கள்! வெளியே போங்கள்'' என்று ஆவேசம் வந்தவளைப் போலப் பேசினாள் மோகனா.

''என்ன, என்னைப் பார்த்தா வெளியே போ என்று அதட்டுகிறாய்? இனி இந்த வைத்தி வந்தால், மைனரைக் கூட்டிக்கிட்டு வரமாட்டான். மகாராஜாவைக் கூட்டிக்கிட்டும் வரமாட்டான், போலீஸ் இன்ஸ்பெக்டரைத்தான் கூட்டிக்கிட்டு வருவான்!''

''மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம்! நாங்கள் என்ன திருடினோமா, பொய் சொன்னோமா?''

''மோகி, நாக்கை அடக்கிப் பேசு.''

''வரதா, இந்த ஆளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு!''

''எங்கே, என் கழுத்திலே கையை வச்சுடுவானா பார்ப்போம்.''

''வைக்கிறானா இல்லியா பாருங்கள். வரதா, வந்தது வரட்டும், காரணம் இல்லாமல் அவரைக் கைது செய்த சண்டாளன் இவன்.''

''ஏன், என்ன காரணம் இல்லை?''

''என்னய்யா காரணம்? உங்க பணத்தை வாங்கிக்கொண்டு அவர் மோசம் செய்தாரா? திருப்பள்ளி எழுச்சிக்கு ஊதுன்னு சொன்னா அவர் ஊதுனுமோ?'' என்றான் வரதன்.

''திருப்பள்ளி எழுச்சிக்கு அல்ல, பள்ளியறைக்கு ஊதச் சொன்னாலும் ஊதணும்.''

''என்ன சொன்னே?'' என்று வரதன், தனக்கு வந்த ஆத்திரத்தில், வைத்தியை ஓங்கி அறைந்துவிடுபவன் போல், வைத்தியின் அருகில் கோபாவேசத்துடன் நெருங்கினான்.

''டேய், முட்டுக்காப் பயலே, மகாராஜாவின் மானேஜர் நான்!''

''இரு, இங்கேயே இரு, உன் போலீஸ் எனக்கும் உண்டு. இந்தா தருமண்ணே, இங்கே வா. ராத்திரியிலே ஆம்புளைங்க இல்லாத நேரத்திலே, பொம்புளைங்க மட்டும் தனியாக இருக்கிற போது வந்து, இந்த ஆளு வம்பு பண்ண வந்தான்னு போலீசிலே எழுதி வை. இவனையும் புடிச்ச மாட்டிப்புடறேன்'' என்று வரதன் கூறவே, வைத்தி, அப்பொழுதுதான் தான் இங்கு வந்தது தவறு என்பதை உணர்ந்தார்.

''என்னமோ, உங்களுக்குப் புத்தி சொல்ல வந்தேன். அப்புறம் உங்க இஷ்டம்'' என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று நடந்தார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த வடிவாம்பாள், என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள். இனி ஒரு நிமிஷம் இலங்கையில் தங்கினாலும், மோகனாவைக் கைது செய்துவிடுவான் என்ற அச்சம் அவளுக்கு ஏற்பட்டது.

''சரி, போவோம், மோகனா. காலம்பற ஊருக்குப் புறப்பட வேண்டியது தான்'' என்றாள்.

''எப்படிப் புறப்படறது? நீ வேண்டுமானால் போ.''

''நான் எப்படி உன்னை விட்டுப் போவேன்?''

''நான் வர முடியாது.''

''முடியும் முடியாது என்கிறதெல்லாம் நீயாடி சொல்றது? நானல்ல சொல்லணும்? நாளைக்கு உன்னையும் கொண்டு போய் உள்ளே வைச்சாங்கன்னாக்கே?''

''இருந்துட்டுப் போறேன். இப்போ என்ன, நான் மாத்திரம் அவமானம் இல்லாமே இருக்கேனா? அவரைப் பிடிச்சா என்ன, என்னைப் பிடிச்சா என்னம்மா?''

''ஆமாண்டி, கட்டின புருசன் பாழை போவுது, காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி எறியணும். ஊம்! இதெல்லாம் எனக்குத் தெரியாது. காலம்பற புறப்படணும்.''

''நான் வரவே முடியாது.''

''உன்னைப் பெத்தவளையா எதிர்த்துப் பேசறே?''

''இல்லையம்மா, அவர் இருக்கிற இடத்தில்தான் நான் இருப்பேன். நான் இருக்கிற இடத்தில் உனக்கு இஷ்டமிருந்தால் இரு, இல்லாட்டி நீ போகலாம்.''

''ஐயோ, என் வயத்திலே பிறந்த மகளே போ என்கிறாளே! நான் எங்கே போவேன்? கடலிலே விழுவேனா? தண்டவாளத்திலே விழுவேனா?'' என்று வடிவாம்பாள் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

''வரதா, கதவைச் சாத்து. நம்ப மானம் போகுது. நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்? பெத்தவளுக்கும் பிடிக்கவில்லை, ஆசைப்பட்டவருக்கும் என்னாலே ஆபத்து. அன்றைக்கு ஒரு படுபாவி, அவர் உயிரை வாங்க வந்தான். அவன் தொலைஞ்சான்னு நினைச்சேன். இன்றைக்கு ஒரு படுபாவி மானத்தை வாங்க வந்துட்டான். நாளைக்கு அவர் விடுதலையாகி வந்தாலும், அவர் முகத்தில் நான் எப்படி முழிப்பது? நான் மகாராஜாவின் கூடப் போகவில்லை அப்படிங்கிற எண்ணம்தானே, அவருக்கு ஆபத்தை உண்டாக்கியிருக்குது. ஐயா, தெய்வமே தியாகராசா, உன் கோவில் வாசலிலே விழுந்து விழுந்து வணங்கினேனே, எல்லா க்ஷேத்திரங்களுக்கும் போய் ஆடினேனே, எனக்கு இதுதானா கதி?'' என்று மோகனா அலறினாள்.



அப்பொழுது சிற்றம்பலம் குமாரசாமி உள்ளே நுழைந்தார். அவருக்கு மோகனாவின் முகத்தைப் பார்க்கவே கூசியது. தலை குனிந்து கொண்டே நின்றார்.

''ஐயா, எங்க அத்தானைக் கூட்டிக்கிட்டு வந்தீங்களா?'' என்று கேட்டுக்கொண்டே, மோகனா அவர் அருகில் ஓடினாள்.

குமாரசாமி தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தார். ''ஐயோ, என்னவாச்சு? அவரை விடுதலை செய்யவில்லையா?'' என்று அலறினாள் மோகனா.

''அம்மா, பதறாதீர்கள். அவருக்கு ஒரு ஆபத்துமில்லை. நாளை நின்றுதான் விடுதலை செய்வார்கள்'' என்று சொல்வதற்குள் குமாரசாமி துடிப்பதைக் கண்டாள் மோகனா.

''ஐயா, நீங்கதான் துணை எனக்கு. அவரைக் காப்பாற்றணும்'' என்று சொல்லிக்கொண்டே, அவர் காலில் விழுந்தாள் மோகனா.

''அம்மா, என்ன இது? இப்பொழுது என்னவாகிவிட்டது? நாளைக்கு விடுமுறை. நாளைக்கு மறுதினம் அவரை விடுதலை செய்துவிட்டு நான் சாப்பிடுகிறேன்'' என்று உறுதியாகக் கூறினார் குமாரசாமி.

மோகனா எழுந்தாள். ''ஐயா, அவரைப் போலீஸ் ஸ்டேஷனிலே அடிப்பார்களா? ஐயோ, அவர் வெல்வெட்டு மெத்தையிலே படுத்திருப்பாரய்யா? கொஞ்சம் காற்று இல்லையென்றாலும் அவருக்கு ஆகாது. கொடுமை பண்ணுவாங்களா?''

''அம்மா, அவர் மேல் இன்னும் குற்றம் ருசுவாகவில்லை. கோர்ட்டார் பார்த்து, குற்றவாளி என்று சொன்னால்தான் தண்டனையுண்டு. இப்பொழுது அவர் காவலில்தான் வைக்கப் பட்டிருக்கிறார்.''

''ஆமாம், இன்னிக்கு ராத்திரி சாப்பாடு?''

''நாமே சாப்பாடு அனுப்பலாம்.''

''வரதா, ஹோட்டலிலிருந்து அவருக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டுவா. ஐயா, வாங்க போவோம்'' என்றாள் மோகனா.

இதுவரையில் திகைத்துப் போய் மலைத்து நின்ற வடிவாம்பாள், ''என் உசிரு போனாலும் சரிதான், நான் உன்னை அங்கே போகவிட மாட்டேன். உன்னைப் பிடிச்சு அங்கேயே வச்சுடுவாங்க'' என்று ஓடி வந்து மகளைத் தடுத்தாள்.

''பிடிச்சா பிடிக்கட்டுமேயம்மா. நானும் அவரும் சேர்ந்து, காலமெல்லாம் வாழலாமென்று எண்ணினேன். இன்றைக்கு ஒரு நாள் சேர்ந்திருக்கக் கூடாதா? அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்? நான் மாத்திரம் உயிரோடு இருப்பேனா அம்மா?''

''மோகனா, அப்படியெல்லாம் சொல்லாதேடி. உன்னைப் பெத்த வயிறு என்னவோ செய்யுதே!''

''என்னைத் தடுக்காதே அம்மா. உன்னைக் கும்பிடறேன். அங்கே போய் அவரைப் பார்க்காவிட்டால், என் உயிர் நிலைக்காது. அம்மா, என் நெஞ்சைத் தொட்டுப் பார். எனக்குத் தலை சுற்றுகிறது. காது, அடைக்கிறது. கண் மங்குகிறது. உடம்பெல்லாம் நடுங்குகிறதம்மா. எனக்கு விடை கொடு அம்மா, விடை கொடு!'' என்று புறப்பட்டாள் மோகனா.

''நானும் வரேன் அம்மா, போவோம்'' என்றாள் வடிவாம்பாள்.

**ஒன்பதாம் அத்தியாயம்**

## வாழ்வை வென்றது காதல்



இப்பொழுதுதான் செடியை நட்டிருக்கிறது. வேர் வேகமாகப் பரவுகின்றதா, அல்லது வெயில் செடியைக் கொன்றுவிடுகிறதா என்பது மனிதனின் போராட்டம். ஆனால், ஆபத்துகளைத் தாண்டி செடிகள் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றன; மலர்களும் மலர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அதுதான் உலகம்.

மோகனாவின் காதல் முளைத்து வேரூன்றுவதற்குள் அதற்கு எத்தனையோ ஆபத்துகள் வந்துவிட்டன. மோகனாவும் சண்முகமும் இந்த ஆபத்துகளையெல்லாம் தடுத்திருக்கலாம். ஆனால் வாழ்வு என்பது அவர்களுக்கு லட்சியம் உடையதாகிவிட்டதே!

கையிலே இரண்டு வாழை இலைகள், பொரித்த அப்பளம் இரண்டு, டிபன் செட்டிலே சாப்பாடு, இவ்வளவையும் எடுத்துக்கொண்டு வரதன் மோகனாவின் அறைக்குள் நுழைந்தான்.

''என்ன தங்கச்சி, புறப்படலாமா?''என்றான். அவன் கையில் இருக்கும் சாப்பாட்டைப் பார்த்தவுடனே அதுவரை தன்னை அடக்கிக் கொண்டிருந்த மோகனா, அழுதாள்.

''ஏன் தங்கச்சி?''

''அவருக்கு என் கையாலே அங்கே கொண்டுபோய்ச் சாப்பாடு போடவேண்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே குலுங்கக் குலுங்கக் குமுறினாள்.

கணவன் கழனியில் வேலை செய்கிறார். அப்பளம் இல்லை, வாழை இலையும் இல்லை. தலையில் சும்மாடு. அதில் ஒரு கலயத்தில் கஞ்சி. அந்த அமிர்த கலசத்திற்குச் சிந்தூரப் பொட்டு வைத்தது போல அந்தக்



கலயத்தின்மேல் ஒரு பொட்டுத்துவையல். இதைத் தலையிலே வைத்துக் கொண்டு, ஆடிப்பாடிச் செல்கிறாள் அவர் மனைவி. அந்த ஆனந்தத்திற்கு இணை கிடையாது. குழந்தை பள்ளிக்கூடம் போகிறது. பழைய சோற்றைப் பிசைந்து, கட்டமுது கட்டிக் கொடுக்கிறாள் தாய். ஒரு மிளகாயை வறுத்து அதில் வைக்கிறாள். இதைக் கட்டி, குழந்தையிடம் கொடுக்கும்போது, அந்தத் தாயின் ஆனந்தத்தில் அந்தப் பழைய அமுதே பால் அன்னமாகிறது.

ஆம்! உறவும், உணவும்தான் உலகம். அந்த உலகத்திலே இன்று ஒரு ஜீவன் மட்டும் கதறுகின்றது. அப்பளம், பாயசத்துடன் கூடிய அறுசுவை அன்னமும் அதற்கு ஆனந்தம் உண்டாக்கவில்லை. தனது அன்பன் கைதியாக இருக்கிறான்; அவனுக்குக் கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு போகிறோம் என்பதை நினைத்தவுடனே மோகனா குலுங்கக் குலுங்க அழுதாள்.

''ஐயோ, அன்றைக்கு என் கையால் தோட்டத்துக் கத்தரிப்பிஞ்சைப் பறித்து, நல்ல பொரித்த குழம்பு வைத்து, புழுங்கல் அரிசிக் கஞ்சியும் வைத்து, வெள்ளிக் கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு கிளம்பினேனே! இந்த அம்மா தடுத்தாளே! என் கையால் சமைத்துச் சாதம் போட அன்றே எனக்குக் கொடுத்துவைக்கவில்லை. அன்றைக்குப் பிரிந்தார். இன்றுவரை பிரிந்தே இருக்கிறோம். இத்தனை நாள் இலங்கையில் ஒன்றாக இருந்தும் ஒருநாள் கூட என் கையால் ஒரு குவளைத் தண்ணீராவது கொடுத்தேனா? ஒரு வேளைச் சமையல் செய்து போட்டேனா? இன்றைக்கு அவரை எப்படிப் போலீஸ் ஸ்டேஷனில் போய்ப் பார்ப்பேன்?'' என்று குமுறினாள்.

அவளுக்குச் சிவில், கிரிமினல் என்ன தெரியும்? எதை எதையோ நினைத்தாள்...! 'என் கணவன் திருடனா? நான் திருடன் பெண்டாட்டியா? கைவிலங்கிட்டு அவர் போலீசில் அடைபட்டுக் கிடக்கிறபோது, நான் கம்பிக்கு முன்னே நின்று அவர் சாப்பிடுவதைப் பார்க்க வேண்டுமா? அதை நான் எப்படிப் பார்ப்பேன்...? கையிலே ஈட்டியை வைத்த சிப்பாய்கள் நிற்பார்களே! 'யாரடி நீ?' என்று கேட்பார்களே! 'அவர் மனைவி' என்று நான் சொல்ல முடியுமா? நான் மனைவியாகத்தான் ஆகிவிட்டேனா? ...மணம் செய்துகொள்ள நினைத்ததற்கே இத்தனை இடைஞ்சல், மணமும் செய்துகொண்டுவிட்டால், என்னவாகுமோ?

கடவுளே! எத்தனை கைதிகளுக்கு நடுவில் அவர் இருக்கிறாரோ? பக்கத்தில் ஓர் அறையில் ஒரு திருடனை அடைத்திருப்பார்கள். இன்னொரு பக்கத்திலே ஒரு கொலைகாரனை அடைத்திருப்பார்கள். கொலைகாரனுக்கும் திருடனுக்கும் நடுவிலே என் ராஜா எப்படித்தான் இருப்பாரோ? அன்று வாசிப்பின் நடுவில் ஒரு அதிர்வேட்டுப் போட்டான் என்பதற்காகக் கோபித்துக்கொண்டாரே! அம்மா என்னவோ சொல்லிவிட்டாள் என்பதற்காக, முகத்தைத் தூக்கிக்கொண்டாரே!

மானமே பெரிதென்று மைனர் பணத்தை உதறித் தள்ளினாரே ! மகாராஜாவைக்கூட மதிக்காத அவருக்கு இந்தக் கதியா வரவேண்டும்? ஐயோ! என்னுடைய உடல் குன்றுகின்றதே. நெஞ்சை அடைக்கின்றதே. என் உயிர் போய்விடக் கூடாதா? நான் ஒருத்தி போய்விட்டால் அவருடைய கஷ்டங்கள் எல்லாம் விலகிவிடுமே! இந்தப் பாழும் மதன்பூர் மகாராஜா எனக்காகத்தானே, அவரைத் துன்புறுத்துகிறார்? என்னால் அம்மாவுக்கும் கஷ்டம்; அவருக்கும் கஷ்டம்! எனக்கும்தான் சுகம் உண்டா? நானும்தான் கஷ்டப்படுகிறேன். சீ, இது என்ன வாழ்க்கை!'' என்று எண்ணிக்கொண்டே இதயம் புழுங்கி நின்றாள் மோகனா. அவள் கண்களில், கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கி வழிந்தது. இதைக் கவனித்தாள் வடிவாம்பாள்.

''என்ன கண்ணு, நீ போக வேண்டாமே! வரதன் கொண்டுபோய்க் கொடுத்துட்டு வரட்டுமே?'' என்றாள்

அப்பொழுது மோகனாவின் துயரம் மேலும் பொங்கியது. ''அம்மா, நாளை எப்படி இருக்குமோ? அவர் வீட்டுக்கு வருவாரோ, மாட்டாரோ? இன்றைக்கு ஒருநாள் என்னைத் தடுக்காதே அம்மா. என் கையால் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அம்மாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே அழுதாள் அந்த அருமை மகள்.

பெற்றவள் அவளை இறுகக் கட்டிக்கொண்டாள். ''சும்மா கவலைப்படாதே கண்ணு. தியாகராசர் உனக்கு ஒரு கெடுதலும் செய்யமாட்டார். தாயே, எல்லையம்மா, உன் வாசலிலே பால் பொங்கல் வைக்கிறேன்; என் மகள் கண்ணைத் துடை அம்மா!'' என்று சொல்லி வடிவாம்பாள் வாழ்த் தவித்தாள். தன் மகளின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

வரதன் சாதத்தை எடுத்துக்கொண்டான். வாசலுக்கு வந்ததும் மோகனா கையை நீட்டினாள். பதில் பேசாமல் வரதன் அவள் கையிலே டிபன்செட்டைக் கொடுத்தான். வாசலில் வண்டி நிற்பதைக்கூடக் கவனிக் காமல் மூவரும் நடந்தார்கள். இந்தக் கஷ்டத்தைக் காணச் சகியாத குமார சாமி, ''அம்மா, வண்டியிலே போயிடலாமே?'' என்று சொன்னார்.

எல்லோரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். ஆனால் குமாரசாமியோ, ''நீ போ'' என்று வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டார். வண்டி நகர்ந்தது. வண்டியைப் பார்த்துக்கொண்டே தன் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் அந்தக் கோமஸ்வரர்.

✤ ✤ ✤

தாமரை பூத்த குளத்திலே, அன்னங்கள் துள்ளி விளையாடும், கிள்ளைகள் மலர்கள்மேல் அமர்ந்து ஊசலாடும். குளம் வறண்டவுடனே, அந்த அன்னமும், கிளிகளும் சொல்லாமல் பறந்துவிடும். ஆனால், நீரை விட்டு நீங்கிப் பிரியாத, அல்லியும் தாமரையும் ஆயுளை முடித்துக் கொள்ளும். நட்பின் இலக்கணமே அதுதான். ஆபத்து வருங்காலத்தில்



உதவுபவர்கள் ஒரு சாரார். ஆபத்து வந்தவுடனே ஓடுபவர்கள் ஒரு சாரார். இதற்கு உதாரணமாக, ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளை விளங்கினார். போலீஸ் ஸ்டேஷன் வாசலிலே அவர் மாப்பிள்ளையுடன் அந்தரங்கமாய்ப் பின்வருமாறு கூறினார்:

''மாப்பிள்ளை, உங்க தாத்துக்கு இந்தப் போலீஸ் ஸ்டேஷனிலே நிற்கிறது நல்லாயில்லே!''

''என்ன மாமா, என்ன குறைவு?''

''ஒரு தீபாவளி பொங்கல்னா நம்ப வீட்டிலே நாலு போலீஸ்காரர்கள் வந்து நின்னுக்கிட்டு இருப்பாங்க. அப்படியுள்ள ஒரு எஸ்டேட்டு நம்ம எஸ்டேட்டு! நீ இங்கே காத்துக்கிட்டு இருக்கிறது நம்ப எஸ்டேட்டு மதிப்புக்கு குறைச்சல்.''

''நான் குற்றவாளியில்லே மாமா. ஒருவருக்கு உதவி செய்யத்தானே வந்திருக்கிறேன்?''

''என்ன உதவி? அந்த ஆளு இப்ப ஒரு கைதி. நமக்கு கவர்ன்மெண்டாலே எப்பவும் நாலு காரியமாகணும், இதிலேயெல்லாம் நீ சம்பந்தப்படறது எனக்குப் பிடிக்கலே.''

''அவரை விடுதலை செய்ய வேண்டாமா மாமா?''

''நம்மைக் கேட்டா எதுத்துக்கிட்டான்? இது என்ன மாப்பிள்ளை; அப்பால் குடித்தவன் எல்லாம் அபராதம் கட்ட முடியுமா?''

''இது நல்லாயில்லே மாமா!''

''நாளைக்கு ஊரிலே சொல்லமாட்டாங்களா, 'சிங்கபுரம் மைனர் சிலோன்லே போய், போலீஸ் ஸ்டேஷனிலே கையைக் கட்டிக்கிட்டு நின்னாரு'ன்னு?''

''சொன்னா சொல்லட்டுமே!''

''ஹெல்ப்புக்குக்கூட ஓர் அளவு உண்டு மாப்பிள்ளே. தென்னமரத்திலே ஏறுகிறவனை எட்டின மட்டும்தான் தாங்கலாம். இவன் கவர்மெண்டு தலையிலேயே ஏறினா நாம தாங்க முடியுமா? உனக்கு ஒரு 'சர்' பட்டம் கிடைக்கணும்னு நான் பார்க்கிறேன். நீ சர்க்கார் ரிக்கார்டுலே பேரைக் கெடுக்கணும்கிறே...'' என்று மாப்பிள்ளையின் கையைப் பிடித்து இழுத்தார் மாமனார்.

இதே சமயத்தில் ஊர் முழுவதும் தேடி அலைந்து, வக்கீல் குமாரசுவாமி ஐயரைக் கூட்டிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார், உண்மை நண்பர் நடேசன். ராமசாமி ஐயர் உள்ளே நுழைந்தார். அவருக்குச் சண்முகத்தைப் பார்க்கவே மனம் கூசியது. 'தம் வீட்டுக் கச்சேரியில் வாசித்த மகாவித்துவான், இன்று போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்து இருப்பதற்கு நாம்தானே காரணம்' என்ற எண்ணம்கூட உண்டாயிற்று. ஆனால், சம்பந்தம் வேறு, சட்டம் வேறு என்ற ஆத்மீகஞானம் உடையவராதலால், அவர் சமாளித்துக்கொண்டார்.

"என்ன புள்ளே, ஏன் இப்படி இதையெல்லாம் முந்தவிட்டீங்க?"

"வியாதிக்கு மருந்து கொடுக்கலாம், விதிக்கு முடியுமா? ஆமா, நீங்க ஏது இப்படி. இந்த வித்துவானைப் பார்க்க வந்தாப்பிலே இருக்குது" என்றான் சண்முகம்.

"இல்லே, நடேச பிள்ளை வந்து கூப்பிட்டார்."

"ஏன் உங்களுக்கு இதெல்லாம் தெரியாதுன்னுட்டா?"

"சண்முகம் பிள்ளை, நீங்க பேசுகிறதைப் பார்த்தால், எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. நான் என்ன செய்ய முடியும்? மகாராஜா நெடுநாளாக எங்க கட்சிக்காரர், நீங்களோ நண்பர். இப்படி தர்மசங்கடத்திலே அகப்பட்டுக்கொண்டு நாங்க முழிக்கிறோம்."

"இந்தச் சண்முகசுந்தரம் சங்கடப்படறது போதாதா? தர்மமுமா சங்கடப்படவேணும்? சரி. இப்போ எதற்காக என்னை அரஸ்டு பண்ணியிருக்காங்க?"

"என்ன இப்படிக் கேட்கிறேள்? உங்களுக்குத் தடை நோட்டீஸ் கிடைக்கல்லே?"

"என்னிடம் யாரும் கொடுக்கவில்லையே!"

"அதை எப்படி சார் உங்ககிட்டே கொடுக்க முடியும்? கோர்ட்டுமா கூடவே கதிர்காமத்துக்கு வரும்? யாழ்ப்பாணத்திலே உங்க ஜாகையிலே ஒட்டிவிட்டு வந்திருக்கிறார் வைத்தி!"

"வைத்தியா? அப்படியானால் அது உண்மையாகத்தான் இருக்கும். கல்யாணப் பந்தல் போட்டவர்கள் கிழித்தும் இருக்கலாம்."

"அது எல்லாம் என்னத்துக்கு சார் வம்பு? உங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தாச்சு. நீங்க இதற்குப் பிறகு கதிர்காமத்திலே ஊதியிருக்கிறேள். யாழ்ப்பாணத்திலே வாசிச்சு இருக்கிறேள். கொழும்பிலே வாசிக்கப் போயிருக்கிறேள்! சட்டத்துக்கு தாட்சண்யம் கிடையாது பாருங்கோ. என்ன செய்வது? எங்கள் வக்கீல் ஐயர்வாள்கூட ரொம்ப சொல்லி அனுப்பிச்சார்."

"என்ன சொன்னாங்க? சண்முகத்தை ஒரு நாளையாவது உள்ளே வச்சுப் பார்த்துட்டு வான்னா?"

"சே, சே, எனக்கும் அது எண்ணம் இல்லே. எங்க வக்கீலுக்கும் அது எண்ணமில்லை."

"நான் ஒன்னு சொல்லறேன். அந்தப்படி செய்யுங்கோ, கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டு முடியாதுன்னு சொன்னா சட்டம் விடாது...."

"ஆறு மாசம் பல்லைக் கடித்துக்கொண்டு மகாராஜாவோட போயிட்டு வந்திடுங்கோ!"

சண்முகம் சிரித்தான்: "குமாஸ்தாவாள், இப்போது நான் சிறையில் இல்லை. ஸ்டேஷனிலேதான் இருக்கிறேன். இதுவே பிடிக்காமல்



உங்களை அழைத்து வந்திருக்கிறார் நடேசன். நீங்களோ என்னை ஜன்மம் முழுவதும் சிறையில் இருக்கச் சொல்கிறீர்கள். இதைக் கேட்டால் நடேசண்ணன் உசிரையே விட்டுவிடுவார்!"

"சார் யோசனை பண்ணிப் பேசுங்க. நீங்க ஒரு மகாராஜாவை எதிர்க்கிறேன் என்பது ஞாபகம் இருக்கணும்."

"ஏன்? எதிர்த்தால் என்ன செய்வார்?"

"பணம் சார், பணம்! அது பாதாளம் மட்டும் பாயும். முந்தியெல்லாம் ராஜாக்களுக்குச் சண்டைகள் இருந்தன; யுத்தகளத்துக்குப் போக வேண்டியிருந்தது. இப்போ இந்த ராஜாவுக்கு அது எல்லாம் கிடையாது. வரிப்பணத்தை மிச்சமில்லாமல் செலவழிக்க வேண்டியது ஒன்றுதான் அவர் கடமை. அவரை எதிர்த்துக்கொண்டால் ஒரு நாள்கூட நிம்மதியாக வாழ முடியாது. அவரோடு சமாதானமாகப் போகிறதுதான் நல்லது."

"எனக்கு மானம்தான் பெரிது, சமாதானம் அல்ல!"

"என்ன சார், அவமானம் வந்துட்டுது இதிலே? அவன் பணம் கொடுக்கப் போறான், நீங்க வாசிக்கப் போறேள். ஆறு மாசத்திலே தொலையற சனியனை, ஆயுள் முழுவதும் கட்டி அழறேன்னு சொல்றேளே சார்? நாளைக்கு உங்க மேலே சூட்டுப் போட்டால், அதற்கு எவ்வளவு செலவழிக்கணும் தெரியுமா? நீங்க, கச்சேரிக்குப் போவீங்களா, கச்சேரியிலே வந்து நிற்பீங்களா? சங்கீதத்தைப் பார்ப்பீங்களா, சட்டத்தைப் பார்ப்பீங்களா? நீங்க ஒத்துக்கிறதுதான் நல்லது."

"சிறையிலே கிடந்தாலும் கிடப்பேன். என் சிரம் இன்னொருவனுக்கு வணங்காது."

"உங்க மேலே அவருக்கு ரொம்ப கோபமிருக்கு. மோகனாவாலே, தனக்குப் பெரிய கௌரவம் வரும்னு நினைச்சார் மகாராஜா. அதை நீங்கள் கெடுத்துவிட்டதாக எண்ணம்."

"அது இல்லே சார். உயர்ந்த நாட்டியக்காரி தன் அந்தப்புரத்தில் இருக்கிறாள் என்று சொல்லிக்கொள்வதில் அவருக்கு ஆசை. அதனால் தான் என் மீது அவருக்குக் கோபம். என் வாழ்நாள் முழுவதும், என்னைச் சிறையிலே வைத்தாலும் சரி. மோகனா அங்கே இருக்க நான் அனுமதிக்க மாட்டேன். அவன் குடித்துவிட்டு அவள் கையைப் பிடிக்க வந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியாது!...."

"அத்தான்! எனக்காக நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். வக்கீல் குமாஸ்தா ஐயா, மகாராஜாவுக்கு இப்பவே ஒரு தந்தி கொடுங்கள். நான் சீமைக்கு வரச் சம்மதித்துவிட்டேன். இப்பவே அவங்களை விடுதலை செய்யுங்க" என்று சொல்லிக்கொண்டே, எதிரில் வந்து நின்றாள் ஏந்திழை மோகனா.

அவளுடைய வார்த்தையைக் கேட்டவுடனே, எல்லோரும் திகைத்தார்கள். "மோகனா, என்ன இது?" என்றான் சண்முகம்.

''அதனால், உங்களுக்குத் தெரியாது. நான் சிறைக்குப் போகிறேன். அவர்கள் நடுத்தெருவில் ஆடச் சொன்னாலும் ஆடுகிறேன். ஆனால் என்னை அவர்களால் அவமானம் எதுவும் செய்துவிட முடியாது. பெண்ணுக்குப் பேதைமையும் உண்டு, பிடிவாதமும் உண்டு!''

காதல் என்பது நல் சுக வாழ்வு அல்ல. காதலன் வாழத் தன்னைத் தியாகம் செய்துகொள்வதுதான். காதல் என்பதற்குச் சான்றாக வந்து நிற்கும் அந்தக் குல மகளைப் பார்த்து அங்கு பிரமித்தது ஆண் உலகம்.

''இப்பொழுதே வைத்தியைப் பார்த்து, சண்முகத்தின் விடுதலைக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று எழுந்தார் வக்கீல் குமாஸ்தா.

''மோகனா'' என்று அதட்டினான் சண்முகம்.

அப்பொழுது ''மிஸ்டர் சண்முகம் பிள்ளை, உங்களை ஜாமீனில் விட்டிருக்கிறோம். சிற்றம்பலம் குமாரசாமி எனக்கு உறுதிமொழி அளித்திருக்கிறார். நீங்கள் போய் வரலாம். உங்களுக்கு ஏற்பட்ட தொந்தரவுக்கு மன்னியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே சண்முகத்தின் கையைப் பிடித்துக் குலுக்கினார் போலீஸ் கமிஷனர்.

''ஐயா, என் உயிரை நீங்கள்தாம் காப்பாற்றினீர்கள்'' என்று குமாரசாமியைக் கும்பிட்டாள் மோகனா.

ஆனால் குமாரசாமியோ, ''மோகனாம்பிகே! என்னுடைய அழைப்பின் பேரில் வந்த உங்களுக்கு இலங்கையில் இத்தனை ஆபத்துகள் ஏற்பட்டதற்கு நான் வருந்துகிறேன். காலையில் புறப்பட்டுச் செல்லுங்கள். கல்யாணத்திற்கு நானும் வருகிறேன். இலங்கையில் இந்த வைத்தியநாதர் செய்த சூழ்ச்சிகளுக்குச் சட்டம் பார்த்துக்கொள்ளும்'' என்றார் கோடீசுவரர் குமாரசாமி.

பத்தாம் அத்தியாயம்

## குழந்தைப் பிள்ளையின் குறுக்குக் கேள்விகள்



எத்தனை மன்னர்களோதான் கோட்டை கட்டினார்கள். அந்தக் கோட்டைகள் எல்லாம் இப்பொழுது இல்லை. ஆனால் அவர்கள் கட்டிய கோவில்கள் மட்டும் பன்மடங்கு பெரிதாகி இன்றைக்கும் இருக்கின்றன. மதுரையிலே பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள். அவர்கள் அரண்மனையைக் காணோம். ஆனால் அந்தப் பாண்டியன் சொற்ற மீனாட்சி மட்டும் அன்றும் இன்றும் என்றும் அங்கு



கொலு வீற்றிருக்கிறாள். ஆம், அரசர்கள் நிற்பதில்லை. அறம் என்றும் நிற்கும். அறத்தின் முடிவான அருள் நிற்கும் என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது அக்கோவில். இதைப் போலவே நீதி நிலைக்கும் என்பதை எடுத்துக் காட்டி நிற்பது திருமலைநாயக்கர் மஹால்.

அன்றைய தினம் பல இளைஞர்களின் பாட்டிகளுக்குத் திதி. இன்னும் பல இளைஞர்களுக்கோ வீடுகளில் மாப்பிள்ளை பார்க்க வந்திருந்தார்கள். இன்னும் பலரோ திருப்பரங்குன்றம் செல்வதாக லீவு போட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் திருமலை நாயக்கர் மகாலில் வந்து கூடியிருப்பதைக் கண்டார்கள், அவர்களின் உபாத்தியாயர்களும் முதலாளிகளும். ஆம், ஜில்ஜில் ரமாமணியின் வழக்கென்றால் கூட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? இக்காலத்தில் இருப்பது போல் அக்காலத்தில் ஒலி பெருக்கி வசதிகள் இல்லாததால் அத்தனை பேரும் நீதி மன்றத்தின் உள்ளே வந்து கூட்டம் போட்டுவிட்டார்கள். ஆனால் வில்லைச் சேவகர்கள் 'உஸ் உஸ்' என்று சொல்லிக்கொண்டு வராந்தாவில் வந்ததுமே கூட்டத்தில் இருந்த சத்தம் அடங்கியது. நீதிக்கு மதிப்புக் கொடுத்துப் பழகிய மக்கள் ஆதலால் நிற்பது தெரியாமல் நின்றார்கள்.

கோர்ட்டார் முன் ஆஜர் செய்யப்பட்டிருந்தான் நாகலிங்கம். இன்னொரு புறத்திலே, சொக்கன், கருப்பன் முதலியவர்கள் கைதிக் கூண்டிலே நின்றுகொண்டிருந்தார்கள்.

நாகலிங்கத்தின் வக்கீல் பெயர் குழந்தை. அவர் குழந்தை மாதிரி கேள்வி கேட்பார். பதில்களில் இருந்து பழம் பிழிந்தது போல் கேசைப் பிழிந்துவிடுவார். தன் எதிரியின் வண்டவாளங்களை வாங்குவதில் அவர் ஒரு புலி. அவர் ரமாமணியை என்னென்ன கேள்விகள் கேட்கப் போகிறார், அவள் எப்படி எப்படிப் பதில் சொல்லப் போகிறாள், இதில் யார் யாருடைய ரகசியங்கள் வெளியாகும் என்பதைக் கேட்கவே பலர் அங்கு வந்திருந்தார்கள்.

ஜில்ஜில் ரமாமணி கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டாள். கூட்டம் முழுவதும் வராந்தாவின் பக்கம் திரும்பியது. ஒருவர் தோள் மேல் ஒருவர் ஏற ஆரம்பித்தனர். கூட்டத்தில் கூச்சல் எழுந்தது. உடனே வில்லைச் சேவகன் 'உஸ் உஸ்' என்று அதட்டவே கூச்சல் நின்றது. ஆயினும், எல்லோருடைய கண்களும் ரமாமணியின் மேல்தான் நின்றன. ஆனால் அத்தனை பேர்களும் ஏமாந்தனர். ஜில்ஜில் ரமாமணி கல்கல் என்று நடந்து வரவில்லை. சாதாரணமாகவே ஒரு கரை போட்ட வெள்ளைப் புடைவையுடன் சிறிதும் ஆடம்பரம் இல்லாமல் தலை குனிந்த வண்ணம் வந்தாள். 'ரங்கூன் வைரம் ரமாமணி இவள்தானா' என எல்லோருக்கும் சந்தேகம் ஏற்பட்டது.

ஸ்ரீமான் குழந்தை ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டுக் கேள்வியில் இறங்கினார். அவர் கேட்ட கேள்விகளில் கேசுக்குச் சம்பந்தம் என்றவைகளை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

''உங்கள் பெயர்?''

''ரமாமணி.''

''வெறும் ரமாமணிதானா? பட்டம் ஏதாவது உண்டா?''

''உண்டுங்க, கள்ளபார்ட் ஜில்ஜில் ரமாமணி பாய்.''

''இந்தப் பட்டத்தை உங்களுக்கு யார் கொடுத்தது என்பதைச் சொல்ல முடியுமா?''

ரமாமணி சிறிது நேரம் யோசித்தாள்.

''ஏன் தாமதிக்கிறீர்கள்? அதில் ஏதாவது இரகசியம் உண்டா?''

''இரகசியம் எதுவும் இல்லைங்க. பட்டம் யார் கொடுத்தாங்க என்பது ஞாபகம் இல்லிங்க.''

''நான் நீங்களே கொடுத்துக்கொண்டதாகச் சொல்லுகிறேன்!''

''சொல்லுங்க.''

கூட்டத்தில் சிரிப்பு உண்டாயிற்று. இதைப் பார்த்ததும் குழந்தைக்குக் கோபம் வந்தது.

''ஆமாம், உங்கள் பட்டத்திலே 'ஜில்ஜில்' என்று ஒரு வார்த்தை இருக்கிறதே அதற்கு என்ன அர்த்தம்?''

''நான் பாடினா பச்சைத் தண்ணிமாதிரி ஜில்லுன்னு இருக்குங்க. கேக்கற காது குளிரும்........''

''ஏன், பச்சை பச்சையாகப் பாடுவீர்களோ?''

இந்தச் சமயத்தில் கோர்ட்டார் குறுக்கிடவே இதில் தனக்கு ஒரு 'பாயிண்ட்' இருக்கிறது என்று வக்கீல் குழந்தை கூறினார். ரமாமணியோ ஸ்பெஷல் நாடகத்தில் நடித்து, பல ராஜ பார்ட்டுகளின் கேள்விகளுக்குச் சட்சுடப் பதில் சொன்னவளானதால் வக்கீலின் கேள்விகளுக்கும் அதே முறையில் பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''ஆமாங்க, பச்சைத் தமிழிலே பாடுவேன். ஒரு பாட்டுப் பாடட்டுங்களா?'' என்றாள் ரமாமணி.

கூட்டத்தில் சிரிப்புத் தாங்க முடியவில்லை. ஸ்ரீமான் குழந்தை கோபத்துடன் ஜனங்கள் பக்கம் திரும்பினார். பாவம், அவர் முகத்தைப் பார்த்தவுடன் ஜனங்கள் மேலும் சிரித்தார்கள்.

''ஆமாம், உனக்குக் கருப்பாயி என்பவளைத் தெரியுமா?''

''தெரியுங்க. வள்ளி, சதாரம், லக்பெஷ்வா, புல்புல், கோகிலங்கி என்கிற பேர்களோடே கருப்பாயிங்கற பேரும் என் பேர்தான்!''

''உன் பெயர் கருப்பாயி, அப்படியிருக்க நீ ஜில்ஜில் ரமாமணி என்ற பெயரில் பொய்யாக வாழ்ந்திருக்கிறாய் அல்லவா?''

''மெய்யாக வாழ்ந்தவர்கள் யாருங்க? வாழ்க்கையே பொய்தானுங்களே! எசமான் எதுக்காக இதெல்லாம் கேட்கிறீங்கன்னு தெரியல்லியே!''

''சரி. நாடகத்தில் நீ கதாநாயகியாக வரும்பொழுது, காதல் கட்டங்களில் நடித்தது உண்டல்லவா?''



''உண்டுங்க.''

''அப்பொழுது கண்ணே, காதலா, கட்டிக்கரும்பே என்றெல்லாம் பேசுவது உண்டல்லவா.''

''உண்டுங்க. காதல் சீனும் உண்டு; மயான காண்டத்திலே கட்டிக்கிட்டு அழுகிறதும் உண்டு.''

''இதெல்லாம் எதற்கு அம்மா?''

''வேஷம் போட்டா ஆட வேண்டாமுங்களா?''

''இதெல்லாம் பணத்திற்காகத்தானே''.

''இல்லீங்களா பின்னே! பணத்துக்காகத்தான் இப்ப அய்யா மாத்திரம் சும்மாவா என்கிட்டப் பேசுறீங்க?''

இதற்கு நீதிபதியே சிரித்துவிட்டார்.

''கம் டு தி பாயிண்ட்'' என்றார் நீதிபதி.

''அதாவது, என் பாயிண்ட் என்னவென்றால், இவள் பணத்துக்காகக் காதல் செய்வாள்'' என்று ஒரு பெரிய உண்மையைக் கூறினார் குழந்தை.

''ஆமா, நீ நாகலிங்கத்துடன் வாழ்ந்தாயே, அப்பொழுதெல்லாம் அவர் மேலே உனக்கு உண்மையான காதல் இருந்ததா?''

''நாங்க என்ன நாடகமா போட்டோம்? புருசன் பெண்சாதிக்குள்ளே காதலுக்கும் கூதலுக்கும் நேரம் ஏதுங்க? பிரியம்னு சொல்லுங்க.''

''ஆமா, உனக்கு அவர் மேலே பிரியம் இருந்ததோ?''

''இல்லாட்டி அத்தனை அடியையும் பொறுத்துக்கிட்டிருப்பேனா?'' என்றாள் ரமாமணி. அவள் கண்கள் கலங்கின. எதிரில் நிற்கும் நாவன்னா கானாவைப் பார்த்தாள். அவருடைய கறுப்புத் தடவிய தலை கலைந்து நரை தெரிவதையும், ஒரு காலை இழந்து, நிற்க முடியாமல் அவர் தவிப்பதையும், அவர் கையில் விலங்குகள் பூட்டியிருப்பதையும் பார்த்து அந்தப் பேதை இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டாள்.

''ஏனம்மா, பிரியம் இருந்தது என்கிறாயே, நாகலிங்கம் நல்லவரா, கெட்டவரா?'' என்று மெதுவாக ஒரு கேள்வியைக் கேட்டார் வக்கீல்.

''கெட்டதுதானுங்க.''

''ஆமாம், கெட்டவர் என்று தெரிந்துமா நீ அவருடன் வாழ்ந்தாய்?''

''என்னங்க செய்யறது? கட்டிக்கிட்டதுக்கப்புறம் கெட்டவர்னு பார்த்தா முடியுமா? ராவணன் பொல்லாதவர் என்கிறதுக்காக மண்டோதரி ஓடியா போயிடுச்சு?''

''உன்னை இப்ப நாடகத்தைப்பத்திக் கேட்கவில்லை. உன் வாழ்க்கையைப்பற்றிக் கேட்கிறேன். உனக்கு அவரிடம் காதலே கிடையாது; பணத்துக்காகத்தான் காதல் நாடகம் ஆடினாய் என்கிறேன்.''

''சரி, சொல்லுங்க.''

''நீ ஒப்புக்கொள்ளுகிறாயா?''

''எப்படிங்க? பெரிய மனுஷான் சொல்றீங்கங்கறதுக்காக ஒப்புக்கிட
முடியுமா? நான் நூறு கூத்திலே வேசம் போட்டிருக்கிறேனுங்க. நல்ல
வேசமும் போட்டிருக்கிறேன், கெட்ட வேசமும் போட்டிருக்கிறேன். எது
நல்லது, எது கெட்டது நாடகக்காரருக்கு நல்லாத் தெரியுமுங்க. அப்படித்
தெரிஞ்சும் அது கெட்ட மனிசங்கறதுக்காக நான் விட்டுட்டு ஓடிவிட
முடியுமா? பல்லைக் கடிச்சுக்கிட்டுத்தான் வாழ்ந்தேன். பொம்புளை
யாய்ப் பொறந்துட்டேவே!''

''அவ்வளவு தெரிந்தும் நீ ஒரு நாள் அவரை விட்டு ஓடிவிட்டாய்
அல்லவா?''

ஆமாங்க. அன்னைக்கோடே வெறுத்துப்போச்சு. உலகமே ஒரு
நாடகம்னு தோணிப்போச்சு, ஓடிவிட்டேன்.''

''அதாவது, அவர் பணம் தருவதை நிறுத்திவிட்டார், நீ
ஓடிவிட்டாய்?''

''பணம் இல்லீங்க. மனம்தான் காரணம். அவர் மனத்தை மோசம்
செய்துவிட்டார், போயிட்டேன்.''

''மண்டோதரி அப்படிப் போனாளா?''

''அந்த அம்மா புத்தி சொன்னாங்களே. அப்ப ராவணன் போட்டு
உதைச்சாரா? நான் அடி தாங்காமல் இல்லே ஓடினேன்?''

''அழகர்கோவிலில் உன்னிடம் அவர் என்ன சொன்னார்?''

''ஆடினாக் காலை ஒடிப்பேன்னார்.''

''அப்படிச் சொன்னாரா, இல்லை, உன்னை மன்னிச்சுட்டேன் என்று
சொன்னாரா?''

''அதுங்கிட்டே போய் யாரு மன்னாப்புக் கேட்டாங்க?''

''நீ கேட்டிருக்க மாட்டாய். அப்படியிருக்க, அடுத்த நாள் அவர்
வீட்டுக்கு ஏன் போனே?''

''மடையடியிலே அந்த மோகனாவைச் சிறைப்பிடிக்க வேணும்னு
அவரும் இந்தச் சொக்கன், கருப்பன் எல்லோரும் பேசிக்கிட்டிருந்தாங்க.
இதைக் கேட்டுவிட்டு நான் அவரைத் தடுக்கப் போனேன்.''

''உனக்கென்ன? அவரை ஏன் தடுக்கவேணும்? அவள் உனக்குப்
போட்டியாக ஆடினாள். வாழ்க்கையிலும் போட்டியாகிவிடக்கூடாது
என்ற அச்சம்தானே?''

''நான் பட்ட கஷ்டம் என்னைத் தடுக்கத் தூண்டியது. அவர்கிட்டவே
போய்ச் சொல்லித் தடுக்கப்போனேன். அதுக்காக அது என்னைக்
கத்தியாலே குத்த வந்தது. உன்னே தள்ளிப் பூட்டிட்டுப் போயிடுச்சு.
திரும்பி வந்தாக் கொன்னுடுமேன்னு நான் தப்பிச்சு ஓடியாந்தேன்.''

''தப்பி ஓடுவதற்கு வீட்டில் ஏன் நெருப்பு வைத்தாய்?''

''நான் வீட்டுக்கு நெருப்பு வைக்க நினைக்கவில்லை. புகைதான்
போட்டேன். அது செய்த பாவம் பத்திக்கிச்சு.''



''ஏன் அம்மா, நீதான் உலகமே வெறுத்துப் போச்சு என்கிறாயே, உனக்கு உயிர்மேல் ஆசை விடவில்லையா?''

''உயிர் ஆசையும் இருந்தது, எப்படியாவது வெளியேபோய் அந்தப் பெண்ணுக்கு உபகாரம் செய்யணும்கிற ஆத்திரமும் இருந்தது. அதனாலேதான் தப்பிப் போக நினைச்சேன்.''

''சரி. இந்த வளையல்கள் உன்னுடையதுதானா?''

''ஆமாம்.''

''இந்தத் துணியில் ரத்தக்கறை பட்டிருந்ததே, எது?''

''நான் கீழே விழுந்து தலையிலே காயம் பட்டுடுத்து.''

''கீழே விழுந்தாயா? கத்தியால் கிழித்துக்கொண்டாயா?''

''கீழேதான் விழுந்தேன்.''

''இந்தக் கத்தி யாருடையது?''

''என்னுடையதுதான்.''

''அவரல்லவா உன்னைக் கொல்ல வந்தார்? உன் கத்தி எப்படி அங்கே வந்தது?''

''நான் கொண்டுபோனேன்.''

''அதாவது, உன்னைக் கொல்லச் சொல்லி நீயே இந்தக் கத்தியைக் கொண்டு போனே....?''

ரமாமணி பேசாமல் நின்றாள். வக்கீல் குழந்தை விடவில்லை.

''ஏன் அம்மா, நீ தப்பி ஓடிப்போய் சர்க்கஸ் கம்பெனி வைத்தாயே, அதற்குப் பணம் ஏது?''

''பணமா வேணுமுங்க, படிச்ச கலைஞன்தான் கூடுவான். பத்துப் பேர் கூடினாக் கம்பெனி ஆகுது?''

''அன்றைக்கு நீ அவரோடு உல்லாசமாய் இருந்தாய். அவர் வெளியே போன சமயத்தில் பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டாய் என்று நான் சொல்லுகிறேன்.''

''எதை வேணுமானாலும் சொல்லுங்க'' என்றாள் ரமாமணி.

''சரி, இவ்வளவு போதும்'' என்று அமர்ந்தார் வக்கீல் குழந்தை. அவர் முகத்தில் வெற்றியின் குறி தென்பட்டது.

அன்றைய தினம் கோர்ட்டு அத்துடன் கலைந்தது. குழந்தை மடக்கி விட்டார் என்று கூட்டம் புகழ்ந்தது.

ஆனால் அடுத்த நாள் விசாரணையில், ரமாமணிதான் வீட்டில் நெருப்பு வைத்தாள் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று தீர்ப்புக் கூறி, ரமாமணியை விடுதலை செய்துவிட்டார்கள். கூடவே அவளை மோகனா வழக்கில் முக்கிய சாட்சியாக எடுத்துக் கொண்டார்கள்.

✦ ✦ ✦

அன்றைய தினம் மதுரை பொற்றாமரைக்குளத்தின் கரையில் ரமாமணி அமர்ந்திருப்பதைப் பார்த்தவர்கள், யாரோ ஒரு பெண் தவசி உட்கார்ந்திருப்பதாகத்தான் எண்ணுவார்கள். ''முருகா, முருகா'' என்று அவள் வாய் சொல்லிக்கொண்டேயிருந்தது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டே இருந்தது. அப்பொழுது ஒரு குரல், ''தாயே, விடுதலை பெற்றாயா?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டது.

''சாமி'' என்று திரும்பினாள். பரமானந்தப் பரதேசியார் நின்று கொண்டிருந்தார். அவர் காலைப் பிடித்து வணங்கினாள்.

''இந்தப் பாவிக்காக கோர்ட்டு ஏறி சாட்சி சொல்ல வந்தீங்களே, சாமிக்கு இது அடுக்குமா?'' என்று அழுதாள்.

''அம்மா, ஆண்டவனே மாமனாக வந்து வழக்குரைத்தான் இந்தப் பதியில். அப்படியிருக்க உனக்காக ஒரு அடிமை நான் சாட்சி சொல்லியது சரிதான். இந்த மட்டில் உனக்கு விடுதலை கிடைத்ததே!'' என்றார் பரதேசியார்.

''இன்னும் விடுதலை கிடைக்கவில்லையே சாமி?''

''சிறையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாய். சிந்தையிலிருந்து விடுதலை பெறவேண்டும். அவனை நல்லவனாக்க நான் எவ்வளவோ பாடுபட்டேன். இறைவன் திருவருளால் அது முடியவில்லை.''

''சாமி, எனக்கு அது மேலே அன்பு இல்லே. ஆனால் அதை விடவும் முடியவில்லை. என்னை என்னமோ கொல்லுது. சாமி, ஐந்தாறு வருஷம் சொல்லிட மாட்டாங்களா? அந்த ஆளு ஜெயிலிலே எவ்வளவு கஷ்டப்படும்!''

''சூதும், வாதும் வேதனை செய்யும் அம்மா. அவன் வெளியே இருந்தால் மாத்திரம் சந்தோஷமாக இருந்துவிடுவானா? அவன் மனமே அவனுக்குச் சிறை. எழுந்திரு'' என்று அழைத்தார்.

ரமாமணி அதன் பிறகு வீட்டுக்கு வந்தாள். வீட்டுக்கு வந்தவுடனே, அவளிடம் அவளுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். பிரித்தாள். அவள் உதடுகள் படபடத்தன. முகம் சிவந்தது. கண்களிலிருந்து ஆனந்தம் பொங்கி வழிந்தது. உடல் புல்லரித்தது. ''முருகா, முருகா!'' என்று ஆனந்தத்தோடு மெய்ம்மறந்து கூக்குரலிட்டாள். ''சாமி, சாமி'' என்று வெளியே ஓடி வந்தாள். திண்ணையில் அமர்ந்திருந்த பரதேசியாரிடம், ''இதோ பாருங்கள்'' என்றாள்.

''ஆமாம், நாற்புறமும் தங்கத்தால் கோடிட்டு, உள்ளே தங்க எழுத்தால் அச்சிடப்பட்டிருந்தது, அந்த அழைப்புக் கடிதம்.

பதினொன்றாம் அத்தியாயம்

## மஞ்சளழகே! மல்லிகைப்பூ மணமே!



இஞ்சிக்குப் பாய்ந்து, எலுமிச்சை வேரோடி, மஞ்சளுக்குப் பாய்ந்து மல்லி கைக்கு வேரோடி' என்று தாலாட்டுப் பாடல் ஒன்று உண்டு. இஞ்சியும் எலுமிச்சையும் வயிற்றுக்கு நல்லது. உணவு மாத்திரம் அல்லவே உலகம்? உறவும் கலந்தது அல்லவா? ஆதலால்தான் அடுத்ததாக மஞ்சளும் மல்லிகையும் பாடப்பட்டிருக் கின்றன. மஞ்சளும் மல்லிகையும்தான் மாதர்களின் நல்வாழ்வு. மாதர்களின் வாழ்வைப் பொறுத்ததுதான் மாநிலத்தின் வாழ்வு.

காவேரியாற்றின் படித்துறையில் தமிழ் நாட்டு மங்கையர் குளித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது காவேரி, காதோலை கருகுமணி முதலியவைகளை எடுத்துக்கொண்டு, கல வேகமாக ஓடிவந்தாள். புதுவெள்ளம் ஆதலால் வண்டல் அள்ளி மஞ்சள் பூசிக்கொண்டு நுரையைப் பூவாகச் செருகி அவள் ஓடி வரும் அழகைப் பார்த்தார்கள் பெண்கள். ''மஞ்சளும், இஞ்சியும், மல்லிகையும் தருபவள் நீ. உனக்கு மஞ்சளுக்குப் பஞ்சமா?'' என்று கூறி, தங்கள் கைவளை குலுங்க, காவேரியாற்றின் படித்துறையில் பசு மஞ்சளை உரைத்து, தாங்களும் பூசிக்கொண்டு மீதியைக் காவேரிக்குக் கையால் தள்ளிப் பூசினார்கள்.

இந்த மஞ்சள் அழகும், மல்லிகையின் மணமும்தான் திருமணம். அன்று சிக்கல் சிங்காரவேலப் பெருமானுக்கு மல்லிகையில் வாகை மாலை சாத்தி, ஷண்முகார்ச்சனை நடந்தது. சண்முகம் மஞ்சள் தடவிய புது வேட்டி ஒன்றை உடுத்தியவண்ணம் சந்நிதியில் நின்றுகொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் தருமனும் முத்துராக்குவும் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றவண்ணம் இருந்தார்கள்.

தன்னுடைய அரிய கலியாணத்துக்கு முதல் நாள் முருகனின் கோயிலுக்கு வந்து அபிஷேக ஆராதனை நடத்தி சுவாமி தரிசனம் செய்ய வந்திருக்கும்போது, தன்னால் அங்கு சேவித்து நாதசுரம் வாசிக்க முடியவில்லையே என்ற வருத்தம் சண்முகத்துக்கு இருந்தது. இருப்பினும் 'இறைவன் திருவருள் இந்த விவகாரங்களை எல்லாம் ஒழுங்காக முடிவுபெறச் செய்யட்டும். அதன் பிறகு கணவனும் மனைவியுமாக வந்து, காணிக்கை செலுத்தி சேவிக்கிறோம்' என்று

வேண்டிக்கொண்டான் சண்முகம். கற்பூர ஆரத்தி முடிந்தவுடனே, திருவிளக்கிலிருந்து ஒரு சுடர் கீழே விழுந்தது. ''சோதியே, சுடரே, சூழ் ஒளி விளக்கே'' என்ற பாடல் அவனுக்கு ஞாபகம் வந்தது. 'தன் வீட்டுக்கு ஒளி வரப்போகிறது. வீடு முழுவதும், மங்காத ஜோதி நிறையப் போகிறது' என்ற மகிழ்ந்த எண்ணங்கள் எல்லாம் அந்த மகா வித்வானுக்கும் வந்தன. சுவாமியை வணங்கிவிட்டு, வீட்டுக்கு வந்தான் சண்முகம். ''தம்பி, மூணு மணிக்கு மேலே ராகு வேளை வந்துடுதாம். நம்ம சனங்க காத்திருப்பாங்க. வண்டிகள் எல்லாம் இப்பவே வந்துவிடும். நீங்க சாமான்களை எடுத்து வைங்க. இப்பவே மணி பத்தாகுது'' என்று தருமன் பதறினான்.

தருமனைப் பொறுத்தவரையில், கலியாண வேலைகள் இரண்டு நாட்கள் முன்பே ஆரம்பமாகிவிட்டன. மற்றவர்களுக்கெல்லாம் வாயிலே ஈ புகுந்தால்கூடத் தெரியாதென்பார்கள். தருமனுக்கோ இட்லி புகுந்ததே தெரியவில்லை! கலியாணப் பத்திரிகை கொண்டு போய் வைப்பதும், அழைப்பதும், வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருவதும், இந்த வேலைகளே அவனுக்கு ஏராளமாக இருந்தன. சண்முகத்திற்குத் தாயும் தந்தையும் இல்லை. கூடப்பிறந்த சகோதரியும் கிடையாது. ஆனால் தமிழ்நாட்டின் பண்பாடு, அவனை உற்றார் இல்லையென்று கவலைப்படும்படி வைக்கவில்லை. சிக்கல், மஞ்சக்கொல்லை, நாகைப்பட்டினம் முதலிய பல ஊர்களிலிருந்து உறவினர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். முருகன் அடியார்களுக்கு ஒருபுறம் மஹேசுர பூஜை நடந்துகொண்டிருந்தது. வீதி முழுவதும் இரண்டு வரிசைக்கு ஏராளமான ஆண்டி பரதேசிகள் அமர்ந்திருந்தார்கள். தவலைத் தூக்கித் தழும்பேறிய முத்துராக்கு தன் கையில் அன்ன வட்டிலை வைத்துக்கொண்டு வாரி வாரி ஏழைகளின் வயிறாரப் போட்டுக் கொண்டிருந்தார். சாப்பாடு முடிந்தவுடனே சண்முகம் அவர்கள் எல்லோரையும் பார்த்து, 'எல்லோரும் இறைவன்' என மனதார ஒரு முறை வணங்கிவிட்டு, உள்ளே வந்து அலமாரியைத் திறந்தான்.

எந்த ஊருக்குப் போனாலும் அங்கே ஒரே மாதிரியான சில விளம்பரப் பலகைகளைப் பார்க்கலாம். மதுரைக்குப் போனால் அங்கே திருநெல்வேலிச் சைவாள் மண்பாண்டச் சமையல் என்ற போர்டுகளைப் பார்க்கலாம். ஆனால் அதே ஊரில் கும்பகோணம் வெள்ளிப்பாத்திரக் கடை, கும்பகோணம் பட்டு ஜவுளிக் கடை என்ற விளம்பரங்களும் தொங்கும். ஜவுளிக்கும் பாத்திரங்களுக்கும் பெயர் பெற்ற கும்பகோணம் வெள்ளிச் சித்திரத் தம்பாளம் ஒன்றை எடுத்து வைத்தான்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே கண்டை வேட்டிகளில் எத்தனையோ விதம் உண்டு. பட்டுப் புடைவைகளில் எத்தனையோ விதமான கரைகள் உண்டு. அங்கவஸ்திரங்களில் எத்தனையோ ஜரிகை வேலைப்பாடுகளும் உண்டு. மன்னார்குடி வேஷ்டி, திருநாகேஸ்வரம் குண்டஞ்சி, அம்மையப்பன் கைலி என்று நெசவுத் தொழிலுக்கும் பெயர் போனது தஞ்சாவூர் ஜில்லா.



சண்முகத்துக்கெதிரே அம்மா சத்திரம் முதலியார் அனுப்பி வைத்த கைத்தறிப் பட்டுச் சேலை ஒன்று காட்சி அளித்தது. பட்டுப் புடைவையைக் கையில் எடுத்தால், முதலில் ஒரு முறை கையிலே வைத்து எடை பார்ப்பார்கள். அந்தப் புடைவையோ பார்ப்பவர்களை எடை போட்டது. இருபுறம் வீணையும், நாதஸ்வரமும், மிருதங்கமும் ஆக கருப்புப் பேட்டிலே அழகிய ஜரிகையால் கோர்த்து வாங்கப்பட்டிருந்தன. முகத் தலைப்பில் உள்ள பெரிய தோகை மயிலின் புள்ளிகள் எல்லாம் சிவப்புக் கற்களில் இழைக்கப்பட்டிருந்தன. இந்தச் சேலையை சண்முகம் மோகனாவுக்குப் பரிசம் போடும்போது வரிசை கொடுப்பதற்குத் தேர்ந்து எடுத்திருந்தான். அந்தச் சேலையை எடுத்து தாம்பாளத்தில் வைத்தான். அடுத்தபடியாக அவன் எடுத்து வைத்த நகை ஒன்று. அதன் பெயரைக் கேட்டாலே இப்பொழுது பெண்கள் சிரிப்பார்கள். ஆனால் விலையைக் கேட்டால் பிரமிப்பார்கள். அது ஒரு மோகரா மாலை. அக்காலத்தில் எல்லோரும் பவுன் மாலைதான் போடுவார்கள். ஆனால் மோகரா உருவத்தில் பெரியது. அழகும் அதிகம். ஆதலால் சண்முகம் அறுபத்துநான்கு மோகராக்களை வாங்கி, அதை ஒரு மாலையாகச் செய்து வைக்கச் சொல்லியிருந்தான். அந்த மோகரா மாலையின் நடுவே மைசூர் தர்பாரில் தனக்கு அளித்த சாமுண்டேசுவரி பதக்கத்தையும் கோர்த்து, அதைப் பெண்ணுக்குப் போடும் நகையாக எடுத்து வைத்தான். 'நாளைக்கு அவன்தானே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளப் போகிறான்! அதை இன்றைக்கே கொடுக்க வேண்டுமா?' என்று சொல்லச் சகோதரியும் இல்லை. அவனுக்கும் அதை இப்போதே மோகனா அணியவேண்டும் என்ற ஆசைவந்தது.

சந்தனம், புஷ்பம், மஞ்சள், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு எல்லாவற்றையும் தட்டுகளில் கொண்டுவந்து வைத்தார்கள், பெண்டுகள். அப்போது ''ஜலஜல'' வென்று இசை முழங்கியது. ''கணகண'' வென்று மணிச் சத்தம் கேட்டது. தருமன் 'நல்ல சகுனம், நல்ல சகுனம்'' என்றான். ஆம். வாசலிலே நந்திதேவர் மணியை ஆட்டிக் கொண்டு வந்து நின்றார். புலியூரிலிருந்து அழகிய பெட்டி வண்டிகள் நான்கு வெளியே வந்து தயாராகக் காத்திருந்தன. அவைகள் கல்யாண வண்டிகள் ஆதலால் உள்ளெல்லாம் வைக்கோல் திணிக்கப்பட்டு மேலே பட்டு ஜமுக்காளம் விரித்து, திண்டுகள் போடப்பட்டிருந்தன. கூட்டுக்கு மேல் பூப் போட்ட பாய்களும் பளபளவென்று மின்னின. குடத்திற்குப் பிடித்த பித்தளைப் பூண்கள்கூட மெருகிடப்பட்டிருந்தன. வண்டியின் இருபுறமும் உள்ள விளக்குத் தாங்கிகள், பித்தளைக்கால் மிதிகள், பித்தளைக் கம்பிகள், கை பிடித்து ஏறுவதற்கான கைப்பிடிகள், நுகத்தடியிலே இருபுறமும் பதித்த பூக்கள் ஆகிய எல்லாம் பொன் போல மின்னின. அந்த வண்டிகள் எல்லாமே இன்றைக்கு நாம் காணும் மோட்டார்களைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு அழகாக இருந்தன.

வண்டியில் கட்டிய மாடுகளோ, ஆயிரம் ரூபாய் ஜோடிகள். முதல் வண்டியில் அழகான ஆலம்பாடி மயிலை ஜோடி கட்டப்பட்டிருந்தது. கொம்பு முதல் குளம்பு வரை அந்தக் காளைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாமல் இருந்தன. நெற்றியிலே குங்குமப்பொட்டு, அதன்மேல் வெள்ளி அரசிலை மாலை, நடு நெற்றியில் வந்து விழும்படி பச்சைக்கல் கோத்த வெள்ளி நெற்றிச் சுட்டி, கொம்புகளில் வெள்ளிக் கொப்பிகள், மாட்டின் கொம்புக் கயிற்றில் பட்டுக் குஞ்சலம்.

வண்டிகள் வந்து நின்றவுடனே, தருமன் வேகமாகத் திருவாரூர் ரோட்டை நோக்கி ஓடினான். ஒரு மைல் தூரத்திற்கு அப்புறம் நின்று பாரா கொடுத்துக்கொண்டே இருந்தான். வீதியில் யார் யார் வந்தால் நல்ல சகுனமோ அவர்களையெல்லாம் ஒரு மணி நேரத்திற்கு வீதியில் நடக்காமல் செய்துவிட்டான். ''விலகுங்கள், விலகுங்கள்'' என்று விரட்டினான். ஆனால், பூமியில் இருப்பவர்களைத்தான் விரட்டலாம். ஆகாயத்தில் என்ன செய்வது? ஒரு கரிச்சான் குஞ்சு வலமிருந்து இடமாகப் பறந்தது. ''வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் போனால் கால்நடையாய்ப் போனவர்கள் கனகதண்டி ஏறுவரே என்று சொல்லியிருக்காங்களே'' என்று மகிழ்ந்தான் தருமன். உடனே ஒரு சந்தேகம் வந்தது. பறந்தது கரிச்சானா காக்காயா என்பதுதான் அது. சரி, கரிக்குருவிதான் என்று நிச்சயப்படுத்திக்கொண்டு திரும்பி ஊரை நோக்கி ஓடிவந்தான். நாம் எதிரில் போகலாமா கூடாதா என்ற சந்தேகம் வரவே, சட்டென்று நின்றான். நல்ல வேளை, அதற்குள் வண்டிகள் அவன் இருக்குமிடத்திற்கு வந்துவிடவே ஏறி அமர்ந்தான். அவசரத்தில் வண்டியிலே போட்டிருந்த பட்டு ஜமுக்காளம் அவனை வழுக்கி விட்டது. பின்புறக் கம்பியிலே வந்து மோதினான். வண்டிகள் திருவாரூரை நோக்கி வெகுவேகமாகச் சென்றன.

✤ ✤ ✤

''ஓய், பார்த்தீரா கல்யாணப் பத்திரிகையை?''

''ஆமாம், பார்த்தேன்.''

''சரியா படித்தீரா?''

''படிக்காமல் விடுவேனா?''

''கையெழுத்து யார் போட்டிருக்கா பார்த்தீரா?''

''கவனித்தேன்.''

''அதுதான் விஷயம். மழை பெய்யுமா? முப்போகம் விளைந்த பூமி, இப்போ இரு போகத்துக்கு வந்துடுத்து. இந்த மாதிரி கல்யாணமெல்லாம் நடந்தா இது ஒரு போகத்துக்கே வந்துடும்.''

''உனக்கு என்னாங்காணும் வயிற்றெரிச்சல். மழை பெய்தால் என்ன, பெய்யாவிட்டால் என்ன? உமக்குத்தான் குழி நிலம்கூடக் கிடையாதே!''



''யார் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு ஒரு அத்து வேண்டாமோ? இந்தக் கலியாணத்தைப் பற்றி உம்ம அபிப்பிராயம் என்ன?''

''என் அபிப்பிராயம் எதுக்கு? நம்மைக் கேட்டானா?''

''பெண் அழகியில்லே?''

''ஆமா.''

''ஆட்டம் எப்படி?''

''அதுவும் அற்புதம்.''

''ஓய், சரியாச் சொன்னீர்!''

''தாசிகள் எல்லாம் கலியாணம் பண்ணிக் கொண்டுவிட்டா, அப்புறம் உலகம் என்னங்காணும் ஆகிறது, நான் கேட்கிறேன்'' என்று வருத்தப்பட்டார் ஒருவர்.

''அடியே, வடிவாம்பாள் பெண்ணுக்குக் கல்யாணமாம்!''

''நல்லவேளை, ஒரு வம்பு குறைச்சல்!''

''அது என் அப்படி?''

''ஆமாமடி, என்னைக் கேட்டா இந்தப் பெண்களுக்கு எல்லாமே கல்யாணத்தைப் பண்ணிடணும். அப்போதான் நம்ம துயரம் குறையும்'' என்று இந்தக் கலியாணத்திலே ஆனந்தம் அடைந்தது பெண்கள் சமூகம். கோபம் அடைந்தது இன்னொரு சமூகம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் இந்தக் கல்யாணப் பேச்சு பேசாத ஊரே கிடையாது. தாசி மகளுக்குக் கலியாணமாம் என்ற சர்ச்சைகள், அந்தக் கலியாணத்திலே யார் யார் கச்சேரிகள் நடக்கும் என்ற பேச்சுகள், இதிலே சிங்கபுரம் மைனருக்கும், நடேச பிள்ளைக்கும் என்ன அக்கறை, அவர்கள் ஏன் பணம் செலவழிக்க வேண்டுமென்ற விவாதங்கள். அப்படியிருக்கலாம், இப்படி இருக்கலாம், எப்படியும் இருக்கலாம் என்ற அனுமானங்கள். அட, நாமும் கண் குளிரப் பார்த்துவிட்டு வந்துவிடுவோமே என்ற நல்லெண்ணங்கள் - இவ்வாறு எல்லா விதத்திலும் இந்தக் கல்யாண முகூர்த்தச் செய்தி எல்லோருக்கும் அக்கறை ஊட்டியது.

✤ ✤ ✤

வடிவாம்பாள் வீட்டிலே கூட்டம் தாங்க முடியவில்லை. வண்டிகள் வருவதும், போவதுமாக இருப்பதைப் பார்த்துப் பார்த்து, கலியாணச் சந்தோஷத்தில் மாப்பிள்ளை ஏழை என்பதைக்கூட மறந்தாள். ஆனால் அவளுக்கு ஒரே ஒரு குறை. தன் கையாலே வத்தல், வடகம், ஊறுகாய் முதலியவைகள் போட வேண்டும் என்று அவள் கட்டிய ஆசையெல்லாம் கெட்டுவிட்டன. அவளை ஒரு வேலையும் பார்க்கவிடவில்லை மரகதம். அதுவும் போதாதென்று, அவள் ராஜ்யத்திலும் போய் புகுந்துவிட்டாள். மோகனாவுக்குத் தலைவாரிப் பின்னி, 'எல்கட்டு' கட்ட வேண்டுமென்பாள் வடிவாம்பாள். ''அது அநாகரிகம், 'பிச்சோடா' தான் போட வேண்டும்'' என்பாள் மரகதம். ஆகவே, மகளை அலங்கரிக்கும்

பொறுப்புக்கூட வடிவாம்பாளிடம் அரைகுறையாகவே இருந்தது. அதோடு ஊர்ப் பேச்சுகள் அவள் காதில் படாமலும் இல்லை. நேற்றுத் தன் மகளை, ''ஆட்டக்காரி, தாசி'' என்று சொல்லி இளப்பம் பேசிய சில பெண்கள் இப்பொழுது அவள் கல்யாணம் செய்துகொள்ளப் போவதையும் குற்றமாகப் பேசுவதைக் கண்டாள். பல பேர் வாயில் விழுந்து எழுந்திருக்க வேண்டுமே என்ற பயமும் ஏற்பட்டது. அதனால் நாள் தவறினாலும், மஞ்சள் துணியில் பணம் முடிவதை அவள் தவறுவதில்லை.

மோகனாவின் கை நிறைய மஞ்சள் துணியும், ஒரு ரூபாயும் வைத்து முடிந்து வைத்தாள். கோழி தன் குஞ்சை வெளியே விடாமல் பொத்திக் கொள்வது போல, எப்பொழுதும் வடிவாம்பாள் தன் மகள் அருகிலேயே இருக்கலானாள். மோகனாவை ஒரு வேலையும் செய்யவிடுவதில்லை. அன்று, முதல் பத்திரிகையை தியாகராஜாவுக்கு வைத்து கல்யாணத்துக்கு அழைத்து வந்த பிறகு மோகனா வெளியே போகவே இல்லை. ஆட்டம், ஒத்திகை எல்லாம் வேண்டாமென்று சொல்லிவிட்டாள். அவளுக்குச் சாப்பாடுகூடத் தன் கையாலேதான் பரிமாறுவது; பசி பார்த்து முகம் பார்த்துச் சாப்பாடு போடுவது என்ற வழக்கத்துக்குக் கொண்டு வந்தாள்.

அவளைப் பெற்றபோது அடைந்த இன்பத்தைக்காட்டிலும், ஆயிரம் மடங்கு இன்பத்தை இப்பொழுது அந்த மகளைப் பார்த்துப் பார்த்து அடைந்தாள் வடிவாம்பாள். பெட்டிகளில் கிடந்த பொட்டுப் பொடி தங்கத்தையெல்லாம் சேர்த்தாள். பழைய கால நகையெல்லாம் பிரித்தாள். தன் மகளுக்கென்று உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் என்னென்ன ஆபரணங்கள் போட முடியுமோ, அவ்வளவையும் செய்யச் சொன்னாள்.

வளையல்களைப் போட்டுப் போட்டுக் கழட்டிக் கழட்டி மகளின் கை புண்ணாவதைக் கண்டு அவள் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது. இளம் வெந்நீரைத்தான் அருந்தச் சொல்வாள். அவளைப் பச்சைத் தண்ணீரில் குளிக்க விடமாட்டாள். மோரைக் குடிக்கக்கூடச் சம்மதிக்க மாட்டாள். அவளுடைய உபசாரங்களால், மோகனாவுக்கு ஒரு நோயாளிக்கு நடக்கும் சிசுருஷைகள் நடக்க ஆரம்பித்தன. கன்னத்திலே கறுப்புக் கோடு இழுப்பாள். யாரைப் பார்த்தாலும் பெண்ணுக்கு உடம்பு சரியில்லையென்று சொல்வாள். பிறர் காணத் தன் மகளைப் புகழ மாட்டாள். ஆனால் பெண்ணைப் பார்த்துப் பார்த்து 'என் ராஜாத்திக்கு என்ன அழகு!'' என்று மனத்திற்குள்ளே சொல்லிக்கொள்வாள்.

அவள் சொல்வது என்னவோ உண்மைதான். எந்த மருந்தாலும் எந்த மந்திரத்தாலும் அடைய முடியாத ஓர் அழகை மோகனா அடைந்தாள். கல்யாணப் பத்திரிகை அச்சிட்ட இரண்டு நாட்களுக்குள் அவளுக்கு எங்கிருந்துதான் இவ்வளவு அழகும், புதுமையும் ஏற்பட்டனவோ! உள்ளத்திலே ஆனந்தம் ஏற்பட்டால் உடம்பில் அழகு



ஏற்படும் என்பதற்கு உதாரணமாக விளங்கினாள் மோகனா. முகூர்த்த நாள் நெருங்க நெருங்க அவளுடைய உள்ளப் பூரிப்பில் உடல் பருத்தது. கண்ணீர் விட்டு, ஒளி இழந்த இமைகளில் புது ரத்தம் ஓடியது. விழிகளில் கறுப்பு ஏறின. பவழம் போன்ற அவள் உதட்டிலே ஒரு புது மெருகு வந்தது. பேச்சுகள் எல்லாம் கிளி மழலை போல் பேசத் தொடங்கினாள். கதிர்காமத்து வெயிலில் அலைந்து, கறுத்து ஒட்டிப் போன கன்னங்கள், கல்யாணம் வந்த சந்தோஷத்தில் பூரித்து, மாம்பழங்கள் போலாயின. போதாததற்கு வேளைக்கு ஒரு சேலை கட்டி, தாய் அலங்கரித்துக் கொண்டேயிருந்தாள். தன் எண்ணத்திற்கு எதிராக நின்ற தாய் இன்றைக்கு அதற்குச் சம்மதித்து ஏற்பாடுகளையெல்லாம் செய்யக் கண்டு, தன் தாய் தடுத்தாள் என்ற எண்ணம்கூட மோகனாவுக்கு மறந்தது. 'அம்மா, அம்மா' என்று அவளைச் சுற்றிக்கொண்டேயிருந்தாள். அப்போது மரகதம், ''வா அக்கா, கல்யாணப் பந்தலைப் பார்ப்போம்' என்று வெளியே அழைத்துச் சென்றாள்.

ஒன்றை மார்பில் பூசுகிறார்கள், மற்றொன்றை மண்ணில் பூசுகிறார்கள். ஒன்றை வாசம் என்கிறார்கள், மற்றொன்றை நாற்றம் என்கிறார்கள். ஆனால் சாணம் புடம் போடப்பட்டுவிட்டால் உயர்ந்து விடுகிறது. சந்தனத்துக்கும் முந்திவிடுகிறது. ஆனால், சாணம் திருநீறாவது எப்பொழுதோ? சாமர்த்தியம் சந்தோஷத்தைத் தருவது எந்தாளோ? அது சாமிக்குத்தான் தெரியும்.

வைத்தியின் அறிவுத் திறமைக்குத் தப்பிய கலைஞர்கள் இருவரும் குறிப்பிட்ட நாளில் திருமணத்தை நடத்திவிட முற்பட்டார்கள். ஆபத்து எதிர்நோக்கி நிற்பதால் கல்யாணக் காரியங்களும் கனவேகமாக நடந்தேறின.

பந்தற்கால் பந்துக்கள் என்று உறவில் ஒருவகை உண்டு. கல்யாணக் கொட்டகைக்குப் பந்தல் கால் முகூர்த்தம் செய்து ஊன்றிய நாளிலிருந்தே அவர்களைப் பந்தியில் காணலாம். சந்தனம் மிஞ்சாமலும் சமையல் வீணாகாமலும் அவர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள். அம்மாதிரி உள்ள உறவினர் பலரும் வடிவாம்பாள் அம்மாள் வீட்டிலும் வந்து கூடினார்கள்.

தென்னை மட்டையின் ஓலைகள் போலத் தனித் தனியே பிரிந்த உறவுகள் எல்லாம் கல்யாணத்தில் ஒன்றுகூடிவிடுவார்கள். அதுபோல் தென்னை ஓலைகள் முடையப்பட்டுக் கீற்றுகளாயின. திருவாரூர் வடக்கு வீதியில் வீதியே தெரியாமல் கல்யாணப் பந்தல் போடப்பட்டிருந்தது. கருந்தட்டான்குடி ரத்தினம் தன் கை வரிசையைக் காட்டினார். மாடிப் பந்தல் மாளிகைப் பந்தல் போல் எழும்பியது. இருபுறமும் தெருவை அடைத்துப் 'பந்தல்' போட்டிருந்ததால் பந்தலின் கூரையே தெரியவில்லை. உள்ளே நுழைந்தால் அழகான தூண்களில் தோம்பும், மஞ்சக் கொல்லையிலிருந்து வந்த வெள்ளை மேல் கட்டிகளும் கட்டம்

பட்டிருந்தன. கார்த்திகைச் சோமவாரக் கட்டளைக்காரர் காட்டூரில் இருந்து பனை நுங்கு, இளநீர்க் குலை, பொன் போன்ற ஈச்சங் கொத்துகள் எல்லாம் அனுப்பியிருந்தார். பந்தல் அலங்காரம், பார்ப்பவர் கண்ணைப் பறித்தது. கல்யாணத் தம்பதிகள் மேல் கண்ணேறு படாமல், எல்லோரும் பந்தலையே ஏறிட்டுப் பார்க்கும்படி இருந்தது பந்தல். கல்யாணக் கொட்டகையின் உட்புறத்தில் மேலே அழகான நடராஜ ஓவியம் ஒன்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. கொட்டகையின் ஒவ்வொரு அங்கணத்திலும் சீதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம், ருக்மிணி கல்யாணம், வத்ஸலா கல்யாணம், பார்வதி கல்யாணம், வள்ளி கல்யாணம், சுபத்ரா கல்யாணம், பரவை நாச்சியார் திருமணம் ஆகிய எட்டுக் கல்யாணப்படங்கள் திருவாரூர்ச் சித்திரக்காரர் வீரப்பாவால் தீட்டி மாட்டப்பட்டிருந்தன.

சீதா கல்யாணத்தில், வில்லை ஒடித்த பிறகு ராமன் வெற்றி வீரனாக நின்றான். இதைப் பார்த்த மோகனா 'சபதத்தை வென்றுவிட்டாரோ? அதுதான் அத்தனை மிடுக்கு' என்று நினைத்தாள். மீனாட்சி கல்யாணத்திலே அழகி மீனாட்சி சோமசுந்தரனைக் கண்டு சொக்கி நின்றாள். 'ஏனடி, சொக்கி நிற்கின்றாய்' என்றார் சுந்தரர். ஆனால் அவளோ 'சொக்கலிங்க, சொக்கலிங்க, சொக்கலிங்க என்கிறாள். இவ்வாறு சொக்கியும் சொக்கலிங்கமும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சொக்கி நிற்கிறார்கள். இந்தப் படத்தைப் பார்த்த மோகனா, நாமும் அந்த ஊருக்கு அருகில்தானே சொக்கினோம் என்று எண்ணினாள். அடுத்த படத்தின் பக்கம் சென்றார்கள், மரகதமும் மோகனாவும்.

இதனருகில் வந்தவுடன் மோகனா திடுக்கிட்டாள். ஆம், அதில் ருக்மிணியின் அண்ணன் ருக்மியைத் தேர்க்காலில் கட்டி இழுத்துக் கொண்டு கண்ணன் ருக்மிணியைச் சிறை எடுத்துச் செல்லுகின்ற காட்சி இருந்தது. இதைப் பார்த்ததும் மரகதம் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறாய்?" என்றாள் மோகனா.

"இல்லை, நாகபட்டணம் சர்க்கஸ் ஞாபகம் வந்தது. எங்க அத்தான் இது மாதிரிதான் சிறைப்பிடித்துக்கொண்டு வண்டியை ஓட்டினார். ஆனால் உள்ளே உக்காந்திருந்தவங்கள்தான் வேறே!"

"யாரு இருந்தார்கள்?"

"அதையேன் நீ கேட்கிறே? எங்கப்பாவும் நானும் இருந்தோம். நீ இல்லே" என்றாள் மரகதம்.

"எப்பவும் விளையாட்டுத்தானா? ஆமா, இந்த மாதிரியும் கணவருடன் ஓடி வந்துவிடுவார்களா?" என்றாள் மோகனா.

"அதுக்கென்ன செய்வது? உனக்கு அண்ணனும் இல்லே. அம்மானும்தான் கடைசியிலே ஒத்துக்கிட்டாங்களே.... வா!" என்று இழுத்தாள் மரகதம்.



அடுத்த படத்தில் வத்சலா கல்யாணம் நடந்தது. அபிமன்னன் கையால் வத்சலைக்கு மாலையிட்டு கடோத்கஜன் மாளிகையில் கல்யாணம் நடப்பதைக் கண்டாள் மோகனா.

"ஆண் பலத்தாலே பெண்ணைத் தூக்கிக்கிட்டுப் போய் அத்தாங்காரன் தாலி கட்டிவிட்டான்" என்றாள் மரகதம்.

"அந்தப் பெண் சம்மதிக்கலாமா?" என்றாள் மோகனா.

"ஏன்? மதன்பூர் மகாராஜா ஞாபகம் வருகிறதா?" என்றாள் மரகதம். இருவரும் சிரித்துக்கொண்டே நகர்ந்தார்கள்.

அடுத்த படமாகிய பார்வதி கல்யாணத்தைப் பார்த்தாள் மோகனா. அவள் கண்களில் தாரை தாரையாக நீர் பொழிந்தது. சிவபெருமான் நடராஜ மூர்த்தியின் திருக்கோலத்தில் நின்று ஒருபுறம் ஆடினார். ஓர் புறத்தே மலைமகள், சிவகாமசுந்தரியாக கைத்தாளத்துடன் நின்றாள். இசை வடிவமாகிய ஈசனை நோக்கி லயம் காத்து நின்றது. இன்னொரு புறத்தில் பார்வதியம்மை தவம் செய்யப் புறப்படுகிறாள். தாய் தடுக்கிறாள். 'அவனுக்கு ஆசைப்படாதே, அவன் பேயாண்டி' என்கிறாள். இதைப் பார்த்தவுடன் அவள் உள்ளத்திலே தன் தாய் தடுத்தது தோன்றியது.

அடுத்த காட்சியிலே சப்த ரிஷிகளும் வந்து, பார்வதியைத் தவம் செய்ய வேண்டாம் என்று தடுக்கிறார்கள். தன் வாழ்க்கையிலும் எத்தனையோ பேர்கள் தடுத்ததை நினைத்தாள் மோகனா.

அடுத்த காட்சியிலே மன்மதன் வந்து நின்றான். மலர் அம்பு தொடுத்தான். சிவபெருமான் மேல், குறி பார்த்தான். மோகனா அந்தப் படத்தையே கூர்மையுடன் பார்த்தாள். அவள் முகம் வியர்த்தது; உடல் பெருமூச்சு விட்டது. வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. இதைப் பார்த்த மரகதம், "பாவம், போனால் போகிறான் அக்கா" என்றாள்.

"யாரு, மரகதம்?"

"அவன்தான் மன்மதன். நீ பார்க்கிற பார்வையில் அவனே மயங்கி விழுந்துடப் போறான். பாவம், உலகம் பிழைக்கட்டும்."

"நான் என்ன சிவபெருமானா?"

"அது கிடக்கு பைத்தியம்."

"யாரையடி அப்படிச் சொல்கிறாய்?"

"பார்வதி பரமசிவம் இரண்டும்தான். ஒன்றை ஒன்று அடையத் தவம் செய்தது. கடைசியிலே இரண்டும் கலந்து ஒன்றாகிப் போயிடுச்சு" என்றாள் மரகதம். அந்தச் சமயத்தில் வாசலில் தடதட வென்று மேளம் அடிக்கும் சப்தம் கேட்டது. எல்லோரும் உள்ளிருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க என்று ஓடி வந்தார்கள். இதைக் கேட்ட மோகனா வெட்கத்துடன் விர் என்று உள்ளே ஓடினாள். ஆனால் அந்தப் பொல்லாத மன்மதனும் அவள் கூடவே ஓடினான்.

வாசலில் வண்டிகள் வந்து நின்றன. முத்துராக்கு, தருமன், காரைக்கால் நடேசன் முதலியவர்கள் வண்டியிலிருந்து இறங்கினார்கள். மைனரும், மரகதமும், ''வாங்க, வாங்க'' என்று அழைத்தார்கள். கூடத்திலே பாய் விரிக்கப்பட்டிருந்தது. நடேசன் முதலியவர்கள் அதில் அமர்ந்தார்கள். உடனே வண்டியிலிருந்து பதினைந்து ஆட்கள் சாமான்களையெல்லாம் உள்ளே கொண்டு வந்தார்கள். மரகதம் பிரமித்தாள்.

''என்ன நடேசண்ணே, நாயனக்காரரு சிக்கல் வீட்டைக் காலி பண்ணிட்டாரா?'' என்றாள்.

''அட சும்மா இருங்க தங்கச்சி. அந்த வீட்டிலே இனிமேதான் லட்சுமி வாசம் பண்ணப் போகுது'' என்றான் தருமன்.

''நம்ம ஒத்துக்காரரு நாயனம் இல்லாமலேயே ஒத்து ஊதறாரு'' என்றான் வரதன்.

''ஆமாங்க, இதென்ன சீரெல்லாம் இவ்வளவு நிறைய கொண்டாந்து இருக்கீங்க?'' என்றாள் மரகதம்.

''இல்லே தங்கச்சி, நாளைக்கு நீ சொல்லமாட்டியா? அழகுப் பொண்ணு கிடைச்சுது. அப்படியே கொத்திக்கிட்டுப் போயிட்டாங்களேனு கேட்பே? என்னத்துக்குப் பேச்சன்னுதான் தம்பி இதை எல்லாம் அனுப்பிச்சுது'' என்றான் தருமன். அங்கு இருந்த நகைப் பெட்டிகளையெல்லாம் ஒவ்வொன்றாகத் திறந்து வைத்தான். அவைகளைப் பார்த்துத் திடுக்கிட்டாள் மரகதம். தன்னுடைய அத்தானைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

''என்னாங்க, நான் சொன்ன நகையெல்லாம் அவங்களே கொண்டாந்து இருக்காங்களே!''

''நாங்களும் நகை போட முடியும்னு வாங்கிக்கிட்டு வந்தோம்.''

''பார்த்தீங்களா அத்தான், இந்த நாயனக்காரர் செய்ததை?'' என்று வருத்தத்துடன் உரைத்தாள் மரகதம்.

''தங்கச்சி, உங்க வீட்டு நகையை நீங்க போடுங்க. எங்க நகையை நாங்க போடறோம்'' என்றார் நடேசன்.

'ஒரு நகை போட்டானா, ஒரு புடவை வாங்கிக் கொடுத்தானா,' என்று யாரும் சொல்லிவிடக்கூடாது என்று ஊருக்குப் பயந்தான் சண்முகம். தன்மான உணர்ச்சியுடைய அவன், தன் கல்யாணத்துக்குப் பிறர் நகை செய்து போடுவதை அவ்வளவாக விரும்பவும் இல்லை. அன்பைப் புறக்கணிக்கவும் தைரியம் இல்லை. ஆதலால், இரண்டே நாளில் முயற்சிசெய்து, நடேசனின் பேருதவியால் தான் செல்வத்திலும் மோகனாவுக்குத் தக்க கணவன் என்பதை நிரூபிக்க உறுதி கொண்டான். அவைகளின் பலன்தான் இன்று கொண்டுவந்த நகைகள் அவ்வளவும்.

இந்த நகைகளைப் பார்த்தவுடனே வடிவாம்பாளும் திகைத்தாள். அவள் மனத்திலே இன்னொரு கவலையும் வந்தது. இவ்வளவு



நகைகளும் வந்திருப்பதை மரகதம் பார்த்துவிட்டு, சும்மா இருந்துவிடுவாளோ என்ற பயம்தான் அது. பரிசம் போடும் நேரம் வந்தது. அவ்வளவு பொருள்களையும், பெண்ணுக்குப் பிள்ளை வீட்டார் கொடுப்பதாகவும், ஆயிரம் ரூபாய் பரிசப் பணம் வைப்பதாகவும் நாட்டாண்மைக்காரர் எடுத்துக் கூறவே, அங்கு இருந்தவர்கள் எல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். வாழ்த்துரை முழங்கியது. நகைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மோகனாவை நோக்கி ஓடினாள் மரகதம்.

''அக்கா, அக்கா! அவர் வந்திருக்காரே, பார்க்கலே?''

''போ மரகதம், எனக்கு வெட்கமாக இருக்குது.''

''அன்னிக்கு தலைகாணியைத் தூக்கிக்கிட்டு வாசலிலே போற போது இந்த வெட்கமெல்லாம் வரலே.''

''என்ன மரகதம், சும்மா இல்லாததையெல்லாம் சொல்லிக்கிட்டு அவங்க வருவாங்களா பரிசம் போட....?''

''இங்கே வா, ஜன்னல் வழியாகப் பாரு'' என்று மோகனாவை இழுத்தாள் மரகதம். மோகனாவோ வர மாட்டேனென்று சொல்லிக் கொண்டே வந்து பார்த்தாள். கூடத்தில் நடேச பிள்ளை உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

அவர் கொண்டுவந்த புடைவையை மோகனாவே உடுத்திக் கொள்ளச் சொன்னாள் மரகதம். அடேயப்பா, அன்றைக்குத்தான் மோகனாவின் முகத்தில் எத்தனை ஆனந்தம்! அவள் கட்டாத புடைவையில்லை. போடாத நகையில்லை. ஆனால் தன் காதலன் கையால் வாங்கிக் கொடுத்தனுப்பிய பட்டுப் புடைவையைக் கட்டிய பொழுதுதான் காதல் என்பது என்ன என்று அவளுக்குப் புலனாயிற்று. புடைவைதான், பன்னிரண்டு முழம்தான். ஆனால் அதை உடுத்திக் கொண்டவுடனே, அந்தப் புடைவைக்கு உயிர் இருப்பதைக் கண்டாள். தன் காதலன் தேர்ந்தெடுத்த புடைவையாதலால் அதைக் கட்டிக்கொண்டு நிலைக்கண்ணாடியில் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மோகனாவுக்கு உண்டாயிற்று. பக்கத்திலே மரகதம் நின்றதால் வெட்கமும் வந்தது. சண்முகம் கொடுத்த நகை எல்லாவற்றையும் பூட்டினாள் மரகதம்.

''அக்கா, உன் புருஷன் சாதாரண ஆளில்லே. எங்கேயோ வீட்டிலே புதையல் வச்சிக்காரு. அதைத் தோண்டி எடுத்துக்கிட்டு வந்துட்டாரு.''

''இவ்வளவும் அவங்களா வாங்கிக் கொடுத்தனுப்பினாங்க?''

''ஆமாம் அக்கா.''

''அவங்களுக்கு ஏது இவ்வளவு பணம்?''

''அதுதானே ஆச்சரியமாக இருக்கு.''

''போ, மரகதம். நீ அவங்க காது கேட்க என்னென்னமோ சொல்லிட்டே. அதனால்தான் அவர் பாடுபட்டு இவ்வளவும் செஞ்சிருக்காரு.''

"பாடுபட்டா என்னவாம்? யாருக்காகப் பாடுபடறாரு? போங்கா. உன் மதிப்பு உனக்குத் தெரியலே."

"என்ன, என் மதிப்பு கண்டுட்டே?"

"சரி வா, இந்தத் தேங்காய் பழம் எல்லாம் முந்தாணியிலே கட்டிக்கோ."

"இது எதுக்கு?"

"புருசன் வீட்டுத் தேங்காய் பழம், அந்த வீட்டுப் பொறுப்பெல்லாம் இனிமே உன்னுடையது என்று அர்த்தம்."

"எனக்கு வெட்கமாக இருக்குது."

"என்னமோ, தேங்காய் பழத்தைக் கட்டிக்கிறதுக்கே வெட்கப்படறியே. நாளைக்கு?...."

"என்னவாம்?"

"அதுதான்!...." என்று சிரித்தாள் மரகதம்.

"சிரிச்சுக்கிட்டு இருந்தா என்ன அர்த்தம்?"

"பின்னே என்ன அர்த்தம், உன் இடுப்பிலே உட்கார்ந்துக்கிட்டு, க்வா, க்வான்னு சத்தம் போடுமே! அதைத் தூக்கிக்கிறபோது வெட்கம் இல்லை........"

"போ மரகதம்" என்று சொல்லிவிட்டு மோகனா, வெட்கத்தால் தலை குனிந்தாள்.

"அடே, அக்காவுக்கு வெட்கம் வந்தாலும் அழகு இருக்கு, சந்தோஷம் வந்தாலும் அழகு" என்று சொல்லிக்கொண்டே, மரகதம் மோகனாவைக் கண்ணாடிக்கு முன் இழுத்துச் சென்றாள். அந்தக் கண்ணாடி இன்று சிரித்தது. 'ஏ, மோகனா, இதற்கு முன் ஆயிரம் தடவை என் முன் வந்து நின்று இருக்கிறாய். ஒரு நாள் ரதியைப் போல உடை உடுத்திக்கொண்டு நின்றாய். அடுத்த நாள் மன்மதனைப் போல் வந்து நின்றாய். அடுத்த நாள் நடராஜர் போல் உடை தரித்து நின்றாய். நீ தரித்துக்கொண்ட எந்தப் புது உடையையும் நான் பார்க்காமலில்லை. ஆனால் இன்று நீ தரித்திருக்கும் உடையில்தான் எனக்கு மகிழ்ச்சி.... எனக்கு மகிழ்ச்சி' என்று சொல்வது போல இருந்தது. மோகனாவின் உள்ளத்திலே ஆனந்தப் புயல் வீசியது. குனிந்துகொண்டே மரகதத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, கூடத்துக்கு வந்தாள்.

"அடேயப்பா, இவ்வளவு அழகியா இவள்!" என்று பார்த்தவர் வியந்தனர். அவள் கட்டியிருந்த பட்டுப் புடைவை தகடு தகடாக நெளிந்து கொண்டு; பள்ளமும் மேடுமாகக் காட்சியளித்தது. பூட்டிய நகைகள் எல்லாம் இன்று, அவள் புன்னகையில் மறைந்தன. எப்பொழுதும் தோன்றும் சந்திரவதனம் இன்று கவிழ்ந்து நின்றது. கண்கள் தரையைப் பார்த்தன. "நாணமும் வெட்கமும் நங்கையருக்கழகு" என்ற வாக்குகள் அன்றுதான் அவற்றின் முழுக்கருத்தைப் பெற்றன. முன்பே முகூர்த்தம்



நிச்சயித்து இருந்தாலும், பத்திரிகை அடிக்கப்பட்டிருந்தாலும், நாளை திருமணம் என நவின்றார் புரோகிதர்.

பரிசம் போடும் விழா இனிது முடிந்தது. எல்லோருக்கும் பாக்கு, வெற்றிலை, சந்தனம் வழங்கினார்கள். என்னதான் இருந்தாலும் இந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு வடிவாம்பாள் இவர்கள் பக்கத்தில் இருக்கவில்லை. வாசற்படி அருகிலேயே நின்றுகொண்டிருந்தாள். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரும், அவருடைய மனைவியும்தாம் மணையில் அமர்ந்திருந்தார்கள். பரிசம் முடிந்தவுடனே, மோகனா அவரை வணங்கினாள். அவருக்கு வாயால் பேச வரவில்லை. மனம் வாழ்த்தியது. "மோகனா, கிடைக்கக்கூடாத பாக்கியம் கிடைத்திருக்கிறது. நீ புதுசா ஒரு பாதையை வகுக்கறே. அந்த வழியிலே பரம்பரை ஓடணும். நீயும் அப்படியே நடந்துக்கணும்" என்று வாழ்த்தினார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

அப்பொழுது வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதிலிருந்து துவர் உடை தரித்து, திருநீறு அணிந்து, கையில் ஒரு சிறு பெட்டியுடன் இறங்கினாள் ரமாமணி. அவளது துறவுக்கோலத்தைப் பார்த்தவுடனே, எல்லோரும் பிரமித்தார்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

## ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே !



ஆயிரம் நூலைப் படித்தாலும் ஒரு ஆளைப் பார்க்கும் போது ஏற்படும் படிப்பினை அவைகளால் ஏற்படுவதில்லை. ரமாமணியின் காவி உடையையும், துறவுக் கோலத்தையும் கண்டவுடனே மோகனாவுக்கு ஒரு பெரிய திகில் ஏற்பட்டது. 'இவளும் பெண்தான்; ஆனால் இவள் ஏன் உலகை வெறுத்தாள்?' என்று எண்ணியதும், அவள் உள்ளம் துடித்தது. வாழ்க்கையில் இப்படியும் நேருமா? ஆண்மீதுதான் குற்றம். ஆனால் தண்டனை அனுபவிப்பவளோ பெண் என்று நினைத்தவுடனே, அவள் உள்ளம் கலங்கியது. "நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம் விதியின் பயனே பயன்" என்ற பாடலை எண்ணி மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். ஆயினும் அவள் பார்வை ரமாமணியின் மீதே இருந்தது.

"என்ன மோகனா, அப்படிப் பார்க்கிறே? நானும் மஞ்சளோடுதான் வாழ்ந்தேன். ஆனால் அதிலே சுண்ணாம்பு கலந்து போச்சு. காவியிலே

கொண்டாந்து விட்டிருந்து. என்ன செய்யறது? நான் கூட்டிச்சேர்த்த லட்சணம் அப்படி!''

''அக்கா, அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள். நீங்கள் வந்தது ரொம்ப சந்தோஷம்.''

வடிவாம்பாள் அருகே வந்து நின்றாள். ரமாமணியை ஏற இறங்கப் பார்த்தார்கள். மரியாதைக்காக ''வாங்க'' என்றாள்.

அப்போது, ''அம்மா, வாங்கம்மா. நேத்திக்கு வீட்டிலே கலியாணத்துக்காகப் படைப்புப் படைச்சோம். எனக்கு உங்க நினைப்புத் தான் வந்தது. நீங்க ஏத்தி வச்ச விளக்குத்தானே மோகனாவுடைய உயிரு! வாங்க!'' என்று வாதன் அன்போடு வரவேற்றான். அவளுடைய பெட்டியைக் கையில் வாங்கிக்கொண்டான்.

அப்பொழுதும் மோகனாவின் சிந்தையில் இருந்த கலக்கம் நீங்க வில்லை. 'நமக்கு நாளை கல்யாணமாகப் போகின்றது. ஆனால் இன்று நம் முன்பு ஒருத்தி, காவி உடையுடன் வந்து நிற்கிறாள். இது என்ன கூறுகிறது?' என்று எண்ணி மோகனா திடுக்கிட்டாள். 'சீ, பேதை மனமே! இது என்ன தவறான யோசனை' என்று உடனே சமாதானம் செய்து கொண்டு, ரமாமணியை உபசரித்து, ''பரதேசியார் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

''அவுங்க எப்படியம்மா வர முடியும்? நான் ரயிலிலே வந்துட்டேன். சாமி நடந்து வருபவர்களாயிற்றே. நான் அவசரமாகப் போகிறவள். அவரு ஆற அமர இருப்பவர். என் வேகம் அவரு வேகத்துக்கு ஒத்து வருமா?'' என்று சொல்லிவிட்டு, ரமாமணி மோகனாவுடன் உள்ளே சென்றாள்.

வேதம், கீதம், சடங்கு, சாத்திரம், சகுனம், சந்தனம், புஷ்பம், கோபம், சந்தோஷம், உறவு, உபசாரம் என்ற உணர்ச்சிகள் நிறைந்தது கல்யாணம். அங்கே துறவுக் கோலத்தில் ரமாமணி தோன்றி சிறிது கலக்கிவிட்டாள். ஆயினும் அடுத்த கணமே கலகலப்புடன் காணப்பட்டாள், மோகனா.

'பெண் அவனுக்குத் துணை. அவனுடைய வாழ்க்கைத் துணைவி அவள். அவள் வந்தால்தான் வயல் விளையும். அவள் இருந்தால்தான் இல்லறம் நடக்கும். அவள்தான் இல்லற விளக்கு' என்று எண்ணி பெண் வீட்டுக்குப் போய், பெண் கேட்டுப் பெருங்கிளை வளர்ப்பதுதான் தமிழர் திருமணம். இருவரும் சம்மதித்து, முறைப்படி அந்தப் பெண்ணைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து, பிறகு தன் செலவில் தன் வீட்டிலேயே கல்யாணம் செய்துகொள்ளுதல்தான் மரபு. இந்த முறையால் பெண்ணை ஆண் மகன் தேடித் திரிந்து தேர்ந்தெடுப்பதால் பெண்ணின் பெருமை யாவராலும் உணரப்படுகின்றது. பின்னால் தகராறு ஏற்படுவதில்லை. பெண்ணின் வாழ்க்கை கண்ணீரால் நனைக்கப்படுவதுமில்லை. சண்முகத்தின் திருமணம் காதலில் விளைந்த



கடிமணம். ஆயினும் பழைய பண்பை விடாமல், அவன் பெண் கேட்கவும் புறப்பட்டதுண்டு. ஆதலால் இன்று பெண் அழைப்புக்கும் பிரமாதமாக ஏற்பாடு செய்திருந்தான்.

வடக்கு வீதியில் மேலண்டைக் கோடியிலே வடிவாம்பாள் வீடு. பிள்ளை வீட்டுக்காரர்கள் தங்குவதற்கு, வடக்கு வீதியின் கீழண்டைக் கோடியிலே உள்ள முருகப்பிள்ளை பங்களாவில் ஏற்பாடு செய்திருந்தார்கள். பெண் அழைப்பதற்கென்றே நாகைப் பட்டினத்திலிருந்து மாக்காய ரின் ஆறு குதிரை சாரட்டு வந்து நின்றது. சாதாரணமாக அக்காலத்தில் குதிரை வண்டி என்றாலே கூட்டம் கூடும். ஆறு குதிரைப் பூட்டினில் பெண் அழைப்பு என்றால் கேட்க வேண்டுமா? ஆனால் மோகனா, அவ்வளவு பெரிய ஆடம்பரத்தை விரும்பவில்லை. ''இது தியாகராஜன் தேரும் திருவீதி. அதில் நான் வாகனத்தில் செல்வதை விரும்பவில்லை. என் வீட்டிற்கு நான் நடந்தே போகிறேன்'' என்று சாரட்டை வேண்டா மென்று கூறிவிட்டாள். ஆனால், வடிவாம்பாளுக்கு மாத்திரம் தன்னுடைய மகளின் எண்ணம் புரிந்தது. சிங்கபுரம் மைனரின் வண்டியில் வந்த நாள் முதல் அவள் சாரட்டில் உட்காருவதையே விரும்பவில்லை என்று எண்ணிக்கொண்டாள்.

அன்று செவ்வாய்க்கிழமையாதலால், விளக்கு வைத்த பிறகுதான் பெண்ணை அழைக்க வேண்டும் என்று வடிவாம்பாள் கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

இரவு எட்டு மணியாயிற்று. பெண் அழைக்கும் நேரம் வந்தது. வாசல் எங்கும் காந்த விளக்குகள் வரிசை வரிசையாக 'உஸ்' என்று கூச்சலிட்டுக்கொண்டே வந்து நின்றன. கடம்பவனம் பிள்ளையின் கம்புக்கு முன்னே, விளக்குக்காரர்கள் எல்லாம் தடுங்கிக்கொண்டிருந் தார்கள். சந்தனம், கைலி, வெற்றிலை பாக்கு முதலியவைகளை எடுத்துக்கொண்டு பலர் தயாரானார்கள். தஞ்சையிலிருந்து வந்த பொட்டு சப்ளைக்காரர்கள் கையில் அரகஜா டப்பியை வைத்துக்கொண்டு, யார் யார் நெற்றியில் சித்திரம் தீட்டலாம் என இருந்தார்கள். கும்பகோணம் வாசனைச் சந்தனத்தின் மணம் திருவாரூர் முழுவதும் வீசியது. ஆனால் திருவாரூர்ப் பன்னீரோ, அதில் உள் நின்று வாசனை வீசும் உயிர் நான்தானே என்று பெருமை பேசிக்கொண்டது. ஊரிலே கல்யாணம், மாரிலே சந்தனம் என்றுகூடச் சொல்வார்கள். அவ்வாறிருக்கையில், உறவிலே கல்யாணம் என்றால் தருமன் விடுவானா? தருமன் சந்தனம் பூசிக்கொண்டான். முழங்கைப்புடங்கிலே சந்தனம் படவே இல்லை. போதாததற்கு மாலை நேரம் என்பதையும் மறந்து, சந்தனம் பூசும்போதே ஒரு பொட்டையும் இட்டுக்கொண்டு சாமியாடி போல் விளங்கினான்.

சங்கீதக்காரர் வீட்டுக் கல்யாணம் ஆனதால் ஒரு தர்ம சங்கடமும் வந்து சேர்ந்தது. மகா வித்துவானாகிய சண்முகத்தின் கல்யாணத்திற்கு யாரை மேளம் வாசிக்கச் சொல்வது என்பதுதான் அது. சண்முகத்துக்கு

உலகிலுள்ள எல்லா வித்துவான்களுமே வித்துவான்கள். ஒருவருக்கும் பிடிக்காத பாட்டில்கூட அவனுக்கென்று ஒரு பிடி இருக்கும். ஆதலால், ஒருவரை வாசிக்கச் சொல்லி இன்னொருவரை வாசிக்கச் சொல்லா விட்டால் மனத்தாங்கல் வரும் என்று எண்ணி, எல்லா வித்துவான்களுக்கும் பத்திரிகை வைத்தானேயல்லாமல் நீங்கள் வந்து வாசிக்க வேண்டுமென்ற ஒருவரையும் சொல்லவில்லை.

ஆயினும் குருபக்தி என்று ஒன்று இருக்குமானால் அது இன்னும் சங்கீதக்காரர்களிடம்தான் இருக்கிறது என்று சொல்வதற்கிணங்க, இன்று கல்யாண வீட்டு வாசலிலே ஒரு காட்சி நிகழ்ந்தது.

வெள்ளை வணத்துப் பிள்ளையாண்டான் ஒருவன் அங்கு நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பத்து வயதுதான் இருக்கும். மூக்கிலே தளுக்குப் போட்டுக்கொண்டு, கையில் தங்கக் காப்புடன் அவன் நாதஸ்வரத்தைக் கையில் வைத்து நின்ற அழகே அலாதியாக இருந்தது. இசை வேளாளர் குடும்பத்திலே பிறந்து, இரவு பகல் பாராமல் இசையைப் பயிலும் அவனுக்கு, சண்முகத்தின் தோடியிலே மயக்கம். தஞ்சை ஜில்லாவில் எங்கு சண்முகம் வாசித்தாலும் அங்கு அவனைக் காணலாம். நடந்தே போய்விடுவான். இரவு முழுவதும் கேட்பான். அடுத்த நாள் முழுவதும் சாதகம் செய்வான். "தேனைக் குடிச்சா நாக்குலே இனிக்கும். சிக்கலார் ஊதினால் சிந்தையே இனிக்குதே" என்று சொல்லும் அந்த இளம் சிங்கம் இன்று அவர் முன் ஊதவே வந்துவிட்டான். அவனுக்குச் சிக்கலார் போல் தனக்கு ஊதத் தெரியாது என்று சொல்லிக்கொள்வதில் வெட்கமேயில்லை. சண்முகத்தின் வீட்டு வாசலில் இந்தக் கற்றுக்குட்டி வாசித்தான் என்று ஊரார் ஏசுவார்களே என்று கவலையும் இல்லை. 'நடராஜாவுக்கு முன்னே மனிதர்கள் நாட்டியமாடவில்லையா? நான் காணிக்கை செலுத்த வந்திருக்கிறேன்' என்று கூறி, ஏகலைவன் போல் அவன் வாசிக்க ஆரம்பித்தான். இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டே எல்லோரும் நின்றார்கள்.

நடுக் கூடத்திலே பெண் அழைப்புக்கு அலங்கரித்து நிற்கும் மோகனாவின் அழகைப் பார்த்துப் பார்த்து மயங்கினாள் வடிவாம்பாள்.

இந்நிலையில் பிள்ளை வீட்டுக்காரர்கள் உள்ளே நுழைந்தார்கள். பெண் அழைப்புக்கு வந்திருக்கிறார்கள் என்று கூறவே வடிவாம்பாள் அங்கும் இங்கும் ஓடினாள். எதையோ தேடினாள். அவள் தேடியது எல்லையம்மன் கோவில் விபூதிப் பிரசாதம். அதை எடுத்துக்கொண்டு வந்து மோகனாவின் நெற்றியில் இட்டாள். "சரி சரி, சீக்கிரம் புறப்படுங்க, புறப்படுங்க" என்றாள்.

பூஞ்செடி நகர்ந்து வருவது போல, புது நிலவு புறப்படுவது போல, பொங்கி வரும் அழகுடன் மோகனா புறப்பட்டாள். சந்திரனைச் சுற்றியிருக்கும் நட்சத்திரக் கூட்டங்கள் போல, எழிலரசிகள் பலர் அவளை இரு கைகளிலும் கை தாங்கி அழைத்து வந்தனர். கன்னி



புறப்பட்டாள் கணவன் வீட்டுக்கு. கல்யாணமென்ற சடங்கு நாளைக்குத்தான். ஆனால் உண்மையில் இதுதானே அவள் கணவன் வீட்டுக்குச் செல்லும் நாள்.

'வள்ளியை வேலன் அழைத்துக்கொண்டு சென்று தன் வீட்டிலேதான் திருமணம் செய்துகொண்டார்' என்று எண்ணி, மோகனா அடி எடுத்து வைத்தாள். உடனே அவள் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை ஓர் ஆனந்தம் ஏற்பட்டது. ஆனால் தன் மகள் ஓர் அடி எடுத்து வைத்ததும் துடிதுடித்தாள் வடிவாம்பாள். இதுவரை யாரை எண்ணி எண்ணி அவள் உயிர் வாழ்ந்தாளோ, தன் வயிற்றில் எவள் பிறந்தவுடனே அவள் பேரானந்தம் அடைந்தாளோ, எவள் வளருவதைக் கண்டவுடனே, தன்னுடைய கலை வளர்ச்சிகளையெல்லாம் நிறுத்திக்கொண்டாளோ அவள், அந்த அருமை மகள், இன்று, அவளுடைய வீட்டுக்குப் போகிறாள் என்பதை எண்ணியதும் தாய் இதயம் வெடித்தது. இரண்டு வயதிலே தன்னுடைய எழிற்செல்வம் மோகனா, தன் எதிரில் வந்து, நின்று, தித்திதை என்று ஆடியது அவள் கண்ணுக்கு முன் வந்து நின்றது. அந்தக் காட்சியே தித்தித்தது. மூன்று வயதில் முறுவல் அரும்ப, "அம்மா, இந்தா பாரு, பாடறேன்" என்று சொல்லி 'ஸ்ரீ ராமச்சந்திரனே' என்று மகள் பாடியதும் அவள் பரவசமானதும் அவளுக்கு ஞாபகம் வந்தது. ஐந்து வயதில் அவளுக்கு வெல்வெட்டுச் சட்டை போட்டு, தலை பின்னி, உச்சியில் பூ வைத்து உச்சி முகர்ந்ததை எண்ணினாள். அவளுக்கு மெய் சிலிர்த்தது. தமிழைக் கற்றுக் கொடுத்த காட்சியும், மோகனா அரிக்குழியில் விரல் வைத்து அன்னை முகம் பார்த்த தோற்றமும் அவள் கண் முன் வந்தன. தனக்கு ஆண் மகவு இல்லையே என்ற குறையால் அவளுக்கு இடையில் பட்டுக்கட்டி, சட்டை போட்டு, தலையில் குல்லாவை வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்ததை எண்ணினாள். பிள்ளைப் பிராயத்தில் தன் மகள் எந்தெந்த மூலையில் தவழ்ந்து விளையாடினாள், எந்த இரவுகளில் பசித்து அழுது பால் வேண்டும் என்று கேட்டாள் என்ற பதினெட்டு வருஷக் கதையும் அவள் கண் முன்னே ஒரு படம் போல் ஓடியது. அவள் உள்ளம் குமுறியது. இத்தனை வயது வரையில் தான் என்ற ஆணவத்தில் நிமிர்ந்து நின்ற அந்தத் தாய், இன்று மோகனா ஓர் அடி எடுத்து வைத்தவுடனே, அத்தனை செல்வமும் அடி எடுத்து வைத்தது போல் விசும்பி விசும்பி அழுதாள். 'அடக்க வேண்டும். நல்ல நாள். அவள் புருஷன் வீட்டுக்குப் போகிறாள்' என்று எண்ணிய போது, கண்ணீர் இனித்தது. ஆயினும் அழுகை அதிகமாயிற்று. தகுந்த மாப்பிள்ளைதான் சண்முகம். இதற்குமேல் யாரும் கிடைக்க மாட்டான் என்று சமாதானப்படுத்திக்கொள்ளும் போது, மேலும் துக்கம் அதிகமாயிற்று.

இந்தச் சமயத்திலே தன் மகள் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள். பட்டு முன்றானையால் மகள் அறியாமல் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். 'மகள் என்னை வணங்க வருகிறாளே, அவளை வாழ்த்தி, கணவன் வீட்டுக்கு அனுப்ப வேண்டுமே, அழக்கூடாதே. என் துக்கத்தை

அவள் பார்த்துவிடக்கூடாதே. இதை இப்போது எப்படிச் செய்யப் போகிறேன்?' என்று அவள் இதயம் துடித்த துடிப்பைத் தாய் உள்ளம்தான் அறியும். தன் மகள் புதுப் புடைவை கட்டிக்கொண்டு, தன்னை வணங்குவதை அந்தத் தாய் ஆயிரம் முறை அனுபவித்து இருக்கிறாள். ஆனால் இன்று வணங்குவது அது போன்ற வணக்கமல்ல. மகள் தன்னிடம் விடைபெறப் போகிறாள். இனி இன்னொரு வீட்டுப் பெண்ணாகிவிடுவாள். தன் மகள் என்ற பெயரில் தானே எல்லாம் செய்த காலம் இன்றுடன் முடிந்தது என்று வடிவாம்பாள் கற்பனை ஓடியது. துக்கம் நெஞ்சை அடைத்தது. ''என் கண்ணே! கண்ணின் மணியே! உன்னை விட்டு இனி எப்படி இருப்பேன்? நீ வளைய வளைய இந்த வீட்டிலே வருவதைப் பார்த்த கண்கள் இனிமேல் வெறிச்சோடிப் போய்விடுமே!'' என்று குலுங்கி அழுதாள். அடக்க அடக்க அன்பு ஆற்று வெள்ளம் போல் ஆயிற்று. ''என் வாழ்க்கையிலே உனக்கு நான் செய்ய வேண்டிய கடமைதான் இது. ஆனால் இந்தக் கடமையே என்னை அடியோடு குலைத்துவிட்டதே'' என்று குமுறிக்கொண்டு, அதே சமயத்தில் மகள் மண வாழ்வு நன்றாக இருக்க வேண்டுமென்று இறைவனையும் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள் பெற்ற அன்னை.

அது ஆனந்தமா, துக்கமா என்பதை யார்தான் சொல்லமுடியும்? ஆனால் அவள் எதிரில் வந்து நின்ற அவள் செல்வ மகள், தன் தாயின் இதயம் துடிப்பதை ஒரு நொடியில் அறிந்தாள். அவளுக்கும் மனதிலே எத்தனையோ எண்ணங்கள் ஓடின. நயனங்களிலே கண்ணீர் நிறைந்தது. மௌனமாக அன்பே உருவாம் அன்னையின் காலில் பணிந்தாள். பூத்துக்குலுங்கும் பவழ மல்லிகையில் இருந்து காற்றில் உதிர்ந்த பூ ஒன்று அதன் அடி மரத்தில் அர்ச்சிப்பது போல் இருந்தது அன்னையை மகள் வணங்கிய அந்தக் காட்சி. ''என் ஆத்தா'' என்று சொல்லி மகளை இரு கைகளாலும் அள்ளினாள் வடிவாம்பாள். ஆரத் தழுவினாள். அன்பு சொரியும் தன் மலர் வாயால், ஆயிரம் முத்தங்களை அவள் கன்னத்திலும் தலையிலும் சொரிந்தாள். ஆனந்தக் கண்ணீரால், தன் மகளை மஞ்சனமாட்டினாள். மகளின் முகத்திலே கண் மை கரைந்து வழிவதைக் கண்டாள். கண்ணீர் பொங்கி வருவதைக் கண்டாள். உடனே அவள் கன்னங்களிலும், கண்ணீர் ஓடியது. தன் மகள் கண்ணைத் தாய் துடைத்தாள். ''என் செல்வம், கலங்காதேம்மா. நல்ல புருஷன். தங்கமான புருஷன். நீ கொடுத்து வச்சிருக்கே. நீ பாக்கியம் பண்ணியிருக்கே. நான்தான் முட்டாள்தனமா நாலு மாசம் முன்னாடி நடக்க வேண்டிய கல்யாணத்தைத் தள்ளி வச்சுட்டேன். தியாகராசர் கிருபையிலே எல்லாம் நல்லா நடக்கும். நீயும் மாப்பிள்ளையும் நல்லா இருப்பீங்க. என்ன வந்திடுத்து இப்போ? இன்னும் ஒரு வருசம் நான் பல்லைக் கடிச்சிக்கிட்டு இருக்கணும். அவ்வளவுதானே! அப்புறம் என் வீட்டிலே மறுபடியும் பிள்ளை விளையாடாதா? என் தோளை விட்டுக் கீழே இறக்க மாட்டேண்டி. மோகனா, நீ பிறந்த வீட்டுக்கு ஒரு பெண்ணைப் பெற்றுக்



கொடு. ஒரு நல்ல பிள்ளையைப் பெற்றுக் கொடு. இந்த வீடு தெருகிறன்று வாழை மராமட்டம் இருக்கணும். போ, தங்கம், போ. புருஷன் வீட்டுக்கு ஆனந்தமா போயிட்டு வா'' என்று ஆவேசத்தில் சொல்லி ஹோவென்று அலறினாள், பத்து மாதம் சுமந்து அந்தப் பைங்கிளியை ஈன்ற பாக்கியவதி.

'அன்னையெனும் பெருந்தேவே, உனக்கு ஆயிரங்கோடி வணக்கங்கள்.' அங்கிருந்த அத்தனை பேரும் அன்பிலே கட்டுண்டு அன்னைக்குத் தலை வணங்கினார்கள்.

''உம். பெண்ணைப் பெத்துட்டுக் கண்ணைக் கசக்கினால் முடியுமா? வா அம்மா'' என்று மகளின் கைகளை விரக்தியுடன் பிடித்துக்கொண்டு ''ஏ முத்துக்குமரு, எங்கே போயிட்ட நீ?'' என்று இரைந்தாள் வடிவாம்பாள்.

முத்துக்குமர நட்டுவனார் கையில் திருவாசகத்துடன் ஓடி வந்தார். அவர் கண்களும் கலங்கியிருந்தன. ஆண் மகனாதலால், தன் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு நின்றார். ''மோகனா, ஒரு மணையை எடுத்துப்போடு'' என்று மகளுக்கு உத்தரவிட்டாள் தாய். மோகனா ஓடிப் போய் வெள்ளிக் குமிழ் வைத்த கருங்காலி ஆசனத்தைக் கொண்டுவந்து போட்டாள். நட்டுவனார் அதில் அமர்ந்தார். வடிவாம்பாள் உள்ளே சென்று, ஒரு பெரிய வெள்ளித் தாம்பாளத்தில் ஒரு ஜோடி மயில்கண் வேஷ்டி, இரண்டு அழகிய பீதாம்பரங்கள், நிஜமாகவே ஒரு தங்கச் சங்கிலி, நட்டுவனார் மனைவிக்கென்று ஒரு பட்டுப் புடைவை எல்லாவற்றையும் அவசர அவசரமாக எடுத்து வைத்தாள். அவற்றின் மேல் வெற்றிலையும் கொட்டைப் பாக்கும் வைத்து, அதில் பத்துப் பவுனையும் வைத்துக் கொண்டுவந்து தன் மகளிடம் கொடுத்தாள். ''இந்தா, கொடு. அவர் காலில் விழுந்து கும்பிடு'' என்று சொன்னாள்.

'நம் குருவுக்கு குரு தட்சணை கொடுக்கிறோம்' என்று எண்ணிய போது மோகனாவின் உள்ளம் துடித்தது. ''இன்றோடு ஆட்டமும் நின்றுவிடப் போகின்றதா? எதற்காக இந்த அம்மா இப்படியெல்லாம் செய்யச் சொல்கிறாள்? கல்யாணமானால் என்ன? நாம் ஆடாமல் இருக்கப் போகிறோமா?'' என்று ஆத்திரமடைந்தாள்.

''ஐயா, கும்பிடறேனுங்க,'' என்று அஞ்சலி ஹஸ்தத்துடன் அவர் தாளைத் தொட்டுத் தலை வணங்கினாள்.

''தாயே, போய் வா! உன்னைப் போல ஒரு உத்தமப் பெண் கிடைக்காவிட்டால், என்னுடைய வித்தையெல்லாம் குடத்திற்குள் விளக்குப் போல ஆகியிருக்கும். நான் இன்று கொடுத்திருப்பது உன்னுடைய குலவித்தை. இந்தச் செல்வத்தை வழிவழியாக நீ வளர்க்க வேண்டும். சதுர் வேதங்களை ஆண் மகன் கையிலே ஒப்பித்தார்கள். சதுர் வேத சாரமாகிய சதுரை பெண் மகளிடம் ஒப்பித்தார்கள். வேதம் விளங்கட்டும், நாதம் ஓங்கட்டும், நாட்டியம் தழைக்கட்டும், நடராசன்

திருவருளால் கணவனுடன் நன்றாக வாழ்வாயாக!'' என்று உரைத்துத் தன் அருமை சிஷ்யப் பெண்ணைத் தலைக் கோலால் தலை தொட்டு ஆசி கூறினார். மோகனா தன் நன்றியறிதலை அடக்கினாள். கடகடவென்று சிரித்தாள்.

''ஏன் ஐயா, வைத்தீஸ்வரன் கோவிலுக்கு இன்னிக்கே வண்டி கட்டப் போறீங்களா?''

''பின்னே என்ன செய்வது அம்மா? இனிமேல் இந்த சன்மத்திலே வேறு யாருக்கு நான் நாட்டியம் கற்றுக் கொடுப்பது?''

''அப்படிச் சொல்லாதீர்கள் ஐயா. அந்த வீடும் கலைஞர் வீடுதான்.''

''அது சரியம்மா. நான் இல்லையென்றா சொல்கிறேன்? அது மட்டுமல்ல. அங்கே ஒரு குழந்தையைப் பெற்றும் நீ தருவாய். அப்பொழுது இந்த முத்துக்குமாரனுக்கு ஜதி சொல்ல பல்லே இருக்காதே. சொல்லே வராது! ஆனால் ஒண்ணே ஒண்ணு. ஒரு வரம், தாரியா? நான் இப்படி கேக்குறேன்னு நினைக்காதே!''

''என்ன வாத்தியாரைய்யா?'' என்று துடிதுடிக்கக் கேட்டாள் மோகனா.

''அம்மா, கலைதான் உன்னோடு கூடவே வளர்ந்தது. காதல் பின்னாலேதான் வந்தது. வெள்ளம் வந்து கிணற்றைத் தூர்க்கவிடக் கூடாது. கல்யாணத்துக்காகக் கலையைத் திண்டாட விட்டுடாதே. நான் நாட்டியம் பண்ண மாட்டேன் என்று சொல்லிவிடாதே'' என்று கூறியபோது, அவர் நாக் குழறியது. கண்களில் இருந்து முத்து முத்தாய்க் கண்ணீர்த் திவலைகள் உதிர்ந்தன.

''போங்க வாத்தியாரைய்யா. அம்மா கிடந்து ஒரு புறம் அழுவுது. நீங்க என்னடான்னா, கண்ணீர் விடறீங்க. எனக்கு என்னமோ செய்யுது'' என்று தலையைக் குனிந்தாள் மோகனா. பூமா தேவியின் பொன் மேனியில் கண்மலர் சொரிந்தது.

இதற்குள் பெண்கள் இழுத்தார்கள். மோகனா வாசலை நோக்கி நடந்தாள். ஆனால் அவள் கண்கள் வீட்டுக்குள்ளே எதையோ அங்குமிங்கும் தேடின. என்ன என்று அருகில் இருந்த மங்கையர் அத்தனை பேரும் கவனித்தார்கள். யாரைத் தேடுகிறாள், ஏன் தயங்குகிறாள் என்று ஒருவருக்கும் புரியவில்லை. வீட்டுக்குள்ளே நுழைந்து ஒவ்வொரு அறையாகத் தேடினாள்.

''என்னம்மா தேடறே? கதிர்காமத்திலே கிடைத்த அந்தக் குல மாணிக்கத்தைத் தேடறியா? அதை ஆசாரியாரிடம் கொடுத்துத் திரு மாங்கல்யத்திலே வைத்து இழைக்கச் சொல்லியிருக்கேன்'' என்றாள் வடிவாம்பாள்.

''அது இல்லேம்மா.... எங்கே?''

அவள் ''எங்கே'' என்று கேட்ட அந்த வார்த்தையில் ஏழ் கடல் அலையும் வீசியது. ஆழ் கடல் குழப்பம் அதில் இருந்தது.



''யாரம்மா?'' என்றாள் தாய்.

''அதுதான், நம்ம.... நம்ம.... வரதன்'' என்று நாத் தழுதழுக்கக் கேட்டுத் திணறினாள் மோகனா.

அப்போது தோட்டத்தில் நின்று அவன் தன்னைப் பார்ப்பது தெரிந்தது.

தோட்டத்துப் பக்கம் போனாள். அங்கே தனியாக நின்றது ஒரு பாக்குமரம். அந்தப் பாக்கு மரத்தின் பக்கத்திலே மத்தளக்கார வரதன், பயில்வான் வரதன், அஞ்சா நெஞ்சத்துடன் ஆயிரம் பேரை எதிர்க்கும் வரதன் பச்சைக் குழந்தைபோலக் குமுறிக் குமுறி அழுதுகொண்டு இருந்தான். அவன் உறவும் அல்ல, ஒரே வகுப்பும் அல்ல. அப்படி இருந்தும், அவன் ''தங்கச்சி.... தங்கச்சி'' என்று கூறி இடித்து விழுந்து விடுபவன் போலக் கலங்கி நின்ற காட்சியைக் கண்டாள் மோகனா. கற்சிலை போல் நின்றாள். என்றைக்கும் வரதா என்று அழைப்பவள், இன்று அவனை ''அண்ணா'' என்று அழைத்தாள். அவள் குரலைக் கேட்ட வரதன் துயரத்தை விழுங்கினான்.

''என்ன தங்கச்சி இன்னும் புறப்படலியா?'' என்று அழுகையை அடக்கிக்கொண்டு அவளை அதிகாரத்துடன் கேள்வி கேட்டான் வரதன். அவள் பதில் சொல்லவில்லை. ஆனால் பாக்கு மரத்தடியிலே நின்ற அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள்.

இதைக் கண்டவுடனே, பல்லைக் கடித்துக்கொண்டான் வரதன். இன்றுவரை தன் காலடியில் விழுந்து வணங்காத தன் வித்துவான் மோகனா, இன்று தன்னைக் காலில் விழுந்து வணங்குவதைக் கண்டவுடனே கதறினான். அவள் துயரத்தை அதிகப்படுத்திவிட்டான். அவள் விசும்பி அழுதாள்.

''ஏன் அண்ணே, இங்கே நீ வந்துட்டே?''

''இல்லே தங்கச்சி. பட்டுக்கோட்டையில் இருந்து இந்தப் பாக்குக் கன்றை வாங்கிக்கொண்டு வந்து உன் கையாலே நடுன்னு சொல்லிக் கொடுத்தேன். நீ நட்டு வச்சே. பச்சைப் பசேலென்று உன்னோடு போட்டி போட்டுக்கிட்டு அழகாக வளருவதைக் கண்டேன். உனக்குக் கல்யாணம் ஆகணும். உன் குலம் வாழவேண்டும். அதிலே குருத்துகள் வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இன்னைக்கு அந்த ஆசை நிறைவேறியது. சரி, வா வா!'' என்று கூறி அவள் கூடப் புறப்பட்டான் அந்தக் கூடப் பிறவாதவன். எல்லோரும் வெளியே வந்தார்கள். வடிவாம்பாள் பட்டுப் புடைவை உடுத்தி, நெற்றி நிறையக் குங்குமத்துடன் தன் மகளுக்குப் பின்னாலே வந்து நின்றாள். மாப்பிள்ளைத் தோழனாகிய காரைக்கால் நடேசனும், மற்றவர்களும் முன்னே நடக்க, பெண் அழைப்பு ஆரம்பமாகியது.

அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் மோகனாவின் மீது அலாதியான பிரியம். அவள் திருவாருக்குப் பெருமையைத் தேடித்

தந்தான் என்று பெருமையாக எண்ணி வந்தார்கள். "அடியே, மோகனாவுடைய அழகைப் பார்த்தாயா?" என்றாள் ஒரு பெண்.

"வெட்கத்தைப் பார்த்தாயா?" என்றாள் இன்னொரு பெண்.

"சாட்டு வேண்டாமென்று சொல்லிவிட்டானாமே!" என்று புகழ்ந்தாள் மற்றொரு பெண்.

எல்லோரும் அவள்கூடவே ஓடி விளையாடிய பெண்கள். மோகனாவும் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து, "பார்த்தாயா, நான் பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோதே சொன்னேன் அல்லவா, கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு. நாளைக்குக் கண்டிப்பாக நீ வந்திடணும்" என்று அழைத்தாள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அவளை நிறுத்தி வைத்து, ஆரத்தி எடுத்தார்கள். "அலமு, மோகனாவுக்கு அந்தப் பட்டு ரவிக்கைத் துண்டைக் கொண்டுபோய்க் கொடு" என்றாள் ஒரு தாய். பல தாய்மார்கள் தங்கள் கையாலே நெற்றியில் குங்கும திலகம் இட்டார்கள். வேத வித்துகளாக விளங்கும் பல பெரியோர்கள் அந்தக் கலைச் செல்வியை வாழ்த்தினார்கள். வெள்ளை வளத்துப் பிள்ளையாண்டான் நாதஸ்வரத்தில், தீக்ஷிதர் அவர்களின் கௌளை கீர்த்தனம் முழங்கியது. இன்னும் பல பையன்களும் அவனுடன் சேர்ந்தார்கள். ஆறு திமிரி நாயனங்களில் இருந்து ஐந்து கட்டை சுருதியில்,

**தியாகராஜ பாலயா ஸுமாம்**
**நித்யானந்த கந்த**
**சோமாஸ்கந்த வீதிவிடங்க**

'தியாகராஜப் பெருமானே, திருமணத் தம்பதிகளைக் காப்பாற்றும்: அஜபா நடனமூர்த்தியே, நிறைந்த ஆயுளை அருளும். ஆடரவக் கிண்கிணியானே, ஆனந்தம் தாண்டவமாடட்டும். உமையொரு பாகர், இவர்கள் இருவரும் ஈருடலும் ஓருயிராய் என்றும் வாழட்டும், அருள் புரிவாய், அருள் புரிவாய்' என்று வேண்டின.

ஊர்வலம் அரண்மனையை நெருங்கியது. அங்கே ஆண்களின் கூட்டம் ஒன்று அவள் வருவதைப் பார்த்துக்கொண்டே நின்றது. ஒருவர் சொக்கினார். ஒருவர் மயங்கினார். ஒருவர், 'பத்து வேலி நிலம் இருந்து பயன் என்ன! ஒரு ஸரிகமபதநிஸ வில் மயங்கிவிட்டாளே!" என்று பிரமித்தார்.

இன்னொருவரோ, அழகை அள்ளி உண்டு அது தொண்டையில் அடைத்துக்கொண்டு பேச வாய் வராமல் திண்டாடினார். ஆனால் ஒருவருக்கும் தெரியாமல் ராஜாங்கக் கோடி கட்டடத்தின் மாடியிலே, எந்த மாடியில் இருந்து சண்முகத்தின்மேல் நாகலிங்கம் கத்தியை எய்தாரோ அந்த மாடியில் நின்றுகொண்டு, தன் கண் அம்புகளை மோகனாவின் மேல் எய்துகொண்டே இருந்தான் ஒரு மன்மதன். அவன் வேறு யாருமல்ல, சண்முகமேதான். அவன் கண்ணுக்கு மோகனா,



மோகனாவாகவே தெரியவில்லை. மோகனாக தேவதையே நடந்து வருவது போலத் தெரிந்தது.

'அந்தோ! இன்னும் முப்பது நாழிகை இருக்கிறதே முகூர்த்தம்!' என்று ஏங்கினான். அவளுக்கும், அவர் எங்கேயாவது கண்ணில் அகப்பட மாட்டாரா என்ற எண்ணம். கண்கள் அங்குமிங்கும் ஓடின. அந்தக் கடைக்கண் பார்வை ஒன்றே போதும். கண்ணோடு கண்கள் நோக்கின, கை கால்கள் தள்ளாடின.

பெண் அழைப்பு முடிந்தது. இருவரும் எப்பொழுது விடியும், விடியும் என எதிர்பார்த்தார்கள். காதலர் தாபத்தைக் கண்ட ஆதவனும் அரைமணி முன்பே ஓடி வந்தான். விடிந்தது.

திருமணப் பந்தல் கொள்ளமுடியாத கூட்டம் அது. ஆதூர் அல்ல, அத்தனை ஊருமே அங்கு இருந்தது. அத்தனை நாதஸ்வரக்காரர்களும் சங்கீத வித்துவான்களும் அங்கே இருந்தார்கள். நல்லிசை என்றே காரணப் பெயர் படைத்த கிராமம் தஞ்சை ஜில்லாவில்தான் இருக்கிறது. ஆம், மற்ற ஊரிலே கலம் கண்டால், மாயூரம் தாலுகாவிலே கலத்துக்குப் பதக்கு அதிகமாகக் காணும். கஞ்சிக்குப் பஞ்சமில்லை, கலைகளுக்கும் பஞ்சமில்லை. பரதமும் சங்கீதமும் நாதஸ்வரமும் செழித்தது மாயூரம். ஊருக்கு ஊர் ஒரு பெரிய நாதஸ்வரக்காரர், ஊருக்கு ஊர் ஒரு மகா வித்துவான். ஊருக்கு ஊர் ஒரு பரத நாட்டிய விற்பன்னர். நாலு வாழை மரங்களுக்கு நடுவே ஒரு சிறிய தோப்பு. அதிலே கலைத்தேவி களி நடனம் புரிவாள். அன்று கல்யாண மண்டபத்திலே மாயூரம் தாலுகாவில் உள்ள அத்தனை மகா வித்துவான்களும் அத்தனை மிராசுதாரர்களும் அமர்ந்து இருந்தார்கள்.

அமுதைக் குழைத்தூட்டுவது போல் ஆபேரி ராகத்தில் உள்ள "நகுமோமு" கீர்த்தனையை நாடெங்கும் விதைத்த மகானாகிய திருமருகல் நாயனக்காரர் அங்கு அமர்ந்திருந்தார்.

ஊதினால் நடராசனுக்கு ஊதுவேன் என்று கூறி உசேனி ராகத்தால் உள்ளங்களைக் குளிர்வித்த சிதம்பரத்தார் சிம்மம்போல் வீற்றிருந்தார்.

ஆனந்தபைரவி தில்லானாவால் திசையெங்கும் புகழ்பெற்ற இலுப்பூர் பெரியவர் வந்திருந்தார்.

சங்கீத சாஸ்திரங்களை எழுதிய மதுரையார் அமர்ந்திருந்தார். திருவாசகத்தைத் தேன் போல் ஊதும் காரைக்கால் நாயனக்காரர் செக்கச் சிவந்த உடம்புடன் வீற்றிருந்தார். இவர்கள் அருகில் நின்ற பல சிஷ்யர்கள் தாம்பூலத்தை மடித்து மடித்துத் தந்துகொண்டிருந்தார்கள். அவர்களும் விரலில் இடுக்கி, பிறர் பாராவண்ணம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாகூர், செம்பொன்னார் கோவில், அம்மாப்பேட்டை, நீடாமங்கலம், திருவாவடுதுறை, திருவீழிமிழலை, நாச்சியார்கோவில், அம்பாசமுத்திரம் முதலிய ஊர்களிலிருந்து பெரிய பெரிய நாதஸ்வர வித்துவான்கள் வந்திருந்தனர். இசையால் ஒரே இரவில் எத்தனையோ ஆயிரக்

கணக்கான அன்பர்களுக்கு கர்ணாமிர்த கானத்தை அளித்த இசைக் கடல்கள் பல அங்கு எழுந்தருளி அடக்க ஒடுக்கமாய் அமர்ந்திருந்தார்கள்.

இன்னொரு புறத்திலே சங்கீதத்தின் பாதுகாவலராக விளங்கிய பல்லவி அய்யர், தானத்தில் சிறந்த வீணையில் பெரியவர், பாம்பும் பால் பருக வாசித்த குழலாசிரியர் முதலியவர்களும், சிதம்பரம், தஞ்சாவூர், கல்லிடைக்குறிச்சி, மைசூர் முதலிய இடங்களிலிருந்து வந்த வித்துவான்களும், வைரக் கடுக்கன்களும், தங்க உருத்திராட்சங்களும் மின்னியவாறு நாதோபாசனையில் ஈடுபட்டுப் பழுப்பேறிய திவ்விய தேஜசுடன் வேதகால ரிஷிகளைப் போல் வீற்றிருந்தார்கள். பெயர் பெற்ற நட்டுவனார்கள் பலர் தஞ்சை, பந்தணைநல்லூர், வேலூர், வழுவூர் முதலிய இடங்களிலிருந்து வந்திருந்தார்கள். மெலட்டூர், சூலமங்கலம் இரண்டிலும் இருந்து பாகவத மேளா நாட்டிய வித்துவான்களும், மணமேல்குடி, தஞ்சை, கும்பகோணம் முதலிய இடங்களில் இருந்து பண்பையும் பக்தியையும் இசையுடன் கலந்து வளர்த்த பாகவத உத்தமர் பலரும் வந்திருந்தார்கள். இவ்வாறு தமிழ்ச் சங்கம் போல் இசைச் சங்கமே அங்கிருந்தது. ஈசன் திருச்சபையே அதுதான்.

கல்யாணப் பந்தல் நடுவே, திருமுத்துப் பந்தலின்கீழ் மனமொத்த தம்பதிகள் இருவரும் இருந்தார்கள். சண்முகத்தின் தலையிலே பட்டுத் தலைப்பாகை வைத்து, இடுப்பிலே மயில்கண் வேஷ்டி கச்சம் கட்டி, மார்பிலே அங்கவஸ்திரத்தைப் பூணூல் போலப் போட்டிருந்தார்கள். பத்து விரல்களிலும் வைர மோதிரங்கள் மின்னின. கழுத்திலே பல பெண்கள் அணிந்த சங்கிலியுடன் கண்ணுக்கு மையிட்டு, காலுக்கு மஞ்சளிட்டு, மாப்பிள்ளைக் கோலத்தில் அமர்ந்திருந்தார் அந்த மகா வித்வான்.

தலை நிறைய மணமலர், கண் நிறைய மை, மார்பு நிறைய மாலைகள், வதனம் நிறைந்த அழகு, உள்ளம் நிறைந்த உயர்குணம் இவைகளோடுகூட சௌபாக்கியவதி மோகனாம்பாள் சண்முகத்தின் வலப்புறத்தில் அமர்ந்திருந்தாள். கல்யாணச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன.

சண்முகம் மோகனாவின் மலர்க் கரத்தில் காப்பு நாண் கட்டினான். ''எங்கள் மனத்தில் கொண்ட எண்ணம் இடையூறின்றி நிறைவேறுக'' என மோகனா எண்ணினாள். அவசரத்தில் அவன் கட்டியபோது அவன் வெட்கத்தால் இளைத்தான். கடைக்கண்ணால் அவனைக் கண்டு பெருத்தாள். காப்பு நாண் இறுகியது. கண்களில் ஆனந்தம் பெருகியது. பொல்லாத பெண்ணல்லவா? இதைக் கவனித்த மரகதத்திடம் புகை கண்ணில் படுகிறது என்றாள். இதை அரைக் காதால் கேட்ட சண்முகம், ''ஊதவா!'' என்றான் மெதுவாக.... இதை உண்மையென்று நம்பிய புரோகிதரோ விசிறியால் ஓம குண்டத்தை விசிறி, புகையை மேலும் கிளப்பிவிட்டார். பெற்ற வயிற்றில் பால் சொரிய, பிறர் எவரையும் காணாமல் தன் மகளையும் மருமகனையும் பார்த்தாள் வடிவாம்பாள்.



திருவாளர் சிற்றம்பலம் குமாரசாமியும் ஸ்ரீமான் செட்டியாரும் ஆளுக்கொரு வெள்ளிப் பேலாவைக் கையில் வைத்துக்கொண்டு அதில் இருந்த புது ரூபாய்களை ஏழைகளுக்கு இன்முகத்துடன் எறிந்து விழாவை அளித்துக்கொண்டிருந்தார்கள்.

மலரும் மஞ்சளும் கலந்த அரிசியும் கொண்ட தாம்பாளத்தின் நடுவே, மங்கல நாணுடன் மகிமை பெறும் தாலியை வைத்து, ஒவ்வொருவர் கையாலும் தொட்டு வாழ்த்தி வாங்கிக்கொண்டே வந்தார் முத்துக்குமார நட்டுவனார்.

முகூர்த்தம் நெருங்கியது. சண்முகம், மோகனா இருவரும் யாரையோ எதிர்பார்த்து வாசலை வாசலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மணப்பந்தலுக்கு வெளியே யாரேனும் பெரியவர்கள் நிற்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் நட்டுவனார் மணப்பந்தலைவிட்டு வெளியே வந்தார்.

அங்கே அவர்கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்த தெய்வம் தியாகராஜாவின் சந்நிதியிலிருந்து ஓடி வந்தது. அருள் வடிவான அந்த உருவத்தின் முழங்கால் வரை பல திருத்தலங்களின் தூசி படிந்து இருந்தது. கையில் கம்பை ஊன்றிக்கொண்டே அது வேகமாக ஓடி வருவதைக் கண்டார், நட்டுவனார். ''சாமி, வந்தீர்களா?'' என்று வாய் திறந்து வரவேற்றார்.

அந்தக் குரலைக் கேட்டவுடனே பசுவின் குரல் கேட்ட கன்று போல் சண்முகம், மோகனா இருவருக்கும் சித்தம் குளிர்ந்தது. தங்களை யறியாமல் மணையை விட்டு எழுந்தார்கள்.

பந்தலுக்குள் நுழைந்தார் பரமானந்தப் பரதேசியார். அங்கிருந்த அத்தனை வித்துவான்களும் எழுந்து நின்றார்கள். அவரை வணங்கினார்கள்.

பரதேசியாரோ, ''கண்டேன், கண்டேன், கண்டறியாதன கண்டேன், கலைக் கோயில் கண்டேன். எல்லாம் துறந்தவன் நான். ஆனால் இசையைத் துறக்க என்னால் இயலாது'' என்று சொல்லிக்கொண்டே அந்த வித்துவான்களை நோக்கி இரு கைகளையும் உயரக் கூப்பி வணங்கினார். சண்முகம், மோகனா இருவர் பக்கம் திரும்பி அதே கையால் மணமக்களை வாழ்த்தினார்.

''ஆனந்த நடேசன் அருள்க. அன்பால் உலகமெல்லாம் ஆசி சொல்ல வாழ்ந்திடுவீர்'' என வாழ்த்தினார். அவர் முகத்தில் ஆனந்த நடராசன் திருக்கூத்து ஆடினார். அப்போது பெரிய மேளத்தில் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என முழங்கியது. ''கெட்டி மேளம்! கெட்டி மேளம்....!'' என்றார்கள். கட்டினான் தாலியைக் கடவுள் அருளாலே. மலரும் மஞ்சள் அட்சதையும் சொரிந்தார்கள். மணமக்கள் இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை புரிந்தார்கள்.

அப்பொழுது, பந்தலின் வெளிப்புறத்தே உள்ள தட்டி மறைவில் இருந்து, ''தம்பி மோகிக்கி கல்யாணம்னா நான் சும்மா இருக்க

முடியுமோ? அவ கூப்பிடவில்லையென்றாலும், நானே குருப் போட்டோ பிடிக்கிறவரையும் கூட்டிண்டு வந்துட்டேன்!'' என்று யாரோ பேசுவது கேட்டது.

## பதின்மூன்றாம் அத்தியாயம்

# ''அழையாமல் வந்த விருந்தாளி''



**ம**னிதன் வழி வழியாகக் காப்பாற்றி வந்த பொருள்கள் மூன்று. அவைகளில் வேதமும், கீதமும் கண்ணுக்குத் தெரியாதவை. மறையை வாய் வழியாக வளர்த்தார்கள். இசையையும் இதைப் போலத்தான் வளர்த்தார்கள். மறையை எழுத்துகளில் எழுதலாம். இசையை எழுதும் பழக்கம் அக்காலத்தில் இல்லை.

இவைகளைத் தவிர இன்னும் ஒரு பொருளையும் மனிதன் வழி வழியாகக் காப்பாற்றி வந்திருக்கிறான். அதுதான் அக்கினி. என்றைக்குத் தீ அவன் கையில் அகப்பட்டதோ அன்று முதல் அதைக் காக்க அவன் அரும்பாடு பட்டு, தீப்பெட்டியைக் கண்டுபிடிக்கும் வரையில் வந்திருக்கிறான். நிலம், நீர் இரண்டும் அவன் கையில் இல்லை. தீயோ அவன் கண்டு பிடித்தது. ஆதலால் அதன் மேல் பிரியம் அதிகம். மனிதனுடைய எல்லாச் சடங்குகளிலும் அது முன் நிற்கிறது. கல்யாணத்தையே எடுத்துக் கொள்வோம். மாப்பிள்ளையும், பெண்ணும் தீயை வலம் வந்து தாலி கட்டுகிறார்கள். புரோகிதர் தீயை வளர்த்துக்கொண்டே இருக்கிறார்.

பெண்ணைப் பெற்றவர்களுக்கும் பிள்ளையைப் பெற்றவர்களுக்கும் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் தகராறு இல்லாமல் கல்யாணம் நடந்தாக வேண்டுமே என்ற திகில் தீயைப் போலப் பற்றிக்கொண்டிருக்கும். சமையல்காரருக்கோ, தன்னுடைய சமையலில் ஒரு குறையும் சொல்லாமல் எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டுமே என்ற தீ மனத்தில்.

எல்லாவற்றையும்விடக் கல்யாணப் பந்தல் போட்டவருக்குத்தான் தீயிடத்தில் பயம் அதிகம். எந்த நிமிஷத்திலும் எதிர்பாராமல் ஒன்றும் ஆகிவிடக் கூடாதே என்று, பந்தல் பிரிக்கும் வரையில் பயம் கலக்கிக் கொண்டேயிருக்கும். நல்ல வேளையாக அம்மாதிரி தீ பரவ, இங்குள்ள ஆட்கள் விடவில்லை. ஆனால் வைத்தி வந்தவுடனே உண்மையிலேயே எங்கேயோ ஏதோ தேர்ந்துவிட்டது போலத்தான் எல்லோரும் திகில்



அடைந்தார்கள். பரதேசியார் அவரைப் பார்த்தவுடனே 'இங்கேயும் வந்துவிட்டாரா?' என்று எண்ணினார். வரதன், 'கழுத்திலே கையைக் கொடுப்போமா?' என்று எண்ணினான். தவுல்கார முத்துராக்கு, 'வைத்தி ஏதாவது பேசினால் ஒரு ''திரட்டான்'' கொடுத்துவிட வேண்டியதுதான்' என்று முடிவு செய்தார்.

இப்படி கல்யாண வீட்டிற்குள் நுழைந்த அவரைப் பார்த்ததும் பலரும் பலவிதமாக எண்ணினார்கள். வாருங்கள் என்று ஒருவரும் அழைக்கவில்லை. ஆனால் ஸ்ரீமான் வைத்தி அதைப் பொருட்படுத்த வில்லை.

'கல்யாணம் என்றால் அப்படித்தான். ஒருவருக்கும் வாயிலே போனது கூடத் தெரியாது' என்று சமாதானம் செய்துகொண்டார். அவரைக் கண்டவுடனே, கையில் இருந்த சந்தனப் பேலாவைப் பின்னால் வைத்துவிட்டு, தவுல்கார முத்துராக்கு சமையலறைப் பக்கம் போனார். தன் கையால் சந்தனம் கொடுக்க அவருக்கு பிடிக்கவில்லை.

ஆனால் வைத்தியோ, ''என்னாங்காணும், வரவாளுக்குச் சந்தனம் கொடுக்கக்கூட ஆளைக் காணோமே?'' என்று வெள்ளிப் பேலாவைத் தானே எடுத்துக்கொண்டு, முன்பே வந்திருந்த இரண்டொருவரிடம் கொண்டு போய் சந்தனப் பேலாவை நீட்டினார். அவர்களுக்கு இதைப் பார்த்தவுடனே ஆச்சரியமாக இருந்தது. ''ஏது, வைத்தியே கல்யாண வேலைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டாரே!'' என்று எண்ணினார்கள். இதற்குள் புலியூர்ப் பிள்ளை சட்டையைப் போட்டுக்கொண்டு அந்தப் பக்கம் வந்தார்.

''என்ன பிள்ளைவாள், சௌக்கியமா? சந்தனம் பூசிக்கோங்கோ'' என்றார் வைத்தி.

''இல்லிங்க, எனக்கு வேலை இருக்கு.''

''சரிதாங்காணும், பூசும். என்னமோ, பாவம், மோகனா கையாலே சந்தனம் பூசவேணும்னு ஆசைப்பட்டீர். சட்டையைக் கழட்டியதுதான் மிச்சம். என்னத்துக்கு அந்தக் குறை? இப்போ மோகி கல்யாணத்திலே உம்ம கையாலேயாவது பூசிக்கொள்ளும்'' என்று மல் ஜிப்பாவின் மேல் கொட்டப் போனார்.

பாவம், புலியூர்ப் பிள்ளை சட்டையைக் கழற்றிவிட்டுத் தன் கையாலேயே பூசிக்கொண்டார்.

இதற்குள் வடிவாம்பாள், அவர் அருகில் வந்தாள். ஆமாம், உபசாரம் செய்ய ஆசைதான். இவ்வளவு உபகாரங்கள் செய்த மனிதனுக்குச் சந்தனம், வெற்றிலை பாக்குக் கொடுக்க வேண்டும்; வா, உட்காரு என்று சொல்ல வேண்டும் என்று எண்ணம் வந்தது. 'நேத்திக்கு இருந்தா நானே கொடுத்திருப்பேன். இன்னிக்குத்தான் அதிகாரம் என் கையை விட்டுப் போயிடுத்தே. கொடுத்தா மருமகப்பிள்ளை என்ன சொல்வாரோ?' என்ற எண்ணத்தில் அஞ்சி நின்றாள். அருகில் வந்தும் 'வாருங்கள்' என்று

கூப்பிடாவிட்டால் கேவலமாக இருக்குமே என்ற எண்ணத்தில், மணை அருகில் போய்ப் பெண்ணுக்கு விசிறி எடுத்து விசிற ஆரம்பித்தாள்.

ஆனால், அதற்குள் வைத்தி சகஜமாகிவிட்டார். அப்பொழுது, "தருமண்ணே, வந்திருக்கிறவங்களுக்கெல்லாம் சந்தனம் வெத்திலை பாக்குக் கொடு" என்று வைத்தியைப் பார்த்தும், பார்க்காதது போல் சண்முகம் கூறினான்.

ஆயிரம் அடி அடித்தால்கூட அத்தனை வலி ஏற்பட்டிருக்காது. இந்த ஒரு வார்த்தையிலே வைத்தி குன்றினார். இதற்குள் தருமன் ஓடி வந்தான். "வாங்க, இந்தாங்க" என்று சொல்லி சந்தனப் பேலாவைத் தேடினான்.

"என்ன ஒத்துக்காரரே, சந்தனம் பூசிக்கிறியா?" என்று தன் கையிலிருந்த பேலாவை நீட்டினார் வைத்தி.

"நல்லா இருக்கு போங்க. என்கிட்டே கொடுங்க. ஐயாவுக்குக் குளிப் பூசணும்னு வெகு நாளா ஆசைப்பட்டேன். இன்னிக்குத்தான் சந்தர்ப்பம் வந்தது" என்று ஏதோ பட்டும் படாமலும் சொல்லிக் கொண்டே, வைத்தியின் கையில் இருந்த பேலாவைப் பிடுங்கிக் கொண்டான் தருமன். அவரிடம் சந்தனக் கிண்ணத்தை நீட்டினான். வைத்தி அதைத் தொட்டு, கையில் பூசிக்கொண்டார்.

"என்னடா சந்தனம் இது? சண்முகசுந்தரம் கல்யாணத்திலே சந்தனம் இப்படியா இருக்கிறது! ஊர் முழுக்க மணக்க வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டார்.

"பாவம், உங்களுக்கு ஜலி போலிருக்குங்க" என்றான் தருமன். என்ன செய்வது, வைத்தியின் காதில் அது விழவில்லை. இதற்குள் வடிவாம்பாள் அருகில் வந்து சேர்ந்தாள்.

"ஐயாவுக்குச் சர்க்கரை கொடு" என்று சொல்லிக்கொண்டே சர்க்கரைத் தாம்பாளத்தை எடுத்து நீட்டினாள். அவன் யாராயிருந்தால் என்ன? எத்தனை முரண்பாடுகள் இருந்தால்தான் என்ன? ஜன்ம விரோதியாக இருந்தால்கூட வாயினிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தானே, அந்தச் சர்க்கரை வழங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள்? வைத்தி மரியாதைக்காக ஒரு சிட்டிகை ஜீனியை அள்ளி வாயில் போட்டுக் கொண்டார். அவர் நாவிலும் அது தித்தித்தது. உள்ளத்திலே என்னவோ செய்தது.

"ஹூம், கல்யாணம் எல்லாம் முடிஞ்சுட்டாப்பிலே இருக்கு. எப்படியாவது முகூர்த்தத்துக்கு முன்னே ஓடிவந்துடணும்னு பார்த்தேன். அதுக்கும் அரை மணி நேரம் லேட். ஏதோ, இப்போதாவது வாக் கொடுத்து வச்சதே" என்று சொல்லிக்கொண்டே வைத்தி ஜமுக்காளத்தில் எதிர்ப்புறம் அமர்ந்தார். சிங்கபுரம் மைனர் திரும்பிப் பார்த்த ஒரு பார்வையிலே வைத்திக்கு சப்தநாடியும் ஒடுங்கியது. இந்தச் சமயத்தில் பார்த்துத்தானா, பாழும் கடம்பவனம் பிள்ளை வர வேண்டும்? "ஏய், வைத்தி" என்று சொல்லிக்கொண்டே வெகு வேகமாக ஓடிவந்தார்.



கொஞ்சம் கிலிதான் வைத்திக்கு. அதையெல்லாம் முன்பே யோசித்துத்தானே கல்யாணத்துக் கூடத்தில் நுழைந்திருக்கிறார். தன் எதிரியைக்கூட நாலுபேர் நடுவில் சந்திப்பது நல்லது என்பதை அவர் அறிய மாட்டாரா?

"என்ன பிள்ளைவாள், இத்தனை நாழி நான் எடவிலே இருக்க வேண்டியவன். சரிதான், கிடக்குன்னு வந்துட்டேன். ஏதோ மோகிக்கு கல்யாணத்தை நீங்க எல்லோரும் நடத்திவச்சேங்கன்னு கேள்விப் பட்டேன். புண்ணியமும் வேண்டியதுதான். ஒரு நல்ல காரியத்திலே யாவது ஈடுபட வேண்டாமோ?"

"என்ன வைத்தி, இவ்வளவு கெடுதலும் பண்ணிட்டு, இங்கே வேறே எப்படிய்யா வரத் தோணிச்சு உனக்கு?"

"சட்டம் வேறே, சம்பந்தம் வேறே சார். ஜார்ஜ் பிஃத் சக்கரவர்த்தியும் கெய்சரும் சண்டைதான் போட்டுக்கிட்டாங்க. அரண்மனையிலே ஒரு 'பங்ஷன்' வந்திடுத்து. 'ப்ளட் ரிலேஷன்' இருக்கு பாருங்கோ. க்வீன் விக்டோரியாவுக்குக் குழந்தை பிறந்தபோது, ஹி வஸ் தி பஸ்ட் மேன்."

"என்னப்பா இது, ஜெர்மனிக்குப் போயிட்டே?"

"வொரல்டு இஸ்டரி தெரியணும் சார். ஊரிலே சொல்றாங்க, இஸ்டரி வேண்டாம், ஜாகரபி வேண்டாம், அப்படின்னுட்டு. அதிலேதானே பண்பு இருக்கு! அவன் என்ன பண்ணினான்? கெய்சர் அரண்மனைத் தோட்டத்திலே மீன் பிடித்துக்கொண்டிருந்தான். விக்டோரியாவுக்குக் குழந்தை பிறந்திடுத்துன்னு சொன்னவுடனே இரண்டு மீனை எடுத்துத் தங்கக் கிண்ணத்திலே போட்டு அனுப்பிச்சுட்டான். பாவம், பிரசவிச்சவங்க சாப்பிடட்டும்னு."

"இது ஒண்ணும் புத்தகத்திலே எழுதலியே!" என்றார் மைனர்.

"அங்கேதான் வாது டிப்ளமஸி! கிளாட்ஸ்டன் மந்திரியாக இருந்தான். அந்த மீனை வாங்கி டேபிளிலே வைத்து ஷூட் பண்ணிட்டான். வேறே இரண்டு மீனைக் கொண்டுபோய்க் கொடுத்துட்டான். உடனே ஹிஸ்டோரியனைக் கூப்பிட்டு இதை எழுதாதீங்கன்னு சொல்லிட்டான்" என்று ஜெர்மனிக்கும் அந்தப் பக்கத்தில் கொண்டுபோய் விட்டார் வைத்தி. "ஆமாம், யார் சமையல் இன்னிக்கு? எனக்கு எல்லாம் சாப்பாடு உண்டோல்லியோ?" என்று முக்கியமான பிரச்சினையில் இறங்கினார்.

"என்ன வைத்தி, இப்படிக் கேட்கிறே? மாப்பிள்ளை மானேஜ்மெண்ட். உன் சின்னசாமி கடையிலேகூட உன்னைப் பணம் கேட்க மாட்டான். இன்னிக்குத் திருவாரூருக்கு யார் வந்தாலும் கல்யாணச் சாப்பாடு. அது எங்கே சாப்பிட்டாலும் சரிதான்."

"நல்லவேளை, சாப்பாடு போட முடியாதுன்னு சொல்லாமே, எங்கேயாவது போய்ச் சாப்பிடுங்கிறேளே ஆமாம், சாயங்காலம் யாரு கச்சேரி?" என்று வைத்தி விசாரணையில் இறங்கினார்.

ஆனால் வடிவாம்பாளோ, 'இவர் சும்மா வந்திருக்க மாட்டாரே இன்னும் ஏதாவது இடைஞ்சல் செய்யாமல் இருக்க மாட்டாரே' என்று எண்ணிக்கொண்டே இருந்தாலும் முகத்தில் எந்தக் கலக்கமும் தெரியாமல், "வைத்தியா, ஆபீசர்களுக்கெல்லாம் ஒரு சமையல் வச்சிருக்கு, வித்வான்களுக்கெல்லாம் ஒரு சமையல் இருக்கு. நீங்க... தருமா, ஐயாவைக் கூட்டிக்கிட்டுப் போய், சாப்பாடு பண்ணி வை" என்றாள்.

"எந்தச் சமையலுக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போறது? ஐயா ஆபீசருமில்லே, வித்துவானுமில்லே."

"ஓய், என்ன நீ பேசறே? வைத்திஜி மகாராஜாவுக்கு செகரட்டரி. எந்த ஆபீசரும் எனக்குப் பெரிசு இல்லே. டவாலிச் சேவகன் இல்லேயேன்னு பார்க்கிறியா? இரண்டு சமையலிலும் போய்ச் சாப்பிடப் போறேன் பாரு தான்" என்று சொல்லி, வைத்தி தானே சிரித்தார். தருமனும் இவ்வளவு பெரிய மனிதர் சிரிக்கிறாரே என்பதற்காகச் சிரித்தான். அதற்குள் வெளியேயிருந்து இரண்டு மூன்று ஆட்கள் கையிலே தாம்பாளத்தில் பூமாலை, பொன்னாடை, பட்டுப்புடைவை முதலியவைகளுடன் வந்து சேர்ந்தார்கள்.

"இந்த வடிவாம்பா அம்மா, இதை எல்லாவற்றையும் மாப்பிள்ளை பொண்ணுக்கிட்டே சேர்த்திடுங்க. நமக்கு என்ன, அவங்க திரும்பிப் பார்த்தாலும் ஒண்ணுதான், பார்க்காவிட்டாலும் ஒண்ணுதான். நம்ப மனசு கேட்கலே" என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள் முன் வைத்தார். வடிவாம்பாளுக்கோ அதைத் தொடப் பயம். தொடாமல் விடவும் மனம் இல்லை. வைத்தியின் அன்பிலே ஆனந்தம். ஆனால் அந்தப் புடைவையில் என்ன தகராறை வைத்திருப்பாரோ என்று ஓர் அச்சம். இப்படி அவள் தயங்கிக்கொண்டிருக்கும் போதே வரதன் அங்கு வந்தான்.

"என்னம்மா, கல்யாணத்துக்கு நம்பதான் புடைவை, வேஷ்டி எல்லாம் வாங்கியிருக்கோமே?" என்றான்.

"அப்பா வரதா, என்கிட்டே பேசு. கல்யாணம்னா வேஷ்டி, புடைவை இல்லேன்னு சொல்லி யாரும் கொண்டு வரதில்லே. நமக்குள்ளே உள்ள தகராறு எல்லாம் தீர்ந்தது. நீயும் நானும் உறவுன்னு அர்த்தம். மனிதன் விரோதத்தைப் பொருட்படுத்தப்படாதப்பா" வரதன் அதைக் காதில் கேட்காமல் முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"உனக்குத்தான் சொல்லறேன். எங்கேயாவது ஆஞ்சநேயர், இராவணன் குடும்பத்தின் மேலே விரோதம் பாராட்டினாருன்னு கேள்விப்பட்டிருக்கியா? ஏதோ சண்டைன்னா அதோடு தீர்ந்தது!" என்று சொல்லவும், வரதன் அக்கறையோடு கவனித்தான்.

"எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய் உள்ளே வை." என்று அவனைப் பார்த்து அதிகாரம் வேறு செய்தார் வைத்தி. ஏதோ



ராமாயணம், பாரதம் என்று ஆரம்பித்துவிட்டாரே, நமக்கு எதற்குத் தகராறு என்று வரதன் அவைகளை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

வைத்தி வந்து நின்ற தோரணையும், வெள்ளித் தாம்பாளத்தில் சன்மானம் கொண்டுவந்ததையும் பார்த்து கலியாணப் பந்தலில் இருந்த எல்லோருமே அவருக்கு விசேஷ மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். வைத்தியும் பழைய வைத்தியாகக் காணப்படவில்லை. மகாராஜாவின் சிநேகிதம் ஏற்பட்டதால் அவர் உடம்பிலெல்லாம் கொஞ்சம் மாறுதல் தெரிந்தது. முன்பிருந்ததைவிட மேனியில் கொஞ்சம் மினுமினுப்பு, லேசாகச் சதைப்பற்று. இவைகளோடுகூட ஒரு வித கம்பீரக் களைப்பு. அதோடு அவர் முகத்திலே ஏற்கனவேயே அழுத்தம் உண்டு. இப்பொழுது அது ஆயிரம் பங்கு அதிகமாக இருந்தது. பந்தலை ஒருமுறை சுற்றிப் பார்த்தார். அவருக்குத் தெரிந்த வித்துவான்கள் பலர் அங்கே இருப்பதைக் கண்டார். தலையை ஆட்டி அவர்களை வரவேற்றார். அப்பொழுது கோடி வீட்டுக் குப்புசாமி, "என்ன வைத்தியா, சௌக்கியமா இருக்கீங்களா?" என்று பக்கத்தில் நின்றுகொண்டு கேட்டான்.

"யாரப்பா நீ, உன்னை எங்கேயோ பார்த்திருக்கேனே?" என்றார் வைத்திஜி.

"என்னாங்க இப்படிக் கேட்கிறீங்க? ஞாபகமில்லீங்களா? அண்ணன் தம்பி, கோடி வீட்டுக் குப்புசாமில்லே?"

"அடடே, நீதானா, சரி! சரி! அப்புறம் பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து அழுத்தலாக நடந்தார்.

மறுபடியும் கெட்டி மேளம் முழங்கியது. மாப்பிள்ளையும் பெண்ணும் திருமணச் சடங்கு முடிந்து எழுந்திருக்கத் தயாரானார்கள். ஹாரத்தி எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. மோகனா, சண்முகம் இருவருக்கும் தங்களுக்குக் கூடப்பிறந்த சகோதரி இல்லையே என்ற எண்ணம் அப்பொழுது வந்தது. தன் கையால் ஒரு பவுனை ஹாரத்தி தாம்பாளத்தில் போடுவதற்கும், நீங்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று மனமார வாழ்த்தி ஹாரத்தி எடுப்பதற்கும் கூடப்பிறந்த பிறப்பு இல்லையே என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கும் போது, மங்கையர்க்கரசி மரகதம், தன் கையில் ஹாரத்தித் தாம்பாளத்துடன் அங்கே வந்தாள். அவளும் சண்முகத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஹாரத்தி எடுத்தார்கள்.

நெற்றியிலே ஹாரத்திப் பொட்டை வைத்த போது சண்முகம் மோகனா இருவரும் அவர்களுடைய ஆனந்தக் கண்ணீரால் மரகதத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். அப்பொழுது சண்முகம் அவசரமாக, "சும்மா எடுத்தால் போதாது. ஒரு பாட்டுப் பாடித்தான் எடுக்கணும்" என்று கூறினான். மரகதத்துக்கு, இந்த வித்துவானுக்கு முன் பாடக் கூச்சம். மோகனாவும் சேர்ந்துகொண்டாள். "பாடித்தான் எடுக்கணும்" என்றாள்.

இதற்குள் சண்முகம், நடேசன் காதில் ஏதோ சொன்னான். நடேசன் எழுந்திருந்து உக்கிராண அறைக்குச் சென்றார். மரகதம் வெட்கத்தோடு பாடாமலேயே நின்றுகொண்டிருந்தாள்.

''பாடு தங்கச்சி, பசிக்குது. சீக்கிரம் ஏதாவது பாடி, ஹாரத்தி எடு'' என்றான் சண்முகம். அப்பொழுது அங்கே கடம்பவனம் வந்து சேர்ந்தார்.

''சும்மா பாடம்மா, நம்ப என்ன கச்சேரியா செய்யப் போறோம்? சும்மா பாடு. உன் பாட்டை நாயனக்காரர் கேட்கட்டும்'' என்று தகப்பன் தன் மகள் பாட்டைக் கேட்க வேண்டுமென்ற ஆசையில் தூண்டினார்.

மரகதம் பாட நினைத்தாள். வெட்கம் தொண்டையை அடைத்தது. பாட ஆரம்பித்துவிட்டாள். ''செந்தாழம் பூப்போல பெண்ணைப் பெற்று செவ்வந்திப் பூப்போல அதை வளர்த்து, தேடாத இடமெல்லாம் தேடி, இந்தக் குணம் கெட்ட மாப்பிள்ளைக்குக் கொண்டு வந்து கொடுத்தாங்க...'' என்று பாடியவுடனே, அங்கிருந்த எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

மரகதம் வெட்கத்தோடு ஹாரத்தியைச் சுற்றினாள். அதற்குள் காரைக்கால் நடேசன் வந்துவிட்டார். அவர் கையிலிருந்து அவசரமாக ஒரு பொட்டலத்தை வாங்கிப் பிரித்து, அதிலிருந்து ஒரு பொருளை எடுத்து ஹாரத்தி தாம்பாளத்தில் போட்டான் சண்முகம். எல்லோரும் ஆச்சரியத்தால் திடுக்கிட்டார்கள். ஆமாம், பதினாயிரம் ரூபாய் மதிப்பில் பட்டணத்திலுள்ள ஒரு பெரிய கம்பெனியில் செய்த அழகான வைர நெக்லஸ் அது!

''என்ன?'' என்றாள் மரகதம்.

''நீ உன் அக்காவுக்குக் கொடுத்தே. நான் என் தங்கச்சிக்குக் கொடுக்கிறேன். நான் தங்கச்சிக்குக் கொடுக்கிறப்போ வேண்டாமுன்னு சொல்லக்கூடாது'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

''சண்முகம், அப்படின்னா ஹாரத்திப் பணம் இரண்டு பேருக்கும் தானே சொந்தம்?'' என்றாள் மரகதம்.

''ஆமாம், அதுக்கு என் சிக்கல் நிலத்தைக் கொடுத்துட்டேன், ஹாரத்திப் பணமா!'' என்று அவன் சொல்லவே, ஒன்றுவிட்ட சகோதரி, ''ஆமாங்க, இது முன்னேற்பாடாகச் செஞ்சது'' என்று உரைத்தாள்.

இருவரும் மணையை விட்டு எழுந்திருந்து வந்தார்கள். சண்முகம், மோகனா இருவரும் அருகில் வந்தவுடனே, பரமானந்தப் பரதேசியார் ஆனந்தத்தோடு அவர்களை வரவேற்றார். இருவரும் வந்து அவர் காலில் விழுந்து வணங்கப் போகும்போது, ''குழந்தைகளா, என்னை வணங்காதீர்கள். அதோ, சங்கீத திருச்சபை கூடியிருக்கிறது; அந்த வித்துவான்களை வணங்குங்கள்'' என்று சொன்னார்.

சண்முகம், மோகனா இருவரும் அவர் காலில்தான் முதலில் விழுந்து வணங்கினார்கள். வணங்கியவுடன் சண்முகம், அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு, அந்த வித்துவான்கள் கூட்டத்துக்கு



முன்னே வந்து நின்றான். மோகனாவும் அவன் அருகில் வந்து தலை கவிழ்ந்தவண்ணம் நின்றுகொண்டு இருந்தாள். சண்முகம் வித்துவான்களை ஒருமுறை பார்த்தான். அவன் மனத்தில் தன்னுடைய குருநாதர் இங்கே இல்லையே என்ற கவலை உண்டாயிற்று. அவர்கள் எல்லோரையும் பார்த்து, கைகூப்பி, ''வாருங்கள், நீங்கள் எல்லாம் வந்தது எனக்குப் பெரிய கௌரவம். இந்த மாதிரி என்னை நீங்கள் மதிப்பதற்கு நான் வணங்கினால் மாத்திரம் போதாது; நான் வாசிப்பது எல்லாம் நீங்கள் கொடுத்த பிச்சை'' என்று சொல்லிக்கொண்டு அவர்கள் முன் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தான். மோகனாவும் நமஸ்கரித்தாள்.

வித்துவான்கள் எல்லோரும், ''பிள்ளே, எழுந்திருங்க. தமிழ் நாட்டுக்குக் கிடைக்கக்கூடாத செல்வம் நீங்க. உங்களுடைய இனிமை, உங்களுடைய சங்கீதம், சீக்கிரமே உங்களுடைய குழந்தைகளின் மூலம் வழி வழியாக வளரவேண்டும். அதுதான் எங்களுடைய பிரார்த்தனை'' என்று சொல்லி ஆசீர்வதித்தார்கள்.

''என்ன மோகனா, கலியாணம் ஆயிடுத்தா!'' என்று கேட்டுக் கொண்டே வைத்தி அருகில் வந்தார். எப்பொழுதும் அவரைப் பார்த்துப் பேசவே பிடிக்காத மோகனா, இன்று நல்ல வேளையாகப் பேசும் பொறுப்பு தன்னை விட்டது என்று எண்ணி சந்தோஷப்பட்டாள். அவள் மௌனமாக நின்றாள்.

''என்ன பிள்ளைவாள், ஒன்றையும் மனசிலே வைத்துக்காதீங்கோ. கல்யாணி ஊதுன்னா, ஊதித்தானே ஆகணும்?'' என்றார் வைத்தி

''அப்படி ஒண்ணும் கண்டிப்பு இல்லீங்க'' என்றான் சண்முகம். ''ஏதோ நீங்க வந்ததாலே ரொம்ப சந்தோஷம். அதுக்குத்தான் கலியாணம் காட்சின்னு வைக்கிறது. மோகனா, ஐயாவைக் கும்பிடு'' என்று பெரிய மனதுடன் வித்துவானுக்கு ஏற்பட்ட விசால அன்புடன் அவன் கூற, அவள் அவரை வணங்கினாள்.

வைத்தியோ அப்பொழுது குன்றிவிடவில்லை. ஆயினும் அடுத்த கணமே, ''பிள்ளை, ஒரு ரிக்கொஸ்டு. இது திருவாரூர் கலியாணம். தேவலோகக் கலியாணம் மாதிரி நடக்குது. ஹிஸ்டாரிகல் இன்டரெஸ்ட்டுக்காகச் சொல்றேன். எல்லோரும் உட்கார்ந்து இருக்கிறபோது, ஒரு குரூப் போட்டோ எடுக்கணும். காமராக்காரரைக் கூப்பிட்டுக்கொண்டு வந்திருக்கேன்'' என்றார் வைத்தி.

''இதுக்கு என்னைக் கேட்க வேண்டுமா? தாராளமாக எடுக்கலாமே'' என்றான் சண்முகம்.

''அப்படியில்லே, எதுக்கும் ஒரு பர்மிஷன் வேணும், பாருங்கோ. அதுமாத்திரமில்லே. அன்னிக்கு, கப்பலிலே மேல்தட்டிலே நான்தான் குரூப் போட்டோவுக்கு அரேஞ் பண்ணினேன். அது நல்லவேளையாக நடக்கலே. மகாராஜா பக்கத்திலே மோகனா நின்று எடுக்காமே

ஆண்டவன் காப்பாற்றினார். இப்போ, லண்டன் டைம்ஸுக்கு அனுப்பணும். மாப்பிள்ளை பொண்ணு, அப்புறம் நாம் எல்லாம் நின்னு ஒரு போட்டோ.. என்ன காமராமென், டிலே பண்ணறே? சும்மா எடு. மாப்பிள்ளையும் பொண்ணும் வணங்குகிற இந்த போஸே நல்லா இருக்கும்'' என்றார் வைத்தி.

மாப்பிள்ளையும், பெண்ணும் காமராவுக்குள் விழுந்தார்கள். ஆனால், வைத்தியோ, தன் கைக்குள்ளே விழுந்துவிட்டதாக எண்ணினார்.

குரூப் போட்டோ என்றவுடனே எங்கிருந்துதான் இத்தனை உறவினர்களும் வந்து சேர்ந்தார்களோ? ஒருவர் மீது ஒருவர் நிற்க ஆரம்பித்தார்கள். வைத்தி, வடிவாம்பாள், தருமன், முத்துராக்கு, சண்முகம், மோகனா எல்லோரும் அழகாக விழுந்தார்கள். இதில் விழாமல் தள்ளி நின்றவன் வரதன் ஒருவன்தான்.

கலியாணப் பந்தலில் இருந்த கூட்டம், கலியாணம் முடிந்தவுடன் கலைய ஆரம்பித்தது. சண்முகம், ''எல்லோரும் இங்கு சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். அவர்கள் எல்லோரும் அழைப்பின் பேரில் வந்தவர்கள். சாப்பாட்டுக்கும் சேர்த்துத்தான் அழைப்பு. ஆனால் அந்தக் கலியாணத்திலே அழைப்பு இல்லாமல் வந்த ஒரு பகுதியினர் இருந்தார்கள். அவர்கள் மிகமிக உயர்ந்தவர்கள். வணங்கத்தக்கவர்கள். கலை என்ற ஓர் உறவைக் கொண்டு மாத்திரம் அழைப்புக்கூட இல்லாமல் தன் கண்ணுக்கு இணையான வித்துவானுக்கும், கலையரசிக்கும் நடக்கும் திருமணத்தைக் கண்டு களிக்க எவ்வளவோ தூரம் காலால் நடந்து வந்தவர்கள் பலர். பல ஊர்களிலிருந்து ரயிலில் வந்தவர்கள் பலர். தள்ளி நின்று, மேளத்தைக் கேட்டு ஆனந்தப்படுவது போல, தள்ளி நின்றே அவர்களைத் தரிசித்துக் கொண்டிருந்த கலையன்பர்கள், இலக்கிய அன்பர்கள், இசை அன்பர்கள் ஆகிய ஒரு பெரிய கூட்டம் பந்தலுக்கு வெளியே நிற்பதைக் கண்டான் சண்முகம். பந்தலில் நின்ற காவல்காரர்கள் அவர்களை உள்ளே விடத் தயாராக இல்லை. அவர்களும் காவல்காரனைத் தள்ளி உள்ளே வரவும் தயாராக இல்லை. அவர்களை நோக்கிச் சண்முகம், மோகனா இருவரும் வந்தார்கள்.

''வாழ்க மணமக்கள்! வாழ்க சண்முகம், மோகனா!'' என்ற வாழ்த்துரைகள் அவர்களிடமிருந்து எழுந்தன. சண்முகம், மோகனா அங்கிருந்த ஒரு மேடை மீது ஏறி நின்றார்கள். இருவரும் ஒரே காலத்தில் அவர்களைப் பார்த்து வணங்கினார்கள். சண்முகம் அவர்களைப் பார்த்து, 'உங்கள் வாழ்த்துத்தான் என் வாசிப்பு, உங்கள் வாழ்த்துத்தான் அவளுடைய நாட்டியம். உங்கள் வாழ்த்துத்தான் எங்கள் நல்வாழ்வு. நீங்கள் எல்லோரும் முன்பின் அறியாதவர்கள். எங்கிருந்து வந்திருக்கிறீர்களோ, எத்தனை மைல் நடந்து வந்திருக்கிறீர்களோ? எல்லோரும் உள்ளே வாருங்கள். சந்தனம் பூசிக்கொள்ளுங்கள். தாம்பூலம் எடுத்துக்



கொள்ளுங்கள். எல்லோருக்கும் சாப்பாடு ஏற்பாடு செய்திருக்கிறேன். இருந்து சாப்பிட்டுவிட்டு மகாவித்துவான்கள் கச்சேரியெல்லாம் கேட்டுவிட்டுச் செல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டவுடனே, அந்தக் கூட்டம் ஸ்தம்பித்து நின்றது.

கண்ணால் பார்த்துவிட்டுப் போய்விடலாம் என்று அவர்கள் எண்ணியிருந்த போது, சண்முகம் கையெடுத்துக் கும்பிட்டது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. மாலைகள் வந்து விழ ஆரம்பித்தன. மணமக்களின் கழுத்துக் கொள்ளவில்லை. பாராட்டுப் பத்திரங்களையும், வாழ்த்துப் பாக்களையும் படிக்க ஆரம்பித்தார் ஒரு ரசிகர். பத்திரங்கள் மேடை கொள்ளவில்லை. அவைகளைப் பார்த்த சண்முகத்துக்கும், மோகனாவுக்கும் மனத்திலே ஏற்பட்ட ஆனந்தம் எழுத்தால் விவரிக்க முடியாது.

அன்றுமாலை, திருமணப் பந்தலில் ஏராளமான கூட்டம். சண்முகம், மோகனா இருவரும் கச்சேரி மேடையிலே ஒரு புறத்திலே கை கட்டிய வண்ணம் அமர்ந்திருந்தார்கள். கச்சேரி ஆரம்பமாயிற்று.

விவசாயி, சும்மா கிடக்கிற நிலத்தில் எள்ளையாவது விதைப்பார். அதைப் போல இசை வேளாளர் ஒவ்வொருவரும் தன் நெஞ்சை வீணாக்குவது இல்லை. ஏதேனும் ஒரு கலையைப் பயில்வார்கள். பாவம், கொல்லுமாங்குடி பார்வதி நாட்டியக் கலைதான் பயின்றாள். யாரோ நாட்டியம் ஆடினால் உடம்பைப் பக்குவமாக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியதைக் கேட்டு, அவள் உடம்பைக் கவனித்துக்கொள்ள ஆரம்பித்தாள். அதன் பலன், அவள் யானைக்குட்டி போல் ஆகிவிட்டாள். அன்று அவளுடைய சதிர் ஆட்டம், மற்றவர்கள் ஆடியிருந்தால், இவ்வளவு கரகோஷம் கிடைத்திருக்காது. கொல்லுமாங்குடி பார்வதி ஆடுவதற்கெல்லாம் கரகோஷம் கிடைத்தது. அடவும் இட்டாள், கழுத்து அசையவில்லை. தள்ளியிருந்து பார்த்தவர்கள் மேஜை மேல் வைத்த தலையாட்டிப் பொம்மை ஆடுவது போலத்தான் அவளைக் கண்டார்கள். போதாதற்கு, ''வாசலில் வாரானோ, எனக்கொரு வாசகம் சொல்வானோ'' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடிக்கும் போது, அந்தப் பெண் பத்து வாத்தியார்களிடம் கற்ற அவ்வளவு பாடங்களையும் ஆடினாள். ''அற்புதம்! அற்புதம்!'' என்ற குரல்கள் பல மூலைகளிலிருந்தும் எழுந்தன.

'நடராஜன் வாசலில் வாரானோ' என்பதற்கு எத்தனை பாவங்கள் உண்டோ அவ்வளவும் பிடித்துக் காட்டியாகிவிட்டது. இதற்குமேல் அவள் சொந்த அரிய கற்பனைகள் வர ஆரம்பித்தன. ''என் அன்பன் என்னை அன்போடு, அழைத்துக்கொண்டு வாசலில் வந்து நின்று என் தலையைச் சீவி வாரானோ'' என்று நின்று தலைவகிடு எடுத்த பொழுது மோகனா சிரித்தே விட்டாள். மோகனா சிரித்தவுடனே, அந்தப் பெண்ணுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. சபையோர் செய்த கரகோஷத்தில்

கல்யாணப்பந்தலே அதிர்ந்தது. 'அடே, நம்ப நாட்டியத்தை ரசிக்கிறார்களே' என்று எண்ணிக்கொண்டாள் பார்வதி.

வித்தை மாத்திரம் தெரிந்தால் போதாது. விவேகமும் வேண்டும். சில வித்துவான்களுக்கு, ரசிகர்கள் எதற்காக கரகோஷம் செய்கிறார்கள் என்பது தெரியாது. தன்னைத்தான் ரசிக்கிறார்கள் என்ற ஆனந்தத்தோடு, மேலும் மேலும் பாட ஆரம்பிப்பார்கள். பாவம், இந்த ரசிகர்களும், 'போதும் ஐயா, நிறுத்து' என்று சொல்லக் கூச்சப்படுபவர்கள் ஆதலால், சிரித்துக்கொண்டே இருந்துவிடுவார்கள். ஆனால் இப்பொழுது எல்லாம் அப்படியில்லை. சின்னக் காகிதத்திலே உருப்படி பாடச் சொல்லி எழுதி அனுப்புவது போல், எழுதி அனுப்பிவிடுகிறார்கள். வித்துவானும் ஆவலோடு காகிதத்தைப் பிரித்துப் பார்க்கிறார். அதில், "நிறுத்தி... பாடுங்கள்" என்று எழுதியிருக்கிறது.

கொல்லுமாங்குடி பார்வதிக்கு நாட்டியத்திலே ரொம்ப நாட்டம். ரசிகர்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவள் ஆட நினைத்தால் ஆடித்தான் முடிப்பாள். ஒருவிதமாக, தெருவில் வாராளோ கீர்த்தனமும் முடிந்தது. அதற்குள் இன்னொரு பெண் மேடை மீது ஏறினாள். ஆட்டம் நடந்துகொண்டிருந்தது.

"என்ன, நல்ல சதிரா ஒன்று ஏற்பாடு பண்ணப்படாதோ? என்கிட்டே சொல்லியிருந்தா, நான் தில்ருபாவைக் கப்பலிலேயிருந்து இறங்கி வரச் சொல்லியிருப்பேனே!" என்றார் வைத்தி.

அதற்குச் சாமிக்கண்ணு நாயனக்காரர், "அப்படியில்லீங்க, இந்த வீட்டுப் பழக்கம். கல்யாணத்திலே ஆடல், யாழ், குழலுக்கு மதிப்புக் கொடுக்கணும். அது யார் ஆனாலும் பாதகமில்லே. எந்தப் பொண்ணு தான் ஆசைப்படாது? புதுசா சபையேற வர குழந்தைகளுக்கு இதுதானே சமயம்?" என்றார்.

"எஸ். டெக்னிக். வெரி குட், பரத நாட்டிய சாஸ்திரம் எல்லாம் கச்சிதமாக இருந்தது. பாவம், உடம்புதான்..."

"அதுக்கு என்னாங்க இப்போது? வைத்தி அய்யா வந்திருக்காங்கன்னு சொன்னாப் போதுமே. அந்தப் பொண்ணு பயத்திலே இளைச்சிடுமே!" என்றான் வரதன்.

அடுத்தபடியாக யாழ் ஆசிரியர் கௌரவிக்கப்பட்டார். ஆடல், வீணை, புல்லாங்குழல் மூன்றும் அவர்கள் வீட்டுக் கல்யாணங்களிலே கௌரவிக்கப்பட வேண்டியவை. ஆடலுக்கு அந்தப் பெண்தான் வந்து சேர்ந்தாள். மோகனாவுக்கும், தன்னிடம் இவ்வளவு அன்பு கொண்டு ஆடிக் காண்பிக்கும் பெண்களைத் தடுக்கத் தைரியம் இல்லை. அதிலே அவளுக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. யாழ் ஆசிரியர் வீணை வித்துவான் வந்து மேடையில் அமர்ந்தவுடனே, சண்முகம், மோகனா இருவரும் அவரை வணங்கினார்கள். அவருக்குப் பீதாம்பரம் போர்த்தி, கழுத்தில் மலர் மாலைகளை அணிவித்தார்கள். அந்தச் சிம்மம்



வீணையை நிறுத்திப் பிடித்துக்கொண்டது. வாசிக்க ஆரம்பித்தது. திருவாரூர் ஸ்வாமி வர்ணத்தை அவர் வாசிக்க ஆரம்பித்தவுடனே, தீக்ஷிதரே வந்து நிற்கின்றாரோ என்று தோன்றியது. அடேயப்பா! அந்தக் கீர்த்தனைகளில்தான் என்ன ராக பாவம்.

வீணையிலும், வாய்ப்பாட்டிலும் சிறந்து விளங்கிய மகாவித்து வான்கள் அமைத்த சாகித்யங்கள், வாய்ப்பாட்டு, நாள வாத்தியம் இரண்டுக்கும் பொருந்தி இருக்கின்றன. வாய்ப்பாட்டு மாத்திரம் தெரிந்தவர்கள் செய்த சாகித்யங்கள் அவர்களுடைய சாரீர வளம் எந்த அளவுக்கு உண்டோ, அந்த அளவில் கட்டுண்டுவிடுகின்றன.

ஆனால் வைணிகர்கள் செய்த சாகித்யங்கள் மூன்று ஸ்தாயிகளிலும் சஞ்சரிக்க வசதியாய் கற்பனை சுரங்கள் நிறைந்து, கர்நாடக சங்கீதத்தின் இனிமைக்கும் உயர்வுக்கும் இலட்சியமாக, ஏன், கர்நாடக சங்கீதத்தின் பூரண சொரூபமாகவே, சிரஞ்சீவியாக விளங்கி வருகின்றன. வேத மயமான, அந்த வீணையின் சாரீரம் நாதப் பெருமையை உலகுக்கு அருளிய அந்த சாரீரம், இன்று திருவாரூர் குழந்தைகளிடம் திருவாரூர் பெயரைச் சொல்லிக்கொண்டே, சங்கீதத்தின் சட்ட திட்டங்களைக் காப்பாற்றிக்கொண்டு, வாடா மலராக விளங்கி வருகின்றது. அன்று வீணைக் கச்சேரி பத்தாயிரம் ஜனக்கூட்டத்திற்கு நடுவே நடந்தது. கடைசியில் இருப்பவர்கள் காது குளிர அந்தக் கீதம் கேட்டதும், வாத்தியத்தில் எவ்வளவு நயம் இருக்கிறதோ அவ்வளவு நயம் ரசிகர்களின் மனத்திலும் இருந்தது. அவர்கள் செவியைத் தீட்டிக் கொண்டு சங்கீதம் கேட்டார்கள். ஒலிபெருக்கியிருந்து வீணையை கொல்லம்பட்டறை ஆக்கியிருக்குமானால் ரசிகர்கள் குடும்பம் சந்தைக் குடும்பமாக வந்திருக்கும். வீணை வீணையாகவே இருந்தது. ரசிகர்கள் ரசிகர்களாகவே இருந்தார்கள்.

அடுத்தாற்போல, குழலாசிரியர் வந்து அமர்ந்தார். யாழும், குழலுமன்றோ சங்கீதத்தை வளர்த்திருக்கின்றன? அன்று அவர் வாசித்த வாசிப்பில் எல்லோரும் பசுக்களாயினர். எல்லோரும் கோபிகளாயினர். எல்லோரும் தங்களை மறந்து கடவுளாயினர். கண்ணனே ஆயினர். அவர் வாசித்துக்கொண்டிருக்கையில், சிறிய புல்லின் வழியே வந்த இசை, ஒரு சிறிய குழலின் வழியே வந்த ஓசை, பெரிய உலகைக் கட்டுப்படுத்தியது.

அவர்களுக்கு மரியாதை செய்து முடித்தவுடனே, அன்றைய கச்சேரிகள் இனிது முடிவுற்றன. வைத்தியோ, வந்தவர்களை வரவேற்பதும் மனம் விட்டு எல்லோருடன் பேசுவதும், அடிக்கடி வாசலைப் பார்ப்பவருமாக இருந்தார். அப்பொழுது சண்முகம், "எங்கே வைத்தி, வாசலுக்குப் புறப்படறீங்க, சின்னசாமி கடைக்கா?" என்றான்.

"சின்னசாமி கடைக்கு எப்படிப் போறது? மகாராஜாவுக்குத் தெரிஞ்சா கோபிப்பார். நான் இப்பொழுது, டிராவலிங் பங்களாவிலே தங்கியிருக்கேன். இங்கேயே ஒரு பங்களாவை விலைக்குப் பார்த்துண்டு இருக்கேன். இப்போது தான் வரவா?" என்று புறப்பட்டார்.

''நாலு நாளைக்கும் நீங்க வந்துக்கிட்டு இருக்கணும். நமக்குள்ளே எத்தனையோ நடந்திருக்கும். அது எல்லாம் இனிமே வேண்டிய அவசியம் இல்லே. விரோதத்தை மாத்திரம் பார்த்துகிட்டு இருந்தா, உலகத்திலே மனிதர் வாழவே முடியாது'' என்று சண்முகம் கூறிய அந்த வார்த்தைகள் அவருக்குக் கூரிய கட்டியால் குத்தியது போல இருந்தன.

ஆயினும் வைத்தி அதை வெளிக்காட்டாமல் நடந்தார்.

பதினான்காம் அத்தியாயம்

# இசையால் வழிபடுவீர்; இறைவன் வருவான்!



'என் கணவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா? நான் தண்டனையை அனுபவிக்கும் காலத்தில்கூட மனவருத்தம் அடையக் கூடாது என்றே கருணையால் அவர்தான் என்னைக் கல்லாக்கினார்' என அகலிகை, கௌதமரைப் போற்றுகிறாள். இவ்வாறு ஒரு கவி நயத்தை நம் தமிழ்நாட்டுப் புலவர் ஒருவர் கையாண்டிருக்கிறார்.

ஆம். அந்தக் கடவுள் எந்தப் படைப்பையும் புறக்கணிப்பதில்லை. அவர் உயர் குணங்களைக் கொடுக்காமல் யாரையும் படைப்பதில்லை. எந்த நாய்க்கும் அவர் வாலை வைக்காமல் இருந்ததில்லை. ஏன், வெட்டுவால் நாயின் குட்டிக்கும்கூடத்தான்.

அப்படி உள்ள கருணைக்கடல், வைத்தி ஒருவரை மட்டும் விடுவாரா? கல்யாண வீட்டில் புகுந்த வைத்தி, உலையில் புகுந்த தங்கம் போல உருகி வெளியே நடந்தார். குவைத் தங்கம் போல் அவர் மனம் குழம்பியது.

மனிதன் தனிமையில் இருக்கும் போது சில சமயம் மிருக இச்சைக்கும் சுய நல நோக்கங்களுக்கும் ஆளாகிறான். இருவராக இருக்கும் போதும் இது விடுவதில்லை. ஆனால் மூவர் கூடிவிட்டால் நான், நீ, உலகம் என்று மனிதப் பண்புகள் எல்லாம் அங்கு வந்து கூடிவிடுகின்றன. கல்யாணப் பந்தலில் அடக்கம், அன்பு, மரியாதை முதலிய உயர் குணங்கள் எல்லாம் தாண்டவம் ஆடுவதைக் கண்டவுடன் வைத்தி சிறிது கலகலத்தார். அதிலும் அந்தச் சண்முகம் தன்னைப் பந்தலுக்குள் வந்து நுழைந்தவுடனே கழுத்தைப்பிடித்துத் தள்ளாமல் இருந்துவிட்டானே! 'சந்தனம் வெத்திலை பாக்கு கொடு' என்று



அன்பாகச் சொல்லிவிட்டானே என்று அவர் எண்ணினார். அவர் இதயமும் புண்ணாகியது.

''கடம்பவனம்கூட அடங்கி நடந்தாரோ அட, இந்த வடிவாம்பாளுக்குத்தான் என்ன வெட்கம்! முன்பெல்லாம் தாமது மடியில் இருக்கும் தொட்டைக்கூட அழகுடிப் பார்த்த அவள் கண்கள் இன்று என்னைக்கூடத் தெரிந்தவளாகக் காட்டிக்கொள்ளவில்லையே! என்னவோ ஒன்றும் நடக்காதது போல் அல்லவா உபசாரம் செய்தாள்? எல்லாம் வேஷம், எல்லாம் நாடகம். மனத்தை மாற்றிக்கொண்டு வேஷம் போடுகிறார்கள். தைரியம் இருந்தால் 'ஏய் வைத்தி, உள்ளே வாயேன்' என்று சண்முகம் சொல்ல வேண்டும்... 'அய்யா வைத்தி, எனக்குப் பணத்தின் மீது ஆசைதான்; இன்னும் பத்து நெக்லேஸ் தந்தாலும் வாங்கிக்கொள்ளுவேன்'' என்று வடிவாம்பாள் சொல்ல வேண்டும்.... 'ஏய் வைத்தி, பார்த்தியா திருவாரூர்க்காரி மாதவி நாடகம் போடுகிறாள்' என்று கடம்பவனம் கர்ஜிக்க வேண்டும். அப்போது நானும் சொல்லியிருப்பேன், 'இந்த ஆட்டமெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்' என்று.

'சீ! எல்லோரும் மனத்தை மாற்றிக்கொண்டு மாறு வேஷம் போடுகிறார்கள்' என்று எண்ணி நடக்கும் போதே, வைத்தி கலகலவென்று சிரித்தார். ஆனால் அதிக நேரம் அவர் சிரிப்பு நீடிக்கவில்லை. பெரிய, நாட்டு நாய் ஒன்று ''லொள் லொள்'' என்று சிறிய வண்ணம் அவர் மேல் உரசியபடி பாய்ந்தது. வைத்தி பயந்து விலகினார். உடனே எட்டு நாய்கள் ஒன்றுடன் ஒன்று கடித்துக் கொண்டன. பெரும் போர் ஆரம்பமாகியது. ஏன்? எதற்கு இந்தச் சண்டை? ஆம். அது கல்யாண வீட்டு வாசல்.

எச்சில் இலைக்காகச் சண்டை யிடும் அந்த நாய்களை இரண்டாம் பந்திக்காகக் காத்திருக்கும் பல மனிதர்கள் ஓடி வந்து விரட்டினார்கள்.

கண்டார் வைத்தி, கலங்கினார். அவருடைய கூர்மையான அறிவுக்கு அதில்கூட ஒரு படிப்பினை தெரிந்தது. ஆம். மனிதன் தன் மனம் போன போக்கில் நடக்க ஆரம்பித்தால் உலகில் இதைத்தான் காண்போம். ஒவ்வொரு தெருவும் படுகளமாகிவிடும். ஒவ்வொரு மனிதனும் விலங்காகிவிடுவான். தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, தான் வகுத்த நல்ல வழியில் நடப்பதுதான் மனிதனின் பெருமை. இதைத்தான் கல்யாணப் பந்தலில் இருந்த வடிவாம்பாள், சண்முகம், மோகனா முதலியவர்கள் கையாண்டார்கள். அவர்கள் குற்றம் பார்க்கவில்லை. பகைமை பாராட்டவில்லை. பண்பில் நின்றார்கள் என்பதை அறிந்தவுடனே, ஐயோ, அவர் மனம்கூட வேதனை அடைந்தது. தாம் எதிர்பார்க்கும் அந்த நிகழ்ச்சி வராமலே இருந்துவிடக்கூடாதா என்றுகூட ஏங்கினார். 'இந்தப் போட்டோ கேமிராவின் உள்ளே ஏதேனும் ஒரு பிப்பேர் வந்துவிடக்கூடாதா? அதன் உள்ளேயும் ஒளி புகுந்துவிடக் கூடாதா?' என்று சஞ்சலப்பட்டார்.

ஆனால் அவர் டிராவலர்ஸ் பங்களாவுக்குப் போனவுடனே அங்கு ஒரு தபால் அவருக்காக மேஜை மேல் காத்திருந்தது. அதைப் பிரிக்கப் போகும்போது தன் கையெல்லாம் சந்தனம் இருப்பதை உணர்ந்தார். உடனே கையைக் கழுவினார். அந்த மணத்தோடு அவர் மனமும் சாக்கடைக்குள் போயிற்று. லெட்டரில் கண்டிருந்த விஷயம் ரகசிய மாதலால், நாம் தெரிந்துகொள்ள வேண்டாம். ஆனால் அந்தக் கடிதத்துடன் மதறாஸ் இம்பீரியல் பாங்கியில் பணம் வாங்கும்படி ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் இருந்தது. அது நமக்குத் தெரிந்தால் பாதகம் இல்லை. அதையெடுத்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார் வைத்தி. அவர் மனம் அதில் மறைந்தது.

அடுத்த நாள் காலை ஆதவன், பொற்கிரணங்களுடன் கிழக்கே உதித்தான். கமலாலயத்தின் உட்புறத்தில் மேலக் கோபுரத்தின் நிழல் நர்த்தனம் செய்துகொண்டிருந்தது. கல்யாணத்திற்கு வந்திருந்த வித்துவான்களில் பலர் அங்கு நீராடி அனுஷ்டானம் முதலியவைகளை ஆற்றிக்கொண்டிருந்தனர். இரவு வீணைக் கச்சேரியின் போதே பரமானந்தப் பரதேசியார் கச்சேரி நடுவில் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து விட்டார். வீணை வித்துவான் வாசித்த வராளி ராகத்தில் பரமானந்தர் சொக்கியிருந்த போது "வர நாரத நாராயண ஸ்மரணானந்த" என்ற கீர்த்தனம் ஒலித்தது. நாரதர் தன் வாயால் நலந்தரும் சொல்லை உச்சரிக்கும் போது என்ன ஆனந்தம் அடைந்திருப்பாரோ, அந்த ஆனந்தத்தை அதே ஸ்மரண சுகத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டார் பரமானந்தப் பரதேசியார். நிஷ்டை கூடிவிட்டது.

இருந்த இடத்தில், இருந்த நிலையில், இறைவனைக் கண்டு அவன் பேரருட்கடலில் நீந்தித் தன் நினைவிழந்து கிடந்த அந்தக் கட்டையைத் தொட்டு எழுப்ப அங்கிருந்த எவரும் துணியவில்லை. இதன் பின் நடைபெற்ற குழலிசையில் அவர் தன்னை மறந்துதான் இருந்தாரே ஒழியத் தலையைக்கூட ஆட்டவில்லை. இரவு எல்லோரும் கல்யாணப் பந்தலில் கால்மாடு தலைமாடாகத் தூங்கிய போதும்கூட அந்த மகான் கண் விழித்தே இருந்தது. ஆனால், அதிகாலையில் எழுந்து வந்து, கமலாலயத்தில் ஸ்னானம் செய்துவிட்டுத் தம் கந்தையைக் கசக்கிப் படித்துறையில் உலர்த்திவிட்டு மாத்துரைத்த விநாயகர் மண்டபத்தில் உட்கார்ந்து ஏதோ துதித்துக்கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த வித்துவான்கள் தங்கள் வேஷ்டிகளைச் சிஷ்யர்களிடம் கொடுத்துத் துவைத்துப் போடச் சொல்லிவிட்டு, பரதேசியார் இருந்த பக்கம் வந்தார்கள். பரதேசியார் இளம்நகையுடன் அவர்களை வரவேற்றார். எல்லோரையும் அமரச் சொல்லிக் கையால் ஜாடை செய்தார். ஆனால், எல்லோரும் அமராமலேயே நின்றனர். பரதேசியாரும் பஞ்சாட்சரத்தை முடித்துக்கொண்டு, "என்ன, எல்லோரும் நீராட வந்தீர்களா?" என்றார்.



"ஸ்னானம் ஆகிவிட்டது. இப்போது பானத்துக்கு" என்றார் மெதுவாக ஒருவர்.

"ஏன் காப்பி?"

"காப்பிதான் என்றில்லை. கஷாயமாக இருந்தாலும் சரி" என்று கையால் வாயைப் பொத்திக்கொண்டே வினயமாக உரைத்தார் ஒரு வித்துவான்.

பரதேசியார் சிரித்தார். "தம்புரா இல்லையே அப்பனே!" என்றார்.

"தம்புரா இருந்தால் மட்டும் என்ன? உங்கள் காத்திரத்துக்கு அது........!"

"பின்னே எந்தச் சுருதிக்குப் பாடச் சொல்லுகிறாய்?"

அப்போது தியாகேசன் கோயிலில் இருந்து ஆராய்ச்சி மணி முழங்கியது. அதன் ஓசை கமலாலயத்தில் புகுந்து ஓம் ஓம் என்று எழுந்தது. அத்துடன் பஞ்சமுக வாத்தியம் ஒலித்தது. இந்த ஒலியைக் கேட்ட அந்த வித்வான் "ஏன், தியாகராஜாவின் ஸ்ருதிக்கே இருக்கலாமே" என்றார்.

"ஆம், அதில்தான் லயிக்க வேண்டும்" என்று பரதேசியார் கூறினார்.

எல்லோரும் தரையில் அமர்ந்தனர். பரதேசியாரின் திருமுகத்தையே பார்த்தனர். அன்றொரு நாள் ஞானசம்பந்தப் பெருமான் பார்வதி தேவியின் திருமுகத்தைப் பார்த்தது போல் இருந்தது, அக்காட்சி.

அற்புதம், அற்புதம்! ஒரு சிறு மனித உருவத்தில்தான் எத்தனை சக்தி! அரிதரிது மானிடராதல் அரிது! யானையையும் அடக்கிவிட்டான் மனிதன். ஆழ்கடலையும் வானத்தையும் அறிவால் வென்றுவிட்டான் அவன். இவைகளைக்காட்டிலும் பாடல் என்ற ஒன்றைத் தனக்காக அவன் படைத்துக்கொண்ட மாட்சியை என்னென்பது?

பரமானந்தர் பாட ஆரம்பித்த உடனே இருபத்து நான்கு தம்புராக்கள் ஒரே காலத்தில் மந்தர ஸ்ருதியைக் கூட்டுவது போல் ஒரு திவ்ய நாதம் எழுந்தது. பெருவெளி நிரம்பியது. அவர் நாபிக் கமலத்தின் இருந்து எழுந்த அந்த சிவநாதம் அத்தனை பேரையும் மெய்சிலிர்க்கச் செய்தது.

ஆதார ஷட்ஜத்திலிருந்து சிறிது சிறிதாக அந்த மகான் குண்டலினி சக்தியை சகஸ்ராரத்துக்கு கொண்டுவருவது போல் ஸ்வரங்களை எழுப்பிக்கொண்டிருந்தார். நாபியில் பிறந்து ஹிருதயத்தில் ஊறி தொண்டையில் உருவம் பெற்று வந்த அவருடைய பாடலை அந்த வித்துவான்கள் ஆவலுடன் கேட்டனர். அகத்தியன் கடலைக் குடித்தான் என்பது பொய்யல்ல. ஏனெனில் இவர் குரலில் இருந்து ஏழ் கடல் ஓசையும் அல்லவா இசையாகப் பொங்குகிறது? ஸ்வரங்களை அகாரத்தில் அடுக்கிக்கொண்டே அவர் வரும்போது அவரது இரண்டு நெற்றிப் பொட்டிலும் உள்ள நரம்புகள் புடைத்தன. அவர் பாட்டின் வேகம் கடல் மடை போல் ஒலித்தது. மதுரம் என்பது கண்டம்தான். அதிலும் மனம் நிலைத்துவிட்டால் அதுவே அண்டம் என்பதைக் கண்டனர் யாவரும். அந்தச் சன்யாசி தன்யாசி ராகத்தைப் பாடியபோது,

மூன்று ஸ்தாயிகளும் அவர் குரலில் அனாயாசமாகப் பேசின. இடையிடையே பல அபூர்வப் பிடிகளைக் கண்ட வித்துவான்கள் மலைத்தனர். ஏன் ராகத்தை ஐந்தே நிமிஷத்தில் முடித்தார் என அவர்கள் வியந்தனர்.

ஆனால் அது ஐந்து நிமிஷம் அல்ல, ஐந்து நாழிகை நேரம். பிறகு பரதேசியார் ஒரு கீர்த்தனம் பாடினார்.

''கலையை நல்ல வழியில் செலுத்து. பக்தியில்லாத சங்கீதம் பலனை அளிக்காது. பிருங்கி, நாரதர், மதங்கர் முதலிய துறவிகள் வளர்த்த அறநெறி இது. நல்லது கெட்டது தெரிந்துகொள். உலகம் மாய நாடகம் என்று அறிந்துகொள். எல்லையில்லாத பரம்பொருள்தன்னை இந்த வழியால் அடைவாய்'' என்று அவர் பாடியவுடனே அங்கு இருந்த அத்தனை பேரும் அந்தக் கடைப்பிடிப்பவர்கள் ஆதலால் ஆமோதித்தனர். ஆம், அன்று தியாகையரின், ''சங்கீத ஞானமு பக்திவினா சன்மார்க்கமு கலதே'' என்ற கீர்த்தனம் மறுமுறை உயிர் பெற்றது. ரயிலடியில் இருந்து வந்த ஒற்றை மாட்டு வண்டிகள் அப்படி அப்படியே நின்றன. வழி தேடும் மக்கள் ஆங்காங்கு நின்றார்கள். கோயிலில் உச்சிகாலப் பூஜை அன்று இரண்டு மணிக்குத்தான் நடந்தது. வித்துவான்கள் பந்தியில் இலைபோடும்போது அன்று பகல் மணி மூன்று.

இவ்வண்ணம் இசையைப் பருகிய அத்தனை வித்துவான்களும் அன்று மாலை ஆளுக்கு அரைமணி, கால் மணி என்று பிரித்துக்கொண்டு ஆவேசத்துடன் பாடினார்கள். எல்லோரும் ஒரே சுருதியில் ஒரே மேடையில் ஒரு கச்சேரியாகவே பாடினர். முதலில் ஒரு மகான் வர்ணம் பாடினார். அடுத்தாற்போல் ஒருவர் விரைவாக இரண்டு கீர்த்தனங்களைப் பாடினார். இன்னொருவர் ராகம் பாடி கீர்த்தனம் பாடினார். அடுத்தவரோ எடுத்த எடுப்பில் கீர்த்தனத்தைப் பாடி நிரவல் ஸ்வரத்தை வைத்துக்கொண்டார். பல்லவி ராகத்தை ஒருவர் பாட, அதில் தானத்தையும் பல்லவியையும் இருவர் முறை வைத்துப் பாடினார்கள். ராகமாலிகை வரும்போது அத்தனை வித்துவான்களும் ஒருவர் விட்ட இடத்தில் இருந்து மற்றொருவர் ஒரு ராகத்தை ஆரம்பிப்பதும் ஸ்வரம் பாடுவதுமாக அன்று அந்தாதி வரிசையில் ராகமாலிகை இரண்டரை மணி நேரம் நடைபெறவே திருவாரூர் தேவலோகமாகக் காட்சி அளித்தது. அந்தர துந்துபி முழங்கியது.

சண்முகம் இவைகளைக் கேட்டுப் பிரமித்து நின்றான்.

''என்னப்பா பிரமிக்கிறாய்?'' என்றார் பரதேசியார்.

''சாமி, இது என்ன அற்புதம் சாமி? முன்பின் தெரியாதவர்கள் ஒன்றுகூடி, பத்து வருஷம் ஒன்றாகப் பாடப் பயின்றவர்கள் போல் பாடுகிறார்களே''

''அதுதான் அப்பா தம் நாட்டு இசையின் மகத்துவம். குருநாதர்களின் விசேஷம். ஆயிரம் வருஷம் கற்கவேண்டிய இசையை அவர்கள் ஒழுங்குபடுத்தி, அத்தனை செல்வங்களையும் சாஹித்தியம் என்ற பொற்பேழையில் போட்டுத் தந்திருக்கிறார்கள். அதிலும் இந்தத்



திருவாரூர் தந்த செல்வம்தான் அப்பா இதில் பெரும் பகுதி'' என்று பெருமையுடன் கூறினார் பரதேசியார். இதைக் கேட்ட சண்முகம் ஆருயிர் அவதரித்த சங்கீத மும்மணிகளைச் சிந்தையில் வந்தித்தான்.

## பதினைந்தாவது அத்தியாயம்

# இன்றைக்கு ஆடலாம்!



''ஏன் தங்கச்சி, கச்சேரி கேட்கப் போகலியே?''

''அதுதான் இங்கேயே கேக்குதே.''

''அட, நீ ஞாயவஸ்தி ஆச்சே?''

''நீ மாத்திரம் என்ன? ஞானம் பிறந்த ஊரிலேயே பிறந்தவளாச்சே. எவ்வளவு நேரம் தான் அக்கா வாய்ப்பாட்டைக் கேக்குறது!''

''வாய்ப்பாடா?''

''ஆமா, இதுவும் வருத்தல் பெருக்கல் தானே? எவ்வளவு நேரம் பாட்டுக் கேக்குறது?''

''எவ்வளவு நாளைக்குத்தான் பச்சரிசியைச் சாப்பிடறது.''

''அது சரிதான் அக்கா. ஒரு துவையல், ஊறுகாய், ஒரு வற்றல் வாண்டாமா?''

''அதுக்குத்தான் பல்லவி, சுரம், தில்லானா உருப்படின்னு இருக்குதே.''

''போ அக்கா, நீ சும்மா இடக்காப் பேசுறே. எங்களுக்குப் பாட்டுப் போதும். இன்னிக்கு அக்கா ஆடணும்.''

''இனிமே நம்ம சொன்ன அது ஆடுமா? சொல்றவுங்க சொன்னா ஆடும்.''

''எங்க அக்காவை அப்படியெல்லாம் சாதாரணமாக நினைக்காதே. இது சொன்னா அவர்தான் ஆடணும்.''

''ஆமா, உனக்கு எல்லோரும் உன்னைப் போலே என்கிற எண்ணம்!''

''என் அதிகாரம் எல்லாம் நீ தந்ததுதானே, அக்கா?''

''ஏய் மரகதம்! சும்மா இரு. இது ஒண்ணு. அடிக்கடி சொல்லிக்கிட்டு. எனக்கு கேட்கவே வெட்கமா இருக்கு.''

''என்ன சண்டை இங்கே?'' என்று கேட்டுக்கொண்டே வந்த வடிவாம்பாள் தன் மகள் தலையில் ஒரு தஞ்சாவூர்ப் பூச்செண்டைச் செருகினாள்.

''ஆமா, எற்கெனவே அது கல்யாணம் ஆனது முதல் தலை மேலே ஏறுது. நீங்க வேறெ சென்டு கட்டிவிடுங்க.''

''என்ன மோகனா?''

''நான் இன்றைக்கு நாட்டியம் செய்யணுமாம். மைனர் வீட்டு அம்மா சொல்லுது.''

''நீ என்ன சொன்னே?''

''நான் தேதி சௌகரியமில்லேனுட்டேன்'' என்று மோகனா கூறவும் வடிவாம்பாள் சிரித்தாள்.

''ஆமா, இப்ப தேதி சௌகரியமில்லை. பின்னாலே ஒரு தேதியிலே வச்சுக்குங்க. ஆனா அட்வான்ஸை மட்டும் அம்மா கிட்டக் குடுத்துடுங்கன்னு சொல்லுது'' என்றாள் மரகதம்.

இதற்கு வடிவாம்பாள் மேலும் சிரித்தாள். இதைப் பார்த்தவுடனே மரகதம் கோபத்தால் துடித்தாள். ''என்ன அக்கா நீ ஆடுகிறாயா? இல்லை, நான்.....''

''என்? நீயே ஆடிவிடுவாயோ?''

''நீ ஆடறதுன்னா சொல்லு. இல்லாட்டி நான் திருவாரூர்த் தெருவிலே தேரோட்டம் விடப்போறேன்.''

''எங்கள் தியாகராஜா அப்படியெல்லாம் சும்மா சும்மா தேரிலே ஏறிவிடமாட்டார். அறுபது ஊர் கூடி அவர் வடத்தைக் கும்பிட்டாத்தான் புறப்படுவார்!''

''உன் தியாகராஜாவை யார் சொன்னாங்க? நம்ம பார்வதி ஆடுகிறேன்னு துடிக்குது. அது ஆடக் கிளம்பிடுத்துன்னா அப்புறம் தேர்தான்!'' என்று குறும்புடன் குறுநகை செய்தாள் அந்த மரகதம்.

அப்போது இருபது பெண்கள் சிரித்த சிரிப்பில் நட்சத்திரங்கள் உதிர்ந்தன. காந்த விளக்கு வெளிச்சமல்லவா? வைரப் புல்லாக்குகள் வர்ணங்களை அள்ளி வீசினதுதான் அப்படி இருந்தது.

''இல்லையக்கா, நான் ஆடறேன்னு சொல்லல்லே. மரகதம் அக்கா தான் சும்மா ஆடிக்கிட்டே இரு, ஆடினாத்தான் உடம்பு இளைக்கும்னு சொன்னாங்க, நானும் சரின்னு ஒத்துக்கிட்டேன். எனக்கு உடம்பு அக்கா மாதிரி இருக்கணும்னு ஆசை'' என்றாள் பார்வதி.

''என்னமோ பாத்துக்குவம், யார், யார் மாதிரி ஆகுறாங்களோ, அது இன்னும் ஆறு மாசம் பொறுத்தல்லவா தெரியும்?'' என்றாள் மரகதம்.

உடனே கொல்லுமாங்குடிப் பார்வதி கொல்லவே ஆரம்பித்து விட்டாள். மற்ற பெண்களும் அவளுடன் சேர்ந்துகொண்டார்கள்.

''நம்ம வீட்டுக் கல்யாணத்திலே நம்ப ஆடலாமா?''

''ஏன், பணம் கிடைத்தால்தான் ஆடணுமோ?''



''அவர் பார்க்கத்தான் ஆடணுமோ?''

இன்றைக்கு.........

''உள்ளூரில் ஆடப்படாதே''

கையிலே வளை போட்டுட்டா காலிலே சலங்கை கட்ட முடியுமா?''

''நாங்களும் கூட ஆடுகிறோம் அக்கா'' என்று சாமரியாய்ப் பேச்சுகள் பறந்தன. இருந்தாலும் 'அவர் என்ன சொல்வாரோ' என்று நினைத்தாள் மோகனா. ஆனால் இந்தச் சமயத்தில் மரகதம் ஒரு சீட்டைக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினாள். அதைப் படித்த மோகனா எரித்துவிடுபவள் போல் மரகதத்தைப் பார்த்தாள். இந்தப் பார்வையைப் பார்த்த மரகதம், ''ஏன் பார்க்கிறே? இஷ்டமில்லாட்டி நான் கொடுத்த சீட்டை எங்கிட்ட குடுத்துடு'' என்றாள்.

ஆனால் மோகனா அதைத் தன் இடுப்பில் செருகிக்கொண்டாள். ஆம், அந்தச் சீட்டில் ''இன்றைக்கு ஆடலாம்'' என்று மரகதம் எழுதியிருந்தாள். அதன் கீழ் ஸ்ரீமான் சிக்கலார் கையொப்பம் இட்டிருந்தார்.

''ஆமா மோகனா, மருமகப்பிள்ளை சிரிச்சாரு. நான்தான் கையெழுத்துப் போடச் சொன்னேன். நம்ம ஊர்ப் பெண்கள் எல்லாம் உன்கூட ஆடறேங்குது. நானும் ஒரு நாட்டியத்தைத் தயார் செய்துட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே பெண்கள் கூட்டத்தில் நுழைந்தார் நட்டுவனார்.

''என்ன நாட்டியம் ஐயா?'' என்றான் வரதன்.

''அதுவா, பரதநாட்டியம்'' என்றார் நட்டுவனார்.

''அப்படியானால் இத்தனை நாளாகத் தங்கச்சி ஆடுறது இங்கிலீஷ் டான்ஸா?''

''இல்லை வரதா, புரியாமல் பேசாதே. இதுதான் பரதம் பிறந்த கதை'' என்றார் நட்டுவனார்.

★ ★ ★ ★

# பரதம் பிறந்த கதை



''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்''

என்கிறார் வள்ளுவப் பெருமான். இதை ''கடுத்தது காட்டும் முகம்'' என்று கூறிவிடுவார்கள்.

கடுத்ததை மாத்திரந்தானா முகம் காட்டுகிறது? களிப்பதையுந்தான் காட்டுகிறது?

குழந்தை விளையாடிக்கொண்டே இருக்கிறது. சரேலென்று விளையாட்டை நிறுத்திவிட்டு ஓர் இடத்தைப் பார்க்கிறது. உடனே அதன் முகத்தில் ஒருவித உணர்ச்சி வருகிறது.

அந்த இடத்தை நோக்கி வேகமாக நகருகிறது. எதைக் கண்டது குழந்தை? அங்கு ஓடியது ஒரு கட்டெறும்பு. அதைக் கையால் தட்டிவிட நினைக்கிறது அதன் உள்ளம். ''எறும்பு, எறும்பு'' என்று சொல்ல அதற்கு இன்னும் பேச்சு வரவில்லை. ஆனால் பேச்சுக்கு முன்னே உணர்ச்சி வருகிறது. அந்த உணர்ச்சியை முகம் காட்டுகிறது. இதுதான் பாவம். பேச்சுக்கு முன் பிறப்பது பாவம்.

''என்ன, தம்பி ரொம்பக் குஷியா இருக்கிங்க?'' என்று ஒருவரைக் கேட்கிறோம். அந்தத் தம்பி பேசவில்லை. ஏன்? ஒருமுறை சொல்லிவிட்டால் உணர்ச்சி போய்விடும். கற்கண்டைக் கடிக்காமல் வாயில் அடக்குவது போல் ஆனந்தத்தை நினைத்துச் சுவைப்பதில் அவருக்கு இன்பம் அதிகம். அதனால் அந்தப் பேசாத தம்பி என்ன செய்கிறார்? ''தன்னாதான தனனா'' என்று பாட ஆரம்பிக்கிறார். இந்தப் பாட்டும் உணர்ச்சியில்தான் - பாவத்தில்தான் பிறக்கிறது. இதுதான் ராகம். பாடிக்கொண்டே அவர் ஒய்யாரமாக நடக்கிறார். அதில் ஒரு மிடுக்கு வருகிறது. பார்க்கிறார். அதில் ஒரு எடுப்பு இருக்கிறது. இதுதான் தாளம். இவை மூன்றும் ஒன்று கலந்தால் பரதம்.

''சே, இவ்வளவுதானா பரதம்!'' என்று கேட்டுவிடாதீர்கள். நான் என்ன முத்துக்குமார நட்டுவனாரா, இல்லை, மோகனாம்பாளா, அதை இலக்கியமாய் எடுத்துக்காட்ட?

முத்துக்குமார நட்டுவனாரின் கையில் ஒரு பழைய சிலப்பதிகார ஏடு இருந்தது. செந்தமிழ் பயிலும் மனமும் இருந்தது. சிந்தையில் தெளிவும் இருந்தது. ஒரே நாளில் அற்புதமாக ஒரு நாட்டியத்தைத் தயார் செய்துவிட்டார்.



குரங்காட்டிகூடத் தன் குரங்கின் ஆட்டத்தை ரசிக்கிறான். பாம்பாட்டிகூடத் தன் பாம்பின் ஆட்டத்தில் தானே மயங்கித் தன் உயிரையே பறிகொடுத்துவிடுகிறான். கேவலம், கொடிய விலங்குகளை ஆட்டி வைப்பவர்களே இப்படி என்றால், தேவ நங்கை, அழகுப் பிம்பம், கலைச் செல்வம் ஆகிய மோகனாவை ஆட்டி வைக்கும் முத்துக் குமரனாரின் களிப்பை நாம் எப்படிச் சொல்வது? குழந்தையின் ஆட்டத்தைப் பார்த்துக் களிக்கும் தாயும், பிறவிகளை ஆட்டி வைத்து அதில் களிக்கும் இறைவனும், சிஷ்யர்களை ஆட்டி வைத்து அதில் களிக்கும் நட்டுவனாரும் ஒரே இனத்தவர். ஆதலால்தான் முத்துக்குமரனார் தன் சிட்டுப் பெண் கல்யாணம் ஆகி புருஷன் வீட்டுக்குப் போவதற்கு முன்னால் இன்னொரு பரிசை அவளுக்கு நல்க எண்ணினார். பாவம், அவரால் என்ன, காசும் பணமுமா கொடுக்க முடியும்? அல்ல, கனகாபிஷேகம் செய்ய முடியுமா? கலையை அளித்தார்.

✤ ✤ ✤

தஞ்சாவூர் தனகோடி, கொறநாட்டுக் கமலம், கும்பகோணம் ஹம்சா, பந்தணைநல்லூர் அங்கயற்கண்ணி முதலிய பெண்கள் அன்று மோகனாவுடன்கூடவே ஆட ஆரம்பித்தனர். கச்சேரி மேடையில் திரைகள் தொங்கின. வரதனின் மத்தளம் முழங்கியது. என்ன சொல் என்கிறீர்களா?

''டிம் டிம் டிம், டம டம டம்'' என்று உடுக்கை போல் ஒலியை முழக்கியது மத்தளம்.

மேடையின்மீது நடராஜப் பெருமான் காட்சியளித்தார்.

பின்னாலிருந்து சாம வேதம் போல ஒரு சுலோகம் ஒலித்தது.

''ந்ருத்தாவஸானே நடராஜ ராஜோ
நநாத டக்காம் நவபஞ்ச வாரம்
உத்தர்த்து காமஸனகாதி ஸித்தாம்
ஏதத் விமர்சே சிவஸூத்ர ஜாலம்''

என்ற அமர சுலோகம் அது.

''உடுக்கை முழக்கினான், ஓசை பிறந்தது. ஒன்பதும் ஐந்தும் ஒலிகள் பிறந்தன. எடுத்தார் பாணினி இலக்கணம் யாத்தார். இத்தனை மொழிகளும் இதனில் பிறந்ததே'' என்று அதன் தமிழாக்கத்தை இரண்டு பெண்கள் கின்னர மங்கை போல் உடை உடுத்திப் பாடினர்.

மேடையையே எல்லாரும் ஆவலுடன் பார்த்தனர். அம்பலத்தாடியாக அனல் கொழுந்தென ஆடினாள் மோகனா.

இடப்பாதம் தூக்கி ஆடினாள். சலங்கை குலுங்கியது. சனங்களின் சிந்தை கலங்கியது. வளைகள் ஆர்த்தன. விழிகள் பார்த்தன. கையில் உடுக்கை எடுத்தாள். கண்டவர் மிடுக்கை அழித்தாள். ஒரு கையில் மான் துள்ள, ஒரு கையில் மழு வேந்தி, ஒரு கையில் உடுக்கை முழங்க, ஒரு கையில் திரிசூலம் ஏந்தி ஆடினாள் மோகனா. நயவு செய்யவும். இரண்டு கைகளேதான் அப்போது நான்கு கைகளாகத் தோற்றம் அளித்தன.

அஇ௨ஹு ரிஹுகென
தகதிமி தகஜு¯ஹு
ஙமஜுண நமவென
ஜுணஜுண தகதோம்
கடதஷு¯ சடதவு
யரலவஷு - என்றே
உடுக்கையி லின்றே
ஒலிவரு மன்றே -

என்று ஒலிக்கெல்லாம் முதலாக உடுக்கையில் பிறந்த பதினான்கு சிவசூத்ர ஜாலங்களையும் மத்தளத்தில் முழக்கினான் வாதன்.

இதைக் கேட்ட மக்கள் தாங்களும் திருக்கைலாயத்தில் இருப்பதாகவே நினைத்தனர்.

இவ்வாறு நடராஜமூர்த்தி ஆடிக்கொண்டிருக்கையிலே ஆறு பெண்கள் இருபுறமும் இருந்து வந்து நடராஜனிடம் முறையிட்டார்கள்.

**''பூவிலுள்ளோர் மகாதேவனிடம் வந்தே
போற்றி என்றே துயர் சாற்றி நின்றார்''**

என நட்டுவனார் பாடினார். அதுவரை வீர ரசத்தில் ஆடிய மோகவிக்ரகம் அப்போது கருணா ரஸத்திற்கு வந்தது.

இறைவனே பூமியெங்கும் எரிக்கின்றான் கதிரோன், எங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும். குளிர்மதிச் சடையானே என்று பூவுலகத்தினர் வேண்டினர்.

இந்த முறையீட்டைக் கேட்டதும் இந்திரன்தம்மை இறைவன் நோக்கினார். திரை விழுந்தது. மறுபடியும் திரை தூக்கப்பட்டது.

கையிலே வில்லேந்தி மலர் மாலை தரித்து வசந்தன் என்பவன் நின்றான். இந்த வேஷத்தில் நின்ற தஞ்சாவூர் தனகோடியைப் பார்த்தவுடனே எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். வசந்தனை நோக்கி, ''நீ பூவுலகத்திற்குச் செல். அங்கு மக்களுக்கு வெப்பத்தை நீக்கிக் களிப்பை உண்டாக்கு'' என்று உத்தரவு இட்டான் இந்திரன்.

வசந்தன் பூமியை நோக்கினான்.

சுடுமணலில் மக்கள் நடக்க முடியாமல் நடக்கின்றார்கள். மரங்கள் எல்லாம் இலை கருகி இருக்கின்றன. தரையெல்லாம் வெடித்து உள்ளன. மாடுகள் தாகத்தால் வாயை ஆவென்று பிளந்துகொண்டு ஆ இனம் எனும் பேருக்கு ஏற்ப நிற்கின்றன. இவைகளைக் கண்ட வசந்தன் பெருமூச்செறிந்தான். அப்போது யாரோ விசும்பி அழும் சத்தம் கேட்டது. திரும்பினான் வசந்தன். அவன் தங்கை வாசந்தி என்பவள் அங்கு வந்து நின்றாள். இந்த வேடத்தில் வந்து, கந்தர்வ தங்கை போல் மோகனா நின்றதும், ரஸிகர் கூட்டம், முன்னோடி வந்தது. கரகோஷம் அதிர்ந்தது.

''சோதரா! என்னையும் உடன் அழைத்து ஏகுவாய்.''



''முன்பும் சென்ற தேவ மகளிர் இன்னும் திரும்ப இல்லையம்மா.''

''அங்ஙனமென்றால் அழகாம் பூமியை யானும் காண விழைகின்றேன்.''

''மானிடர் உன்னை மயக்கிடுவார்கள்.''

''வானிதைக் காட்டிலும் வளமோ மாநிலம்?''

''அங்கு உழைப்பு உண்டு, அதனால் இன்பம் உண்டு. அங்கு பசியுண்டு. அதனால் ருசியுண்டு. அங்கு பிரிவு உண்டு. அதனால் உறவு உண்டு.''

''இறப்பும் பிறப்பும் இங்கில்லை. இளமையும் மூப்பும் இங்கு இல்லை. உழைப்பும் பயனும் இங்கு இல்லை. களிப்பும் காதலும் இங்கு இல்லை. ஆதலால் விண்ணைக் காட்டிலும் மண் வெகு சிறந்தது.''

''அப்படியானால் நான் அவசியம் வருவேன்.''

''ஆனால்?''

''என்ன?''

''ஆண் மகன் கையால் தொட்டால் அங்கமிழந்து அலைவாய், சரியா?''

''அவ்வாறாயின் ஆகுக அண்ணா. எவ்வாறேனும் எனை அழைத்தேகுக.''

இந்த நிபந்தனையை வாசந்தி ஏற்றுக்கொண்டதும் வசந்தனும் வாசந்தியும் பூமிக்கு வருகிறார்கள்.

வசந்தன் வந்ததும் பாரில் வசந்த காலம் வந்தது. தென்றல் சில்லென வீசியது. சென்றது வெப்பம்.

பட்டுப்போன மரத்தின் கொப்பில் பட்டுப்போல் தளிர்கள் வந்தன.
மாமரம் பூத்தது, வண்டுகள் யாத்தன.
சாமரம் போட்டது தாழையும் வாழையும்.
நித்திய மல்லிகை, நிலத்தின் தாரகை அதில்.
முத்து முத்தாகவே கொத்துகள் அலர்ந்தன.
முல்லைக் கொடியாள் முறுவல் செய்தாள்.
மாதவிப் பூக்கள் மணத்தைப் பரப்பின.
கடம்பு பூத்துக் குங்குமக் கோலம் போட்டது.
கொன்றை மலர்கள் சரம் சரமாகப் பூத்துக் குலுங்கின.

வாவிகள் எல்லாம் தாமரைச் செல்வி வாய் மலர்ந்து வரவேற்புரைத்தாள்.

மேற்கண்ட வசந்தகாலக் காட்சியை நட்டுவனார் ஒரு வண்ணப் பாட்டாகப் பாடினார். இத்தனை மலர்களுக்கும் ஹஸ்த பாவம் பிடித்து ஆடினாள் மோகனா. இதன்பின் வசந்தனுக்கும் வாசந்திக்கும் பின்வரும் கருத்துடைய அபிநயமும், ஒரு ராகமாலிகைப் பாடலும் ஆரம்பமாயிற்று.

''அண்ணா ஏது இத்தனை மலர்கள்! ஏது இத்தனை வண்ணம்! தரையெல்லாம் வட்ட வட்டச் சிறு பூக்கள். குளத்தில் ஒரு மலர், குன்றில் ஒரு மலர், மரத்தில் பல மலர். வாசமோ அம்மம்மா! இத்தனை எழிலும் எவர் படைப்பு அண்ணா?''

''எந்தன் கைத்திறம்.''

''அண்ணா உன்போல் அற்புதம் செய்வார் விண்ணாடுதனில் வேறு யாருண்டு?''

''உண்டு. காமன் என்பான், கண்ணில் புகுவான்; மாயன் மகனை மணக்கச் செய்வான். மல்லிகை தாமரை மலர்களைக் கரும்பு வில்லில் செருகிவிடுவான் அம்பாய். இரு இனம் கூடும். இன்பம் பிறக்கும், கவிதை உதிக்கும்.''

அப்போது மோகனா வெட்கத்தால் தலைகுனிந்து நின்றாள். பிறகு, ஒரு மலரைப் பார்த்து ''இது என்ன மலர்?'' என்றாள்.

''அருமைத் தமிழ் போல அடுக்கலங்காரம் ஆயிரம் இதழ்கள். மல்லிகை என்பார் இதனை. இவள் மணத்தில் அரசி'' என்றான் வசந்தன்.

மல்லிகைப் பூவை எடுத்து முகர்ந்து பார்த்தாள் வாசந்தி. மணம் அவள் மனத்தைத் தொட்டது.

''மண்ணின் பெருமைக்கு மல்லிகையே போதும், கண்ணால் இதனைக் காண்பதே போதும், மூக்கால் இதனை முகர்வதே போதும்'' என்று பூமியைப் புகழ்ந்தாள். உடனே வசந்தனைப் பார்த்து, ''எக்காலமும் இது இருந்திடுமல்லவா?'' என்று வாசந்தி ஆவலுடன் கேட்டாள். வசந்தன் மௌனமாய் நின்றான்.

''ஏனிந்த மௌனம்?''

''நான் என்ன செய்வேன், காலையில் மலரும், மாலையில் வாடும்.''

''நீ படைக்கும் அழகு இதுதானா?'' என்று மனம் வருந்தினாள் வாசந்தி.

''இல்லை. இரவில் வேறொரு மலர் மலரும்.''

''அப்படியா? இவ்வாறு இரவும் பகலுமாக எந்த நாளும் மலருமா?''

''எந்த நாளுமில்லை. இரண்டு மூன்று மாதம்.''

''ஆசை அறுபது நாள் என்பார்கள். நீ படைத்த அழகும் அத்தனை நாளைக்குத்தானா? இந்த வசந்த காலம் என்றும் நிலைத்திருப்பது இல்லையா?''

''என்னால் முடிந்தது அவ்வளவுதான்'' எனக் கூறிவிட்டு, கோபமுடன் சென்றான் வசந்தன்.

'இவ்வளவுதானா வசந்த காலத்தின் எழில்? இந்தப் பூமியில் எந்நாளும் நிலைத்திருக்கும்படியான ஒன்றை நாம் எப்படிப் படைப்பது?' என்று எண்ணிக்கொண்டே பூங்காவனத்தில் உலாவினாள் வாசந்தி.



அப்போது சிறு சாரல் அடிக்கிறது. வானவெளியைப் பார்க்கிறாள் வாசந்தி. ஆகாயத்தில் அழகான வானவில் ஒன்று காட்சியளிக்கின்றது. அதில் உள்ள வர்ணங்களைப் பார்க்கிறாள். ஏழு வர்ணங்கள் என எண்ணினாள். பக்கத்தில் சலசலவென்ற ஒலியுடன் ஓர் அருவி விழுகிறது. அதிலிருந்து நீர்த்திவலைகள் ஏழு வர்ணங்களுடன் வைரமணிகள் போல் சிதறி விழுகின்றன. அருவியை அடுத்து உள்ள ஒரு பாறையின் மேல், புள்ளிக் கலாபமயில் ஒன்று தன் தோகையை விரித்து ஆடுகிறது.

இதைப் பார்த்த வாசந்தி மலைக்கிறாள். அதன் அழகில் மயங்குகிறாள். ''இந்த மயில் ஒன்றைப் பார்ப்பதற்காகவே மண்ணில் ஆயிரம் தரம் பிறக்கலாமே'' என்று எண்ணுகிறாள். அப்போது அந்த மயில் வாயைத் திறந்தது. காள் என்ற சத்தம் காதைத் துளைத்தது. வாசந்தி இரு காதுகளையும் தன் கையால் பொத்துகிறாள். இந்த இடத்தில் மோகனா இருகாதையும் பொத்தி முகத்தைச் சுளித்ததைக் கண்டு அங்கு உள்ள அத்தனை முகமும் மலர்ந்தது. பாடலில்தான் இக்காட்சி பாடப்பட்டது. ஆயினும் எதிரில் ஒரு மயிலே வந்து ஆடுவதுபோல் வாசந்தியாக அபிநயம் பிடிக்கும் மோகனா தன் பாவத்தால் படைத்துவிட்டாள்.

மோகனா அந்த மயிற்குரலை வாயால் அபிநயம் செய்கிறாள்.

அப்போது அழகான காளை ஒன்று அந்தப் பூங்காவில் வருகிறது. திமில் குலுங்க, வாலை உயர்த்தி அது நடந்து வரும் நடையழகில் வாசந்தி மலைக்கிறாள். அப்போது அந்தக் காளை, தன் கொம்புகளை ஒரு மணல் மேட்டில் பாய்ச்சி, மா........ என்று கனைக்கிறது.

''அடேயப்பா குரலுக்குக் குரல் எவ்வளவு மாறுதல்?'' என்று சொல்லி மயிலின் குரல், மாட்டின் குரல், இரண்டையும் ஒரு நிதானமாக ஆ ஈ ''வாரி.....'' என்று முனகுகிறாள். அவளுக்கு பூமியில் உள்ள குரல் வகைகளில் எல்லாம் அக்கறை பிறக்கிறது.

மாமரத்தின் மீது இருந்து ஒரு மதுர ஓசை கேட்கவே அவள் மரத்தைப் பார்க்கிறாள். பட்சி தெரியவில்லை. மறுபடியும் அதே ஓசை. ஆம் குயிலோசை! அதில் மனம் அயர்கிறாள்.

கொன்றை மலர் அழகும், குயிலின் குரல் அழகும் என்றைக்கும் பூமிக்குக் கிடைப்பதல்லவே, என்று மயங்குகிறாள். குடம் குடமாக பூத்துத் தொங்கும் அந்தக் கொன்றை மலர்களின் நடுவே, இன்னொரு மலர்க்குடம் தொங்குகிறது. அது நிறத்தில் மஞ்சள் இல்லை. கருநிறமாக இருக்கிறது. ஆயிரம் இதழ்களுக்குப் பதிலாக அதில் ஆயிரம் துளைகள் காண்கின்றன. அதன் ஒவ்வொரு துளையிலும் ஒரு தேனீ பாடிக் கொண்டே புகுந்து புறப்படுகிறது. இந்த ஈக்கள் காட்டில் தேனையுண்டு இசைக்கும் ரீங்காரத் தொனியே உலகம் பெறுமே என்று எண்ணுகிறாள்.

அப்போதுதான் அலங்காரப் பிரியனாகிய திருமால் பூமியின் அழகால் மயங்கித் திரும்பத் திரும்ப இங்கு வந்து பிறக்கிறார் என்பது புலனாகியது.

அழகான வெண்குதிரை ஒன்று ஓடி வருகிறது. பாதையில் காலை வைத்து அருவியைத் தாண்டுகிறது. தன் காதலியை நோக்கி இடிச் சிரிப்புடன் ஹி, ஹி, ஹி என்று அழைக்கிறது. இந்த ஓசையில் நீ என்ற ஸ்வரம் இருப்பதைக் காண்கிறாள் வாசந்தி.

ஓர் அழகிய மேடை. அதன் மீது அமர்ந்திருக்கிறாள் வாசந்தி. அவள் கையிலே வாழைநார் இருக்கிறது. எதிரில் பலவித மலர் அரும்புகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மல்லிகை அரும்பை எடுக்கிறாள். அவள் வாயில், மயிலின் குரல் ஸ... என்று இசைக்கிறது. ..ஸா..ஸா.. ஸா என்று பாடிக்கொண்டே அரும்பைத் தொடுக்கிறாள்.

இந்த வசந்த காலத் தென்றலில் அந்த உத்தியான வனத்தில் பல பட்ட மகிஷிகளுடன் கூட ஜலக்கிரீடை செய்கிறான் ஒரு வாலிப அரசன். அவன் காதில்... இந்த மதுரகீதம் கேட்கிறது. அவன் உடலில் புதுச் சக்தி பிறக்கிறது, களை நீங்குகிறது. மூச்சில் ஒரு வேகம் வருகிறது.

ஸ,ரி, க, ம, ப, த, நி, ஸா....'' என்று வாசந்தி பாடுகிறாள். இசை பிறந்துவிட்டது. மயிலும் குயிலும், மாடும் குதிரையும், ஆனையும் க்ரௌஞ்சமும் ஆடும் ஆகிய ஜீவராசிகளின் குரலில் விளைந்த ஜீவ நாதத்தை அடுக்கி, வான வில்லின் ஏழு வண்ணங்களைப்போல், எழிசையாய் தொகுத்துக்கொண்டிருந்தாள் வாசந்தி. அவள் எதிரில் இருந்த அரும்புகள் எல்லாம் வெயிலில் வாடிவிட்டன. ஆனால் அவள் கோடிப் பங்கு அதிக எழிலுடன் ஸ ரி க ம ப த நி ஸா என்று பாடி மாலையை நீளமாகக் கட்டி மறுபடியும் மடிப்பது போல், ஸாநிதபமகரிஸ என்று ஆரோகண அவரோகணம் செய்கிறாள். ஆம் கீதம் பிறந்துவிட்டது. அவள் பாடப் பாட கொடிகளிலிருந்து மலர்கள் பொழிகின்றன. மரங்கள் தழைக்கின்றன. மானும் மயிலும் ஓடாமல் ஆடாமல் உற்றுப் பார்க்கின்றன. ஊட்டுகின்ற கன்று தன் கடைவாய் வழியே பால் சொட்ட நின்று கேட்கின்றது. ஓடி வந்த வாலிப மன்னனோ வாசந்தியையே கண்கொட்டாமல் பார்க்கிறான்.

★ ★ ★ ★



## கலைக்குப் பகையாமோ காதல் !



ஞானம். இதுதான் மற்றப் பிராணிகளுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம். ஆனால், இந்த ஞானம் அரைகுறையாக இருந்துவிட்டாலோ, அத்தனை கெடுதல்களுக்கும் இதுதான் காரணம். எல்லோருமே பூரண ஞானிகளாக இருந்துவிட்டால் உலகமே உப்பில்லாமல் போய்விடும் அல்லவா? இரவும் பகலும்தானே உலகம்? ஆதலால் இருளும் ஒளியும் உடைய பலர், அறிவும் குழப்பமும் உள்ள பலர் உலகத்துக்கு அவசியம் தேவை. அதில் ஒருவன்தான் அந்த ஜலக்கிரீடை செய்த மன்னன். அவன் பெயர் காமரூபன்.

முதன் முதலாக இசையைக் கேட்டவுடனே அவனுக்கு எழுந்த ஞானத்தில் அவன் கண்களுக்குத் தேவமகள் தெரிந்தாள். ஆனால் அவளைப் பார்த்தவுடன் அவள் வடிவழகில் கொண்ட மயக்கத்தால் அகத்தில் இருள் பரவ ஆரம்பித்தது. செடி மறைவில் நின்ற வண்ணம் பாடிக்கொண்டே இருக்கும் வாசந்தியின் அழகை அவன் பருகினான். இந்த வேஷத்தில் பார்வதிதான் வந்து நின்றாள். ஆனால், அவள் ஆடாமல் அசையாமல் பார்த்த அந்தப் பார்வையிலே காமனே குடி கொண்டிருந்தான்.

பார்ப்பவள் பெண்தான், ஆனாலும் இந்தப் பார்வையே சண்முகத்தை என்னவோ செய்தது. நாட்டியத்தில் பார்த்த விரகப்பார்வை கூட அவனை வாட்டி எடுத்தது. ஆனால் இந்த உணர்ச்சிகளால் எல்லாம் தாக்கப்படாமல் வாசந்தி தன் இசையிலே ஈடுபட்டு பத்மாசனத்தில் அமர்ந்த கலைமகள் போல் இருந்தாள்.

ஸரிஸரி, ஸரிகம, ரிகரிக, ரிகமப என்று செண்டு கட்டினாற்போல் ஸரளியை வரிசையாக அடுக்கித் தொடுத்து, இன்பமாய்ப் பாடிக் கொண்டிருந்தாள். அப்போது ஆவலுடன் ஓடி வந்த வசந்தன், ''சகோதரி இது என்ன?'' என்றான்.

''அடுக்கித் தொடுக்கும் மாலை!''

''என் அரும்புகளாலா?''

''அல்ல, உன் அரளி வரிசை வாடிவிடும். இது ஸரளி வரிசை. வாடவே வாடாது. உன் வசந்தகாலம் இரண்டு மாதம்தான். இது என்றைக்கும் பூமியை வந்த காலமாக்கும். உன் மாலை கண்ணுக்கு

இன்பம். முகர்ந்தால் இன்பம். இது ஐம்புலன்களுக்கும் இன்பம் அளிக்கும். காற்றில் உதிராது, கவலில் வாடாது, கவர்ந்தால் குறையாது. கலை மலர்!'' என உரைத்து, ''ஸரிகபபதநிஸா, ஸநிதபமகரிஸா...'' என்பதை, அகாரத்தில் பாடினாள் வாசந்தி.

இதைச் செவி மடுத்த வசந்தன் திகைத்தான், பிரமித்தான். இன்பக் கடலாடி எழுந்தவன் போல் பரவசத்துடன், ''சகோதரி, இப்பொழுது நீ பாடியது என்ன?'' என்று கேட்டான்.

''இதன் பெயர் ராகம்.''

''அப்படி என்றால்?''

''ஆசையைத் தூண்டுவது, பாடுபவர், கேட்பவர் இருவருக்கும் ஆசையை மேலும் வளர்ப்பது!''

''எங்கே, பாடு!''

வாசந்தி மறுமுறையும் பாடவே காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்புத் துண்டுபோல செடிமறைவில் இருந்து ஓடி வந்தான் அந்தக் காமரூபன்.

''ஆருயிரே, என் இதயம் கவர்ந்த மதுர மொழியாளே இங்கு வா'' என்று அவளைத் தழுவ நெருங்கினான்.

வாசந்தி சரேல் என்று மின்னலைப்போல் விலகினாள். ''மன்னா நில்! ஏன் என்மேல் ஆசை?'' என்றாள்.

''உன் எழில் என்னை மயக்குகிறது.''

''அழகு அழியும். அந்த அரும்புகளைப் பார்!''

எதிரில் கிடக்கும் வாடிய மலர்களைக் கண்டான் மன்னன். ஆயினும் ''உன் பருவத்தைக் கண்டு...''

''பருவம் மாறும், வசந்தமும் வாலிபமும் நிலையல்ல.''

''உன் இசையைக் கண்டு...''

''அப்படியானால் எட்டி நின்று இசையைக் கேள். என்னைத் தொடாதே.''

''இல்லை. உன்னை விடமாட்டேன்.''

''தங்காய் வா. இங்கிருந்தால் ஆபத்து. வானுலகம் செல்லுவோம்.''

''வானில் என்ன இருக்கிறது? எத்தனை ஆபத்துகள் வந்தாலும் எழிலை உள்ள இந்த மண் எத்தனையோ பங்கு மேல். நீ போகலாம்.''

''இந்திரன் கோபிப்பார்.''

''இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் இசையால் இங்கு இழுத்து வரப்படுவார்கள். செல்!'' என்றாள் வாசந்தி.

வசந்தன் கோபத்துடன் வானத்தில் செல்லுகிறான். வாசந்தி மாயா மாளவ கௌளையை இனிமையாகப் பாடுகிறாள். அவள் பாடப் பாட அந்த மன்னன், பாடலில் சொக்கி மதுவுண்டவன் போல் மயங்கி விழுகிறான். வாசந்தி திரைக்குள் செல்கிறாள்.



**காட்சி மாறுகிறது.**

கடும் கோடை. கால் கொப்புளிக்கும் வெயில். கற்பாறைகளின் மேல் பல குடில்கள் இருக்கின்றன. அதன் பக்கத்தில் பல பெண்கள் நின்று கொண்டு நெல் குத்துகின்றனர். உடல் வியர்க்க, 'உஸ், உஸ்' என்று அவர்கள் நெல் குத்தும் காட்சி பரிதாபமாக இருக்கின்றது. அங்கு வாசந்தி வருகிறாள், பாடிக்கொண்டு.

அப்பொழுது நெல் குத்தும் ஓசை ''டப்...டுப்...டப்...டுப்'' என்று அவள் பாடும் ராகத்திற்குத் தாளமாக அமைகிறது. இந்தத் தாளமும் பண்ணும் கலந்தவுடனே, உயிரும் உடலும் கலந்ததுபோல இசைக்கு ஒரு புதிய உருவம் உண்டாவதைக் காண்கிறாள். அவளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. நெல் குத்தும் பெண்களைப் பார்த்து, ''என் போல் பாடிக்கொண்டே நெல் குத்துங்கள். உங்கள் உடலில் களைப்புத் தெரியாது'' என்று அவர்களுக்குப் பாடச் சொல்லிக் கொடுக்கிறாள். இசையை அப்படி அப்படியே அவர்களால் சுத்தமாகப் பாட இயலவில்லை.

''அலுங்காமே, தலுங்காமே
　　ஆணிமுத்துப் போலே,
அரிசி தீட்டி முத்தெடுக்க...
　　ஆயாமாரே வாங்க,
இடியாமே பொடியாமே
　　எடுத்த முத்துப் போலே,
இளம்பதமா நெல்லுக்குத்த
　　எல்லோரும் வாங்க.''

என்று ஒரு பாடலைப் பாடுகிறார்கள். இப்பொழுது இசையுடன் தமிழ் கலக்கவே, ஒரு புதிய உணர்ச்சி உண்டாகிறது. அவர்கள் நெல் குத்துகிறார்கள். களைப்புத் தெரியவில்லை.

**அடுத்த காட்சி : மாரிக்காலம்.**

மழை கொட்டுகின்றது. மக்கள் வீட்டிலே சோம்பி உட்கார்ந்து இருக்க முடியவில்லையே என்று வருந்துகிறார்கள். குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் எல்லாம் குவிக்கப்படுகின்றன. எதிரே பெண்மணிகள் பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். நாணல் தட்டையைக் கத்தரித்து நாவில் வைத்து ஊதுகின்றார்கள். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது போல், அந்தக் குழல் வழியே இசை பெருகுகிறது. நரம்பை முறுக்கிக் கட்டி, அதன் மேல் கையால் தட்டுகிறார்கள். ஸ்வரங்கள் உதிர்கின்றன. வீணையும் வேணுவும் தோற்கருவி துளைக்கருவி, நரம்புக் கருவி முதலியவை முழங்க பெண்கள் பாடுகின்றனர். வாசந்தி ஒரு சல்லரி வாத்தியத்தைக் கையில் வைத்துக் கொண்டு, ஒரே சீரான லயத்தை ''டுப்...டுப்'' என்று தட்டுகிறாள்.

நாடெங்கும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. இசை விழா நடக்கின்றது. இன்பம் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

**காட்சி மாறுகிறது.**

குளிர் காலம். மக்கள் 'வெட வெட' என்று நடுங்குகிறார்கள். ஆதவன்கூட, குளிருக்கு அஞ்சி, வெகு நேரம் கழித்து உதித்து வருகின்றான்.

மக்களைத் தட்டி எழுப்புகின்றாள் வாசந்தி. மார்கழி நடக்கின்றது. தை பிறக்கப் போகின்றது. ''நல்ல மணவாளனை அடைய நாட்சா யணியைக் குறித்து நோன்பு இருங்கள். பாவையைப் பாடுங்கள். சக்தியால் ஆடுங்கள். துதி செய்யுங்கள்'' என்று சொல்லுகிறாள். எங்கு பார்த்தாலும், ''சிவா, திருச்சிற்றம்பலம்.... ஓம்... ஓம்.... ஹரி... ஹரி....'' என்று குரல்கள் அதிகாலையில் எழுகின்றன. இப்பொழுது குளிரால் மக்கள் நடுங்கவில்லை. மக்களின் பக்தி ஆவேசத்தைப் பார்த்து குளிர் நடுங்குகிறது. ஆலயத்தில் இசை வழிபாடு நிரம்புகிறது.

**காட்சி மாறுகிறது.**

நாடெங்கும் நல்ல இசை பரப்பப்பட்டுவிட்டது. தொட்டிலில் வளரும் குழந்தைக்குத் தாய் தாலாட்டுப் பாடுகிறாள். பாலுடன் பண்ணும் புகட்டப்படுகின்றது.

வண்டியில் அமர்ந்தவன் பாடிக்கொண்டே ஓட்டுகின்றான். மாடு இசையில் மயங்குகின்றது.

ஏற்றச் சால் பிடிப்பவன் பாடுகின்றான். இசையில் பயிர் விளைகின்றது.

எங்கு பார்த்தாலும் இசை முழக்கம். இவ்வாறு இசை நிரம்பிய உலகம் இசைபட வாழ்கின்றது. இக்காட்சிகளை அத்தனை பெண்களும் ஆணுக்கொரு பாவத்தில் அபிநயம் பிடிக்கவே கூட்டத்தினர் மிக ஆவலுடன் பார்த்தனர்.

மறுபடியும் வசந்த காலம். அதே பூம்பொழில். அதே மேடை.

வாசந்தி இப்பொழுது, பாவ ராக தாளத்தை, ஒன்று கலந்து அருமையான பரதம் ஆடத் தொடங்கினாள். ஆனால் அப்பொழுதும் அந்தப் பழைய மன்னன் பதுங்கிப் பதுங்கி வந்து செடி மறைவில் நின்று கொண்டான். இதைப் பார்த்துக் கூட்டம் சிரித்தது.

இதைக் கவனித்த சண்முகமோ பெண் அழைப்பின்போது அவளை மாடிமேல் நின்று பார்த்ததையும், அழகர் கோவிலில் கூட்டத்தில் நின்று ஆட்டத்தை ரசித்ததையும் நினைத்துக்கொண்டு சிரித்தான்.

அவள் ஆட, ஆட, அந்த மன்னன் பரவசமாகின்றான். உலகம் மயங்குகின்றது. மக்கள் எல்லோரும் மயங்குகின்றார்கள். கூடப் பிறந்த வசந்தன் அவள் கலையில் மயங்கி, வணங்குகின்றான். ஆட்டம் உச்ச நிலையை அடைகின்றது. காலில் சலங்கை கொஞ்ச, கைகளில் வளையல்



குலுங்க, பால் எனச் செந்தமிழ் பாடி, பரதத்தை மங்கை ஆடினாள். இனியும் சும்மா பார்த்துக்கொண்டிருப்பானா மன்னன்? அப்படி இருந்தால் அவன்தான் மன்னன் ஆவானா?

சரேலென்று ஓடிப்போய் வாசந்தியைக் கட்டிக்கொண்டுவிட்டான் காமரூபன். பேரிடி இடிக்கின்றது. மின்னுகின்றது. ஆம். வாசந்தி மறைந்தாள்! அவள் இருந்த இடத்திலே, ஆளைக் காணோம்! சகோதரியை இழந்த வசந்தன் தன்னுடைய கை அம்பால் மன்னனை ஓங்கிக் குத்துகின்றான். பாவம், வாழ வைக்கும் அந்த அம்பால் எவரையேனும் கொல்ல முடியுமா? உயர்ந்த கவிஞனின் எழுதுகோல் யாரையும் தாக்குமா? அந்த வசந்தனின் கட்டி பட்ட மாத்திரத்தில் அந்த மன்னனும் நல்லவனானான். அவனும் சேர்ந்து 'வாசந்தி, வாசந்தி' என அலறு கின்றான்.

கூட்டத்தினர் முழுவதும் பிரமிப்புடன் இருந்தார்கள். சண்முகம் மூச்சைப் பிடித்துக்கொண்டே பார்த்தான்.

அப்பொழுது வானவீதியிலே ஒரு குரல். ''பரதம் உலகமெங்கும் பரவ வேண்டுவது அவசியம். ஆதலால் அவளை உருவற்றவளாக்கி னோம். காற்றோடு கலந்து, தென்றல் எனும் தேரேறி, திசைகளை பரப்பி, அத்தனை திக்குகளிலும் அவள் இனி விஜயம் செய்வாள். பாவ, ராக, தாள, ஆத்மீக ஸ்வரூபமாக பாரெங்கும் நிறைந்திருப்பாள். விண்ணும், மண்ணும், கல்லும் கடலும் உள்ளவரை பரதம் விளங்கும்'' என்று முத்துக்குமார நட்டுவனார் உரத்த குரலில் அசரீரி போல் முழக்கினார்.

✤ ✤ ✤

இந்த ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் எல்லோரும் ஆனந்த பாஷ்பம் பெருக ''வாழ்க மோகனாம்பாள்'', ''வாழ்க முத்துக்குமார நட்டுவனார்'' என்று வாழ்த்தொலிகள் முழக்கினார்கள்.

ஆனால், இதைப் பார்த்த ஒருவரின் மனம் மட்டும் சிறிது கலக்கம் அடைந்தது. 'அந்த மன்னன் தழுவிக்கொண்டதும் மங்கை மறைந்ததைப் போல, நாம் கட்டிக்கொண்டதால் மோகனாவின் கலை மறைந்து விட்டால்?' என்று நினைத்தான் சண்முகசுந்தரம்.

மானும், மயிலும் போல அவள் ஆடிய ஆட்டம் ஒவ்வொன்றும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. கலையுடன் கலந்த அழகு கரும்பு பூத்தது போல் அவன் கண்களுக்குக் காட்சி அளித்தது. ஓடிப்போய் அவளை அணைத்துக்கொண்டுவிடுவோமா என்று அவன் நினைத்த போதுதான், அந்த மன்னன் அணைத்துக்கொண்டான் மங்கை மறைந் தாள். அதை எண்ணி எண்ணிக் கலங்கினான் சண்முகசுந்தரம். 'அடே யப்பா என் வித்தை எங்கே? அவளுடைய வித்தை எங்கே? இசையும் தாளமும்தானே நான் வைத்துக்கொண்டிருக்கிறேன்? அவளோ பரதமும் ஆடுகின்றாள்,'' என்று அவ்வித்வான் தன் மனத்துக்குள் அவளை மெச்சிக் கொண்டான்.

'சே! இது என்ன காதல்? செடியில் இருக்கும்போது மலர் அழகாக இருக்கின்றது. எல்லோர் கண்களுக்கும் இனிமை அளிக்கின்றது. அதன் மணத்தை எல்லோரும் ரசிக்கிறார்கள். பச்சைக் குழந்தைகூடப் பார்த்து ஆனந்தப்படுகின்றது. தெருவில் நடப்பவர் திரும்பிப் பார்த்துவிட்டுச் செல்கின்றார். இந்த மலரை ஒருவன் பறித்து, செண்டு கட்டித் தன் சட்டையில் செருகிக்கொண்டுவிட்டது போல், நாம் செய்து விட்டோமே! நம்முடைய காதல் அவளுடைய நாட்டியத்துக்குச் சத்துருவாகிவிடக்கூடாதே. ஆடல் அரசி மோகனாம்பாள் என்று பெயர் பெற்ற அவள், என் வீட்டு அடுக்களையில் இருக்கவா பிறந்தாள்? அவள் ஆடும் ஆட்டம் என்னால் தடைப்பட்டுவிடுமோ? தவறு தவறு.

'காதலுக்குக் கண் இல்லை என்று சொல்வார்கள். எங்கள் விஷயத்தில் அது உண்மைதான். உலகமே கண்டு ஆனந்தப்படும் அவளுடைய நாட்டியத்தை, நான் உலகத்தினிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டேனே!' என்று நினைத்தான் சண்முகம்.

ஆனால் அடுத்த கணமே, 'அவள் உலகத்திற்கே ஒரு மாணிக்கம். அவளுடைய ஆட்டத்தில் அத்தனை பேர்களும் மயங்குகிறார்கள். ஆனால் அவளோ என்னிடம் மயங்குகிறாள். நான் செய்த பாக்கியமே பாக்கியம்!' என்று எண்ணிப் பூரித்தான்.

உலகத்திலுள்ள அத்தனை செல்வங்களும், அவனுக்குக் கிடைத்திருந் தால்கூட இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டிருக்காது. 'அவள் என் மோகனா!' என்று எண்ணியவுடனே, கண்களால் எறிட்டு அவளைப் பார்த்தான். அந்த அழகில் சொக்கினான். அந்த எண்ணத்தில் உடல் பூரித்தான்.

இந்த நாட்டியத்தின் முடிவைக் கண்டு, அங்கிருந்த இன்னும் பலருடைய உள்ளங்களும் சலசலத்தன. அதில் முதன்மையாகச் சலசலத்தவள் வடிவாம்பாள். 'எதுக்காக, இந்த முத்துக்குமரு இப்படி ஒரு ஆட்டத்தை வச்சிக்கிட்டான்? கொஞ்சம் படிச்சாலே புத்தி குழம்பிப் போயிடும் போலிருக்கு.... ஆமாம், அவன் சொல்றதும் நிசம்தான். காதல்னு வந்தவுடனே, அந்தப் பொண்ணு குணமே மாறிப்போச்சே. பார்வைகூட அல்ல, வெறிச்சாப் போலே இருந்தது. சே, சரிதான். பருவத்திலே அப்படித்தான் எல்லோரும் இருப்பாங்க. ஆனால் நாளைக்கு அது ஆடாமே இருந்திடுத்துன்னா? என் இருக்கப் போவுது? ஆடத்தான் வேணும். இல்லாட்டி படிச்ச வித்தையெல்லாம் பாழாகிப் போயிடுமே! பணமாக வேண்டாமா? ஏதோ இப்போ பத்துக் கச்சேரி ஒத்துக்கிட்டா, இனிமே மாசத்துக்கு இரண்டு, மூணு, நாலு, அஞ்சுன்னு ஒத்துக்கிட்டா போவுது. கொடுக்கிறவங்ககிட்டே பணத்தைக் கொஞ்சம் கூடக்கொடுங்கன்னு கேட்டாக் கொடுக்கிறாங்க. பணம் இல்லாமே முடியுமா? உலகத்திலே பணத்துக்குத்தானே மதிப்பு. அதான் முத்துக்குமரு சொல்லியிருக்கானே ஆட்டத்தை நிறுத்திடாதேன்னு. ஆடத்தான் வேணும். பணத்தையும் தேடத்தான் வேணும்...''



ஆனால் அடுத்த நிமிஷத்திலே அவள் மனது இன்னொன்றையும் விரும்பியது. 'என்ன பணம், பணம்! அதுவும்தான் ஏத்து வருஷமா ஆடுது. ஒரு ஓய்வு ஒழிவு உண்டா? உலகத்திலே பிறந்த எல்லாப் பெண்களும் ஆடிக்கிட்டா இருக்காங்க? காலாகாலத்திலே ஒரு குழந்தையைப் பெத்து, என் கையிலே கொடுக்கணும். நான் தூக்கி வச்சுக் கொஞ்சணும். அப்போதான் என் பிறவி ஈடேறும்,' என்று பேரனுக்கும் ஆசைப் பட்டாள். பேரனை நினைத்தால் பணம் பெரிதல்ல என்று தோன்றுகிறது. பணத்தை நினைத்தால் பேரன் பெரிதல்ல என்று தோன்றுகிறது. இப்படித் தவித்து ஒரு முடிவுக்கு வந்தாள் வடிவாம்பாள். ''நிறைய ஆடி பணத்தைச் சேர்த்துவிட வேண்டியது. அப்புறம் குழந்தை பிறக்கட்டும். ஏழை வீட்டுக் குழந்தைன்னா அதுக்கு என்ன சௌகரியத்தைச் செய்ய முடியும்? அந்தக் குழந்தைக்காகவாவது பணத்தை இப்போ தேடச் சொல்லணும். ஆட்டத்தை நிறுத்தவே கூடாது' என்று முடிவுக்கு வந்தாள்.

ஆட்டத்தைப் பார்த்த இன்னொருவர், 'இது சாதாரண ஆட்டமா! புளியம்பழமாட்டமா பொன் உதிருமே சார்! இந்த ஆட்டத்துக்கு! அடேயப்பா இந்த ஒரு ஆட்டம் போதுமே! இதை வைத்துக்கொண்டு அகில இந்தியாவையும் வென்றுவிடலாமே! இதை அயல்நாடுகளில் ஆடிக் காண்பித்தால், 'கோல்டு' மழை பெய்யுமே! 'பர்த் ஆப்' பரத டான்ஸ்' என்று போட்டு ஒரு வாரம் முன்னாலே விளம்பரம் செய்து டிக்கெட்டு ரேட்டையும் உயர்த்திவிட்டால் தங்கச் சுரங்கமல்லவா!' என்று எண்ணினார். அவர்தான் ஸ்ரீ வைத்திஜி.

''வெரி குட். நல்ல ஆர்ட்டிஸ்டிக் பீஸ். அமெரிக்காவிலே இதை ஆடினால், டாலராலேயே மாலை போடுவான்'' என்று திரும்பிப் பக்கத்தில் இருந்தவரிடம் தன் ரசிகத்தன்மையைத் தெரிவித்தார் வைத்தி. பாவம், பக்கத்தில் இருந்தவரோ பரதேசியார்!

''என்ன அப்பனே, ஏற்கனவே பெண், அதிலும் டாலரை மாலையாகவும் போட்டுக்கொண்டால், பயம் அதிகமல்லவா? நாம் போய் ஆடி அவர்கள் பார்த்து ஆனந்தப்படுவார்களா?'' என்று அவர் கேட்கவே, ''அட சுவாமிகளா! உங்களுக்கு இது புரியாது'' என்றார் வைத்திஜி.

''என்னப்பா புரியாது?''

''நீங்கள் துறவி, நாங்கள் எல்லோரும் சாதாரண மனிதர்கள். பத்துப் பெண்கள் ஆடுகிறபடி ஆடினால், அதிலும் ஆர்ட் இருந்தால் மனது ரொம்ப சந்தோஷப்படும். பணமா பெரிசு?'' என்று வைத்தி அடக்க ஒடுக்கமாக உரைத்தார்.

''முத்துக்குமரு இங்கே வா'' என்று பரதேசியார் அழைத்தார்.

''ஏனப்பா, உனக்கு எத்தனை நாளாக விரோதம்?'' என்றார்.

''எதைப் பத்தி சாமி பேசறீங்க?''

''காதலர்களின் மீது.''

''விரோதம் ஒண்ணுமில்லே, தேசமும் இல்லீங்க. நமக்கு என்ன தெரியும் அதைப்பத்தி? நான் குடும்பஸ்தன்.''

''இல்லேப்பா, மன்னன் கட்டிக்கொண்டான். மங்கை மறைந்தாள் என்று முடித்தாயே?''

''அப்படியில்லீங்க. மன்னன் காமமே உருவானவன். மன்மதன் மறைந்ததுபோலவே வாசந்தியும் மறைந்தாள். மன்மதன் இருப்பது போலே, வாசந்தியும் எங்கும் நிறைந்திருக்கின்றாள். அதுதானுங்க தத்துவம். ஒரு ஆளாலே உலகம் முழுக்கச் சொல்லிக் கொடுக்க முடியுமா? அதற்குத்தான் காற்றோடு கலந்து வைத்தேன்'' என்று அவர் வணக்கத்தோடு சொன்னார்.

''ரொம்ப நன்றாயிருந்தது அப்பா. அதில் உண்மையும் இருக்கிறது. வாழ்க்கையிலே முதலில் வாழ்வு வேண்டும், பிறகு கலை வேண்டும். மிக நன்றாகச் செய்தாய். இதை எங்கேயிருந்து கற்பனை செய்தாய்?''

''என் கற்பனை ஒண்ணுமில்லீங்க. வீட்டிலே ஒரு நாள் ஒரு ஏட்டுக் கட்டை எடுத்து வென்னீர் அடுப்பிலே திணிச்சுக்கிட்டு இருந்தாங்க. அதை அவசரமா பிரிச்சுப் பார்த்தேன். பார்த்தா, அதிலே சிலப்பதிகார ஏடு ஒண்ணு இருந்தது. அரங்கேற்று காதையைப் பிரிச்சுப் படிச்சுக்கிட்டு வரப்போ உரையிலே நாட்டியம், இசை ஆசிரியன் அமைதி, அரங்கம், நூலின் உவமைகள் எல்லாம் எழுதியிருந்தது. அதற்குக் கீழே அடிக்குறிப்பிலே இந்த சுலோகத்தை யாரோ எழுதியிருந்தாங்க. இதை வச்சுக்கிட்டு சும்மா ஒரு கற்பனையா தயார் செய்தேனுங்க...''

''ரொம்ப சந்தோஷம். ஆனால் இதைத் தயார் செய்து பாவம், காதலர்களைக் கலக்கிவிட்டாயே! அதோ சண்முகத்தைப் பார், துடித்துக் கொண்டேயிருக்கிறான்'' என்று கூறவே, சண்முகம் அருகில் ஓடி வந்தான்.

''சாமி, ஜலக்கிரீடை செஞ்ச மன்னனைப் போல எத்தனையோ மன்னர்கள் இருப்பார்கள். அவள் என் துணைவி. நான் அவளுக்குத் துணைவன். எங்கள் காதலால் கலை பாதிக்கப்படாது சாமி'' என்று உறுதி கூறினான்.

''அதுதான் நல்லது. பயிரை வளர்ப்பது விவசாயியின் கடமை. பக்தியை வளர்ப்பது என் போன்ற பரதேசிகளின் குறிக்கோள். இதைப் போலக் கலையை வளர்ப்பது உங்கள் இருவருடைய கடமை. கலை வளரட்டும். கண்ணின் இரு மணிகள் போல நீங்கள் என்றைக்கும் வாழ்வீர்கள்'' என்று சொல்லி ஆசீர்வதித்தார் பரதேசியார்.

அப்பொழுது ஜில் ஜில் ரமாமணி அருகில் வந்து நின்றாள். நாட்டியத்தின் முடிவைக் கண்ட பலர் குழம்பினாலும், அவள் ஒருத்தி மாத்திரம் குழம்பாமல் இருந்தாள். ஜலக்கிரீடை செய்த மன்னன் அவளுக்கு நாகலிங்கத்தைப் போலவே தோன்றினான். தன்னுடைய நாடக வாழ்வுதான் இங்கு நாடகமாக நடந்தது. ஒரு ஆண் மகனின்



குறுக்கீடுதானே தன்னை இக்கோலமாக்கியது என்பதை அவள் மறக்கவில்லை. உடை பழுப்பாக இருந்தாலும், உள்ளத்தில் பழுப்பு ஏறவில்லை. அதில் பழைய சாயம் சிறிது ஒட்டிக்கொண்டிருந்தது.

''சாமி, எனக்கு ஒரு வேண்டுகோளுங்க'' என்றாள் அவள்.

''என்னம்மா.''

''மோகனாகிட்டே நான் கொஞ்சம் பேசணுங்க.''

''அதற்கு என்னிடம் ஏன் கேட்கிறாய்? மோகனாவிடம் நீயே நன்றாகப் பேசலாமே.''

''அப்படியில்லீங்க. நீங்கதான் சொல்லி அதைச் சம்மதிக்கச் சொல்லணும்.''

''என்ன அக்கா, உங்களுக்குப் பரதநாட்டியம் கத்துக் கொடுக்கச் சொல்லப் போறீங்களா?'' என்று கேட்டான் மரகதம்.

இதற்குள் மோகனாவும் அங்கு வந்துவிடவே, ''மரகதம், பரதநாட்டியம் கற்றுக்கொள்வதற்கு, கை கால் சுத்தமாக இருக்கணும். நான் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, கை காலைக் கெடுத்துக் கொண்டவள். பரதத்தைப் பத்து வயதுக்குள்ளேயே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கணும். இனிமே நான் கற்றுக்கொண்டு எங்கே ஆடப் போறேன்?'' என்றாள் ரமாமணி.

''அதற்காக முயற்சியை விட்டுவிடாதீங்க. நாமே ஆடி நாமே ரஸிக்கலாமே?'' என்றாள் மோகனா.

''வேண்டாம் தாயே. கற்றுக்கொண்டால் மாத்திரம் வருவதல்ல வித்தை. அதற்குக் கடவுள் அருளும் வேண்டும். ஆனால் உலகத்திடம் நான் ஒன்றுதான் கற்றுக்கொண்டேன். எதை ஆடினாலும் ஜனங்களுக்கு இருக்கிற கருணையாலே, அதை ஒண்ணுக்குப் பத்தாக்கி மெச்சிக் கிறாங்க. அதனாலே நமக்கு சௌகரியங்கள் எல்லாம் கிடைக்கிறது. கலை கால்வாசி, கருணை முக்கால்வாசி என்பதைப் புரிந்து கொண்டேன். இதுவரை, நான் ஆடின ஆட்டம் சர்க்கஸா, பரத நாட்டியமா, டான்ஸா என்று எனக்கே தெரியாது. ஆனால், எனக்கும் கையிலே போனது எல்லாம் போக நாலு ஏகரா நிலம் மிஞ்சி இருக்குது. இதோ பத்திரத்தைக் கொண்டாந்து இருக்கேன். அதை உனக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடப் போகிறேன்,'' என்று அவள் ஒரு நீலத் துணியில் இருந்து ஒரு பத்திரத்தை எடுத்தாள்.

அடேயப்பா! புடம் போட்ட பொன் போலப் பிரகாசிக்கும் ரமாமணியின் உள்ளம், அங்கிருந்த எல்லோரையும் உருக்கியது.

''அக்கா, இது எதுக்கக்கா எனக்கு?''

''மோகனா, அந்தக் கேள்வியை நீ கேட்காதே. 'எனக்கு எதற்கு இது' என்று நான் கேட்டுக்கொண்டால் போதும். இனிமேல் எனக்கு நிலம், வீடு, ஊர், பெயர், சொத்து, சுகம் எதுவும் தேவையில்லை. கல்யாணத்

தூக்கு உனக்கு யார் யாரோ என்னென்னமோ பரிசு கொடுத்திருக்காங்க. நான் இதைக் கொடுக்கக்கூடாதா?''

''நீங்கள் கொடுக்கலாம் அக்கா. நான் வாங்கிக்கொள்ளக்கூடாது. என் உயிரை நீங்கள்தாம் காப்பாற்றினீர்கள். அது ஒன்றுக்கே நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கேன். நாய் மகளுக்கு மொய் எழுதுவதுண்டா??''

''எனக்கு உன்னைப் போல ஆட முடியாது. ஆனால் உன் ஆட்டத்தை ரசிக்க முடியும். நாட்டியம்னு சொன்னா அதற்கு எவ்வளவு நளினம் வேண்டும். அதை எவ்வளவு பாடுபட்டு கற்றுக்கணும் அப்படின்னு எல்லாம் எனக்குத் தெரிகிறது. நானும் பணம் வாங்கினேன். ஆனால், இந்த நாட்டியம் ஆடியல்ல. இன்னிக்கு நீ நல்லா ஆடறே உன்னால் உண்மையான பரத நாட்டியம் உலகுக்குக் கிடைக்கணும். அதுக்காக நல்ல பரத நாட்டியத்திற்கு என் செல்வத்தைக் காணிக்கையாகச் செலுத்தறேன்.''

''அக்கா, நான் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். தர்மம்தான் செய்ய வேண்டுமென்று தோன்றினால், மீனாட்சி அம்மன் கோவிலிலே ஒரு நெய் விளக்கு ஏற்றிவிடுங்கள். அவள் சன்னதி முன்னே உங்களுடைய உபயம், கொழுந்துவிட்டு நின்று ஆடிக்கொண்டே இருக்கட்டும்'' என்று மோகனா கூறினாள்.

இதைக் கேட்ட பரதேசியார், ''அதுதான் ரமாமணி சரி'' என்று ஆமோதித்தார்.

ரமாமணியும் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டாள். அவளுடைய சிந்தையிலே தனக்கென்று ஒரு செல்வமும் கூடாது, தான் எங்கேயாவது வடக்கே போய்விட வேண்டுமென்று தோன்றி இருந்தது.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராக விடை பெற்றுக்கொண்டார்கள். சிற்றம்பலம் குமாரசாமி, ''நீங்கள் இருவரும் மறுபடியும் கொழும்புக்கு வரவேண்டும். அல்லல்கள் இல்லாமல் என்னுடைய விருந்தாளியாகத் தங்க வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றார். அவரும், சண்முகமும் சற்று நேரம் ஏதோ அந்தரங்கமாகப் பேசினார்கள். அவருக்கு விடை கொடுத்து அனுப்பும்போது, சண்முகம் மோகனா, இருவருடைய கண்களும் கலங்கின.

அந்தச் சமயத்தில், ''பாலிகை கொட்ட அழைக்கிறார்கள்'' என்று பெண்கள் எல்லோரும் அங்கே வந்தார்கள்.

'பயிரை வளர்ப்பதுபோல இருவரும் பண்பை வளர்ப்போம். இல்லறம் செழிக்கும், எங்கள் குலம் தழைக்கும்' என்பதற்கு அறிகுறியாக அவர்கள் இருவர் கையாலும் விதைத்த நவதான்யங்கள். நான்கு நாளைக்குள் ஒரு சாண் உயரம் வளர்ந்திருந்தன. ஒரு நாளைக் கல்யாணம் அல்ல. ஆதலால் பாலிகைச் செல்வம் வறு பயறுபோல் கிடக்கவில்லை. பாலிகை மடல்களைக் கணவன் எடுத்துக் கொடுக்க மனைவி கையில் பெற்றுக்கொண்டாள்.



கமலாலயத்தை நாடி எல்லோரும் புறப்பட்டார்கள். வெள்ளை வலத்துப் பிள்ளையாண்டான், பெரிய மேளம் வாசிக்க ஆரம்பித்து விட்டான். ''ஸ்ரீ ரகுவர கருணாலய'' என்று அவன் வாசித்துக்கொண்டே செல்கையில், சண்முகம் அவனைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். தெருவிலே, மேளதாளம் முழங்கி, மாப்பிள்ளையும், பெண்ணும் வருவதைப் பார்த்து, பெண்கள் எல்லாம் வந்து சேர்ந்தார்கள். கலியாணத்தின் கடைசி அங்கம் பாலிகையைக் கொட்டுவது அல்லவா? ஆவலோடு புதுத்தம்பதிகளை எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கூடவே, மைனர், கடம்பவனம் நடேசன், எல்லோரும் வைத்தியிடம் கிண்டல் செய்துகொண்டே நடந்தார்கள். ''என்ன வைத்தி, கலியாணம் எப்படி?'' என்றார் கடம்பவனம். ''கிராண்ட்'' என்றார் வைத்தி.

''மோகனா, பாலிகையைக் குளத்தில் இட்டாள். திருக்குளத்தில் அதைச் சேர்த்துவிட்டுக் கரையேறியே கணவனும், மனைவியும் வண்டியில் ஏறப் போகும் தருணத்தில் எங்கேயோ பார்த்த வைத்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

காரணம் வேறொன்றுமில்லை. அவர்களுக்கு எதிர்த்தாற்போல், தலையிலே முண்டாசு கட்டி, கறுப்புக் கோட்டு போட்டுக்கொண்டு, காதிலே காப்பிங் பென்சிலைச் செருகிக்கொண்டு கையிலே ரிக்கார்டு கட்டுகளுடன் கோர்ட் சேவகன் ஒருவர் தோன்றினார். அவரைக் கண்டவுடனே வைத்தியின் சப்த நாடியும் வியர்த்தது. 'ஐயோ, இந்தக் கூட்டத்தில் இவன் வந்துவிட்டானே! சம்மனைக் கொடுக்கப் போகின்றானே! முதலில் நம்மை வந்து பார்த்திருக்கக் கூடாதா? இவர்கள் தனியாக இருக்கும்போது கொடுக்கச் சொல்லியிருப்பனே. நாளு நாளாக உறவுபோலப் பழகிவிட்டு, இப்பொழுது கெடுத்துவிட்டான் என்று எல்லோரும் இப்ப அடிக்க வந்தால் என்ன செய்வது?' என்று அஞ்சினார்.

இருந்தாலும், விட்டுக் கொடுக்காமல், அவர் அருகில் நெருங்கி, ''என்னப்பா?'' என்றார்.

அவர் வந்து நின்றதையும், வைத்தி அவர் அருகில் சென்றதையும் பார்த்து சண்முகம் திகைத்தான். பூஜை வேளையில் கரடி புகுந்தது போல, சேவகன் வந்திருக்கிறானே, திருமணம் நடக்கும் வரையில் ஒரு இடையூறும் செய்யாமல் இருந்த வைத்தி இப்பொழுது ஏதோ புதிதாகக் கொண்டு வந்திருக்கிறாரே. மோகனாவின் முன்னே அவன் எதற்காக வரவேண்டும்? நாம் வீட்டில் தனியாக இருக்கும்போது கொண்டு வந்திருக்கக்கூடாதா? என்று முதன் முதலாக, தான் கணவன், அவள் மனைவி. அவள் வருந்தக்கூடிய நிகழ்ச்சி எதுவும் அவள் கண் முன் நடக்க ஏற்படக்கூடாது என்று நினைத்தான்.

மைனர், மரகதம், கடம்பவனம் முதலியவர்கள் எல்லோரும் ஆத்திரத்தோடு ''என்ன என்ன?'' என்று கேட்டுக்கொண்டே வைத்தியின் அருகில் நெருங்கினர்.

கோர்ட் சேவகர் கையிலிருந்த சம்மனை எடுத்தார். ''மோகனா என்பது நீங்கள்தானே?'' என்று மோகனாவிடம் கேட்டார்.

அவள் கண்கள் கலங்கியபடி ''ஆமாம்'' என்றாள்.

''சண்முகசுந்தரம் என்பது தாங்கள்தானே?''

''ஆம், நானேதான்.''

அவர் கையிலிருந்து சில காகிதங்களை எடுத்துக்கொண்டே, ''ரமாமணி அம்மாள் என்பது?'' என்றதும், ''நான்தான் ஐயா'' என்றாள் ரமாமணி.

''உங்கள் மூவருக்கும் சம்மன் வந்திருக்குது. மூன்றாம் தேதியன்று மதுரையிலே நாகலிங்கம் வழக்கு விசாரணை. அதற்கு நீங்கள் சாட்சி'' என்று அவர் கூறியவுடனே, முதல் முறையாக, அம்மாடி என்று கடவுளை வணங்கினார் வைத்தி. எல்லோருடைய மனதிலேயும் ஒரு பெரும் சுமை இறங்கியது போல இருந்தது.

அந்தச் சமயத்தில் வெள்ளைவனத்துப் பிள்ளையாண்டான் நாதஸ்வரத்தை வாசித்து முடித்தான். சண்முகம் ஓடிப் போய் அவனை இறுகக் கட்டிக்கொண்டான்.

''தம்பி, உனக்கு நல்ல துணிச்சல் இருக்குதப்பா!''

''அப்படின்னா வாசிப்பு நல்லா இல்லேங்கறீங்களா?''

''வாசிப்பும் நன்றாகத்தான் இருக்குது. என்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் நீ எப்படி என் கல்யாணத்தில் வாசிக்க வந்தாய்?''

''நான் எப்படிங்க உங்ககிட்டே உத்தரவு கேட்கிறது. வேண்டாமுன்னு சொல்லிட்டிங்கன்னா? அதுக்காகத்தான் துணிஞ்சு நானே ஊதினேனுங்க. மன்னிச்சுடுங்க.''

''நான் உன்னை மன்னிக்க வேண்டாம் தம்பி. இந்த மாதிரிதான் கலைஞர்கள் முண்டியடித்து முன்னுக்கு வரவேண்டும். இந்தா..'' என்று சொல்லி, தான் ஊர்ந்து வரும் ரதத்தை முல்லைக்கொடிக்கு அளித்த பாரியும், தான் மேலே போட்டுக்கொண்டிருந்த போர்வையை மயில்களுக்கு அளித்த பேகனும் காட்டிய வழியில் மகா வித்வான் சண்முகம் அந்த இளங்கலைஞனுக்கு ஒரு பெரிய மரியாதையைச் செய்தான்.

தன் மேலே போர்த்துக்கொண்டிருந்த அழகான பீதாம்பரத்தை எடுத்து அந்தப் பையன் மீது போர்த்தினான். ''நல்லா வாசிக்கணும், துணிச்சலா வாசிக்கணும். சங்கீதம் எல்லோருக்கும் பொது. கெட்டதைத் தள்ளிட்டு, நல்லதை எடுத்துக்கத் தயங்காதே. நல்லா இரு'' என்று ஆசி கூறினான். அந்தப் பையனோ இரு கைகளையும் கூப்பி, அவன் காலடியில் விழுந்து வணங்கினான். சண்முகம் அங்கவஸ்திரம் இல்லாமலே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

வீட்டிலே வடிவாம்பாள் மலையாள ஜோசியரிடம் ஏதோ முகூர்த்தத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள்.



தருமன் அவருடன் ஏதோ தகராறு செய்துகொண்டிருந்தான்.

''நாலு நாள் கழித்து நாள் நன்றாக இருக்குது'' என்றார் அவர்.

''அது எப்படிங்க? சிக்கலுக்குக் கூட்டிக்கிட்டுப் போக வேண்டாமா?'' என்றான் தருமன்.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த மரகதம், ''அக்கா, நாளைக்கே நாள் நல்லா இருக்காம்'' என்றாள்.

மோகனா இதைக் கேட்டு வெட்கத்துடன் தலையைக் குனிந்தாள்.

139563
H84A707

## பதினெட்டாம் அத்தியாயம்

# பணம் படமெடுத்தாடியது



கலியாணமான ஐந்தாவது நாள் கட்டுச் சாதக்கூடை என்று ஒன்று வைப்பார்கள். அதற்கு 'இந்த மாதிரி சாப்பாட்டுச் செலவு எப்பொழுதும் செய்துகொண்டிருக்க எங்களால் இயலாது. தாங்கள் தயவு செய்து ஊருக்குச் சென்று வாருங்கள்' என்றுதான் அர்த்தம்.

வடிவாம்பாள் வீட்டை இன்று பார்க்க வேண்டாமா? வந்த விருந்தினர்கள் எல்லோரும் ஊருக்குப் போய்விட்டார்கள். கூடத்தில் சந்தனம் கொட்டிக் கிடந்தது. வீடு முழுவதும் அட்சதை இறைந்து கிடந்தது; அதைப் பெருக்குவதற்கு அபரஞ்சி சோம்பல் பட்டாள். மாவிலைச் சருகு கிடந்தது. அதை அள்ளிப்போட வேலைக்காரனுக்கு மனமில்லை. கலியாணத்திற்கு பாத்திரங்கள் இரவல் கொடுத்தவர், பந்தல்காரன், விளக்குப் போட்டவன், சமையல்காரன் முதலியவர்கள் எல்லோரும் வந்து சிங்கபுரம் மைனர் குமாஸ்தாக்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். பாக்கு வெற்றிலைக்காக அல்ல, பணத்துக்கு. ஒரு புறத்தில் பால்காரனுக்கும் கணக்குப்பிள்ளைக்கும் சண்டை நடந்து கொண்டு இருந்தது. பதினைந்து படிபாலில்தான் தகராறு, தண்ணீரில் இல்லை. கலியாணம் முடிந்த வீடு என்று சொன்னாலே, களையிழந்து காணப்படும் ஒன்று என்பதுதான் பொருள். அன்றைக்கு வடிவாம்பாள் வீடும் அப்படித்தான் இருந்தது. காரணம் அங்கு மோகனா இல்லை. அவளைச் சிக்கலுக்கு அழைத்துப் போயிருந்தார்கள். வடிவாம்பாளும் கூடத்தான் சென்றிருந்தாள். ஆகவே இரைச்சலும் இல்லை, எழிலும் இல்லை. சோபையிழந்து கிடந்தது வடிவாம்பாள் வீடு.

மாநிலத்தைக் கடல் சூழ்ந்திருக்கிறது. இதைத்தான் கோத்த கடலாம் என்பது. ஒவ்வொரு கடலும் தொடர்புடையதாக இருக்கையில் கங்கையும் காவிரியும் எங்கும் இருக்கிறது. எல்லா ஊர்த் தண்ணீரும் ஒன்று என்பதுதானே கருத்து? ஆயினும் அந்தக் காலத்தில் சீமையில் இருந்து கப்பல் கணக்கில் தண்ணீர் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தது. அவைகளில் பல மதுவாகவும், பல மருந்தாகவும், பழ டின்கள், பால் புட்டிகள் முதலிய உருவமாகவும், ஏன் குடி தண்ணீர் ஆகவும்கூட அங்கிருந்து வந்துகொண்டிருந்தன. ஸ்ரீமான் மதன்பூர் மகாராஜா, இந்த அவமானத்தை நீக்க வேண்டுமென்று எண்ணினார்போலும். அந்த ஊர்த் தண்ணீர் ஏன் இங்கு வருகிறது? நமது ஊர்த் தண்ணீர்தான் அங்கு போகட்டுமே, என்ற எண்ணத்திலே அவர் இங்கிருந்து கப்பலில் செல்லும்பொழுது, கூடவே 20 கங்கைச் செம்புகளை எடுத்துச் சென்றார்.

காலையில் எழுந்தவுடன் அவர் ஸ்நானம் செய்யும்போது, கங்கைத் தீர்த்தம் இல்லாமல் ஸ்நானம் செய்வதேயில்லை. முதல் நாள் செய்த பாவத்தைக் கங்கா மாதா அந்த ஒரு செம்பு தண்ணீரோடு தொலைத்து விடுவாள் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. அவர் சீமையில் போய் இறங்கியவுடன் முதல் காரியமாக, கங்காபிஷேகம் செய்துகொண்டு, அவர் கப்பலில் செய்த பாவத்தைப் போக்கிக்கொண்டு புனிதம் ஆனார். ஆனால் மகாராணி ஸ்ரீமதி ஆஷலதாதேவியோ, அந்தத் தண்ணீர் தனக்கு வேண்டாமென்று கூறிவிட்டார். மகாராஜா எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும், "நான் 'டிஸ்டில்ட்' வாட்டர்தான் சாப்பிடுவேன். சீல் வைத்த செம்புத் தண்ணீர் எனக்கு வேண்டாம். கார்க்குப் போட்ட கண்ணாடித் தண்ணீர் போதும்" என்று கூறிவிட்டார்.

ஏற்கனவேயே மகாராஜாவுக்கு அவளிடம் திருப்தியில்லையென்பது நமக்குத் தெரியும். அதிலும் இன்று சீமைக்குப் போய் இறங்கியவுடனே, அவள் தர்மத்துக்கு விரோதமாக நடந்துகொண்டதில் மகாராஜா மிகவும் கோபம் கொண்டார்.

மாமனார் வீட்டுக்குப் போன மாப்பிள்ளைகளுக்கு சில கஷ்டங்கள் தானாகவே வரும். அந்த மாப்பிள்ளை தன் மனைவியுடன் சந்தோஷமாகப் பேசி விளையாடலாம் என்ற எண்ணத்தில் மாமியார் சீக்காய்க் கிடப்பதாகச் சொல்லி லீவு வாங்கிக்கொண்டு மாமனார் வீட்டுக்கு வருவார். பாவம், அவர்களுக்கோ தங்கள் பெண் வெகுநாள் கழித்து வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்ற ஆசையால் பெண்ணின் தாயும், தகப்பனாரும், உறவினர்களும் அவளை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டு ஏதாவது கேட்டுக்கொண்டே இருப்பார்கள்.

இதைக் கண்ட மாப்பிள்ளை, பெண் மீது எரிந்து எரிந்து விழுவார். அவளோ தாய் வீடு என்ற சலுகையில், "கோவிச்சுக்கத்தான் இங்கே வந்தீங்களோ?" என்று கேட்டும் விடுவாள். ஏண்டா வந்தோம் என்றாகிவிடும் மாப்பிள்ளைக்கு.



மதன்பூர் மகாராஜாவுக்கும் இதே கதிதான் ஆகிவிட்டது. அவருக்குச் சீமைதான் மாமனார் வீடு. அங்கு வந்து ஆஷலதா தேவி இறங்கியவுடன் அவளுக்கு வேண்டியவர்கள் பலர் வர ஆரம்பித்தார்கள்; கை குலுக்கினார்கள். அவளுக்கு கை சிவந்தது. மகாராஜாவுக்கு முகம் சிவந்தது. அவருடைய செல்வாக்கு அங்கே ஒன்றும் நடக்கவில்லை. ஏன், வரவேற்க வந்தவர்கள் பலர் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

அப்படியிருக்கையில், அவருடைய கையிலே ஒரு கவரைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். லேடி கனகாம்பரம் அம்மையார். மகாராஜா அதைப் பிரித்தார். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தக் கடிதம் வேறு யாரோ அயலார் எழுதியதல்ல. அவருடைய சொந்த மனைவியே, "தங்களைக் கண்டு ஐந்து நிமிஷம் பேச வேண்டும்" என்று அதில் எழுதியிருந்தாள். "வெல், வரச்சொல்" என்றார் மகாராஜா. ஹோட்டலில் அவர் இருந்த அறைக்குள் மகாராணி நுழைந்தார். அடேயப்பா, எவ்வளவு மாறுதல்? கப்பலில் இருக்கும் போது, தலை வாரிப் பின்னிக்கொண்டு, நெற்றியிலே குங்கும திலகத்துடன் வேடிக்கையாகக் காட்சி அளித்த அந்த அம்மையார் இப்போது வெட்டிய தலையுடன், சட்டை தரித்து ஆங்கில மாதாகவே காட்சியளித்தார். இதைப் பார்த்த மகாராஜா திடுக்கிட்டார்!

"டார்லிங், என்ன இவ்வளவு சேஞ்ச்?"

"நான் உடுப்பில் மாறுதல் செய்துகொண்டிருக்கிறேன். நீங்கள் உள்ளத்தால் மாறிவிட்டீர்கள்."

"இல்லையே, நான் எப்பொழுதும் போலத்தானே இருக்கிறேன்?"

"இல்லை மிஸ்டர். இனிமேல் நீங்களும் நானும் ஒத்து வாழ முடியாது."

"ஏன்? நம்முடைய காதல் என்னவாவது?"

"நீ என்னைக் காதலிப்பதாக நினைத்து நான் உன்னைக் காதலித்தேன். ஆனால் எப்பொழுது உனது மனம் இன்னொருத்தியை நாடியதோ, அப்போதே என் காதல் அடியோடு போய்விட்டது."

"காதலின் லட்சணம் அதுவல்லவே. 'லவ் நெவர் டைஸ்' காதல் அழிவற்றது."

"அது புஸ்தகத்தில். நான் வாழ்வில் சொல்கிறேன்."

"தன்னுடைய காதலன் தவறு செய்தால்கூட மன்னிப்பதுதானே காதலின் லட்சணம்."

"அது ஆண் பிள்ளைகள் எழுதிய இலக்கணம். பெண்கள் எழுதினால் அப்படி எழுத மாட்டார்கள்."

"வேறு எப்படி எழுதுவீர்கள்?"

"ஆணுக்குக் காதலே கிடையாது. அவன் ஒரு பட்டுப்பூச்சி என்று எழுதியிருப்போம்."

"மேடம் நீங்கள் அதிகமாகப் பேசுகிறீர்கள்" என்றார் மகாராஜா.

"லேடிகளுக்கு அந்த உரிமையுண்டு. முதலில் கப்பலில் வந்த அந்த மோகனாவை நீர் காதலித்தது குற்றம்."

"நான் காதலித்தேன் என்று யார் உனக்குச் சொன்னார்கள்? 'காண்டிராக்ட்' தவறியதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டேன்."

"ஒப்பந்தத்தை மீறினாள் என்பதற்காக, அவளைக் கனவு காணச் சொல்லியிருக்கிறதா?"

"நான் கனவு கண்டேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"மோகனா என்று தேற்றுக்கூடப் பிதற்றினீரே! கணவனுடைய கெட்ட நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவதற்குத்தானே கனவும் புலம்பலும் கடவுள் அமைத்திருக்கிறார்."

இதற்கு மேல் மகாராஜாவாலும் பொறுக்க முடியவில்லை. பதில் சொல்ல வாய் வரவில்லை. இந்தச் சமயம் பார்த்து ஆஷலதாதேவி அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

"கம்மா இருந்தால் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக அர்த்தம்."

அவருக்குக் கோபம் அதிகமாயிற்று. "நீ 'டைவர்ஸ்' செய்து கொண்டாலும் எனக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை" என்றார்.

"உமக்கு நஷ்டம் இல்லையென்பதை நான் அறிவேன். ஆனால் என்னுடைய நஷ்டத்திற்கு ஈடு பெறாமல் உம்மை விடமாட்டேன்" என்று ஆரம்பித்தாள் ஆஷலதாதேவி.

"என்ன நஷ்ட ஈடு? நானாக உன்னைப் போகச் சொல்லவில்லையே? நீயாகத்தானே புறப்படுகிறேன் என்கிறாய்?"

"நீர் போகச் சொல்லவில்லை. ஆனால் போகும்படி செய்கிறீர். அன்பில்லாத கணவனும், மனைவியும் வாழ முடியாது."

"சரி நமக்குக் கலியாணம் ஆகி எத்தனை வருஷமாயிற்று?"

"உமக்கா? எனக்கா?"

"நாம் இருவரும்."

"நாலு வருஷம் ஆயிற்று!"

"இந்த நாலு வருஷத்தில் ஒரு முறையாவது நீர் என்னைப்பற்றிக் கனவு கண்டிருக்கிறீரா?" என்று ஆத்திரத்துடன் கேட்டு பூட்சுக் காலைத் தரையில் உதைத்தாள் ஆஷலதாதேவி. மஹாராஜா திடுக்கிட்டார். உடலில் வீர ரத்தம் ஓடியது. நன்றாகவே யோசித்தார்.

"ஆம், இரண்டு முறை கனவு கண்டிருக்கிறேன்."

"பொய், பொய்! எப்போது?"

"ஒருதடவை ஜுவல்லரியில் வந்தபோது என் பொக்கிஷத்தையே நீ தூக்கிப் போனதாகக் கனவு கண்டேன். அடுத்த தடவை உன் தாயார் இந்தியாவுக்கு வரப்போவதாக நீ சொன்னபோது."



"அன்றைக்கு என்ன கனவு கண்டீர்?"

"என் ராஜாங்கத்தையே தூக்கிப் போவதாக."

'நான்சென்ஸ்' இனி நான் பொறுக்க முடியாது" என்று கொளுத்தினாள் சிகொட்டை மகாராணி. அந்த நெருப்பில் மகாராஜாவின் கோபம் கொழுந்துவிட்டெரிந்தது.

"நான் மகாராஜா. நான் நினைத்தால் அறுபதினாயிரம் பேரைக் கலியாணம் செய்துகொள்ள முடியும்!"

"அது உங்கள் ஊரில்! நீ இப்படி உள்ள மனிதர் என்று தெரிந்திருந்தால் நான்...." என்று கண்ணைக் கசக்கினாள் ஆஷலதாதேவி.

"ஏன் வருந்துகிறாய், நஷ்டஈடுதானே வேண்டும். என்ன கேட்கிறாய்?"

"அப்படி வாங்கவேண்டி வந்தால் என்னுடைய வக்கீல் பேசிக் கொள்வார்" என்று கீச்சுக் குரலில் அழுதாள் ஆஷலதாதேவி.

மகாராஜாவின் மனத்தில் 'இந்த சந்தர்ப்பத்தில் நாம் கொஞ்சம் உஷாராக நடந்தால் இவளே தானாக விலகிவிடுவாள்' என்ற யோசனை ஓட ஆரம்பித்தது. அவளாகவே விலகாவிடில் அதனால் தனக்கு ஏற்படும் கஷ்டங்களும் அவருக்குத் தெரியாமல் இல்லை. நாளைக்கு ரெஸிடெண்டு துரை ஏதாவது கேட்டால் அதற்குப் பதிலும் சொல்ல வேண்டி வரும். எப்படியும் வைத்தி, மோகனாவை அழைத்துக்கொண்டு வந்துவிடுவார். என்றைக்கேனும் ஒருநாள் அவளை தம்முடைய ஆஸ்தான பீடத்தில் அமர்த்திவிடலாம் என்று எண்ணினார். மோகனா வந்த பிறகு, இவள் ஏதாவது தகராறு செய்ய ஆரம்பித்தால் நன்றாய் இருக்காது என்று யோசித்தார் மகாராஜா.

அவருடைய மூளையிலே 'இரண்டு மூன்று லட்சம் ரூபாயை இப்போது கொடுத்தாலும் பாதகமில்லை. இந்தச் சமயத்தில் இவளை விலக்கிவிடுவதுதான் நல்லது' என்ற தீர்மானம் ஏற்பட்டது.

"சரி, உனக்கு எவ்வளவு ரூபாய்தான் வேண்டும்? என்னை நீ கலியாணம் செய்துகொள்வதற்கு முன்னால், ஹோட்டலில் வேலை பார்த்துக்கொண்டிருந்தாய். உனக்கு சம்பளம் வாரத்திற்கு ஆறு பவுன். இப்பொழுது என்னிடமிருந்து கிட்டத்தட்ட நகைகளுக்கு மாத்திரமே பதினைந்து லட்சம் வாங்கியிருக்கிறாய். ஆனால் மகாராஜாக்கள் கொடுத்ததைத் திருப்பி வாங்குவதில்லை."

"ஏன், அதையும் திருப்பிக் கேட்பீரோ?"

"அல்ல. உனக்கு வேண்டும் பணத்தைக் கேள். நான் இப்போதே தருகிறேன்."

"நீர் தர வேண்டுவதில்லை. இதைக் காட்டினால் போதும். கோர்ட்டார் வாங்கித் தருவார்கள்" என்று ஒரு கவரைக் காட்டினாள் ராணி.

"அது என்ன?"

''இதுதான் எக்ஸிபிட் நம்பர் 1. நீ மோகனாவின் அறையில் இருக்கும்போது எடுத்த படம்.''

இதைக் கேட்ட மகாராஜா உண்மையிலேயே நடுங்கினார்; ஆயினும், ''எங்கே காட்டு?'' என்றார்.

''இதோ!'' என்று சொல்லி ஆஷலதாதேவி தன் கையில் இருந்த கவரில் இருந்து ஒரு போட்டோவைப் பாதி இழுத்தாள். அதில் மோகனாவின் படம் அவருக்குத் தெரிந்தது. துடித்தார் மகாராஜா.

''அதை இப்படிக் கொடு'' என்றார் மகாராஜா.

''முடியாது! இதுதான் என் உயிர். இது வேண்டும் என்றால் இருபதாயிரம் விலை.''

''இந்தா இருபதாயிரம்'' என்று மூன்று ஆயிர ரூபாய் நோட்டு கட்டுகளை எடுத்து எறிந்தார் மகாராஜா. கூடவே பத்தாயிரம் கிடைத்ததால் சந்தோஷப்பட்டுக்கொண்டே 'தாங்க்யூ புவர் டார்லிங்' என்று சொல்லி நடந்தாள் மகாராணி.

அதை ஆவலோடு பிரித்து அதற்குள் இருந்த படத்தைப் பார்த்தார் மகாராஜா. ஆனந்தப் பரவசம் அடைந்தார். 'ஆஹா, என்ன அழகு, என்ன அழகு!'' என்று மயங்கினார். மாலைவேளையும் மது மயக்கமும் இன்று காலையிலேயே அவருக்கு உண்டாயிற்று. இல்லாவிட்டால் அவருடைய சந்தோஷத்திலே சண்முகசுந்தரம் ஒரு கையால் அவளை அணைத்துக் கொண்டு இருப்பதையும் அவள் கலியாண உடையுடன் காட்சியளிப்பதையுங்கூடப் பார்க்காமல் இருப்பாரா? ஒரு நிமிஷம் கழித்து அந்தப் போட்டோவுடன் குண்டூசியால் ஒரு கடிதம் குத்தப்பட்டிருப்பதைக் கண்டார். ஆவலுடன் அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

''தடையை மீறியதற்கு நான் வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன். ஆனால் அவர்கள் இருவரும் திருவாரூரில் கலியாணம் செய்துகொண்டு விட்டார்கள். கலியாணத்தைத் தடுக்கத் தடையொன்றும் இல்லை ஆதலால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்னமும் நம்பிக்கை இருக்கிறது, பார்ப்போம்.

- வைத்தி.''

என்று எழுதியிருந்தது. அதன் கீழ் சிவப்பு மையால் 'ரகசியம், பின் குறிப்பு' என்று வைத்தி ஏதோ எழுதியிருக்கவே மகாராஜா கதவைச் சாத்திவிட்டு, அதைப் படித்தார்.

''இந்தக் கலியாணத்தில் வடிவாம்பாளுக்குத் திருப்தியில்லை. ஆனால் சிங்கபுரம் மைனர், காரைக்கால் நடேசன் என்ற இரண்டு நண்பர்களும் சேர்ந்து, இதைச் சிறப்பாக முடித்துவிட்டார்கள். இப்போது சண்முகத்தின் பலம் எல்லாம் அவர்கள்தாம். வேருடன் மரத்தை வீழ்த்துவதானால் முதலில் அதற்குப் பக்கத்திலுள்ள மண்ணை வெட்ட வேண்டும். அதை நான் இத்தனை நாள் செய்து முடித்திருப்பேன். ஆனால்



திடீர் என்று போன மாதம் இங்கு அடித்த புயலில் நமது காவேரி கலாமந்திரம் பில்டிங் விழுந்துவிட்டது. அதற்கு டொனேஷன் வசூலிக்க வேண்டியிருப்பதால் நான் இதைச் செய்து முடிக்க இரண்டு மாதங்கள் ஆகும்.

- வைத்தி''

இந்த வார்த்தைகளைப் படித்தவுடனே, மகாராஜா வருத்தப்படவில்லை. கண்ணீரே விட்டார். 'ஐயோ ஆஷலதாதேவியும் கையை விட்டுப் போய்விட்டாளே. எதிர்பார்த்தது ஒன்று, நடந்தது வேறு. மோகனா கிடைப்பாள் என்ற ஆசையில், ஆஷலதாதேவியை மதிக்காமல் இருந்தோம். இன்று அவளும் கோபத்தில் இருக்கிறாள். இவளும் போய்விட்டாள்' என்று எண்ணியவுடனே, அவருக்கு மோகனா மீது கோபம் வந்தது. அந்தக் கலியாணப் புகைப்படத்தை மறுபடியும் பார்த்தார். அதைப் பார்த்த பார்வையில் அவருடைய கோபம் எல்லாம் இப்போது சண்முகத்தின் மேல் திரும்பியது. 'ஆப்டர் ஆல்' மோகனா ஒரு பெண். அவள் நம்மை விரும்பாததற்குக் காரணம்? நான் விகாரம் என்பதல்ல. இந்தச் சண்முகம்தான் அவளை என்னோடு கப்பலில் வரவிடாமல் இலங்கையில் இறங்கும்படி செய்தவன். ஒரு சாதாரண மனிதனுக்கு இவ்வளவு இருந்தால், ஒரு மகாராஜாவுக்கு எவ்வளவு இருக்கும் என்று மீசையில் கைபோட்டார். அது கம்பளிப் பூச்சியைப் போல் கையைக் குத்தியது.

தனக்கு ஒரு பொருள் கிடைக்கவில்லையென்றவுடனே அதை யாரும் விட்டுவிடுவதில்லை. கிட்டாத பொருளுக்கு ஆசைப்படுவதுதான் ஆசை என்ற பெயர். மோகனா கிடைக்க மாட்டாள், கலியாணமாகி விட்டது என்று மகாராஜாவுக்குத் தெரிந்தவுடனே, சண்முகத்தைத் தண்டித்து வஞ்சம் தீர்த்துக்கொண்டு மோகனாவை அடைய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அது அரச தருமமும்கூட. எதிரிகளின் அந்தப்புரத்துப் பெண்களை சிறைப்பிடித்து வருவது தர்ம நியாயம் என்பதை அவர் உணர்ந்தவர். ஆங்கில ஆட்சி வந்த பிறகுதான் படையெடுப்பே போய் விட்டதே, என்ன செய்வார். களத்தில் படையெடுக்க முடியவில்லை; காதலில் படையெடுப்போம் என்று விரவைராக்கியம் பூண்டார்.

நாகலிங்கம் சண்முகத்தின் மேல் சட்டியை எய்தான். மதன்பூர் மகாராஜா படித்தவர். நாலும் தெரிந்தவர். அவனைப் போல் முரட்டுத் தனமாக சட்டியை எய்வாரா, பானையை எய்வாரா? பணத்தையே எய்தார். பழி வாங்கத் துடித்தார்.

அடுத்த நிமிஷமே அவரிடமிருந்து ஒரு தந்தி வைத்திக்குப் பறந்தது. அந்தத் தந்தியின் பொருள்: ''அவர்களை வாழ விடாதே. எனக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு அவர்கள் மேல் வழக்குத் தொடர். என் காலில் விழுந்து சரணாகதி அடையச் சொல். பிரிட்டிஷ் நியாயம் உள்ள வரையில் அந்தச் சண்முகம் அவதிப்பட வேண்டும். நான் க்ஷத்திரியன். வெற்றி என்னுடைய பிறப்புரிமை. காவேரி கலாமந்திரம் கட்ட நிதிக்காக

இத்துடன் ரூபாய் பதினாயிரத்து ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது'' என்ற கருத்து தந்தியில் தொனித்தது. அப்போது அவருடைய மோகன், அருகில் வந்து நின்றது. பாவம், மகாராஜாவின் முன்னே அந்த நாய் சாந்த சொரூபமாகக் காட்சியளித்தது. மகாராஜாவோ ''ரிவஞ்ஜ்!'' என்று உறுமிக்கொண்டிருந்தார்.

## பத்தொன்பதாம் அத்தியாயம்

# ''வலது பாதம் எடுத்து வை அம்மா''



''என்னாங்க, தவுல்காரரே, உங்க வேட்டிக்கரையைக் காட்டுங்க!'' என்றான் தருமன். முத்துராக்கு தன்னுடைய புதுசரிகை வேஷ்டியின் கரையை அவனிடம் காட்டினார்.

''என்னாங்க, ஒரே மாதிரி வேட்டியிலே இவ்வளவு வித்தியாசம் இருக்குதே?' என் அண்ணே என் வேட்டி சரிகை உங்க வேட்டி யாட்டம் பளபளன்னு இல்லியோ?'

''சரிகை நல்லாத்தான் இருக்குது. உங்களுக்குக் கண்ணிலே கோளாறு. வயசு நாற்பதுக்கு மேலே ஆயிடுத்தில்லே! 'சாலீஸ்வாம்' வந்திருக்கும்.''

''அது என்னாங்க சாலீஸ்வரம்?''

''சாலீஸ் .... வரும்னா வெள்ளெழுத்து. அது நாற்பது வயசுலே வரும். அதுக்குத்தான் சாலீஸ்வரும்னு சொல்லிருக்காங்க. அது மெல்ல மெல்லத் தருமண்ணே ஒத்துலே சுதி மாறுறாப்பிலே மாறி சாளேஸ் வாம்னு ஆயிடுச்சு.''

''அது எழுத்து படிப்பு சம்பந்தப்பட்டாத்தானே வரும். எனக்கேன் வருது?'' என்றான் தருமன்.

''ஒரு கண்ணாடிதான் போட்டுக்குங்களேன்'' என்றார் முத்துராக்கு.

''அது வேண்டாமுங்க. அப்புறம் படிக்க வேறே சொல்லுவீங்க. எனக்கு இப்போ மனதுக்கு ஒரு திருப்தி....''

''அது என்ன தரும அண்ணே?''

''படிக்கத் தெரிஞ்சாத்தானே தகராறு. சின்ன வயசிலே விழுந்து விழுந்து படிச்சுப்பிட்டு, வயசான பிறகு கண்ணாடியைத் தேடிக்கிட்டுத் திரியாமே நமக்கு எப்போதும் ஒரே சீரு'' என்றான் தருமன். முத்துராக்கு சிரித்தார்.



''ஆமாம், தவுல்காரரே, நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லலியே?''

''என்னண்ணே உங்களுக்குச் சந்தேகம்?''

''இல்லே, உங்க வேட்டி மாத்திரம் கரை நல்லா இருக்குதே. கலியாணத்திலே எனக்குக் கொடுத்த வேட்டிக் கரை அவ்வளவு நல்லாயில்லியே. ஏன்?''

''தவுல்காரருக்கும் ஒத்துக்காரருக்கும் ஒரே மாதிரியாவா கொடுப்பாங்க? தவுல் தவுல்தான், ஒத்து ஒத்துதான்.''

''நீங்க கிழிச்சுடுவீங்களே. காது அவ்வு படுற பாட்டிலே கன்னட வேட்டி எம்மாத்திரம்?'' என்று பதிலுக்கு ஒரு போடு போட்டான் தருமன்.

''தம்பி ஒரு கண்ணிலே வெண்ணெய், ஒரு கண்ணிலே சுண்ணாம்பு வைக்காது. இந்தச் சிங்கபுரத்தார் செஞ்ச வேலைதான் இது. உங்களையும் என்னையும் தனியாகப் பிரிச்சுப்பிட்டாருங்க.''

''அவரு பிரிக்கல்லே அண்ணே, உங்களுக்கு எப்பவுமே பிறத்தியார் பொருள் தான் நல்லாயிருக்கும்.''

''பாத்தீங்களா, நான் ஓசி வாங்கிறவன்னுதானே சொல்றீங்க?'' என்று சிணுங்கினான் தருமன்.

''ஆமாம், தருமண்ணே கலியாணத்துக்கு என்ன செலவு ஆகியிருக்கும்'' என்று பேச்சைத் திருப்பினார் முத்துராக்கு.

''சிங்கபுரத்தாருக்குக் கிட்டத்தட்ட பதினாயிரம் ரூபாய் செலவாகியிருக்கும். நம்ம தம்பிக்கு ஐம்பதினாயிரம் ஆகியிருக்கும்'' என்றான் தருமன் கம்பீரமாக.

''அட போங்கண்ணே, காது குத்தறீங்க.''

''காது நான் ஏன் குத்தறேன். மேளம் வேணும்னா வாசிக்கிறேன்.''

''அடேயப்பா அதுவே போதுமே, காதுக்கு....'' என்று முத்துராக்கு சொல்லவுமே தருமன் புரிந்துகொண்டு வாய்விட்டுச் சிரித்தான்.

''ஆமாம் சிங்கபுரத்தாரு நாயனக்காரருக்குக் காலணா செலவு இல்லாமலே நடத்தி வைக்கிறதா சொன்னாங்களே!''

''அது எப்படி தவுல்காரரே, பெண்ணுக்குப் போட்ட நகையெல்லாம் என்ன ஆகிறது! கலியாணத்திலே கொடுத்த சன்மானமெல்லாம் என்ன ஆகிறது? சாப்பாட்டுச் செலவை மட்டும்தான் சிங்கபுரத்தார் பார்த்துக் கொண்டாங்க.''

''போங்க தருமண்ணே, நகையெல்லாம் காரைக்கால் நடேசண்ணன் கொடுத்துச்சு.''

''தம்பிதான் எல்லாத்துக்கும் பணம் தரேன்னு சொல்லியிருக்கே, தவுல்காரரே. இத்தனை நாள் பழகியும், தம்பி குணம் உங்களுக்குத் தெரியலியே?''

"இத்தனையெல்லாம் நமக்குத் தெரியும். குணம் எப்படித் தெரியும்?"

"அது வாசிச்சுச் சன்மானம் வாங்கும். ஆனால் உட்கார்ந்து இருந்துகிட்டு ஓசி வாங்க மாட்டாது. இந்த சிங்கபுரத்தாரு செலவழிச்ச பதினாயிரம் ரூபாயைக்கூடத் தம்பி ஒரு நாளைக்கு திருப்பிக் கொடுத்துடும்" என்ற தருமன் ஆவேசத்துடன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, சண்முகம் அங்கு வந்து சேர்ந்தான்.

"என்ன தருமண்ணே, கலியாண வரவு செலவு எல்லாம் கணக்குப் பார்க்கிறியா?"

"இல்லே தம்பி, கலியாணம் ரொம்ப அற்புதமாக நடந்தது. இந்த மாதிரி கல்யாணம் நடந்ததேயில்லேன்னு தவுல்காரரும் நானும் பேசிக்கிட்டிருந்தோம்."

"தருமண்ணன் முகத்தைப் பார்த்தா அப்படித் தோணலியே?"

"அதுவா? அண்ணனுக்கு ஒரு சின்ன சந்தேகம்" என்றார் முத்துராக்கு.

"ஸ்... சும்மா இருங்க தவுல்காரரே. நீங்க வேறே, ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லிகிட்டு."

"என்ன தருமண்ணே?"

"ஒண்ணுமில்லே தம்பி. என் வேட்டியிலே 2710 போட்டிருந்துச்சு. முத்துராக்கு வேட்டியிலே முப்பது, பூஜ்யம் பூஜ்யம்னு போட்டிருக்கு. வேட்டிக்கு வேட்டி மூணு ரூபாய் வித்தியாசம் இருக்குதே, தம்பி வித்தியாசம் பார்க்க மாட்டாதேன்னு ஒரு சந்தேகம்...."

சண்முகம் கடகடவென்று சிரித்தான்.

"தருமண்ணே இரண்டு பேர் வேட்டியும் ஒரே விலைதான். வேட்டியிலே நம்பர் போட்டு இருக்காங்க. அதை நீங்க விலைன்னு நினைச்சுக்கிட்டீங்க" என்று சண்முகம் சொன்னவுடனே, தருமன், "ஆமா தம்பி, இப்பத்தான், இரண்டு கரையும் ஒண்ணாத் தெரியுது" என்று சந்தோஷத்துடன் கூறிக்கொண்டான்.

"அதனால் பாதகமில்லை அண்ணே. இன்னிக்கு உங்க இரண்டு பேருக்கும் ஒரேமாதிரி அங்கவஸ்திரம் கொடுத்துவிடறேன்" என்று சண்முகம் சொல்லவே அவர்கள் இருவரும், "அதெல்லாம் வேண்டாம் தம்பி" என்று மரியாதைக்காகச் சொன்னார்கள்.

"என்ன தருமண்ணே உனக்குக்கூட வேண்டாமா?"

"தவுல்காரருக்கு வேண்டாம் தம்பி. அவர் திறந்த உடம்போடு வாசிக்கிறவரு. எனக்கு எத்தனை மேல்வேட்டி கொடுத்தாலும் இப்போ வாங்கிக்குவேன்."

"ஆமா, இவரு அரிச்சந்திர மகாராசா."

"என்ன தவுல்காரரே, கிண்டல் பண்றீங்க. நான் எப்பவாச்சும் பொய் சொல்லியிருக்கிறேனா?"



"இல்லே தருமண்ணே, இத்தனை நாள் உங்களோடே பழகிட்டு நான் அந்த விஷயத்தில் சந்தேகப்படுவேனா?"

"சந்தேகமில்லாமல் பொய்தான் பேசவேண்டிறீங்க?"

"இல்லையண்ணே, அரிச்சந்திர நாடகத்திலேதான் மயான காண்டம் முடிந்ததும், பட்டாபிஷேகம் ஆகுறப்போ எல்லோரும் அரிச்சந்திர மகாராசாவுக்கு மேல்வேட்டி கொடுப்பாங்க. அந்தமாதிரி நீங்களும் மேல் வேட்டிக்கு ஆசைப்படறீங்களோன்னு சொன்னேன்."

"சும்மா இருங்க முத்துராக்கு. நான் எதுக்காகவா கேட்கிறேன். நாளைக்குத் தம்பிக்குப் பிள்ளை பிறந்தா நான்தானே தூக்கி வச்சுப்பேன். உங்ககிட்டே அவன் வரவே பயப்படுவான். அந்தப் பயல் எத்தனை மேல் வேட்டியைக் கெடுக்கப்போறானோ?" என்று தருமன் சொல்லவே சண்முகம் சிரித்துக்கொண்டே உள்ளே சென்றான்.

அன்றைய தினம் சிக்கலிலே சண்முகத்தின் புதுவாழ்வு தொடங்குவதாக இருந்தது. வடிவாம்பாள் திருவாரூரில்தான் நடத்தவேண்டும் என்று எவ்வளவோ தடுத்தும், தருமன் முதலியவர்கள் சோபன முகூர்த்தம் சிக்கலில்தான் நடக்கவேண்டுமென்று சொல்லிவிட்டார்கள்.

சாதி மல்லிகைக்குப் பெயர் பெற்றது நாகைப்பட்டினம். ஆனால் அந்த ஊரிலே நாற்றப்பாக்கும் உண்டு, மணம் மிகுந்த குங்கிலியமும் அங்கு வாங்கலாம். பீப்பாயைத் திறந்தால் ஒரு மைல் நாறும் மர எண்ணெயும் அங்கு உண்டு. கடல் நாகைக்காரோணம் என்று பெயர் பெற்ற சைவத் திருத்தலம் அது.

ஆனால் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்று கலந்து பாராட்டி வணங்கும் ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் சந்நிதியும் அங்கு உண்டு. பழந்தமிழ்நாட்டிலே நாகை ஒரு பிரதானப் பட்டினம். நாகைப்பட்டினத்தின் துறைமுகம், தமிழ்நாட்டுக்கே பெரிய துறைமுகம். அங்கிருந்து வந்த அழகான, மஞ்சள் கடம்புப் பலகையால் ஆகிய மஞ்சம் ஒன்று, சண்முகத்தின் அறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நாலு பக்கங்களிலும், திருவாங்கூர் தோதகத்தியை இழைத்து, பளபளவென்று கரும் பளிங்கு போல மெருகிட்டு, அதற்குச் சட்டங்கள் சேர்த்திருந்தார்கள். அந்தக் கட்டில் கால்களோ, கடைசல் இட்ட கொழும்புப் புரசு மரத்தால் ஆகியவை. கட்டிலுக்கு மேலே பெல்ஜியம் கண்ணாடி ஒன்று பதிக்கப்பட்டிருந்தது. ஆறு அடிக்கு நாலு அடி அகல நீளம் உள்ள அந்த நிலைக்கண்ணாடியில், பக்கத்தில் தொங்கிய பட்டுக் குஞ்சங்களும், ரசக்குண்டுகளும் கண்ணாடிக்கே கரைக்கட்டு அமைத்தது போல இருந்தன.

அந்தக் கட்டிலின் மீது இலவம் பஞ்சால் ஆகிய மெத்தை ஒன்றை வரதன் விரித்துக்கொண்டிருந்தான். சண்முகத்தின் பொன்மேனிக்கு வெல்வெட்டுத் தலையணைதான் விருப்பம் என்பதை அறிந்த காரைக்கால் நடேசன், நல்ல பிரெஞ்சு வெல்வெட்டில் திண்டுகளும்,

தலையணைகளும் தைத்து அனுப்பியிருந்தார். கட்டிலை அலங்கரித்து விட்டு, சாதி மலர்களைத் தொடுத்து கொசுவலைமேல் தொங்கவிட்டான் வரதன். அது கடலில் அலை அடிப்பதுபோல் அழகாக இருந்தது.

திருமணத் தம்பதிகள் ஒருமனப்பட்டு இன்பம் துய்க்கப் போகும் அந்நாளில் அவர்கள் உள்ளத்தில், வேறு எந்தவிதமான எண்ணங்களும் வரக்கூடாது. அவர்கள் கண்களில் கெட்ட காட்சிகள் படக்கூடாது. மூக்கில் நறுமணம் தவிர வேறு எதுவும் புகக்கூடாது என்று கருதி, கட்டிலைச் சுற்றித் தஞ்சாவூர் ஜவ்வாது வத்திகள், ஜம்மென்று நறுமணம் பரப்பிக்கொண்டிருந்தன. அந்த அறை முழுவதும், அகில் புகை சூழ்ந்திருந்தது. மாடத்தில் இரண்டு சிறு குத்து விளக்குகள் இருந்தன. அந்தக் குத்து விளக்குகளின் நடுவிலே வள்ளி தேவயானை சமேதராக சிங்காரவேலன் திருவுருவம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

சந்தனப் பேலா, பன்னீர்ச் செம்பு, இரண்டும் ஒரு மேசைமீது வைக்கப்பட்டிருந்தன. நல்ல நெய்யில் செய்த இனிப்புப் பலகாரங்களும் பால் திரட்டுப்பால் முதலியவைகளும் தட்டுகளில் வைக்கப்பட்டிருந்தன. கும்பகோணம் துளிர் வெற்றிலையும், கொட்டைப்பாக்குச் சீவல், வாசனைப்பாக்கு, ஏலம், கிராம்பு முதலியவைகள் எல்லாம் ஒரு பழுக்கா மரவையில் இருந்தன. உண்மையில், அன்று, அந்தப் பள்ளியறை ஒரு சங்கீத சக்கரவர்த்தியின் அறை போலவே அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கூடத்திலே, ஊஞ்சல்மீது தன் மகளை அமர்த்தி, வடிவாம்பாள் அவளுக்கு அலங்காரங்கள் செய்துகொண்டிருந்தாள். மோகனாவின் பாதங்களில் வந்து அலைபுரளும் கூந்தலை, வடிவாம்பாள் கையாலேயே சிங்காரித்தாள். அடுக்கு மல்லிகை அரும்புகளை வரிசை வரிசையாக வைத்து, நூல் கொண்டு பூ தைத்தாள். தலை நிறையத் தஞ்சாவூர் கதம்பம் செருகினாள். மகளுக்கு திருஷ்டிப் பொட்டிட்டு, தன் மகளின் அழகைப் பார்த்தாள் தாய். நெற்றியைத் தடவி நெட்டியொடித்தாள். அவளுடைய மேனி நிறத்திற்கேற்றாற்போல, அரக்கு நிறத்திலே ரவிக்கையும், அதைப் போலவே பவளம் போன்ற சிவப்பில் ஒரு புடைவையும் கட்டியிருந்தாள். அந்தப் புடைவையை சாரநாதப் பெருமானின் சந்நிதியிலே வைத்து ஆசீர்வாதம் பெற்று, வாங்கிக்கொண்டு வந்திருந்தாள்.

திருச்சேறைத் தறியில் தனியாக நெசவு செய்யப்பட்டு, அந்தச் சேலையின் தலைப்பிலே சண்முகம் நாதஸ்வரம் வாசிப்பது போலவும், மோகனா ஆடுவது போலவும் ஜரிகை, கோத்து வாங்கப்பட்டிருந்தது. இதற்கு 'தில்லானா மோகனாம்பாள் பார்டர்' என்று பெயரும் இட்டிருந்தார்கள். அதைக் கட்டிக்கொண்டு மோகனா நின்றவுடனே, அந்த எழிலரசி, இன்று தேவநங்கை போலவே தோன்றினாள். மோகனாவின் கால்களில் அழகான செம்பஞ்சுக் குழம்பைத் தடவினாள் மரகதம். அவளுடைய விரலில் பூட்டியிருந்த வெள்ளிக் காலாழிகள்



செம்பஞ்சுக் குழம்பைத் தீட்டியவுடன், ஆஹா! கால் அழகு ஒன்றே போதுமே என்று மெச்சும் வண்ணம் அமைந்தன. அவள் காலில் இருந்த பட்டைக் கொலுசுகள் சலங்கையும் மணியும் கலுக்கென்று சிரிப்பதுபோலப் புன்னகை புரிந்தன.

அவளுடைய இடையிலே அழகான வைர ஒட்டியாணம் ஒன்றை அணிந்திருந்தாள். அந்த ஒட்டியாணத்தின் முகப்பிலே கண்ணன் குழல் ஊதுவதுபோல ஒரே சிவப்பு மாணிக்கத்தால் ஆகிய திருவுருவம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. கலியாணமானதிலிருந்து ஒரு வாரத்திற்குள் அவளுடைய மேனியில் எங்கிருந்துதான் இத்தனை அழகு ஏற்பட்டதோ! ஏங்கிக்கிடந்த நற்காரியம் நடந்தவுடனே, கலியாணமான சந்தோஷத்தில் அவளுடைய உடல் பருத்து, அங்கங்கள் எல்லாம் அழகு பெற்று, இளமை பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது. ஒன்றரைக் காரட்டில் வைரத்தாலான மூக்குத்தி ஒன்று சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எட்டுக்கல் வைர பேசரியும், அதற்குக் கீழே தொங்கிய சிவப்பு மணிகளும், அவள் அதரங்களின் அழகை அதிகரிக்கச் செய்தன. ஆனால் அதையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டுவிட்டது அவளுடைய திருமுக சௌந்தரியம். பவளம் போன்ற அதரங்களில் அவளை அறியாமல் செய்த குறுநகையிலே இத்தனை நகைகளும் தோற்றன.

முகூர்த்த வேளை நெருங்கியது. மரகதம் முதலிய பெண்கள் எல்லோரும் மோகனாவைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். அவளைப் பிடித்துப் பள்ளி அறைக்குள்ளே தள்ளுவதற்கு நீ முந்தி, நான் முந்தி என்று ஒவ்வொரு பெண்ணும் போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். சந்யாசி, வருபவர்களுக்கெல்லாம் சந்யாசம் கொடுக்க முனைகிறார். சம்சாரி ஒவ்வொருவரையும் சம்சாரியாக்க முயலுகிறார் என்பது அன்று புரிந்தது. எத்தனையோ துன்பங்களை மறக்கடிக்கச் செய்வது தம்பதிகளின் மனமொத்த வாழ்க்கைதான். இதை அடையப்போகும் மோகனாவுக்கு ஒவ்வொரு தோழிப் பெண்ணும் செய்யும் கேலிகள் உள்ளத்தில் ஆனந்தத்தை அளித்தாலும் முகத்தில் வெட்கத்தை அதிகரிக்கச் செய்தன. மோகனா தலை குனிந்துகொண்டே நின்றாள். அவளுடைய கையிலே அழகிய வெள்ளிக் கூஜா ஒன்று இருந்தது.

அந்தக் கூஜாவைத்தான் அன்றைக்கு சண்முகம், மறந்தாற்போல எடுத்துக்கொண்டு போனான். அந்தக் கூஜாவில் அவன் கொண்டு வந்த பழமும், முந்திரிப் பருப்பும், மிட்டாய்களும்தாம் அன்று வடிவாம்பாள் கையால் தொட்டி முற்றத்தில் கொட்டப்பட்டன. இன்று, அந்தக் கூஜா தன்னுடைய ஆனந்தத்தை வாய்விட்டுச் சொல்ல முடியாமல் தவித்தது. அதே வடிவாம்பாள் கையால் குங்குமப் பூவைப் போட்டுக் காய்ச்சிய நல்ல பசுப்பால், ஒரே மாட்டுப்பால் அந்த கூஜா முழுவதும் நிரம்பியிருந்தது. மோகனாவின் கையிலே அந்தக் கூஜாவை மரகதம் கொடுத்த போது, கலுக்கென்று அந்தக் கூஜா ஆனந்தம் தாங்காமல்

சிரித்து! மோகனா அதை இறுகப் பிடித்துக்கொண்டாள். இன்னொரு கையிலே ஒரு சிறிய வெள்ளித் தாம்பாளத்தில் பச்சைக் கிளிகள் போலவும், அழகிய மடல்கள் போலவும் மடிக்கப்பட்ட வெற்றிலை விடையங்கள் இருந்தன.

"வலது பாதத்தை எடுத்து வை!" என்றாள் வடிவாம்பாள். மோகனா, அன்ன நடை நடந்தாள். மின்னலைப் போலத் தோன்றினாள். அப்பொழுது மரகதம் ஓடி வந்தாள்.

"அக்கா, பிறந்த வீட்டுக்கு ஒரு பெண்ணைப் பெத்துக் கொடு" என்றாள். மோகனா அவளைப் பார்த்துச் சிரித்தாள். ஆனால் அந்தச் சிரிப்பிலே, 'பெண் என்று சொல்லாதே! நான் ஒருத்தி பெண்ணாகப் பிறந்து பட்ட பாடு போதும்' என்று சொல்வது போல ஒரு தோற்றம் இருந்தது.

மேள தாளங்கள் முழங்கின. நல்ல முகூர்த்த வேளையில் மோகனா பள்ளி அறைக்குள் நுழைந்தாள். உள்ளே நுழைந்தவுடன் அவள் பிரமித்தாள். அவளுடைய உள்ளங்கால் முதல் உச்சந் தலைவரையில் இளம் வியர்வை அரும்பியது. தலையைத் தூக்கி அந்தக் கட்டிலைப் பார்ப்பதற்கே அவள் நாணினாள். அவளை யாரோ பிடித்துக் கீழே தள்ளுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. தள்ளியது வேறு யாருமல்ல. அது வெட்கம்தான். கதவின் அருகிலேயே நின்றுகொண்டிருந்தாள். எவ்வளவு நேரம்தான் அப்படி நின்றாளோ? கடைசியில் லேசாகத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். கட்டிலின் அழகுக்கு ஏற்றாற்போல் தன் அருமைக் கணவன் அந்த மஞ்சத்தின் மேல் அமர்ந்து இருப்பது, அவளுடைய கடைக்கண்களில் தெரிந்தது. எங்கிருந்துதான் இவ்வளவு வெட்கம் இருவருக்கும் வந்ததோ? ஒருவரையொருவர் அடைய நினைத்து, எவ்வளவோ காலம் தவம் செய்திருக்கிறார்கள். எத்தனையோ கொடிய இன்னல்களை அனுபவித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் இருவரும் சந்திக்கும் இந்நாளில், எங்கிருந்து வந்தது இவ்வளவு வெட்கம்?

கதவின் ஓரத்தில் மோகனா நிற்பதைக் கவனித்தான் சண்முகம். அவன் அழகில் சொக்கினான்

* * *



## காய்ச்சும் நறும் பாலில் கற்கண்டுப் பொடி தூவி



ஒருவருக்கு குளிக்கும் வெந்நீர் சூடாக இல்லை என்று அளவுக்கு மீறி ஒருநாள் கோபம் வந்துவிட்டது. ஆத்திரத்தில் கண் தெரியவில்லை. எதிராக இருக்கும் அருக்கஞ் சட்டிக்குள்கூட அவரால் கைவிட முடியவில்லை. ஆம், கோபமாகட்டும், குதூகலமாகட்டும் எந்த உணர்ச்சி அதிகப்பட்டாலும் செயல் தடைப்பட்டுவிடுவது இயற்கை. இதைப்போலவே காதல் உணர்ச்சி அளவுக்கு மீறியதால், தன் எதிரில் மோகனா வந்து நின்றதும் சண்முகம் திகைத்து நின்றான்.

"அத்தான்!" என்று அவள் வாய் திறந்து முத்துப் போல ஒரு மொழி கூறமாட்டாளா என்று ஏங்கினான். இந்த அழகுத் தெய்வத்தைத் தன் கைகள் அணைத்துக்கொள்ளும் தகுதி பெற்றனவா என்ற சந்தேகத்தில் அவளையே பார்த்தான்.

அவளாவது இதைப் புரிந்துகொண்டாளா? ஓடி வந்து என் அருகில் அமர்ந்தால் என்ன?

'எவ்வளவு நேரம்தான் நிற்பது? நான் வந்து நிற்பது அவருக்குத் தெரியவில்லையா? கலியாண அலுப்பில் தூங்கிவிட்டாரா? அதுவா தூங்கும்? அன்று ரயிலிலேயே ஒரு நிமிஷம்கூட தூங்கவில்லையே! அருகில் வந்து கண்ணே என்று ஒரு வார்த்தை சொன்னால் என்ன? திமிர், அவ்வளவும் திமிர். 'இவள், பெண் பிள்ளைதானே? எனக்கு அடங்கி நடக்க வேண்டியவள்தானே, நான் ஆண் சிங்கம் அல்லவா? அவளாகத்தானே என்னைக் காதலித்தாள்? அவள்தானே விரட்டி விரட்டி, என்னைக் கல்யாணம் செய்துகொண்டாள்? அவளே வந்து முதலில் பேசட்டும்' என்று நினைத்துக்கொண்டிருக்கிறாரோ? நினைக்கட்டும், அப்படியே நினைத்துக்கொண்டு இரவு முழுவதும் விழித்துக் கொண்டேயிருக்கட்டும். எனக்கு என்ன? ஒரு நாள் நின்றால் குறைந்து விடப் போகிறதா? நிற்கிறேன். காலை வலித்தால் ஆடுகிறேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, கடைக்கண்ணால் அவனை நோக்கிய வண்ணம், கால் விரலில் தரையில் சித்திரம் தீட்டிக்கொண்டு அங்கேயே நின்றாள் மோகனா.

பார்க்கப் பார்க்கத் திகட்டாத பாவையழகைப் பார்த்துக்கொண்டே இருந்த சண்முகம், 'ஏன் வராமல் இருக்கிறாள்? நாம்தான் வாயைத்

திறந்து கூப்பிடுவோமா?... சே, அது தவறு. அவளே சிரிப்பாள். உம்... அவளை எப்படி இங்கே வரவழைப்பது?'' என்று எண்ணிக்கொண்டே புன்முறுவலுடன் ஒரு முறை கனைத்துக்கொண்டான்.

ஓஹோ, கனைத்தால் அவசரமாக அருகில் ஓடிப்போய் 'பால் சாப்பிடுகிறீர்களா' என்று கேட்டுவிடுவேன் என்று எண்ணம். பாவம் வித்துவான் இப்பத்தான் பல்லவிகரம் பாடிக் களைத்துப் போய்விட்டார். தொண்டையைக் கனைத்துக்கொள்கிறார். அத்தனையும் பாசாங்கு. ஏன், வாயைத் திறந்து 'பாலைக் கொண்டுவா' என்றுதான் கேட்கட்டுமே! இந்தக் கனைப்புக்கெல்லாம் நான் பயந்துவிட மாட்டேன்' என்று சொல்லிக்கொண்டே மோகனா மேலும் அங்கேயே நின்றாள்.

எதிரிலே அருமையான அறுசுவை அமுதை வைத்துக்கொண்டு பசித்தவன் காத்திருப்பானா? கனியைக் கையிலே பறித்தவன், அதன் தோலை உரிக்க யோசனை செய்வானா? கிடைக்காத செல்வத்தைக் கிடைக்கப் பெற்றவன், அதை அனுபவிக்கத் தயங்குவானா? மலர்ச் செண்டைக் கையில் வாங்கியவன் அதன் மணத்தை முகராமல் இருப்பானா?

ஆண்மகன் தோற்றான். கட்டிலை விட்டு எழுந்தான். அவள் அருகில் மெதுவாக வந்தான். அன்புடன் அவளை நோக்கினான். அந்த ஒரு பார்வையிலே மன்மதனின் அத்தனை மலர் அம்புகளும் அவள் மேல் சொரிந்தன. தலை குனிந்து நாணிக் கோணி நடுங்கி நின்றாள் நங்கை. அவளுடைய தோளில் வலது கரத்தை வைத்தான். அவள், மலர்பூத்த கொம்பு விலகுவது போல் விலகினாள். தன் கையில் இருந்த வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தை சரேலென்று கீழே வைத்தாள். சண்முகத்தின் திருவடியில் விழுந்து நமஸ்காரம் செய்தாள். சண்முகம் குனிந்து அவளை வாரி அணைத்தான். அவளுடைய கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போல வழிந்து ஓடியது. அவளை அப்படியே அணைத்துக் கொண்டுபோய் அந்த மஞ்சத்தில் அமர்ந்து, தன் மடிமீது வைத்துக் கொண்டான். மோகனா திமிறி எழுந்தாள். கட்டிலில் இருந்து குதித்துக் கட்டில் கால் மறைவில் நின்றாள்.

''உன்னை யார் வணங்கச் சொன்னார்கள்?.... உம்... உன் அம்மாவா?'' என்றான் சண்முகம் ஆத்திரத்துடன். அவள் அசையவில்லை.

''ஏன் அங்கு நின்றாய்? என் அருகில் வர வெட்கமா?'' என்றான் குறும்பாக.

மோகனா தலை நிமிரவில்லை.

''நானே வந்து கூப்பிடவேண்டுமென்றுதானே கதவோரத்தில் நின்றுகொண்டிருந்தாய்?'' என்று அன்பொழுகக் கேட்டான்.

அதற்கும் மோகனா பதில் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய முகத்தில் இளநகை அரும்பியது. இந்த நகையூடே, அன்று அழகர்



கோவிலில் அவனை முதன் முதலில் கண்ட போது விரிந்த அவளுடைய காதல் விழிகள் அவனைக் கபளீகரம் செய்தன.

''மோகனா, கடவுள் கடைசியில் கிருபை செய்துவிட்டார் அப்பப்பா, உனக்காக நான் தவித்த தவிப்பு.........!''

''நீங்கள் மாத்திரம்தானே தவித்தீர்கள்!'' என்றாள் மெதுவாக மோகனா. சண்முகம் அவள் குரலில் மயங்கினான்.

''அதற்காகத்தான் வாசல்படியிலே காக்க வைத்தீர்களோ?''

''உன் அழகைப் பருகிக்கொண்டே மயங்கிவிட்டேன்.''

''ஆமாம், இன்றைக்குத்தானே புதுசா அழகைப் பருகுகிறீர்கள்! உங்களைக் காட்டிலும் அதிகமாக அழகு வந்துவிட்டது எனக்கு....!''

''ஆமாம் மோகனா, உன் எழிலுக்கு எல்லையே இல்லை. அது ஒவ்வொரு நாளும் வளர்பிறை போல் வளருகிறது.''

மோகனா அவனை நோக்கினாள், சிரித்தாள். ''என்ன, சந்திர மாதிரியா? அதனாலேதான் ராகு கேதுக்கள் விடவில்லை.''

''இனிமேல் பயமில்லை. என் தலைமேல் ஏறிவிட்டாய் அல்லவா?'' என்று அவள் மதிமுகத்தை நோக்கினான் சண்முகம்.

''ஆமாம், பெரிய சிவபெருமான் என்றுதான் நினைவு.''

''அப்படியெல்லாம் கேலி செய்யாதே! அவர் ஒரு முறைதான் நஞ்சு உண்டார். நான் எத்தனை பேர் வார்த்தைகளை விழுங்கியிருக்கிறேன் தெரியுமா?''

''எங்கம்மாவைச் சொல்லாவிட்டால் உங்களுக்குப் பொழுதே போகாது.''

''சே பாவம், உங்கம்மாவைச் சொல்லுவேனா? அவுங்க எவ்வளவு திட்டினாலும் வாங்கிக்கலாமே!''

''ஏனாம்?''

''உன்னை எனக்காகப் பெற்று வளர்த்து இத்தனை நாள் காப்பாத்தியிருக்காங்களே!''

''இப்படிச் சொன்னால் நான் ஏமாந்துவிடுவேன் என்று எண்ணம்.''

''ஆனால் நான் அவுங்களைச் சொல்லவில்லை.''

''வேறே யாரை?''

''எத்தனையோ பேர்! ஒருவரா?......... உன் அழகிலே ஆசைப்பட்டவங்க, ஆட்டத்திலே ஆசைப்பட்டவங்க, உன் புகழிலே ஆசைப்பட்டவங்க என்று அத்தனை பேரும் இல்ல இப்ப என்னை திட்டுவாங்க?...'' என்று சண்முகம் சிரித்தான்.

''சிரிச்ச மயக்குகிறீர்களா? இந்த யோசனை அப்பவே வந்திருக்கணும்.''

''எப்போ.......?''

''கிக்கலில் இருந்து வண்டியைக் கட்டிக்கொண்டு திருவாரூருக்கு வந்த அன்று. சே, தெருவிலே பார்த்தும் பார்க்காதது போல் ஓடினீர்களே ............ உங்களையா எனக்குத் தெரியாது!'' என்று செல்லமாய்க் கோபித்தாள்.

''எல்லோரும் உன்னைப் பார்க்க எத்தனையோ காதத்தில் இருந்து ஓடி வருகிறார்கள். நான் மாத்திரம் உன்னைப் பார்த்தவுடன் ஓடிப்போவேனா? மற்றவர்கள் எல்லாம் கயிற்றால் கட்டுவார்கள்; நீ கண்ணாலேயே கட்டிவிடுவாயே?''

''ஆமா, பேசமாட்டீங்களா? யார் யாருடைய கழுத்தில் கயிறு கட்டினார்கள் என்று ஊரில் கேட்டால் சொல்லுவார்கள். கம்மா கற்பனை ஸ்வராம் ஊதவேண்டாம்.''

''இனிமேல் எங்கே ஊதுவது? அதுதான் காதல் கையைக் கட்டிவிட்டதே!''

''கடவுளுக்கு முன்னாலே, கையைக் கட்டிக்கிட்டு நிற்கிறவங்களைப் பார்த்திருக்கிறேன். காதலுக்கு முன்னாலே நீங்க ஒருத்தர்தாம் இப்படிக் கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறீர்கள்.''

''நான் என்ன செய்வேன், மோகனா? உன் அழகைக் கண்ணாடியில் பார். அப்போது தெரியும்.''

''கண்ணாடிக்குச் சொல்லத் தெரியாதே!''

''நானும் எப்படிச் சொல்வது என்று தெரியாமல்தான் விழிக்கிறேன்.''

''போதுமே புகழ்ச்சி. பெண்சாதியைப் புகழக்கூடாதென்று சொல்லியிருக்காங்க, தெரியுமில்லே?''

''சொன்னவருக்கு வாய்த்தது அப்படி இருந்திருக்கும். எனக்கு வாய்த்தது எழிலோவியம்.''

''கொஞ்சம் பால் சாப்பிடுகிறீர்களா?''

''ஏன், நான் அப்படி உன்னைப் பெருமையாகச் சொன்னதற்காக?''

மோகனா கலகலவென்று சிரித்துவிட்டாள். சண்முகம் தன்னைப் பேச்சில் மடக்கிவிட்டதில் அவள் ஆனந்தமடைந்தாள்.

''இல்லை இல்லை, தொண்டை வறண்டுபோய்க் களைத்தீர்களே?''

''நல்லவேளை, களைத்தீர்களே ஒரு மரக்கால் கொள்ளை வேக வைக்கவா என்று கேட்காமல் பாலைச் சாப்பிடச் சொன்னாயே!''

''இந்தக் குறும்பு இன்னும் போகவில்லையே!''

''இப்பக் கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது.''

''கலியாணம் ஆகிவிட்டது என்ற தெம்பில்தானே?''

''ஆமா, எத்தனை நாளைக்குத்தான் கலியாணம் ஆகாமல் இருப்பது? உன்னைப் படைச்ச மகராசன் கல்லு........''



''ஆமா, அந்தக் கல்லுக்குப் பிறந்ததால்தான் காற்றடிச்ச பக்கம் சருகு போல் பறக்காமல் உறுதியா நிற்க முடிந்தது'' என்று அவள் மடக்கி விடவே, சண்முகம் சிரித்தான். மோகனா தன் வாழ்த்து நெஞ்சை எண்ணி நாணினாள்.

''அத்தான், கொஞ்சம் பால் சாப்பிடுங்களேன்..........''

''அடேயப்பா இனிமேல் ஒரு சொட்டுக்கூடச் சாப்பிட முடியாது!''

''எப்பச் சாப்பிட்டீர்கள்?''

''இத்தனை நேரம் உன் பார்வையிலேயும் பேச்சிலேயும் அதைத் தானே பருகினேன்.''

''அம்மம்மா! அப்படியானால் காப்பி வாயிலே மண் விழுந்தது. நீங்க பாட்டுக்குப் பசிக்கிற போதெல்லாம் என்னைப் பேசச் சொல்லிக் கேட்டுவிட்டுப் போய்விடுவீர்கள். நான் காப்பிக்குப் பால் இல்லாமல் திண்டாட வேணும் ........... அத்தான், ரொம்பப் புகழாதீர்கள். உடம்புக்கு ஆகாது! இந்தாங்க'' என்று மோகனா கூஜாவிலிருந்து ஒரு டம்ளர் பாலை ஊற்றிக் கொண்டுவந்தாள்.

சண்முகம் அவள் குனிவது, நிமிர்வது, அன்புடன் பாலை வார்ப்பது எல்லாவற்றையும் பார்த்தபடி மயங்கி நின்றான் — — அந்தப் பாலின் நறுமணம் அறை முழுவதும் நிரம்பியது.

''இந்தாருங்கள்.''

''பால் சாப்பிட்டுப் பழக்கமில்லை மோகனா.''

''கல்யாணம் பண்ணிக்கிட்டு மாத்திரம் பழக்கமுண்டா? பாவம் எப்பவும் திருவிழாக் கச்சேரிகள்.''

''ஆமா, திருநாள் கூட்டத்திலே புட்டிப் பாலா சாப்பிட்டுப் பாலே வெறுத்துப் போச்சு.''

''இல்லை அத்தான், இது நல்ல பால். செவலைப் பசுப்பால். சாப்பிடுங்கள். கல்கண்டைப் பொடி செய்து போட்டிருக்கு.''

''யாரு காச்சினது?''

''எங்கம்மாதான்.''

''அப்படியானால் உடனே கொடு. இல்லையென்றால் நாளைக்கு, ஏண்டா பால் சாப்பிடவில்லையென்று கேட்பாங்க.......'' என்று அவன் கூறவே, மோகனா சிரித்தாள். சண்முகம் டம்ளரை வாங்கிப் பாலைப் பருகினான்.

''அத்தான்! அத்தான்!''

திடுக்கிட்டான் சண்முகம்.

''என்ன?''

''மேலே கொட்டிக்கிறீங்களே!''

''உன் முகத்தையே பார்த்துக்கிட்டு....'' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் சண்முகம். மோகனாவின் கையால் பாலை அருந்தினான்.

உடனே மோகனா சிறிது வாசனைப் பாக்கை எடுத்து அவன் வாயில் ஊட்டினாள்.

"இந்தாங்க, வெத்திலை போடுங்கள் .... .... ஆனால் என் வாயைப் பார்த்துக்கிட்டே உங்க வாய் வெந்துபோகாமல்.... ...." என்று கூறிச் சுண்ணாம்பை வெற்றிலையில் தடவினாள்.

"மோகனா, நீ கேலி செய்தாலும் அழகாயிருக்கிறது.... ....."

"இப்படி, பெண்கள் சொன்னால் நன்றாக இருக்கும். 'அடித்தாலும் வைதாலும் அவரே துணையல்லாமல் யார் துணை சொல்லடி மானே' என்றுகூடப் பாடி இருக்காங்களே."

"பாவம், அவ்வளவு கொடியவர்களா, ஆண்கள்? நான் அப்படியெல்லாம்........" என்று அவன் சிரித்துக்கொண்டு கூறினான்.

"அத்தான், எனக்காக நீங்கள் எத்தனை ஆபத்துகளில் சிக்கினீர்கள்? உங்கள் கையால் ஓர் அடி அடித்துவிட்டால் என்ன?"

"கண்ணே, கஷ்டப்படாமல் சம்பாதித்தால் அந்தப் பொருளில் அக்கறை பிறக்காது. சந்தனப் பொடியையும் எரிப்பதுண்டு. தங்கத்தையும் உருக்குவதுண்டு. வெய்யிலுக்குப் பின்னாலே வரும் நிழல்தான் சுகம். கஷ்டத்துக்குப் பின் நிறைவேறும் காதல்தான் இன்பம். அன்பே, உன்னை எண்ணி எண்ணி நான் எத்தனை இரவுகள் உறங்காமல் இருந்திருக்கிறேன் தெரியுமா?"

"எண்ணினால் மட்டும்தானா, நான் எதிரில் இருந்தாலும் உறக்கம் வராது போல் இருக்கிறதே?"

"மோகனா, நீ முழு நிலவு. நிலவில் படுத்தால் நித்திரை வருமா? அதன் அழகைத்தானே ரசிக்கச் சொல்லும்!"

"ஆமா! நிலவு. அது கல்லிலும் வீசும் கழனியிலும் வீசும். நல்லவர் கெட்டவர் தெரியாது."

"அப்படியானால் நீ நிலவில்லை. நீ ஒரு தாமரை பூத்த பொய்கை."

"அம்மாடியோ! அது வேண்டாம், காலில் கொடி சிக்கிக் கொள்ளுமே.... .... சரி, நான்தான் தாமரைப் பூ ........ நீங்கள்?"

"பூவைச் சுத்தும் வண்டு."

"பேரே நல்லா இல்லை."

"அப்படியானால் நீ தந்தச் சிலை."

"எங்கம்மா காதிலே கேட்டால் நான் யானையா என்று சண்டை பிடிப்பாங்க........"

"நீ பனிக்குப் பாவை .... ...."

"ஏன்? உணர்ச்சியே கிடையாதா?"

"நீ மல்லிகைப் பூ...."

"அது தொட்டால் கசங்கிப் போகும்."



"அப்படியானால் — நீ — நீ" என்று யோசித்த சண்முகம், "நீ நீயேதான்! உனக்கு உவமையே கிடையாது" என்றான்.

"அல்ல, நான் யார் தெரியுமா? உங்கள் அடிமை...." என்று நாத்தழுதழுக்க உரைத்தாள் மோகனா. சண்முகம் ஆவலோடு எழுந்தான். அவளை ஆரத் தழுவி தன் கட்டிலில் உட்கார்த்தினான்.

"ஆரமுதே! அதோ பார்.... ரதியை!" என்றான்.

"எங்கே?"

சண்முகம் கட்டிலுக்கு உயரே கையைக் காட்டினான்.

உயரே இருந்த கண்ணாடியில் அவளைப் பார்த்திருக்கும்படி தூண்டினான். அவள் அந்த நேரத்தைக்கூட வீணாக்காமல் அவன் முகத்தையே நோக்கினாள். மெல்ல அவள் முகவாய்க்கட்டையில் கை வைத்து முகத்தைக் கண்ணாடியின் பக்கம் திருப்பினான். அந்தக் கண்ணாடியிலே ரதியும், மன்மதனும் காட்சியளித்தார்கள்.

இருவரும் கண்ணாடியைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, ஒருவரையொருவர் மந்தகாசத்துடன் பார்த்தார்கள். இந்த மந்தகாசத்திலே மந்தமாருதமே வீசியது.

"மோகனா, எத்தனை நண்பர்கள்! எத்தனை கலை அன்பர்கள்! எத்தனை பேர்களுடைய ஆசை தெரியுமா, நாம் இருவரும் ஒன்றாக வாழ வேண்டுமென்று" என்றான் சண்முகம்.

"ஆசை என்று சொல்லாதீர்கள், ஆசி என்று சொல்லுங்கள். இந்த மரகதம், கூடப்பிறக்கவில்லை. அவளுக்குதான் எத்தனை அன்பு! தன் வீட்டுக் கலியாணம் போல அல்லவா செய்திருக்கிறாள்?"

"மைனரை-நினைக்க வேண்டும் மோகனா. நான் அவரைப் பேசிய பேச்சுக்கு அந்த சிமான் எத்தனையோ கெடுதல் செய்திருக்கலாம். எல்லாவற்றையும் மறந்து அவர் குணக்குன்றாக அல்லவா ஆகிவிட்டார்! அவர் இல்லையென்றால் என்னால் கலியாணத்தை இவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியுமா?"

"ஆமாம், நீங்கள்தாம் அவருக்கு ஒரு செலவையும் வைக்கவில்லையாமே, மரகதம் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டதே!"

"எனக்குத்தான் அண்ணன் இருக்கிறாரே....!"

"யார் உங்கள் அண்ணன்?"

"காரைக்கால் நடேசன்தான். இந்தக் கலியாணத்திலே அவர் செய்திருக்கும் உதவி எனக்குத்தான் தெரியும்."

"ஆமாம், மரகதத்துக்கு அந்த வைர நெக்லஸ் கொடுத்தீர்களே, அது யார் வாங்கித் தந்தது?"

"நடேச அண்ணன்தான்."

"அடேயப்பா, அவருக்கு எப்படித் திருப்பிக் கொடுப்பீர்கள்?"

"திருப்பிக் கொடுக்கிறேன் என்று ஒரு வார்த்தை சொன்னால், அவர் என் முகத்தைக்கூடத் திரும்பிப் பார்க்கமாட்டார். ஆனால் .... அவர் வீட்டில் இம்மாதிரி ஒரு கலியாணம் வரவேண்டும்."

"ஆமாம், அண்ணன் ஏன் இன்னிக்கு வரலே?"

"அவர் எப்படியும் வந்துவிடுவார் என்றுதான் காத்திருந்தேன். வருவதாகவும் சொல்லியிருந்தார். முகூர்த்தம் ஆகும் வரையில் வரவில்லை. காலையில் எழுந்தவுடன் முதல் வேலையாக நான் காரைக்காலுக்குப் போகவேண்டும்."

"நான் வரவேண்டாமா, என் மைத்துனரை வணங்க?" என்று கண்களில் நன்றி ததும்பக் கேட்டாள் மோகனா. "ஆமாம், ஏன் வரவில்லை அவங்க. வராமல் இருக்கமாட்டாங்களே?" என்றாள்.

"மோகனா, உலகம் பலவிதம். மைனரின் உதார குணத்திற்கு அண்ணன் இடையூறாக இருந்தார். மைனரின் மாமனாரோ சண்முகத்தின் கலியாணத்திற்கு லட்சம் ரூபாய் செலவு செய்தோம் என்று சொல்லிப் பெருமைப்பட எண்ணினார். நடேச அண்ணன் இதையெல்லாம் தடுத்துவிட்டார்."

"கடம்பவனம் அய்யாகூட ஏதோ சொன்னாங்கனு கேள்விப்பட்டேன்."

"நட்பை எடைபோட யாரால் முடியும் மோகனா? பனைமரத் தடியில் நின்று பாலைக் குடித்தாலும் கள் குடித்தான் என்றுதான் உலகம் சொல்லும். அவர் மதுக்கடை வைத்திருக்கிறார். நான் அவருடைய நண்பன் ஆக இருக்கிறேன். அவருக்கு என் மேலே அபாரமான பிரியம் இருக்கிறது. கடம்பவனத்தா பிள்ளைக்கோ பழைய பழக்கங்கள் இருக்கின்றன. அவர் பாவம், அவர் மனசைக் கொண்டுதானே மத்தவங்களை எடை போடுவாரு. ஒரு கதையைக் கட்டிவிட்டார்."

"அது என்ன கதை?"

"என்ன கதை? சண்முகமும், நடேசனும் ........ கட்டிப்புரளுவாங்க என்று பேச்சுவாக்கில் சொல்லிவிட்டார். இதிலே கோபமோ, என்னமோ?"

"கோபிக்கமாட்டார். நீங்களும் அப்படிச் செய்யமாட்டீர்கள். எனக்குத் தெரியாதா? அன்று கப்பல் மேல் தட்டில் .... ...." என்று எதையோ சொல்லி முடிப்பதற்குள் மோகனாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"மோகனா, உனக்கு நடேச அண்ணனைத் தெரியாது. அவர் மாதிரி என் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது" என்று சொல்லிவிட்டு, சண்முகம், 'ஏன் நடேசன் வரவில்லை?' என்ற எண்ணத்திலேயே பிரமித்திருந்தான். காதலர்கள் பேசி முடிக்கும் வரையில் இரவு காத்திருக்குமா? அது ஓடியே போய்விட்டது.

## இருபத்தொன்றாம் அத்தியாயம்

# தீயவர் கேண்மை தீயினும் கொடிது



அன்று அதிகாலையில் சிங்கபுரம் எல்லைக்குள் இரண்டு குதிரை வண்டிகள் வேகமாகச் சென்றன. அதில் ஒரு வண்டியில் கங்க இலாகா போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்தாமியாலும் மூன்று போலீஸ்காரர்களும் சாதாரண உடையில் இருந்தார்கள். இன்னொரு வண்டியிலோ எப்பொழுதும் சிங்கபுரம் எல்லைக்குள் வண்டியிலே போகத் துணியாத வைத்தி, உல்லாசமாக திண்டில் சாய்ந்து வண்டியில் அமர்ந்திருந்தார்.

வண்டிகள் சிங்கபுரம் பங்களாவை நோக்கி வந்தன. பங்களாவின் வாசலில் வந்து நின்றன. இதைப் பார்த்த காவல்காரன் மலைத்தான். உடனே வைத்தி, "யாருடா அங்கே?" என்று அவனைப் பாராதவர்போல் கேட்டார்.

"சாமீ சேவுகம்" என்று வணங்கினான் அந்த ஆள்.

"என்னப்பா, உங்க மானேஜர் இருக்கிறாரா?" என்று வைத்தி, அழுத்தலுடன் கேட்டார்.

இதற்குள் ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையே அங்கு நேராக வந்துவிட்டார். இன்றுவரை யாரும் அந்த வாசலுக்குள் வண்டியை விட்டுக்கொண்டு வந்தது இல்லை. இந்த மாதிரி அதிகாரமாகக் கேள்வி கேட்டதும் இல்லையாதலால், "யாரய்யா அது?" என்று அதட்டிக் கொண்டே வந்தார். வண்டியில் உட்கார்ந்துகொண்டிருக்கும் வைத்தியைப் பார்த்தவுடனே, அவருக்கு மேலும் கோபம் வந்தது. பக்கத்திலிருந்த வேலையாள் பக்கம் திரும்பினார்.

"என்னடா காத்தான், அந்தப் பூச்சி குப்பை மேட்டு மேலே ஏறி உட்கார்ந்திருக்குது? அதைக் கல்லாலே அடிச்சு விரட்டாமே, வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கியே?" என்று கேட்டார்.

காத்தான் நாய் எங்கிருக்கிறது என்று பார்த்தான். ஆனால் வைத்திக்கு அது புரியாமல் இல்லை. "என்ன பிள்ளைவாள் காலை வேளையிலே நாயை விரட்டிக்கிண்டு?"

"வந்திடுத்தே?"

"வந்தால் பின்னே ஜாக்கிரதையாகத்தான் இருக்கணும். குலைக்கத் தெரியாத நாய், பெரிசாகிக் கடிக்கிறதும் உண்டு" என்று வீராப்பாய்க் கூறினார் வைத்தி.

இதைப் புரிந்துகொண்ட கடம்பவனம் பிள்ளை, "அதுக்குத்தானே கம்பு வச்சிருக்கேன்? பல்லைத் தட்டிவிடமாட்டேன்........?" என்று முறைத்தார். அப்போது வைத்தி இன்னும் வண்டியில் உட்கார்ந்தபடியே பேசுவதைப் பார்த்தார். மேலும் கோபம் வந்தது.

"என்ன வைத்திஜி, காலிலே என்னப்பா?"

"என் காலிலே ஒண்ணுமில்லியே!"

"இல்லே, என்னிக்கும் இவ்வளவு நேரம் வண்டியிலே உட்கார்ந்து இருக்கமாட்டியே. இன்னிக்கு உட்கார்ந்து இருக்கிறியே, காலு சீழு சிப்போச்சும்னு பார்த்தேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே சார். சிலோன்லே ஒரு ஷூ வாங்கிக் காலிலே போட்டுக்கிட்டேன். அது கடிச்சுடுத்து. அது விலை நாலு ரூபாய். அதுக்கு மருந்துச் செலவு ஐம்பது ரூபாய் ஆயிடுத்து" என்று தன் பணச் செழிப்பைக் கூறிக்கொண்டே இறங்கினார் வைத்தி.

"என்ன பிள்ளைவாள், கல்யாணம் எல்லாம் பிரமாதமாக நடந்து போயிருக்கு."

"வைத்தியே வந்திருந்து நடத்தி வச்சதுதான் விசேஷம்."

"இவ்வளவு பெரிய மனுஷாள் தலையிட்டு இருக்கிறபோது, நாம் ஏதாவது செய்யலாமா? சும்மா இருந்துவிட வேண்டியதுதானே?"

"இல்லாட்டி என்ன பண்ணுவீங்களாம்?"

"தானே தெரியும் சார். இந்த வைத்தி படிச்ச லா, மெட்ராஸ் கோர்ட்டோடே நிற்காது. மேல் கோர்ட் வரையில் போகும்."

"அது என்னப்பா?"

"உங்களுக்கு எல்லாம் என்ன தெரியும் சார், வில்லேஜ் பேர்வழிகள். சட்டம் என்றால் என்ன? அதற்கு எவ்வளவு 'பவர்' என்பது உங்களுக்குத் தெரியுமா? என்னைக் கேட்டால், இனிமேல் இந்தியாவிலே எல்லாரும் லா படிக்கணும்னு சொல்லுவேன்."

"என் வைத்தி?"

"படித்தால் இந்தக் கல்யாணத்திலே சம்பந்தப்பட்டிருப்பீர்களா?" என்று சொல்லிக்கொண்டே, திண்ணையில் போய் மைனருக்காக விரித்திருந்த ரத்னக் கம்பளத்தில் அமர்ந்துகொண்டார் வைத்தி.

"ஏன், சம்பந்தப்பட்டா என்ன? கலியாணம் பண்ணி வச்சோம், கலியாணமே பண்ணிக்கிட்டோமா?"

"அப்படிப் பண்ணிக்கிட்டிருந்தால்தான் இந்தப் பேச்சு வந்திருக்காதே. என்ன கடம்பவனம் பிள்ளை, ஊருக்குள்ளே எல்லாம் என்ன பேசறாங்க தெரியுமா?"

"என்ன பேசறாங்க? எந்தப் பய என்ன பேசினான் சொல்லு!"

"இந்தச் சிங்கபுரம் மைனருக்கு அதிலே என்ன அக்கறை வந்தது. இதிலே ஏதோ சீக்ரெட் இருக்கு. அதனாலேதான் அவரே முன் நின்று



கலியாணம் பண்ணிவச்சு இருக்காரு அப்படின்னு பேசறாங்க. நேத்திக்குத் தஞ்சாவூர் போயிருந்தேன். அங்கேயும் கோர்ட்டிலே இதே தான் பேச்சு."

"இதைக் கேக்க, தஞ்சாவூர் வரையிலே போயிருந்தியாக்கும்? பேசட்டும் போ, நாங்கள் எவ்வளவு பணம் செலவழிச்சோம்னு பேசல்லியே? அது சரி, நீ இப்போ எங்கே வந்தே?"

"ரொம்ப நாளாயிடுத்தே, ஒரு 'விசிட்' வருவோம்னு வந்தேன்."

"பார்த்துட்டுப் போகவா, இல்லே, மருமகப்பிள்ளையை ஏதாவது பணம் வாங்கிக்கிட்டுப் போகவா?"

"பணமா? யாருக்கு சார் உங்க பணம் வேணும்? மகாராஜா அனுப்புகிற பணத்தையே எப்படிச் செலவு பண்றதுன்னு எனக்குத் தெரியலே.........!"

"வேற என்ன விஷயம்?"

"உங்க மாப்பிள்ளைகிட்டே கொஞ்சம் பேசணும்."

"அவன் எங்கேப்பா, காலம்பற குமாஸ்தா எல்லோரையும் உட்கார்த்தி வச்சுக்கிட்டு எஸ்டேட் கணக்கு எல்லாவற்றையும் பார்த்துக்கிட்டு இருந்தான்."

"கணக்கெல்லாம் அப்புறம் பார்க்கலாம் சார். ஓடியா போகப் போகிறது? முதல்லே போலீஸ்காரர்களுக்குப் பதில் சொல்லிவிட்டு, அப்புறம் பார்க்கட்டும்" என்றார் வைத்தி.

போலீஸ்காரர்கள் தன் வீடு நோக்கி வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டவுடனே, கடம்பவனம் பிள்ளை ரௌத்திராகாரமானார்.

"என்னப்பா போலீஸ், எதுக்குப் போலீஸ்? நாங்க என்ன திருடினோமா? கொலை கிலை பண்ணினோமா? எதுக்காக எங்க வீட்டுக்குப் போலீஸ்காரங்க வரணும்?"

"இல்லே சார், அந்த நெக்லஸ் விஷயம்" என்றார் வைத்தி.

நெக்லஸ் என்றவுடனே கடம்பவனம் பிள்ளைக்கு சப்த நாடியும் ஒடுங்கியது. 'அந்தப் பூட்டு சிப்பேர் ஆசாமி காட்டிக் கொடுத்து விட்டானோ' என்று நடுங்கினார்.

"என்னப்பா நெக்லஸ், எந்த நெக்லஸ்? எங்க வீட்டு அட்டிகை. நான் குடுப்பேன், எடுப்பேன், அதிலே போலீசுக்கு என்ன?" என்று கடபுடாவில் இறங்கினார்.

வைத்தி விஷயத்தைக் குறிப்பில் உணர்ந்தார். மனத்தில் சிரித்தார். "பிள்ளைவாள் நடுங்காதீங்க. இது உங்க மகளுக்குச் சண்முகம் பிள்ளைவாள் நெக்லஸ் பிரசென்ட் பண்ணினாரோல்லியோ, ஊராத்திலிலே, அது சம்பந்தமா கொஞ்சம் பேசணும்" என்று சொல்லும்போது மைனரே வெளியில் வந்தார்.

"என்ன மிஸ்டர் வைத்தி?" என்றார் மைனர்.

"வாரும், வாரும் மைனர்வாள். உங்களுக்குத்தான் ஒரு ஹெல்ப் பண்ண வந்தேன்."

"ஹெல்பா? ஏதாவது புதுசா வந்திருக்கோ?"

"அடேயப்பா, அபசாரம், அபசாரம். நீங்கதான் ஞானோதயம் பெற்று சித்தர் ஆயிட்டேளே! உங்களை யாராவது இனிமே மாயையினால் வசப்படுத்த முடியுமோ? மைனர் என்கிற பெயரையே மாசுபடுத்திவிட்டீரே" என்றார் வைத்தி. மைனர் சிரித்தார்.

"அட என்னாங்காணும், முன் வைத்த காலைப் பின் வைக்கலாமா? முன்னாலே பள்ளம் இருக்கும்னு தெரிஞ்சும் எவனாவது முன்னாலே நடப்பானா? ஏதோ தவறி விழாமல் காப்பாத்தப்பட்டேன். இப்ப எங்கே வந்தது?"

"உங்க வொய்ப்புக்கு சண்முகம் பிரசெண்ட் பண்ணினாரே ஒரு நெக்லஸ், அதைப் பார்க்கணும்னு இவர்கள் எல்லோரும் வந்திருக்கிறார்கள்."

"ஏன், இவர்கள் எல்லாம் எந்த ஊர் வியாபாரிகளோ?"

"வியாபாரத்துக்கு வரவில்லை.... ஸார், விசாரிக்க வந்திருக்காங்க. இன்ஸ்பெக்டர்வாள் கேளுங்கோ" என்று வைத்தி சொன்னவுடனே, இன்ஸ்பெக்டர் மைனர் அருகில் வந்து வணக்கம் தெரிவித்தார்.

போலீஸ் என்றவுடனே, கிராமவாசிகளுக்கு ஏற்படும் நடுக்கம் அந்தப் படித்த மைனருக்கும் வந்தது.

"என்ன சார், என்ன விசேஷம்? அது ஏதாவது திருட்டுப் பொருளா?"

"திருட்டுச் சரக்கில்லே சார். அது சுங்கம் கட்டாமல் கொண்டு வந்த வைரம் என்று எங்களுக்குச் சந்தேகம்? அந்த நகையைக் கொஞ்சம் தயவு செய்து காட்டுவீர்களா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"மரகதம்" என்று கூப்பிட்டார் மைனர். மரகதம் ஆவலோடு வெளியே ஓடிவந்தாள். அங்கே வைத்தி உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் அந்தப் பேதைப் பெண், "என்னய்யா, உங்க காலடி இங்கே மறுபடியும் மிதிச்சுடுத்தா, ஐயா வந்திங்கன்னா சும்மா வரமாட்டீங்களே?" என்றாள்.

"சே, சே, அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே அம்மா" என்றார்.

"இந்தா, உன் நெக்லஸைக் கொஞ்சம் பார்க்கணுமாம்" என்றார் மைனர்.

மரகதம் நெக்லஸைக் கழட்டிக் கொடுத்தாள். அதை வாங்கிப் பூதக் கண்ணாடியால் அதன் பின்புறம் ஏதேனும் முத்திரை இருக்கிறதா என்று பார்த்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

ஐந்து நிமிஷ நேரம் எல்லோரும் நிசப்தமாக அவரையே நோக்கினர்.

"சார், ஐ ஆம் சாரி டு டெல் யூ...." என்றார் அவர்.



"என்ன சார், சரி?"

"இதை நான் பறிமுதல் செய்திருக்கிறேன்" என்றார்.

மைனருக்கு ஆத்திரம் மேலிட்டது. "வைத்தி, நான் உன்னிடம் மாட்டிக்கொண்டு தப்பிவிட்டேன். ஆனால் இன்றைக்கு நீ என்னிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாய். நான் யார் தெரியுமா?"

"தெரியும் சார். பல் முளைக்காத பச்சைக் குழந்தை. சிங்கபுரம் எஸ்டேட்டின் சீமான். வருஷத்திற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் வரி கட்டுகிறவர்."

"இவ்வளவு தெரிந்துமா என்னிடம் வாலாட்டுகிறாய்?"

"நான் வாலாட்டலே சார். சட்டம் தலை நீட்டுது."

"எந்த அதிகாரத்தின் பேரில் இதைப் பறிமுதல் செய்யச் சொல்கிறாய்?"

"நானா பறிமுதல் செய்கிறேன்? இன்ஸ்பெக்டரா சொன்னார்? மைனர்வாள், ஆத்திரப்படாதேங்கோ. பறிமுதல்தானே பண்றாங்க? எடுத்துக்கொண்டு போய்விடலையே? உங்க பெட்டியிலே கிடக்கிற நகை சர்க்கார் பெட்டியிலே இருந்தா என்ன? இன்னும் ஜாக்கிரதையாய் இருக்குமோல்லியோ."

"வைத்தி, உஷாராய்ப் பேசு...!"

"என்ன சார் உஷார்? அது இங்கே இருந்தா, அங்கிருக்குத் திருவாரூர்லே குடுத்த மாதிரி திருவிடமருதூர்லே குடுத்திட்டீர்களா?"

மைனர் உடம்பு ஆத்திரத்தால் படபடவென்று துடித்தது. அவர் மாமனாரின் கையோ பரபரவென்றது. இதைக் கண்ட வைத்தி "என்ன சார் மோசம் போய்விட்டது? நாளைக்கு உங்களதுன்னு கோர்ட்டிலே ருஜுப் பண்ணி வாங்கிக்கிட்டுப் போங்களேன் சார்" என்றார்.

"என்னுடையது அல்ல என்று உமக்கு எப்படித் தெரியும்?"

"எந்தக் கம்பெனியில் வாங்கினேள் சார்?"

"நான் வாங்கியதல்ல. என்னுடைய நண்பர் சண்முகம், என் மனைவிக்குப் பரிசு அளித்தார்."

"ஏன் சார், உங்களுக்கு வெட்கமாக இல்லே, உங்க மனைவிக்கு இன்னொருத்தன் பரிசு அளித்தான்னு சொல்ல...?"

"ஏய் வைத்தி" என்று துடித்தார் கடம்பவனம்.

"சரி, அதைப்பற்றி நான் கேட்கலே. உங்க சண்முகம் எங்கே வாங்கினார்?"

"அதைப்பற்றியெல்லாம் உனக்கு என்ன கேள்வி?"

"என்ன சார், நானா கேட்கிறேன். இன்ஸ்பெக்டர் கேட்கிறார். கேளுங்கோ இன்ஸ்பெக்டர் சார்"

"யெஸ், உங்க சண்முகசுந்தரம் பிள்ளை எங்கே வாங்கினார் சார்?"

"அவர் காரைக்கால் நடேசன்கிட்டே வாங்கினார்."

"இவ்வளவே போதும். அந்த நடேசன் இதற்குக் காவலாக்கூட வரி கட்டியதாகத் தெரியவில்லை சார்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அதை அவரிடம் ஒப்படைக்கிறீர்களா, அல்லது உங்களை அவர் அரஸ்ட் பண்ணணுமா?" என்று வைத்தி மத்தியஸ்தம் செய்ய வந்தார்.

ஐயோ, பாழும் கடம்பவனம் பிள்ளைக்கு இப்பொழுதுதானா அவருடைய கோபம் தலை காட்ட வேண்டும்? கடம்பவனம் பிள்ளையின் கம்பு படீரென்று வைத்தியின் முதுகில் விழுந்தது. அடுத்து நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரை ஆத்திரம் அடைய அதுவே ஒட்டியது. அந்த நகையை கையில் எடுத்தவண்ணம், ஊதலை ஊதினார் இன்ஸ்பெக்டர். உடனே ஆறு போலீஸ்காரர்கள் அங்கு தோன்றினார்கள்.

## இருபத்து இரண்டாம் அத்தியாயம்

# கல் ஒன்றில் காய் இரண்டு



ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவர் வீட்டு வாசலில் ஒரு நாளைக்கு நான்கு அதிகாரிகள் வந்து நின்றார்கள். "சார், உங்க வீட்டுக் கொல்லையிலே கஞ்சாச் செடியிருக்கிறது என்று எங்களுக்கு ஒருவர் 'இன்பர்மேஷன்' கொடுத்திருக்கிறார்" என்று அவர்கள் சொன்னவுடனே அந்தப் பணக்காரர் திகைத்துவிட்டார். அவர் வீட்டுத் தோட்டம் ஒரு நந்தவனம். அதிலே என்ன என்ன செடிகள் முளைத்திருக்கின்றன என்பது அவருக்கே தெரியாது. அந்தச் செடியை அவர் முன்பின் பார்த்ததும் இல்லை. இம்மாதிரி அவரும் அதிகாரிகளும் திண்டாடும்போது ஒரு குடியானவர் அரளி முதல் ஆவாரை வரை அத்தனை செடிகளையும் பெயர் சொல்லி நிரூபித்த பிறகுதான் இருவரும் தப்பினார்கள். எதிரியின் கால் கடுதாசியால் அவர் வீட்டு சிங்காரத் தோட்டம் அழிந்தது. சிமிண்டுத் தரையாயிற்று. இதுமாதிரிதான் அக்காலத்தில் கள்ளக் கடத்தல் வியாபாரமும் நடந்துகொண்டிருந்தது. எழுதிவிட்டால் போதும், எக்சைஸ்இலாகா காத்திருக்கும். காரைக்கால், பாண்டிச்சேரி ஆகிய ஊர்களில் இருந்துகொண்டு, அந்தக் குற்றத்துக்கு ஆளாகாத ஒருவர் உயிர் வாழ்ந்தார் என்று சொல்வதுகூட ஆச்சரியம்! அவர்களின் மனதில், தான் செய்வது குற்றம் என்று தோன்றாமலேயே இருந்திருக்கலாம்; ஆனால், அதுவும் குற்றம்தானே?



ஆத்திரத்தால் ஒருவனை அடிக்கலாம். ஆத்திரம் வருவது குற்றமல்ல. ஆனால் அடிப்பது குற்றம். காதல் புனிதமானதுதான். இதற்கு ஓரளவு ரகஸ்யமும் தேவையிருக்கிறது. எப்பொழுது அதில் உள்ள ரகஸ்யம் கலைகிறதோ, அப்பொழுதே அது ரசம் போன கண்ணாடி போல் ஆகிவிடுகிறது. காதல் குற்றமல்ல, ஆனால் கள்ளக்காதல் குற்றம். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு இது குற்றம், அது குற்றம் என்று பார்ப்பது இல்லை. குற்றத்தையும் தெரிந்தே செய்துவிட்டு அதற்கு உள்ள தண்டனையையும் அனுபவிக்கிறது. அரசியலிலே மூளும் போர் முதல், அடுப்படியில் நடக்கும் நாத்தி சண்டை வரை உணர்ச்சியிலே உண்டாகும் குற்றங்கள்தாம். பசிக்காகவும் ருசிக்காகவும் மனிதன் பலவிதக் குற்றங்களைச் செய்கிறான். ஆளுக்கு இவ்வளவு அரிசிதான் வாங்க வேண்டுமென்று சட்டம் இருந்தபோது பசியினால் திருடர்களான பணக்காரர்கள் எத்தனையோ பேர். இதைப் போல் ருசிக்கு அடிமையாகிக் குற்றம் புரிபவர்களும் எத்தனையோ பேர்.

பிரஞ்சிந்தியாவில் சில சாமான்கள் விலை மலிவு என்பதால் அந்த ஊர்ப் பொருள்கள்மேல் மக்களுக்கு மோகம் அதிகம். உள்ளூர்க் கடையிலே கிடந்த கட்டுக்கடை துணியை வாங்கி, கக்கத்தில் மறைத்து வைத்துக்கொண்டு, பண வசதி உள்ளவர்களின் வீட்டுக்கு ஒருவர் இரகசியமாய் வருவார். "நல்ல டசூர் ரகம் சார். பாண்டியிலிருந்து வந்திருக்கு" என்று சொல்லி கெஜத்துக்கு எட்டணா அதிகம் வைத்துக்கூட விற்றுவிடுவார். வாங்கியவரோ விஷயம் தெரிந்த பிறகு திருடனைத் தேள் கொட்டியதுபோல் திருதிருவென்று விழிப்பார். அப்படி ஏமாறுபவர்களும் உண்டு.

ஆனால், பிரஞ்சிந்தியாவைப் பொறுத்தவரையில், கள்ளக்கடத்தல் நிரந்தரமாக இருந்து வந்த காலம் அது. அந்தக் கடற்கரைப் பகுதியில் எத்தனையோ தோணிகள் சிக்கி இருக்கின்றன. அபினி பிடிபட்டு இருக்கின்றது. தங்கம் கிடைத்திருக்கிறது. சீட்டுக்கட்டு முதல் சிக் வரையில் அந்த ஊர் வியாபாரத்தால், அப்பொழுது இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய்கள் மிஞ்சி இருக்கின்றன. அந்த இரண்டு ஊர்களில் மட்டும் வருடத்திற்குப் பல கோடி ரூபாய்களுக்கு அயல்நாட்டுச் சரக்குகள் இறக்குமதியாகின என்றால், அவ்வளவு பொருள்களும் அந்த ஊர்களிலேயே விற்றுவிட்டனவா? முடியுமா? அல்ல. அந்த ஊர்களைத் தவிர மற்ற ஊர் மக்களின் ஆசைக்கும், குற்றத்திற்கும்தான் அவை காரணமாக விளங்கி வந்திருக்கின்றன. இந்தச் சூழலில் சிக்கிய நடேசனும் அவ்வாறு குற்றம் புரிந்திருக்கலாம் அல்லவா?

எதிர்பாராத விதமாக அங்கு திடீரென்று மூன்று போலீஸ்காரர்களைக் கண்டவுடனே, வைணர் நடுங்கினார். கடம்பவனம் பிள்ளையின் கையிலிருந்த கம்பு அவரை அறியாமலே நழுவிக் கீழே விழுந்தது. இன்ஸ்பெக்டர் சந்தாமியான், "பெரியாளு என்னாங்கோ, கடுபுடு கத்தரா

னை...'' என்று பாதி உருதுவும் பாதி தமிழும் கலந்து மணிப்பிரவாளத்தில் கோபித்தார். அக்காலத்தில் ஓர் அதிகாரி தன் கடமையை நிறைவேற்ற வரும்போது, அவரைத் தடுப்பது என்பது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. அந்நியன் சட்டம் என்ன ஆபத்தைக் கொண்டுவருமோ என்று அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த காலம். தமது ஊர்ச்சட்டம்தானே என்ற சலுகையே இல்லாத காலம்.

மைனரின் மனம் பல விதங்களில் யோசனை செய்தது. காரைக்கால் நடேசன் உண்மையில் குற்றவாளியா, இல்லையா? அவர் சுங்கம் கொடுத்து இந்த நகையைக் கொண்டு வந்தாரா இல்லையா? என்ற யோசனையே அவருக்கு உண்டாகவில்லை. காரைக்காலில் பிறந்த ஒரு பாவத்துக்கே இவையெல்லாம் கள்ளக் கடத்தல் சரக்குதான் என்று அவர் நம்பினார். அன்பு உணர்ச்சியினால் ஏன் காரைக்கால் நடேசன் இந்தக் குற்றத்தைச் செய்திருக்கக்கூடாது? அவர் ஊரில் வைரம் விலை குறைவு. தங்கம் விலை குறைவு. அவருக்கு இருக்கிற செல்வாக்கோ அதிகம். இரண்டு எல்லையிலேயும் அவருக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள்.

சாதாரணமாக சோதனையின்றியே போய்வரும் அளவுக்கு நம்பிக்கை அவரிடம் வைத்திருக்கிறார்கள். அவர் கள்ளக் கடத்தல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்யாமல் இருக்கலாம். சண்முகத்துக்கு உதவி செய்யும் அன்பினால் சண்முகத்தின் மீது உள்ள ஆசையினால், தான் செய்வது குற்றம் என்றே தெரியாமல் செய்திருக்கலாம். அரசாங்கம் விடுமா? ஆசையினால் திருடினேன் என்று சொன்னால் அரசாங்கம் விட்டுவிடுகிறதா? சண்முகத்தின் மேலுள்ள பாசத்தினால் நான் ஐம்பதினாயிரம் ரூபாய் நகைகளைக் கொண்டுவந்தேன் என்று நடேசன் சொல்லிவிட்டால், அவருடைய அன்பை அரசாங்கம் மெச்சிக் கொள்ளுமா? குற்றத்தை மன்னித்துவிடுமா?

'சே, நம்முடைய தரம் என்ன! நம்முடைய பெருமை என்ன! நமக்கு இருக்கும் நிலங்கள் எத்தனை! அதிகாரிகள் நம்மிடம் வைத்திருக்கும் மதிப்பு எவ்வளவு! எல்லோரிடத்திலும் பெரிய மனிதன் என்று பெயர் எடுத்துவிட்டு இந்தச் சின்னத்தனத்திற்கு ஆளாகிவிட்டோமே! மனைவியின் கழுத்தில் கிடந்த நகையை இத்தனை பேர் எதிரில் எடுத்துக் கொடுத்தது ஒருபுறம் இருக்க, மாமனாரையும் கையோடு அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள் போலிருக்கிறதே. இந்த வைத்தி, இன்று நம்மைக் கவிழ்த்துவிட்டான். கொழும்பில் மாமா சொன்னார். 'நீ இருக்கும் தரத்துக்கு சண்முகத்தின் நேசம் லாயக்கில்லை' என்று. அதைக் கேட்காமல் போனோமே. இப்போது யாரைப் பிடிப்போம், எப்படி இந்தக் கேசைப் பதிவாகாமல் தடுப்போம். என்னடா இவ்வளவு பெரிய தொல்லையாகப் போய்விட்டது!' என்று வருந்திக்கொண்டே நின்றார் சிங்கபுரம் மைனர். இவ்வளவும் ஒரு கணத்தில் அவருடைய மனதிலே கொடிமின்னல் போலத் தெறித்து ஓடின.



''சே இது என்ன சார் கேவலம்! இன்ஸ்பெக்டர் மேலே கம்பை ஓங்கலாமா? இவர் மேலே மட்டும் இந்த அடிபட்டிருந்தா இங்கே வாத்திலே தடிக்கப்போயிருக்கும் சார். என்ன மைனர், சும்மா நிற்கிறீர்களே'' என்றார் வைத்தி.

மைனருக்கு வைத்தியின் வார்த்தை விஷம்போல இருந்தது. வைத்தியின் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்தார்.

''என்னை அடிச்சாப் பாதகமில்லே சார். நான் பட்டுண்டு போய் விடுவேன். ஆனால் உங்க மாமா சட்டத்தையல்லவா அடிக்க வந்திருக்கிறார். அதற்குத் தாட்சண்யமே கிடையாதே! நல்லகாலத்திலே நான் மாத்திரம் குறுக்கே போய் அந்த அடியைத் தாங்கவில்லையானால்..... இத்தனை நேரம் இன்ஸ்பெக்டர் பாவம், புள்ளை குட்டிக்காரர்'' என்றார் தொடர்ந்து.

''ஆமாங்கோ, அவரை அடிச்ச கம்பு என்மேலே பட்டிருந்தா...?''

''பட்டிருந்தா என்ன சார், பிரமோஷன் கிடைச்சிருக்கும். சும்மா நீங்க ஒன்று'' என்று இன்ஸ்பெக்டரையும் சமாதானம் செய்தார் வைத்தி. இவர் யார் பக்கம் பேசுகிறார் என்று தெரியாமல் எல்லோரும் விழித்தார்கள்.

''ஏன் மைனர், போலீஸ்காரர்னா இளக்கீரைன்னு நினைச்சுட்டேளா? நல்ல வேளைக்கு நான் வந்து அந்த அடியைத் தாங்கிண்டேன். இல்லாட்டி, இத்தனை நாழி அவர் ஆஸ்பத்திரியிலே போயிருப்பார்? என்ன இருந்தாலும் உங்க மாமாவுக்கு இத்தனை கோபம்.... கூடாது.... சேச்சே'' என்றார் வைத்தி.

இதற்குள் கடம்பவனம் பிள்ளை, ''உங்களை அடிக்கிறதுக்கு நான் என்ன சார் மடையனா, நான் உங்க மேலே கம்பை ஓங்குவேனா?'' என்று இன்ஸ்பெக்டரிடம் சொல்ல ஆரம்பித்தார்.

ஆனால் வைத்தியோ ''ஏன் சார் அவரை அடிக்கமாட்டேள்? நல்லவேளைக்கு போலீஸ்காரங்க வந்து கூடிட்டாங்க. நீர் கம்பை அவர்மேலேதானே ஓங்கினீர். நான் குறுக்கே வந்து அந்த அடியை வாங்கிண்டேன். அன்றைக்கு மகாவிஷ்ணு தன் முதுகாலே பூமியைத் தாங்கினார். இன்றைக்கு என் முதுகாலே மைனர் குடும்பத்தைத் தாங்கினேன். எங்கே இன்ஸ்பெக்டரை அடிக்க வரலேன்னு என்னைப் பார்த்துச் சொல்லும்?'' என்று ஆவேசமாகப் பேசினார்.

''இல்லை, வைத்திஜி. மாமா அடித்தது உங்களைத்தான்!'' என்றார் மைனர்.

''என்ன மைனர்வாள், இப்படிச் சொல்கிறீர்களே! என்னை அடிக்கிறதுக்கு அவருக்கு என்ன, மூளைக் கோளாறா? அவரும் நானும் இன்னிக்குப் பழக்கமா, நேத்திக்குப் பழக்கமா? கடம்பவனம் பிள்ளைவாள், சும்மா உண்மையைச் சொல்லுங்க. என்னைப் பார்த்தா கம்பை நீங்க ஓங்கினீங்க?'' என்றார் வைத்தி.

வைத்திக்கு இதிலே இரண்டு மிச்சம். தான் அடிபட்டோம் என்று ஒப்புக்கொள்ள அவர் மனம் கூசியது. தன்னை அடித்தார் என்று ஒப்புக்கொள்வதைக்காட்டிலும் போலீஸ்காரரை அடிக்க வந்தார் என்று சொல்வதிலே லாபம் உண்டு என்று மதி பேசியது. மைனரை ஆட்டி வைத்துவிடலாம் என்று எண்ணினார்.

"என்ன இருந்தாலும் மிஸ்டர் பிள்ளைவாள், இவ்வளவு திமிர் உங்களுக்கு ஆகாது. அவரை என்ன உங்கள் பண்ணை ஆள் என்றா நினைத்துக்கொண்டீங்க; ரிவால்வர் வச்சிருக்கார் சார்..... ரிவால்வர்..." என்று சொல்லிவிட்டு, சந்தாமியான் அருகில் ஓடினார் வைத்தி.

"என்னை மன்னிச்சுக்கோங்கோ இன்ஸ்பெக்டர் சார். ஆப்டர் ஆல் கடம்பவனம் பிள்ளை குட்மேன். ரொம்ப நல்ல மனிதர். இந்த மட்டும் நான் அழைத்துக்கொண்டு வந்ததற்கு உங்க மேலே அடிபடாமல் இருந்ததே, அதுவே போதும்."

"நம்பனே என்னாத்துக்கு சார் அடிக்கிறாங்கோ. நம்ப டூட்டியை நம்பள் செய்யறான்."

"என்னமோ அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். உங்களை அடிக்க வந்த விஷயத்தை நீங்கள் வெளியே சொல்லப்படாது. கொலைக் கேசுக்குத் தப்பலாம். கொள்ளைக் கேசுக்கும் தப்பிவிடலாம். ஆனால் அதிகாரிஒருவரை அடிக்கிறதுன்னா......!"

இவ்வாறு அவர் பேசப்பேச கடம்பவனம் பிள்ளையவர்கள் கதிகலங்கினார். ஆனால் மைனர் துணிந்து, "மிஸ்டர் வைத்தி, என்னத்துக்கு இந்தத் திருகல் எல்லாம்? மாமா, உங்களைத்தான் அடித்தார். என் கண்ணாலே பார்த்தேன்" என்றார்

"என்ன மைனர்வாள், என்னதான் உங்களுக்குள்ளே பகையிருந்தாலும், சமயத்திலே மாமனாரைக் கைவிடுவீர்களா? அவர் சாதாரணமானவரா, நீங்கள் வடிவாம்பாள் வீட்டிலே கொடுத்த நகையையே ஆள்விட்டுத் திருடிவரச் சொன்னவராச்சே!"

"அது என்னா ஸார்?" என்றார் இன்ஸ்பெக்டர் அக்கறையோடு.

கடம்பவனம் அப்படியே விக்கித்து நின்றார். மைனரோ பூதம் கிளம்புகிறதே என அஞ்சினார்.

அதற்குள் வைத்தி இன்ஸ்பெக்டரிடம், "அது உங்க டிபார்ட்மெண்டிலே வராது-ப்ளீஸ் அதை மறந்துவிடுங்கள். ஏதோ ஆத்திரத்திலே மகள் கழுத்திலிருந்து நகையைக் கழட்டச் சொன்ன கோபத்திலே.......... ஆப்டர் ஆல் தந்தையின் செண்டிமெண்டுக்கு நீங்கள் மதிப்புக் கொடுக்கணும். மிஸ்டர் சந்தாமியான், அடிக்க வந்தார்ங்கிறதுக்கு நீங்கள் ஒண்ணும் ஆக்ஷன் எடுத்துக்கப்படாது" என்று அவர் தாவாங்கட்டையைப் பிடித்துத் தாங்கினார்.



சந்தாமியானுக்கும் சிறிது சந்தேகம் வந்தது. அவர் பல கேஸ்களில் அடிபட்டவர். சுங்க இலாகாவில் போலீஸ் வேலை பார்ப்பது, இப்போது பீட் கான்ஸ்டேபிளாக இருப்பது போலத்தான். எந்த நிமிஷத்தில், எந்த ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் எப்பொழுதுமே ஒவ்வொரு பீட் கான்ஸ்டேபிளுக்கும் உண்டு. 'எல் போட்ட மோட்டார்' ஒன்று வந்தாலே போதும். 'வடபழனி ஆண்டவனே, இந்த 'எல்' போர்டுகள் எல்லாம் என் மேலே தாக்காமல் போகவேணும்!' என்று பிரார்த்தனை செய்வார். சிற்சில வாகனங்களைக் கண்டுவிட்டாலே போதும். 'இந்தப் பெருச்சாளி நம்ப மேலே மோதாமல் போகணுமே' என்று அவர் பிரார்த்திப்பார்.

லாரியும் சொந்த டிரைவில் வண்டியும் போட்டி போடும்போது, தெருவில் நிற்கும் போலீஸ்காரருக்குத் தன்னுடைய குழந்தைகளின் முகம் கண்ணில் தோன்றும். ஒவ்வொரு நாளும் ஆபீஸ் நேரத்தில், அவர் பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொள்வார். சாயங்காலம் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் அதை மறந்துவிடலாம். ஒரு பீட் கான்ஸ்டேபிளுக்கே இவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது என்றால், சுங்க இலாகாவில் இருக்கும் போலீஸ் அதிகாரிக்கு எத்தனை கஷ்டங்கள் இருந்திருக்கும்? மண்ணெண்ணை விட்டு ஐம்பதினாயிரம் ரூபாய் சரக்கைக் கடத்துபவன், தான் தப்பித்துக்கொள்வதற்குப் பிறரை என்ன செய்வான் என்றே தெரியாது.

அம்மாதிரி பல முறை சந்தாமியான் பல ஆபத்துகளுக்குள்ளாகியிருக்கிறார். ஆதலால் வைத்தி சொன்ன பிறகு, அவருக்கு உண்மையிலே கடம்பவனம் நம்மை அடிக்கத்தான் கம்பை ஓங்கினாரோ என்று தோன்றியது.

"நான் பார்க்கலிங்க, இவரு என்னை அடிக்க வந்ததைப் பார்த்திருந்தா, நான் சும்மா இருந்திருப்பேனா? வைத்திஜி, தாங்ஸ் நீங்க இல்லேன்னா என் மண்டை உடைஞ்சிருக்கும்......" என்றார்.

"நான் செய்தது ஒன்றும் பிரமாதமான உதவி இல்லை சார். நீங்கள் ஜனங்களைக் காப்பாத்துகிறீர்கள். இந்த மாதிரி போலீசுக்கு ஒரு ஆபத்து வந்தா அவர்களைக் காப்பாத்தறதும் ஜனங்கள் கடமை. என் டியூட்டியை நான் செய்தேன், சார். அதையெல்லாம் இப்போ பேசாதீங்க" என்று பணிவுடன் அவரிடம் கூறிவிட்டு, ஓடிவந்த போலீஸ்காரரிடம் திரும்பி, "நீங்க எல்லாம் எதுக்கு இப்போ வந்தீங்க?" என்று கேட்டார் வைத்தி.

"என்ன சார், பிகில் ஊதினா வரமாட்டோமா?" என்றார் போலீஸ்காரர்.

"இவர் இன்ஸ்பெக்டரை அடிக்கவும் வரலே, போலீஸ் இலாகாவைக் கேவலப்படுத்தவும் இல்லே. உங்களுக்கு அவர் மேலே கோபம் வரப்படாது."

"அது எப்படி சார் கோபம் வராமல் இருக்க முடியும்? அவருக்கு பந்தோபஸ்துக்குத்தானே சார் நாங்க வந்திருக்கிறோம்'' என்று ஒரு போலீஸ்காரர் எகிறிக் குதித்தார்.

"அதுக்காக என்னப்பா, பதினையாயிரம் ரூபாய் நகையைக் கையிலிருந்து பறித்தா யாருக்கும் கோபம் வரத்தான் செய்யும். கோபத்திலேதானே அடிக்க வந்தார்? இல்லாட்டி, உங்க இன்ஸ்பெக்டர் மேலே பகையா என்ன?'' என்று வைத்தி கோபித்துக்கொண்டார்.

"ஹூம் வெள்ளைக்காரன் ராஜாங்கமே இருக்குது சார். போலீஸ்காரன்னா என்னான்னு நினைச்சுட்டீங்க? அவர்தான் கம்பை ஓங்கிக்கொண்டு அடிக்க வந்தாரே. நான்தான் பார்த்தேனே?'' என்றார் அந்தப் போலீஸ்காரர்.

"சரி, பார்த்தாயல்லவா? மறந்துடு.....'' என்று கெஞ்சினார் வைத்தி.

இதற்குள் திவானத்துக்கு வந்த மைனர், "வைத்தி கொஞ்சம் உள்ளே வாங்க'' என்று அவரைக் கூப்பிட்டுவிட்டு உள்ளே சென்றார்.

"மிஸ்டர் சந்தாமியான், கொஞ்சம் என்னை மன்னிச்சிக்கோங்கோ, நீங்க ஒண்ணும் கோபிச்சுக்கப்படாது'' என்று சொல்லி, அவர் கையைப்பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு உள்ளே சென்றார் வைத்தி.

"எதுக்காக மிஸ்டர் வைத்தி, இப்படிப் பொய் சொல்றீங்க? மாமா அடிக்க வந்ததும் அடித்ததும் உங்களைத்தான். இன்ஸ்பெக்டரை அடிச்சாருன்னு ஏன் கேஸை ஜோடிக்கிறீங்க?''

"என்ன மைனர்வாள், இப்படிக்கேட்கிறீங்களே? இந்த வைத்திநாலு இடத்துக்குப் போறவன், என்னை உங்க மாமா அடிச்சார்னு சொன்னா எனக்கு எவ்வளவு கேவலம்?''

"அதுக்காக?''

"அதுக்காக என்ன? வருவதை அனுபவிங்க. சந்தாமியான் ரொம்பப் பொல்லாதவன். அவன் போய் கேஸை எழுதி வைச்சுடுவான். நாளைக்கு ஹெரால் மலபார் போலீசோடு இங்கே வந்து நிற்பான். மைனர்வாள், தஞ்சாவூரிலே ஒரு ராவ்ஜி பங்களா விலைக்கு வருது, வாங்கி விடுங்கோ.''

"எதற்கப்பா?''

"இனிமே உங்களுக்கு என்ன சார், வயலா வரப்பா? தஞ்சாவூரிலே தானே ஜாகை?''

'ஏன்?''

"ஆமா, அதுக்குத்தான் இடம் இருக்கும். தஞ்சாவூர், மெட்ராஸ்னு கோர்ட் வாசல்லே நிற்கிறதுக்குத்தானே உங்க மாமனார் கையிலிருந்த கம்பை ஓங்கினார்?''

மைனரின் படிப்பெல்லாம் எங்கேயோ பறந்தது. நாளை மிராசுதார்கள் தன்னை எவ்வளவு கேவலமாகப் பார்ப்பார்கள் என்பதை எண்ணியபோது அவர் உடல் குன்றியது.



"வைத்தி, இந்த இன்ஸ்பெக்டர் இந்தக் கேஸை எழுதவே படாது. நான் உங்களைத்தான் நம்பியிருக்கேன்......'' என்றார்.

"ஓய், என்னத்துக்குங்காணும் இந்தப் பேச்செல்லாம்? இதிலும் நீர் காலை வாரிவிடுவீர். நாளைக்கே உமக்கு ஒரு பைத்தியம் வரும். இன்று புனிதமாயிட நினைப்பீர். 'வைத்தி சொல்வது எல்லாம் பொய். என் மாமனார் போலீஸ்காரரைத்தான் அடிக்கப் போனார். அதற்குள்ள தண்டனையை வாங்கிக்கொள்வார்'னு ஒரு காகிதம் எழுதிவிடுவீர். உடனே மோகனா வீட்டிலே போய், நான் செய்தது சரிதானே என்று சர்டிபிகேட் கேட்பீர். எனக்கு என்னத்துக்கு இந்த வம்பு? ஏதோ நான் சொல்லிப் பார்க்கிறேன். அப்புறம் இன்ஸ்பெக்டர் இஷ்டம், உம்ம அதிர்ஷ்டம்'' என்று சொல்லிவிட்டு, வெளியே வந்துவிட்டார்.

நகையை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துவிட்ட மைனர், அன்று முழுவதும் 'பொன்னம்பலத்தா பிள்ளைக்குத் தந்தி கொடுப்போமா? போலீஸ் சூப்பரண்டெண்டைப் பார்ப்போமா? வைத்தியின் திருகலை எதிர்த்து வாதாடுவதா? இல்லை, வழக்கை எடுக்காமல் இருக்கப் பாடுபடுவதா?' என்ற எண்ணத்தில் துடித்துக்கொண்டே இருந்தார்.

## இருபத்து மூன்றாம் அத்தியாயம்

# நண்பரைக் காணாது நடுங்கினான்



சிக்கலில் சண்முகத்தின் வீட்டு வாசலில், வடிவாம்பாள் வழியை வழியைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இதுவரை அவள் தன் மகளை எங்கும் தனியே அனுப்பியதில்லை. ஆகையால் அவள் மனத்தில் ஏதோ வேதனை செய்தது.

"ஏன் வரதா, நான்தான் பெற்றவள். இனிமேல் தன்னுடைய ஆகிவிட்டேன். உன்னையாவது கூப்பிட்டாங்களா? நீ கூடப் பிறந்தவனாச்சே?''

"எங்கே அம்மா?''

"அதுதான் தேங்காய் பழம் எல்லாம் எடுத்துக்கிட்டு, காளக் காலம்மன் கோயிலுக்குப் போறேன்னாங்களே?''

"ஓ அதுவா! நான் சமயம் பார்த்துக் கோயிலுக்குப் போயிட்டேன்.''

"இந்தா, ஏன் பொய் சொல்றே? வண்டியிலே நீதானே, வைக்கலெல்லாம் அடைச்சே?''

"ஆமா அம்மா. புருஷனும் பெண்சாதியும் வண்டியிலே எங்கேயோ உல்லாசமா போறாங்க. நானும் நீங்களும் எதுக்குப் பானகத் துரும்பாட்டம்?"

"ஆமாடா, இன்னும் கொஞ்சநாள் ஆச்சுன்னா நான் துரும்பாத்தான் ஆயிடுவேன்! இந்த அவமானமெல்லாம் என்னாலே பொறுக்க முடியாது. மரியாதைக்கு என்னை ஒரு வார்த்தை வாங்கன்னு கூப்பிட்டா என்ன?"

"நீங்க அதைப் புரிஞ்சிக்காட்டா?"

"அட போ... உனக்கு மூளையே கிடையாது" என்று வரதன் மேல் எரிந்து விழுந்தாள் வடிவாம்பாள். அவளுக்கு வயிற்றில் பசி வேறு. செய்த சமையல் எல்லாம் ஆறிப்போகிறதே, இன்னும் இவர்கள் இருவரும் சாப்பிட வரவில்லையே என்ற கவலை வேறு. இதனிடையில் வரதன் வந்து அவள் கோபத்தைத் தூண்டிவிடவே, "சும்மா நிற்கிறியே! அந்தப் பக்கம் போய் வண்டி வருதான்னு பாரேன்" என்று உத்தர விட்டாள்.

அப்போது அவள் காதில் மாட்டுச்சலங்கை ஒலித்தது. திரும்பினாள்; ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து வைத்திஜி குதித்தார்!

✤ ✤ ✤

"வாங்க, வைத்தி ஐயா! வாங்க!" என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள் வடிவாம்பாள்.

"அடேடே, வடிவாம்பா அம்மாளா! என்ன பண்ணறது? என்னை வரவேற்க வரும் வேகத்தில் நிமிர்ந்து வராதீங்க. நிலைப்படி இடிக்கப்போறது!"

வடிவாம்பாள் திகைத்தாள்.

"மன்னிக்கணும், நான் பழைய வடிவாம்பாளாக்கும்னு நினைச்சுச் சொல்லிப்பிட்டேன். இப்போதான் நீங்க ரொம்ப வணங்கிட்டீங்களே?"

"யார் யாருகிட்டே வணங்கிப்பிட்டாங்க?"

"எல்லாம் மாப்பிள்ளை கிட்டேதான். ஆனால் ஒண்ணு சொல்றேன் அம்மா. எப்போதும் நம்பளைவிடச் சின்னவங்களை நாம் வணங்கவே படாது."

"ஆமாம், ஆயுசு குறைச்சல்னு சொல்லுவாங்க."

"அது குறைஞ்சாலும் பாதகமில்லேம்மா. மானம், மரியாதை எல்லாமே அல்லவா குறைஞ்சு போச்சு! மகாராஜாவை வணங்கினால் கையை நீட்டும்போது, இரண்டு பவுனாவது கிடைக்கும். மற்றவங்களை வணங்கினால், பிடி விபூதியாவது கிடைக்கும். இந்தச் சண்முகத்தைச் சரணாகதி அடைஞ்சு என்ன பிரயோசனம்? தலையை நிமிர்ந்தா வாசல்படி தலையிலே இடிக்குது. எட்டடிக் குச்சுலே வாசம். ஏழடுக்கு மாளிகையிலே இருக்க வேண்டிய உன் தலையிலே இப்படி எழுதியிருக்கு."



"ஏது, ரொம்பப் பெரிய விஷயமாக வந்திருக்கிறா போலிருக்கு?"

"ஆமாம். இந்த வீட்டிலே உங்களுக்குத் தூக்கம் வருதோ?"

"இரண்டு நாளாத்தான் நல்ல தூக்கங்க. பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தா, எவ்வளவு நிம்மதின்னு இப்போதுதான் தெரிஞ்சுக்கிட்டேன்..."

"நான் அதைக் கேட்கலேயம்மா. திருவாரூரிலே அரண்மனை போலே வீடாச்சே. இந்த சிக்கல் வீடு...?"

"ஏன், இதுக்கு என்னாங்க? நாகைப்பட்டினம் அலவாக்கரைக் காத்து நல்லா வருது..."

"வடிவாம்பாள், நீ எப்பவும் பிடி கொடுத்துப் பேசமாட்டே..."

"அது கிடக்கு, என்னைப் புகழாதீங்க. ஆமாம், அவங்கெல்லாம் யாரு, நிக்கிறாங்களே?" என்று பக்கத்தில் இருந்தவர்களைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் வடிவாம்பாள்.

"அவாள் எல்லாம் கச்சேரி ஆசாமிகள்."

வடிவாம்பாள் கடகடவென்று சிரித்தாள். அதே சமயத்தில் அவள் மனதில் ஒரு வருத்தமும் வராமல் இல்லை. 'சிங்கபுரம் மைனர் வீட்டுக்கு கச்சேரிக்குப் பேசும்போது பணமும் நிரம்ப வாங்கி, வைரத்தோடு சன்மானமும் வாங்கினோமே, இனிமேல் யார் அவ்வளவு சாமர்த்தியமாகப் பேசப் போகிறார்கள். நாம் கச்சேரியைப் பேசிவிட்டு, இந்த மருமகப்பிள்ளை அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? நம் கையில் இருந்த அதிகாரம் எல்லாவற்றையும் ஒரு நமஸ்காரத்திலேயே பறித்துக்கொண்டு போய்விட்டார்களே! இப்போது கச்சேரி பேச அவங்க வந்திருக்காங்களே, என்ன சொல்வது' என்று கலங்கினாள். "எந்த ஊரோ?"

"பேரளம்..." என்றார் வைத்தி.

"பேரளமா, ஹூம்" என்று சூள் கொட்டினாள் வடிவாம்பாள்.

"ஏன் இப்படி ஊரைக் கேட்டாலே மலைக்கிறீங்க?"

"மலைப்பு ஒண்ணுமில்லிங்க. பக்கத்திலே இருக்குது. பேரளம் காலம்பற போனால், சாயங்காலம் கச்சேரியை முடிச்சிக்கிட்டு வந்துடலாம். ஆனால் இப்போதான் காலம் மாறிப்போச்சே? மகளைக் கேட்காமே, மருமகனைக் கேட்காமே நான் எப்படிச் சொல்றது?" என்றாள் வடிவாம்பாள்.

"ஓஹோ, கச்சேரி பேச வந்திருக்கிறோம்னு நினைச்சுக் கொண்டேளா? அது எல்லாம் இல்லே. அவர்கள் பேரளம் கச்சேரி ஆட்கள். சுங்க இலாகா அதிகாரிகள்" என்றார் வைத்தி. வடிவாம்பாளுக்கு இந்த வார்த்தை நெஞ்சில் குத்தியது. வைத்தி மறுபடியும் போலீஸ்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். இன்னும் என்னதான் செய்வாரோ என்று ஏங்கினாள்.

"வைத்தி, வாழவிட மாட்டீங்களா?" என்ற வார்த்தைகள் கண்ணீரில் கலந்து வந்தன.

"வந்ததைக் காலாலே தள்ளினால்....?" என்றார் வைத்தி.

"நீங்க ஒரு நாளைக்கு மைனரைக் கூட்டிக்கிட்டு வரீங்க, ஒரு நாளைக்கு மகாராஜாவைக் கூட்டிக்கிட்டு வரீங்க, இன்னிக்குப் போலீஸ்காரரைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்களாக்கும். ஏன், என்ன தப்புச் செய்தோம்?" என்றாள் ஆத்திரத்தோடு.

"ஒண்ணுமில்லே வடிவாம்பாள். பெரியவங்க ஒரு பாட்டுப் பாடியிருக்கிறாங்க. 'நம்பன் அடியார்க்கு நல்காத் திரவியங்கள், வம்புக்காம், பேய்க்காம், பரத்தைக்காம்' என்று. அதாவது கெட்டவர்கள் பணம் தாசிகளால் பறிக்கப்படும். அல்லது வழக்கில் பறிபோகும் என்று சொல்லி இருக்காங்க."

"ஏது, ஐயா வேதாந்தத்திலே இறங்கிப்பிட்டீங்க?"

"வேதாந்தமில்லே. மைனர் பணத்தை நீ பறிக்கணும்னு இருந்தது. ஆனால் நீ விட்டுட்டே. இப்போது அதைக் கோர்ட்டு பறிக்கப் போவுது. எந்தக் கடம்பவனம் பிள்ளை பிரிவிகவுன்சில் வரையில் போய், மைனர் எஸ்டேட்டைத் திருப்பி வாங்கிக் கொடுத்தாரோ, அதே கடம்பவனம் பிள்ளையாலே இன்னிக்கு அவுங்க எஸ்டேட்டே போயிடப் போறது."

வைத்தியின் குரலில் இருந்த சம்பிரமத்தைக் கேட்டவுடனே, அவள் பயந்தாள்.

"ஐயோ!" என்றாள்.

"ஏன், மைனர் குழந்தே என்ன குத்தம் செய்தது?"

"என்ன செய்ததா? இந்த வைத்தியை எதுத்துக்கிறவங்க யாராய் இருந்தாலும் சரிதான்...."

"நல்லவங்களா ஆயிடுவாங்க. அவ்வளவுதானே? ஆமாம், மைனரைப்பத்திப் பேசறமாதிரி எனக்குப் புத்தி சொல்றீங்களா?" என்றாள்.

"இனிமே, நான் ஏன் அம்மா, உங்களுக்குப் புத்தி சொல்லப் போகிறேன். நான் சொல்றதைக் கேட்டு நடந்த வரையிலே உங்களுக்கு நாற்பதாயிரம் ரூபாய் மிச்சம். என்னிக்குக் கேட்க மாட்டேன்னு சொன்னீங்களோ அன்னிக்கே உங்களை நினைச்சு ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டுட்டேனே...!"

"என்னாங்க வைத்தி பயமுறுத்துறீங்க?"

"பயமுறுத்தலே அம்மா, அதிலும் பெண் பிள்ளையைப் பயமுறுத்துவேனா? உண்மையைச் சொல்லறேன். இப்போது, இவர்கள் எல்லாம் எங்கே வந்திருக்கா தெரியுமோ?"

"எங்கே வந்திருப்பாங்க? மருமகப் பிள்ளைகிட்டே கல்யாணம் விசாரிக்க வந்திருப்பாங்க..."



"அதுதான் இல்லே. கேஸ் விசாரிக்க வந்திருக்காங்க; இந்த வீட்டைச் சோதனை போட அதிகாரத்தோடே வந்திருக்காங்க...!"

"ஏன்?"

"ஏனா? இந்த வீட்டுக்குள்ளே, நீங்க ஒரு குற்றவாளியை ஒளிச்சு வச்சிருக்கீங்க.."

"கொஞ்சம் புரியறாப்பிலே சொல்லுங்களேன்."

"உங்களுக்கு இந்த ஜன்மத்திலே புரியாது வடிவாம்பாம்மா, பட்டாத்தான் புரியும். காரைக்கால் நடேசன் உள்ளே இருக்கிறாரா?" என்று வைத்தி அதிகாரமாகக் கேட்டார். வடிவாம்பாள் திடுக்கிட்டாள்.

"என்னாங்க நடேசனா? அவரு என்ன, தோட்டுத் திருடா, வீட்டைச் சோதனை போடறதுக்கு?"

"அப்படி இல்லேம்மா, அவர்மேலே ஒரு பெரிய கேஸ். அவர் இந்த வீட்டுக்குள்ளே இருப்பாருன்னு இவாளுக்கு ஒரு சந்தேகம் இருக்கு. உள்ளே போய்ச் சோதனை போடலாமா?"

அதற்குள் வரதன் அங்கே வந்து சேர்ந்தான். "என்னாங்க, எதுக்காகச் சோதனை போடறீங்க? ஒருத்தரையும் உள்ளே விடமுடியாது."

"முட்டுக்காரரே, உனக்கு வாசிக்கத் தெரியுமா?"

"ஏன் பாடப்போறீங்களா?"

"படிக்கத் தெரியுமாங்கறேன்."

"உங்ககிட்டே வந்து பாடம் கத்துக்கப் போறது இல்லே."

"அப்படி நினைக்கடாதே! உனக்கும் ஒரு நாளைக்குப் பாடம் கற்றுக் கொடுக்கறேன். உனக்கு சொந்தத்திலே வீடு இருக்கா?"

"இருக்கு. ஆனால் உங்ககிட்டே வந்து விலை பேசப் போறது இல்லே."

"ஓய், கேட்கிறதுக்கு மாத்திரம் பதில் சொல்லுங்காணும். வீடு இருந்தால் வரி கொடுக்கிறியா?" உடனே வரதனுக்கு ஒரு கவலை வந்தது. 'நாலு, ஐந்து வருஷமாகத் தஞ்சாவூர் குச்சுக்கு வரி பாக்கியிருக்கிறதே, அதைக் கேட்கத்தான் வந்திருக்கிறாங்களோ' என்று நினைத்தான்.

"என்னாங்காணும், முழிக்கிறீர்? வரி கட்டினா ரசீது வாங்குவேல்ல. அந்த ரசீதைப் படிச்சுப் பாரு. அதிலே 'நீர் வசித்துக்கொண்டிருக்கும் வீடு'ன்னுதான் எழுதியிருக்கும். உனக்குச் சொந்தம்னு போட்டிருக்காது, தெரியுமா? எல்லோருடைய வீடும் வெள்ளைக்காரன் வீடு. ஒரு குற்றவாளியைக் காணும்னா, அவங்க யார் வீட்டிலேயும் புகுந்து தேடலாம்; என்ன மிஸ்டர் சந்தாமியான்! உள்ளே போய்ப் பாருங்களேன்" என்று சொன்னவுடனே, இன்ஸ்பெக்டர் சந்தாமியான், "வாங்க பாயி!" என்றார் வரதனிடம்.

"யாரைப் பார்த்தய்யா பாய்ங்கிறீங்க? எனக்கு வர கோபத்திலே நிசமாவே பாய்ஞ்சுடப் போறேன்" என்றான் வரதன்.

''அரே பாய்ன்னா நம்ப பாஷையிலே அண்ணன், தம்பின்னு அர்த்தம்...!''

''ஓஹோ! எங்க பாஷையில் 'பாய்'ன்னா, வீரம் அல்லது தூக்கம்னு அர்த்தம்.'' இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

''சரிதான்; உள்ளே வாங்க'' என்று சொல்லிக்கொண்டே சந்தாமியான் உள்ளே நுழைந்தார்.

போலீஸ்காரர்கள் அறை அறையாகத் தேடுவதைக் கண்டாள் வடிவாம்பாள். அதற்குள் ஊர் முழுவதும் அங்கே கூடிவிட்டது. அவளுக்கு மானமே போனதுபோல இருந்தது. 'போயும் போயும் தன் மகளை சண்முகத்துக்குக் கொடுத்தோமே. போகிற இடத்திலேயெல்லாம் சண்டை பிடிக்கிறானே, இல்லாட்டி சண்டையெல்லாம் இவன் வீட்டைத் தேடிக்கொண்டு வருகிறதே' என்று கலங்கினாள். அதற்குள் இன்ஸ்பெக்டர் சந்தாமியான் அவள் அருகில் நெருங்கினார்; ''இந்த .... தர்வாஜா கோலியே, முஜே தேக்னா சாஹியே...'' என்று ஓர் அறையைக் காட்டிக் கேட்டார்.

வடிவாம்பாள் மயக்கமே போட்டு விழுந்துவிடுவாள் போலிருந்தது. ''என்னமோ சொல்றாங்களே, என்ன?'' என்று நடுக்கத்தோடு கேட்டாள்.

''அவர் உங்களை ஒண்ணும் செய்யமாட்டார் அம்மா, கதவைத் திறங்க, உள்ளே பார்க்கணும்கிறாரு.''

''அங்கே சாமி படங்கள் எல்லாம் இருக்குங்க, அவரு பூட்சைப் போட்டுக்கிட்டு....''

''சரி, இன்ஸ்பெக்டர் சார், பூட்சை கழட்டிவிடுங்கோ.''

இன்ஸ்பெக்டர் கழட்டினார்; இதைப் பார்த்த வடிவாம்பாள் மேலும் நடுங்கினாள்.

''அந்த அறையிலே ஒண்ணுமில்லீங்க. எதுக்குப் பார்க்கணும்?'' என்று கெஞ்ச ஆரம்பித்தாள். சந்தாமியானுக்கு சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. வைத்தியும், 'நாம் நினைத்தபடி காரைக்கால் நடேசனை உள்ளேதான் வைத்துப் பூட்டியிருக்கிறார்கள்; அதனால்தான் கதவைத் திறக்கமாட்டேன்கிறாள்' என்று எண்ணினார்.

''என்னம்மா, நீங்க திறக்கிறேளா, இல்லே நாங்க....'' என்று கூறிக்கொண்டே, தன் கையிலிருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்தார் சந்தாமியான்.

''ஐயோ'' என்று அலறினாள் வடிவாம்பாள்.

''ஒண்ணும் செய்யாதீங்க, உங்களுக்கு எந்தக் கதவைத் திறக்கணும்? இந்தக் கதவைத்தானே, இது அவங்க....'' என்றாள் வடிவாம்பாள்.

''அப்படின்னா அவசியம் பார்க்கணும். ஒரு சமயம் கட்டிலுக்குக் கீழே ஒளிந்து இருந்தார்னா....? சாவியைக் கொடு. இல்லேன்னா பூட்டை



துப்பாக்கியாலே உடைச்சுடுவார்'' என்று வைத்தி அதட்டவே, வடிவாம்பாள் உடனே ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். அந்த அறைக்குள்ளே நுழைந்த இன்ஸ்பெக்டரும், வைத்தியும் ஆளைத் தேட வந்திருக்கிறோம் என்பதையே மறந்தார்கள்.

''என்னாங்க அப்படிப் பார்க்கறீங்க?'' என்றாள் வடிவாம்பாள்.

''இல்லேம்மா'' என்று சொல்லிக்கொண்டே கட்டிலுக்குக் கீழேயெல்லாம் தேடினார்கள். ஆரஞ்சுப் பழத் தோல்களும், வெற்றிலைக் காம்புகளும் அங்கு கிடந்தன.

அப்பொழுது ''என்ன வைத்திஜி! கட்டிலுக்கு கீழே யாரைத் தேடறீங்க?'' என்று கேட்டுக்கொண்டே, சண்முகம் உள்ளே நுழைந்தான். கூடவே மோகனாவும் வந்தாள்; உள்ளே நுழைந்த பிறகுதான் கதவு ஓரத்தில் மூன்று போலீஸ்காரர்கள் நிற்பதைக் கவனித்தான் சண்முகம்.

''அவர்கள் எல்லாம் சர்க்கார் மனிதர்கள். காரைக்கால் நடேசனைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்றார் வைத்தி மிடுக்காக.

இந்த வார்த்தை சண்முகத்தின் காதில் விழவே, அவனுக்குக் காதில் நாராசத்தை ஊற்றியதுபோல இருந்தது. 'நடேசன் காரைக்காலிலும் இல்லை, வெளிப்பாளையத்திலும் இல்லை. நேற்று சிக்கலுக்கு வருவதாகச் சொன்னவர் இங்கும் வரவில்லை. நண்பர் நடேசன் எங்கே போனார்?' என்று திகைத்தான்.

## இருபத்து நான்காம் அத்தியாயம்

# கலியாண வீட்டில் கரடி புகுந்தது!



வெள்ளமும், விதியும் இனம், இடம் பார்ப்பதில்லை. புதுப்பயிர், புதுக்கட்டடம், புதுவாழ்வு என்று வெள்ளத்துக்கு இரக்கம் தோன்றாது. பழைய கிணற்று நீரையும், அது கிணற்றைத் தூர்த்து அள்ளிக்கொண்டு போய் விடும். விதியும் அப்படித்தான்.

இன்று, சண்முகத்தின் வீட்டுக்கு வந்த வெள்ளம், இருந்த செல்வத்தையெல்லாம் அடித்துக்கொண்டு போனது மாத்திரமல்லாமல், அவர்கள் சந்தோஷத்தையும் அரித்துக் கொண்டு போய்விட்டது. நடேசனை அங்கு காணோம் என்பதற்காக வைத்தி சும்மா இருக்கவில்லை. தன்னுடைய கையில் இருந்த உத்தரவைக் காட்டி, மோகனாவுக்காக நடேசன் வாங்கிவந்து கொடுத்த வைரத்தோடு, அட்டிகை முதலிய பல நகைகளையும் ஜாபிதா போட்டு எடுத்துக்கொண்டு போய்விட்டார். ஆனால் சந்தேகத்தில் அள்ளிக்

கொண்டு போகும்போது, எது நடேசன் கொடுத்தது, எது அவர்கள் வாங்கியது என்று பார்க்க முடியுமா? அதிலும் வைத்தி பார்ப்பாரா? நடேசன் கொடுத்த நகைகளையும் தங்கையின்மேல் இருந்த நகைகளையும் அதிகாரிகள் முன்னிலையில் எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

நகை போனது ஒருபுறம் இருக்க, ஊரில் நாலு பேரைப் பஞ்சாயத்தாராக அழைத்துக்கொண்டு வந்து, அவர்கள் முன்னிலையில் அத்தனை நகைகளையும் கழட்டியதுதான் வடிவாம்பாளுக்குப் பிடிக்கவில்லை. அவள் அலறியே விட்டாள்.

நடேசனைக் காணோம் என்ற வருத்தத்திலே சண்முகம் எதைக் கொடுத்தாவது இந்த வம்பை ஒழித்துவிடத் தயாராக இருந்தான். அவனுக்கு நகை பெரிதாகத் தோன்றவில்லை. வாசலில் இருக்கும் இந்தக் கூட்டம் ஒழிந்தால் போதும் என்ற எண்ணம் ஒன்றுதான் அவனுக்கு மேலோங்கி இருந்தது.

மோகனாவோ, சித்திரப் பதுமை போலிருந்தாள். வாய் திறக்கவே இல்லை. கதவு மூலையில் இருந்தபடி ஒட்டியாணம், மூக்குத்தி, தோடு, பேசரி என்று முதல் நாள் எவ்வளவு அலங்காரங்கள் செய்துகொண்டு சென்றாளோ, அவ்வளவையும் அவள் கையாலேயே கழட்டிக்கொடுத்து விட்டாள். அவளுக்குப் பொன் நகை தேவையில்லை. புன்னகையே போதும். ஆனால் இன்று, அந்த நகையையும் அல்லவா வஞ்சம் கவர்ந்துவிட்டது! எதிர்பாராத விதமாகப் போலீசுடன் வந்து அவள் முகத்தில் மலர்ந்திருந்த புன்னகையையும் அழித்துவிட்டார் வைத்தி.

நகையைத் திருப்பி வாங்கிவிடலாம். நற்பெயரைத் திருப்பி வாங்க முடியுமா? இந்த நகைகள் கடத்தல் நகைகள் அல்ல, கைப்பணம் போட்டு வாங்கியவை என்பதை நிரூபித்துவிட்டால் கோர்ட்டார் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இந்த வைத்தியையும் ஒரு ஆட்டு ஆட்டி வைத்துவிடலாம் என்பது எல்லாம் சண்முகத்துக்குத் தெரியும். ஆனால் அப்பாவி தருமனுக்குத் தெரியுமா? அல்லது வந்த விருந்தினருக்குத்தான் அது தெரியுமா?

கல்யாணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் கதிகலங்கி நின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் பெட்டிகளைப் போலீசார் திறக்காமல் இருக்க வேண்டுமே என்றுதான் பயந்தார்கள். ஆளுக்கு ஒருவிதமாகப் பேசவும் ஆரம்பித்தார்கள். ''ரயிலுக்கு நேரமாச்சு'' என்றார் ஒருவர். இன்னொருவரோ, ''நாளைக்கு எனக்கு சேவுகம் இருக்கு'' என்றார் மற்றொருவரோ, ''தம்பி சந்தர்ப்பம் சரியில்லை, நான் பின்னாலே பார்க்கிறேன்'' என்றார். எல்லோரும் 'சண்முகத்தின் வீட்டைவிட்டு எப்பொழுது பிய்த்துக் கொண்டு வெளியேறலாம்; ரயில் கிடைக்காவிட்டாலும் பாதகம் இல்லை. நடந்தே போய் அடுத்த ஊரில் அரையணாவுக்கு மோரை வாங்கிக் குடித்துவிட்டுக் காத்திருந்து அடுத்த ரயிலில் ஏறிப்போய் விடலாம் என்றுதான் நினைத்தார்கள். ஒருவராவது சண்முகத்துக்கு உதவிக்கு வரவில்லை.



அவர்களால் என்னதால் உதவி செய்ய முடியும்? ஏற்கனவே அதிகப் படிப்பு இல்லாதவர்கள், பயந்தவர்கள், வம்பு வழக்குக்குப் போகத் துணியாத கிராமவாசிகள். ஒவ்வொருவருக்கும் சண்முகத்தின்மீது அனுதாபம் உண்டு. ஆனால் அந்த அனுதாபம் அவனுக்கு ஒருவித நன்மையையும் செய்ய முடியாது. வீட்டிலே இருந்த அத்தனை கூட்டமும் ஒரு நிமிஷத்தில் எப்படித்தான் பறந்து போயிற்றோ! காக்காய்க் கூட்டத்தின் மேல் கல் விழுந்தது போல, வைத்தி வந்து விழுந்தவுடனே, அத்தனை பேர்களும் பறந்துவிட்டார்கள். வீட்டிற்குள்ளேயே இப்படி யென்றால் வெளியே கேட்க வேண்டுமா?

''சே, அதிருஷ்டம் வந்தால் இப்படித்தான் அண்ணே வரும். 'ஓஹோ'ன்னு அடிக்கும். ஒரு நிமிஷத்திலே ஆளையே அடிச்சுவிட்டுப் போயிடும்!'' என்றது ஊர்வாய்.

''பேர் இருக்குதுங்கிறதுக்காக ரொம்ப ஆடிவிடப்படாது. அடக்கம் வேணும். ஒரு கல்யாணத்திற்கு இவன் இவ்வளவு செலவழிக்கலாமா? தலை கால் தெரியாமே துள்ளினான், இப்ப தடார் என்று விழுந்தான்'' என்றார் ஒன்றுவிட்ட சித்தப்பா ஒருவர்.

''சிக்கலை விட்டுட்டு யாரு தம்பி இதைத் திருவாரூரிலே போய்க் கல்யாணத்தைப் பண்ணச் சொன்னாங்க....?'' என்று திருவாரூரில் நான்கு நாளும் முதல் பந்தியில் சாப்பிட்டுவிட்டு வந்த சிலர் அன்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

இந்த உலகமே விசித்திரமானது. அது எப்பொழுது கூடிக் கொள்ளும், எப்பொழுது விலகும் என்பதை யாரும் கண்டுபிடித்த தில்லை. ஆனால், கூடவும் ஓடவும் அதற்கு நேரம் காலம் தெரியும் என்பதை மட்டும் எல்லோரும் அறிவார்கள்.

கல்யாண வீட்டில் கண்ணீர் பெருக்கெடுத்தது. சிரித்த முகம் எல்லாம் வெறித்திருந்தன. சமையல் கட்டில் பாதி சமையல் ஆகும் போதே கோட்டை அடுப்பை அணைத்துவிட்டார்கள். சாப்பிட ஆள் இருந்தால் தானே? சொத்து நஷ்டம், அவமானம், அபவாதம் ஆகிய மூன்றும் வந்து சேரவே, சண்முகம், வடிவாம்பாள், மோகனா மூவரும் ஏதோ கெட்ட கனாக் கண்டவர்கள் போல் திகைத்து நின்றனர்.

ஆனால், ஒரே ஒரு ஆத்மாவுக்கு மாத்திரம் இத்தனை கஷ்டத்துக்கும் காரணம் யார் என்பது நிச்சயமாய்ப் புரிந்துவிட்டது. அதை எண்ணி எண்ணி ஆத்திரம் பொங்கி வந்தது. அந்த ஆத்மா வேறு யாரும் அல்ல. ஸ்ரீமான் தருமண்ணன்தான். கடைசியில் வாயைவிட்டே கதறியும் விட்டான். ''அம்மா, நான் சொல்கிறேன் கேளுங்க. இத்தனை அலங் கோலத்திற்கும் காரணம் நீங்கதான்'' என்று வடிவாம்பாளைப் பார்த்து இரைந்தான் தருமன். ஏற்கனவே அழுது அழுது கலங்கியிருந்த வடிவாம்பாள், இந்த அவச்சொல்லைக் கேட்டவுடன் ஆத்திரம் கொண்டாள்.

''இந்தா ஒத்துக்காரரே, கல்யாணத்திலே எல்லா விமரிசையும் ஆயிடுச்சு. சண்டை ஒண்ணு ஏன் இல்லாமல் போக வேணும்னு பாக்கிறியா? நான் என்ன செய்தேன்? உங்க காரைக்கால் பக்கம்கூட நான் காலடி எடுத்து வைத்ததில்லே.''

''நான் அதைச் சொல்லலீங்க. பொண்ணும் மாப்பிள்ளையும் கோவிலுக்குப் போயிட்டு வரணும்னு நேத்திக்கே நான் சொன்னேன். தேசாதி தேசமெல்லாம் இருந்து இங்கே கோவிலைத் தேடிக்கிட்டு வராங்க. உள்ளூர்க்காரன் கோவிலுக்குப் போய் வரல்லேன்னா, சாமி சும்மா விடுமா?'' என்று இரைந்தான் தருமன்.

''நானா உங்க காலை விழுந்து கட்டிக்கிட்டேன், கோவிலுக்குப் போக வேண்டாம்னு?''

''நீங்கதானே அம்மா கல்யாணமெல்லாம் ஆகட்டும், ஒரு நாளைக்கு வெள்ளிக்கிழமையா பார்த்து அபிஷேகம் பண்ணிட்டு வரலாம்னு சொன்னீங்க? நீங்கதானே அம்மா புறப்படறப்போ தடுத்தீங்க?''

''ஆமாம், அதனாலே ஒண்ணும் குடி முழுகிப் போயிடலே.''

''உங்களுக்கு என்ன அம்மா தெரியும், எங்க ஊர் சாமியைப் பத்தி?''

''அதுதான் தெரியுதே. எங்க திருவாரூரா இருந்துன்னா, ஒரு பய எங்க வீட்டு வாசற்படியை மிதிக்கவிட்டிருக்குமா? சிக்கலிலே வந்து தான் சிக்கிக்கிட்டோம். சே, சே என்னமோ சாமியாம், பூதமாம். எல்லாம் தேங்காய் மூடிச் சாமி. அம்புட்டும் சமயத்திலே காலை வாரி விட்டுடுது. அந்தச் சாமிக்கு சக்தியிருந்தா இந்த அவமானம் வந்திருக்குமா? ஊர் சிரிக்குது. இருந்து, இருந்து ஒரு மகளுக்குக் கல்யாணம் பண்ணினேன். அது இந்த லட்சணத்திலே வந்து முடிஞ்சது.''

''தெய்வக் குத்தம் ஆவாதம்மா?''

''இந்தா ஒத்துக்காரரே, சும்மா கிட. தெய்வம் திருவுளம் என்கிறதெல்லாம் பொய். இல்லாட்டி என்னைக் கொண்டுவந்து இந்தச் சிக்கலிலே மாட்டிவிடுமா? திருவாரூரிலே ஒரு அதிகாரி என் வீட்டு வாசற்படியை மிதிக்க இருப்பானா? இப்படிக் கழுத்து நகையெல்லாம் கழட்டிக் கொடுன்னு கேட்டிருப்பானா? கண் மாதிரி பொண்ணை வளர்த்து, இப்படிக் கத்தாழைப் புதரிலே கொண்டாந்து போட்டேன். எல்லாம் இந்தத் திமிர் பிடிச்சவனைச் சொல்லணும். பெத்தவ ஒருத்தி இருக்கிறாளேங்கற மரியாதை இருந்தாத்தானே? நான் அவனைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தைக் காலாலே நின்னா. அவன் திருட்டு நகையைப் போட்டுப் புரட்டுத் தாலி கட்டிவிட்டான்....''

''அம்மா!'' என்று அடித் தொண்டையில் அழைத்தாள் மோகனா.

''என்னம்மா அவுங்களை இப்படிப் பேசறீங்க. வெந்த புண்ணுலே வேலைச் சொருகிறீங்களே!'' என்று சீறினாள் மோகனா.



''ஆமா புள்ளே, வெந்தபுண்ணாம் வெந்தபுண்ணாம்! என் தலையிலே இப்படியா எழுதியிருக்கு? இதுக்கா உன்னைப் பெத்து வைத்தேனா? ஊர் கூடி நாலு பேர் பார்த்து மகிழ்ந்து பூமாலை போடறது போல், இப்ப ஊரெல்லாம் கேவலமா பேசுதே. அப்படியாவது இவனை நகைபோடச் சொல்லி யாரு அழுதாங்க? ஏன் திருட்டு நகையைப் போட்டு மோசம் பண்ணணும்? நான்தான் காலணாவுக்கு லாக்கில்லைன்னு தெரிஞ்சுக்கிட்டேனோ?''

''அம்மா, திருட்டுமில்லே, ஒண்ணுமில்லே. தப்பெண்ணம்....''

''என்னடி அண்ணன், அத்தைக்கு அண்ணன் மகன்? எனக்கு அன்னிக்கே சந்தேகம். இவ்வளவு நகை போடறானே, இவன் இட்டேசா னான்னு பார்த்தேன். சரியாப் போச்சு! நடேசனாம். இந்த யாரு புள்ளே கூட்டுச் சேர்ந்துன்னா, இனம் பார்த்துச் சேரணும்.''

தன் தாய் பேச்சு வாக்கிலே தன்னைத்தான் குத்திக் காட்டுகிறாள் என்பதை மோகனா அறிந்தாள். அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

''நான் என்ன அம்மா தப்பா சேர்த்துட்டேன்?'' என்று கலங்கினாள்.

''உனக்கு அறிவில்லே. உனக்குத் தெரியல்லே உன் தப்பு. இது ஒரு தானோடு போகிறதில்லே. உசிரு உள்ள மட்டும் கூடவே இருக்கிறது. ஆளைப் பார்த்து, குணத்தைப் பார்த்து, அவன் பழக்க வழக்கத்தைப் பார்த்து....''

''என்ன அத்தே, மாப்பிள்ளையைப்பத்தி இன்னும் திருப்தி ஏற்படலே போலிருக்கு?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் சண்முகம்.

அந்த ஆத்திரத்தில்கூட வடிவாம்பாள் மருமகனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தாள். தூண் மறைவில் நின்று கொண்டாள். ''நான் உங்களைப்பற்றி ஒண்ணும் சொல்லலியே'' என்று ஒரு முழுப்பொய்யை, முகத்தில் மாறுதல் இல்லாமல் உரைத்தாள்.

''என்னமோ விதேகிதத்தைப்பற்றிச் சொல்லிக்கிட்டிருந்தீங்களே?''

''என் தலையெழுத்து. நான் சொல்லிக்கிட்டிருந்தேன்.''

''சும்மா சொல்லுங்க, அத்தே.''

''அந்தத் தம்பி, காரைக்கால் பிள்ளையைத்தான் சொல்றேன். அதுக்குக் கொஞ்சமாவது அக்கறை இருந்துச்சுன்னா இப்படி உங்களை இக்கட்டிலே மாட்டிவிடுமா? எங்கேயோ திருடி எங்கேயோ கொண்டாந்து கொடுத்துடுத்துன்னு சொன்னேன்.''

''அத்தே, என்னைத் திருடன் என்று சொல்லுங்கள். அவரைப் பற்றி நீங்கள் அப்படிப் பேசக்கூடாது!''

''ஏன் பேசக்கூடாது? அவரைப்பத்திப் பேசக்கூடாது, உங்களைப் பத்திப் பேச முடியாது. பின்னே யாரைப்பத்தித்தான் நான் பேசறது? பத்து வருசமா, நான் பாடுபட்டதெல்லாம் வீணாகிப் போச்சே! குருவி கூடு

கட்டினாப்பலே நான் சேர்த்து வச்ச பெருமை எல்லாம் நாசமாய்ப் போச்சே! மோகனா வீட்டுக்குப் போலீஸ் வந்ததாம், ஜப்தி பண்ணினாங்களாம், திருட்டுச் சாமானையெல்லாம் அள்ளிக்கிட்டுப் போனாங்களாம்னு ஊரெல்லாம் பேசறாங்களே. அதுக்கு என்ன பதில் சொல்வேன் தம்பீ?'' என்று ஆத்திரம் பொங்கக் கண்ணைத் துடைத்தாள் வடிவாம்பாள்.

''அம்மா, அவுங்களுக்கு இல்லாத அவமானம் எனக்கு மட்டும் வந்துவிட்டதா?''

''ஆமாடி, இந்த மட்டும் ஆஸ்தியிலே பங்கு வராட்டியும் அவமானத்திலேயாவது பங்கு கிடைக்குதில்லை?''

மோகனாவுக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது. ''அம்மா, நீங்கள் இந்த மாதிரிப் பேசிக்கொண்டிருந்தால் நான் பொல்லாதவளாக இருப்பேன்'' என்று அடக்கினாள் மோகனா.

''நீ இனிமேலா பொல்லாதவளாகப் போறே? என்னிக்கு என் வார்த்தையை மதிக்கலியோ அன்னிக்கே நீ பொல்லாதவளாகி விட்டாயே. மானம், வெட்கத்துக்குத்தானேடி மனிசன் துணி கட்டுகிறான்? இந்த ஊரெல்லாம் சிரிக்குதே! அதுக்கு என்ன சொல்றீங்க, புருஷனும் பெண்சாதியும்? இனிமேல் இந்த ஊரிலே ஒரு நிமிஷம்கூட என்னாலே இருக்க முடியாது. நான் இப்பவே திருவாரூருக்குப் புறப்படணும். ஆமா சொல்லிட்டேன்'' என்று ஆடினாள் வடிவாம்பாள்.

''அவங்களுக்கு ஒரு வண்டியைக் கட்டி, திருவாரூருக்கு அனுப்புங்க'' என்றாள் மோகனா.

இந்த வார்த்தை காதில் விழுந்தவுடனே வடிவாம்பாளுக்கு எங்கிருந்துதான் அந்தக் குரலில் அத்தனை கனிப்பு வந்ததோ, எங்கிருந்துதான் கண்ணீர் பொங்கியதோ! ''அடியே! பெற்றவளுக்குக் கொடுக்கிற மதிப்பா இது? வண்டியைக் கட்டிவிடச் சொல்றியோ? போறேண்டி, திருவாரூர் எதுக்கடி எனக்கு? தேவலோகத்துக்கே போயிடறேன்'' என்று சொல்லிவிட்டு ''ஹோ'' என்று அலறினாள் வடிவாம்பாள்.

''அம்மா, சும்மா இருங்கம்மா. வந்த அவமானம் போதும், நீங்க வேறே அழுது எம்மா ஊரைக் கூட்டறீங்க?''

''ஆமாண்டி. அவங்க அள்ளிக்கிட்டுப் போனது தேவலையில்லே. நான் அழுகிறதுதான் கேவலமா போச்சோ? ஒவ்வொரு நகையா பார்த்துப் பார்த்துப் பக்கத்திலிருந்து செஞ்சேண்டி. இப்ப அவ்வளவை யும் அள்ளிக் கொடுத்துவிட்டு நிக்கிறியே. கல்யாணத்துக்கு இரவல் நகை போடப்படாது. அடுத்த நாளே கழட்டிக் கொடுத்துட்டு உருவின கோலமாக நிக்கப்படாதுன்னு நினைச்சு, அவ்வளவு நகையும் சொந்தத்திலே செஞ்சேனே. என் கையை எரியுற நெருப்பிலேதான் பொசுக்கணும், உனக்கு நகை செஞ்சேன் பாரு!'' என்று மேலும் அழுதாள் வடிவாம்பாள்.



''அதைப்பத்தி என்னம்மா? பிறக்கிற போதே நகையைப் போட்டுக்கிட்டுத்தான் பிறந்தேனா? நகை நாளைக்கே வந்து வராவிட்டாலும் பாதகமில்லே. இந்த ஒரு நகை தங்கினால் போதும்'' என்று சொல்லிக்கொண்டே, தன் கழுத்திலிருந்த திருமாங்கல்யத்தைத் தொட்டு, ஆத்திரத்தில் கூறினாள் மோகனா.

''நல்ல வேளை, அதையும் கழட்டிக் கொடுன்னு கேட்காம இருந்தானே. ஆத்தே! என் வயிறு பத்தி எரியுதடி. ஐயோ! எனக்கு மயக்கம் வருதே! போதும் மோகனா, போதும். இந்தாங்க மருமகப் புள்ளே புறப்படுங்க. இனி இந்த வீட்டிலே ஒரு நிமிஷமும் இருக்கப் படாது. எந்த நேரத்திலே சிக்கலுக்கு வந்தோமோ நேரம் சரியில்லே'' என்று அவள் அழுதாள். இதுவரையில் அவளுடைய கோபத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சண்முகத்தால் இப்பொழுது அவளுடைய வருத்தத்தைப் பார்க்க முடியவில்லை. அவளுடைய பேச்சுகளில் அவனுக்கு பேதைமைதான் தெரிந்தது. கோபமும் வரவில்லை.

''ஆகட்டும் அத்தே, சாயங்காலமே உங்களைத் திருவாரூரிலே கொண்டுபோய் விட்டுட்டு, நான் மறுபடியும் காரைக்காலுக்குப் போயிட்டு வரேன். அண்ணனை எங்கேன்னு பார்க்கிறேன்.''

''இந்தாங்க தம்பி, அந்த ஆளை நீங்க தேடிகிட்டுப் போகவேபடாது. அந்த ஆளை போலீஸ் தேடுது. உங்களையும் பிடிச்சவச்சாங்கன்னா?''

''என்னம்மா புரியாமல் பேசறீங்க, அவங்களை எதுக்காகப் பிடிக்கிறாங்க?''

''இந்தா, மோகனா, உனக்கு வைத்தியைத் தெரியாது. அது ஒரு வழலைப் பாம்பு. அவரு எதையும் செய்வாரு. என் மேலே ஆணையாகச் சொல்லறேன். நடேசனைத் தேடிக்கிட்டுப் போறதுங்கிற எண்ணமே வேண்டாம்.''

பாவம், அவளுக்கு மருமகன்மேல் கோபம்தான். ஆயினும் மருமகனை விடவும் மனமில்லை. மனதை அடக்கவும் திடமில்லை. இவ்வாறு திண்டாடினாள் வடிவாம்பாள்.

''சரி, அதைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு? உங்களைத் திருவாரூருக்குக் கொண்டுபோய் விட்டுட்டுத்தானே போகப் போகிறேன்?''

''இல்லை, மருமகப்பிள்ளை! நம்ப திருவாரூருக்கு இப்பொழுது போகப்படாது. விடியற்காலையில் நாலு மணிக்கு வண்டியைக் கொண்டாறச் சொல்லுங்க. ஒருவர் முகத்திலேயும் முழிக்காமே திருவாரூர் போயிடறேன்'' என்று வடிவாம்பாள் அடம் பிடித்தாள்.

ஆமாம், அன்றிரவு மூன்று மணிக்கு அவர்கள் வண்டி திருவாரூருக்குப் புறப்பட்டது. எப்பொழுதும் இரவில் வழிப் பயணத்திற்கு நடுங்கும் வடிவாம்பாள், ''திருடன் வந்து அடித்தால்தான் என்ன? நகைதான் இல்லையே, நம்மைத்தானே கொல்லப் போறான், கொல்லட்டும்'' என்று விரக்தியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறினாள்.

# புண்ணுக்கு மருந்திடலாம்; புத்திக்கு மருந்தேது?



ஐம்பதினாயிரம் ரூபாய் சரக்கு பிடிபடப்போகிறது என்றவுடனே அங்கிருந்த அதிகாரிகள் கொண்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஒவ்வொருவரும் இதன் மூலம் உத்தியோக உயர்வை எதிர்பார்த்தார்கள். தங்கள் கடமையைச் செய்வதில் அவர்களுக்கு இருந்த ஆவலில், புகார் சொல்பவர் யார் என்றும் அவர்கள் கவனிக்கவில்லை. வீட்டைச் சோதனையிடவும், சந்தேகப்பட்ட நகைகளைப் பறிமுதல் செய்யவும், வைத்தி க்ஷண நேரத்தில் உத்தரவு வாங்கிவிட்டார். ஆனால் இன்ஸ்பெக்டர் சந்தாமியானுக்கு மாத்திரம் இவரை நம்பிப் புறப்படுகிறோமே என்ற சந்தேகம் சிறிது உண்டு. சிங்கபுரம் மைனர் வீட்டிலே, மைனர் அவர்கள் வாயாலேயே அந்த அட்டிகை நடேசன் கொண்டுவந்த சரக்குத்தான் என்று சொல்லியதைக் கேட்ட பிறகு சந்தாமியானின் சந்தேகங்களும் பறந்தன. நகையைப் பறிமுதல் செய்த ஆனந்தத்தில் வைத்தியின் தாளத்திற்கு அவர் ஒத்துப் பாடினார். தன்னைக் கடம்பவனம் அடிக்க வரவேயில்லை என்பது அவருக்கு ஐயமறத் தெரிந்தாலும் வைத்தி வண்டியைத் திருப்புவது போல் கேசைத் திருப்பியவுடன், அவருக்கும் சிறிது அதிர்ச்சி ஏற்பட்டது. ஆளையும் தன் எல்லையிலேயே பிடித்துவிட வேண்டும் என்ற அக்கறையில்தான் சிக்கலில் சோதனைக்கும் ஏற்பாடு செய்தார். பலனில்லை. சிக்கலிலிருந்து திரும்பி வண்டியில் வரும்போது, ''என்ன சார், அந்த ஆளு எங்கே போயிருப்பார்?'' என்று கேட்டார் சந்தாமியான்.

''என்னைக் கேட்டால் பேசாமல் இந்த பார்டர் முழுக்க கோழிக்கிடாப்புக்கு வலை அடிக்கிற மாதிரி கத்தி வலைபோடச் சொல்லுங்க. அப்பத்தான் இந்தக் கள்ளக்கடத்தல் வேலை எல்லாம் நிற்கும்.''

''அது இன்னிக்கு ஆகாதே சார். இப்ப எங்கே போனால் ஆளைப் பிடிக்கலாம், சொல்லுங்க!''

''என்ன சார், உங்களுக்குப் பொருள் இருக்கிற இடத்தைக் காட்டியாச்சு. வாங்கியும் குடுத்தாச்சு, ஆளையும் நானே காட்ட முடியுமா? ஆமா, எதுக்கு இப்படிப் பறக்குறீங்க, ஆளு ஆளுன்னு. ஆளுக்கு வால்யூ அதிகமா, வைரத்துக்கு வால்யூ அதிகமா?''



''வைரம்தான் சார்!''

''பின்னே விடுங்கோ. பேசாமல் போய்த் தூங்குங்கோ...''

''தூங்கவாவது சார், ஆளைப் பிடிக்காட்டி 'பிளாக் மார்க்' வந்துடுமே.''

''மிஸ்டர் சந்தாமியான், வைரத்திலேதான் பிளாக் மார்க் இருக்கப்படாது. ஆளுக்கு பிளாக் மார்க் வந்தா கவலைப்படாமல் துடைச்சுடலாம். நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்தால் போறாது. ஆசாமி காரைக்காலுக்குள்ளே போயிட்டான்னா, உங்களாலே பிடிக்க முடியாது. பிடிக்க அதிகாரமும் கிடையாது. ஆனதினாலே காரைக்கால் உள்ளே நடேசன் போகாமே காவல் காக்க வேண்டியது உங்க டூட்டி.''

''ஒவ்வொரு போஸ்டிலும் என்னுடைய ஆளு இருக்குது. என்னுடைய ஒவ்வொரு சி.ஐ.டிக்கும் அவரைத் தெரியும்.''

''பின்னே எப்படித்தான் இப்ப அந்த மனுஷன் மறைஞ்சுட்டான்?''

''வெளிப்பாளையத்திலேயே அவருக்கு இன்பெர்மேஷன் போயிருந்துன்னு நினைக்கிறேன் சார். ஆதமி உஷாராயிட்டான். நம்ம கண்ணிலே அகப்படப்படாது என்கிறதுக்காக ஆசாமி மறைஞ்சு இருக்கான்.''

''யாரு இன்பர்மேஷன் குடுத்திருப்பா? நானோ உம்ம கூடவே இருக்கேன்?''

''உங்களைச் சொல்வேனா சார்.''

''சொன்னாலும் சொல்லுவீங்க சார், காரியம் ஆயிடுத்துல்லே.''

''சேச்சே முதல்லே அவரை மடக்கிவிட்ட பிறகு, சிங்கபுரம் போயிருக்கணும் சார்.''

'போங்காணும். அவரைப் பிடிச்சு இருந்தா சிங்கபுரத்துக்கே போயிருக்க முடியாது' என்று வைத்தி மனதில் நினைத்துக்கொண்டார்.

மாமரத்தில் கல் எறிபவன் போலத்தான் வைத்தி எறிந்தார். கல்யாணச் சந்தடியில் நடேசன் கொண்டுவந்து கொடுத்த பரிசை வேறு யாருமே சந்தேகப்பட்டிருக்கமாட்டார்கள். ஆனால் வைத்தியின் கிரிமினல் கண்களுக்கு மாத்திரம்தான் அதற்குள் ஒரு பாயிண்ட் இருப்பது தெரிந்தது. இன்று அதில் அவருக்கு வெற்றி. தான் நினைத்தபடி சிங்கபுரத்தை ஆட்டி வைத்துவிட்டார். சண்முகத்தையும் சும்மா விடவில்லை. இலங்கையில் எந்தக் கைகளால் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தாரோ, அதே கைகளால் இன்று சொத்துகளை அள்ளி வந்துவிட்டார். இனி, போலீசார் பாடு அவன் பாடு.

அத்தனை பெருமிதங்களும் சேர்ந்த பிறகு, அவருடைய ஆனந்தத்தைக் கேட்க வேண்டுமா? சந்தாமியானுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, திருவாரூர் 'டிராவலர்ஸ் பங்களா'வுக்குள் புகுந்தார் வைத்தி. சந்தோஷத்தில் தன் சட்டையைக் கழட்டினார். அப்பாடி என்று

கட்டிலில் சாய்ந்தார். உடனே ஐயோ என்று அலறினார். ஆம், அவரை அறியாமல் முதுகிலே ஒரு வலி உண்டாயிற்று. புழுப்போல் துடித்தார். இவர் அலறியதைக் கேட்டவுடனே, வாசலில் இருந்த காவற்காரன் உள்ளே ஓடிவந்தான். "என்ன, என்ன?" என்று கேட்டான்.

"என் முதுகைக் கொஞ்சம் பாரு!" என்றார் வைத்தி. அவன் பார்த்தான். அவர் முதுகிலே ஆறு அங்குல நீளத்திற்குச் சூடு போட்டது போலக் கடம்பவனம் பிள்ளையின் கம்புக் காயம் இருந்தது. தோல் உரித்திருந்தது.

"படுபாவிப்பயல்! யாரோ அடிக்க வெளுத்துப்புட்டானுங்களே!" என்று சொல்லிக்கொண்டே, காவற்காரன் அதன் மேல் கையை வைத்தான். வைத்திக்கு இன்னும் வலித்தது. ஆனால் அதைக்காட்டிலும் காவற்காரனின் அநுதாபம் அதிகமாக வலித்தது.

"யாரு அடிச்சாங்க எசமான்?" என்றான் காவற்காரன்.

"சரிதாண்டா, நீ உன் வேலையைப் பாருடா!" என்றார் ஆத்திரத்துடன் வைத்தி.

"சும்மா விடப்படாதுங்க. வலிப்புக் காளைக்குச் சூடு போட்டாப்பிலே ஒரு சாணுக்கு இழுத்துப்புட்டானுவளே! எவன் செஞ்சது சொல்லுங்க! இப்பவே நம்ம தெரு ஆளுங்களையெல்லாம் கூட்டிக்கிட்டுப் போய் அவன் உசிரையே...."

"டே! டே! டே! .... அடிக்கவாவது மண்ணாங்கட்டியாவதுடா! வண்டி குடை சாஞ்சு போயிடுத்து. முதுகிலே கூட்டுக் கம்பு அடிச்சுடுத்து...." என்று அவனிடம் பொய் சொன்னார்.

"எந்த மடப் பயலுங்க வண்டி ஓட்டினவன்? ஏதாவது மருந்து போட்டீங்களா?"

"என்ன மருந்து போடுவே?"

"கொஞ்சம் புளியைக் கொதிக்க வச்சுப் பூசறேனுங்கே."

"சீச்சீ, எரியும்டா!"

"இதோ போய் டாக்டரை வேணா கூட்டிக்கிட்டு வரேன்."

'வேண்டாம், உனக்குச் சொன்ன சமாதானத்தை அவருக்கும் சொல்லிக்கொண்டு இருக்கணும்....' என்று எண்ணினார் வைத்தி. "நல்ல வெந்நீரைப் போடு. குளிச்சாப் போதும்" என்று உத்தரவு கொடுத்தார்.

காவற்காரன் நல்லவன். பாவம் பரிதாபம் என்று எண்ணி உப்பை முடிந்து வெந்நீரிலே நனைத்து, அந்தத் துணியை ஒத்தடம் போடுவதற்காக முதுகிலே வைத்தான். புண்ணிலே உப்புப் பட்டவுடனே வைத்தி 'அம்மா' என்று அலறினார். ஆம், அவருடைய முதுகுப் புண்கூட அவருக்குத் தெரிந்தது. ஆனால், அவரால் பிறர் நெஞ்சத்தில் ஏற்பட்ட புண்கள் அவருக்குத் தெரியவில்லை.



புண் எரிய ஆரம்பித்தது. 'ஐயோ' என்று முதுகைப் புரட்டிக் கொடுத்தார். அவரை அறியாமல் அவர் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தது. தன் கண் கலங்கியவுடனே, தன் எதிரில் தங்கத்தைக் கழுட்டிக் கொடுக்கும்போது, மோகனா கலங்கி நின்ற காட்சியும், வடிவாம்பாள் கண்ணீர் விட்டதும் அவருக்குத் தோன்றின.

'நமக்கு என்ன வந்தது? நாம் ஏன் இவர்களைப் பாடாய்ப் படுத்துகிறோம்? மதன்பூர் மகாராஜா எங்கேயோ வடக்கே உள்ளவர். அவர் திருவாரூரில் வந்து தங்கப் போகிறாரா? தேன் தமிழில் உரையாடப் போகிறாரா? அல்லது இந்த வைத்தியைத்தான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றப் போகிறாரா? நாமும் தமிழன். சண்முகம் தமிழ் நாட்டுக்கே பெரிய கலைஞன். வீணில் இவர்களை அவரிடம் காட்டிக் கொடுத்துவிட்டோமே' என்ற எண்ணம் அவருக்கு வரவில்லை. அதற்கு மாறாக, தன்னை மதிக்காமல், தனக்குத் தலை வணங்காமல் இருக்கும் மோகனா, சண்முகம் இருவரும்தான் இந்த வலிக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று துடித்தார். இரவே சென்னைக்குப் போய் நாளையே வக்கீலைப் பார்க்கவேண்டும் என்று முடிவு செய்தார்.

139563
484 2707

## இருபத்து ஆறாம் அத்தியாயம்

# எரிமலை குமுறினும் இடம் மாறாத இதயமோ?



**வா**ழைத்தண்டு விளக்கிலே பால் வெளிச்சப் பல்பு என்று ஒன்று இருக்கிறது. இது உள்ள இடங்களில் இரவு பகல் வித்தியாசம் தெரியாது. மாறுதல் இல்லா வாழ்வு மண் போலாகிவிடும். உழைப்பும் களைதீர்தலும் பகல் இரவு போன்றவை. சிலர் வீட்டையும் ஆபீசாக்கிக்கொண்டு விடுவார்கள். சட்டையும் சூட்டும் போட்டுக் கொண்டு, வீட்டில் இருப்பார்கள். எழுதுவதற்குப் பதிலாக மேஜையில் சாப்பிடுவார்கள். வேலையாள் சமைப்பார். வேறோர் ஆள் பரிமாறுவார். 'காலிங் பெல்லை'த் தட்டினால்தான் காப்பி வரும். அத்தனை ஆபீஸ் தொல்லைகளும் அவர்கள் வீட்டிலேயும் இருக்கும்.

அவர்களுக்கு அலுவலகம், வசிக்கும் வீடு என்ற வித்தியாசங்களும், ஏற்றத் தாழ்வும், இன்ப துன்பமும் என்னவென்று தெரியவே தெரியாது. ஆனால் சிலரோ, ஆபீசிலிருந்து வீடு வந்தவுடனே சட்டையைக்

சூட்டுவார்கள். அதை ஆணியில் மாட்டிவிட்டு, வெறும் தரையில் உட்காருவார்கள். குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவார்கள். அவர் வரவுக்காகக் காத்திருந்த மனைவி ஒரு கடலை உருண்டையைக் கொண்டுவந்து வைப்பாள். அந்த ஒரு கடலை உருண்டையை விண்டும் போதே உவகை நெஞ்சை அள்ளும். அதைத் தின்றுவிட்டு அரைக் குவளை தண்ணீர் குடிப்பார். ஆஹா, அந்த ஆனந்தத்தை என்னவென்று சொல்லுவது? அவர்கள்தான் வாழப் பிறந்தவர்கள். அவர்கள்தான் இல்லறத்தின் இன்பத்தை அறிந்தவர்கள்.

வீடு என்ற சொல்லுக்கே 'கவலைகளில் இருந்து விடுபடுதல்' என்றுதான் பொருள்.

வடிவாம்பாளுக்கு இன்று திருவாரூர் வீட்டில் காலடி வைத்ததும் கவலை தொலைந்து நிம்மதி ஏற்பட்டது. பெட்டியைத் திறந்தாள். ஒரு ஜோடி தோட்டையும் இரண்டொரு நகைகளையும் எடுத்தாள். மோகனாவிடம் கொடுத்து, "இந்தா, காதை மூக்கை மூளியா வச்சுக்கிட்டு இருக்காதே!" என்று, தானே தன் மகளுக்குப் பூட்டிவிட ஆரம்பித்தாள்.

அவள் வயது முதிர்ந்தவள். கஷ்டம் சுகம் தெரிந்தவள். ஆதலால் வீட்டுக்கு வந்தவுடன் மனதை அடக்க முடிந்தது. ஆனால் மோகனா, சண்முகசுந்தரம் இருவருக்கும் மனதில் இருந்த துக்கம் வீட்டுக்கு வந்ததும் அதிகம் ஆகியது. இருவர் மனதிலும் கல்யாணமான ஒரு வாரத்திற்குள் இத்தனை சோதனைகள் வந்துவிட்டனவே என்று வருத்தம் தாங்கவில்லை.

மோகனாவுக்கோ இல்லற வாழ்வு புதியது. வேர் பிடித்த பிறகு காற்றடித்தால் விழுந்தாவது வணங்கலாம். நட்டவுடன் புயல் வந்தால்? நேற்றுவரை அவள் இருந்த நிலைக்கும், இன்றைய நிலைக்கும்தான் எத்தனை வித்தியாசங்கள்.

பூ பிஞ்சாவது பூவுக்குத் தெரியாது என்பார்கள். ஆனால், புத்தி உள்ள பெண்ணுக்கு அது தெரியாமல் இருக்குமா? நேற்று, அவள் நவி மலர். இன்று, அவள் தலையில் சூட்டிய பூ. நேற்று அவள் சுதந்திரத்தோடு விளங்கினாள். இன்று, அவள் அவனுக்கு அடிமையாகிவிட்டாள். அடிமை என்ற வார்த்தையை உபயோகிப்பது சரியாயில்லை. அதிகாரியாகிவிட்டாள் என்றே சொல்லலாம். ஆனால், அதை உபயோகித்தால் மோகனா பொறுத்துக்கொள்ள மாட்டாளே! ஆதலால், இருவரும் ஒன்றாகிவிட்டார்கள் என்று சொல்வதே பொருந்தும்.

நேற்றுவரை அவளுடைய எல்லா பொறுப்பையும் தாயே கவனித்து வந்தாள். இன்றைக்குத் தானே கவனிக்கும் பல பொறுப்புகள் அவளுக்கு ஏற்பட்டன. தன் கணவன் முகம் வாடாமல் பார்த்துக்கொள்வது, அவன் ஒரு பொருளையும் தேடாமல் பார்த்துக்கொள்வது, எந்த நிமிஷமும் அவனை இன்முகத்தோடு இருக்கச் செய்வது ஆகிய அத்தனை பொறுப்புகளும் அவளுடையது. இவ்வளவும் பிறர் சொல்லிக்



கொடுத்து வரவில்லை. எந்த நேரத்தில் அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டாளோ, அந்த கணத்திலேயே இவைகள் அத்தனையும் அவளைத் தாமாகவே வந்து அடைந்தன.

பூவிலே தேன் வந்து அடைவது போல் புது மணப் பெண்ணின் மனதிலே பொறுப்பு உணர்ச்சிகள் எங்கிருந்து வருகின்றன? அவளுடைய நரம்புகளில் ஓடும் பண்பட்ட இரத்தமும் அவள் பிறந்த நாட்டின் பண்பட்ட சித்தமும் அவளைக் குல விளக்காக்கிவிடுகின்றன. இந்நிலையில் சண்முகத்தின் கவலை அவளுக்கும் கவலையை உண்டாக்கியது.

இன்று, திருவாரூரில் வந்து இறங்கிய பின்னும் அவன் மனம் வேதனையுடன் இருப்பதும், அடிக்கடி நடேசனை நினைத்துக்கொண்டு அவன் வருந்துவதும் அவளுக்கு வருத்தத்தை அளித்தன. 'நடேசன் கெட்டவர், அவர் ஒரு தவறு செய்து, சண்முகம், சிங்கபுரம் மைனர் இருவரையும் அதில் மாட்டி வைத்துவிட்டார். இப்போது தலை மறைவாகச் சென்றுவிட்டார்'' என்றுதான் வடிவாம்பாள் எண்ணினாள். ஆனால் மோகனாவுக்கு அந்த எண்ணம் வரவே இல்லை. 'அவர் ஒரு உத்தமர். என் கணவரின் வாழ்வில் அக்கறை கொண்டவர். நன்மையே செய்வார். உண்மையிலேயே இந்த நகைகள் 'கடத்தல் நகை'களாக இருக்குமானால் இவைகளை அவர் கொடுத்திருக்கவே மாட்டார்! இதில் வைத்திதான் புகுந்து ஏதோ விஷமம் செய்து இருக்கிறான். இதைத் தெரிந்துகொண்டுதான் நடேசன், எங்கேயோ புறப்பட்டுவிட்டார். அவர் எந்த நிமிஷமும் வருவார். இந்த இன்னலைக் களைவார்' என்ற நம்பிக்கையில் அவள் இருந்தாள்.

வரதன், தருமன் முதலியவர்களை எல்லாம் பல இடங்களுக்கு அனுப்பி, நடேசனைத் தேடிப் பார்க்கவும் செய்திருந்தாள்.

மோகனா எந்த விஷயத்தையும் எட்டி நின்று ஆராய்ந்து பார்ப்பவள். சண்முகமோ அப்படியல்ல. அவன் உணர்ச்சி வசப்பட்டவன். 'தன் உயிருக்கு உயிராக இருந்தவர், நான் கெடவிருந்த சமயத்தில்கூட தன்னைக் கெட வேண்டுமென்று வற்புறுத்தாது, தன்னை வாழ்வித்தவர். 'மைனர் தயவில் பிழைப்பது எனக்கு அகௌரவம்' என்று நான் நினைத்தேன். அதை அவர் புரிந்துகொண்டார். 'தம்பி, கவலைப் படாதிங்க. அவங்க செய்யறபடி செய்யட்டும். அதுக்காக நம்ப ஒன்றும் சபையிலே சோடையா போகப்படாது' என்று சொல்லி, அத்தனை நகைகளையும் அவராகவேதான் கொண்டுவந்தார். கல்யாணத்தின்போது எனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருவதற்காகப் பணத்தைத் தயாராக வைத்துக்கொண்டிருந்தார். ஆனால் நகைகளுக்கான பில்லை நான் கேட்டபோது ஒரு கைச்சாத்தும் அவர் தரவில்லையே!

'பின்னாலே இவ்வளவு ஆபத்து வருமென்று தெரிந்திருந்தால், இவைகளுக்கு ஒரு பில்லாவது வாங்கி நம்மிடம் தந்திருக்கமாட்டாரா?

அவர்மேல் குற்றம் இல்லாவிட்டால், அவர் ஏன் வீட்டில் இல்லை? என் சிக்கலுக்கும் வரவில்லை. ஒருவேளை என்மேல் கொண்ட அன்பிலே அவர்தவறிவிட்டாரோ? என்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காக, தன்னுடைய மானத்தை விட்டுவிட்டாரோ? எப்படியாவது சண்முகம் நன்றாக இருந்தால் போதும், நாம் தவறு செய்தாலும் பாதகமில்லை என்று அவ்வளவையும் காரைக்காலிலிருந்தேதான் கொண்டு வந்துவிட்டாரோ?'' என்பதை எண்ணியபோது அவன் கண்கள் இரண்டிலும் கண்ணீர் வடிந்தது. உள்ளூரப் புலம்பினான்.

'அப்படி இருந்திருக்குமானால், அவர் காரைக்காலிலேயேதானே இருப்பார். வீட்டை விட்டு வெளியேறவேண்டிய அவசியம் இல்லையே!' என்று யோசித்தவன், திடுக்கிட்டான். அவன் உடல் குலுங்கியது. உள்ளம் நடுங்கியது. 'நமக்குத் தெரியாமல் ஒருசமயம் அவரை வைத்தி பிடித்துவிட்டானோ?' என்பதை எண்ணிய பிறகுதான் சிறிது சமாதானம் அடைந்தான். 'இதிலே ஏதோ சூது இருக்கிறது. பிடித்திருந்தால் ஏன் நம் வீட்டில் தேடவேண்டும்? அவரை எங்கு போய்த் தேடுவது? சிங்கபுரம் மைனர் வீட்டுக்குச் செல்வோம். அவரையும் உதவிக்கு அழைப்போம்' என்று தீர்மானித்தான். 'ஆனால் அங்கேயும் வைத்தி அவமானத்தை உண்டாக்கிவிட்டானே! நான் எப்படி அவர் முகத்தில் விழிப்பேன்? அந்த மரகதத்துக்கு எவ்வளவு அன்போடு, நான் அந்த நகையை அளித்தேன்? என் அன்புக் காணிக்கையை அவள் கழுத்தில் அணிந்துகொள்ளவிடாமல் செய்துவிட்டானே அந்தப் பாவி! இனி அந்தச் சகோதரியின் முகத்தில் எப்படி விழிப்பேன்? ஐயோ.... அந்தப் பெண்ணுக்கு என்னால் எவ்வளவு அவமானம்!' என்று நினைத்தபோது அவன் உடல் எண்சாணும் ஒரு சாணாகக் குன்றியது.

'நான் சிங்கபுரத்திற்குப் போனால், அவர்கள் என்னை இன்முகத்துடன் பார்க்க விரும்புவார்களா? கடம்பவனம் பிள்ளை ஏற்கனவேயே பொல்லாதவர். என்னைப் பார்த்துவிட்டு, 'சீ, உன்னால் தான் எங்களுக்கு இந்த வம்பு வந்தது' என்று சொல்வாரேயானால் நான் எப்படி உலகத்தில் உயிர்வாழ முடியும்? இத்தனைக்கும் காரணம் என்ன? பாழும் பணம்!

'இந்தக் கலை விவகாரமே இப்படித்தான். இது பணத்துடன் கலக்கும்போது தரம் குறைந்துவிடுகிறது. பாட்டும் கூத்தும் பரதேசியின் சொத்து. அது பகவானுக்குத்தான் அர்ப்பணிக்கப்பட வேண்டும். இனி, நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தான்.

''நடேச அண்ணன் தவறு செய்யவே மாட்டார். நானும் தவறு செய்யவே மாட்டேன். என்றைக்குமே இந்தச் சண்முகம் நிமிர்ந்துதான் நிற்கப் போகிறான். இனி, இவன் யாருக்கும் பணியப்போவதில்லை. மானம், உயிர் இரண்டில் எது பெரியது என்று நிச்சயம் செய்யும் தருணம் வருமேயானால், அன்றைக்குச் சண்முகம் மானத்தையேதான் பெரிதாக



மதிப்பான், உயிரை அல்ல. இதை உலகம் அறிந்துகொள்ளும் நாள்வரும் வரட்டும். இதை வைத்தியும் தெரிந்துகொள்ளட்டும்'' என்று எண்ணியபோது, அவன் முகத்தில் அனல் காற்று வீசியது. புருவங்கள் துடித்தன. ஆத்திரம், கோபம் இரண்டும் அவனை பீறிக்கொண்டு எழுந்தன.

அப்பொழுது, 'நமஸ்காரம், சௌக்கியமா? கல்யாணமெல்லாம் ஆனாப்பிலே இருக்கு!'' என்று கேட்டுக்கொண்டே வைரக் கடுக்கன் ஆசாமி ஒருவர் உள்ளே நுழைந்தார்.

**இருபத்து ஏழாம் அத்தியாயம்**

## புண்பட்ட நெஞ்சில் புளியிட்டதே போல்



வற்றல் குழம்பும், சாதமும் சாப்பிட்டு விட்டு, அந்த இலையைத் தூக்கி வெளியே எறியும்போது, அதிலே ஒரு சிலர் கொஞ்சம் விளக்கெண்ணெயை நன்றாகத் தடவி வெளியிலே எறிவார்கள். இலை பளபள வென்று மின்னவேண்டும். இவர் நெய்யில் விளையாடி வருகிறார் என்று உலகம் எண்ண வேண்டும் என்பது அவர்கள் பண்பாடு. அதற்கு நேர்மாறாக உள்ள சிலர் தஞ்சாவூரில் உண்டு. எச்சில் இலையை எடுத்து வெளியே போடும்போது, அதிலே இரண்டு லாடு, ஜிலேபி, போளி கிடக்கவேண்டும். அதை எவரேனும் எடுத்துச் சாப்பிட வேண்டும் என்று எண்ணி அதில் போட்டி போட்டு விருந்து செய்யும் புண்ணியவான் பலர் அங்கு வாழ்ந்து வந்தனர். அதிலே ஒருவர் ஸ்ரீமான் ராஜாங்கம் அப்பண்ணராவ். அவர் குடும்பத்தைப்பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதை சொல்வார்கள். அவருடைய வீட்டில் இருந்த விளக்கு ஒன்றைப் பேரீச்சம் பழக்காரனிடம் போட்டுவிட்டார்களாம். நான்கு நாள் கழித்து, அந்தப் பேரீச்சம் பழக்காரனை ஒரு போலீஸ்காரர் பிடித்துக்கொண்டு வந்தார். ''ராயரே, உங்க வீட்டுத் தங்கக் குத்துவிளக்கை இவன் திருடிவிட்டான். விளக்கை உருக்கி விற்கப் போனான். அப்படியே பிடித்தோம். இந்தாங்க விளக்கு. உங்க விளக்குத்தானா?'' என்று குத்துவிளக்கைக் காட்டி, போலீஸ்காரர் கேட்டார். அப்பொழுது அப்பண்ணராவ் கூறினாராம்: ''இது எங்க வீட்டு விளக்குத்தான். ஆனால் எங்கள் வீட்டில் வெண்கலமாய்க் கிடந்தது. அவன் அதிர்ஷ்டம் தங்கமாகிவிட்டது.

அவனுக்கே இது சொந்தம். பசித்தவனுக்குப் பழம் விற்ற புண்ணியம்'' என்று சொல்லி, அந்தத் தங்கக் குத்துவிளக்கை அவனிடமே கொடுத்துவிட்டதாக ஒரு கதை சொல்லிச் சிரிப்பார்கள்.

இதிலிருந்து அவர் வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளையும் வாங்குவதற்குப் பலர் போட்டி போட்டார்கள். அவரும் சளைக்காமல் விற்றுக்கொண்டுதான் வந்தார். அவருக்கு எவ்வளவு ரூபாய் சொத்து இருக்கிறது, எவ்வளவு நிலம் இருக்கிறது, எங்கிருந்து பணம் வருகிறது, இவைகள் எல்லாம் அவருக்குத் தெரியாது. அக்கறையும் இல்லை. எது வந்தாலும், எது போனாலும் கவலையில்லை. அவருடைய குமாஸ்தாக்கள் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுவார். கொடுத்த பணத்தை வாங்குவார். இம்மாதிரியே செய்து, கிட்டத்தட்ட நானூறு வேலி நிலத்தைப் பல பேருக்குச் சாஸனம் செய்து கொடுத்துவிட்டார்.

அப்படியிருந்தும் இன்றைக்கும் அவருடைய ஆனந்த வாழ்வில் குறைவேயில்லை. அவருடைய வீடு எப்பொழுதும் திறந்தே இருக்கும். தஞ்சாவூரிலே எது பெரிய நாட்டு இலையோ, அந்த வீட்டுக் காரியஸ்தரால் அதுதான் வாங்கப்படும். வருஷம் முழுவதும், எத்தனை திருவிழாக்கள் உண்டோ, அத்தனை திருவிழாக்களும் அவர் வீட்டில் கொண்டாடப்படும். திடீரென்று ஒருநாளைக்கு அவருக்குப் புதிதாக ஒரு யோசனை தோன்றும். தஞ்சாவூரிலுள்ள சித்திரக்காரர்களை எல்லாம் கூப்பிட்டு, அவ்வளவு சுவர்களிலும் ஹனுமாரைப் போடச்சொல்லி, செங்காவியால் ராமநாமம் எழுதச் சொல்வார்.

விஷ்ணு திகம்பரர் என்ற மகாபாகவதர் அக்காலத்தில் பூத உடலுடன் வாழ்ந்துவந்தார். அவர்தான் 'ரகுபதிராகவ ராஜாராம்' என்ற திவ்ய நாமத்தை நாடு முழுவதும் பரப்பியவர். அவர் தஞ்சைக்கு வந்திருந்த சமயத்தில் அப்பண் ராவ் அவருக்கு அளித்த ஆதரவு, ராமனுக்கே அளித்த மரியாதை போன்றது. மகாராஷ்டிராவிலிருந்து நான்கு கோஸ்வாமிகள் வருவார்கள். ஒவ்வொரு கோஸ்வாமியின் காலக்ஷேபமும் அப்பண் ராவ் வீட்டில்தான் நடக்கும். நல்ல நாதஸ்வரமா, நல்ல வீணைக் கச்சேரியா, நல்ல நாட்டியமா, அப்பண் ராவ் வீட்டில்தான் பார்க்கவேண்டும். பசுவுக்கு வெந்நீர் போட்டு தண்ணீர் காட்டுவார். பாடகருக்கு பன்னீர் ஊற்றி நீராட்டுவார்.

இவ்வாறு இரவு பகல் எல்லாம் அவருடைய வீட்டில் கச்சேரி முழங்குவதைப் பார்த்து, தஞ்சாவூர் பையன்கள் ஒரு கதை கட்டியிருந்தார்கள். அப்பண் ராவ் ஜோஸ்யம் கேட்டாராம். அரண்மனை ஜோஸிடர் இவர் ஜாதகத்தைப் பார்த்துட்டு, ''நீ பகலில் சாகமாட்டாய், இரவில்தான் சாவாய். அதுவும் தூங்கும்போதே நிம்மதியாய் இறந்துவிடுவாய்'' என்று சொல்லிவிட்டாராம். அதிலிருந்து அப்பண் ராவ் அவர் தூக்கத்தையும் கெடுத்துக்கொண்டு எமன் தூக்கத்தையும் கெடுத்துவிட்டார் என்பார்கள்.



இது உண்மையோ பொய்யோ, கலையைக் காட்டிலும் தூக்கத்திலும், பக்தியைக் காட்டிலும் புகழிலும், கீர்த்தியைக் காட்டிலும் கேவலத்திலும் அக்கறை கொண்டவர்கள் கட்டிய கதைதானோ, நமக்குத் தெரியாது. அப்பண் ராவுக்கும் தெரியாது. சொந்த விவகாரத்தையே கவனிக்காதவர், இதைக் கவனிப்பாரா? அவர் எதையும் பொருட்படுத்துவது இல்லை. உல்லாச வாழ்க்கையைக் குறைத்துக் கொள்ளவே யில்லை. இரவு பகல் ஓய்வின்றிப் பாட்டும் கூத்தும், ஆட்டமும் ஆரத்தியும் அவர் வீட்டில் நித்தியோத்சவமாகவே நடந்து வந்தது.

அவருடைய காரியஸ்தர் மானோஜியப்பாதான் அன்றைக்குத் திருவாரூர் வந்து சேர்ந்தார். சண்முகசுந்தரத்தைப் பார்த்து அவர் 'நமஸ்காரம்' என்று சொன்னவுடனே, சண்முகம் ''வாருங்கள், என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

''மோகனாம்பாளைப் பார்க்க வேண்டும், அவாளை ஒரு கச்சேரிக்குக் கேட்க வேணும்னு வந்தோம்'' என்று அவர் கூறவே, சண்முகம், ''உள்ளே இருக்கிறார்கள். நீங்களே போய்ப் பார்க்கலாம்'' என்று அலட்சியத்துடன் கூறிவிட்டு, தன் கவலையில் ஈடுபட்டிருந்தான்.

அவர் உள்ளே கூடத்தில் நுழைந்தார். அவர் உள்ளே நுழைந்ததை இரண்டாங்கட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த வடிவாம்பாள், ''வாருங்கள், வாருங்கள்'' என்று வரவேற்றாள். அவரை உபசரித்து உட்கார வைத்தாள். சந்தனம் வெற்றிலை பாக்கு கொண்டு வந்து கொடுத்தாள். ''வாங்க, கல்யாணத்தின் போது, வரமுடியல்லியாக்கும். இந்தாங்க சந்தனம் எடுத்துக்குங்க. வாதா, ஐயாவுக்குச் சந்தனம் கொடு'' என்று பத்து வருஷம் பழகியவள் போல் பேசினாள்.

''கல்யாணம் ஆயிடுத்தே, எப்படி அபிப்பிராயம் இருக்குமோ, அப்படின்னு ஒரு சந்தேகம்.'' வடிவாம்பாள் உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

''ஏன், எதைப் பத்திச் சந்தேகம்?''

''இல்லே, தஞ்சாவூரிலே ஒங்க பெண் ஆடி ரொம்ப நாளாச்சு.'' வந்தவர் தஞ்சாவூர் என அறிந்தாள். ''இந்த வருஷம் நம்ப ராயர்வாள் வீட்டுலே மோகனா பாயி ஆடணும்னு ரொம்ப ஆசை.''

உற்சவக் கச்சேரி என்று சொன்னவுடனே, வடிவாம்பாள் முகம் சிறுத்தது. போயும் போயும் தேங்காய் மூடிக் கச்சேரியா என்று அவளுக்கு அலட்சியம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல்,

''எங்கேங்க, இப்போதான் கல்யாணமாயிருக்குது. வீட்டிலே எத்தனையோ வேலை'' என்று மழுப்ப ஆரம்பித்தாள்.

''அப்படிச் சொல்லப்படாது. நம்ப ராயர்வாள் இந்த உற்சவத்துக்காக, நாலு வேலி நிலத்தையே....''

''ஆமாமா. இல்லாட்டி பெரிய கோவிலாட்டமில்லே ஆயிடும். கோவில் இருக்கும், சொத்து இருக்காது. ஏதோ நாலு வேலி என்றாலும் வார நெல்லு நைவேத்தியத்துக்குப் போறுமே.''

''நெல் வரும்படியிலே இல்லை. நிலத்தையே விலை பேசி..... விட்டுத்தட்ட இருபதினாயிரம் ரூபாய் செலவு பண்ண வேணும்.''

''இருபதினாயிரம் ரூபாய் செலவு பண்றவங்க ஒரு கச்சேரிக்குப் போயும் போயும் ஒரு தேங்காய் மூடிதானா கொடுக்கணும்?'' என்று வாய் தவறிக் கேட்டே விட்டாள் வடிவாம்பாள்.

இதைப் புரிந்துகொண்ட அவர், ''அதைப் பத்தி ஒண்ணுமில்லே. உங்க பெண்ணுக்குக் கல்யாணம் ஆனவுடனே, நம்ப ராயர் வீட்டிலே தான் முதல் கச்சேரி நடத்தணும்னு பெயர் இருக்கணும். மத்தவங்களுக் கெல்லாம் இப்ப இங்கே வரவே பயம்'' என்றார்.

''பின்னே, நீங்க சொல்றது நிஜம் இல்லீங்களா? இங்கே யாரு வந்து துணிந்து கேட்க வருவாங்க. ராயர் வீடுன்னா சும்மாவா?''

''பின்னே, இந்தக் கச்சேரிக்கு உங்களுக்கு சம்மதந்தானா?''

''என்னாங்க, இப்படிக் கேட்கிறீங்க? சம்மதம்னு நான் எப்படிச் சொல்ல முடியும்? நான்தான் ஆரம்பத்தில் வேலை அதிகம் இருக்குன்னு சொன்னேன் அதுவும் தவிர, முன் மாதிரி இப்ப அதிகக் கச்சேரிகள் ஒத்துக்கிறதில்லே. ஏதோ மாசத்துக்கு நாலு கச்சேரி. அதுவும் அவசியமா வேணுங்கிறவங்க சொன்னாத்தான்.''

''அது ரொம்ப நியாயம், நியாயம்.''

''பாருங்க, உங்ககிட்டே சொல்றதுக்கு என்ன? மாப்பிள்ளை கிட்டே போயி அடிக்கடி கச்சேரின்னு சொல்றது அவ்வளவு நல்லா இருக்காது. அவங்க பணத்தை அள்ளிக் கொடுக்கக் காத்துக்கிட்டு இருக்காங்க, அப்படின்னு சொன்னாத்தானே, அவரும்!....''

''ரொம்ப நியாயம், ரொம்ப நியாயம்.''

''என்ன எல்லாத்துக்கும் நியாயம்னுதானே சொல்றீங்க? நீங்க வாயைத் திறந்து பணத்தைச் சொல்லமாட்டேங்கிறீங்களே!''

''ரொம்ப நியாயம்'' என்று சொல்லிக்கொண்டே அவர் எழுந்தார். வடிவாம்பாளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எல்லாவற்றையும் ஆமோதித்துவிட்டு ஆள் எழுந்துபோகிறாரே என்று அவள் அஞ்சினாள். ஆனால் மானோஜி ராவ் வாசலில் போய் வெற்றிலையைத் துப்பிவிட்டு மறுபடியும் உள்ளே நுழைந்தார்.

''ஆமாம், நீங்க எவ்வளவுதான் பணம் சொல்றீங்க?''

''நம்ப கேட்கலாமுங்களா? முந்தி நாங்க இரண்டாயிரத்துக்கும் கச்சேரி பண்ணியிருக்கோம், ஐயாயிரத்துக்கும் பண்ணியிருக்கோம். இப்போ அப்படியில்லே பாருங்க. கல்யாணச் செலவே ஐம்பதினா யிரத்துக்கும் மேலே ஆகியிருக்கு....!''



''ஆமா கேள்விப்பட்டேன். நம்ப ராயர்கூட அனுமார் கோவில் உத்ஸவம் போலே விமரிசையா செய்திங்கன்னு சொன்னார்.''

வடிவாம்பாளுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. இதைப் பார்த்த மானோஜியப்பா, இந்தச் சிரிப்புக்குத் தன் கெட்டிக்காரத்தனமான பேச்சுதான் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் சிரித்தார்.

''அது என்ன சிரிக்கிறீங்க?''

''நீங்க அந்தப் பேரைச் சொன்னீங்களே, அதைக் கேட்டதும்.....''

''ஆமா ஆமா, பக்திப் பரவசமாயிடும். சில பேருக்கு ஆவேசமே வந்துவிடும்'' என்று ஆமோதித்தார் அந்தச் சாது மனிதர். அதோடு நில்லு விடாமல், ''இந்தப் பேச்சே அனுமார் கோவிலிலேதான் ஆரம்பம் ஆச்சு'' என்றார்.

''எந்தப் பேச்சு?''

''இந்த நாட்டியப் பேச்சுதான்.''

''சரிதான், யாருக்காவது ஆவேசம் வந்து ஆடியிருப்பாங்க. அதைப் பார்த்துட்டு, நம்ப நினைப்பு வந்திருக்கும்'' என்றான் வரதன் குறும்பாக.

''ஏன், நான் அப்படியா ஆடுகிறேன்'' என்று மோகனா திரும்பிப் பார்த்தாள். இதற்குள் மானோஜிராவே விஷயத்தைக் கூறினார்.

''அதாவது அனுமார் கோவிலிலே உங்கள் வீட்டுக் கல்யாணப் பேச்சு வந்தது. உடனே நம்ப ராயர் பங்காளி குப்பண்ணராவ் இருக்கிறாரே, அவர் இனிமேல் நீங்கள் ஆடமாட்டீங்கன்னு சொன்னாரு. நம்ப ராயர் ஆடுவீங்கன்னு சொன்னாரு... இல்லை கல்யாணம் ஆச்சுன்னா ஆடப்பிடாதுன்னு கண்டிஷன் போட்டிருக்குன்னாரு குப்பண்ணராவ். எங்க ராயர் என்ன சொன்னாரு தெரியுமோ?''

''அவனைத்தான் கல்யாணம் செய்து குடுத்தாங்க. ஆட்டத்தை இல்லைன்னு சொல்லியிருப்பாங்க'' என்று குறுக்கே புகுந்தாள் வடிவாம்பாள். அவள் கோபத்தையும் ஆத்திரத்தையும் கண்டவுடன் அங்கு இருந்தவர்கள் திகைத்தார்கள். ஆனால் வடிவாம்பாள் அதற்குள் சுதாரித்துக்கொண்டாள்.

''அது சரிங்க, பெரிய இடத்திலே இந்தச் சின்ன விஷயத்துக்கா போட்டி வந்தது?''

''ஆமா, வேறே எதிலே வரும்?''

''ராயர் அய்யா விட மாட்டாங்களே!''

''விடுவாங்களா?''

வடிவாம்பாளுக்கு இதுவே போதும். இருந்தாலும் மானோஜிராவிடம் தன் முழுச் சாமர்த்தியத்தையும் காட்டிவிடத் தயாரானாள்.

''எதுக்கும் என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டுப் போட்டிக்குப் போயிருக்கலாம். ஆமா, பந்தயம்கூடப் போட்டுக்கிட்டாங்களாமே?'' என்று ஒரு சரடு விட்டாள்.

"அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"உங்க வீட்டிலே தம்பியைக்கூட ஊரெல்லாம் தெரியுமே."

"ஆமா, ஒரு ரூபாய் பந்தயம்!" என்றார் ராவ் சிரித்துக்கொண்டே. வடிவாம்பாளுக்குப் பிற விடை கிடைத்துவிட்டது. விடுவாளா?

"ஐயா எனக்கும் அதுதாங்க யோசனை. கலியாணம் ஆயிடுச்சே. இனி ஆடலாமா கூடாதான்னுதான் பார்க்கிறேன்."

"இந்த ஒரு தடவை மட்டும் ஒப்புக்கொண்டு விடுங்க" என்று கெஞ்சினார் மானோஜிராவ்.

"இந்தாங்க, நாங்க அங்கே வருவதாயிருந்தா தனிப் பங்களாவிலே இறக்கி வைக்கணும்..."

"சரி."

"தனி வண்டி."

"தருகிறோம்!"

"பணத்தை முன்னாடியே கொடுத்துடணும்."

"ஏன், நம்பிக்கையில்லையா? சரி தந்துட்றோம்."

"முதல் வரிசையிலே ஆறு சோப்பாக்களாவாக இருக்கணும், எங்க ஆட்களுக்கு உட்கார..."

"ஆனால் யாராவது அதிகாரிகள் வந்தா?"

"அவுங்க தனியா உட்காரட்டும்."

"எங்க ராயர்வாளுக்கு?"

"அவுங்க உட்காரக்கூடாதும்பேனா?"

"இவ்வளவுதானே?"

"இன்னும் ஒண்ணே ஒண்ணு."

"என்ன?"

"ஒரு வீசை பசு வெண்ணெ..."

"அது எதுக்கம்மா, ஆடறபோது வழுக்கப் போவுது" என்றான் வரதன்.

"உனக்கென்னடா தெரியும், முத்துக்குமரன் பாடற போது கேட்க மாட்டானா?"

"சரி, பின்னே கொஞ்சம் முருங்க இலையும், ஒரு படி ரவையும் சொல்லிடுங்க" என்றான் வரதன்.

"ஒரு படி எதுக்கடா?"

"ஆமா அம்மா, ஒரு வீசை வெண்ணெயை... உருட்டி முழுங்கிட்டு அவர் பாடினா? அடிக்கிற அடியிலே ரவை உதிர்ந்திடாதா, எதுக்கும் கூட இருக்கட்டுமே" என்றான் வரதன். மானோஜிராவ் அத்தனைக்கும் சம்மதித்தார்.



அவர் ஒரு கணிசமான தொகையை, "இந்தாருங்கள், அட்வான்சாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று அவளிடம் கொடுத்தார். கையை நீட்டிப் பணத்தை வாங்கப்போன வடிவாம்பாள் திகைத்தாள்.

"இந்தா மோகனா, உன் புருஷனை வந்து வாங்கிக்கச் சொல்லு. கச்சேரிக்குத் தேதி கீதியெல்லாம் பேசச் சொல்லு வந்து" என்று பட்டதும் படாததுமாகப் பேசினாள் வடிவாம்பாள்.

"என்னம்மா, எதுக்காகம்மா இப்போ கச்சேரிக்கு ஒத்துக்கறே? நீதானே பேசியிருக்கே? அவங்க மனது இருக்கிற நிலையிலே கச்சேரிக்குச் சம்மதிப்பாங்களா?"

"சரிதான் புள்ளே. மனசு நல்லா இல்லேன்னா மருந்து என்ன? பணம்தானே? அவுங்க பெரிய இடத்திலேயிருந்து வந்து, கச்சேரிக்கு ஒத்துக்கோன்னு சொல்றாங்க. இன்னிக்கு மாட்டேன்னு சொன்னா, நாளைக்கு உலகம் என்ன நினைக்கும்? 'சரிதான், கலியாணம் பண்ணிக் கிட்டாள். இனிமேல் நாட்டியம் பண்ணப் போறதில்லே போலிருக்கே' அப்படின்னு இவங்களே ஊரெல்லாம் சொல்வாங்க. ஏதோ, அவுங்க கொடுக்கிறதை வாங்கிகிட்டு, ஒத்துக்கத்தான் வேணும்."

"அது எப்படியம்மா? அத்தானைக் கேட்கவேண்டாமா?"

"நான்தான் கேளுன்னு சொல்றேனே? சும்மா கேட்டா, வேண்டாம்னுதான் சொல்வாரு. பணத்தையும் கொண்டுபோய்க் காட்டினா ஒத்துப்பாங்க, போ!"

"நான் கேட்க மாட்டேன் அம்மா..."

"பின்னே நானே கேட்கிறேன் வா. அய்யா கொஞ்சம் இருங்க" என்று சண்முகத்தின் அறைக்குள் வடிவாம்பாள் நுழைந்தாள். கூடவே மோகனாவும் தொடர்ந்தாள்.

உலகில் எதற்கும் அஞ்சவேண்டாம். பணத்திற்கு அஞ்சித்தான் ஆகவேண்டும். இதில் பணம் எதுவும் இல்லாவிட்டாலும், சண்முகம் ஏன் அப்படித் துடிக்க வேண்டும்?

"அத்தை, இந்த சம்பந்தமெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்களே பேசிக்கொள்ளுங்கள்" என்று கடுகடுப்பாய்க் கூறினான் சண்முகம். இதைப் பார்த்த மோகனா, "வேண்டாம் அம்மா, இப்ப இந்தக் கச்சேரி வேண்டாம்" என்றாள்.

"ஏன் வேண்டாம்? இன்று முப்பதினாயிர ரூபாய் நகையைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டான். நஷ்டப்பட்ட பணத்தை நாலு கச்சேரியிலே எடுக்க வேண்டாமா?"

"அதுக்கு இப்பவே அவசரம் என்ன அத்தே?"

"இப்படி ரெண்டு பேரும் சும்மா இருந்தா, எத்தனை நாளைக்குக் காணும்?" என்றாள் வடிவாம்பாள்.

சண்முகம் திடுக்கிட்டான். நெஞ்சில் வலி வந்தது.

'நான் எல்லாத்தையும் யோசிச்சுட்டுத்தான் சொல்றேன். மருமகப்பிள்ளை. அந்த அட்வான்சை வாங்கிக்கிட்டு, அய்யாகிட்டே உங்க கையாலே ஒரு கடுதாசியை எழுதிக் குடுங்க'' என்றான்.

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் மோகனா பக்கம் திரும்பினான். ஆனால் அவளோ தலையைக் குனிந்தபடி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். அவன் மனம் பெரும்பாடு பட்டது. ஆம், அவன் கையொப்பம் மையால் இடவில்லை, மான அவமான உணர்ச்சியால்தான் இட்டான். அந்தக் கடிதத்தை மானேஜிரிடம் கொடுக்கப் போகும் போது, வரதன் உள்ளே வந்தான்.

''நாயனக்காரரே, தேதி சொல்லிட்டீங்களா?''

''இல்லை.''

''ஏண்டா உனக்கென்ன? நீ ஏன் தடுக்கிறே?'' என்றாள் வடிவாம்பாள்.

''நான் தடுக்கவில்லை அம்மா, மதுரை வாயிதா இருக்குதே. குடும்பத்தோட அங்கே போவோமா, ஆடப் போவோமா?''

''அதுக்கென்ன, வாயிதா முடிஞ்சு வந்துட மாட்டோமா?'' என்றாள் வடிவாம்பாள்.

## இருபத்து எட்டாம் அத்தியாயம்

# வர்ணம் ஆடலாம், வழக்காட இயலுமோ?



**ல**ட்சம் ரசிகர்கள் நிறைந்த கூட்டத்திலே நாட்டியம் ஆடுவது எளிது. ஆனால் குறை காணும் பத்துப் பேர் உள்ள ஒரு கோர்ட்டிலே பதில் சொல்வது கடினம். கோர்ட்டுக்குள் வந்து நுழைந்தது முதல் வெடவெடென்று நடுங்கிக்கொண்டேயிருந்தாள் மோகனாம்பாள். வெட்கத்தால் தலை கவிழ்ந்த வண்ணம் நின்றுகொண்டிருந்தாள். இவ்வளவுக்கும் அவள் பக்கத்திலே சண்முகம் நின்றும், அவளுடைய பயம் அதிகமாகிக் கொண்டே தான் வந்தது. அவள் எதையெல்லாம் எண்ணிப் பெருமை அடைவாளோ அவையெல்லாம் இன்று அவளுக்கு வெறுப்பைத் தந்தன.

'நாம் ஏன் ஆட வந்தோம்? ஏன் ஆட்டத்தைத் தொழிலாகக் கொண்டோம்? நம் அழகை உலகம் காண ஏன் இடம் கொடுத்தோம்?



உலகத்தில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தன் வீட்டு வாசற்படி தாண்டாமல் வாழவில்லையா? நமக்கு மாத்திரம் ஏன் இந்தத் தலையெழுத்து? நாமே தலையெடுத்து நாமே சம்பாதித்து நாமே ஒருவனைத் தேடிக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று எழுதியிருந்ததோ! எந்தப் பெண்ணாவது தனக்குக் கணவனைத் தானே தேடிக்கொள்கிறாளா?

'கலியாணந்தான் ஆயிற்றே, அவரோடு சந்தோஷமாக வாழவிடாமல் எத்தனை கஷ்டங்கள்! கலியாணமான அடுத்த நாளே ஒருவன் நகைகளைப் பறித்துக்கொண்டு போனான். அவரோ நகைக்காகக் கவலைப்படவில்லை. ஆருயிர் நண்பரைக் காணாமல் தவிக்கிறார். இந்த லட்சணத்தில் இந்த வழக்கு வேறு வரவேண்டுமா என்ன? இந்த ஜனங்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? நாம் சபையிலே ஏறி ஆடினால் கரகோஷம் செய்வார்களே! எல்லோர் முகத்திலும் சிரிப்பு இருக்குமே! ஓர் ஆட்டத்துக்கு ஒரு கரகோஷம், ஓர் அசைப்புக்கு ஒரு சிரிப்பு என்று அன்பை அள்ளிச் சொரியும் அதே ரசிகர்கள், இங்கே குற்றவாளியைப் பார்ப்பது போலல்லவா என்னைப் பார்க்கிறார்கள்?

'இந்த மனிதர்கள் கோர்ட்டில் இருக்கும்போது ஒருமாதிரி இருக்கிறார்கள், கூட்டத்தில் இருக்கும்போது ஒருமாதிரி இருக்கிறார்கள். இதுதான் உலகமோ? கடவுளே, தாயே மீனாட்சி! இந்த வக்கீல் என்னென்னமோ கேட்பாராமே? நீதான் காப்பாற்ற வேண்டும். எப்படி இந்தக் கேஸில் நான் சாட்சி சொல்வது? இந்த நாகலிங்கத்தைத் தண்டித்தால் என்ன, தண்டிக்காவிட்டால் என்ன?' என்று பலவாறு வேண்டிக்கொண்டாள் மோகனா.

ஆமாம், அன்று நாகலிங்கத்தின் வழக்கு மதுரையில் நடந்து கொண்டிருந்தது. இவ்வாறு குற்றமற்ற ஒருத்தி பயந்து நடுங்கிக் கொண்டிருக்க, குற்றவாளி அங்கு குதூகலமாக இருந்தான். நாகலிங்கம் சிறையில் அடைபட்டது முதல் கண்ணுக்கு இனிய காட்சிகள் எதையும் கண்டதில்லை. இன்று சாட்சி சொல்லும் அவசியத்தினால் மோகனா எதிரில் வந்து நின்றவுடனே பழைய குடிகாரன் திடீரென்று ஒரு நாள் கள்ளுக் கலயத்தைப் பார்த்தது போல நாகலிங்கம் புதுத்தெம்புடன் விளங்கினான்.

மோகனாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். இது நீதிமன்றம், அதிகாரிகள் இருக்குமிடம், தான் ஒரு கைதி என்ற எண்ணங்கள் எல்லாம் அவன் உள்ளத்தில் தோன்றவே இல்லை. காமப்பித்து கண்ணை மறைக்கும், பிறகு கருத்தை மயக்கும் என்பதற்கு உதாரணமாக நாகலிங்கத்தின் பார்வையும், அவன் இடிச் சிரிப்பும் தோற்றம் அளித்தன. அவன் இருக்கும் பக்கமே தலை நிமிர அஞ்சினாள் மோகனா.

ஆனால் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் வடிவாம்பாள் சாட்சி சொல்லிக்கொண்டு வந்தாள். வடிவாம்பாளுக்கும் உள்ளூரப்

பயம்தான். எவ்வளவுதான் சாமர்த்தியசாலியாக இருந்தாலும் ஒரு பெண் கோர்ட்டுக்கு முன் பதில் சொல்வது எளிதில் நடக்கக்கூடிய காரியமா?

''நான் சொல்வது எல்லாம் கடவுளறியச் சத்தியம்னு சொல்லுங்க அம்மா'' என்றார் வக்கீல் குழந்தை.

''நான் எப்பவும் நிசந்தானுங்க சொல்வேன்'' என்றாள் வடிவாம்பாள்.

''இல்லேம்மா, நிஜம் சொன்னாலும், அதைச் சத்தியமாகச் சொல்றேன் என்று இங்கே சொல்லணும்'' என்று வக்கீல் குழந்தை வற்புறுத்தவே, வடிவாம்பாள் அவர் சொன்னபடி சத்தியம் செய்தாள்.

குழந்தையின் குதர்க்க மூளையில் பல கேள்விகள் எழுந்தன. அவைகளை மனதிற்குள்ளே வரிசைப்படுத்திக்கொண்டார்.

''உங்கள் ஊர்?''

''திருவாரூர்.''

''நீங்க என்ன குலம் அம்மா?''

இன்றுவரை வடிவாம்பாள் தான் தாசி குலத்தில் பிறந்தோம் என்பதற்காக வருந்தியதேயில்லை. ஆனால் இன்று கோர்ட்டார் முன்னிலையில் வக்கீல் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டவுடனே, அவளுக்கு நெஞ்சில் சுருக்கென்று தைத்தது. தன் மகளும், மருமகனும் இருந்த பக்கத்தில் திரும்பினாள். ஆனால் அவர்கள் இருவரும் தலை குனிந்துகொண்டிருந்தார்கள். தன் மகள் தலை கவிழ்ந்து வெட்கப்படு வதைக் கண்டவுடனே, வடிவாம்பாள் கலங்கி அழுதிருப்பாள் என்று தான் மற்றவர்களுக்குத் தோன்றும். ஆனால் அவளுக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ?

''ஏன் மௌனமாக நிற்கிறீர்கள்? சொல்ல வெட்கமாக இருக்கிறதா?''

'''என்னை அந்தக் குலத்திலே படைச்ச கடவுளே வெட்கப்படாத போது நான் எதற்காக வெட்கப்படணும்? நான் கணிகையர் குலம்.''

''ஓஹோ, தேவதாசியா?''

''ஆமாம்.''

வக்கீல் குழந்தை நைஸாக அடுத்த ராம பாணத்தை எடுத்தார். ''உங்களுக்கு ஆண்பிள்ளைத் துணை ஒருவரும் இல்லையாம்மா?''

''ஏன் இல்லீங்க? கணவன் இல்லாத ஒருத்திக்கு, இந்த உலகத்திலே இருக்கிற அத்தனை பேரும்தான் அண்ணன் தம்பிங்க. இரக்கமுள்ள இதயம் அத்தனையும் எங்க கூடப்பிறந்தது.''

''தேவலையே, நான் அதைக் கேட்கவில்லை அம்மா. உங்களுடைய கணவன் யார் என்று கேட்கிறேன்?'' என்று கம்பீரமாகக் கேட்டார் குழந்தை.

''அவங்க இருந்தா, நான் இங்கே வந்து நிற்பேனா? அவங்க இப்போ உசிரோடே இல்லே'' என்றாள்.



''அம்மா, உங்களுக்கு இஷ்டமில்லேன்னா பதில் சொல்ல வேண்டாம். இப்ப உங்களுக்குத் துணை யாரு?''

''எனக்குத் துணை என் மகதான்.''

''ஆக, நீங்க ஒருவரையும் கலியாணம் செய்துகொள்ளவில்லையோ?''

''இல்லிங்க.''

''சரி, நாகலிங்கத்தை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''என்னம்மா தெரியாது என்கிறீர்கள்? அழகர் கோவிலுக்கு நீங்கள் வந்திருக்கும்போது அவர் உங்கள் வீட்டிற்குள்ளே வந்தாரா இல்லையா?''

''வீட்டுக்குள்ளே வாரவங்களையெல்லாம் தெரியும்னு அந்தமா? பாம்பும் நுழையும், பல்லியும் வரும்.''

''அம்மா, எனக்கும் ஒரு வீடு இருக்கு. என் வீட்டிற்குள்ளே என் உத்தரவில்லாமல் வேறு யாரும் வரமாட்டார்கள். உங்க வீட்டிற்குள்ளே அவர் எப்படி வந்தார்?''

''அதை அவரையல்லவா கேட்கணும்?''

''நீங்க அடிச்சு விரட்டியிருக்கப்படாதோ?''

''அது எப்படிங்க முடியும்? நாங்க அந்த ஊருக்குத் தொழில் செய்ய வந்தோம். எங்க தொழிலுக்குப் பலபேருடைய தயவும் வேண்டும். எல்லோரையும் மதிக்கணும். நாங்க எல்லோரையும் மதிச்சாத்தான் எல்லோரும் எங்களை மதிப்பாங்க. அதனாலே அவரை நான் விரட்டலே.''

''ரொம்ப நியாயம். அவரு ஒரு வைர மூக்குத்தி கொடுத்தாராமே?''

''ஆமாம், கொடுத்தார்.''

''அதை நீங்க ஏன் வாங்கிக்கிட்டீங்க?''

மோகனா நிமிர்ந்து தாயாரைப் பார்த்தாள். 'ஐயோ, அம்மா எக்கச்சக்கமாக மாட்டிக்கொள்ளப் போகிறாளே' என்று அவளுக்குத் தோன்றியது.

''இது என்னாங்க கேள்வி? குடுத்தா வாங்காமே இருப்பாங்களா?''

''எதுக்காகக் கொடுத்தார்?''

''நாட்டியத்துக்குத்தான். ஆட்டத்துக்கும், பாட்டுக்கும் யாரும் சன்மானம் பண்ணுவாங்களே!''

''என்னம்மா, அவரு அதுக்குத்தான் கொடுத்தார்னு எப்படி நினைக்க முடியும்?''

''வேறே எப்படி நான் நினைக்க முடியும்?''

''நான் சொல்லுகிறேன். உங்க மகள் மேலே அவர் ஆசை கொண் டார். நீங்கள் ஏதேனும் தகுந்த நகைகளைக் கொண்டுவாருங்கள் என்று சொன்னீர்கள். அவர் அந்த மூக்குத்தியை உங்களிடம் கொடுத்தார்.''

"நீங்க அப்ப எங்கே இருந்தீங்க? பக்கத்திலேயே இருந்தீங்களா? சும்மா கற்பனை பண்ணாதீங்க. பாவம், அவரு வேணுன்னா நினைச்சுக் கிட்டு இருக்கலாம், மூக்குத்தியைக் கொடுத்து என் மகளை வசப்படுத்தி விடலாம்னு. ஆனால் என் மகள் அதை அவரு முகத்திலேயே தூக்கி எறிந்தாள்."

"அது சரி, அவரோடு இவ்வளவு தூரம் நீங்கள் பழக வேண்டிய அவசியம் எப்படி வந்தது அம்மா?"

"பழக்கமா? இதிலே பழகறதுக்கு என்னங்க இருக்கு? நாங்க வந்திருக்கிறது வேறே ஊர். அவரோ மீசையை முறுக்கிக்கிட்டு எதிர்த்தாப்பிலே அடிக்க வாரவன் மாதிரி வந்து நின்னாரு. நல்லவங்களை எதிர்த்துக்கிட்டாலும் எதிர்த்துக்கலாம், அயோக்கியனைப் பகைச்சுக்க முடியுமா? அவரைக் கெட்டிக்காரத்தனமாகப் பேசிப் போகச் சொல்றது தான் நல்லது."

"நான் சொல்லுகிறேன். நீங்கள் அவரிடம் மூக்குத்தியை வாங்கிக் கொண்டு, அவரை ஏமாற்றிவிட்டு, நடு ராத்திரியே ஊருக்குப் புறப்பட்டு விட்டீர்கள். அதை அவர் அறிந்துதான் உங்களை வழி மறித்தார் என்று சொல்லுகிறேன்."

"அவரை ஏமாத்துவதற்காக நாங்கள் [illegible]லீங்க. என் மகள் ஏமாத்துவிட்டாளேங்கிறதுக்காகத்தான் [illegible]ப்பட்டேன். ஆட்டம் முடிஞ்ச பிறகு அந்த ஊரிலே தங்கறதும் அவ்வளவு சரியில்லே. இந்த நாகலிங்கத்தைப் போல இன்னும் பத்து நல்ல மனிசங்க இருப்பாங்க. அதுக்குத்தான் பயந்துகிட்டு உடனே போனேன்."

"ஒரு நாகலிங்கத்திற்குப் பயந்துகிட்டு, காட்டு வழியில் நடுராத்திரியிலே புறப்பட்டீங்களா?"

"திருடனுக்கு இரக்கமுண்டுங்க. அயோக்கியனுக்கு இரக்கம் கிடையாது. அயோக்கியன் [illegible]யிலே அகப்படுறதைக்காட்டிலும், திருடன் கையிலே அகப்படலாம்."

"சரி, கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொல்[illegible]றீர்கள்."

"இதிலே கெட்டிக்காரத்தனம் ஒன்[illegible]லீங்க. கலைஞன் என்றாலே ஜனங்களுக்கு ஒரு இரக்கம் [illegible]. எந்தத் திருடனும் கலைஞன் கிட்டே திருட வரமாட்டான். திருவாரூர் மோகனாம்பாள் ஆட்டம் ஆடற பொண்ணுன்னு தெரிஞ்சா சும்மா விட்டுட்டுப் போயிடு வான். இல்லாட்டி அடுத்த ஊர் வரையிலே கூட்டிக்கிட்டு வந்து இனிமே ராத்திரியிலே பயணம் போகாதீங்க அம்மான்னு சொல்லிட்டுப் போவான். காலித்தனமாக நடக்குற பெரிய மனுசங்களைக்காட்டிலும் களவாணிகிட்டே எனக்கு நம்பிக்கை உண்டுங்க."

"ரொம்ப நல்லது. ஆமாம், நந்தவனத் தோட்டத்திலே உங்களைக் காப்பாற்றியது யார்?"



"பரமானந்தப் பரதேசியார்!"

"சரி, நீங்க அதிராம்பட்டணத்துக்கு, உங்க மகள் நாட்டியத்துக்குப் போனீங்களே, அப்பொழுது நாகலிங்கத்தைப் பார்த்துப் பேசி, அவர் சொன்னதன் பேரில்தான் புறப்பட்டீர்கள் அல்லவா?"

"இந்த ஆளை அப்ப நான் பார்க்கவேயில்லீங்க..."

"பின்னே, யாரு உங்களை வந்து ஆடக் கூட்டிக்கொண்டு போனது?"

"வைத்தி."

"வைத்தி என்றால் உங்க சொந்தக்காரரா?"

"இல்லீங்க, சவடால் வைத்தினு சொல்லுவாங்களே, அவர்தான்."

இதைக் கேட்டவுடனே, கூட்டம் சிரித்தது. கோர்ட்டின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்த வைத்தி, அக்கறையோடு கவனித்தார். வக்கீல் குழந்தை, மேலும் கேட்கலானார்.

"உங்களுக்கும் சவடால் வைத்திக்கும் எப்படியம்மா பழக்கம்?"

"அவரு யாருகிட்டேயும் பழக்கம் பண்ணிக்கொண்டு விடுவாருங்க."

"நான் அதைப்பற்றிக் கேட்கலே. உங்களுக்கு அவரோடு பழக்கம் எந்தக் காரணத்தால் ஏற்பட்டது?"

"என் மகளுக்கு அப்[illegible] கலியாணமாகலே."

"உங்க மகள் கல்யாணத்துக்கும் வைத்திக்கும் என்னம்மா சம்பந்தம்?"

"இல்லை. அவர் என் மகளுக்கும் சிங்கபுரம் மைனருக்கும் சம்பந்தம் பேசிக்கிட்டு இருந்தாரு. அது மூலமாகத்தான்..."

"உங்களுக்குப் பணத்தாசை அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கி றேன், அது உண்மையா?"

"ரொம்ப சத்தியமுங்க. பண[illegible]காக இருந்தாத்தானே நாலு பேரு மதிப்பாங்க? ஐயாவுக்கும் அப்படித்தான்னு கேள்விப்பட்டிருக்கேன்."

"வைத்தி உங்க மகளுக்கும் சிங்கபுரம் மைனருக்கும் கலியாணப் பேச வரவில்லை. [illegible] மகளை இன்னொருத்தருக்குப் பேசிவிட வந்தார். நீங்கள் இண[illegible]னீர்கள் என்பது என் குற்றச்சாட்டு."

"நிசமுங்க. பெண்ணும் பூவும் பிறர் கைப் பொருள். ஒரு தாய், தன் மகளுக்குத் தகுந்த புருஷன் கிடைக்கணும்னு நினைக்கிறது குற்றமா?"

"நீங்க, அதிராம்பட்டணத்துக்கு ஆடறதுக்குப் போனீங்களா?"

"போனோம்."

"அப்பொழுது வைத்தி கூட வந்தாரா?"

"வந்தார்."

"வைத்தி உங்ககிட்டே வேறு ஒன்றும் சொல்லலியா?"

"என்னாங்க?"

''நாகலிங்கம் பணம் கொடுத்திருக்கிறார். உங்களைத் தோணியிலே கொழும்புக்கு மகளைக் கூட்டிக்கொண்டு வந்துவிடச் சொன்னாருன்னு அவர் சொல்லவில்லையா?''

''அப்படி ஒரு பொய்யை அவரு துணிஞ்சும் சொல்லுவாருங்க! ஆனால் உங்களுக்குத் தோணுகிற கற்பனை அவருக்கு அப்பத் தோணலேங்க.''

''அன்றைக்குப் போலீசார் வந்து குறுக்கிட்டிருக்காத பட்சத்தில் நீங்க வைத்தியோடுகூட கள்ளத்தோணியிலே கொழும்புக்குப் போய் இருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். அது நிஜம்தானே?''

''ஐயா, அப்படியே நிசமாகச் சொல்லுறீங்களே; நான் எப்படிங்க பதில் சொல்ல முடியும்? கள்ளத் தோணியிலே கொழும்புக்குப் போகிற அளவுக்கு, நாகலிங்கம் என்ன மன்மதனா? இல்லே கோடீசுவரனா? சீமைக்குப் போக வேண்டாம்னு இறங்கினவள் என் மகள். மகாராஜாவையே மதிக்காதவள். இந்த நாகலிங்கத்தை மதிப்பாளா? வக்கீலைய்யா, நீங்க தயாராக இருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டீர்கள்!'' என்று ஆத்திரத்துடன் கூறினாள் வடிவாம்பாள்.

''அது சரி, அதிராம்பட்டணம் காட்டிலே உங்களை வந்து காப்பாற்றியது யாரம்மா?''

''பரமானந்தப் பரதேசியார்.''

''உங்களைக் கொழும்பிலும் அவரேதானே காப்பாற்றினார்?''

''ஆமாம்.''

''இப்படி உங்களை அடிக்கடி காப்பாற்றுகிறாரே, அவருக்கும் உங்களுக்கும் என்னம்மா சம்பந்தம்?'' என்று வக்கீல் கேட்டவுடனே, சண்முகம், மோகனா, வடிவாம்பாள் எல்லோரும் அந்த வக்கீலை ஆத்திரத்தோடு பார்த்தார்கள். வடிவாம்பாள் வாயில் எப்படித்தான் அவ்வளவு வேதாந்தங்கள் தோன்றியதோ!

''என்ன கேட்டீங்க? உங்களுக்குப் பதில் சொல்ல நான் கட்டுப்பட்டிருக்கேன். தெய்வத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் உண்டோ, அந்த சம்பந்தம் எனக்கும் அவருக்கும். அழகான பெண்ணுக்கும், அனாதைக் குடும்பத்துக்கும் காப்பாற்றுவதற்கு யாராவது ஒருத்தர் வேணுமில்லே? உங்களைப் போல உள்ளவங்களெல்லாம் பணத்துக்கு ஆசைப்பட்டு, பத்துப் பேருக்கு முன்னாலே இப்படியெல்லாம் கேள்வி கேட்பாங்க. அதுக்காகவே அந்தத் தெய்வத்தை எங்களுக்குத் துணையாக அனுப்பிச்சாரு ஆண்டவன். அவருக்குப் பணத்தாசை இல்லை பாருங்க?'' என்று சொல்லும்போது, வடிவாம்பாளுக்குக் கண்ணீர் பெருகியது. வக்கீல் குழந்தைக்கும் ஒரு கணம் மனதிலே என்னமோ செய்தது.

''சரி, நீங்கள் இறங்கலாம்'' என்றார் குழந்தை.

அடுத்த சாட்சியாக மோகனாம்பாள் கூண்டில் ஏற்றப்பட்டாள். நெருக்கடி அதிகரிக்கும்போது பூனைகூட நாயைத் துரத்தி அடிக்கிறது.



பச்சைக் குழந்தைக்குக்கூட ஆபத்துக் காலத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தைரியம் வருகிறது. மோகனாவுக்கும் அதே தைரியம் ஏற்பட்டது.

ஆடல் அரசி மோகனா கூண்டில் ஏறி நிற்கிறாள். கலையரசன் சண்முகம் அடுத்தாற்போல் சாட்சி சொல்லப் போகிறான் என்றவுடனே, அவர்களுடைய ஆட்டத்திற்கும் நாதஸ்வரக் கச்சேரிக்கும் எத்தனைக் கூட்டம் மதுரையிலே கூடுமோ, அதைக் காட்டிலும் அதிகமான மக்கள் கோர்ட்டிலே கூடிவிட்டார்கள். ஒவ்வொருவர் மனதிலேயும் இந்த வழக்கு என்னவாகுமோ, குழந்தை கேஸை எப்படித் திருப்புவாரோ என்ற அச்சம் இருந்தது. அவர்கள் எல்லோரும் சண்முகம், மோகனா இருவரும் அவமானமின்றிக் கூண்டை விட்டு இறங்கிவிட வேண்டுமே என்றுதான் ஆசைப்பட்டார்கள்.

ஸ்ரீமான் குழந்தை, குழந்தைப் பருவத்தில் இருந்தே குறும்புக்காரர். எந்தக் கேள்வியையும் கேட்க அவர் அச்சப்படவே மாட்டார். திருப்புவது நம் பொறுப்பு. தீர்ப்புக் கூறுவது கோர்ட்டார் பொறுப்பு என்பது ஒன்றுதான் அவருடைய லட்சியம். எதிர்க்கு அவர் ஆஜராகிறார் என்று சொன்னாலே மானத்திற்குப் பயந்தவர்கள் எதிரியுடன் ராஜிகூடச் செய்துகொண்டுவிடுவார்கள். இன்று அவருடைய ஆணித்தரமான கேள்விகளுக்கு எல்லாம் அழகு அழகாகப் பதில் சொன்னாள் மோகனா. அவள் உள்ளத்திலே கள்ளமில்லை. வார்த்தைகள் ஒளியுடன் விளங்கின. அந்த வக்கீலின் கேள்விகளை அவள் வெடிகுண்டுகளைப் போல் எடுத்துக்கொள்ளவில்லை; விளையாட்டாகவே எடுத்துக்கொண்டாள்.

''நீங்கள் நாகலிங்கத்தை முதன் முதலாக எப்பொழுது பார்த்தீர்கள்?''

''எதிர்பாராத சந்தர்ப்பத்திலே பார்த்தேன். நான் நாட்டியத்துக்காக அலங்காரம் செய்துகொண்டிருக்கும்போது அவர் யாருடைய உத்தரவுமில்லாமல் என் அறைக்குள்ளே நுழைந்தார்.''

''அவரைப் பார்த்தவுடனே உங்களுக்கு ஏற்பட்ட எண்ணம் என்ன?''

''வெறுப்பு அருவருப்பு; மரவட்டை, கம்பளிப்பூச்சி இவைகளைப் பார்த்தவுடனே ஏற்படும் எண்ணம்.''

''பயமா?''

''பயமும், வெறுப்பும்தான்.''

''அவர் மேல் அவ்வளவு வெறுப்பு உங்களுக்கு வருவானேன்?''

''காரணம் சொல்ல எனக்குத் தெரியாது. கடவுள் படைத்த விதம் தான் காரணம். பெண்கள் அலங்காரம் செய்துகொள்ளும் அறைக்குள் ஒருவர் திடீரென்று நுழைந்தால் வெறுப்பு வராமல் இருக்குமா?''

''முன்பின் அறிமுகம் இல்லாவிட்டால் ஒருவர் இப்படி நுழைய முடியுமா?''

''அதை அவரைக் கேட்கணும்.''

''ராமாமணியை அழகர் கோயிலில் ஆடவிடக்கூடாது என்று அவரிடம் நீங்கள் கேட்டுக்கொண்டீர்களா?''

''இல்லை. அதில் எனக்கு ஒரு பிச்சமும் கிடையாது. ஒருவர் நன்றாக ஆடினால், இன்னொருவர் ஆட்டம் கெட்டுவிடும் என்ற நம்பிக்கையும் எனக்குக் கிடையாது. ரோஜா இருக்கும் தோட்டத்தில் மல்லிகையை மலராதே என்று சொல்ல முடியுமா? இல்லை, கனகாம்பரம் வெட்கப் பட்டுவிடுமா? ஒவ்வொரு பூவுக்கும் ஒவ்வொரு வாசனையுண்டு. ஒவ்வோர் ஆட்டத்திலும் அழகுண்டு. எல்லாம் நிறைந்ததுதான் தோட்டம்.''

''இந்தப் பதிலைக் கேட்டவுடனே, கூட்டத்திலிருந்து கரகோஷம் எழுந்தது. ஜட்ஜ் மேஜை மீது தட்டினார்.

''என்னுடைய விசாரணைக்கு இந்தக் கூட்டம் இடைஞ்சலாக இருக்கிறது'' என்றார் வக்கீல் குழந்தை.

''விசாரணையைச் சுருக்கமாக வைத்துக்கொள்ளுங்கள்'' என்றார் நீதிபதி.

''ஏனம்மா, அவரிடத்தில் நீ வைர மூக்குத்தியை வாங்கினாயா?''

''வைரம் போன்ற பொருளை வியாபாரிகளிடம்வாங்கினால் கூட தெரிந்த வியாபாரிகளிடம்தான் வாங்க வேண்டும் என்பார்கள். அவரைப் பார்த்தாலே திருடன் மாதிரி இருக்கு. அவரிடத்திலே போய் மூக்குத்தியை வாங்குவேனா?''

''அப்படியல்ல, ஒரு வைர மூக்குத்தியை எனக்குக் கொடுங்கள். அந்த ராமாமணியை ஆடவிடாமல் தடுத்துவிடுங்கள் என்று அவரிடம் நீங்கள் அன்புடன் கேட்டுக்கொண்டது உண்டா?''

''இல்லை. ஒரு நாளும் இல்லை.''

''நீ நந்தவனத் தோட்டத்துக்கு ஏன் போனாய்?''

''இரக்கப்பட்டேன். அதனால் கஷ்டப்பட்டேன்.''

''யாருக்கு இரக்கப்பட்டாய், நாகலிங்கத்துக்கா?''

''அல்ல. காட்டு வழியிலே ஒரு பெண் வேதனையாலே கஷ்டப்படுவதாக ஒருவர் கெஞ்சினார்.''

''ஓஹோ, அதற்காக இரக்கப்பட்டு நீ போனாயா? நீ நர்ஸா?''

''இல்லே.''

''மிட் வொய்பா?''

''அதுவும் அல்ல. நான் ஒரு பெண். பெண்ணுக்குத்தான் தெரியும் பெண்களின் கஷ்டம்.''

''அவன் உன்னை ஏமாற்றி அழைத்துக்கொண்டு போகிறான் என்று உனக்குச் சந்தேகமில்லியா?''

''அது எப்படி ஏற்படும்? எனக்குப் பிறரை ஏமாற்றுகிற மூளையிருந்தால் சந்தேகம் ஏற்படும்.''



''ஆமாம், நீங்கள் நடுராத்திரியிலே ஏன் ஊரை விட்டுப் புறப்பட்டீர்கள்?''

''இல்லையே, வேலை முடிந்ததும் புறப்பட்டேன். கோர்ட் முடிந்த பிறகு நீங்கள் வீட்டுக்குப் போற மாதிரி, ஆட்டம் முடிந்ததும் நான் ஊருக்குப் புறப்பட்டேன்.''

''என் கட்சிக்காரரிடம் மூக்குத்தியை வாங்கிக்கொண்டு, அவரை மயக்கி, ராமாமணியை ஆட விடாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாய். உன் காரியம் முடிந்தவுடனே அவரிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட நீ இரவே புறப்பட்டாய் என்கிறேன்.''

''அந்த நாகலிங்கம் அப்படிச் சொன்னால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆனால் நீங்கள் இப்படிச் சொல்வதுதான் எனக்கு ஆச்சரியம்'' என்று கௌரவமாகக் கூறினாள் மோகனா.

இதை உணர்ந்த குழந்தை, ''அவர்தான் என்னிடம் சொன்னார்'' என்றார். ''நீ முதலில் என் கட்சிக்காரருடன் அன்போடு பேசினாய். பிறகு சண்முகத்தைப் பார்த்தவுடனே உன் மனது அவரிடம் சென்றுவிட்டது. அதனால் என் கட்சிக்காரரை ஏமாற்றிவிட்டு ஊருக்குப் புறப்பட்டாய்.''

''ஐயா மட்டும் சங்கீத வித்வானாக இருந்தால் இருக்கிற கல்பனைக்கு உலகத்தையே வசப்படுத்திவிடுவீங்க. இப்பொழுது எல்லாக் கல்பனையும்...''

''எனக்கு உன் சர்டிபிகேட் தேவையில்லை'' என்று குழந்தை கூறியவுடனே கூட்டம் கொல் என்று சிரித்தது. குழந்தைக்கு ஆத்திரமும் கோபமும் அதிகரித்தன.

''அந்த மூக்குத்தியை என்ன செய்தாய் அம்மா?''

''அவர் முகத்திலே தூக்கி எறிந்தேன்.''

''ஆக, நீ அவரை நம்பச் செய்து மோசம் செய்யவில்லை என்கிறாயா?''

''அவர் முகத்தைப் பார்த்தாலே தெரியும்.''

''நீ கப்பலிலிருந்து கொழும்பிலே இறங்கினாயா?''

''ஆமாம்.''

''மகாராஜாவோடு சீமைக்குப் புறப்படுவதாக ஒப்புக்கொண்டு தானே நடுவழியில் இறங்கினாய்?''

''ஆமாம்.''

''அவரை நம்பச் செய்துதானே பிறகு மோசம் செய்தாய்.''

''அவர் மரியாதை தெரியாமல் நடந்துகொண்டார்.''

''அது காரணமா, உன் காதல் காரணமா?''

''இரண்டும்தான்.''

''இந்த சண்முகசுந்தரம் உன் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்தால், நீ நாகலிங்கத்தையோ அல்லது மகாராஜாவையோ விரும்பி விருப்பாயல்லவா?''

"நான் பிறக்காமல் இருந்தால், இந்தக் கேள்விகள் எல்லாம் நீங்கள் கேட்கமாட்டீங்க இல்லையா?"

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்!"

"பதில் சொல்லத் தருந்தாற்போலக் கேளுங்கள்."

"நீ அதிராம்பட்டணத்துக்குப் போகும் பொழுது நாகலிங்கம் உன்னைக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போகிறார் என்ற எண்ணத்திலேதானே போனாய்?"

"இது கோணல் வழக்கு. அந்த ஆளை நான் பார்க்கவேயில்லே. அவன்தான் பாரீஜூர் ஜமீந்தார் என்று தெரிந்து இருந்தால் போலீசோடு போய் அவரைப் பிடித்திருப்பேன். வைத்தியின் வார்த்தையை நம்பி, யாரோ உண்மை ஜமீன்தார் என்கிற எண்ணத்திலே போனேன்."

"வைத்தி உன்னிடம் பணத்தைக் கொடுத்த போது, நாகலிங்கம் கொடுத்தார், புறப்பட்டு வரச்சொன்னார் என்று சொல்லவில்லையா?"

"வைத்திகூட இப்படி ஒரு பொய்யைச் சொல்ல மாட்டார்."

"சபாஷ்!" என்றார் வைத்தி.

"ஷட்டப்" என்று கோர்ட் பியூன் சொல்லவே வைத்தி அடங்கினார்.

"கடைசிக் கேள்வி. பரமானந்தப் பரதேசியார் உனக்கு என்ன வேண்டும்?"

"தோன்றாத் துணை. என்னை ஆட்கொண்ட தெய்வம் அவர். என் வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் நீக்க வந்த துணை அவர். எனக்கு அவரே தந்தை, தாய், குரு, தெய்வம் எல்லாம்."

"அவர் உனக்கு வேறு எந்த உறவும் இல்லையா?"

"உறவில் இதற்குப் பெரிது உண்டா?"

"ஆக, நீ என் கட்சிக்காரரை ஏமாற்றினாய் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை?"

"அது பொய்! உங்கள் கட்சிக்காரர் இளைஞர் அல்ல. அழகனும் அல்ல. கலை ரசிகர் அல்ல. தீய குணங்களுக்கெல்லாம் அவர் இருப்பிடம். அவரை எந்தப் பெண்ணும் ஏறெடுத்தும்கூடப் பார்க்கமாட்டாள். அவரைப் பெற்ற பாவத்திற்கு, அவர் தாய்கூட இப்பொழுது இருந்தால் தற்கொலை செய்துகொண்டிருப்பாள். அவர் ஒரு கொலைகாரர்."

"யாரைக் கொன்றார்?"

"என் உயிருக்கு உயிராக உள்ளவரைக் கொல்ல முயன்றார். ஏதோ ஆண்டவன் காப்பாற்றினார்" என்று சொல்லும்போது, இதுவரை துணிவுடன் பேசிக்கொண்டிருந்த மோகனா கண் கலங்கி நின்றாள்.

"சரி, போதும்" என்றார். குழந்தை மோகனா வருத்தத்துடன் கீழே இறங்கினாள். இப்பொழுது சண்முகத்தின் முறை வந்தது.

"நீர் மோகனாம்பாளை எத்தனை காலமாக அறிவீர்?"



"எத்தனை பிறவிகளாக அறிவேனோ எனக்கே தெரியாது!"

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்."

"கேள்விக்குத்தான் பதில் சொல்கிறேன். அதை நான் கண்ணால் பார்த்தது அழகர்கோவிலில்தான். எனக்கும் அவளுக்கும் ஏற்பட்ட தொடர்பு பூர்வ ஜென்மத்திலிருந்தே இருக்க வேண்டும்."

"அவள் தாசிப் பெண் என்று தெரிந்துதானே காதலித்தீர்?"

"அது என் சொந்த விஷயம்."

"சரி, உம்மீது நாகலிங்கம் கத்தியை எறிந்தாரா?"

"நாகலிங்கம் குத்தியது எனக்குத் தெரியாது. ஆனால் கத்தி என் மீது எறியப்பட்டது எனக்குத் தெரியும்."

"அது நாகலிங்கம்தான் என்று நீர் ஊகிக்கவில்லையா?"

"நான் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லே. கலைஞனுக்குப் புகழ், இகழ் இரண்டும் ஒன்றுதான். என்னைப் போற்றிப் புகழ்ந்து பூமாலை போடும்போது, நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லையா? யாரோ ஒருவன் ஆத்திரத்தில் கத்தியை எறிந்துவிட்டால், அவனைத் திரும்பவும் கொன்றுவிட வேண்டுமென்று விரும்புபவன் நான் அல்ல."

"அந்தக் குற்றத்திற்காக அவர் மேல் வழக்கு நடப்பது உமக்கு விருப்பம் இல்லையா?"

"கிடையவே கிடையாது! அந்த மனிதனுக்கும் ஆசை ஏற்பட்டது. ஆசையால் அவன் தவறு செய்தான். கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார். அது ஒன்றே போதும்."

"சண்முகம் பிள்ளை, நீர் உலகத்து மனிதராகவே பேசவில்லை. உமக்கு அவர்மேல் கோபம் கிடையாதா?"

"ஒருகாலும் கிடையாது. நான் அவரைக் கோபித்தால் எனக்கு என்ன லாபம்? அவராகவே மனம் வருந்தித் திருந்துவதையே நான் விரும்புகிறேன். அவரை இப்பொழுதே விடுதலை செய்தால்கூட நான் சந்தோஷப்படுவேன்."

"ஒரே ஒரு கேள்வி. இவ்வளவு தாராள உள்ளம் படைத்தவர் மதன்பூர் மகாராஜாவுடன் ஏன் ஒத்துப் போகவில்லை?"

"அவர் கலைக்கே எதிரி. கலையை மதியாதவர். உலகின் செல்வம் கலை. அதைக் கேவலப்படுத்துபவர் என் எதிரி."

இந்த வார்த்தையைச் சண்முகம் சொன்னவுடனே, மோகனாவின் உள்ளத்திலே தாங்க முடியாத ஆனந்தம் ஏற்பட்டது. தன் கணவன் பகைவனுக்கும் அருளுகிறவனாக இருக்கின்றார். ஆனால் கலையை மதியாதவனைக் காலால் எற்றுகின்றார் என்று ஆனந்தப்பட்டாள். ஆனால் வடிவாம்பாளோ, 'சீ, என்ன மாப்பிள்ளை இவர். கொஞ்சங்கூட உலகம் தெரியலே!' என்று எண்ணினாள். கூடியிருந்த அத்தனை கூட்டமும் சண்முகத்தின் பெருந்தன்மையைக் கண்டு வியந்து பாராட்டின. ஆனால்

வைத்தியோ, அவனைப் பாராட்டுவதா, அல்லது முட்டாள்தனம் என்று எண்ணிச் சிரிப்பதா என்று யோசித்துக்கொண்டிருந்தார். இந்தத் தருணத்தில் ''வைத்தி, வைத்தி!'' என்று கோர்ட் பியூன் கூப்பிடுவது கேட்டது.

வைத்தி எழுந்திருக்கவில்லை. எதையோ அவசரமாய்ப் படிக்க ஆரம்பித்தார்.

## இருபத்து ஒன்பதாம் அத்தியாயம்

# ''அடித்த பாம்பு கடிக்குமா?''



**மா**னத்துக்குப் பயந்த மனிதன் ஒருவன் தோன்றியிருக்காவிட்டால் உலகில் ஜவுளிக் கடைகளே தோன்றியிருக்கா. வெட்கத்துக்கு அஞ்சிய அணங்கு ஒருத்தி பிறந்திராவிட்டால் விதம் விதமான சேலைகளும் வந்திருக்கா. மானவெட்கத்துக்குப் பயந்தவர்களால்தான் உலகம் இத்தனை மாண்பு பெற்றிருக்கிறது. ஆனால் வைத்தியைப் போன்ற அவதாரர்கள் அவைகளுக்குப் பயப்படாதவர்கள். அவர்களுக்கு ஆஸ்தியே அஞ்சா நெஞ்சம்தான். இன்று கோர்ட்டுச் சேவகன் கூப்பிடக் கூப்பிட அவர் பொருட்படுத்தாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவுடன் அங்கிருந்த எல்லோருமே பிரமித்தார்கள்.

''வைத்தி, வைத்தி, வைத்தி!'' சேவகன் மறுபடியும் மும்முறை கூப்பிட்டான். இது வைத்தியின் காதிலும் விழுந்தது. ஆனால் வைத்திஜி எழுந்திருக்கவில்லை, கையில் அந்தப் பேப்பரைப் பிடித்த வண்ணம்தான் இருந்தார். இதைக் கண்ட தருமன் அவர் அருகில் ஓடி வந்தான்.

''ஐயா வைத்தி, உங்களைத்தானே கூப்பிடறாங்க?'' என்று ஆத்திரத்தோடு அடித்தொண்டையில் மெதுவாகச் சொன்னான்.

வைத்தி அவனை ஒரு முறை கம்பீரமாகப் பார்த்துவிட்டு, மறுபடியும் பேப்பரைப் படிக்க ஆரம்பித்தார். இதற்குள் இவர், இங்கே உட்கார்ந்து இருப்பதை அறிந்த கோர்ட்டுச் சேவகன், 'உஸ்... உங்களைக் கூப்பிடறாங்க'' என்றான்.

''அடே, என்னையா கூப்பிட்டாங்க!'' என்று ஆச்சரியம்போல் சொல்லிக்கொண்டே வைத்தி மெதுவாக எழுந்தார். இதைப் பார்த்த வக்கீல் குழந்தை, 'நீங்க சாட்சி சொல்ல வந்தீங்களா? கோர்ட்டில் பேப்பர் படிக்க வந்தீங்களா சார்?'' என்று வைத்தியைப் பார்த்து குண்டை எறிந்தார்.



''சாட்சி சொல்லச் சாயங்காலம் கூப்பிட்டா, அது வரையில் சும்மா உட்கார்ந்து இருக்க முடியுமா சார்? பேப்பர்தானே படிச்சேன், உங்களைப் போல் இடைஞ்சலாய்ப் பேசிக்கொண்டிருக்கவில்லையே?'' என்றார் வைத்தி.

''கூப்பிட்டவுடன் வர வேண்டாமா ஐயா?''

''வைத்தின்னு கூப்பிட்டா, உடனே நான் ஓடி வரணுமா சார்? ஊரிலே நான் ஒருத்தன்தானா வைத்தி? எத்தனையோ வைத்தி இருப்பாங்க.''

''சார் இது கோர்ட்.''

''என்னாங்க சார், குழந்தைக்கு சொல்ற மாதிரி சொல்றீங்களே?''

வக்கீல் குழந்தை திடுக்கிட்டார். அவருக்குத் தன்னை வைத்தி குழந்தைப் பிள்ளை என்று கேலி செய்வது போல் தோன்றியது. ஆனால் வைத்தி அதைப் பாராதவர் போல் பேசினார்.

''கோர்ட்டுன்னு தெரியாமலா வந்திருக்கேன்! திருவாரூர் வைத்தின்னு கூப்பிடறது. இல்லே, மிஸ்டர் வைத்திநாதன்னு கூப்பிடறது. இல்லே, வாய் நிரம்ப வைத்திஜி என்றாவது கூப்பிடறது. வைத்தி, வைத்தின்னா நான் என்ன பரிசாரகனா?'' என்று சொல்லிக் கொண்டே சாட்சிக் கூண்டில் ஏறினார் வைத்தி.

குழந்தைக்குக் கோபம் கோபமாக வந்தது. இந்த ஆள் வண்டவாளத்தையெல்லாம் இன்றைக்கு வாங்கிவிடுகிறேன் என்ற மனதில் கறுவிக்கொண்டார். பெரியவர்களின் கோபத்துக்கே பயப்படாத வைத்தி, இந்தக் குழந்தையின் கோபத்தையா பொருட்படுத்தப் போகிறார்? கூண்டில் ஏறி நீதிபதியை வணங்கி உறுதிமொழி அளித்து விட்டு, வக்கீலின் கேள்விகளை எதிர்பார்த்து நின்றார்.

''உமது பெயர் என்ன?'' என்றார் குழந்தை.

''எஸ். வைத்திநாதன்.''

''வேறு பெயர் ஏதாவது உண்டா?''

''வைத்தி ராம வெங்கட சுப்பிரமணிய சர்மா என்று வைதிகப் பெயர்.''

''அது சரி, ஏதோ...... டால் வைத்தி என்று உங்களை....''

''ஆமாம், சின்ன வயதிலே வைரக் கடுக்கன் போட்டிருந்தேன், அது டால் அடிக்கும். அதனாலே சவடால் வைத்தின்னு சொல்லுவார்கள்.''

''கிராப்புத் தலை வைத்தி என்பதும் தாங்கள்தானே?''

''ஆமாம், அந்த வயதிலேயே நான் முன்னுக்கு வந்தவன். அப்பவே சீர்திருத்தக் கருத்துகள் எல்லாம் உண்டு எனக்கு. என் அக்காவின் பிள்ளைகள் என்னை மாமா வைத்தி என்பார்கள். அண்ணா பிள்ளைகள் எல்லாம் சித்தப்பா வைத்தி என்பார்கள். ஆமாம், இத்தனை வைத்திகளிலே எந்த வைத்தி உங்கள் சாட்சியோ?'' என்றார் வைத்தி.

கோர்ட்டில் இருந்த கூட்டம் அவர் வெடித்த ஹாஸ்யப்பட்டாசுகளால் உற்சாகமடைந்து, இன்னும் என்ன சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்துக்கொண்டு நின்றது.

''இல்லை, நீங்கள் ஒரு பிரபலமானவர் என்பதைக் காட்டவே அவைகளைக் கேட்டேன். உங்களுக்குத் தொழில் என்ன சார்?''

கோர்ட்டுக்குள்ளே சிரிப்புச் சத்தம் கேட்டது. வாதன், தருமன், முத்துக்குமரு எல்லோரும், குழந்தை, வைத்தியை மடக்குகிறார் என்று ஆனந்தம் அடைந்தார்கள்.

''ஐயாம் நாட் எ பிஸினஸ் மேன், சுக ஜீவனம்.''

''இல்லை, உத்தியோகம் ஏதாவது உண்டா என்று கேட்கிறேன்?''

''அது நிறைய உண்டு சார். 'செகரட்ரி, காவேரி கலா மன்றம்', 'செகரட்ரி, புவர்மென் பெனிபிட் பண்ட்ஸ்', அதோடுகூட மதன்பூர் மகாராஜாவுக்கு இப்ப பிரைவேட் செகரட்ரி.''

''அவருடைய அந்தரங்கக் காரியங்களுக்கு நீங்கள் உதவி செய்வீர்களோ?''

''வக்கீல் சார் சொல்றது எனக்குப் புரியலே. கொஞ்சம் கேள்வி, விளக்கமாக இருந்தா தேவலே.''

''அவருடைய அந்தரங்கக் காரியங்களில் நீர் அக்கறை எடுத்துக் கொள்வீரா என்று கேட்கிறேன்!'' என்று கண்களை உருட்டிக் கேட்டார் வக்கீல்.

''அதையேதானே திருப்பிக் கேட்கிறேன்? சார், உங்களுடைய கேள்வி, மத்தவாளுடைய மனசிலே தப்பாகப் படும் சார். ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்டு பயமில்லாமல் கிளியரா கேளுங்கோ, பதில் சொல்றேன்'' என்று வைத்தி அவரையே திருப்பினார்.

வக்கீல் குழந்தை யோசித்தார். அவர் எண்ணியதை இதற்கு மேல் விளக்கமாகக் கேட்க, கோர்ட் அனுமதிக்காது என்று அறிந்தார்.

''சரி, எனக்கு அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டாம். மகாராஜாவிடம் உங்களுக்கு என்ன சார் உத்தியோகம்?''

''நான் அட்வைஸர் சார்.''

''எதைப் பற்றி அட்வைஸ் பண்ணுவேள்?''

''இதென்ன சார் கேள்வி? எதுக்கு வைத்தியம் செய்வாய் என்று டாக்டரைப் பார்த்துக் கேட்க முடியுமா? எல்லாக் கேசுக்கும் ஆஜராக வேண்டியதுதான். நமக்கென்ன பீஸ்தானே? லா, சட்ட விவகாரங்கள், அவருடைய குடும்ப விஷயம், மாரியேஜ் மாட்டர் இருந்தா அது, எல்லாவற்றிற்கும் எதைக் கேட்டாலும் ஐடியா குடுப்பேன்.''

''உங்களுக்கு அவரை எத்தனை வருஷமா தெரியும், சார்?''

''கொஞ்ச நாளாகத்தான் தெரியும். ஆனால் என்னைப் பற்றி அவர் ரொம்ப நாளாகத் தெரிஞ்சுண்டு இருப்பார் போலிருக்கு.''



''நீங்க அவ்வளவு பிரபலமானவரா?''

''ஏதோ, குருவிக்குத் தகுந்த ராமேஸ்வரம். உங்க தொழிலிலே நீங்கள் பிரபலம். என் தொழிலிலே நான் பிரபலம்.''

''அவர் உங்களை எந்தக் காரியத்திற்காக வேலைக்கு வைத்துக் கொண்டார்?''

''இது எனக்கு எப்படி சார் தெரியும். அவரை அல்லவா கேட்கணும்?''

''சரி, நீர் அவருடன் சேர்ந்து எத்தனை மாதங்களாயிற்று?''

''மூன்று மாதம்.''

''அதாவது, மோகனா அவரோடுகூட சினிமாக்குப் புறப்படுறதுன்னு நிச்சயமான பிறகுதானே?''

''முந்தியும் இருக்கலாம், பிந்தியும் இருக்கலாம். எனக்கு அது தெரியாது சார்.''

''சரி, உங்களுக்கு ஊர்?''

''நான் என்ன விவசாயியா, ஒரு நிலத்தையே உழுதுண்டு ஒரு ஊரிலேயே இருக்க? இன்னிக்கு டில்லியிலே இருப்பேன், நாளைக்குப் பம்பாயிலே இருப்பேன். எல்லா ஊரும் என் ஊர்தான்!''

''நீங்கள் பிறந்த ஊர் எது என்று கேட்கிறேன்.''

''திருவாரூர்.''

''உங்கள் தகப்பனார் இப்போது எங்கே இருக்கிறார் சார்?''

''அவர் விரக்தியடைந்து எங்கேயோ போயிட்டார்.''

''அவருக்கு ஏன் சார் விரக்தி வந்தது?''

''எங்க குடும்பமே விவேகமுள்ள குடும்பம் சார். விவேகம் உள்ளவாளுக்கு விரக்தி வருவது இயற்கைதானே? நானே ஒரு நாளைக்கு அப்படிப் போனாலும் போகலாம்.''

''அவர் வீட்டை விட்டு வெளியேறியதற்கு நீங்கள்தானே காரணம்?''

''ஆமாம்.''

''எப்படி சார்?''

''புத்திரபாக்கியம் ஏற்பட்டுவிட்டது. இனி நம்ப குலம் அவனாலே விளங்கும். நாம் இனிமே சன்யாசியாகிவிடலாம்னு அவர் நினைச்சிருப்பார்.''

''இதைத் தவிர, உங்கள் மேலே உள்ள கோபத்தால் அவர் போகவில்லையா?''

''குழந்தை சார்...''

''என் பேரைச் சொல்லி நீங்கள் இங்கே பேசக்கூடாது.''

''உங்க பேரை யார் சார் சொன்னார்கள்? நான் என் தகப்பனாருக்குக் குழந்தை. குழந்தையின் மேல் கோபம் வந்து தகப்பனார் ஓடுவாரா? இதெல்லாம் பொய். என் எதிரிகள் கட்டிவிட்ட கதை.''

"உங்களுக்குப் பெரிய மனுஷான் ரொம்பப் பேர்களைத் தெரியுமா?"

"அப்படியெல்லாமில்லை. என் இண்டெலிஜன்னை மதிக்கிறவர்கள் எல்லோரும் எனக்கு வேண்டியவர்கள்தாம். யாருக்காவது ஏதாவது அட்வைஸ் வேணும்னா எங்கிட்டே வருவா. நான் விபரமா சார்ஜ் பண்ணுவேன்."

"நீங்க எங்கே சார் படிச்சேள்?"

"நீங்ககூட எனக்கு ஒரு டீச்சர். இந்தக் கோர்ட் எனக்கு ஒரு பள்ளிக்கூடம். நான் உலகத்திலேயே படிக்கிறவன்."

"வேறே ஏதாவது டிக்ரி வாங்கியிருக்கேளோ?"

"நான் பணம் வாங்கினாலும், கைமாத்துன்னு வாங்கிறதில்லே. கொடுத்தாலும் கடன்னு கொடுக்கிறதில்லே. டிக்ரி, எக்ஸிபிஷன் அது இது எல்லாம் எனக்குப் பிடிக்காது சார்."

"பி.ஏ., எம்.ஏ., ஏதாவது?"

"கிடையாது! அதிலே எனக்கு நம்பிக்கையில்லே."

"ஏன்?"

"கேள்விக்குப் பயந்துதான்? சம்பந்தமில்லாமல் நெப்போலியன் இறந்த தேதி என்ன, என்று கேட்பார்கள். இது அவன் பிள்ளைக்குன்னா தெரியணும்? நமக்கென்னத்துக்கு? நாமா கருமாதி பண்ணப் போறோம்?"

"சரி, இந்த நாகலிங்கம் பிள்ளையை உமக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"எத்தனை நாளாகத் தெரியும்?"

"எங்கிட்டே பாரியூர் ஜமீன்தார் என்கிற வேஷத்திலே வந்தார். அன்னிக்கு முதற்கொண்டு தெரியும்."

"அதற்கு முன்பு நீர் அவரைப் பார்த்தது இல்லியா?"

"பார்த்ததே இல்லை."

"நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்லும்."

"எனக்கு மைண்ட் ரொம்ப கிளியர் சார். ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை."

"அதற்கு முன் திருவாரூரிலே அரண்மனைக் கட்டட மாடியிலே உங்களை இவர் பார்த்தாராமே?"

"அவர் பார்த்திருக்கலாம். ஆனால் நான் பார்த்ததில்லை."

"யோசித்துச் சொல்லும்."

வைத்தி யோசித்தார். "திருவாரூரில் தில்லானா போட்டி நடந்த அன்று நான் மொட்டை மாடியிலே தூங்கப் போனேன். அங்கே தாடியும் மீசையுமாக ஓர் உருவம் நின்றது. தூக்கக் கலக்கத்திலே பார்த்தேன். அது இவராக இருக்கலாம்."



"அவரோடு என்ன சார் பேசிக்கொண்டு இருந்தேள்?"

"நான் ஏன் அவர்கிட்டே போய் பேசப் போறேன்?"

"மாடியிலே மோகனாவைப்பற்றி அவர் உம்மிடம் கேட்டாரா?"

"இல்லை."

"நீர் அவரிடத்திலே மூவாயிரம் ரூபாய் பணம் கொண்டுவந்து கொடு. நான் அவளை அதிராம்பட்டணத்துக்குக் கூட்டி வருகிறேன். அங்கே ஒரு கள்ளத் தோணி தயாராக வைத்திரு. நாம் எல்லோரும் சிலோனுக்குப் போய்விடலாமென்று அட்வைஸ் செய்தீரா?"

வைத்தி திகைத்தார். ஓடும் வெள்ளத்தில் உள்ள சுழல் ஆளை உள்ளே இழுப்பது போல, வக்கீல் தம்மைக் கேசுக்குள் இழுக்கிறார் என்பது வைத்திக்குப் புரிந்தது. அவருடைய புத்தி சாதுரியம் பூராவாக வேலை செய்தது.

"கேள்வி நல்லா இருக்கு சார்!" என்றார் வைத்தி.

"ஐ டோண்ட் வாண்ட் யுவர் சர்ட்டிபிகேட். ஐ வாண்ட் யுவர் ஆன்ஸர்."

"சார், நான் ஒரு ஜெண்டில்மேன். இந்த மாதிரி ஆசாமி ஒருவனிடம் முகம் கொடுத்துக்கூடப் பேசமாட்டேன். எனக்கு வந்த தூக்கத்திலே அங்கே போய்ப் படுத்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்."

"அப்படி இருந்தால் பாரியூர் ஜமீன்தாராக வந்தார் என்று சொன்னீரே. அப்பொழுது உமது வீட்டிற்கு எதற்காக வந்தார்? நேரே வடிவாம்பாள் அம்மாள் வீட்டுக்கே போய்ப் பேசியிருக்கலாமே?"

"என்னை நீங்கள் இப்படி எல்லாம் கேள்வி கேட்க வேணும் என்று இருக்கிறதே. அதற்குத்தான் வந்தார் போல் இருக்கிறது."

"இல்லை, உம்மிடத்திலே அட்வைஸ் கேட்க அவர் வந்தார்னு சொல்கிறேன்."

"அட்வைஸ் கேட்க இல்லை சார். அட்வான்ஸ் கொடுக்க வந்தார். நம்ம அட்வைஸ் எல்லாம் சிவிலாகத்தான் இருக்கும். கிரிமினல் விஷயத்திலே கிட்டக்கூடப் போக மாட்டேன். கச்சேரி பேச வரவங்க, நேரே போய்ப் பேச மாட்டாங்க. நடுவிலே ஒரு ஆளை வைச்சுக்கிண்டு தான் பேசுவாங்க. முடியாதுன்னு சொல்லிட்டா, கேட்க வந்தவர்களுக்கு அகௌரவம். அந்த முறையிலே இவர் என்னிடம் பேச வந்தாருன்னு நினைச்சேன்."

"அது சரி, வடிவாம்பாளோடுகூட நீங்களும் அதிராம்பட்டணம் வந்தீர்களாமே? கச்சேரி பேசிவிட்டவர் கூடவே வரவேண்டியது அவசியம் என்ன?"

"இது மாடு இல்லே ஸார், வாங்கிக் கொடுத்து ஊருக்கு அனுப்பறத்துக்கு? அந்தப் பெண் ஒரு பெரிய டான்சர். நான் ஒரு கலா ரஸிகன், டான்ஸ் பார்க்கணும்னு ஆசை இருக்காதா?"

"இருக்கும். ஆனால் தில்லானா போட்டி தெருவில் நடக்கும்போது இந்த ஆசை உமக்கு இல்லையா? அப்படி இருந்தால் ஏன் மொட்டை மாடிக்குத் தூங்க வந்தீர்? இப்போது சொல்லும். தூங்க வந்தீரா, அல்லது அவரைத் தனியாய்ச் சந்திக்க வந்தீரா?"

"இவ்வாறு வக்கீல் கேட்டதுமே வரதன் கோபத்தால் துடித்தான். 'அப்போதே இந்த வைத்தியை மாடியில் இருந்து கீழே தள்ளாமல் விட்டோமே! இவனும் சேர்ந்தல்லவா சதி செய்திருக்கிறான்' என்ற ஆத்திரம் வந்தது. வடிவாம்பாள் முதலிய எல்லோரும் வைத்தியையே பார்த்தனர்.

ஆனால் வைத்தியோ அஞ்சாமல் பதில் சொன்னார்.

"சண்முகத்துக்கும் மோகனாவுக்கும் போட்டி ஆட்டம். அவர்களுக்குப் பொழுதுபோகிறது தெரியவில்லை. எனக்கும் தூக்கத்துக்கும் போட்டி. நான் தூங்கப்போனேன். இவரைப் பார்க்கப் போக வில்லை."

"அப்படியிருந்தால் அதிராம்பட்டணத்துக்கு ஆட வரச் சொல்லி முன்பின் தெரியாத ஒருவர் உம்மிடம் வந்து சொல்லும்போது, உமக்கு அவர் மீது சந்தேகம் வரவில்லையா?"

"சும்மா வந்தால் சந்தேகம் வரும். மூவாயிரம் ரூபாய் பணத்தை முழுசாகக் கையிலே கொடுக்கிறபோது சந்தேகம் வருமா சார்?"

"நான் சொல்கிறேன். நாகலிங்கம் மாடியிலே உம்மைச் சந்தித்தார். 'மோகனாவை அடைய வேண்டும். ஒரு நல்ல அட்வைஸ் கொடுங்கள்' என்று கேட்டார். அதற்கு சண்முகத்தை ஒழித்துவிட்டால், மோகனாவை அடையலாம் என்று நீர் சொன்னீர். உடனே அவர் கத்தியைத் தூக்கி எறிந்தார். பிறகு பணத்தோடு உங்களை வந்து சந்திக்கும்படியும், நீங்கள் மோகனாவை அழைத்து வந்து அவரிடம் ஒப்புவிப்பதாகவும் கூறினீர். அதன்படி அதிராம்பட்டணம் வரும்போது போலீசுக்கும் தகவல் கொடுத்துவிட்டீர். போலீஸ் அவரைப் பிடித்துவிட்டது. இதுதானே உண்மையாக நடந்தது?" என்று வக்கீல் குழந்தை ஆணித்தரமாகக் கேட்டார்.

"வக்கீல் சார்! உங்கள் கற்பனை நமக்குமேலே இருக்கு. எங்கேயாவது இது நடக்குமா சார்? எனக்கு மோகனாவை இவரிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று என்ன அக்கறை?"

"பணம்தான். மைனரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று மட்டும் உமக்கு என்ன சார் அக்கறை?"

"அவர் எங்கள் ஊர்க்காரர். தெரிந்த மனிதர். கெட்டிக்காரர் என் நண்பர்."

"அந்த நண்பருக்கு ஒரு மனைவி இருக்கும்போது?"



"சோளேபூர் மகாராஜாவுக்கு எத்தனை மனைவிகள் தெரியுமா? எழுநூறு சார்! ஹிந்து தர்மப்படி, ஒருவன் எத்தனை மனைவிகளை வேணுமானாலும் கலியாணம் பண்ணிக்கலாம் சார்!"

"ஓஹோ! அதன் பிறகு மதன்பூர் மகாராஜாவிடம் சேர்த்துவிட வேண்டுமென்று நினைக்கும்போது?"

"அது மைனரைவிட நல்ல இடம். ஓர் ஆர்ட்டிஸ்ட் நல்லா இருக்கணும்கிற அக்கறை எனக்கு மாத்திரமில்லே சார், உங்களுக்கும் இருக்கணும். நீங்களே சொல்லுங்கோ, மோகனா நல்லா இருக்கணும்னு உங்களுக்கு அக்கறை இல்லியா?"

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்."

"பதில்தான் சொல்றேன் சார்! ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்யணும்னு சொல்லியிருக்கிறது. எனக்குச் சிறு வயது முதலே இந்த விஷயத்திலே ஓர் இண்ட்ரஸ்ட் உண்டு. தக்க பொருள், தக்க இடத்திலே சேரணும்னு நினைப்பேன். இந்த இடத்திலே உண்மையைச் சொன்னால் குத்தமில்லை" என்று சொல்லிவிட்டு வைத்தி ஒருமுறை கனைத்துக்கொண்டார். "சார், நான் அந்தக் காலத்திலே கல்யாண படங்களை எல்லாம் சேகரிப்பேன். புருஷன் மனைவி இரண்டையும் கத்தரிப்பேன். எந்த ஜோடி சரியாக இருக்கிறது என்று பார்த்து ஒன்றோடு ஒன்றைச் சேர்த்து ஒட்டிவிடுவேன். என் ஹாபியே அதுதான்."

"அப்போது விளையாட்டாக ஆரம்பித்தீர். இப்போது அதற்கே பில் வாங்குகிறீர். அவ்வளவுதானே? அதே எண்ணத்தில் நீர் மோகனாவை நாகலிங்கத்திடம் ஒப்புவித்துப் பணம் வாங்க எண்ணினீர் என்கிறேன்!"

இவ்வாறு வக்கீலின் கெட்டிக்காரத்தனமும், வைத்தியின் கெட்டிக்காரத்தனமும் மோதிக்கொண்டிருக்கும்போது, அங்கே இருந்த இன்னொரு ஜீவன் இந்த இடத்தை விட்டு எப்பொழுது வெளியே போவோம் என்று துடித்துக்கொண்டே இருந்தது. அவர்களுடைய சாமர்த்தியத்திற்குத் தான் பலியாகிறோமே என்று தன்னைப்பற்றி அவர்கள் பேசும் போதெல்லாம் நெஞ்சிலே, சொல்லம்பு தைத்து சோர்ந்தாள் மோகனா. அவள் பெயரை வக்கீல் சொல்லும்போது, அவளுக்கு வெட்கம் வந்தது. முகம் சிவந்தது. தலை கவிழ்ந்தது. நாம் ஏன் இக்குலத்தில் பிறந்தோம் என்பதை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தாள். பக்கத்தில் இருக்கும் தன் கணவன் முகத்தைப் பார்க்க அவள் பட்ட வேதனை சொல்லுந் தரமன்று.

அவளுக்கே அப்படியென்றால், சண்முகம் என்ன துடி துடித்திருப்பான்? மோகனாவின் மேல் அக்குலத்தில் பிறந்த ஒன்றைத் தவிர பிறிதொரு குற்றமும் கிடையாது. ஆயினும், அனாவசியமாகத் தன் மனைவியின் பெயரை இன்னொருவர் உச்சரிக்கும் போது, நாலு பேருக்கு முன்னே அவளைப் பற்றிப் பேசும் போதும், அந்தக் கணவனால் அதைச் சகிக்க இயலவில்லை. வக்கீலின் ஒவ்வொரு கேள்வியும், அவளுடைய

இதயத்தைக் கிளறி ஏற்கெனவே இருக்கும் நெஞ்சு வலியை அதிகப்படுத்தியது. கோர்ட்டை விட்டு ஓடிவிடால் போதும் என்று துடித்துக்கொண்டிருந்தான்.

ஆனால் கைதி நாகலிங்கமோ வக்கீல் குழந்தையையும் கவனிக்கவில்லை, வைத்தியையும் கவனிக்கவில்லை. எங்கேயோ வெகுதூரத்தில் நிற்கும் மோகனாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான். 'இந்த வழக்கு இன்னும் இருபத்தைந்து நாட்களாவது நடக்க வேண்டும். தினந்தோறும், அதிகாலையில் இங்கு வந்து முதல் பொழுது சாயும் வரையில் நான் அவளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்' என்பதுதான் அவனுடைய எண்ணம்.

அது நீதிமன்றம் என்பதோ, தன்னைச் சுற்றிலும் கூட்டம் நிற்கிறது என்பதோ, அல்லது தான் ஒரு கைதி என்ற எண்ணமோ அவனுக்கு வரவில்லை. வெறிபிடித்த அந்தக் காமாந்தகாரன், மோகனாவை விழுங்குபவன் போலப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

வடிவாம்பாளுக்கு இந்த வழக்கிலே தன் மகள் பெயர் இழுக்கப் படுவது குற்றமாகத் தோன்றவில்லை. தன் பெயர் இழுக்கப்படுவதும் குற்றமாகத் தோன்றவில்லை. ஆனால் தன் மகளும், மருமகனும் இதை எண்ணி எண்ணிக் கவலைப்படுவதுதான் எதற்கென்று தெரியவில்லை. தலை கவிழ்ந்து அழுதுகொண்டிருக்கும் தன் மகளை அவள் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்.

''என்ன சொல்லிப்பிட்டாங்க உன்னை? எதுக்காக அழறே?'' என்றாள்.

''ஒண்ணுக்கும் இல்லேம்மா, நான் பிறந்ததுக்கு.''

''பூமியிலே பிறந்ததுக்கா, என் வயிற்றிலே பிறந்ததுக்கா?''

இதற்கு மோகனா பதில் சொல்லவில்லை. ஆனால் வரதன் பதில் சொன்னான். ''பின்னே என்னம்மா, திருவாரூரிலே பிறந்ததுக்கா வருத்தப் படுவாங்க? உங்க திரு வயிற்றிலே பிறந்ததுக்காகத்தான் வருத்தப் படுவது. இந்த வைத்தியைக் கூப்பிட்டு நடுவீட்டிலே உட்காரவச்சீங்களில்லே, அந்தப் பாவத்துக்கு!'' என்று சொல்லிவிட்டு, அவசரமாகக் கோர்ட்டார் அருகில் ஓடினான்.

''ஐயா, எஜமான்களே, இந்த வைத்தி ஒரு பொல்லாதவன். அயோக்கியன். நாகலிங்கத்தை நம்பினாலும் நம்பலாம். இந்த நயவஞ்சகனை நம்பப்படாது. எங்க மோகனா வாழ்வை நாச மாக்கணும்னு இவன் செய்யாத சூழ்ச்சி கிடையாது. பேசாத பொய் கிடையாது. ஆனால் அந்தப் பெண்ணை ஆண்டவனும், சண்முகமும் காப்பாத்திட்டாங்க. நாகலிங்கத்தை நாலு வருஷம் தண்டிச்சிங்கன்னா இந்த ஆளை நீங்க நாற்பது வருசம் தண்டிக்கணும்'' என்று தன்னை மறந்து கூச்சலிட்டான்.



''உஸ்... உஸ்...'' என்று சத்தம் கேட்டது. கோர்ட் பியூன் ஓடி வந்து வரதன் கையைப் பிடித்துக்கொண்டான்.

''போ வெளியே!'' என்று தள்ளினான்.

''ஏனுய்யா போகணும்? இந்த இடத்திலே கூடச் சத்தியத்தைச் சொல்லப்படாதா?''

''உன்னைக் கேட்கிறபோது நீ சொல்லலாம்.''

''என்னை இந்தக் கேள்வியெல்லாம் ஒருத்தரும் கேக்கலியே? திருடன் வந்தானா, வண்டியை மறிச்சானான்னுதானே கேட்டாங்க?'' என்று வரதன் கதறினான்.

மறுபடியும் இரைச்சல் அதிகமாகிவிடவே, சேவகனால் வெளியே தள்ளப்பட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மோகனா, மேலும் திகைத்தாள். அதற்குள் வக்கீல் குழந்தையின் கேள்விகள் குறுக்கிட்டன.

''உங்களை நாகலிங்கம் கொழும்பில் சந்தித்தாரா?''

''எனக்கு நினைவில்லை.''

''கடைவீதியிலே உங்களைப் பார்த்தாரா?''

''எனக்கு ஞாபகமில்லே.''

''ரயில்வே ஸ்டேஷனிலே உங்களைப் பார்த்தாரா?''

''ஐ டோண்ட் ரிமெம்பர் சார்.''

''ஏன், நினைவில்லாத நிலையில் அப்போது இருந்தீர்களா?''

''அனாவசியமான கேள்வி. உங்களுக்கு ஒரு ஜெண்டில்மேனைப் பார்த்து இன்ஸல்ட் பண்ணறதுக்கு அதிகாரம் கிடையாது சார். நான் சாட்சிக்கு வந்தவன். குற்றவாளி அல்ல.''

''சரி, அவரை நீங்கள் மாங்குளம் ஸ்டேஷனில் வந்து, உங்களைச் சந்திக்கும்படியாகச் சொன்னது உண்டா?''

''அது எப்படி சார் சொல்லுவேன்! 'மாங்குளம் ஸ்டேஷனுக்கு வா. நான் ரயிலிலே மல்லாந்து படுத்துக்கிட்டுத் தூங்கறேன். என் மணிபர்ஸை எடுத்துக்கொண்டு போ'ன்னு நான் அட்வைஸ் பண்ணுவேனா? என்ன சார் குழந்தை மாதிரி சில்லியா கேள்வி கேட்கிறீங்க?''

''என் பேரே குழந்தைதான் சார். நான் சொல்கிறேன் திருவாரூரில் அவரிடம் பணத்தை வாங்கிக்கொண்டு நீர் அவரை மோசம் செய்து, போலீசுக்கு இன்பர்மேஷன் கொடுத்துவிட்டீர். இதனால் அவர் உம்மைக் கொழும்பில் சந்தித்தபோது, பணத்தைக் கொடு என்ற பலவந்தமாகக் கேட்டார். மாங்குளத்தில் தருவதாகச் சொன்னீர். மாங்குளத்தில் அவர் ரயிலில் ஏறினார். அவரிடம் பணத்தைக் கொடுத்தீர். அது மகாராஜாவின் பணம் ஆகையால் சொந்தச் செலவு செய்ததற்குப் பயந்துகொண்டு பணம் திருடு போய்விட்டதாகப் பொய்ப்புகார் செய்தீர்.''

''சார், இதெல்லாம் பொய்.''

''நான் சொல்லவில்லை. என் கட்சிக்காரர் சொல்கிறார்.''

''சார், அவர் கொலையே செய்யத் துணிந்தவர். அவர் வாயாலே பொய் சொன்னால் ஆச்சரியமில்லை. நீங்கள் படித்தவர்கள். நீங்களே சொன்னால்!''

''இதை நீங்கள் மறுப்பதாக இருந்தால் மறுக்கலாம்.''

''அவ்வளவும் பொய் சார். இவனைக் கொழும்பிலே காணும்போது யாரோ ஒரு நொண்டிப் பிச்சைக்காரன்னு நினைச்சேன். இப்படிப் பட்டவன், மாங்குளம் ஸ்டேஷனில் திருடுவான்னு தெரியாது. ஆனால் நல்லூரிலே மணிமண்டபத்திலே இவன் ஏறி மோகனாவைப் பார்த்தான். அப்பொழுதுதான் எனக்கு இவன் மேலே சந்தேகம் வந்தது'' என்று சொல்லி முடித்தார் வைத்தி.

அதன் பிறகு, ''பெரிய மனசு பண்ணி, என் பையிலே இருந்து எடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கோ சார். நான் வாங்கிக் கொண்டு ஊருக்குப் போகிறேன்'' என்று வைத்தி சொல்லவே கோர்ட்டில் இருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

ஆனால் அதன் பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் கன்னையா நாயுடுவின் சாட்சியத்தால் வைத்திமீது வக்கீல் சாட்டிய குற்றங்கள் உடைந்தன. நாகலிங்கத்துக்கு ஒவ்வொரு குற்றத்துக்கும் மொத்தம் கூட்டி ஏழு வருஷம் தண்டனை விதிக்கப்பட்டது.

''நாகலிங்கம், உம் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்பது குற்றங்கள். இவ்வளவு குற்றத்திற்கும் காரணம் உமது கல்வி அறிவின்மை என்று நான் நினைக்கிறேன்,'' என்று நீதிபதி கூறினார். நாகலிங்கம் கடகட வென்று சிரித்தான்.

''அது இல்லிங்க காரணம். ஒண்ணு போரில் சாகணும், இல்லாட்டி பொண்ணுக்காகச் சாகணும். நான் நினைச்ச பெண்ணை அடையாம விடமாட்டேங்க. நீங்க ஏழு வருசமில்லே, எத்தனை வருசம் தண்டனை கொடுத்தாலும் சரிதான். இந்த மோகனா என் கையிலேயிருந்து தப்ப முடியாது. ஆனால் அதுக்குள்ளே, நான் செத்தால் வேறே விஷயம், பிசாசாகவாவது வந்து அவளைப் பிடிச்சுக்குவேன். ஏ, மோகனா, உன்னை சும்மா விட்டுவிட்டுப் போவேனா?'' என்று ஆடிக் குதித்து அலறிவிட்டு அந்த அரக்கன் கடகட வென்று சிரித்தான். பாவம், அவனைத் தண்டித்த நீதிபதியே அவன் முரட்டுத்தனத்துக்கு மனம் வருந்தினார். ஆனால் அவன் கூறிய வார்த்தைகள் மோகனா, சண்முகம் இருவருடைய உள்ளத்திலும் பயத்தை உண்டாக்கின. அவன் கடகட வென்று சிரித்த சிரிப்பு, அவர்கள் அடிவயிற்றில் நெருப்பை வைத்தது போலிருந்தது.

அன்று மாலை, அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குக் கோவில் நிர்வாகிகளும், அழகர் கோவில் தேவஸ்தானத்திலிருந்து டிரஸ்டியும் வந்தார்கள். அழகர் கோவிலுக்கும், மீனாட்சி கோவிலுக்கும் இருவரும் வரவேண்டுமென்று அழைத்தார்கள். நாதஸ்வரம் வாசிக்கவேண்டு



மென்று கேட்டார்கள். சண்முகம் அதற்கு வேம்பைப் போலப் பதில் அளித்தான். கனிப்பூட்டும் அவன் பேச்சு அன்று கசந்தது.

''நான் எதுக்காகக் கோவில் வாசலுக்கு வரணும்? அங்கேயிருந்து வரவன் போறவன் கிட்டே பிச்சை கேட்கவா? இல்லே, குருக்கள் ஐயாகிட்டே அர்ச்சனை பண்ணச் சொல்லி, பார்த்துக்கிட்டு இருக்கவா? என் கையிலே நாதஸ்வரத்தை எடுத்து நான் திரும்ப ஊதற அன்னிக்கு மீனாட்சிக்கு முன்னாலே வந்து நிக்கிறேன். சொக்கலிங்கத்தின் முன் வந்து ஊதுகிறேன். இந்தத் தெய்வங்கள் எல்லாம்தான் என் வாசிப்பிலே அக்கறை வைக்கலியே! இப்ப என்னுடைய சங்கீதத்தைவிட, சட்டமில்லே உசத்தியா போச்சு! இனி நான் ஒரு கோவில் வாசற்படி மிதிக்கப் போவதில்லே'' என்று பொரிந்தான்.

''அப்படியில்லிங்க மாப்பிள்ளை. ஏதோ அழகர் கோவிலிலேதான் நீங்கள் ஒருத்தரையொருத்தர் பாத்து ஆசைப்பட்டீங்க. அந்த அழகு மலையான்தான் காப்பாத்தினாரு. அங்கே மட்டும் ஒருவாட்டி போயிட்டு வந்துடுவோம்'' என்றாள் வடிவாம்பாள்.

''இந்தாப் பாருங்க, பாதி தோடிதான் ஊதி இருக்கேன் அழகர் கோவிலிலே. இன்னும் பாதி தோடி அந்தச் சாமிக்கே பாக்கி இருக்கு. அந்தச் சாமிக்கு சங்கீத ஞானம் இருந்தா, அந்தப் பாதி தோடியை கேட்கிறதுக்காகவாவது என்னைத் திரும்பவும் வாசிக்க ஏற்பாடு செய்யட்டும். நான் வரலே அத்தே கோவிலுக்கு. நீங்க வேணும்னா உங்க மகளைக் கூட்டிக்கிட்டுப் போங்க'' என்று முடிவாகக் கூறினான் சண்முகம்.

''நானும் வரலே அம்மா. அவங்க வராதபோது, நான் எதுக்கு?'' என்றாள் மோகனா.

''இல்லே பொண்ணு. என்ன குத்தமோ, என்ன குறையோ இந்தத் தம்பி பாதி வாசிக்கலேங்கிறதுதான் குத்தமோ, என்னமோ?''

''அத்தே! அப்படியும் இருக்கலாம். நான் இன்னிக்கே வருகிறேன். வாசிக்கப்படாதுன்னு உத்தரவுதானே ஒழிய, என் கையை ஒருத்தரும் கட்டலே. என் நாதஸ்வரத்தை யாரும் பறிக்கலே. வந்து, அழகர் கோவிலிலே வாசிக்கிறேன். காகிதத்திலே கையெழுத்துப் போட்டுட்டு, சும்மா இருக்கிறதைவிட, ஆத்திரத்திலே வாசிச்சு என் தெய்வத்தை ஆராதித்து அரெஸ்டாகி உள்ளே போனாலும் போகலாம். எத்தனை நாளைக்குத்தான் என் இசையைத் தொழாமல் இருப்பேன்? இன்றைக்குத் துணிந்து வாசித்துவிடுகிறேன். ஐயா, இன்று மதுரையில் வாசிக்கிறேன். நாளைக்கு அழகர் கோவிலில் வாசிக்கிறேன். அடுத்த நாள் திருப்பரங்குன்றத்தில் வாசிக்கிறேன். ஏற்பாடு செய்யுங்கள். ஏய், தருமண்ணே, எடு என் நாதஸ்வரத்தை!'' என்று ஆத்திரத்தோடு சண்முகம் கூறினான். மோகனா நடுங்கினாள்.

''அத்தான், சிற்றம்பலம் குமாரசாமிக்குக் கொடுத்த வாக்கு என்ன ஆவது?'' என்றாள் மோகனா.

அதற்குள் முத்துக்குமார நட்டுவனார் ஓடிவந்து, அவன் கையைப் பிடித்துக்கொண்டார்.

''தம்பி, சட்டம் பெரிசு!''

''சங்கீதம் அதைவிடப் பெரிசு!''

''செங்கோலுக்கு முன்னாலே சங்கீதமா? அது செல்லாது தம்பி. ஆத்திரத்திலே அறிவை விட்டுவிடப்படாது. வழக்கை வழக்காடித்தான் ஜெயிக்கவேண்டும். ஐயா, உங்கள் எல்லோரையும் கும்பிடறேன். இப்பொழுது தம்பியை வாசிக்கச் சொல்லாதீங்க'' என்று கேட்டுக் கொண்டார் நட்டுவனார்.

தேவஸ்தான நிர்வாகிகள் வருத்தத்தோடு திரும்பினார்கள்.

அன்று முழுவதும் சண்முகம் காப்பிகூடக் குடிக்கவில்லை. சாப்பாடு சாப்பிடவில்லை. பைத்தியம் பிடித்தவன்போல, தன் கையில் இருக்கும் நாதஸ்வரத்தை யாரோ பறித்துக்கொண்டு போய்விட்டார்களே என்று எண்ணிக் கவலையில் ஆழ்ந்தான். மார்பில் தாங்கமுடியாத வலி உண்டாயிற்று. ஆடி மாதத்தில் மாப்பிள்ளை போல சந்தனம் பூசிக் கொண்டு, அதே மதுரையில் ரயிலிலே ஏறிய சண்முகம், இன்றைக்குத் தாங்கமாட்டாத துக்கத்தோடு, மார்பில் சுக்கு அரைத்துப் பூசியபடி ரயிலில் ஏறினான். வண்டி தஞ்சாவூரை நோக்கிப் புறப்பட்டது.

ஆமாம், தஞ்சாவூரில் மோகனாவின் கச்சேரி இருக்கிறது அல்லவா?

முப்பதாம் அத்தியாயம்

## மணக்குரங்கும் மரக்குரங்கும்



உலகில் சில பெரிய மனிதர்கள் காலணாக்கூட வரதட்சணை வாங்கமாட்டார்கள். ''பதினாயிரமோ, இருபதினாயிரமோ பையனின் படிப்புச் செலவுக்கென்று கொடுத்துவிடுங்கள்'' என்று கண்டிப்பாகக் கூறிவிடுவார்கள். இதற்குக் காரணம் வேறு ஒன்றுமில்லை. பெண்ணின் பணத்தில் பிழைப்பது என்ற செயல் நம் நாட்டில் பண்புக் குறைவாகக் கருதப்படுவதுதான்.

ஆண் மகன் எதையும் பொறுத்துக் கொள்வான். பெண் பிள்ளை பணத்தில் பிழைக்கிறான் என்ற சொல்லைப் பொறுக்கமாட்டான். அதுவும் அக்காலத்தில் பெண்கள் பூப்போன்றவர்கள். அவர்களைச் சம்பாதிக்கச் சொல்வது ஆண் குலத்திற்கே கேவலம் என்ற தப்பான அபிப்பிராயம் இருந்து வந்தது. அதிலும் படிப்பு, உலக நாகரிகம் இவைகளை அறியாத சண்முகத்துக்கு அந்த எண்ணம் இருந்ததில் வியப்பில்லை.



'அவள் ஆயிரம் கச்சேரி செய்யட்டும். இலவசமாக ஆடட்டும். அதற்கு மாறாக அவள் கச்சேரி செய்து, அந்தப் பணத்திற்கு நான் கையெழுத்துப் போட்டு, என் கையால் வாங்குவது நாக வாழ்விலும் கேவலமானது' என்று அவன் எண்ணியபோது, அவனுக்கு அந்த நெஞ்சு வலி நூறு பங்கு அதிகமாயிற்று. எந்த மருந்தைக் கொடுத்தும், மார்பு வலி குறையவில்லை. மனம் உடலையும் பாதிக்கும் என்பதை, அன்று அவன் உடல் எடுத்துக் காட்டியது.

அவனுக்கு வந்த ஆத்திரத்தில், அந்தத் தஞ்சாவூர்க் கச்சேரியை நிறுத்திவிடக்கூடத் தயாராக இருந்தான். இவனை வாசிக்க வேண்டாமென்று வருந்திக் கேட்டுக்கொண்ட நட்டுவனார், வடிவாம்பாள் பக்கம் திரும்பி, நாட்டியக் கச்சேரி நடத்த வேண்டா மென்று சொல்லியிருக்கக் கூடாதா என்றுகூட எண்ணினான்.

மோகனாவின் ஆட்டத்திலும், அவளுக்குப் புகழ் வருவதிலும் அவனுக்குப் பொறாமை கிடையாது. ஆனால் தான் வாசிக்காமல் கையைக் கட்டிக்கொண்டு இருக்கும் சமயத்தில் தன் மனைவி ஆடுவதும்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை.

மோகனாவின் கண்களில் ரயில் கிளம்பும் முன்பே கண்ணீர் சுரந்தது. ஆனால் அவன் அதை ஊதி அணைக்கவுமில்லை. கடலில் அலை ஏராளமாக அடிக்கிறது. ஆனால் அத்தனை அலைகளும் கரையில் வந்து மோதுவதில்லை. தண்ணீரிலேயே அடுத்து வரும் பேரலையில் அடிபட்டுச் சிதைந்து விடுவது உண்டு. இதைப் போலவே எண்ண மெல்லாம் பேச்சாய் வருவதில்லை. எண்ணத்தை வடிகட்டி வெளியிடும் சல்லடை தானே பாஷை? அவன் மௌனமாக வந்தான். இந்நிலையில் ரயிலும் வாழ்க்கையைப் போல ஓடிக்கொண்டே இருந்தது.

ஆனால் வண்டியில் ஏறிப்படுத்த வடிவாம்பாளோ கண்ணயர்ந்து விட்டாள். 'தன் மகளும், மருமகனும் ஏதாவது பேசிக்கொண்டு வருவார்கள். அதற்கு இடையூறாக நாம் கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண்டு இருக்க வேண்டாம்' என்ற நல்ல எண்ணத்தால், அவள் தூங்கினாள் என்று நாம் சொல்லவில்லை. தூக்கம் அவளுக்கு இயற்கை.

வண்டி போகும்போது, அதன் சக்கரம் எப்படி இயற்கையாக ஓடுமோ, அப்படியே வடிவாம்பாள் தூங்கினால்தான் வண்டிகளும் ஓடும். வண்டி ஓடினால்தான் அவள் தூங்குவாள். ஒரு சிறிய கைகாட்டி மரத்துக்காக வண்டி நின்றால்கூட வடிவாம்பாள் விழித்துக்கொண்டு விடுவாள். ஒவ்வொரு ஸ்டேஷனின் பெயரையும் அவளுக்குப் படித்தாக

வேண்டும்; அல்லது பக்கத்தில் இருப்பவர்களிடம் கேட்டாவது ஆக வேண்டும்.

தன்னை அறியாமல் தஞ்சாவூர் ஸ்டேஷன் தாண்டிவிடக் கூடாதே என்ற பயம். சிலர் வண்டியில் ஏறிப் படுப்பார்கள். தஞ்சையில் இறங்க வேண்டியதற்குப் பதிலாகக் கும்பகோணத்தில் போய் விழிப்பார்கள். அங்கிருந்து அடுத்த ரயிலில் தஞ்சாவூருக்கு வருவார்கள். வடிவாம்பாள் அப்படி அல்ல. குடும்பத் தலைவியல்லவா? குறிப்பிட்ட இடத்திலே இறங்கவேண்டுமென்ற கவலை எப்பொழுதுமே அவளுக்கு உண்டு. ஆதலால், வண்டி நின்றவுடன் விழித்துக்கொள்வாள். ஆனால் இந்த ரயிலோ சோழவந்தானை விட்டுப் புறப்பட்டது முதல் திண்டுக்கல் வரையில் நிற்காமல் போய்க்கொண்டேயிருந்தது. அவளும் திறக்காமல் தூங்கிக்கொண்டே இருந்தாள்.

இப்படி அவள் தூங்கினாலும், அந்த மகனோ, அல்லது மருமகளோ வாய் திறந்து பேசவில்லை. மோகனாவின் மனதில் சண்முகத்தோடு பேசவேண்டுமென்ற எண்ணம் துடித்தது. இன்று அவன் இருக்கும் நிலையையும், அவன் மனம் படும்பாட்டையும் அவன் நெஞ்சு வலியால் துடிப்பதையும் ஒவ்வொரு கணமும் அவள் கண்டுகொண்டிருந்தாலும், அவ்வளவு பெரிய கூட்டத்துக்கு நடுவே அவனைக் கூப்பிட்டுப் பேச வெட்கப்பட்டாள். ஆயிரம்தான் கணவன் மனைவியாக இருந்தாலும், இந்த நாசம் அற்றுப்போன நாட்டின் பழக்கவழக்கங்கள்தாம் அவர்களைப் பேச விடுவது இல்லையே!

மோகனா சண்முகத்தின் முகத்தைப் பார்த்தாள். அழகு பொங்கி வழியும் முகத்தில் அன்று கவலை குடிகொண்டிருந்தது. மோகனச் சிரிப்புக்குப் பதில் அவன் முகம் கடுகடுவென்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. உள்ளே இருக்கும் விஷத்தை புஸ் புஸ் என்று ஊதி வெளியிடும் பாம்பு போல அவன் உள்ளத்தில் இருக்கும் கனலை அவனது பெருமூச்சுகள் வெளியிட்டுக்கொண்டிருந்தன.

மோகனா நினைத்தாள்: 'என்னதான் தாங்க முடியாத துயரம் அவருக்கு? நடேசன் எங்கு போனார் என்ற ஏக்கமா? அல்லது நம்மால் அவர் கோர்ட்டில் தலைகுனியும் வண்ணம் வந்துவிட்டதே என்ற கவலையா? இருந்திருந்தும் இவளைப் போய்க் கலியாணம் செய்து கொண்டோமே! மறு வீடு போவதும், தன் வீடு வருவதும், விருந்து உண்ணப் போவதும், வீட்டில் ஒரு வேளை சாப்பிடுவதுமாக இருக்க வேண்டிய இந்தக் கல்யாணச் சந்தடியில், மதுரைக் கோர்ட்டில் வந்து மாட்டிக்கொண்டோமே என்று கவலைப்படுகிறாரோ? அந்த வக்கீல்கள் அவளை என்னென்ன கேள்விகள் கேட்கிறார்கள்? வேறு ஒரு குடும்பப் பெண்ணைப் பார்த்து இம்மாதிரிக் கேள்விகள் கேட்க முடியுமா? சே, இவளால் நம் மானம் போய்விட்டது என்றுதான் அத்தான் கவலைப் படுகிறாரோ?' என்று அவள் எண்ணியவுடனே கண்ணீர் விட்டாள்.



அதன்பின் கணவன் முகத்தைப் பார்க்கத் திரும்பும்போதெல்லாம் கண்ணீர் வந்து மறைத்தது. அவனிடம் வாய் திறந்து பேச நினைத்தபோதெல்லாம் அழுகை தொண்டையை அடைத்தது.

அந்த மகாமேருவுக்கு முன்னே, அவள் ஒரு ஈ போல் அவளுக்குத் தோன்றியது. 'மாபெரும் வித்வான் ஒருவருடைய வாழ்க்கையில் நான் புகுந்து, வேண்டுமென்றே அவருக்குத் தீராத கவலையைக் கொடுத்து விட்டேனே! மானம் என்பதற்காகவே உயிர் வாழும் அவரிடம் அவமானம் ஒட்டியதுபோல, நான் ஒட்டிவிட்டேனே! நம்மால் அவருக்கு எத்தனை அவமானம்! கோர்ட்டில் அவர் நிற்கும்போது தலை குனிந்து கொண்டே நின்றாரே! சிங்கம் போல் தலை நிமிர்ந்து, சீறிச் சீறி நடந்து, எங்கும் இசை மணக்க உலவும் அந்த ஆண் சிங்கம், என்னால் அல்லவோ தலைகுனிந்து நின்றது' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

அடுத்த கணத்தில், 'நாம் என்ன தவறு செய்தோம்? விலை கூறும் பொருளை எல்லோரும்தான் விலைக்குக் கேட்பார்கள். தாசி குலத்தில் நான் பிறந்துவிட்டேன். அதனால் பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல நம்மையும் ஈக்கள் கூட்டம் மொய்த்துக்கொண்டிருந்தது. நான்தான் இப்போது எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டுவிட்டேனே! என் இதயத்தைத்தான் இவரே விலை கொண்டுவிட்டாரே. யார் எப்படிப் பேசினால் எனக்கு என்ன? யார் என்ன நினைத்தால்தான் எனக்கு என்ன?' என்று எண்ணினாள்.

பேதைமையால் தெளிந்த உள்ளம் பெண் மாணிக்கமாய் ஒளி வீசியது. அவள் கவலை பறந்தது. முகத்திலே ஒரு செழிப்பு ஏற்பட்டது. கண்ணீர் வற்றியது. கண்களில் ஒளி பிறந்தது. தன் வரையில் குற்றமற்றவன் என்று ஒருவனுக்கு மனச்சாட்சியில் ஏற்படும் இன்பத்தை அவள் அன்று அடைந்தது போல வேறு என்றும் அடைந்ததில்லை. தன் கணவன் பக்கம் திரும்பினாள். குனிந்த தலை நிமிராது குலப்பெண் போல இருக்கும் அவனைக் கண்டாள். இன்று அவனைச் சிரிக்க வைத்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டாள். உடனே அவள் மனதில் யாரோ, 'ஏண்டி, கோர்ட்டில் சிரிச்சது போதாதா? இன்னுமா சிரிக்க வைக்கப் போகிறாய்?' என்று கேட்பது போல் இருந்தது. அதற்கும் அவளே சிரித்தாள்.

அப்போது "மணப்பாறை, மணப்பாறை" என்று ஒருவன் கூவினான். மோகனா கவனித்தாள். தன் மனதைப் பாறையாக்கிக் கொண்டது அந்த ஆளுக்கு எப்படித் தெரிந்தது என்று நகைத்தாள். வண்டி மணப்பாறையைத் தாண்டிப் புறப்பட்டது.

"என்ன அத்தான், ஏதாவது புது ராகம் கண்டு பிடிக்கிறீங்களா?" என்று சிரித்துக்கொண்டே அவனிடம் கேட்டாள்.

"பழைய ராகத்திலேயே ஊத வேண்டியது ரொம்பப் பாக்கி யிருக்கே!"

"பிறகு என்ன இவ்வளவு யோசனை?"

"அதுக்குள்ளே பையைப் பிடுங்கிக்கிட்டுப் போயிட்டானே" என்று சொல்லி, கேலிச் சிரிப்பாகச் சிரித்தான் சண்முகம்.

"பையைத் திருப்பி வாங்காமலா போறோம்!"

"பையைத் திருப்பி வாங்கிக்கலாம்கிறாயா? ஆனால் அதுவரை பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே!" என்று பெருமூச்சு விட்டான் சண்முகம்.

"உங்களுக்கு அப்படியில்லே, நீங்கள் ஊதாத நாளெல்லாம் உலகத்துக்கு உதவாத நாளே."

"என்ன செய்யுறது? உனக்கு வித்தையை உடலில் வைத்தார் கடவுள். நமக்கு ஊதுகுழல் தயவு வேண்டி இருக்கிறது."

"என்ன அத்தான், குறைபட்டுக்கிறீங்க?" என்று வருத்தத்துடன் வினவினாள் அந்த வனிதை.

"எனக்கு என்ன மோகனா, ஒரு குறையும் இல்லே. மாமியார் வீட்டுச் சாப்பாடு வேளாவேளைக்கு நடக்குது. நல்ல வெற்றிலை, சீவல், புகையிலைக்கும் குறைச்சல் இல்லை. நீ வேறே ஆடுவே, சந்தோஷமா பார்த்துக்கிட்டு இருக்கலாம். ஐயா, இப்போ ஜமீன்தாராயிட்டா ரில்லே!" என்று அவன் சிரித்துக்கொண்டே சொல்லியபோது, சர்க்கரை தடவிய விஷம் போல அந்த வார்த்தைகள் அவலைக் கக்கின.

"என்னமோ அந்த மட்டிலாவது உங்களுக்குத் தொண்டு செய்ய எங்களுக்குக் கொடுத்து வச்சு இருக்குதே!" என்று அவளும் அதே ராகத்தில் விடை பகர்ந்தாள்.

மறுபடியும் மௌனம். வண்டி போய்க்கொண்டிருந்தது. வார்த்தைகள் அடங்கிக் கிடந்தன.

"அத்தான், உங்களுக்கு அந்தக் கோர்ட் நடவடிக்கைகள் எல்லாம் பிடிக்கவேயில்லே, இல்லே?"

"பிடிக்கவில்லையா? எவ்வளவு ஆனந்தமாக இருந்தேன்! மற்ற வித்வான்களுக்கெல்லாம் வாதி சம்வாதிதான் தெரியும், நமக்கு வாதி, பிரதிவாதி, சாட்சி, மனச்சாட்சி எல்லாம் தெரிஞ்சு போச்சே எல்லாரும் நம்ப பாடி ஆடினாத்தான் பார்க்கவும் கேட்கவும் ஆசைப்படுவாங்கன்னு நினைச்சேன். இன்னிக்கு பாரு. இரண்டு பேர் பேச்சையும் கேட்கிறதுக் காகவே அத்தனை கூட்டம் கூடியிருந்ததே. எத்தனைதான் பைரவி, கல்யாணியை வாசிச்சாலும், தர்பாரு தர்பார்தான். இன்னிக்கு நாம் தர்பாருலே நின்னு சாட்சி சொன்னபோது இருந்த இந்தச் சந்தோஷம் ஜனங்களுக்கு எப்பவும் ஏற்படாது."

"அதுக்காக நான் என்ன அத்தான் செய்வேன்! ராசாங்கத்தின் உத்தரவைத் தள்ள முடியுமா? சாட்சி சொல்லித்தானே ஆகணும். ஆனால் ஒன்று, அழகர் கோவிலில்தான் எனக்கு அன்பும் கிடைத்தது, விரோதமும்



கிடைத்தது. விரோதம் தொலைந்து போயிடுத்து. இனிமேல் அன்பு எப்பவும் நீடித்து நிற்கும். இந்தக் கேஸ் ஒரு வழியாக முடிந்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்."

"நான் அப்படிச் சந்தோஷப்பட முடியாதே! உலகத்திலே நாகலிங்கம் ஒருத்தன்தானா என் எதிரி? உன் அழகிலே ஆசைப்பட்ட அத்தனை பேரும் என் எதிரிகள்!"

"சும்மா பேச்சுக்குப் பேச்சு இது ஒன்னு சொல்லிக்கிட்டு இருக்காதீங்க. என் அழகிலே இனிமே ஒருத்தரும் ஆசைப்பட மாட்டாங்க. இந்த உலகம் அக்கா, தங்கையோடு பிறந்ததுதான். என் அத்தான், உங்களுக்கு என்ன அத்தான் கவலை?"

"கவலையா? ஒன்னுமே கிடையாதே. இருந்த வெட்கம், மானம், வெறுப்பு, விருப்பு எல்லாவற்றையும் உதறி எறிந்துட்டுத்தானே அந்தக் கச்சேரி வாசல் படியை மிதிச்சேன்? இல்லாட்டி, அந்த வக்கீலும் வைத்தியும் சேர்ந்து நம்மையே கச்சேரி நடத்த விட்டிருப்பேனா?"

"பின்னே ஏன் உங்க முகம் ஒரு மாதிரியாக இருக்குது?"

"இல்லியே, நல்லாத்தானே இருக்கு. கோர்ட்டிலே சாட்சி சொல்லப் போகணுங்கிறதுக்காக முகக்ஷவரம்கூடப் பண்ணிக்கிட்டேனே!"

"அதிலே அழகு வராது அத்தான். உள்ளத்திலே தெளிவு இருந்தாத்தான் முகத்திலே அழகு வரும். உங்களுக்கு மனசுக்குள்ளே, ஏதோ குழப்பம்" என்று அவள் சொல்லும்போது, அவளுடைய கண்கள் கலங்கின. இதைக் கவனித்த சண்முகம், தன் குழப்பத்தை உதற எண்ணினான். அவளுக்கு ஆறுதலாகப் பேச வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான்.

"மோகனா, மைனர் மேஜராகி அதிகாரம் கைக்கு வந்தவுடனே, எவ்வளவு குழப்பங்கள் இருக்கும் தெரியுமா? அத்தனை சொத்துக்களையும் ஆண்டு எப்படி அனுபவிக்கிறதுன்னு பிரமிக்க விடுவாங்க. அது மாதிரி எனக்கும் ஒரு குழப்பம்."

"உங்களுக்கு எந்தச் சொத்து இப்ப கைக்கு வந்துடுத்து?"

"நீதான் அந்தச் சொத்து. பொன், வெள்ளி, வைரம் இவைகளைக் காட்டிலும் நீ பெரிய புதையல்! அந்தக் கோர்ட்டிலேகூட அத்தனை பேர்களும் உன்னையே பார்த்தார்களே! நீ பெரிய செல்வமில்லையா?"

"இல்லே அத்தான், மறைக்கிறீங்க. உண்மையாகச் சொல்லப் போனா, என் கழுத்திலே நீங்க தாலி கட்டினத்துக்கப்புறம் நீங்க சிரித்து நான் பார்க்கவேயில்லை."

"இதுதானே? பொய் சொல்லாதே நான் சிரிக்கவேயில்லியா?" என்று சிரித்தான் சண்முகம்.

"இல்லவேயில்லை, சிரிக்கிறமாதிரி பாசாங்கு பண்றீங்க."

"அப்படியானால் சிரிப்பையும் தாண்டிவிட்டது என்னுடைய ஆனந்தம்."

''இல்லே, உங்க மனசுக்குள்ளே ஏதோ ஒரு பெரிய போராட்டம். இவளை ஏன் கலியாணம் பண்ணிக்கிட்டோம்னு நீங்க நினைக்கிறீங்க.''

''நீ அப்படி நினைக்கிறே போல் இருக்கு. அதனால்தான் இப்படிச் சொல்லறே!''

''பெண்ணுக்கு அந்த எண்ணம் தோணாது அத்தான். பெண்ணும் பேயும் பிடிச்சால் பிடித்த பிடிதான். உங்களைத்தான் கோர்ட்டிலே பார்த்தேனே. அந்த வக்கீல் என்னைக் கேள்விகள் கேட்கிறபோதெல்லாம், நீங்க தலையைக் குனிந்துகிட்டே நின்னீங்களே! அந்தச் சமயம் பார்த்து, யாராவது வந்து ஒருத்தர் திடீரென்று உங்ககிட்டே இவ புருஷன் நீங்கதானான்னு ஒரு கேள்வி கேட்டிருந்தா, தெரியும்? 'நானா? இல்லையே. தெரியாமே செஞ்சுட்டேன்'னு உளறி இருப்பீங்க.''

''ஏன் மோகனா உனக்கு இந்தச் சந்தேகம்? நான் ஒரு ராகத்தை ஊத ஆரம்பிச்சுட்டா வேறு எந்த ராகமும் கலக்காது மோகனா.''

''அப்படியிருந்தால் உங்களுக்கு வேறு என்ன கவலை? ஏன் வருத்தப்படறீங்க, சொல்லுங்க!''

''என்னுடைய சந்தோஷம் வெளியே தெரியவேண்டுமானால், எனக்கு அதை வாயால் சொல்லத் தெரியாது; சிரிக்கத் தெரியாது. என் நாதஸ்வரம்தான் என் உணர்ச்சியைச் சொல்லும். இந்த ஒரு மாதமாக அது என் பக்கத்தில் இல்லாதது எனக்கு உயிரே போனதுபோல் இருக்கிறது.''

''நான் உங்க பக்கத்திலேயிருக்கிறேனே, உங்களுக்குச் சந்தோஷம் இல்லையா?''

''நீ பக்கத்திலேதானா இருக்கிறாய்? உள்ளத்திலும் இருக்கிறாய்.''

''அப்படின்னா உங்கள் உயிரில் நான் இல்லியா?''

''அல்ல. என் உயிர் நாதஸ்வரம்தான். அதைக் கையில் எடுத்து ஊதற வரையில் எனக்கு நிம்மதி வராது.''

''ஏன் அத்தான், இந்த வைத்தி நாம் எங்கு போனாலும் கூடவே வருகிறார்?''

''கிரகங்களே அப்படித்தான்.''

''கேட்டால்?''

''ஆமாம் மோகனா. பருந்து உயரப் பறக்கும், பாம்பு தரையில் இருக்கும். பாவிகள் கூடவே இருப்பார்கள். அதற்கும் தப்பித்தான் ஜீவன்கள் வாழுகின்றன.''

''அப்படியானால் நாம் என்ன தவளையா?''

''கிணற்றுத் தவளைகள். நமக்கு நம் கவலைதானே தெரியும்? ஆமாம், வைத்தி நினைவு உனக்கேன் வந்தது?''

''இல்லே, கேட்டேன்.''

''சும்மா சொல்லு!''



''அந்த ஆளுக்கு ஒரு ஆயிரம், ஐந்நூறைக் கொடுத்து, அந்தச் சனியன் பகையே இல்லாமல் செய்துவிட்டால் என்ன?''

''ஓஹோ, என் நாதஸ்வரத்தை விலைக்கு வாங்கச் சொல்கிறாயா?''

''வேண்டாம். இப்பத்தான் கலியாணம் ஆகிவிட்டதே. இனிமேல் எனக்கு யாரிடமும் பயமில்லை. சீமைக்கே போவோம், வாங்க!''

''இது நல்ல யோசனை.... முந்தி விலைக்கு வாங்கத்தான் சொன்னாய். இப்போது மகாராஜாவிடம் பிச்சையே வாங்கச் சொல்லு கிறாய். ஆனால் எனக்கு ஒரு வருத்தம். உன்னுடைய ஆட்டத்தைச் சீமையில் உள்ளவர்கள் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே என்பதுதான் அது. நான் உன்னை ஒன்று கேட்கிறேன், பதில் சொல். உன்னை ஆடாமல் இரு என்று நான் சொன்னால் ஒரு நாளைக்காவது உன்னால் சும்மா இருக்க முடியுமா?'' என்று குறும்புடன் கேட்டான் சண்முகம். ஆனால் அந்தக் குறும்பு இரும்பைக்காட்டிலும் வலியதாயிருந்தது.

மோகனா சிரித்தாள். அவளுடைய மனதில் இந்தக் கேள்வி புகுந்து என்னவோ செய்தது. ''பெற்று வளர்த்த தாய் தகப்பனையே மறந்து விட்டுப் புருஷன் வீட்டுக்குப் போகிற பெண்கள் ஆட்டத்தையா மறக்க முடியாது'' என்று சிரித்துக்கொண்டே அவள் வார்த்தைகளை முத்து உதிர்த்தாள். சண்முகம் அவளையே ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய இதயம் எதையோ சொல்லத் தூண்டியது. நாவு பேச மறுத்தது. அதையும் மறைத்துக்கொண்டு அவன் சிரித்தான்.

''ஏன் புள்ளே, அப்பா அம்மாவை மறந்துடலாம். ஆட்டத்தை மறக்க முடியுமா?''

''ஏன் அத்தான், மறக்கணும்னு என்ன? அது ரத்தத்தோடு இருந்துட்டுப் போவுது.''

மறுபடியும் மௌனம். வண்டி ஓடியது.

''எங்க அம்மாவுக்கு வக்கீல் கேள்விகள் எல்லாம் ஒண்ணும் செய்யலியே!'' என்றாள் மோகனா.

''உங்க அம்மா பாவம், அவுங்களுக்கு வெளுத்தது எல்லாம் பால். தவிர அவுங்க பொறுப்பு எல்லாம் தீர்ந்துவிட்டது. இனிமேல் உன் லாப நஷ்டம் எனக்குத்தானே! அவர் உன்னைக் கேட்ட ஒவ்வொரு கேள்வியும் என் நெஞ்சில் ஆணி அடிப்பதுபோல்தான் இருந்தது.''

''ஏண்டா, இவளைக் கலியாணம் செஞ்சுகொண்டோம் என்று வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தீங்க?''

''அல்ல, ஏன் இவளைக் கூண்டில் ஏறவிட்டோம், உயிரைக் கொடுத்தாவது தடுத்திருக்க வேண்டுமே என்றுதான் வருத்தப்பட்டுக் கிட்டிருந்தேன்.''

"நீங்க ரொம்பவும்தான் என்மேலே பிரியம் வச்சிக்கிட்டு இருக்கீங்க" என்று சொல்லிக்கொண்டே, அவள் அவனைப் பார்த்து விசும்பினாள். அவனுக்குத் தன் உயிரே துடிப்பதுபோல் இருந்தது.

அப்போது வடிவாம்பாள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். இதற்குக் காரணம், "பொன்மலை, பொன்மலை" என்ற வார்த்தைகள் அவளுடைய காதில் விழுந்ததுதான்.

"என்ன அத்தை, பொன்மலையென்கிற பெயரைக் கேட்டே முழிச்சுட்டீங்களா?" என்றான் சண்முகம்.

"ஆமா, பொன்மலையும் மஞ்சத்திடலும் நான் முழிச்சுட்டா மாத்திரம் எனக்கும் பலிச்சுடப் போகுதா? பேச்சுப் பார்க்கிலே சன்னல் கதவைத் திறந்து வச்சுடாதீங்க. திருவெறும்பூர் வருது. குரங்கு வந்து பழக்கூடையைக் கொண்டுபோயிடும்" என்றாள் வடிவாம்பாள். மோகனா சண்முகம் இருவரும் சிரித்தனர். அந்தச் சிரிப்பொலி அடங்குமுன் அவள் குறட்டை ஒலி ஒலித்தது. வார்த்தைகள் அடங்கின. வண்டி ஓடியது.

"ஏன் அத்தான், தவுல்காரர், ஒத்துக்காரர் எல்லாரையும் நேரே சிக்கலுக்குப் போகச் சொல்லிட்டீங்களாமே?"

"ஆமாம் மோகனா. பாவம், அவங்க பங்குப் பணத்திலே பிழைக்கிறவங்க. நானோ ஊதறது இல்லே. மாப்பிள்ளையாகிவிட்டேன். ஊருக்குப் போய் இறங்கிக்குங்க. தேவை வந்தா கூப்பிடறேன்னு சொல்லிட்டேன்."

"ஏன், அவங்களும் திருவாரூரிலே இருந்தா குறைஞ்சு போயிடுமா?"

"அது எதுக்கு மோகனா? அவங்களுக்கு வேலை செய்யாமல் சாப்பிடப் பிடிக்காது."

"நம்பளைச் சேர்ந்தவங்கதானே. நம்ப வீட்டிலே இருந்தா என்ன?"

"நான்தான் உங்க வீட்டு மாப்பிள்ளை, இருக்கலாம். ஊர் ஒண்ணும் சொல்லாது. அப்படிச் சொன்னாலும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவங்க எல்லாம் அப்படியிருக்க முடியுமா? அதனால்தான் ஊருக்குப் போகச் சொல்லிவிட்டேன்."

"ஏன் அத்தான், இரண்டு பேருக்கும் கலியாணமாகியும், இன்னும் உங்க மனசிலே என் வீடு, உன் வீடுன்னு வித்தியாசம் இருக்குதே, அது எப்போ போகும்?"

"எனக்கு என்ன தெரியும்?" என்று சொல்லிக்கொண்டே அவன் சிரித்தான்.

இவ்வாறு தம்பதிகள் மனம் ஊசலாடிக்கொண்டிருக்கையிலே அந்த ரயிலும் ஊசலாடிக்கொண்டே ஆலக்குடி தாண்டி தஞ்சாவூரை வந்தடைந்தது. ஆனால், அவன் நெஞ்சில் குடிகொண்ட ஆலம் அப்படியே இருந்தது.

## முப்பத்து ஒன்றாம் அத்தியாயம்

# உண்மை மறைந்தது உபசரிப்பில்



"நெற்றியிலே சந்தனப் பொட்டு பலமாக இருக்குதே. வழியிலே இறங்கிச் சாப்பிட்டுவிட்டு வந்துட்டீங்க போலிருக்கு. சரி. பின்னே நான் போய்ச் சாப்பிட்டுட்டு வரேன்" என்று உபசாரம் செய்வார்கள் சில ஊர்க்காரர்கள்.

"என்ன செய்யிறது? அவங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். நம்ப குடிசையிலே உட்கார்ந்து சாப்பிடுவாங்களா?" என்று சொல்லி, நம் வாயையும் கட்டிவிட்டுச் சாப்பிடப் போய்விடுவார்கள் மற்ற ஊர்க்காரர்கள்.

ஆனால் உபசார விஷயத்திலே தஞ்சாவூரின் பெருமையே தனிப் பெருமை. அதுவே தமிழன் பெருமை. கவிஞர் பெருமான் ஆகிய ஒட்டக்கூத்தரை ஒருசமயம் சிலர் கொல்ல வந்துவிட்டார்கள். இதையறிந்த சோழ மன்னன் தன் மகனையே அவருக்குப் பதிலாகச் சிவிகையில் ஏற்றி அனுப்பினான் என்று ஒரு பழங்கதை உண்டு. அத்தகைய சோழ மன்னர் ஆண்ட தலைநகரமல்லவா? மன்னர்தான் மறைந்துவிட்டார். ஆனால் மக்கள் இன்னும் இருக்கிறார்களே! மாண்பு எங்கே போகும்? பிறருக்கு எதையும் தியாகம் செய்யும் மக்கள் நிறைந்த ஊர் அது. ஆதலால்தான், அதற்குத் தஞ்சாவூர் என்று பெயரிட்டார்களோ என்னவோ?

அந்த ஊரில் பாதிக் கடைகள் உபசாரப் பொருள்கள் விற்கப்படும் கடைகள்தாம். அதிலும் நவாப் தர்பார், நாயக்கர் தர்பார், மகாராஷ்டிரர் தர்பார் ஆகிய மூன்றும் கலந்த ஊர் ஆதலால் அந்த ஊரில் உபசாரம் மும்மடங்கு அதிகம் ஆகிவிட்டதில் வியப்பில்லை.

நாளை என்ற கவலை அந்த ஊர் மக்களுக்குக் கிடையாது. நேற்றைப் பற்றியும் அவர்கள் திரும்பிப் பார்ப்பது இல்லை. இருக்கும் மட்டும் சந்தோஷமாக இரு. செய்ய வேண்டிய நல்லதை இன்றே செய்துவிடு. அனுபவிக்கவேண்டிய சௌகரியங்களை அடுத்த நாளைக்கு என்று தள்ளி வைக்காதே. வெண்ணாற்றில் நீராடு. தாட் இலையில் சாப்பிடு. நல்ல கச்சேரியைக் கேள். நினையாத நேரத்தில் விருந்து வந்துவிட்டால் மாடி கிளப்பில் போய் மைசூர் ரசம், வெங்காய சாம்பாருடன் சாப்பாடு போடு.

சந்தனத்தைப் பூசு, சந்துபொந்துகள் எல்லாம் சாமா சாஸ்திரிகள் கீர்த்தனைகள் முழங்கட்டும். ஆனந்தம், அதுவே வாழ்க்கை. பணம் பணம் என்று பாராதே. பாவத்தைச் செய்து அதைச் சேராதே.

பணமும் பதவியும் நிலையல்ல என்பதைத்தான் இந்த ஊரில் உள்ள ஏழ்நிலை மாடம் எடுத்துச் சொல்லுகிறது. பழைய கட்டடங்கள் பாடுகின்றன என்பதுதான் அந்த ஊர் மக்களின் பெரும்பாலானவர்களின் சித்தாந்தம். அவர்களிலே ராஜாங்கம் அப்பண் ராவ் ராஜா.

ராஜாங்கம் அப்பண் ராவைப்பற்றி முன்பே சொல்லியிருக்கிறோம். அவருடைய ஏஜண்ட் வெங்கோபராவும், அப்பண் ராவின் மகள் அன்சூயாபாயியும், மாப்பிள்ளை ராமாராவும் இன்னும் உள்ளூர்ப் பிரமுகர்கள் பலரும் மோகனாவை வரவேற்பதற்காக ரயில்வே ஸ்டேஷனில் கூடியிருந்தார்கள். வண்டியைவிட்டு மோகனா இறங்கியவுடனே, ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே அன்சூயாபாய் அவள் கழுத்தில் ஐம்பது ரூபாய் பெறுமானமுள்ள ஜவ்வாது மாலை ஒன்றை எடுத்து அணிவித்தாள். பிளாட்பாரத்தில் கரகோஷம் அதிர்ந்தது. அதற்குள் போட்டோக்காரர்கள் இருவர் ஓடிவந்தார்கள். மோகனாவும், ஹரிராவ் குடும்பத்தினரும் வரிசையாக நின்று போட்டோ பிடிக்கப்பட்டார்கள்.

உடனே ''வாங்க, வாங்க!'' என்று மோகனாவைக் கூட்டிக்கொண்டே நடந்தார்கள். குஞ்சுகளின் கூடவே ஓடும் பெட்டைக் கோழியைப்போல, வடிவாம்பாள் அவளுடன் சென்றாள். கூஜா, வெற்றிலைப் பெட்டி முதலியவைகளை எடுத்துக்கொண்டு வரதன், நட்டுவனார் இருவரும் கூடவே சென்றார்கள். ஆனால் பாவம், சண்முகம் கூஜாவையாவது கையில் எடுத்துக்கொண்டானா, அவனை இன்னார் என்று அறிந்து மதிப்பிடுவதற்கு? அவனை ஏன் என்று கேட்பவர்களே இல்லை. தஞ்சாவூர் ஸ்டேஷனில் முன்பு அவனுக்குக் காப்பி கொடுத்த அதே சர்வர் பையன்கூட, முன்னாலே செல்லும் மோகனாவைப் பார்த்த மயக்கத்தில் இப்பொழுது பின்னாலே வரும் சண்முகத்தைப் பார்க்கவில்லை. அங்கிருந்த கூட்டத்தினர் எல்லோரும் அவள் நடந்து செல்லும் அழகைப் பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பார்வை தன்மேல் விழவில்லையே என்பதைப்பற்றிக்கூட சண்முகம் யோசிக்கவில்லை. ஆனாலும் அவர்களில் பலர் அவளைப் பார்க்கும் பார்வை அவனுக்கு என்னவோ செய்தது.

எல்லோரும் வண்டிகள் நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஓர் ஒற்றைக் குதிரை பீட்டனும், இரண்டு மூன்று ஒற்றை மாட்டு வண்டிகளும் நின்றுகொண்டிருந்தன.

மோகனாவை அவசர அவசரமாகப் பீட்டனில் ஏறச்சொன்னார்கள். அவள் பீட்டனில் ஏறிக்கொண்டே, ''இதோ, அவங்க வந்துடட்டும், அவுங்களும் வந்துடட்டும்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ராமாராவ், ''இல்லே அவங்களுக்கெல்லாம் வண்டியிருக்கு'' என்று சொல்லிக்கொண்டே வண்டியை ஓட்ட உத்தரவிட்டார். குதிரை பறந்தது. சண்முகத்தின் முகத்தில் தூசி பறந்தது. கண்களில்கூட தூசி விழுந்ததோ,



இல்லாவிட்டால் ஏன் கண் கலங்குகிறது? மோகனா பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் வண்டியில் சென்றாள். அவளுக்கு உபசாரத்தை மறுக்கவும் தைரியம் இல்லை. 'சனியன் வரும் வரையில் காத்திருங்கள்' என்று சொல்லவும் வாய் கூசியது. ஆனால் வடிவாம்பாளோ ''கூட்டம் சுத்திக்கும், வண்டியை வேகமாக விடுங்க!'' என்றாள்.

சண்முகத்தின் கண்முன்னே அந்த வண்டி பறந்தது. அவனுக்குக்கூட 'நாம் ஏன் சிறிது நேரம் ஸ்டேஷனிலே இருந்துவிட்டுப் பிறகு ராஜா சத்திரத்துக்குப் போகக்கூடாது?'' என்று தோன்றியது. ஆயினும் அவன் மனம் கேட்கவில்லை. பின்னால் இருந்த மாட்டு வண்டியில் மோகனாவின் படுக்கை முதலிய சாமான்கள் ஏற்றப்பட்டிருந்தன. அதோடுகூட அவனும் வண்டியில் ஏற்றப்பட்டான். ஆனால் அவனுக்குத் துணை இல்லாமல் போகவில்லை. ஸ்ரீ வெங்கோப ராவ் எதிர் உட்கார்ந்தார். அவனுடைய வெற்றிலைப் பெட்டியையும் எடுத்துத் திறந்தார்.

தன்னுடைய அதிகாரத்தைக் காட்டியிருந்தால், பீட்டனிலேயே தானும் சென்றிருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அவர்கள் உபசாரம் செய்பவர்கள். மோகனாவைத்தான் கவனிப்பார்கள். தம்மை அவர்கள் கவனியாதது இயற்கைதான் என்பதும் அவனுக்குத் தோன்றாமல் இல்லை. ஆயினும், சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெற்றே பழகிய அந்த வித்வானுக்கு, இந்த நிகழ்ச்சிகள் சற்று உறுத்தின. ராஜாச் சத்திரம் போய்ச் சேர்ந்தான். அங்கே மோகனா வாசற்படியிலே நின்றாள்.

''நான் என்ன செய்யறதுங்க? சொல்லிக்கிட்டே இருந்தேன். வண்டியை விட்டுட்டாங்க!'' என்றாள் அவள்; அதற்குள் வடிவாம்பாள் ஓடி வந்தாள்.

''மருமகப்புள்ளே, நீங்க ஒண்ணும் வித்தியாசமா நினைக்காதீங்க. நான்தான் சாமான் எல்லாம் வருதே, அதோடுகூட நீங்க இருந்தா ஜாக்கிரதையா இருக்கும்னு வண்டியை விடச்சொன்னேன்'' என்று என்றைக்கும் பொய் சொல்லும் உத்தமி அன்று நிசத்தைச் சொன்னாள். ஆனால் அந்த நிஜமே அவனை வாட்டுவதற்குப் போதிய சக்தி உடையதாக இருந்தது. அதற்குள் வரதன் அவர்கள் அருகில் ஓடி வந்தான்.

''மூளையே கிடையாதுங்க இந்த ஆட்களுக்கு. நான் சொல்லிக்கிட்டே இருக்கேன், நீங்க வருவீங்க வருவீங்கன்னு, வண்டியை விட்டுட்டான்!''

''சரிதான் வரதா, சாமானையெல்லாம் பார்த்துக்கிறதுக்கு ஓர் ஆள் வேணுமில்லே?''

''அது என்னாங்க அநியாயம். அதுக்காக வண்டியை விட்டுட்றதா? தங்கச்சிக்கு இந்த மாலையைப் போட்டுக்கவே பிடிக்கலே. உங்களுக்குப் போடாமே அதுக்கு மாத்திரம் போட்டது சரியில்லே.''

''சரிதான் வரதா. ஜவ்வாது மாலையில்லே. சவந்திப்பூ மாலையா? ஒரு மாலையே நாற்பது ரூபாய் இருக்கும். இரண்டு மாலை வாங்க

முடியுமா? எவக்கும் போட்டா அப்புறம், அவங்க அம்மாவுக்குப் போட்டியேன்று தோனும். அப்புறம் நீ கோவிப்பாய். அதெல்லாம் பாதகமில்லே'' என்று சண்முகம் அவனுக்குச் சமாதானம் சொன்னான். வெளிப் பார்வைக்கு அவன் எவ்வளவுதான் சமாதானம் சொன்ன போதிலும், தன்னை எவ்வளவோ திருப்திப்படுத்திக்கொள்ள முயன்ற போதிலும், அவன் உள்ளத்தில் ஏதோ வேதனை செய்துகொண்டுதான் இருந்தது. அவனுடைய சிந்தையிலே இந்த மாலை மரியாதைகள் பொறாமையை உண்டாக்கிவிடவில்லை. அவளுக்குக் கிடைப்பதும் ஒன்றுதான், தனக்குக் கிடைப்பதும் ஒன்றுதான் என்ற சந்தோஷம்கூட இருந்தது. ஆயினும் வரதனைப் போன்றவர்கள் வருந்துகின்றபோது, அது ஆகுதியில் நெய் விழுந்தது போல் அனலை அதிகப்படுத்தியது.

மாலையும் மரியாதையும் உலகத்தில் பெரிதல்ல என்று நினைக்கும் மனோபக்குவம் அந்த வித்வானுக்கு ஏற்படலாம். ஆனால் அவன் வாழும் உலகத்துக்கு ஏற்படவில்லையே!

ராஜாச் சத்திரத்தில் தங்கியிருந்த ஒவ்வொரு நிமிஷமும் அவனைத் துன்புறுத்திக்கொண்டே வந்தது. இதனிடையே அந்த ஊர்ப் பிரபலஸ்தர்கள் பலர் மோகனாவைக் காண அங்கு வந்து சேர்ந்தார்கள். ரசிகர்களா வருவார்கள்? ஷோக்காளிகள்தான் வந்தார்கள். தங்கச் சங்கிலிகளும், வைரக் கடுக்கன்களும், வாயில் புகையிலையும், சில்க் சட்டையும், மல்ஜிப்பாவும், செண்ட்டும் மணக்க, பல மைனர் பேர் வழிகள் மன்னார்குடிக்கென்றும், கும்பகோணத்திற்கு என்றும், கச்சேரிகள் பேசத்தான் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு மோகனாவின் வாயால் இல்லையென்று சொல்லிக் கேட்பதில் ஓர் ஆனந்தம்.

''இல்லே, நீங்க அப்படிச் சொல்லப்படாது. கலியாணமானதனாலே, பாட்டுக் கச்சேரியை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லே'' என்றார் ஒரு கலாரசிகர். பாவம் அவருக்கு உள்ள ஆர்வத்தில் அவள் ஆட்டக்காரியா, பாட்டுக்காரியா என்பது புரியவில்லை.

''அதுக்காக என்ன, ராயர் நாலாயிரம் கொடுத்தா, நாங்க ஆறாயிரம் கொடுக்கிறோம்'' என்றார் இன்னொருவர். இவர் போட்டிப் புலி.

''சண்முகம் என்ன, அப்படி விவேகம் இல்லாதவரா? உங்களை ஆட வேண்டாமென்று சொல்லிவிடுவாரா?'' என்று அடுத்த அறையில் இருக்கும் அவன் காது கேட்கக் கூறினார் அய்யம்பேட்டை ஆசாமி ஒருவர்.

''அவுங்களையும் பார்த்துட்டுப் போங்களேன்'' என்று வடிவாம்பாள் ஒரு வார்த்தை சொன்ன பிறகு, பலர், ''சே! அவாளைப் பார்க்காமலா?'' என்று சண்முகத்தையும் பார்க்க அவன் அறைக்கு வந்தார்கள்.

இறைவன் ஆண்களிடமும்தான் கலையைக் கொடுத்தான். பெண்களிடமும்தான் கலையைக் கொடுத்தான். ஆயினும் ஆண்கள் ஆட்சி செய்யும் இந்த உலகம், ஆண்களைக்காட்டிலும் பெண்களுக்குத் தான் கலையிலும் அதிக மதிப்புக் கொடுக்கிறது. இது அழகுக்காகவா, இயற்கையே இதுதானா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய அவனுக்கு நேரமில்லை. ஆனால் புடைவைக்கே கலை என்று பெயரிட்ட உலகம் தம்மை நிம்மதியாகத் தாங்கவிட்டால் போதும் என மட்டும் எண்ணினான். ஆனாலும், மோகனா எனும் ஒளிக்கு முன்னே, தான் ஒரு சிறு மின்மினிப் பூச்சி போல அங்கு நடத்தப்படுவதையும் கண்டான்.



முப்பத்து இரண்டாம் அத்தியாயம்

# அலையில் மறைந்தது கடல் ஆழம்



அன்றும், இன்றும் என்றும் அழகு குறையாத சில நகரங்கள் தமிழ்நாட்டிலே உண்டு. அந்த ஊர்களில் எல்லாம் ஒரு விசேஷத்தைப் பார்க்கலாம். இரவில் வெகு நேரம் வரையில் ஜன நடமாட்டம் அதிகமாக இருக்கும். பெரும்பான்மையாக அந்த ஊர் மக்கள் ஒன்பது மணிக்கே உறங்கச் செல்ல மாட்டார்கள். அந்த ஊர்கள் பத்து மணிக்கே அடங்கிவிடும் பட்டணம் அல்ல. பகல் முழுவதும் உழைப்பு, இரவில் களியாட்டங்கள் என்று, இரவும் பகலும் ஜீவனுடன் விளங்குவதை இன்றும் காணலாம்.

அவைகளில் முக்கியமான ஊர்கள் மதுரை, திருச்சி, ஆரூர், தஞ்சாவூர் முதலியவை. ''இக்காலத்தில் இருப்பது போல அக்காலத்தில் வீட்டுக்கு வீடு எலக்ட்ரிக் விசிறிகள் கிடையாது. ஜனங்கள் காற்றுக்காகத் தெருவில் அலைந்துகொண்டிருப்பார்கள்'' என்று சொல்லிவிடவும் முடியாது. ஏனெனில், இன்றைக்கும் அந்த ஊர்களில் இரவில் நடமாட்டங்கள் அதிகம். நடுத்தெருவில் மேடை போட்டு சங்கீதக் கச்சேரிகள் நடக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் தெருவில் உட்கார்ந்து கச்சேரி கேட்பார்கள். ஒன்பதரை என்று போட்டிருக்கும் நாடகங்கள் பத்தே காலுக்குத்தான் ஆரம்பமாகும். எல்லோரும் கடையைக் கட்டிவிட்டு, வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு நாடகத்திற்கு வருவார்கள். அந்த ஊர்களில் எத்தகைய பொழுது போக்குகள் நடந்தாலும் அவை எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும், எல்லோரும் சேர்ந்து நடத்த வேண்டும் என்ற மனப்பான்மை உண்டு. ஆடலும் பாடலும் அனைவர்க்கும் பொது; அதைக் காசில்லாதவனும் அனுபவிக்கலாம் என்ற பரந்த நோக்கமே இரவு விழிப்பதற்குக் காரணம்.

தஞ்சாவூரைப் பொறுத்தவரையிலோ கலியாட்டத்திற்குக் குறைவே கிடையாது. சாதாரணமாக, ஒரு புலி வேஷத்தை எடுத்துக்கொள்வோம். தஞ்சாவூர்ப் புலி வேஷம் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய காட்சிகளில் ஒன்று. மேல் எல்லாம் எண்ணெய் கலந்த கரியைப் பூசிக்கொண்டு, அதன் மேல் மஞ்சள் சிவப்பு வர்ணம் கலந்த வரிப் புலிக் கோடுகளும், மொட்டைத் தலையும் காதுமாக, புலிவால் வைத்துக் கட்டிக்கொண்டு, புலி வேஷத்தில் அந்த ஊர் வாலிபர்கள் ஆடும் அழகைப் பார்த்தாலே பலர் பிரமித்துவிடுவார்கள். காலை எட்டு மணிக்கு ஆரம்பிக்கும் ஆட்டம், காய்ந்துகொண்டிருக்கிற கடும் வெயிலில்கூட நடந்துகொண்டிருக்கும்.

புரவி நாட்டியமோ அங்குதான் பிறந்தது. காமன் பண்டிகை வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். தெற்கு வீதியும், மேல வீதியும் சேரும் முனையில் உள்ள காளியம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே எரிந்த கட்சி, எரியாத கட்சி ஆரம்பமாகிவிடும். எரிக்கிற கட்சி, எரிக்காத கட்சி அல்லவா! டேப்பு அடிப்பதில் பல நிபுணர்கள் அந்த ஊரில் உண்டு. தஞ்சாவூர் டேக்கா உலகப் பிரசித்தம். அவர்கள் டேப்பை அமுக்கி டேக்கா வாசிக்கும் அழகையும் பள்ளிக்கூடத்தில் படித்தறியாத அந்தப் பாமரப் புலவர்கள் "அடியே ரதியே! ரதிக்கிளியே! ரதிக்கேத்த மன்மதனே!" என்று லாவணி பாடுகின்ற அழகையும், நாள் முழுதும் கேட்கலாம். லாவணிக்கு உயிர் கொடுத்தது தஞ்சாவூர்.

இவைகளைத் தவிர, தஞ்சைப் பெரிய கோவிலில், அஷ்ட கொடிக்கென்றே ஓர் அரங்க மேடை அமைத்திருக்கிறார்கள். ராஜராஜ சோழன், என்று அந்தக் கோவிலைக் கட்டினானோ, அன்றைக்கு அவன் கையால் போடப்பட்ட அரங்க மேடையை இன்றும் அங்கு காணலாம். அந்தக் கலை அரங்கத்திலே கால் பழகிய கணிகையர் ஏராளம். ஒரு காலத்தில் தஞ்சாவூர் நாட்டியப் பள்ளியாகவே விளங்கியது. இன்றைக் கும் தஞ்சாவூருக்குப் போய் எவர் இறங்கினாலும், நட்டுவனார் வீட்டுக்குப் போகவேண்டும் என்று சொன்னால் போதும்! சங்கீதக் கலைக்குத் தாயகமாக விளங்கிய வணக்கத்திற்குரிய வடிவேலு சிவானந்த நட்டுவனார் பரம்பரையினர் வீட்டு வாசலில் போய் வண்டி நிற்கும். இன்றும் அந்தப் பரம்பரையினர் அங்கு வசிக்கிறார்கள். அவர்கள் மேல்நாட்டு வாத்தியமாகிய பிடிலை வாசித்துக் காட்டிப் பெயரும் பரிசும் பெற்றவர்கள்; தியாகராஜாவின் அருளுக்குப் பாத்திரமானவர்கள்; தீக்ஷிதர் சிஷ்ய பரம்பரையில் வந்தவர்கள். அக்காலத்தில் முதலில் சங்கீத வித்வான்களைப் பெரிய வித்துவான் என்று தமிழ்நாடு மதிக்க வேண்டுமானால் திருவையாற்றில் கச்சேரி செய்ய வேண்டும். நட்டுவனார் வீட்டு விழாவில் பாடிப் பெயர் வாங்க வேண்டும் என்று பழக்கத்தில் இருந்து வந்தது.

இதைத் தவிர, மிருதங்கம் ஆகட்டும், தபேலா ஆகட்டும், கதை காலட்சேபம் முதலிய எதுவாக இருந்தாலும் கலையரசி காமாக்ஷியின்

4842



கொலு முன்னே அலை தழைத்தே வருகின்றன. அத்தனை கலைகளுக்கும் இருப்பிடம் தஞ்சாவூர். அந்த ஊரில் மோகனாவின் நாட்டியம் என்றால் கேட்கவேண்டுமா?

வெங்கடேசப் பெருமாள் கோவில் வாசலில் தாங்க முடியாத கூட்டம் கூடியிருந்தது. கிட்டத்தட்ட பதினாயிரம் பேர் கூடியிருந்தாலும் அவர்கள் கலைப்பண்பு தவறாமல், மூச்சுக்கூட இரைந்துவிடாமல் தங்களால் ஒரு சிறிதும் கலைக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில் அசைவற்று, கற்சிலை போல் நின்றார்கள்.

சங்கீதச் சந்தையிலே சிலர் சாமான் வாங்க வருவார்கள். ஒருவர் பல்லவி வாங்க வருவார். இன்னொருவர் 'தருமோ'வுக்கு வருவார், இன்னொருவர், 'வேங்கடாசல விஹாரி'; இன்னும் ஒரு தம்பதிகளோ இவைகளைப்பற்றி எல்லாம் பேச வருவார்கள்! ஒரு புண்ணியவான் பாட்டை ரசிக்காமல் செருப்பையே ரசிப்பார். தன் புதுச் செருப்பால் தரையில் தாளம் போட்டுக்கொண்டு அந்த நாதத்தை அனுபவித்துக் கொண்டு இருப்பார். இதற்கும் மேலாக ஒரு பிரகிருதி வித்வானுடன் சேர்ந்து பாடவே ஆரம்பித்துவிடும். இன்னும் இரண்டு பேர் கிரிக்கெட் மாட்சைப் பற்றி 'டிஸ்கஸ்' செய்வார்கள். பாவம், கச்சேரி வித்வான் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே கச்சேரி செய்வார். மணிக்கச்சேரி தானே...... ஆனால் அம்மாதிரியான சந்தை இரைச்சல் அன்று தஞ்சையிலே இல்லை.

கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் ஆகிய இரண்டும் ஒரே கொடியில் பூத்த இரு மலர்கள்தாம். இரண்டிலும் மணம் ஒன்றே. ஆயினும் இரண்டும் வெவ்வேறாக இருக்கின்றனவே என்று இவைகளுக்குள் ஒரு நேச பாவத்தை உண்டாக்கியவர் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி. இன்று நம் நாட்டில் பரவியிருக்கும் பாண்டு வாத்திய கோஷ்டி என்ற அயல்நாட்டு வாத்திய கோஷ்டியை முதன் முதலில் கர்நாடக சங்கீதத்தை வாசிக்கும்படி செய்தவர் சரபோஜி. இப்போது நாம் கச்சேரிகளில் கேட்கும் இங்கிலீஷ் நோட்டு வர்ணமெட்டுகளைக் கர்நாடக சங்கீதத்தில் அமைத்தவர் சரபோஜி. "சாசரசமரேடுகரு" என்ற தியாகராஜ கீர்த்தனைகூட அக்காலத்தில் பிரபலமாகி வந்த இங்கிலீஷ் நோட்முறையைத் தழுவி எழுதப்பட்டதுதானாம்.

இவ்வாறு கலை வளர்த்த சரபோஜி மன்னன் பெயரால் "சரபேந்திர பூபால குறவஞ்சி" என்று ஒரு நாடகம் இயற்றப்பட்டிருக்கிறது. அந்த அரிய நாடகத்திலிருந்து ஒரு பந்துவராளி ராகப் பாடலை எடுத்துக் கொண்டு ஜமாய்த்தார் முத்துக்குமார நட்டுவனார். "பிரபவனாகிப் பிரஜோற்பத்தி செய்கின்ற மன்மதா.... இன்று பேதையென்றென்னைப் பரிதாபியாக்கவேன் மன்மதா" என்ற அந்தப் பாட்டை அவர் ஆரம்பித்தவுடனே, கூட்டத்தில் ஒரு களிப்பு எழுந்தது. பிரஜோற்பத்தி, மன்மதா, பரிதாபி, துன்மதி, துந்துபி, விஜய, ஜய முதலிய வருஷங்களில்

பெயர்கள் எல்லாம் அந்தப் பாட்டில் இருக்கின்றன. அதற்குத்தான் அந்த மக்கள் களித்தார்களா? அல்லது மோகினி உருவத்தில் மோகனாவே வந்து நிற்கிறாள் என்று ஆனந்தப்பட்டார்களா என்று சொல்ல இயலவில்லை.

பாட்டின் கடைசி அடி வந்தது. "சித்திர பானுவைப் போல் மெத்தவும் காய்கிறாய் மன்மதா" என்று அவர் பாடியபோது, சூரிய வெப்பத்தில் துடிக்கும் தாமரை போல, மோகினி விரகதாபத்தால் துடிக்கிறாள் என்று மோகனா பாவம் பிடித்தாள்; துவளத் துவள ஆடினாள்.

"பெண்ணுடன் பிறந்தது உண்டோ வெண்ணிலாவே?" என்று கேட்டாள் ஒரு பெண். இன்னொரு பெண்ணோ, "சந்திரன் இல்லாத ஊரில் என்னைப் படைக்கமாட்டாயா?" என்று கேட்டாள். காதலனைப் பிரிந்து நிற்கும் காதலிக்கு சந்திரன் விரகதாபத்தை ஊட்டுவான் என்பது பழைய வழக்கம். அவ்வாறு அமைந்திருந்த பாடலிலே, "ஏ, சந்திரனே, நீ சந்திரனாக இருந்தும், சூரியனைப் போல ஏன் என்னைச் சுடுகிறாய்?" என்று மோகனா தன் கையை மேலே நீட்டி வெப்பம் தாங்க முடியாதவளாக, உடல் வியர்த்துக் கொட்ட, வெயிலால் ஏற்படும் கொடுமையை முகபாவத்தில் காட்டியவுடனே, கூட்டத்தில் பலர் சூரியன் இருக்கிறானா என்று உயரப் பார்த்தனர். இன்னும் விஷயம் தெரிந்த சிலரோ, 'சூரியனை எதற்குப் பார்க்க வேண்டும். பார்த்தால் கண் கூசும். இந்தப் பூரணச் சந்திரனையே பார்ப்போம்' என்று அவள் முகத்தையே பார்த்தனர்.

அப்போது அவள் மனதிலும் ஒரு சிறிய எண்ணம் உண்டாயிற்று. 'நம் காதலை சந்திரனும் தடுக்கவில்லை, சூரியனும் தடுக்கவில்லை, ஆனால் கலியாணமான நாள் முதல் பணம் என்னும் வட்டம்தான் தங்கள் காதலைத் தடுக்கிறது. மாதத்தில் ஒரு நாள்தான் சந்திரன் முழு வட்டமாகக் காட்சி அளிக்கிறான். சூரியனோ இரவில் மறைந்துவிடுகிறான். ஆனால் என்றும் குறையாத இந்த வட்ட வடிவமோ, என்றைக்கும் வாழ்வில் கொடுமையை அதிகப்படுத்துகின்றது' என்று எண்ணியவள் போல சண்முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டாள். சண்முகம் அதை ரசித்துக்கொண்டான்.

அடுத்த அடியைப் பாடும் சமயம் வந்தது. 'இது தஞ்சாவூர் பாட்டு. இதைப் பிரமாதமாகப் பாடிவிட்டால், தஞ்சாவூர் மக்கள் ரொம்ப ஆனந்தப்படுவார்கள்' என்ற குஷியிலே பந்துவராளியைப் பந்தாடினார் நட்டுவனார். ராகத்தைப் பாடி, "சரபோஜி மகராஜன்" என்று பாட்டைக் கொண்டு வந்து நிறுத்தினார். அப்போது அரசனுக்குரிய பத்து வகை அங்கங்களையும், மாலை, முரசு, எக்காளம் முதலியவைகளை ஒவ்வொன்றாகக் கையால் அபிநயம் பிடித்துக் காட்டினாள் மோகனா. சற்று நேரத்திற்கு முன் மோகினி போல் காட்சியளித்தவள், இப்பொழுது சரபோஜியாகவே விளங்கினாள். நட்டுவனார் மறுபடியும் பாட



ஆரம்பித்தார். மோகனா மோகினியானாள். ஐயோ, அந்தப் பாடலை என்னவென்று சொல்வது? எத்தனையோ வித்தை தெரிந்திருந்தாலும், இங்கிதம் தெரிய வேண்டும். நட்டுவனாருடைய ஆனந்தத்திலே இந்த இங்கிதம் பறந்துவிட்டது. "சரபோஜி மகராஜன் தமை நான் மருவச் செய் மன்மதா" என்ற பாடலை அட்சர சுத்தமாக அழுத்திச் சொன்னார் நட்டுவனார். தன்னை மறந்து ஆடிய மோகனா இருகைகளாலும் ஆலிங்கனம் செய்தாள். அங்கிருந்த இளங்காளைகள் தம்மையே சரபோஜியாக எண்ணினர். அப்போது எதிரில் இருந்த குறும்புக்கார சண்முகம் களுக்கென்று சிரித்தான். முகத்தில் புன்முறுவலுடன் மோகனாவைக் கேலிப் பார்வை பார்த்தான்.

வெட்கத்தால் தலை கவிழ்ந்தாள் மோகனா. அபிநயம் பிடிக்க கை கூசியது. புன்னகை எழும்பியது. ஆனால் நட்டுவனாரோ, "தீம்தையா தருகிட தீம் தையா - சரபோஜி மகராஜன் தமை நான் மருவச் செய் மன்மதா ..." என்று கனத்த குரலில் பாடினார். மோகனா கவிழ்ந்த தலையுடன் உள்ளே ஓடினாள்.

அந்த ஓட்டம் ஒன்றே போதும். கரகோஷம் அதிர்ந்தது.

உள்ளே சென்ற மோகனா, "என்ன வாத்தா? இவருக்கு இன்ன சமயத்தில் இன்னதுதான் பாடணும்னு தெரியலே. அவங்களுக்கு முன்னாலே நான் சரபோஜி மகாராஜான்னு எப்படி அபிநயம் பிடிக்கிறது?" என்று முணுமுணுத்தாள். வடிவாம்பாளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "சங்கீதம் தெரியாதவங்க ஆயிரம் பேர் தலை ஆடறதைவிட, தஞ்சாவூர்க்காரன் ஒருத்தன் தலை ஆடினா போதும். இதோ பாரு, ஜனங்களுக்கு இருக்கிற ஆனந்தத்தை!" என்று மோகனாவைக் கன்னத்தில் தொட்டு, நெட்டி முறித்துக்கொண்டாள்.

'எவ்வளவு அழகான பாடல், ஐயோ! அதற்கு கை எடுக்கவே வரவில்லையே எனக்கு? அபிநயம் பிடிக்கவே வரவில்லையே! இது என்ன ஒரு புதிய உணர்ச்சி! அங்கே ஆடுவது மோகனா அல்லவே, மோகினிதானே ஆடுகிறாள். பாட்டின் தலைவனை அடைய வேண்டுமென்று அவள் ஆசைப்படுவது தப்பில்லையே! சே, நாம்தான் தப்புச் செய்துவிட்டோம். என் சரபோஜி எதிரில் உட்கார்ந்து இருக்கிறாரே அவரை நினைத்துக்கொண்டே ஆடியிருக்கலாம். அந்த அங்க அபிநயத்தில் அவரையே சரபோஜி ஆக்கியிருக்கலாமே! என்ன குறும்பு! நான் அபிநயம் பிடித்தவுடனே, அவர் எப்படிச் சிரித்தார்! 'ஏண்டி என்னைக் காட்டிலும் அந்த ராஜா அழகாயிருப்பாரா?' என்று அந்தச் செவ்வரிக் கண்கள் கேட்பனபோல் அல்லவா இருந்தது அந்தச் சிரிப்பு? சே, சங்கீதக்காரனுக்கு வாழ்க்கைப்படவே கூடாது. பொல்லாத குறும்புக்காரர்கள். நகம் முதல் தலைவரையில் குறும்பு என்று சண்முகத்தின் கெட்டிக்காரத்தனத்தை வியந்து வியந்து ஆச்சரியப்பட்டாள் மோகனா.

அப்பொழுது நட்டுவனார் ஜதி சொல்லி மறுபடியும் அழைக்கவே அடுத்த ஆட்டம் ஆரம்பமாயிற்று. ''எனக்குன் இருபதம் நினைக்கவரம் அருள்வாய், ஸ்ரீராமச்சந்த்ரா'' என்ற சாகா வரம் பெற்ற தமிழ்ப் பாடல் அது.

ஒரு மகாவித்வானை இன்னொரு வித்வான் உமக்கு வைகுண்டம் வேண்டுமா, கைலாசம் வேண்டுமா என்று கேட்டாராம். அதற்கு அந்த மகாவித்வான் உரைத்த மறுமொழி என்ன தெரியுமா? ''எனக்கு வைகுண்ட பதவியும் வேண்டாம், கைலாச வாசமும் வேண்டாம். 'ஏல நீ தய ராது' வைப் பாடிக்கொண்டு இங்கேயே இருந்துவிடுகிறேன்'' என்றாராம். அந்தப் பாட்டின் வரிசையிலே வைக்கத் தகுந்த ராம நாடகப் பாடல் அது. ''எனக்குன் இரு பதம்'' என்று பாடிய அருணாசலக் கவியின் இரு பாதங்களையும் வணங்குகிறோம்.

சற்று நேரத்திற்கு முன் மோகினியாகக் காட்சி அளித்த மோகனா இப்பொழுது ரகுவீரனாகக் காட்சி அளித்தாள். கை வளைகள் கோதண்ட மணிபோல் ஒலித்தன. காதல் கடலாகிய கருவிழிகள் கருணையை அள்ளி வீசின. இளமான் போல் நடந்த நடை, இப்போது மத்த கஜம் போல் மாறியது. அன்னங்கள் வெட்கும் அந்தப் பெண் நடை இப்போது ஆனைகள் வெட்கும் ஆண் நடையாக மாறியது. சொல்லிக் கொடுத்து வருவது அல்ல கலை. உப்புக் கலப்பது போல் உடலில் கலக்க வேண்டும். இறைவன், கலைஞன் இருவரும் எடுத்த வேஷத்துக்கு ஏற்றபடி நடிப்பார்கள். ஆமாம், கலையே அப்படித்தான்.

பரமக்குடி ரங்கசாமி அய்யங்கார் என்று ஒருவர் இருந்தாராம்! நாடகத்தில் நல்லதங்காள் வேஷம் போடுவார். நல்லதங்காளாகத் தோன்றித் தன்னுடைய ஏழு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளும் போது, புத்திர சோகத்தினால் அந்தத் தாய் படும் பாட்டை பார்த்த ரசிகர்கள் பதறி அழுவார்கள். அவர் வேஷம் போட்டுக்கொண்ட வுடனே, தான் ஆண் என்பதை மறந்துவிடுவார். தானே நல்லதங்காளாக மாறிவிடுவார். 'அப்படி மாறக்கூடாது, உணர்ச்சி உங்களைக் கொன்று விடும்' என்றுகூடப் பலர் கூறியிருக்கிறார்கள். அப்படியும் அவர் கேட்கவில்லை. ஒருநாள் நாடகத்தில் ஏழு குழந்தைகளையும் தூக்கிப் போட்டுவிட்டு, தானும் கிணற்றில் விழும்போது, அந்த நாடகமேடைக் கிணறு அவரைப் பலி வாங்கிவிட்டது. கிணறு ஆழம் இல்லை, உள்ளே தண்ணீர் கிடையாது. இருந்தது எல்லாம் இரண்டடி ஆழம்தான். அந்த இரண்டடிக்குள்ளே அவர் எத்தனை ஆழத்தைக் கண்டாரோ? புத்திர சோகத்தால் துடிக்கும் ஒரு தாய் என்ற உள்ளமே அவருடைய உயிரைக் குடித்துவிட்டது. உள்ளப் பெருக்கே வெள்ளப் பெருக்காகிவிட்டது.

இன்னொருவர், இரண்ய நாடகத்தில் நரசிம்மனாக வருவார். ஒரு சமயம், அவர் நரசிம்மனாகவே மாறிவிட்டார். இரண்யன் வேஷம் போட்டவர், உயிர் தப்புவதற்கு அன்று பலருடைய உதவி தேவையாகப் போய்விட்டது.



இன்னொரு நாடகக்காரர் இருந்தார். அவர் ஆஞ்சநேயர் வேஷம் தரிப்பவர். ராம நாடகம் வந்துவிட்டால், ஒரு வாரத்துக்குச் சாப்பிட மாட்டார். பத்து வகைப் பணியாரமும் கூட்டுப் பலகாரமும் செய்ய மாட்டார். பக்தியுடன் ராமா, ராமா என்று சொல்லிக்கொண்டே அனுமான் வேஷத்தைத் தரிப்பார். முத்து வெள்ளையை எடுத்து நெற்றியில் வைத்த உடனே சித்தம் இழந்துவிடுவார். நாடகம் முடிந்த நான்கு நாட்களுக்குத் தன் நினைவு வராது.

ஒரு பரதநாட்டிய அம்மையார். வயது அறுபது ஆனவர்கள். ராதையாக நின்றுகொண்டு அஷ்டதிக்குப் பாவம் பிடிக்கும்போது, அவர்களுடைய அறுபது வயதும் மறைந்து பதினெட்டு வயதுப் பருவமங்கை போல் காட்சியளிப்பார்கள். கலை, வயதையே மாற்றும்; உள்ளத்தையே மாற்றும்; உணர்ச்சியையே மாற்றும். ஆனால் கலை ஏமாற்றாது. அலை வீசும் அழகில் கடல் ஆழம் மறைவது போல் மனதில் உள்ள கவலை எல்லாவற்றையும் மாற்றும் மருந்தே கலை என்பதற்கு உதாரணமாக விளங்கினாள் அன்று மோகனா. அவள் மனதில் மேடைக்கு வரும் வரையில், 'நடேசனைக் காணோமே! கணவன் மனம் புண்பட்டு இருக்கிறதே! வம்பும் வழக்கும் நம்மை வாட்டி வதைக்கிறதே!' என்ற எண்ணம் இருந்தது. ஆனால் காலில் சலங்கையைக் கட்டியவுடனே, சலங்கை ஒலியில் அவள் சங்கடமெல்லாம் விலகி ஓடின. ''மகத்தில் அரக்கியை வதைத்த அரசே'' என்ற பாடலுக்கு அவள் அபிநயம் பிடிக்கும் போது, ரகுராமனைப் போலவே விளங்கினாள். அவன் பாதத்தின் அடியில் அகலிகை வந்தபோது, ஆச்சரியத்தால் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உலகத்தில் பிறர் மனைவியை அபகரிக்க ஒருவன் சூழ்ச்சி செய்தானா? என்ன இது? உலகில் இப்படியும் உண்டா?'' என்று அவள் கேட்டாள்.

நாட்டியம் ஆரம்பமானது முதல் கொஞ்சங்கொஞ்சமாகக் கலையின் இனிமையில் சண்முகத்தின் கவலைகளும் விலகி ஓடிக் கொண்டிருந்தன. அவளைப் பார்த்துப் பார்த்து வியந்தான். ஆட்டத்தில் பரவசமானான். சற்று நேரத்திற்கு அவள் தன் மனைவி என்ற எண்ணமும் இருந்தது. அதன் பிறகு, அந்த எண்ணமும் அவனை விட்டு அகன்றது. இரண்டு நாட்களாக வேதனையாகிய அம்புகளால் துளைக்கப்பட்டு உளுத்த மரம் போல் இருந்த அவன் உள்ளத்தில் ஆடலும் பாடலும் அமுதைக் குழைத்துப் பூசின. அப்போது சீதாதேவி, ராமன் முன் வந்து நிற்கிறாள். தீக்குளிக்க வேண்டுமென்று ராமபிரான் சொல்கின்றார். மோகனா தீயில் குதிப்பதற்குத் திரை வலம் வந்தாள்.

''இது என்ன அநியாயம்? எதற்காக இவள் தீக்குளிக்க வேண்டும்?'' என்று அவன் மனத்தில் யாரோ கேட்பது போல் தோன்றியது. அடுத்த கணத்தில் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ''நேற்று மதுரை கோர்ட்டிலே அவளைக் கேள்விகள் கேட்ட போதெல்லாம், நான்

வருந்தித் தலை குனிந்தே நின்றேனே? அது என்ன? அக்கினிப் பரீட்சைதானோ? அவள் மாத்திரம் தீயில் குளித்துக்கொண்டிருந்தாளே. பிறந்த பிறவிக்காக வக்கீலின் தாக்கும், வைத்தியின் போக்கும் மற்றவர்களின் நோக்கும் செந்திக் கொழுந்துகளாக மாறி அவளைச் சுட்டுப் பொசுக்கினவே! ஐயோ! பெண்ணாய்ப் பிறந்தாலே துன்பந்தான். அதனால்தான் அவள் நெருப்புக்குள் விழுந்து எழுந்திருக்க வேண்டியிருக்கிறது. அபவாதம் என்னும் தீ யாரையும் சுடாமல் இருந்தது இல்லை'' என்று அவன் நினைத்து நிமிர்ந்த போது, எதிரில் பட்டாபிஷேகக் காட்சி நடந்துகொண்டிருந்தது.

''நினைத்தபடி விபீஷணர்க் கரசுபெற நிறுத்தி ஒரு புஷ்ப ரதத்தில் ஏறி வந்து, தலத்தில் உயர்தரும் அயோத்தியிலே சிம்மாதனத்திலிருக்கும் ரகுகுல குமரனே.''

வெள்ளம்கூட ஒரு கணம்தான் உச்சநிலையில் ஓடுகிறது. உள்ளம் மாத்திரம் எப்போதும் உச்சநிலையில் இருந்துவிட முடியுமா? படபடவென்று கேட்ட கரகோஷத்தில் சண்முகம் திரும்பினான். முகத்தில் இருந்த வியர்வையைத் துண்டால் துடைத்துக்கொண்டு கூட்டம் எப்படி இருக்கிறது என்று திரும்பிப் பார்த்தான். ராமர் பட்டாபிஷேகம் முடிந்தவுடனே, பட்டாபிஷேக நீரில் பக்தியும் கரைந்து ஓடிவிட்டது.

''என்னடா, ராமாயணம், ஒண்ணும் பெப்பா இல்லியே!'' என்றார் ஒரு பெப்பர்மிண்ட் ரசிகர்.

இன்னொருவரோ, ''ஏதாவது இரண்டு பதம் பிடித்து ஆடினான்னா ரொம்ப நல்லா இருக்கும்'' என்றார். இதை அறிந்ததே போல நட்டுவனார், ''வேலவரே உமை தேடி ஒரு மடந்தை'' என்று பைரவி ராகத்தில் பாட ஆரம்பித்தார்.

அடேயப்பா, கூட்டம் முழுவதும் ஒரே ஆவேசம். எல்லோரும் ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். பேரின்பப் பாடல் வரும்போது தூங்கிக்கொண்டிருந்த மக்கள் சிருங்காரம் வரும் காலத்தில் சிரித்துத்தான் மகிழ்கிறார்கள். என்ன செய்வது? வாழ்க்கையிலே பேரின்பம் ஒரு தடவைதானே வருகிறது? அந்தத் தெரியாத காட்சிக்காகத் தெரிந்த வாழ்க்கை முழுவதையும் வீணாக்கிக்கொள்ள விரும்பமாட்டார்கள். 'வேலவரே உமை தேடி ஒரு மடந்தை விடியுமட்டும் காத்து இருக்கின்ற வகை என்ன?' என்று பாடியவுடனே ஒரு சிலருக்கு, 'நாம்தான் வேலவரோ? நமக்காகக் காத்திருப்பானேன்? காத்திருக்க வைக்க மாட்டோமே!' என்ற எண்ணம்கூட வந்தது. எல்லோரும் மோகனாவின் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

''விடியும் அளவும் காத்திருக்கிற வகை என்ன'' என்று பாட்டு முடிந்தவுடனே, மோகனா பக்கவாட்டிலிருந்து நடந்து வந்தாள். அவள் கண்கள் தூக்கத்தில் கலங்கியிருந்தன. விழிகளுக்குள்ளே இருக்கும் தூக்க மயக்கம் எல்லோரையும் மயக்கியது. இரவு முழுவதும் கண் விழித்துக்



காதலனுக்காகக் காத்து இருந்ததாக அவள் அபிநயம் பிடித்தபோது விழிகளே போதும், மொழி வேண்டாம் என்று எல்லோரும் எண்ணத் தொடங்கினார்கள். ஆம். மொழியால் உரைக்க முடியாத எல்லாவற்றையும் அவள் விழிகள் விளக்கின. தூக்கக் கலக்கத்திலே நின்று பெருமூச்சு விட்டாள். அவள் கைகளால் ஒருமுறை சோம்பல் முறித்தாள். அடிக்கடி 'வருகிறானோ, வாரானோ' என்று வாசற்படியையே நோக்கினாள். ஒரு சிலர் சற்று எழுந்திருக்கக்கூடத் தயாரானார்கள். ''இதோ, நான்தான் இங்கே இருக்கிறேனே!'' என்று சொல்ல அவர்கள் நா துடித்தது.

சண்முகம் அவளைப் பார்த்துப் பார்த்துப் பரவசமானான். அன்று இரவில் அவள், தனக்காக வாசற்படி அருகில் காத்துக்கொண்டிருந்த அதே காட்சி அவன் முகத்தில் தோன்றியது. இப்படித்தானே அங்கும் நின்றாள் என்று அவன் எண்ணியபோது, மோகனாவை மறுமுறையும் பார்த்தான். அன்றைக்கு நின்றதைக்காட்டிலும், ஆயிரம் பங்கு விரகதாபத்துடன் இப்பொழுது இவள் நிற்பது தெரிந்தது.

மேலும் ஆட்டம் தொடங்கியது. ''மின்னல் கொடி போல, அன்ன நடையாள்,'' என்று வந்தவிடத்தில் மோகனா மின்னலைப் போல ஒரு துள்ளுத் துள்ளினாள். வாசற்கதவை யாரோ தட்டுவது போலவும், உடனே ஓடிப்போய்க் கதவைத் திறக்கச் சொல்லும் காதலி போலவும் அவள் ஒயிலாய் நடந்து சென்றாள்.

''ஐயோ, கொன்னுட்டா! கொன்னுட்டாடா!'' என்றார் ஒரு ரசிகர்.

''வேலி ஆயிரம் ரூபாய், இப்பவே நாற்பது வேலியை விற்கிறேன். எவனாவது கேஷ் தாரானா, கேளு. அப்படியே அவள் காலில் கொண்டு போய்க் கொட்டறேன்!'' என்றார் மையலாங்குடி மைனர்.

''இருந்திருந்தும் அந்த நாயனக்காரனுக்கு அடிச்சது அதிருஷ்டம்!'' என்று பரிதாபப்பட்டார் ஒருவர். இந்த வார்த்தைகள் சண்முகம் நெஞ்சில் ஈட்டி செருகுவது போல் இருந்தன.

பின் பக்கம் திரும்பிப் பார்க்கவே அவன் மனம் கூசியது. ஆயினும் திரும்பிப் பார்த்தான். ஆனால் ஒருவரும் அவனைப் பார்க்கவில்லை. எல்லோரும் மோகனாவையே பார்ப்பதைக் கண்டான். அது என்ன பார்வை? அவன் உள்ளத்தில் ஒரு பெருமூச்சு, நெஞ்சம் வெம்பியது.

கடைசி அயிட்டம். ''கண்ணுக்கு கல நீரை முத்து முத்தாக உதிர்க்கிறாள், கை நெரித்துத் தலை குனிந்து நிற்கிறாள்'' என்ற பாடினார் நட்டுவனார். இந்தக் காட்சிக்கு மோகனா அபிநயம் பிடிக்கும்போது, அத்தனை இளைஞர்களும் தன்னை எண்ணியே அவள் கண்ணீர் விடுகிறாள் என்று எண்ணினார்கள். அவளுடைய ஒவ்வொரு அசைப்பிலும் உயிர்த் துடிப்பு இருந்தது. பரக்கப் பரக்க விழித்தாள். பற்களைக் கடித்தாள். ''ஏன் வரவில்லை? ஏன் தவிக்க விட்டார்? பொழுது விடியப் போகிறதே! பொல்லாத கோழி கூவிவிடுமே! ஊரெல்லாம் எழுந்து காவிரி நீரில் குளிக்கப் போகும் போது, நாம் ஒருத்தி மட்டும் கனவ

ளுடன் மஞ்சத்தில் இருந்தால், உலகம் சிரிக்குமே! குமரன் கைக் கோழியே நீ கூவாதிரு'' என்று சொல்வது போல அவளுடைய பாவங்கள் ஒரு கருத்தை வெளியிட்டன. ''சபாஷ் சபாஷ்'' என்ற சப்தம் அவளுக்குச் சொல் மாலைகளைச் சூட்டின. தாங்க முடியாத ஆனந்தத்தோடு, தன் கணவன் பக்கம் திரும்பினாள்.

அங்கே, கனவு விழித்ததுபோல, அமிர்தத்தின் நடுவே விஷம் கலந்தது போல, அற்புதமான இசை நடுவே அபசுரம் கலந்தது போல, கண்ணில் கரி விழுந்தது போல அவள் திடுக்கிட்டு நின்றாள். அவளுடைய அத்தனை சந்தோஷமும் ஒரு நொடியில் மறைந்தது. எதிரிலே அவளுடைய கணவன் தலை குனிந்த வண்ணம் சிடுசிடுவென்ற முகத்தோடு அமர்ந்திருந்தான். அவள் கற்ற வித்தை அவ்வளவையும், அவன் கண் பார்வை ஒன்றே பாழாக்கிவிடும் போலிருக்குதே என்று வருந்தினார் நட்டுவனார்.

ஆட்டத்தை முடித்துக்கொண்டு, அரங்கத்தின் உள்ளே சென்றாள் மோகனா.

இந்நிலையில் கூட்டத்தில் ஒரு பரபரப்பு காணப்பட்டது. ராயர் அவர்களிடம் லேவாதேவி செய்யும் உப்புக்காரத் தெரு செட்டியார் கூட்டத்தில் புகுந்ததுதான் இதற்குக் காரணம். ''வாருங்கள், வாருங்கள்'' என்று எல்லோரும் வரவேற்றார்கள். ஆட்டு மந்தை நடுவே புலி புகுந்தது போல ஆட்டத்தின் நடுவே அவர் புகுந்ததும் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ராஜாங்கம் அப்பண்ராவ், அப்பொழுதும் தன் ராஜாங்கத்தை விடவில்லை.

''வா செட்டியார், உட்கார்!'' என்று உபசரித்தார். அதற்குள் ஏஜண்ட் வெங்கோபராவ், சண்முகத்தின் அருகில் வந்தார். ''கொஞ்சம் நீங்க இப்படி வரீங்களா?'' என்று ஒரு வார்த்தை அவனைக் கேட்டுவிட்டார். துள்ளி எழுந்தான் சண்முகம். முதலாளி, அந்த ஆசனத்தில் அமர்த்தி வைக்கப்பட்டார். பீதாம்பரத்தை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு சண்முகம் வெளியே புறப்பட்டான்.

விதரணை தெரிந்தவன் ஆதலால், இரண்டு வரிசைகள் தள்ளி ஓரிடத்தில் போய், தன் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தான். அவன் உள்ளம் சிதறுண்டு கிடப்பதுபோல, வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு முதலியவைகள் மூலைக்கு ஒன்றாகச் சிதறிக் கிடந்தன. பாக்கைச் சீவி வாயில் போட்டுக்கொண்டான். அது கரைவதைக்கூடக் கவனியாமல், இதயக் குழப்பத்தை அசைபோட்டுக்கொண்டிருந்தான்.

அப்பொழுது, ''என்ன பிள்ளைவாள், இங்கே உட்கார்ந்திருக்கீங்க?'' என்று அவன் அருகில் ஒரு சங்கீத ரசிகர் வந்து உபசாரம் விசாரித்தார். ''வாங்க, முன்னாலே கொண்டுபோய் உட்கார்த்தி வைக்கிறேன்'' என்று அவர் அழைத்தார். அந்த உபசாரமே அவனுக்கு வைவதுபோல் இருந்தது.



''இல்லை, இங்கேயே இருக்கிறேன்'' என்றான். எப்பொழுது இப்படிச் சொல்லப் போகிறான் என்று காத்திருந்த அவர் மேடையை பார்த்துக்கொண்டே நாற்காலிகளை இடறிய வண்ணம் உள்ளே சென்றார்.

'ஏன் கவலையாக இருக்கிறார்? சற்று நேரத்திற்கு முன் சந்தோஷமாக இருந்தாரே!'' என்ற கேள்விகள் உள்ளே சென்றவுடன் மோகனாவைத் துன்புறுத்தின. அதற்குப் பதிலைத் தேடும் முன்னே, அவளைத் தேடிக்கொண்டு ஓடி வந்தார்கள் ராமராவும் அவரது மனைவியும். ஆட்டம் அற்புதம் என்று புகழ்ந்தார்கள்.

மோகனாவுக்கு அவர்களுடைய பாராட்டு எல்லாம் காதில் விழவில்லை. உடனே சண்முகத்தை வரச்சொல்ல வேண்டும். அவருக்கு என்ன கவலையென்று கேட்க வேண்டும் என்று அவள் எண்ணினாள்.

'ஆனால் அவர் தகுதி என்ன? அந்த வித்வானை அரங்க மேடைக்கு நாம் அழைக்கலாமா? ஆயிரம் பேர்களுக்கு நடுவே அவர் அரங்க மேடையில் ஏறி வருவாரா? அது அவரை அவமரியாதை செய்தது போலாகுமே! நமது சொந்தத்தை இங்குதானா காட்டிக்கொள்ள வேண்டும்?' என்று அந்தப் பெண்ணின் உள்ளம் பேதைமை பேசியது.

''அம்மா, அத்தானைக் கூப்பிடச் சொல்லணும்.''

''ஆமா, ஒரு மணி நேரம் அவனைப் பார்க்கலேன்னா கூப்பிடு கூப்பிடுங்கிறயே, என்னிக்காவது இந்த அம்மாவைக் கூப்பிடுன்னு சொல்லியிருக்கியா?'' என்று வடிவாம்பாள் சந்தர்ப்பம் தெரியாமல் சந்தோஷம் கொண்டாடினாள்.

இதற்குள் ராமராவ், ''ஒரு சின்ன யோசனை'' என்றார். ''அந்த தில்லானா திருவாரூரிலே ஆடினேனே, அதை நீங்க ஆடணும், சண்முகம் பிள்ளை தில்லானா வாசிக்கணும். ஜனங்கள் எல்லாம் ரொம்ப ஆசைப் படறாள். அவரும் வந்திருக்காப்பிலே இருக்கே?'' என்று இப்பொழுது தான் சண்முகம் வந்திருப்பதை அறிந்தவர்போல் கூறினார்.

மோகனாவும், இந்தத் தருணத்தை நழுவ விடாமல், ''அவரை உள்ளே கூப்பிடுங்க!'' என்றாள்.

ராமராவும், வெங்கோபராவும் கூட்டத்திற்குள் சென்றார்கள். ஆனால், சண்முகம் அந்தக் கூட்டத்தில் இல்லை.

அந்த ஊரிலும் இல்லை. அவன் தஞ்சாவூர் ரயிலடிக்கு வந்தபோது ஓட்டல் பையன் ஒரு சீட்டை அவனிடம் கொடுத்தான். படித்ததும் பிரமித்தான் சண்முகம். கையொப்பம் இல்லை. எழுத்து. தெரிந்த எழுத்து. அவசரமாக ஓடினான். அப்பொழுதே புறப்படும் வண்டியில் ஏறினான். ''மதராஸ் வண்டிதானே?'' என்று கேட்டான்.

# தலையெழுத்தும் கையெழுத்தும் தனித்தனிதானே!



பக்கத்துக் குட்டையில் தங்கியிருந்த தண்ணீரில் பௌர்ணமிச் சந்திரன் அழகாகத் தெரிந்தது. 'அடேயப்பா! இந்தக் குட்டையிலேயே இவ்வளவு அழகாகத் தெரிகிறதே, கடலில் எவ்வளவு அழகாயிருக்கும்? அங்கு போய்ப் பார்ப்போம்!' என்று சமுத்திரக் கரைக்குச் சென்று, சமுத்திரத்தில் சந்திரன் தெரிகிறானா என்று பார்த்தால், அங்கே தெரியவில்லை.

குட்டையில் தெரியும் சந்திரன் ஏன் கடலில் தெரியவில்லை? குட்டை கலங்காமல் இருக்கிறது. கடலோ அலைகளை வாரி வீசி அலறிக்கொண்டு நிம்மதியில்லாமல் இருக்கிறது. அதனால்தான் சந்திரன் நிழல்கூட அங்கு தெரிவதில்லை. இதைப் போலவேதான் உள்ளம் குழம்பியிருந்தால், அங்கு அறிவும் இருக்காது, ஆண்டவனும் தெரியாது.

இன்று சண்முகத்தின் மனம் அவ்வாறுதான் குழம்பியிருந்தது. கையில் இருக்கும் கடிதத்தை ஐந்து தடவை படித்துப் பார்த்தும், அது யார் எழுதிய எழுத்து என்பது அவனுக்கு நிச்சயமாகவில்லை. மறுமுறையும் கடிதத்தை எடுத்தான், படித்தான். ''பொன்னம்பலத்தா பிள்ளையை சென்னையில் போய்ப் பார்'' என்று மட்டும் அதில் எழுதியிருந்தது. கையொப்பமில்லை. எடுத்த எடுப்பிலேயே அவனுக்கு அது காரைக்கால் நடேசன் கையெழுத்தாக இருக்குமோ என்று சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்தில்தான் அவசரமாக ரயிலிலும் ஏறினான். அப்படியிருக்க, இப்பொழுது மனம் குழம்புவானேன்?

'மோகனாவைத் தஞ்சாவூரில் விட்டுவிட்டுச் செல்கிறோமே? அவளிடம், தான் ஊருக்குப் போவதைக்கூடச் சொல்லவில்லையே! தன்னைக் காணோமே என்று அவள் அழுதால், என்ன செய்வது?' இந்தக் கவலை ஒருபுறம் வாட்டியது.

'நம் மனத்திற்கு விரோதமாக எதற்காக நாம் தஞ்சைக்கு வந்தோம்? நாம் எதற்காக இவ்வளவு பெரிய அவமானத்தை அநுபவிக்க வேண்டும்? தெரியாமலா பெரிய வித்வான்கள், ஒருவர் கச்சேரி நடக்கும்போது, இன்னொருவர் வருவதில்லை? நாமே நம்முடைய தரத்தைக் குறைத்துக் கொண்டு விட்டோமே!



'சாதாரணமாக நம்மை வீதியில் கண்டாலே அன்புடன் உபசரிக்கும் மக்கள் இன்று அத்தனை உபசாரங்களையும் மறந்துவிட்டார்களே! இதற்குக் காரணம் என்ன? அவர்கள் இங்கு நம்மை எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்தது மோகனாவைத்தான். அதனால்தான் நம்மை இரண்டாம் பட்சமாகக் கருதிவிட்டார்கள். நாம் இங்கு வந்திருக்கவே கூடாது' என்ற குழப்பம் ஒருபுறம்.

'மோகனா தேடுவாளே.... தேடினால் என்ன? சற்று நேரம் தேடப் போகிறாள். அதுவும்கூட அம்மா அனுமதித்தால்தானே? ''எங்கே போகப் போகிறான்? தானே வருவான்!'' என்று தாய் சொல்லிவிடுவாள். ஆம். நம்மால் ஏதேனும் உபகாரம் இருக்கவேண்டும், தேட வேண்டும். அல்லது நம் உபகாரத்தை அவர்கள் நம்பியிருக்க வேண்டும். தேடித்தான் ஆக வேண்டும். நம்மைத் தேடுகின்ற நேரத்தில் நாலு இடத்தில் ஆடினால் திரவியத்தைத் தேடிவிடலாமே! சும்மா நாம் ஒரு சுமை தானே அவர்களுக்கு! ''இந்த மட்டில் விட்டானே!'' என்றுதான் அவள் அம்மா நினைப்பாள். ஆனால் மோகனா வருந்துவாளே!.... என்ன செய்வது? வருத்தத்தைப் போக்குவதற்காவது இனி ஆடியாக வேண்டும். அதுவும் தவிர, நட்டுவனார், முட்டுக்காரன், தத்தி, ஜாலர்.... இவர்களையெல்லாம் மாதச் சம்பளத்துக்கு வைத்துக்கொண்டு ஆடாமல் வீட்டில் இருக்க முடியுமா? அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டாமா? ஆடட்டும், ஆடட்டும்' என்று ஒரு பெருமூச்சு விட்டான். இந்தக் கலக்கங்களுக்கு இடையிலே அவன் கையில் இருக்கும் கடிதத்தை மறுபடியும் ஒருமுறை பார்த்தான்.

மனதிற்கே ஓர் அரிய திறமையுண்டு. அந்தச் சக்தி, அந்தக் கடிதத்தில் ஏதோ முக்கியத்துவம் இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொண்டே வந்தது. பள்ளிக்கூடத்திற்குள் புதிதாக நுழையும் ஒருவருக்கு ஒரு பையனுக்கு ஒரு பையன் வித்தியாசம் தெரியாது. ஆனால் அந்தக் கல்விச்சாலை ஹெட்மாஸ்டரோ அங்கு படிக்கும் ஆயிரம் பையன்களுக்கும் ஆயிரம் அடையாளம் வைத்திருப்பார். அதைப் போலவே எழுத்து ஒரே தமிழ்தான். எல்லோரும் வலது கையால்தான் எழுதுகிறார்கள். ஆனால் எழுத்துக்கு எழுத்து எத்தனை வித்தியாசம்! தலையெழுத்தும் கையெழுத்தும் ஒன்று போலவே இருப்பதில்லை. காரணம் சொல்லத் தெரியாவிட்டாலும், கையெழுத்தைப் பார்த்தவுடனே இது இன்னார் கையெழுத்துத்தான் என்பதைக் கண்டு பிடிக்கும் சக்தியை மனம் அடைந்திருக்கிறது. அந்தச் சக்தி சண்முகத்தின் மனதில் வேலை செய்தது. கையில் கடிதத்தை வைத்துக்கொண்டே அவன் சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

'இது யார் எழுத்து? நடேச அண்ணனாக இருந்தால், 'போய்ப் பார்' என்று மரியாதைக் குறைவாக எழுத மாட்டாங்களே! பாகேசியார் எழுதியிருப்பாங்களோ? அவுங்க துறவி; காகிதமே எழுதமாட்டாங்களே! பின்னே வேறே யார்? வைத்தியின் வேலையாக இருக்குமோ? சே,

அந்த ஆளு இங்கிலீசு கலக்காமல் எழுதாதே மைனர். உடா அவர்தான் பணத்தின் பாரத்தில் பயந்து மறைந்துவிட்டாரோ? எழுத்தைப் பார்த்தால் பெண்பிள்ளை எழுத்தாகவும் தெரியவில்லையே! மரகதமோ, இருக்காது! ஆனால் இது தெரிந்த எழுத்து.... இடது கையாலே எழுதி யிருப்பாங்களோ?"

"என்ன பிள்ளைவாள் மதராசுக்குப் போறீங்களா?" என்று பக்கத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

திடுக்கிட்டு, "ஆமாம்" என்றான் சண்முகம்.

"நிக்கிறீங்களே, உட்காருங்க" என்றார் கேட்டவர். அப்பொழுது தான் சண்முகத்துக்குத் தான் நிற்கிறோம் என்பது தெரிந்தது. உடனே அவர் சற்று விலகிக்கொண்டு, சண்முகம் வசதியாக உட்காருவதற்கு இடம் செய்து கொடுத்தார்.

"நீங்கள் சண்முகம் பிள்ளைவாள்தானே?" என்று அவர் மரியாதை யுடன் கேட்டார்.

முன்பின் தெரியாத ஒருவர் தன்னை ரயிலில் உபசரிப்பதைக் கண்டவுடனே, அவனுக்குத் தஞ்சாவூரில் இழந்த பலம் சற்றுத் திரும்ப வந்தது.

"என்ன, இப்படி இரண்டாம் கிளாசிலே புறப்பட்டீங்க? நீங்க எப்பவும் பஸ்ட் கிளாசிலேதானே போவீங்க?"

"அப்படி ஒண்ணும் இல்லீங்க, ஏதோ அவசரத்திலே ஏறிட்டேன்."

"ஏன், யாருக்காவது உடம்பு கிடம்பு சரியில்லையா? அது என்ன கையிலே ஒரு காகிதத்தை வைத்துக்கொண்டு, இத்தனை நாழி யோசனை பண்றீங்க?" என்று அவர் அடுத்த கேள்வியையும் கேட்டார்; கையையும் நீட்டினார்.

"இதோ பாருங்க, கையெழுத்துப் போடாமே யாரோ எழுதியிருக் காங்க. எனக்கு யாருன்னு புரியலே" என்று சண்முகம் கடிதத்தை அவரிடம் காட்டினான்.

அந்த மனிதர் கடிதத்தை வாங்கி மேலெழுந்த வாரியாகப் பார்த்தார்.

"ஏதாவது, ரகசியமாக இருக்கும். பொம்பளைங்க கையெழுத்து மாதிரி இருக்கு" என்றார்.

"சே, சே! எனக்கு ஒருத்தரும் அப்படி எழுதமாட்டாங்க" என்று சொல்லிவிட்டு, சண்முகம் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான்.

"எங்கே, உங்க வெற்றிலைப் பெட்டி?" என்றார் அவர்.

"அவசரத்திலே அதையெல்லாம் எடுக்காமே புறப்பட்டு விட்டேன்."

"இந்தாங்க வெற்றிலை சீவல்" என்று கூறி, தன் கையிலிருந்த பொட்டலத்தில் இருந்து வெற்றிலையையும் வறுத்த சீவலையும் எடுத்தார். "இந்தாங்க, வெத்திலை போடுங்க" என்று உபசரித்தார்.



காய்ந்த பயிரில் அடித்த மழைச்சாரல் போல சண்முகத்தின் வாடிய மனம் இந்த அன்பில் தளிர்த்தது.

"ரொம்ப சந்தோஷம், உங்களைப் பார்க்கக் கொடுத்து வச்சது. மதராசிலே எங்கே தங்கப் போகிறீங்க?" என்றார் அந்தப் புது ஆசாமி.

ஆனால், அந்தக் குரல் எங்கேயோ கேட்ட குரல் போல் சண்முகத் துக்குத் தோன்றியது. எங்கே என்று புரியவும் இல்லை.

இந்த வித்வான்கள் பிழைப்பே அப்படித்தான். அவர்கள் கச்சேரிக்குச் செல்லும் இடத்திலே பதினாயிரக்கணக்கானவர்களைப் பார்க்கிறார்கள். அந்தக் கூட்டத்திலே ஒருவர் சங்கீதத்தை அற்புதமாக ரசித்தால்போதும், அவரைப் பார்த்துக்கொண்டே வித்வான் பாடுவார். அவர் தனக்குப் பழக்கமானவர் போல மனதில் பதிந்துவிடுகிறது. பிறகு ஒரு நாள் அவரைப் பார்க்கும்போது, 'இவர் யார்? இவரைக் கச்சேரியில் பார்த்தோமா? கலந்து பேசினோமா?' என்று கண்டுபிடிக்கத் தெரியாமல் 'நமஸ்காரம்' என்று சொல்லி இளிப்பார்கள். இதைப் போலவே சண்முகமும் 'எங்கேயோ இந்த மனிதரைப் பார்த்து இருக்கிறோம். இவர் குரலைக் கேட்டிருக்கிறோம்' என்ற முடிவுக்கு வந்தானே ஒழிய, எங்கு என்று நிச்சயம் சொல்ல முடியாமல் திண்டாடினான். அப்பொழுது அந்த மனிதர் மேலும் பேச ஆரம்பித்தார்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? எனக்கு உங்க பாட்டுன்னா உயிர். பல இடங்களிலே கேட்டிருக்கிறேன்" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "ஆமாம், மதராசிலே எங்கே தங்கறதாக உத்தேசம்?" என்ற அதே கேள்வியை மறுமுறை திருப்பினார்.

சண்முகத்துக்கே, தான் எங்கு தங்கப்போகிறோம் என்பது நிச்சயம் ஆகவில்லை. "எங்கே.... .... பொன்னம்பலத்தா பிள்ளையைப் பார்க்கணும். அங்கேயே தங்க வேண்டியதுதான். ஆமாம், உங்களை எங்கேயோ பார்த்த மாதிரியிருக்கே....?" என்றான்.

"என்னைப் பார்த்திருக்க மாட்டீங்க!"

"இல்லை பார்த்திருக்கிறேன். ஐயா எந்த ஊரில் இருப்பது?"

"நமக்குப் பலசரக்கு வியாபாரம். திண்டுக்கல்லிலே கடைவச்சு இருக்கேன். இப்பச் சரக்குப் போடறதுக்கு மதராஸ் போறேன்."

"அப்படியா! பலசரக்கை மதராசிலே போய்க் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இல்லியே! அதுக்குப் பக்கத்திலேயே பொள்ளாச்சி, விருதுநகர், மதுரையிலேல்லே போடுவாங்க."

அந்த ஆசாமி சற்றுத் திணறினார். "இல்லே, மைசூர் புளி மதராசிலேதான் விலை சகாயம்" என்றார்.

சரி, இது உப்பு, புளி வியாபாரம். நமக்கு அதிகமாகத் தெரியாது என்று விட்டுவிட்டான் சண்முகம். ஆனால் ஆளைப் பார்த்தால் புளி மூட்டை வியாபாரியாகத் தோணவில்லையே! சும்மா கிராப்பும் ஜிப்பாவும் சிகரெட்டும் பிரமாதமாக இருக்கிறாரே! யாரோ தன்னை

மறைத்துக்கொண்டு பேசுகிறார் என்று எண்ணினான். அவர் முகத்தை மேலும் கூர்ந்து நோக்கினான். இதை அறிந்தது போல் அந்த மனிதர் சடக்கென்று எழுந்து வாய் கொப்புளிப்பதற்காக 'பாத் ரூமு'க்குச் சென்றார். அந்த நடை, அவர் உயரம்.... .... அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஒரு சாயலை வைத்துக்கொண்டே, ஒரு ராகத்தைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் உடையவன் ஆதலால், அடுத்த கணமே அந்த ஆள் யார் என்பதைச் சண்முகம் கண்டுபிடித்துவிட்டான்! திடுக்கிட்டான். அவர் வேறு யாருமல்ல. அன்று சண்முகத்தின் வீட்டில் நகைகளைப் பறிமுதல் செய்தபோது, சப்இன்ஸ்பெக்டருடன் வந்த போலீஸ்காரர்களில் அவர் ஒருவர். 'ஐயோ! இவரிடம் கடிதத்தைக் காட்டி விட்டோமே!' என்று நடுங்கினான். உண்மையில் அவர் புளி வியாபாரம் செய்பவரல்ல. ஆயினும், சண்முகத்தின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டார் அவர்!

முப்பத்து நான்காம் அத்தியாயம்

## யாரோ ? அவர் யாரோ ?



''தை மாசத்தில், புனர்பூசத்தில்,
குருவாரத்தில், பகல் நேரத்தில்,
நடனம் ஆடினார்''

என்று நட்டுவனாரின் பாட்டு கணீர் என்று ஒலித்தது. மோகனாம்பாள் நடராஜ நடனத்தை ஆடிக்கொண்டிருந்தாள். துடி இடையும் துள்ளு நடையுமாக விரைவும் சம்பிரமும் விரவி அவள் கரகரவென்று ஆடுவதும், கால் தாளம் போடுவதும் கண்டு அங்கிருந்த எல்லோரும் மயங்கினர். ஆமாம், அன்று மோகனா ஜகஜ்ஜோதியாகக் காட்சியளித்தாள். உள்ளே சென்றவள் எப்ப வருவாளோ என்று திரையையே பார்த்தனர் பலர். அருணோதயத்தைப் பார்த்து அர்க்கியம் கொடுக்கக் காத்திருக்கும் மகரிஷிகள் போல் பல இளைஞர்கள் பார்த்திருந்தார்கள். அவள் இடது பாதம் தூக்கி ஆடிக்கொண்டே வந்தவுடனே அந்தக் கைகளின் கரகோஷம் அதிர்ந்தன.

பெண்மையின் அழகு பெண்ணின் வாழ்க்கையின் முற்பகுதியில் இரு முறைகள் வெளிப்படுகின்றன. ஒன்று, பருவ மலர் மலர்ந்தபோது அழகு பொங்கித் ததும்புகின்றது. அவளுடைய உள்ளொளி, உலகை மயக்கப் போட்டுவிடுகின்றது. விட்டில் பூச்சிகள் விளக்கைச் சுற்ற ஆரம்பிக்கின்றன.



அடுத்தபடியாக அழகு வருவது, அவள் புதுமணப் பெண் ஆனவுடனே. கணவனை அடைந்த இன்பத்திலே அந்தக் காரிகையின் சந்தோஷம், பௌர்ணமிக் கடல் பொங்குவதுபோல் பொங்குகிறது. அவளுடைய புன்னகையில் புதுமணம் வீசுகின்றது. காலமெல்லாம் தவஞ்செய்து, தவத்தில் இணைந்த உடம்பு இறைவனைக் கண்டதும் எழில் பெறுவதுபோல் கொழுநனைத் தொழும் குலக்கொடி அழகு பெறுகிறாள். கொழுகொம்பில் படரும் கோதை பூத்துக் குலுங்குவது இயல்புதானே?

அன்று வரை அவள் சிரித்த சிரிப்புக்கும், அதற்குப் பிறகு அவள் சிரிக்கும் சிரிப்புக்கும் அர்த்தத்தில் வேறுபாடு இருக்கிறது. அவள் கண்களின் பார்வையில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவள் உதடுகளில் புதுநிறம் பரவுகின்றது. அவள் உள்ளத்தில் புதுப்பால் பொங்கி வழிகின்றது. குணத்திலோ, இதுவரை மலராக இருந்து பலரை வசீகரம் செய்த மணம் திருமணத்தோடு தீர்ந்து, அதன் பின் காய்ப்பருவமும் அடக்கமும், இவை மறைவில் வசிப்பதும் ஏற்படுகிறது. இவ்வாறு உண்டாகும் அத்தனை அழகும் இன்று மோகனாவிடம் வெளிப்பட்டன. அந்தக் கட்டழகியைப் பார்த்த இளங்காளைகள் பலவாறு பேசிக்கொண்டேயிருந்தார்கள்.

இளம் உள்ளங்கள் அவளைப் பார்த்து பார்த்து ஏங்கின. அடைய முடியாத ஒன்றில் ஆசை ஏற்படுவதுதானே இயற்கை?

'ஐயோ, இவ்வளவு பெரிய அழகி நம் கையை விட்டுப் போய்விட்டாளே' என்றுகூடச் சிலர் ஏங்கினர். அவளுடைய நடைக்கு நாலு அர்த்தம் கற்பித்தார்கள் சிலர். இடை அசைப்பில் என்னென்னவோ அழகைக் கண்டார்கள். விழி வீச்சில் வெதும்பினார்கள். புன்னகையிலே புத்தியையே பறி கொடுத்தார்கள். இரண்டு கண்களிலும் இரண்டு மோகனாக்கள். கருத்தில் ஒரு மோகனா. இரண்டு காதுகளிலும் அவள் தண்டை ஒலி. இப்படியெல்லாம் அங்கிருந்த அத்தனை பேர்களும் மோகனாவின் மோகாந்தகாரத்தில் மூழ்கியிருந்தார்கள். அவர்கள் நடராஜனைக் காணவில்லை. நங்கையைத்தான் கண்டார்கள்.

ஆனால் இரு விழிகளைக் கொண்டே எழுபத்திரண்டு பாவங்களை வெளியிடும் மோகனா, எதிரில் உட்கார்ந்திருக்கும் தன் இதய சௌந்தரிய ரூபனை எங்கே என்று நோக்கினாள். அவன் அங்கில்லை. எங்கு போனார், ஏன் போனார் என்ற கேள்விகள் அவள் நெஞ்சைத் துளைத்துக்கொண்டிருந்தன. எப்பொழுதும் பதினைந்து நிமிஷம் ஆடுகின்ற அந்த ஆட்டம் அன்றைக்கு ஐந்தே நிமிஷத்தில் முடிந்தது. அஞ்சலி பிடித்துவிட்டு உள்ளே சென்றாள். ஜனங்கள் ஆனந்தத்தோடு கரகோஷம் செய்துகொண்டிருந்தார்கள்.

''அம்மா, புறப்படுங்க, புறப்படுங்க'' என்றாள் மோகனா.

''எங்கே புறப்படச் சொல்லறே?'' என்று வடிவாம்பாள் எரிந்து விழுந்தாள்.

"என்னம்மா, அத்தானைக் காணோமே! அவங்க கூட்டத்திலே இல்லேம்மா!"

"உங்க அத்தான் என்ன பச்சைப் புள்ளையா, முந்தானியிலே முடிஞ்சிக்கிட்டு இருக்க. எதுக்காக ஆட்டத்தை அவசரமாக முடிச்சே? என்னமோ மோகனா, நீ செய்யற காரியம் எனக்குப் பிடிக்கலே."

"இல்லேம்மா, அவருக்கு மனசு சரியில்லை."

"அது சங்கீதக்காரனுக்கு உடம்போடே பிறந்தது. எங்கே தாளம் தவறுதுன்னுதானே பாத்துக்கிட்டு இருப்பாங்க? ஆடினா தலையை ஆட்டத் தெரியுமா? அந்தக் குணம் எங்கே போகும்? ரசிக்கத் தெரிஞ்சா கடைசி வரையில் உட்கார்ந்திருக்க மாட்டான்.........?"

"அவருடைய ரஸிகத் தன்மையைப்பற்றி உங்களிடம் கேட்கவில்லையம்மா இப்போ!"

"பின்னே என்ன, இப்போ எங்கே போகணுங்கிறே? மாப்பிளை மாப்பிளைன்னு நான் தெருவிலே கத்திக்கிட்டு ஓடணும். தெருவிலே போறவன் எல்லாம் என்னைத் திரும்பிப் பார்க்கணும்?"

"வரதா, சீக்கிரம் ஒரு வண்டி கொண்டு வா. நான் போகணும்!"

"அட, என்னா புள்ளே காலிலே சலங்கையை அவுத்திக்கிட்டு புறப்படு புறப்படுங்கிறியே."

"அதுதான் ஆடியாச்சே அம்மா."

"இங்கே ஆடறதுக்குத்தானா வந்தோம்?"

"பின்னே எதுக்காக வந்தோம்?"

"ஆடணும்னா நம்ம வீட்டு மாடியிலே ஆடிட்டுப் போறோம். பணம் வாங்கத்தானே இங்கே வந்தோம். சதிரை ஆடிட்டு சன்மானம் வாங்கற நேரத்திலே முகத்தைத் தூக்கிக்கிட்டு நின்னா, கூடப் பத்து ரூபாய் கொடுக்கிறவன்கூட கொடுக்கமாட்டான். உங்க அத்தான் எங்கேயும் போயிட மாட்டாரு. வெற்றிலை போட்டுக்கிறதுக்காக வெளியிலே போயிருப்பாரு."

"இல்லேம்மா, அவர் மனசே சரி இல்லேம்மா."

"யாரு மனசு சரியில்லே, உன் மனசுதான் சரியில்லே. அவன் உன் ஆட்டத்தைப் பாத்து அசந்தே போயிட்டான்" என்று சிரித்தாள் தாய்.

இதற்குள் ராமா ராவ் உள்ளே ஓடி வந்தார்.

"என்னமோ, நீங்க தில்லானா ஆடுவேள்னு பார்த்தோம். அதற்குள்ளேதான், அவரு எங்கேயோ போயிட்டாரே! ராயர்வாள் உங்களைக் கூப்பிடறாள்" என்றார்.

"எங்க அம்மா இங்கே இருக்காங்க. சன்மானத்தை அவங்ககிட்டே கொடுத்து அனுப்புங்க. எனக்கு அவசரமாக ஒரு வண்டி வேணும்" என்றாள் மோகனா.



"நல்லா இருக்கு, உங்களுக்கு விருந்துக்கு வீட்டிலே ஏற்பாடு பண்ணியிருக்கு."

"அது ஆடினால் சாப்பிடுவது இல்லேங்க" என்று ஒரு பொய்யைச் சொன்னாள் தாய்.

"பின்னே எதுக்காக ஆடறது? மனுஷன் சௌக்கியமாக இருக்கிறதுக்குத்தானே சம்பாதிக்கிறது? நம்ப ராயவர்வாள் வீட்டுச் சமையல் உலகப் பிரசித்தம். பன்னிரண்டு கறி, நாலு பச்சடி, பதர்பேணி, நீங்க அவசியம் சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்" என்று விடாப்பிடியாய் நின்றார் வெங்கோப ராவ்.

"வா, கண்ணு இவ்வளவு சொல்றாங்களே!" என்றாள் வடிவாம்பாள்.

"நான் வரலே அம்மா. இப்ப அவங்க வண்டி தராலென்னா, வரதன் போய் ஒரு வாடகை வண்டி பிடித்துக்கொண்டு வரட்டும்" என்று மோகனா ஆத்திரத்துடன் வரதன் பக்கம் திரும்பிச் சொன்னாள். விஷயம் தன்னை மீறிப் போகிறது என்பதைக் கண்டாள் வடிவாம்பாள்.

"இல்லே, எங்களுக்கு அவசரமாகப் போகணும். நாளைக்கு ஒரு கச்சேரி இருக்குது" என்று குழைந்து சொன்னாள் வடிவாம்பாள்.

ஐந்து நிமிஷத்துக்குள்ளே சன்மானத்தை வாங்கிக்கொண்டு, மோகனா புறப்பட்டுவிட்டாள்.

ராஜாச் சத்திரத்தில் வந்து இறங்கியவுடன், மோகனா 'அத்தான்' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே ஓடினாள். அவனுடைய பெட்டி இருந்தது, படுக்கை இருந்தது. ஆனால் சண்முகம் அங்கில்லை. 'எங்கே போய்விட்டார்? ஏன் போய்விட்டார்? இந்த மனிதர்கள் அவரை அவமரியாதை செய்துவிட்டார்கள். ஒருவரும் அவரைச் சரியாகக் கவனிக்கவேயில்லை. தன்னைக் கலியாணம் செய்துகொண்டதால் அவருக்குள்ள மதிப்பை இழந்துவிட்டார்' என்றெல்லாம் அவளுக்குத் தோன்றியது.

ஆட்டத்தில் நடுவிலே அவன் முகம் மாறியதை எண்ணினாள். அவளுக்கு அது இப்பொழுது ஆயிரம் அர்த்தங்களைக் கொடுத்தது. 'நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா? எங்கேயாவது தாளம் தவறி விட்டேனா? அவர் முகம் அப்படி மாறுவானேன்? தவறு ஒன்றும் ஏற்பட்டு இருக்காதே. அப்படி ஒன்றும் நான் நிதானம் இழந்து ஆடவில்லையே!.... எனக்கு ஒரு ஜவ்வாது மாலை போட்டவர்கள், அவருக்கு ஒரு ஜவந்திப்பூ மாலையாவது போட்டிருக்கக்கூடாதா' என்று எண்ணினாள். 'சே, எனக்குச் செய்யும் கௌரவம் அவருடையதுதானே அவர் இதெல்லாம் நினைக்க மாட்டார். அவர் இரண்டு நாளாகவே முள்ளின்மேல் உட்கார்ந்திருப்பது போல இருந்தார். ஆட்டத்தைப் பார்க்க அவர் மனதில் நிம்மதியில்லை. ஆனால் இப்படிச் சொல்லாமல் போவானேன்?' என்று வருந்தினாள். 'ஒரு சமயம் வெளியில் எங்கே

வேறும் ஜவுளிக்கடைப் பக்கம் போய்விட்டு, கல்யாண வீட்டில் மறுபடியும் வந்து தேடினால்? நாம் அவசரப்பட்டு வந்துவிட்டோமா? ஐயோ! இன்னும் கோபம் அதிகப்பட்டுவிடுமே!' என்று பதறினாள்.

''வரதா, அந்தான் வாசற் பக்கம் இருக்காங்களான்னு போய்ப் பார்.''

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'ஒரு சமயம் ரயிலடிப் பக்கம் போய் இருப்பாங்களோ! பொழுது போகாத நேரத்தில் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் போய் உலாவி விட்டு வருவது நமது ஊர் வழக்கமாயிற்றே. அப்படி இவரும் போய் இருப்பாரோ' என்று எண்ணி ரயிலடிப் பக்கம் நடந்தான்.

''ஏ, வரதா எங்கே போறே?'' என்றாள் வடிவாம்பாள்.

''என்னம்மா போறபோது?'' என்று உட்கார்ந்தான்.

''நான் இப்படி நம்ம ஊராச்சே, சும்மா போயிட்டு வரலாம்னு புறப்பட்டேன்.''

''ஆமா, உங்க ஊரு உங்க ஊருன்னு பெருமையாகப் பேசிக்கிறியே. ஒரு ஆயிரம் கொடைமுளகா வாங்கிக்கிட்டு வாயேன், விலை சகாயமா?''

''சரி அம்மா!''

''இந்தப் பொண்ணு அவசரப்படாமல் இருந்தா வெங்கோபராயரே வாங்கியாந்திருப்பாரு. சரி, இந்தா கூடை. அழுகலை வாங்கிடாதே.... ... அலங்கத்துக்காய் வேண்டாம்'' என்று ஒரு பழைய பழக்கூடையைக் கொடுத்தாள் வடிவாம்பாள்.

வரதன் கொடைமிளகாய்க் கடை வாசலில் மிளகாயைக் காதில் குலுக்கிப் பார்த்து எண்ணினான்.

''யாரைத் தேடிக்கொண்டு மத்தளக்காரரே....? சண்முகம் பிள்ளையைத்தானே?'' என்று ஒரு குரல் கேட்டது. ஹோட்டல் பையன் எதிரில் நின்றான்.

மிருதங்கம் வரதனும் தஞ்சாவூர் ஆசாமி. விட்டுக் கொடுப்பானா? ''உங்களைத் தேடலிங்க. மிளகாய் வாங்கறேன்'' என்றான்.

''ரொம்பச் சரி, வாங்குங்க'' என்று நடந்தான் பையன்.

வரதன் அவன் பின்னாலேயே தொடர்ந்து, ''ஆமாம், இங்கே அவரு வந்தாரா?'' என்றான்.

''அவரா? இத்தனை நாழி மாயவரம் தாண்டியிருப்பாரு!''

''என்ன, மாயவரம் தாண்டியிருப்பாரா?''

''ஆமாம்'' என்று வேகமாக நடந்தான் பையன்.

''அதுக்கு நீ ஏன் அய்யா தாண்டிக்கிட்டு ஓடறே? அவருதானா, இல்லே வேறே யாராவது?'' என்று கேட்டுக்கொண்டே வரதன் அவன் பின்னே ஓடினான்.



''என்ன சார், இப்படிக் கேட்கிறீங்க? உங்களையானால் ஒரு பயலுக்கும் தெரியாது. அவரை யாருக்காவது தெரியாமல் இருக்குமா?''

''ஆமாம், ரயில்லே போயிட்டாரா?''

''இல்லே நடந்தே போயிட்டாரு. உங்க கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது சார். போட் மெயில் வரப்போகுது'' என்று சொல்லிவிட்டுப் பையன் வேகமாய் நகர்ந்தான்.

''ஏய் தம்பி, தம்பி'' என்று வரதன் அவனைத் துரத்தினான்.

''சார், நான் உங்களுக்குத் தம்பியாக முடியுமா சார். நீங்க மகா வித்வான். என்னை ஏன் சார் தொந்தரவு பண்ணறீங்க? டூட்டிக்குப் போகணும்.''

வரதனுக்குத் திண்டாட்டமாகிவிட்டது. 'ஏன்டா இவனிடம் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசினோம்' என்று எண்ணினான்.

''இல்லேப்பா, அவரைத்தான் நான் தேடிக்கிட்டு வந்தேன். மோகனாம்பாள் இங்கேதான் இருக்காங்க. நீ கொஞ்சம் அங்கே வந்து இதைச் சொல்ல முடியுமா?'' என்றான் வரதன்.

பையனுக்கு இதைச் சாக்கிட்டு மோகனாவிடம் நாலு வார்த்தை பேசிவிட வேண்டுமென்று ஆசை. ''சரி, வாங்க போவோம்'' என்று ராஜா சத்திரம் நோக்கி வந்தான்.

''ஆமா, டூட்டி இருக்குன்னியே?''

''அதை ஜயராமன் பார்த்துக்குவான்'' என்று இராட்டில் புறப்பட்டான் பையன். இருவரும் வேகமாய்ப் போகவே குடமிளகாய்க் காரன், ''ஏ குடமிளகா, குடமிளகா!'' என்று கூடவே துரத்தினான்.

''அது இல்லாமலேயே காந்துது!'' என்று சொல்லிக்கொண்டே வரதன் ஓடினான்.

''இதோ பாரு, தங்கச்சி, இந்தப் பையன் சொல்லுது. மாப்பிள்ளை மதராசுக்குப் போயிட்டாராம்'' என்றான் வரதன்.

''நான்தான் சொல்ல வந்திருக்கேனே சார். நீங்கள் ஏன் முந்துறீங்க?'' என்றான் பையன்.

''என்ன, மதராசுக்கா? என்ன தம்பி நிஜமாகவா?'' என்று அவசரமாகக் கேட்டாள் மோகனா. அவனுக்கு அவள் கேள்வியே காதில் விழவில்லை. அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். ''மதராசுக்கோ, எங்கேயோ தெரியலேம்மா. மதராஸ் ரயில்லே ஏறிட்டார்'' என்று கூறினான்.

''என்ன? எதுக்காக மதராசுக்குப் போனார்? காரணம் ஏதாவது தெரியுமா?''

''என்கிட்டே ஒருத்தர் ஒரு சீட்டுக் கொடுத்தார். 'சண்முகப்பிள்ளை ரயிலடியில் வருவாரு அவரிடத்திலே கொடுத்துடு'ன்னு சொன்னார்.''

''என்ன சீட்டு, அதில் என்ன எழுதியிருந்தது?''

''என்ன அம்மா, பிறத்தியார் கடிதத்தை நான் படிப்பேனா? ஒரு சாயபு என்னைப் பார்த்தார். 'தம்பி, நீ ரயிலடி ஹோட்டலிலே வேலை செய்ற பையன்தானே' அப்படின்னு கேட்டாரு. நான் ஆமான்னு சொன்னேன். சண்முகத்தைத் தெரியுமோன்னு கேட்டாரு. தெரியாமே இருக்குமா சார்? மகா வித்வானாச்சே! அவர் தோடி ஒண்ணே போதுமேன்னு சொன்னேன்.''

''தம்பி, ரயில் போயிடப் போகுது, சீக்கிரம் முடி'' என்றான் வரதன்.

'நீ ஏன் அய்யா குறுக்கே வரே' என்ற அர்த்தத்தில் பையன் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, ''இந்தக் கடிதத்தை அவர்கிட்டே கொடுத்துடுன்னு சொன்னாரு. நான் கொடுத்தேன். அதைப் படிச்சவுடனே, அவர் ரயில்லே ஏறிட்டாரு'' என்ற பெரிய கதை போல் சொல்லவே புதிர் போட்டதுபோல மோகனா திணறினாள்.

அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அப்பொழுது அந்தப் பையன், ''அம்மா, நான் நிசம்தானம்மா சொல்லறேன். போன வருஷம் நீங்க அழகர் கோயிலுக்குப் போயிட்டு வந்தீங்களே அப்பொழுதுகூட நான்தான் அம்மா உங்களுக்குக் காப்பி எடுத்துக்கிட்டு வந்தேன்'' என்றான்.

''ஆமாம். அத்தான் போகும்போது உன்னிடம் ஏதாவது சொன்னாரா?''

''அவரு போயிட்டு வரேன்னுகூடச் சொல்லலே அம்மா!''

''அம்மா வாங்க, மதராசுக்குப் போவோம்'' என்றாள் மோகனா.

அந்தப் பையன் சொல்வதைக் கேட்கக் கேட்க வடிவாம்பாளுக்குக் கோபம் மீறிக்கொண்டு வந்தது.

''ஆமாம், அவன் ஓடறது. நீ ஓட ஓட விரட்டறது. இதே வழக்கமாகப் போயிடுத்து. கலியாணமாகியும் விடலியே. ஒரு பெண்டாட்டியைக் கட்டிக்கிட்டு வாழ்கிறவன் இப்படி சொல்லிக்காமே போவானா?''

''அம்மா, உங்க ஆத்திரத்துக்கு இதுதானா சந்தர்ப்பம்?''

இதைப் பார்த்த பையன் வெளியே நகர்ந்தான்.

''மதராசுக்கும் போக வேண்டாம், மாயவரத்துக்கும் போக வேண்டாம். பேசாமே திருவாரூர் போய்ச் சேருவோம்.''

''முடியாது அம்மா, நான் பட்டணத்துக்குப் போய்த்தான் ஆக வேண்டும்.''

''பட்டணத்திலே போய் அவனை எங்கே தேடப்போறே?''

''எங்கேயிருந்தாலும் தேடித்தானே ஆகவேண்டும்? தயவுசெய்து என்னோடு வா அம்மா. என்ன ஆபத்தோ, கடிதத்தில் என்ன எழுதியிருந்ததோ. அம்மா, என்னைக் கோபித்துக்கொள்ளாதேயம்மா!'' என்று தாயைக் கட்டிக்கொண்டு அலறினாள் மோகனா.



''இது என்னடி தொந்தரவாப் போச்சு. மழை விட்டும், தூவானம் விடலியே. திருவாரூர்லே வீடு அப்படியே கிடக்குது. ஏய், முத்துக்குமரு, நீ குழந்தையோடு மதராசுக்குப் போயிட்டு வாயேன்'' என்றாள் வடிவாம்பாள்.

''நான் போறதைப் பத்தி ஒண்ணுமில்லே. மதுரைக்கு வர்றப்பவே கைக் குழந்தைக்கு உடம்பு சரியில்லே. காய்ச்சல் அடிக்குது'' என்றார் அவர்.

''ஆமாம், உனக்கு உன் குழந்தை முக்கியம். அது சரி வரதா, நம்ப பணம் செலவாகணும்னு இருக்குது. நீ இந்தச் சாமான்களையெல்லாம் எடுத்துக்கிட்டு, திருவாரூருக்குப் போ. நான் அவகூட மதராசுக்குப் போயிட்டு வரேன்'' என்றாள்.

''நீங்க இரண்டு பேரும் தனியா எங்கே போய்த் தேடப் போறீங்க? நான் கூட வந்தால் தேடிக்கிடப் பார்க்கச் சௌகரியமாக இருக்கும்.''

''சரி வா, எல்லோருமே போவோம்.''

வரதன் டிக்கெட் வாங்க ஓடினான். இரண்டாம் வகுப்பு டிக்கெட் கிடைக்கவில்லை. திரும்பி ஓடி வந்தான். ''அம்மா, சகிண்ட் கிளாஸ் டிக்கெட் கிடைக்கலேம்மா!''

''அடே, அது இல்லேன்னாக்'' க மூணாம் கிளாசு வாங்கு'' என்றாள் வடிவாம்பாள்.

''என்னாத்துக்கம்மா மூணாம் கிளாசு? தங்கச்சி மூணாம் கிளாசிலே போனா கூட்டம் மொச்சிடும்.''

''அதுவும் சரி, ராயர் பணம் ரயில்காரனுக்கே சேரணும் போலிருக்கு. முதல் வகுப்பு டிக்கட்டே வாங்கிக்கிட்டு வா'' என்றாள் வடிவாம்பாள்.

''உங்களுக்கு வருத்தமாயிருக்கும்னா நானும் வரேன்'' என்றார் நட்டுவனார்.

''சேச்சே வேண்டாம். உனக்குப் பூசை கெட்டுப் போகும். குழந்தை உடம்பைப் பாரு...... ஏய் வரதா, குடமுளகாக் கூடையைக் கீழே வை. இந்தா முத்துக்குமரு, இதைக் கொண்டுபோய் அபராஞ்சி கிட்ட குடுத்து, மோரிலே ஊறப்போட்டுக் காய வைக்கச் சொல்லு. உனக்கு ஒரு அஞ்சு முளகாய் எடுத்துக்க'' என்று தாராளமாக உத்தரவு கொடுத்துவிட்டு ரயிலில் ஏறினாள்.

அவர்கள் முதல் வகுப்பில் ஏறி உட்கார்ந்தவுடன் அங்கு ஏதோ நாற்றம் வீசியது. எதிர் சீட்டில் தலையில் காயத்துக்குக் கட்டுக்கட்டிய வண்ணம் யாரோ ஒருவர் படுத்திருந்தார். ''இது என்னடா கஷ்டம், காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக்கிட்டானாம். சீக்காளியோடு எப்படிப் பிரயாணம் பண்றது?'' என்று வடிவாம்பாள் முனகினாள். மோகனாவோ ''யாரோ என்னமோ?'' என்று பரிதாபப்பட்டாள். எதிரில் படுத்திருந்த உருவம் அசையாமல் கிடந்தது. 'இது ஆளா அல்லது பிணமா?' என்று பயந்தாள் வடிவாம்பாள். அப்பொழுது அந்த ஆள் கண் விழித்து ''அம்மா'' என்று வலியால் முனகுவது கேட்டது.

"யாரது?" என்றாள் ஆச்சரியத்துடன் வடிவாம்பாள்.

"இது எக்மோர் இல்லை, டாஞ்சூர். இங்கேயே ரயிலை நிறுத்தி விடாதேன்னு யாராவது கார்டுகிட்டச் சொல்லுங்களேன்" என்று சொல்லிக்கொண்டே திரும்பினார் அந்த ஆள். அவர் முகத்தைப் பார்த்தும், "ஐயோ நீங்களா?" என்றாள் வடிவாம்பாள். மோகனா திடுக்கிட்டாள்.

## முப்பத்து ஐந்தாம் அத்தியாயம்

# வாங்கினார் வைத்தி !



**மா**ம்பழத்தைக் கடித்தவுடன் சாறு வந்துவிடும். தேங்காயை உடைத்தால்தான் இளநீர் வரும். பலாப்பழத்தை அறுத்து, கையில் பிசின் ஒட்டிய பிறகுதான் இனிப்புக் கிடைக்கும். இவைகளைப் போல் மனித உள்ளத்தையும் மூன்று பிரிவாக வேண்டுமானால் பிரிக்கலாம். ஆனால் அந்த மூன்றிலும் அருள் உண்டு.

இந்தத் தத்துவத்துக்கு பணத்தாசை பிடித்த வடிவாம்பாளும் விலக்கல்ல.

இல்லாவிட்டால் அந்த முதல் வகுப்பு வண்டியில் தன் எதிரில் இருந்த வைத்தியைப் பார்த்ததும் அவளுக்கு இத்தனை இரக்கம் வருமா? அல்லது இந்தத் துடிதான் துடிப்பாளா?

"அடே! வைத்தியா?" என்று திகைத்தாள் வடிவாம்பாள்.

"வடிவாம்பாள் அம்மாளா?" என்று திகைத்தார் வைத்தி. அவள் முகத்தையே சற்று நேரம் பார்த்தார். வைத்திஜியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வழிந்தது. மலை கலங்கினாலும் மனம் கலங்காத வைத்தி, கண்ணீர் விடுவதைக் கண்டவுடனே வடிவாம்பாளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்ன வைத்தி, என்ன காயம்? ஏன் இப்படி? வண்டி கிண்டி மோதிடிச்சா என்ன?" என்றாள்.

மோகனாவுக்கோ, இவன் இருக்கும் வண்டியில் ஏன் ஏறினோம் என்ற எண்ணம் வந்தது. வைத்தி என்ன பதில் சொல்கிறார் என்பதை ஆவலோடு கவனித்தாள்.

வைத்தி தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார். அந்தக் கண்ணீரைத் துடைக்கும்போதே, அவர் தன் மனித இதயத்தையும் துடைத்துக் கொண்டாரோ என்னவோ?



"என்னம்மா செய்யறது? ஒரு குதிரை வண்டி வேகமாக வந்துண்டு இருந்தது. நான் சாமி தரிசனம் பண்ணிப்பிட்டு மேலக்கோபுர வாசல் வழியாக வந்துகொண்டிருந்தேன். பாருங்கோ, ஒரு குழந்தை. வீதியிலே ஒரு ஆரஞ்சுப் பழம் கிடந்தது. அதை எடுக்கிறதுக்காகக் குறுக்கே போச்சு. சடக்கென்று வண்டி அந்தக் குழந்தை மேலே ஏறிவிடும் போல வந்தது. நான் கபால்னு பாய்ந்து ஓடிப்போய்த் தூக்கினேன். குழந்தை பிழைச்சுடுத்து. ஆனால் குதிரை என் தலையை மிதிச்சிடுத்து."

"நல்ல வேளை அம்மா. பழைய காலத்திலே ஆனையின் காலாலே யாரையோ இடற விடுவாங்களாம். அந்த மாதிரி இல்லாமல் இந்த மட்டுலே குதிரை தலையிலே மிதிச்சுதே" என்றாள் மோகனா தாயிடம்.

"என்ன பண்றது. அதுக்காகத் தலையெழுத்து அழிந்துவிடுமா? இல்லை, வைத்தி என்கிறதுக்காக விதி விட்டுடுமா? யார் யார் எதை எதை அனுபவிக்கணுமோ அதை அனுபவிச்சுத்தானே ஆகணும்?" என்று மோகனாவைப் பார்த்தபடி ரொம்ப வருத்தத்தோடு சொன்னார் வைத்தி.

"சூடான பால், சூடான பால்!" என்று சத்தம் கேட்டது.

"ஜங்ஷனிலே பால் நன்றாக இருக்குமே" என்றார் வைத்தி. பாவம், தாய் உள்ளம் படைத்த வடிவாம்பாள் உடனே, ஒரு சேர் பசும்பாலை வாங்கி, தன் கையால் ஆற்றி வைத்தியிடம் கொடுத்தாள். வைத்தியும் ஆவலோடு அந்தப் பாலைப் பருகினார்.

"ஏம்மா, நம்ம ஊரிலே நல்ல பாம்புக்குக்கூட பால் வைப்பாங்க இல்லே?" என்றாள் மோகனா.

"ஆமாம் அம்மா. நம்ம வரைக்கும் அது நல்ல பாம்பாகவே இருக்கட்டும்னுதான்" என்றாள் வடிவாம்பாள்.

"இந்தா பாருங்க. எல்லாப் பாம்புமே நல்லதுதான். ஆனால் மிதிச்சா கடிக்காமல் விடாது!" என்று பாலைப் பருகிக்கொண்டே கூறினார் வைத்திஜி. "என் பையிலே சில்லறை இருக்கு, ஆனால் எழுந்திருக்க முடியலியே!" என்று இழுத்தார்.

"சே, என்னாங்க வைத்தி, அதை நான் கொடுக்கமாட்டேனா?" என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள், தலைப்பில் இருந்த முடிச்சை அவிழ்த்துச் சில்லறையை எடுத்துக் கொடுத்தாள். ரயில் புறப்பட்டது.

கனிந்த பழத்திலே அடிபட்டுவிட்டால் அதன் சாறு வழிந்து வெளியே வருவதுபோல; வைத்திக்கும் அவர் மனம் நொந்த நேரத்தில் தனக்கு தெரிந்தவர்களைக் கண்டவுடனே உள்ளம் நெகிழ்ந்து பாடுபட்டது. ஆனால் அவர் உள்ளம் பழுத்த பழம் அல்ல. அது ஒரு பழுத்த இரும்பு. உலையை விட்டு எடுத்தவுடன் கறுத்துவிடுவது போல, வைத்தியின் உள்ளமும் கறுத்துவிட்டது. இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்வாரா? வைத்தியின் ஜாதகத்தில்கூட பிறருக்கு உபகாரம் செய்யும் பாக்கியம் இருக்கிறதே என்று வடிவாம்பாள் எண்ணினாள். "பாவம், அப்புறம் அந்தக் குழந்தை என்னவாச்சு? பிழைச்சுடுத்தா?" என்று கேட்டாள்.

''பிழைக்காமே விடுவேனா. எனக்கு வீம்பு வந்தால் எமனைக்கூட எத்திவிடுவேன். அப்படியே என் தலையிலிருந்து ரத்தம் கொட்ட ஆரம்பிச்சுடுத்து. ஒரு கையால் தலையை அமுக்கிக்கொண்டு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்து அவுங்க அம்மாவிடம் கொடுத்தேன்.''

''அவங்க அம்மாவையும் உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள் மோகனா.

''தெரிஞ்சுக்க நாழியா செல்லும்? அம்மா, அம்மான்னு கூப்பிட்டேன், அவ ஓடி வந்தாள்.''

''சரிதான், அம்மா அம்மான்னு அழுதிருக்காரு. அந்தம்மா ஓடி வந்திருக்குது. இல்லாட்டி நம்ப ஊரிலே எல்லோரையும்தானே அம்மான்னு கூப்பிடறோம். அவளுக்கு மட்டும் தன்னைத்தான் என்று எப்படித் தெரிந்தது?''

''என்னமோ அவள் ஓடி வந்தாள். குழந்தையை அவள் கையிலே ஒப்பிச்சு, ஒரு அழுகின ஆரஞ்சுப் பழத்துக்காகக் குழந்தையை இப்படி விட்டுட்டேயே, அப்படின்னு கோபிச்சுக்கொண்டேன்.''

''அப்புறம்?''

''என்ன செய்யறது? இரண்டு டஜன் ஆரஞ்சுப் பழத்தை வாங்கி அவ கையிலே கொடுத்தேன். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிண்டு போய் அட்டெண்ட் பண்ணச் சொல்லிப்பிட்டு புறப்பட்டேன்'' என்று பெருமையாகக் கூறினார் வைத்தி. இந்தச் சவடாலை மோகனா நம்பத் தயாராயில்லை. ஆனால் வடிவாம்பாள் அக்கறையோடு கேட்டாள். வைத்தியோ மேலும் தொடர்ந்தார்.

''எனக்கு உடனே என்ன தோணித்து தெரியுமா அம்மா? எப்படியாவது நம்ம ஜன்மத்துக்குள்ளே, இந்த ஏழைகளுடைய தரித்திரத்தை நிவர்த்தி பண்ணிடணும். ஒவ்வோர் ஏழையும் சாப்பிட்டு முடிஞ்சவுடனே, ஆளுக்கு இரண்டு ஆரஞ்சுப்பழமாவது சாப்பிடணும் அப்படின்னு ஒரு சட்டம் கொண்டுவந்துடணும்கிற முடிவுக்கு வந்தேன்.''

''பழத்துக்கு எங்கே போவாங்க?'' என்றாள் மோகனா.

''எங்கேயாவது திருடறான். திங்கறான். அதைப் பத்தி நமக்கென்ன? மக்களுடைய 'ஹெல்த்' தானே நமக்கு முக்கியம்?'' என்றார் வைத்தி.

''பாவம், உங்களுக்கு உடம்பு சரியாயில்லை. கொஞ்சம் தூங்குங்க!'' என்றாள் மோகனா.

''அதனாலே பாதகம் இல்லை. மூளை சரியாயிருக்கு'' என்றார் வைத்தி.

''அப்படியானால் எங்களையாவது தூங்கவிடுங்க'' என்றாள் மோகனா.



வைத்தியும் சற்றுக் கோபத்தோடு லேசாகக் கண்ணை மூடிக்கொள்ள ஆரம்பித்தார். ஆனால் நடந்த விஷயம் என்ன?

சவடால் வைத்திக்கு யார் சாதித்தார்கள் என்பதை நாம் அறிய வேண்டாமா?

மதுரையில் வைத்தியின் கையில் கோர்ட்டார் இரண்டாயிரத்து நானூற்று அறுபது ரூபாய், நாலணா, மூன்று பைசாவைக் கொடுத்தனர்.

''இவ்வளவுதானா கவரில் இருந்தது?'' என்றார் வைத்தி.

''வாட் டூ யூ மீன்?'' என்று கோபத்தோடு கேட்டார் ரிஜிஸ்டிரார்.

''களவுபோன தொகை எவ்வளவு என்று எனக்கே தெரியாது சார், அதனாலேதான் கேட்டேன்'' என்று கூறி, பணத்தை வாங்கிக்கொண்டார். கிடைத்தது ஆதாயம் என்றும் எண்ணிக்கொண்டார்.

அவருக்கு உலகத்தாரைப் போல, தன் வீடு, பிறர் வீடு, தன் பணம், பிறர் பணம் என்ற வித்தியாசம் எப்பொழுதுமே கிடையாது. எல்லார் பணமும் தன் பணம் என்றே நினைக்கக்கூடியவர். ஆதலால் களவு போன பணத்தைக் கையில் வாங்கிக்கொண்ட உடனே, அதைத் தன் பணம் என்றே கருதினார். தம்முடைய நல்ல காலம், அதனால்தான் பணம் திரும்பக் கிடைத்தது என்று சந்தோஷப்பட்டார். அதை வக்கீலுக்குக் கொடுக்க வேண்டுமே, அதற்காக என்றே மகாராஜா அனுப்பிய பணமாயிற்றே என்ற எண்ணம் அவருக்கு வரவில்லை. வெளியே புறப்பட்டார். பல இடங்களில் சுற்றி அலைந்தார். மதுரை வெயில் அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. கொஞ்சம் குளிர்ச்சி செய்து கொண்டார். மாலையில் மங்கம்மா சத்திரத்தில் போய் தன் அறைக்குள் நுழைந்து அமர்ந்தார்.

''எஜமான் உள்ளே இருக்காங்களா?'' என்று ஒரு குரல் கேட்டது. 'அது யாரடா தன்னை இந்த ஊரில் எஜமான் என்பவன்!' என்ற மகிழ்ச்சியில் வைத்தி வாசலில் வந்து பார்த்தார்.

வெளியே ஒரே ஒரு ஆள் மாத்திரம் நின்றுகொண்டிருந்தான். வேறு யாருமில்லை. அவன் வைத்தியைப் பார்த்தவுடனே அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு குனிந்து கும்பிட்டான். கையில் இருந்த அரளிப்பூ மாலையை இவர் கழுத்தில் போட்டான். இரண்டு எலுமிச்சம்பழங்களைக் கையில் கொடுத்தான். வைத்திக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஏது, இன்று நமக்கு ராஜயோகமாக இருக்கிறதே என்று புன்னகை செய்தார்.

''யாரு நீங்க? யாரைப் பார்க்க வந்தீங்க?'' என்று மாலையைப் போட்டுக்கொண்ட பிறகு விசாரித்தார்.

''அவ்விடத்திலேதான் கண்டுக்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''யாரிடத்திலோ எசமான் உள்ளே இருக்காங்களான்னு கேட்டாப் பிலே இருந்ததே! யாரைக் கேட்டீங்க?''

"இல்லே, உங்க காதிலே படணும்னுதான். யாரிடத்திலேயோ கேக்கிறமாதிரி கேட்டேன். நான் உங்களைக் கூப்பிட முடியுமுங்களா?" என்றான் வந்தவன்.

வைத்தி அந்த ஆளை ஏற இறங்கப் பார்த்தார். கையால் சவுக்காரம் போட்டுத் தோய்த்த மேல் ஜிப்பாவும், ஆற்று மணலில் உலர்த்திக் கட்டிய மல் வேஷ்டியும் வாயில் வெற்றிலைக் காவியுமாக அந்த ஆள் நின்றுகொண்டிருந்தான். வைத்தியோ மல்வேஷ்டி மல்சட்டையைச் சலவை செய்து போட்டிருந்தார். அவ்வளவுதான் வித்தியாசம். அவன் முகத்தைப் பார்த்தார் வைத்தி. அந்த முகத்திலே அடக்கமும், அன்பும் பரிமளித்தன.

"என்ன விஷயம்? என்னாலே என்ன ஆகணும்?"

"எஜமான் வந்திருக்கிறதாக, ஸ்ரீவேந்தர் மன்றத்திலே சொன்னாங்க. நான் உடனே ஓட்டலுக்கு ஓடினேன். அங்கே பத்துப் பேர் ரோசாப்பூ மாலையோடு நுளைஞ்சாங்க. எஜமான்தான் அங்கே இறங்கி இருக்காங்களாக்குன்னு ஓடிப்போய் பார்த்தா, யாரோ ராஜபார்ட் ஆசாமி போறான், வேசக்காரன். நம்ம ஐயாவுக்குத்தான் கூட்டம் ஆடம்பரம் பிடிக்காதே. அவுங்க ஜெண்டில்மேன் ஆச்சே. இங்கேதான் மங்கம்மா சத்திரத்திலே தங்கி இருப்பாங்கன்னு நினைச்சுப் பார்த்துட்டுப் போவலாம்னுதான் வந்தேன்."

"நிற்கிறீங்களே?"

"ஐயோ, அவ்விடத்திலே நிக்கிறபோது, நான் உட்காரப்படாதுங்க" என்று அந்த ஆள் கைகளை இறுகக் கட்டிக்கொண்டான்.

தன்னுடைய கியாதி வெளியூர்களிலும் பரவியிருக்கிறதே. மதுரையில்கூட தன்னைப்பற்றி அறிந்தவர்கள் இருக்கிறார்களே என்று பெருமையடைந்தார் வைத்தி.

"ஆமாம், என்னை எப்படி உனக்குத் தெரியும்?" என்று ஏகவசனத்தில் இறங்கினார்.

"நல்ல கேழ்வி கேட்டீங்க போங்க. இப்ப இந்த ஊரிலே இதுதானே பேச்சு. இவாள் ஐயா வந்திருக்காங்க வந்திருக்காங்கன்னுதானே பேசிக்கிறாங்க. நீங்க இங்கே வந்து ஒருத்தர் கண்ணிலேயும் அகப்படாமல் இருக்கீங்க. இல்லாட்டி இந்நேரம் பலாப்பழத்திலே ஈ மொச்ச மாதிரி. ஊர்ப்பயக மொச்சுடுவாங்களே! கூட்டம் தாங்க முடியுமா?" என்று வாயைப் பொத்திக்கொண்டு கூறினான் அந்த ஆள்.

வைத்திக்கு ஒரு சந்தேகம் வந்தது. மரியாதைக்காக வாயைப் பொத்திக்கொண்டு பேசுகிறானா, அல்லது, மதுவாடை அடிக்காமல் இருப்பதற்காகவா என்று எண்ணினார். ஆனால், அந்த ஆளின் அடக்க ஒடுக்கத்தைப் பார்த்ததும், அவன் அப்படிப்பட்ட ஆள் அல்ல என்று நிச்சயம் செய்துகொண்டார்!



"ஆமாம், என்ன விசேஷமோ என்னைப் பார்க்கிறதுக்கு?"

"உங்களாலேதான் ஒரு குடும்பமே முன்னுக்கு வரணுங்க."

"என்ன? யாரு...?" என்று இழுத்தார் வைத்தி.

"ஒரு பொண்ணுங்க" என்று ரகசியமாகச் சொன்னான் அந்த ஆள்.

லோபியின் காதில் பொன் என்ற சொல்லைக் கேட்டால் எத்தனை உற்சாகம் உண்டாகுமோ அதை அடைந்தார் வைத்தி. அந்த ஒரு வார்த்தையே வைத்தியின் உடம்பில் ஒரு புதிய ரத்தத்தை ஓடும்படி செய்தது. ஆனால் அக்கறை யில்லாதவர் போல் விசாரிக்க ஆரம்பித்தார்.

"அடே, பெண்ணுக்கு என்னப்பா பஞ்சம். நம்ம கண்ட்ரியிலே பர்த்ரேட்டே அதனாலேதானே அதிகம்?"

"ஆனால் இந்த மாதிரிப் பொண்ணு ஆயிரத்திலே ஒண்ணுதான் பிறக்குமுங்க. நல்ல பதினெட்டு வயசுங்க. பாடினா குயில் போலக் கூவும். ஆடினா புள்ளிமான் துள்ளிக் குதிச்ச கணக்கா ஆடும். நிறுத்துன்னு சொன்னாலும் நிறுத்தாது. அழகு கொழிக்குஞ்ச மாதிரி இருக்குமுங்க."

"குணம் எப்படி?"

"தில்லுன்னா நிற்கும்."

"இப்ப எங்கே இருக்கா, நான் அங்கே வந்து என்ன செய்யணும்?" என்று வைத்தி காத்து இல்லாதவர் போல் கேட்டார். இதை உணர்ந்த அந்த ஆள் ரொம்பப் பணிவுடன், "மகாராஜா டுருப்புலே அதையும் சேர்த்துடணுமுங்க" என்றான்.

'ஓய்! டுருப்பில்லேங்காணும்! 'ட்ரூப்'னு சொல்லும்.'

"மன்னிக்கணுங்க, எனக்கு இங்கிலீஷ் தெரியாது" என்று பல்லை இளித்தான் அந்த ஆள்.

"இப்ப மகாராஜா சீமையிலிருந்து திரும்பி வர டைம் ஆயிடுத்தே. இனிமே ட்ரூப் போகாதே" என்று வைத்திக்கு உண்மையை சொல்லத் தோன்றியது. இருந்தாலும் அது வழக்கத்துக்கு விரோதமாயிற்றே என்று அடக்கிக்கொண்டார். எதற்கும் அந்தப் பெண்ணையும்தான் கண்ணால் பார்த்து வைப்போமே என்று தோன்றியது.

வைத்தி யோசிப்பதைக் கண்ட அந்த ஆள், "நான் சொன்னா நம்புங்க. அந்த மோகனாவாட்டம் இது நடுக்கடலிலே கை விட்டுடாதுங்க" என்றான்.

"மோகனாவா, என்ன? என்ன? உனக்கெப்படித் தெரியும்?"

"கோர்ட்டுக்கு விசாரணை பார்க்க வந்திருந்தேனுங்க."

"சரி, நீ சொல்றதைப் பார்த்தால் இந்தப் பெண் நல்ல பெண் என்று தோன்றுகிறது. நாளைக்கு நான் வந்து பார்க்கலாமா?" என்று கேட்டார் வைத்தி.

"நாளைக்கு அந்த நாடகக்காரரு வந்துவிடுவாரே?"

"நாடகக்காரனா?"

''ஆமாமுங்க. அதை ஒரு நாடகக்காரர், நாடகத்திலே சேரு சேருன்னு தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக்காரு. அந்த ஆளுக்கு பவுன் புக்கட்டு வைக்கலாம்னு நோக்கம். அவர்தான் இப்ப செலவுக்கெல்லாம் கொடுத்து தனியா ஒரு வீடு பிடிச்சு அங்கே வச்சு இருக்காரு. இன்னிக்கு திருமங்கலத்திலே நாடகம், போயிருக்காரு. அதுதான் அந்தப் பொண் சொல்லிச்சு. எசமானை இன்னைக்கே பார்க்கணும், நீங்க போயிட்டு வாங்க அப்படின்னு.''

வைத்திக்கு இப்பொழுதே பார்த்துவிட்டு வருவதுதான் சரி என்று தோன்றியது.

''ஆமாம், வண்டி?''

''வண்டி எதுக்குங்க, நானே இங்கே வேணுமுனாலும் கூட்டிக்கிட்டு வர்றேன்.''

''ஓய்! இந்த உலகம் பொல்லாததுங்காணும். ஒண்ணுமில்லாததுக் கெல்லாம்கூட கண்டபடி பேசும். நானே வரேன்'' என்றார் வைத்தி.

''இங்கிட்டெல்லாம் திருட்டுப் பயம் அதிகமுங்க. எல்லாத்தையும் நல்லா பூட்டி வையுங்க. நான் இதோ வண்டி கொண்டாந்துடறேன்'' என்று வாசலுக்கு ஓடினான் அந்த ஆள்.

வைத்தி யோசித்தார். கவரை மாத்திரம் எடுத்து சட்டைப் பையில் வைத்துக்கொண்டு துப்பட்டாவை எடுத்துத் தோளில் போட்டார். ஓர் அற்புதமான குதிரை வண்டி வாசலில் வந்து நின்றது. வைத்தி அதில் ஏறினார்.

வண்டி நேரே தத்தனேரிப் பக்கம் ஓடியது. ''என்னய்யா, ஊரை விட்டுப் போறீங்க?'' என்று கேட்டார் வைத்தி.

''அங்கேதான் தோப்பிலே இருக்குது பங்களா'' என்றான் அந்த ஆள்.

வண்டியை ரோடிலே நிறுத்திவிட்டு, ''இறங்கி வாங்க, போயிட்டு வந்திடுவோம்'' என்று சொல்லவே, வைத்தி வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்.

அவர் மனதில் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. இந்த ஆளை நம்பி இறங்கி காட்டுக்குள்ளே போகலாமா என்று யோசித்தார். ஆனால் அதற்குள் வைத்தி கீழே குதித்தவுடன் அந்த ஆள், வண்டியின் பக்கப் பலகையில் செருகி இருந்த அவருடைய மிதியடிகளைத் தன் கையாலேயே எடுத்து அவர் காலடியில் போட்டான். அவனுடைய நல்ல சுபாவத்தைக் கண்ட வைத்தி தன் மனதை மாற்றிக்கொண்டார். மிதியடி களைக் காலில் மாட்டிக்கொண்டு அவன் காட்டிய வழியாக பனங்கும்ப லுக்குள் நடந்து சென்றார் வைத்தி. அப்போது சாலையில் இருந்த குதிரை வண்டி திரும்பி வேகமாகப் போயிற்று.

''வண்டி ஏன் திரும்பிப் போவுது?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார்.

''இனிமே அதுக்கு என்ன அவசியங்க?'' என்றான் அந்த ஆள்.



வைத்தி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஒற்றையடிப் பாதையில் நடந்தார்.

''என்ன எசமான், பயப்படறீங்களா?''

''சேசே, பயம் ஒண்ணுமில்லே!'' என்று வைத்தி உளறினார்.

''உங்களுக்கு ஒரு பயமும் வேண்டாமுங்க. சந்தேகப்படாதீங்க!'' என்றான்.

''சந்தேகமா, சே, சே, எனக்கு அதெல்லாம் கிடையாது.''

''சந்தேகமில்லேன்னா பின்னே நான் திருடன்னே நிச்சயம் பண்ணிட்டீங்களா?'' என்று அவன் கேட்டவுடனே வைத்தி ஓடுவதற்குத் தயாரானார்.

''என்ன ஓடப்பாக்கிறீங்க? நல்லூராரு கையிலேயிருந்த பணத்தை நீங்க வாங்கிக்கிட்டீங்க. அந்த ஆளு உள்ளே போயிடுத்து. இப்ப, எங்க சாப்பாட்டுக்கு நாங்க என்ன பண்ணறது? அந்தக் கவரைக் குடுங்க'' என்றான் அந்த ஆள். வைத்தி நடுங்கினார். ஓட முயன்றார். கால் எடுக்க வரவில்லை. ''இந்தா உனக்கு நூறு ரூபா தரேன், என்னை விட்டுடு'' என்று உளறினார்.

''என்ன ஐயா, பிச்சையா போடறே? இந்தக் கருப்பன் மகன் உன்னை விட்டுடுவானா?'' என்று சொல்லிக்கொண்டே, அவர் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தான்.

''ஐயோ!'' என்று அலறி விழுந்தார் வைத்தி.

அடுத்த நாள் காலைதான் எழுந்தார். அதன் பலன்தான் இத்தனை காயம். இந்த வக்கிலுக்கு அதிருஷ்டமேயில்லை. அவருக்குக் கொடுக்க வேண்டிய பணம் அடிக்கடி திருட்டுப் போய்க்கொண்டே இருக்கிறது என்று முடிவு கட்டினார். அதனாலேயே போலீசிலும் ரிப்போர்ட் செய்யாமல் புறப்பட்டுவிட்டார்.

எப்பொழுதும் வீட்டில் விழித்துக்கொள்வதுபோல் வடிவாம்பாள் அதிகாலையில் விழித்துவிட்டாள். வைத்திக்கும் அவளுக்கும் சண் முகத்தைப்பற்றிய பேச்சு ஆரம்பமாகியது. மோகனா தூங்கினாள் என்ற அபிப்பிராயத்தில் இருவரும் மனம் விட்டுப் பேசலானார்கள். சண்முகம் சொல்லிக்கொள்ளாமல் எங்கோ போய்விட்டான். அவனைத் தேடிக் கொண்டுதான் அவர்கள் போகிறார்கள் என்பதை அறிந்ததும் வைத்தி, தன் வத்தியைப் பற்ற வைக்க ஆரம்பித்தார்.

''நான் நாலு வருஷமாவது ஆகும்னு பார்த்தேன். அதுக்குள்ளே விட்டுட்டுப் போயிட்டானா?'' என்றார் வைத்தி.

''விட்டுட்டுப் போகல்லீங்க. காலங் காத்தாலே அச்சானியமா சொல்லாதீங்க! அவசரத்திலே போயிட்டாரு'' என்றாள் வடிவாம்பாள்.

''சொல்லாமல்தானே வந்தான், சொல்லாமல் போயிட்டான்! ஏதோ கெட்ட சொப்பனம்னு தள்ளுங்க.''

''வைத்தி, உங்களைத் தலையிலே பிடிச்ச குதிரை, வாயிலே பிடிச்சிருக்கணும். வாயை மூடுங்க. என் மகள் முழிச்சுக்கிட்டா சத்தம் போடும்.''

''உங்க மகள் இப்ப எங்கே முழிச்சுக்கப் போறாள். இன்னும் எவ்வளவு அந்த சண்முகத்தாலே அவதிப்பட வேண்டியது பாக்கி இருக்கோ!''

வடிவாம்பாள் பேச்சை மாற்ற எண்ணினாள். ''ஏன் வைத்தி, உங்க மகாராஜா இப்ப எங்கே இருக்காரு?''

''கோர்ட்டிலேதான்.''

''என்ன, கோர்ட்டிலேயா?'' என்று திடுக்கிட்டாள் வடிவாம்பாள்.

''பட்டணம் கோர்ட்டிலே இல்லே. சீமைக் கோர்ட்டிலே. அந்தத் துரைசானி, கேஸ் போட்டுவிட்டாளே!''

''ஏன்?''

''எல்லாம் உன் மகளாலேதான். இந்தா வடிவாம்பா, நீ எனக்கு எத்தனையோ உபகாரம் செஞ்சிருக்கே. அன்னிக்கு யாழ்ப்பாணம் ஸ்டேஷனிலே நூறு ரூபாய் நோட்டைத் தூக்கிக் குடுத்தியே அந்த மாதிரி வேறு யாராவது குடுப்பாளா? நேத்திக்குப் பாலு வாங்கிக் குடுத்தியே, அம்ருதம் மாதிரி இருந்தது.''

''அது கெடந்துட்டுப் போகுது. என்னமோ தலையிலேயா வாரிக் கட்டிக்கிட்டுப் போகப் போறோம்?''

''நீங்க சொல்றது ரொம்ப சரி. அந்த வேதாந்தந்தான் வேணும். நீ இருக்கிறபோதே ஒரு நாலு ஐந்து லட்சத்தைச் சேர்த்து வச்சுட்டா அப்புறம் பொண்ணரசி பிழைச்சுக்கிறா!''

''அது நிசந்தானுங்க!''

''அதுக்குத்தான் நான் சொல்றேன், இப்ப நல்ல சான்ஸ்.''

வண்டியில் ஏதோ கிரீச்சென்று சப்தம் கேட்டது. மோகனா விழித்துக் கொண்டுவிட்டாளோ என்று இருவரும் திரும்பிப் பார்த்தனர். அப்போது மோகனா புரண்டு படுத்தாள்.

''என்ன சான்ஸ்? மெதுவா சொல்லுங்க. எதாவது ஆட்டமா?'' என்றாள் வடிவாம்பாள்.

''ஆட்டத்துக்கு ஒரு முழுக்குப் போடு. அவளுக்கு முன்னாலே நாலு தாசிகளை ஆடச் சொல்லு'' என்றார் வைத்தி.

வண்டி ஒரு ஆட்டம் ஆடி நின்றது.

''எந்த ஸ்டேஷன்?'' என்றாள் வடிவாம்பாள்.

''திண்டிவனம் தாண்டித்து'' என்றார் வைத்தி.

அப்போது கார்டும், இரண்டு அதிகாரிகளும் வந்து அந்தக் கம்பார்ட்மெண்டின் கதவைத் தட்டினார்கள். இதைக் கண்ட வடிவாம்பாள் நடுங்கினாள்.



ஆனால் வைத்தியோ ''வாட் டு யூ வாண்ட்? தோரும் ஒழியா'' என்று இரைந்தார்.

அந்தக் கார்டு அதைக் காதில் வாங்காமல், ''யார் சார், இங்கே சங்கிலியை இழுத்தது?'' என்றார்.

''சங்கிலியை இழுத்தோமா? அம்பது ரூபாய் அபராதம்னு தெரியாதா எங்களுக்கு? நாங்க இழுக்கலீங்க!'' என்று நடுங்கிக் கொண்டே கூறினாள் வடிவாம்பாள்.

ஆனால் அதுவரையில் தூங்குவதுபோல் பாசாங்கு செய்த மோகனா திடீரென்று எழுந்தாள்.

''நான் தான் இழுத்தேன், உள்ளே வாருங்கள்'' என்று ஆத்திரத்தோடு போய்க் கதவைத் திறந்தாள்.

''எனம்மா இழுத்தீர்கள்?'' என்றார் கார்டு.

''அந்த ஆளைக் கீழே இறக்கிவிடுங்கள். வண்டியே நாறுகிறது'' என்று கோபித்தாள் மோகனா. வடிவாம்பாள், வைத்தி இருவரும் நடுங்கினார்கள். கார்டோ கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக் கொண்டார்.

''ஏன் சார், நீங்கள் 'லிக்-வாலி'லே வந்திருக்கலாமே?'' என்றார் கார்டு வைத்தியைப் பார்த்து.

''அவர்கள் தஞ்சாவூரில் ஏறினார்கள். நான் மதுரையிலிருந்து வருகிறேன். இடம் பிடிக்கவில்லையானால் அவர்களை இறங்கச் சொல்லு'' என்றார் வைத்தி.

''சரி, எனக்கு வேறே இடம் கொடுங்கள், என்னால் இனிப் பொறுக்க முடியாது'' என்றாள் மோகனா.

''எங்கே இருந்து வரீங்க சார், மதுரையில் இருந்தா?'' என்றார் கார்டு.

''எஸ்!''

''எங்கே உங்க டிக்கட்டு?''

''டிக்கட் எக்ஸாமினரை வந்து கேட்கச் சொல்லு. உனக்குக் கேட்க அதிகாரம் கிடையாது.''

''சார், நான் இந்த வண்டிக்கு கார்டு. எனக்கு எல்லா அதிகாரமும் உண்டு.''

''கார்டு என்று சொன்னால் என் தூக்கம் கெடாமல் காக்கணும், அதிகாலையிலே வந்து எழுப்பி டிக்கெட் கேட்கப்படாது.''

''சரி சார், என்னோடே கொஞ்சம் வரீங்களா?'' என்று அதிகாரத்துடன் கேட்டார் கார்டு.

''ஓ எஸ். இதோ வரேன், '' என்று தட்டுத் தடுமாறி எழுந்தார் வைத்தி. ஆனால் இறங்கும்போதே, ''என்னை ரயிலில் இருந்து இறக்கி விட்டுட்டோம்னு சந்தோஷப்பட வேண்டாம். நான் உன்னைத் தண்டவாளத்திலிருந்தே இறக்கி விட்டுடுவேன்'' என்று மோகனாவைப் பார்த்துக்

கருவினார். அப்போது கார்டின் வலதுகை வைத்தியின் சட்டையில் உள்ள கழுத்துப் பட்டையைப் பிடித்துக் கீழே இறக்கிவிட்டது. பாரம் குறைந்தது. இனி நான் வேகமாகப் போகப் போகிறேன் என்று சொல்வது போல் ரயிலின் ஊதுகுழல் வேகமாக ஊதியது.

## முப்பத்து ஆறாம் அத்தியாயம்

# செங்கற்பட்டு சந்திப்பு



முதல் ரயிலில் சென்ற சண்முகம் இரவு முழுவதும் அந்த அதிகாரியுடன் ஏதோ பேச்சுக் கொடுத்துக்கொண்டே 'நாம் என்ன செய்யலாம்' என்பதையும் யோசித்தான்.

'இந்த மனிதர் நிழல்போல் நம்மைத் தொடருகிறார். நாம் சென்னையில் இறங்கி நடேசண்ணனைப் பார்க்கப் போகும்போது இவரையும் கூட்டிக்கொண்டா போவது? உபகாரம் செய்த நண்பருக்கு அபகாரம் செய்யவா நாம் சென்னை செல்கிறோம்? சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல், இவரிடம் கடிதத்தை வேறு காட்டிவிட்டோமே. என்ன செய்யலாம்?' என யோசித்தான்.

அதிகாலையில் செங்கற்பட்டு ஜங்ஷனில் வண்டி நின்றது. வண்டி அங்கிருந்து புறப்படப்போகும் தருணத்தில் சண்முகம் இறங்கப் போனான்.

''என்ன சார் வேணும்?'' என்றார் அந்த நண்பர்.

''காப்பி சாப்பிடலிங்க'' என்றான் சண்முகம். உடனே அவரே இறங்கி, ''இதோ நான் வாங்கிக்கிட்டு வாரேன் சார்!'' என்றார்.

அவர் காப்பியை வாங்கி வரவும் ரயில் புறப்படவும் சரியாய் இருந்தது. எதிர் ஆசனத்தில் பார்த்தார் அந்தச் சுங்க இலாகா அதிகாரி. சண்முகம் அங்கு இல்லை. அவர் சிரித்துக்கொண்டார். அவனுக்கு வாங்கிய காப்பியைத் தன் வாயில் ஊற்றிக்கொண்டார். காப்பி கொதித்தது. ''ஓ மை காட்'' என்று சொல்லிக்கொண்டே அதை உமிழ்ந்தார்.

எங்கெங்கோ பிறந்த சிறு ஆறுகள் ஒன்றாக வந்து பெரிய நதியில் கலப்பதுபோல, எங்கெங்கோ இருந்து புறப்பட்ட வண்டிகள் செங்கற்பட்டு ஜங்ஷனில் அதிகாலையில் வந்து சேருவது வழக்கம். அது மாதிரி தஞ்சாவூரில் மாலையில் புறப்பட்ட வண்டியும் இரவு பத்து மணி சுமாருக்குப் புறப்பட்ட வண்டியும் செங்கற்பட்டில் அரை மணி நேர வித்தியாசத்தில்தான் செல்கின்றன.



மோகனா வந்த வண்டி செங்கற்பட்டில் வந்து நின்றது. வரதன் கீழே இறங்கினான். மோகனாவின் பெட்டி அருகில் ஓடி வந்தான்.

''அம்மா கூஜாவைக் கொடுங்க, காப்பி வாங்கிண்டு வந்துடறேன்'' என்றான்.

அப்பொழுது ''வரதா'' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. வரதன் திரும்பினான். சண்முகம் அங்கே நின்றுகொண்டிருப்பதைக் கண்டான்.

''இந்தா பாருங்க, மருமகப்புள்ளே இங்கே நிக்கறாங்களே'' என்று அவன் ஆனந்த பரவசத்தில் கூறவே, மோகனா, ''அத்தான்!'' என்று ஆவலோடு கூவினாள்.

சண்முகம் வண்டியில் ஏறினான். தாயின் முகத்தைப் பார்த்து அழும் பச்சைக் குழந்தையைப் போல, மோகனா அவன் முகத்தைப் பார்த்துப் பார்த்து விசும்பிக்கொண்டிருந்தாள். வடிவாம்பாள் ரௌத்ரகாளியாக மாறினாள். ''நல்லா இருக்கு தம்பி. இப்படிச் சொல்லிக்கொள்ளாமே வரலாமா? வரதன் வந்தது நல்லதா போச்சு. இல்லாட்டி நீங்க செங்கற்பட்டிலே நிப்பீங்க, நாங்க மதராஸ் போய் நிப்போம்'' என்றாள்.

''இல்லே அத்தே, நான் அவசரமாகப் புறப்பட வேண்டியதாயிற்று.''

''அப்படி என்ன அவசரம்னு கேக்கறேன். கச்சேரி கிச்சேரி காத்துக்கிட்டிருக்கா என்ன? சே, அதுக்கு ராத்திரியெல்லாம் அழுது, கண் வீங்கிப் போச்சு.''

''என்ன அத்தே. நான் உலகம் தெரியாதவனா. காலம்பர மதராஸ் வந்ததும் ஒரு தந்தி கொடுக்கலாம்னு இருந்தேன்.''

''ஆமாம், உலகம் தெரிஞ்சு என்ன செய்யறது? சொந்த வீட்டைப் பத்தித் தெரியணும். கட்டின பொஞ்சாதியைக் காப்பாத்தத் தெரியணும். நீ தந்தி கொடுக்கிற வரையில் அது என்ன பாடுபடும்னு தெரியணும். கூட வந்த மனிசன் பக்கத்திலே இருந்து, ஆட்டம் முடிஞ்சதும் கூட்டிக்கிட்டு வரவேண்டாமா?''

''என்ன சொல்லுறீங்க, ஆட்டம் முடிஞ்ச கூட்டிக்கிட்டு வரணுமா?'' என்று கோபத்துடன் திரும்பினான் சண்முகம்.

# மாதரே அறிவார் காதலின் பெருமை



''டகட, கட கட'' என்று மாறி மாறி ஆவர்த்தனம் வாசித்துக்கொண்டு தண்டவாளத்தில் ரயில் ஓடி வந்தது. இதைப் போலவே, ஒவ்வொருவர் சிந்தனையும் ஒரே வழியில் ஓடிக்கொண்டிருந்தது. சண்முகம் மனவேதனையில் ஆழ்ந்திருந்தான். வடிவாம்பாள் கோபத்தில் இருந்தாள். ஆனால் மோகனாவோ பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாள்.

கொடுக்கல் வாங்கல்: உலகில் எதிலும் இந்த இரண்டே கொள்கைகள்தாம் உண்டு. இதில் வாங்கல் என்ற தத்துவத்துக்கு வைத்தி போன்றவர்கள் உதாரணம். கொடுக்கல் என்ற தத்துவத்துக்கு சண்முகம்-மோகனா போன்றவர்கள் உதாரணம்.

வாரி வழங்கும் வள்ளல் தன்மை உலகில் தாய்க்குத்தான் உண்டு. அவள் தன் மக்களிடம் எத்தகைய கைம்மாறும் கருதாமல் அவர்கள் சுகம் ஒன்றே தன் சுகம் எனக் கருதுபவள். தாய்க்கு அடுத்தபடியாகத் தயாபரனைச் சொல்லலாம். அவர் கூட பக்தன் அடிக்கடி கேட்காமல் இருக்கட்டும் எனக் கொடுப்பவர். கடவுளுக்கு அடுத்தது காதல். தன் உயிரையே காதலுக்காகத் தியாகம் செய்த லைலாவும், தன் குலத்தையே காதலுக்குத் தியாகம் செய்த வள்ளியும் பிறந்தது வனிதையர் குலம். அதன் வழியே வந்த மோகனாவும் தன் கணவனின் சந்தோஷத்துக்காக எதையும் தியாகம் செய்துவிடத் தயாராக இருந்தாள்.

நம் நாட்டில் ஓர் அற்புதமான காதல் கதை உண்டு. கணவனின் அன்புக்காகத் தன் கணவனையே தியாகம் செய்தாளாம் ஒரு பெண்மணி. அந்த அம்மையின் கற்பு நெறிக்கு ஆதவனே சாட்சி சொன்னான். 'நாளைக் காலை சூரியன் உதிக்காமல் போகக் கடவது!'' என்று அவள் சபித்த உடனே சூரியன் உதிக்கவில்லை. நளாயினியைத்தான் சொல்லுகிறோம்.

இந்த அளவுக்குக் கணவனையே தியாகம் செய்ய நாகரிக உலகில் பிறந்த நம் மோகனா தயாராக இல்லை என்றாலும், தன் கணவன் சந்தோஷத்துக்காக வேறு எதையும் தியாகம் செய்ய முடிவு செய்தாள்.

யயாதி என்ற அரசன் சர்மிஷ்டையை மணக்க விரும்பினான். அயனோ வயதானவன். ஆதலால், தன் மைந்தர்களை அழைத்து உங்கள் இளமையை எனக்குத் தாருங்கள் எனக் கேட்டான். மூத்தபிள்ளை, 'நல்ல



பெண்ணாக இருந்தால் நானே கல்யாணம் செய்துகொள்ளுகிறேன். நீங்கள் காசி யாத்திரை போய்விடுங்கள்' என்ற கருத்தில் கூறிவிட்டான்.

ஆனால், கடைசிப் பிள்ளை கொஞ்சம் கட்டுப்பெட்டி. 'தந்தைக்குப் பின் நாம் அவருக்குப் பிதிர்க்கடன் கழிப்பதும், அவர் திருப்தியடைவதும் பிறகு இருக்கட்டும். இப்போதே அவர் ஆசையைத் தீர்த்து வைப்பதன் மூலம் தம் கடமையைச் செய்துவிடலாமே? இதைக் கடந்து நிற்க வேண்டாமே' என நினைத்தான் போலும்.

தன் இளமையைத் தந்தைக்குக் கொடுத்து அவர் முதுமையை அவன் வாங்கிக்கொண்டான். அந்த மகா தியாகத்தின் மூலம் என்றும் இளமை மாறாத இளம் சிங்கமாக இன்றும் இந்திய மக்கள் உள்ளத்தில் இருக்கிறான்.

இவனைப் போல மோகனா தன் இளமையைக் காதலுக்காகத் தியாகம் செய்யப் போகிறாளா?

அதற்கு அவசியம் ஏற்படவில்லை. சண்முகம் நல்ல அழகன். செவ்வரி படர்ந்த கண்களும், ஏறு போன்ற நடையும், எடுப்பான தோற்றமும் பொருந்தியவன். பல்லாயிரக்கணக்கான பேர்கள் அவனையே பார்த்துப் பார்த்து மயங்கும் எழிலும், அத்தனை பேர் உள்ளத்தையும் ஆர்த்து இழுக்கும் தேஜஸும் உடையவன். இவனுடைய இளமையை அவள் அடைந்து பயனில்லை.

அடுத்தது பொருள்.

அவனுக்குப் பொருள் ஒரு பொருட்டல்ல. பணத்தின் ஆசையைக் காட்டிலும் தாளக்காரப் பையனின் ஜாலர் ஓசையில் அவன் மயங்குவான். முத்துராக்குவின் தவிலில் உதிரும் மோகராக்களை அவன் மதிப்பது போல் தங்க மோகராக்களை மதிப்பதில்லை.

உடல் பொருள் இரண்டாலும் பயனில்லை. அடுத்தது ஆவி. அதாவது உயிர். உயிரைத் தியாகம் செய்து அவனைத் திருப்திப்படுத்த முடியுமா? அவர் கவலைதான் என்ன? அது எதனால் மாறும் என யோசித்தாள் மோகனா.

'நண்பனைப் பிரிந்த கவலை அவரை வாட்டுகின்றது. இதை நான் மாற்ற முடியாது. ஆனால் இரண்டாவதாக நாம் நாட்டியம் ஆடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அதை நாம்தான் மாற்றவேண்டும்' என எண்ணினாள். உடனே சிறிது குழப்பமும் வந்தது. 'நாம் ஏன் இப்படி நினைக்க வேண்டும்? அவர் சங்கீத ஞானமுடையவர் ஆயிற்றே! நாட்டியம் தனக்குப் பிடிக்காது என்று அவர் சொன்னதே இல்லையே. அப்படி ஆடல் பிடிக்காமல் இருந்தால் அழகர் கோவிலில் நாம் ஆடியதை மறைந்து நின்று பார்த்திருப்பாரா? அல்லது திருவாரூரில்தான் எனக்குப் பக்க வாத்தியம் வாசித்திருப்பாரா?.....'

'திருவாரூரில் வாசித்தது போட்டிக்காகத்தானே வாசித்தார்? காலில் ரத்தம் கசியும்வரை விடவில்லையே அதனால் அவருக்கு ஆட்டமே

பிடிக்கவில்லை என்று அர்த்தமா?.... பின் ஏன் அவருக்குத் தஞ்சாவூரில் நான் ஆட வந்தது பிடிக்கவில்லை! இது என்ன புதிராக இருக்கிறதே! நமக்குச் சொல்லாமல் ரயிலேறிவிட்டார். இப்போது பாதையில் நின்று தவிக்கிறார். என்னைப் பார்த்தவுடன் கண் கலங்குகிறார். ஆம், அவர் மனதில் என்னமோ ஏதோ இருக்கிறது. அதைச் சொல்ல நினைக்கிறார். ஆனால் பாதியில் விழுங்குகிறார். ''ஆட்டம் முடிந்து கூட்டிவர வேண்டாமா?'' என்று அம்மா கேட்டால், சிங்கம் போல் அவள் மேல் சீறுகிறார். அவர் மனதில் என்னதான் போராட்டம்? நான் ஆடுவது பிடிக்கவில்லையென்றால் அன்று இராத்திரியே சிக்கலில் என்னிடம் சொல்லியிருக்கலாமே! ''மோகனா, இனி நீ நாட்டியம் ஆடாதே'' என்று அவர் சொன்னால் நான் ஆடப்போகிறேனா?

'ஒருசமயம் பொறாமையாக இருக்குமோ? பெண் அழகாயிருந்தால் அம்மாவுக்குக்கூடப் பொறாமை வருமாம். மருமகள் அழகாயிருந்தால் மாமியார் சுவரில் முட்டிக்கொள்வாளாம். இதைப் போல் கணவன் மனைவிக்குள்கூடப் பொறாமை வருமோ? அடி அசடே! உன்னைப் பார்த்து அவர் பொறாமைப்பட என்ன இருக்கிறது? நீ என்ன ஆணா? ஆணுக்கு அடங்கின பெண். நீ என்ன அவரைக்காட்டிலும் அழகா? என்னதான் அழகாயிருந்தாலும் அவர் அழகில் மயங்கியவள்தானே? இல்லை, கலையில்தான் அவரைவிட மேம்பட்டவளா? அவர் வாசித்த தில்லானாவுக்கு ஆடியவள்தானே நீ.'

'ஆம், அவருக்கு ஆட்டம் பிடிக்கும். அவர் நாட்டியத்தைத் தெய்வமாகக் கருதுகிறார். நாதஸ்வரம் வாசிக்கிறவர் நாட்டியத்தை வெறுக்கிறார் என்றால் நம்ப முடியுமா? ஆனால் அவர் மனைவி நாட்டியமாடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அதிலும் நான் காசுக்கு ஆடுவதை அவர் கட்டோடு வெறுக்கிறார். நான் பெண்ணாகப் பிறந்துவிட்டேன். என் நாட்டியத்தைப் பார்க்கும்போது பலர், கலை பாதி காமம் பாதியாகப் பார்க்கிறார்கள். நான் அவருடைய செல்வம். அவருடைய காதற் கருவூலம். அந்தச் செல்வத்தைப் பிறர் கண்ணால் திருடுவதையும், கருத்தால் விரும்புவதையும் அவர் வெறுக்கிறார். அது உண்மைதானே. எந்த ஆண்பிள்ளைதான் அதைப் பொறுப்பான்? நாம் நாட்டியத்தை விட்டுவிட வேண்டியதுதான்' என்று நிச்சயம் செய்தாள் மோகனா. உடனே நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டாள்.

ஆனால் அடுத்த கணமே அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. உள்ளம் துடித்தது. உடல் பதறியது. நெஞ்சம் திக்குமுக்காடியது. அவள் கை கால்களில் எல்லாம் கலந்து ஓடிய லயம் குழன்றது. நாடித் துடிப்பில் அடித்த தாளம் தவறியது. உள்ளும் மேலும் ஒரே சீராய் ஓடும் மூச்சு தடைப்பட்டது. மலர மலர விழித்தாள்.

எதிரில் ஆத்திரத்தோடு அமர்ந்திருக்கும் சண்முகத்தை அழைத்து, ''அத்தான், நான் நாட்டியத்தை நிறுத்திவிட்டேன்!'' என்று சொல்ல வாய்



திறந்தாள். மனம் ஒலியாய் மாறவில்லை. ஒலி மொழியாய் மாறவில்லை. திக்குமுக்காடிச் சொல்ல முயன்றாள்.

அப்போது ஒரு கை அவள் தொண்டையை அமுக்கிப் பிடித்தது. வார்த்தை தடைப்பட்டது.

அந்தக் கை எது? மழுவேந்தும் கை அல்ல. மானேந்தும் கையும் அல்ல. ஐயன் நடராசனின் அபயகரம்தான் அது. அஞ்சேல் என்று வந்து ஆட்கொள்ளும் அந்தக் கரம்தான் அன்று அவள் தொண்டையைப் பிடித்தது.

எதிரில் நடன சிகாமணியாகிய நடராஜன், ஆடும் கலைத்தெய்வம் அந்தரத்தே வந்து நின்றான். 'தந்தோம் தந்தோம், நாம் தந்தோம். நடனக்கலை தந்தோம். அன்ன நடைப் பெண்கள் அத்தனை பேரிலும் உன்னைத் தேர்ந்தெடுத்து ஆடல் அரசியாக்கினோம். அதைத் தியாகம் செய்ய உனக்கு உரிமை கிடையாது' என்று ரௌத்ர தாண்டவம் ஆடினான்.

''என்ன உரைத்தாய் மோகனா? ஆடற்கலையைப் பயில, நட்டிக் கும்பிட்டபோது என்ன நினைத்தாய்? 'ஆண்டவனே! உன் தாண்டவத்தில் உலகம் பிழைக்கிறது. என் ஆடலில் உலகம் களிக்கட்டும்' என வேண்டிக் கொண்டாயல்லவா? அதனை மறந்துவிட்டாயா? காதல் என்பது கடவுளைக்காட்டிலும் மேலானதா? எனக்கு நீ சூட்டும் ஆடல் கலை மலரை ஒரு ஆடவனின் காலடியில் போட்டு நசுக்கிவிடப் போகிறாயா? சொல்லாதே. கலையைத் துறக்காதே!'' என்று அகோர தாண்டவ மூர்த்தி அச்சுறுத்தினான். அதைக் கண்டு நடுங்கினாள் மோகனா. கண்ணீர் விட்டாள்.

அப்போது அந்தக் கண்ணீரை யாரோ துடைப்பது போலிருந்தது. அந்தக் கை பட்ட மாத்திரத்தில் அவள் உள்ளம் பட்ட மரம் பச்சிலை விட்டதுபோல் துளிர்த்தது. அன்னை சிவகாமி அவள் எதிரில் நின்றாள். அன்புக் கரத்தால் அரவணைத்தாள்.

''குழந்தாய் அழாதே. காதலைப் பற்றி என் கணவருக்கு என்ன தெரியும்? அதன் தாபம் தெரிந்திருந்தால் அவர் என்னைத் தவம் செய்யவிடுவாரா? தூது வந்த மன்மதனைச் சுட்டு எரித்திருப்பாரா? நாம் பெண்கள். காதல் அருமை நமக்குத்தான் தெரியும். நமக்குத்தான் சரணாகதியில் உள்ள இன்பம் தெரியும். ஆண்களுக்குத் தெரியுமா அன்பு? அதில் உருகத் தெரியுமா? தன்னை ஒருவனுக்கு அடைக்கலமாக்கிக் கொள்ளுவதில் உள்ள இன்பம்தான் என்னவென்று தெரியுமா? சில சமயம் அவர்களில் யாரேனும் ஒருவனுக்குக் காதற் சுவையைச் சுவைக்க ஆசை வருகிறது. அதற்காக என்ன பாடுபடுகிறார்கள் தெரியுமா? தன்னை நாயகியாக்கிக்கொண்டு தவிக்கிறான் ஒருவன். மணிவாசகனைப் பார்.

**உன்கையிற் பிள்ளைஉனக்கே**
**அடைக்கலம் என்பதுபோல்**

என்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க

என்று காதலைப் பாவையாக நின்று பாடி அன்புச் சாட்டிலே இன்பத் தமிழ் மணி கோத்து திருப்பாவை சாத்துகிறான்.

நாடகத்தில் பெண் வேஷம் போட்டு நடிப்பது போல், தானே பெண்ணாய் இருந்து இறைவனைக் காதலித்து இசைபாடி உருகுகிறான், காதலில் உள்ளம் உருகுகிறது. வாசகம் மணி மணியாய் உதிர்கிறது. ஆனாலும் ஆண் ஆண்தானே!

'''வெண் சங்கே! உன்னை மாதவன் உதட்டில் வைத்து ஊதுகின்றானே. அவர் உதட்டைச் சுவைக்கும் பாக்கியம் உனக்கு இருக்கிறதே. அந்த அதரக் கனிச்சுவையை நீ அறிந்த மட்டும் சொல். அவர் திருவாயில் கற்பூரம் மணக்குமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ?' என்று கேட்டாள் கோதைப் பிராட்டி. இது அல்லவா மாதர் மனம். இது அல்லவா காதல் ரசம்! அடி மோகனா! நமக்குத்தான் தெரியும் அது. எத்தனைதான் ஆண்பிள்ளைகள் காதலைப் பற்றிக் கவி பாடினாலும் காதல் இன்பம் காரிகைதான் அறிவாள்.

அத்தகைய காதலுக்காக ஆடலைவிடத் தோன்றுகிறதா உனக்கு? அப்படியானால் உடனே விட்டுவிடு. நீ ஆடுவது சண்முகத்துக்கு அவமானம் என்று கருதுகிறாயா? அப்படி நீ கருதினால் எதையும் தியாகம் செய்யத் தயங்காதே. அவருக்கு அவமானம் வந்தபோது நான் என் உயிரையே விட்டேன். அதுதான் இன்பம். என்னைத் திரும்ப அடைய, அவர் எத்தனை தான் தவம் செய்தார் தெரியுமா? ஆடலை விட்டுவிடு.

''இப்போது நானும் ஆடுவதில்லை. ஏன் தெரியுமா? அவர் என்னை ஆடவிட்டால்தானே! அவர் ஆட்டத்துக்குத் தாளம் போட்டுக்கொண்டு தலையாட்டிக்கொண்டுதான் வாழ்கிறேன்.

''இந்த ஆண்பிள்ளைகள் இருக்கிறார்களே, அவர்கள் சுயநலத்தின் உருவம். மால் தன் மார்பில் மங்கையை வைத்தார். அவர் மகனோ நாவில் நங்கையை வைத்துக்கொண்டான். உங்கள் சிவபெருமானைக் கூடத்தான் சொல்கிறேன். தன் உடம்போடு உடம்பாய் உயிரோடு உயிராய், உள்ளம் கலந்து தன் மனைவி இருக்க வேண்டும். அரைக்கணம் கூட அவர்களை விட்டுப் பிரியக்கூடாது. அடி மோகனா இந்த ஆசையில் தானேடி என்னை அவர் தன்னில் பாதியாக்கிவிட்டார். அவர் செய்த கொடுமையை நினைத்து நினைத்தே நான் அரை உடம்பாய் ஆகிவிட்டேனடி. நான்வேறு, நீ வேறு என்ற பாகுபாடே இல்லாமல் இரண்டறக் கலந்த நிலை எனக்கு வந்துவிட்டதடி. பெண்ணாய்ப் பிறந்தால்தான் இந்தப் பெருநிலை கிடைக்கும். காதலாக வேண்டும். கசிந்து கண்ணீர் மல்க வேண்டும். தொண்டு செய்ய வேண்டும். துணையடிக்கீழ் நிற்க வேண்டும். மோகனா! நீ அவனுக்கு அடியாள்.



அவன் தேவன். அவனுக்கே ஆட்பட்டுவிடு. ஆடலை விட்டுவிடு'' என்று அன்பொழுகக் கூறினார் அன்னை உமாதேவியார்.

அப்போது, ''ஆட்டத்தை விடாதே'' என்று ஒரு இடிக்குரல் கேட்டது. காதல் பின்னால் வந்தது. காதலுக்காகக் கலையை விடாதே என்று அலறியது அந்தக் குரல்.

''இந்தா பாரு தங்கச்சி. நீ ஆட்டத்தை விட நினைச்சா யோசிக்காதே. உடனே விட்டுவிடு. அவர் சந்தோஷம்தானே உனக்கு முக்கியம்? ஒரே சங்கதி இரண்டு தடைவிலே போகாது. காதலும் கலையும், மின்றும் மாதிரி உழவுக்கும் ஊர்ப்பயணத்துக்கும் ஒத்து வராது. நீ ஆடாட்டி உன் குழந்தை ஆடுது. இப்பவே ஆட்டத்தை விடு'' என்றது ஒரு குரல்.

''பொன் காய்க்கும் செடியென்று போற்றி வளர்த்தேனே. இலவு காத்த கிளிபோல் ஆக்கிவிட்டாயே. திருவாரூர் வீட்டுக்குப் பளிங்குக் கல் பதிக்க நினைச்சேனே. சொந்தத்திலே ஒத்தைக் குதிரை பிட்டன் வாங்கி ஓட்ட ஆசைப்பட்டேனே. ஆட்டத்தை விடும்படி வரும் என்றால் இந்த அநியாயக் கலியாணத்துக்கே நான் சம்மதிருச்சிருக்க மாட்டேனே!'' என்று அழுதது ஒரு குரல்.

''மோஹனா! ஆட்டத்தை விடாதே. உன் ஆட்டம்தான் என் கொண்டாட்டத்திற்குக் காரணம்.'' இதுவும் ஒரு குரல்.

இவ்வாறு உருவெளித் தோற்றங்களுக்கிடையே விழித்த கண் விழித்தபடி பகற்கனவு கண்ட மோகனா பதறி விழித்தாள். வண்டி இருளில் வந்து நின்றது.

''என்ன மோகனா, யோசனை அதிகமாயிருக்கு? பட்டணம் வந்து விட்டதே!'' என்றான் சண்முகம்.

அந்த அன்பான வார்த்தை ஒன்றிலேயே அவள் உள்ளம் தெளிந்தாள்.

''ஆம் அத்தான், பிரயாணம் முடிந்துவிட்டது!'' என்றாள்.

''புறப்பட்ட வண்டி எங்கேயாவது நின்றுதானே ஆகணும்?'' என்றாள் தாய்.

''வண்டி மட்டும் இல்லையம்மா, வாழ்வும் அப்படித்தான்!'' என்றாள் மகள்.

''இதை எங்க அம்மா பேசினால் நல்லா இருக்கும். மகள் சொன்னா நல்லா இல்லையே. காலத்திலே பழுத்தால் பழம். பிஞ்சிலே பழுத்தால் வெம்பல்'' என்றாள் தாய்.

# கலக்கம் தெளிந்தது



**ச**ண்முகம், மோகனா - எல்லோரும் சென்னையில் நண்பர்கள் வீடுகளுக்குக்கூடச் செல்லவில்லை. அந்தக் காலத்தில் சங்கீத வித்வான்களை அன்புடன் வரவேற்று உபசரித்து வந்த திருவல்லிக்கேணி ஓட்டல் மாடியில்தான் தங்கினார்கள். அந்த நேரம் வரை சண்முகத்திடம் பேச இடம் கிடைக்கவில்லை மோகனாவுக்கு.

இப்போது இடம் கிடைத்தாலும் இதயம் திறக்கவில்லை. அவன் இருக்கும் மன நிலையில், தான் எப்படி இந்தப் பேச்சை ஆரம்பிப்பது என்று தயங்கினாள். இதற்குள் சண்முகமே பேச ஆரம்பித்தான்.

''நான் சொல்லாமல் வந்துட்டேனென்று உனக்குக் கோபம்தானே?'' என்று அவளிடம் கேட்டான். அந்தக் குரலிலும் அவன் முகத்திலும் அதற்காக அவன் அனுபவிக்கும் தண்டனை தெரிந்தது.

''கோபம் இல்லை அத்தான்! செங்கற்பட்டிலாவது பார்க்க முடிந்ததே என்று சந்தோஷம்'' என்றாள் மோகனா. ஆனால் சந்தோஷம் என்ற வார்த்தையில் துக்கம் ஒலித்தது.

''நான் என்ன செய்வேன் மோகனா. இதைப் பார்'' என்று அந்தத் துண்டுக்கடிதத்தை அவளிடம் கொடுத்தான் சண்முகம். அதைப் படித்தாள் மோகனா. அவள் முகம் ஆறுதல் அடைவதற்குப் பதிலாக ஆத்திரம்தான் அடைந்தது.

''மதராசுக்கு வந்ததுக்கு இது காரணம். ஆனால் நீங்கள் மனம் வெறுத்து ரயிலடிக்குப் போனதற்குக் காரணம் எதுவோ?''

சண்முகம் பதில் சொல்லாது நின்றான்.

''நான்தானே காரணம்? என்னால்தானே உங்கள் மனம் வாடியது?''

''இல்லை மோகனா. இப்போது எதற்கு?'' என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டான் சண்முகம்.

''மத்தியானம் சாப்பிடவாவது வருவீர்களா?''

''வராமல்?''

''சரி புறப்படுங்கள்'' என்று சிறிதும் தன் மனதைத் தளரவிடாமல் விடை அளித்தாள் மோகனா.

சண்முகம் வெளியே போய்வரக் கிளம்பினான். அந்த இன்ஸ் பெக்டர் ஞாபகம் வந்தது. வாசலில் யாராவது நிற்கிறார்களா என்று



வராந்தாவில் வந்து கடைக்கண்ணால் பார்த்தாள். திடுக்கிட்டாள். அங்கு ஒரு வாலிபர் இந்த மாடியையே பார்த்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. சண்முகம் மறுபடி உள்ளே வந்தான்.

கையெழுத்தில்லாத கடிதம் ஒன்றை நம்பி அவன் வெளியே செல்லுவது, வடிவாம்பாளுக்குப் பிடிக்கவில்லை. 'யாராவது ஏதாவது சூது செய்திருந்தால்' என்றே சந்தேகம் வந்தது.

''என் தம்பி, வரதனை வேணும்னா கூடக் கூட்டிக்கிட்டுப் போறது தானே?'' என்றாள்.

''என்ன அத்தே பயப்படுறீங்க. அதுதான் வம்பு செய்யறவனைத்தான் வழியிலேயே இறக்கிவிட்டுட்டீங்களே'' என்று சொல்லிப் புறப்பட்டான். அப்போதும் அந்த ஆள் வெளியே நின்றான்.

இவ்வாறு வாசலில் ஒரு ஆள் நிற்பதையும், அவனைப் பார்த்துப் பார்த்து சண்முகம் மலைப்பதையும் வடிவாம்பாள் கண்டாள். ரயிலில் சண்முகத்தைக் கிண்டிக் கேள்வி கேட்ட அந்த அதிகாரியின் ஆள்தான் என்று புரிந்துகொண்டாள். சண்முகம் மாடிப்படியில் இறங்கும்போது அவன் காலடிச் சத்தம் ஒவ்வொன்றையும் திகிலுடன் கவனித்தாள். உடனே எதிரில் இருக்கும் ஆளுக்கருகில் இன்னொருவன் வந்து நிற்பதையும், இருவரும் சிரித்துப் பேசுவதையும் கடைக்கண்ணால் கண்டாள். திகில் அதிகமாயிற்று. அவள் எதிர்பார்த்ததற்கேற்றாற்போல் சண்முகம் கீழே இறங்கியவுடன் மேற்கண்ட இருவரும் அவன் அருகில் வேகமாய் நெருங்கினார்கள். முதல்வன் கையிலிருந்த ஒரு தோல் பையை அவசரமாய்த் திறந்தான். சண்முகத்துக்கு நேரே எதையோ பிடித்தான்.

''அய்யோ!'' என்றாள் வடிவாம்பாள்.

''தாங்யூ ஸார்.... நான் பிரஸ் போட்டோகிராபர்'' என்றார் அந்த ஆள்.

''வணக்கமுங்க'' என்றான் சண்முகம்.

இருவரும் சிரித்த முகத்துடன் இருப்பதைப் பார்த்த பிறகுதான் வடிவாம்பாள் வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

பொன்னம்பலத்தா பிள்ளையின் வீட்டில் சண்முகம் நுழைந்தபோது அங்கு போலீஸ் அதிகாரிகளின் மகாநாடே நடந்துகொண்டிருந்தது. அவர்களுக்கு நடுவே காரைக்கால் நடேசன் அமர்ந்திருந்தார். 'அண்ணேன்' என்று கூவியவண்ணம் அவர் அருகில் ஓடி நின்றான் சண்முகம். நடேசன் அவன் முகத்தைப் பார்த்தார். ராமபிரானைக் கண்ட பரதன் போல் அவன் முகத்தில் படர்ந்திருந்த சோகத்தைக் கண்டு அவர் உள்ளம் கலங்கியது.

''வாங்க பிள்ளை'' என்றார்.

''நான் இவங்களோட பேசிவிட்டு வரலாமா?'' என்று அதிகாரிகளிடம் கேட்டார்.

இதைக் கேட்டவுடன் போலீஸ் அதிகாரிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். அத்தனை பேர் முகங்களையும் ஆவலுடன் பார்த்தார் பொன்னம்பலத்தா பிள்ளை.

ஆனால் சண்முகமோ அங்கு தன்னுடன் ரயிலில் வந்த அதிகாரி நின்றிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

அதற்குள் உயர்தர போலீஸ் அதிகாரி தன் அபிப்பிராயத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தார்:

''அவரும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவராக இருப்பதால் அவருடன் பேசச் சட்டம் அனுமதிக்கவில்லை,'' என்றார்.

சண்முகத்துக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நடேசன் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க இருநூறு மைல் தூரம் ஓடி வந்தும் இங்கு அவர் வார்த்தையைக் கேட்க முடியாமல் போய்விட்டதே என்று நினைத்தான். அதோடு இன்று அவர் கைது செய்யப்பட்டிருப்பதற்குக் காரணமும் நமது அசாக்கிரதைதான் என்று எண்ணியதும் அவனுடைய எண்சாண் உடம்பு ஒரு சாணாகக் குறுகியது.

''அண்ணே, இத்தனை ஆபத்துக்கும் காரணம் நான்தான் அண்ணே! என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றான் சண்முகம்.

''என்ன ஆபத்து வந்துவிட்டது பிள்ளை. ஒண்ணும் பயப்படாதீங்க. நானும் சங்கீதக்காரர் இல்லை. வியாபாரி'' என்று கூறிச் சிரித்தார் நடேசன். சண்முகத்துக்கும் ஏதோ சிறிது நம்பிக்கை வந்தது.

ஸ்ரீமான் பொன்னம்பலத்தாபிள்ளை ரொம்ப நல்ல மனிதர். அவர் இந்த மதராசில் ஒரு தனி மனிதனாக இல்லவே இல்லை. தஞ்சாவூர் ஜில்லாவுக்கே ஒரு காரியஸ்தராக விளங்குகிறார் என்று முன்பே கூறியிருக்கிறோம். ஊருக்கு ஒருவர் என்றால் அவர் யாருக்குத்தான் ஆளாவார்? ஆதலால் எந்த வேலையையும் அவரால் முழுவதும் செய்ய முடிவதில்லை.

அந்தக் காலத்தில் முக்கியமான பொருள்களை இரண்டாகப் பிரித்து இன்ஷியூர் செய்வது வழக்கம். உதாரணமாக, நூறு ரூபாய் நோட்டுகளில் சுமார் இருபது நோட்டுகளை இன்ஷியூர் செய்து அனுப்புகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலில் நோட்டை இரண்டாகக் கத்தரிப்பார்கள். அதில் ஒரு பகுதியை முதல்நாள் இன்ஷியூர் செய்வார்கள். இரண்டாவது நாள் இன்னொரு பாதியை அனுப்புவார்கள். இதனால்தான் அக்காலத்தில் ஒட்டுப்போட்ட நோட்டுகள் அதிகம் புழக்கத்தில் இருந்து வந்தன.

இந்த முறையைப் பொன்னம்பலத்தா பிள்ளையும் சில சமயம் அதிஜாக்கிரதையாகப் பின்பற்றுவார். முப்பது டஜன் அலமாரிப் பூட்டுகள் வாங்கி அனுப்பும்படி ஒருவர் தஞ்சையில் இருந்து அவருக்கு எழுதினார். முதல்நாள் பார்சலில் பூட்டுகளை மட்டும் அனுப்பியிருந்தார். ஆனால் அடுத்த நாள் சாவிகளை அனுப்ப மறந்துவிட்டார். இதற்குள் அவருக்கு



ஆயிரம் வேலைகள் வந்துவிட்டன. வழி அனுப்புதல், வரவேற்றல், டீ பார்ட்டி ஆகிய மூன்றிலும் அவர் இருப்பார். ஆகையால் காலை மாலை இரவு ஆகிய மூன்றிலும் அவருக்கு நேரம் கிடைக்காது. மீதி இருக்கும் நேரத்தில் ஒரு மனிதனால் என்னதான் செய்ய முடியும்?

காரைக்கால் நடேசன் விஷயத்திலும் அவரால் ஏற்பட்ட இந்தத் தாமதம்தான் ஆபத்தாக வந்துவிட்டது. நடேசனுக்காக அத்தனை நகைகளையும் சென்னையில் அவர்தான் வாங்கினார். நகையை வாங்கிய மனிதருக்கு பில்களை செட்டில் செய்து வாங்க நேரமில்லை. இதன் பின் தபாலில் வந்த பில்களோ அவர் கவனத்திற்கு வரவில்லை. இன்விடேஷன் கார்டுகள் அல்லவோ இதன் பயனாகத்தான் இத்தனை நாள் தப்பி இருந்த நடேசன் இன்று சென்னையில் அதிகாரிகள் நடுவில் அகப்பட்டார்.

''அண்ணனை நான்தான் காட்டிக் கொடுத்திட்டேன். என் கையிலே நீங்க எழுதின கடிதம் இருந்தது. அதை இந்த இன்ஸ்பெக்டர் பார்த்து விட்டார். அதனாலேதான் இந்த ஆபத்து'' என்றான் சண்முகம்.

''சும்மா இருங்க பிள்ளை. இந்த ஆளுகள் என்னை எப்பவுமே தொடர்றாங்க.''

''உங்களுக்குச் சீட்டு வந்ததும் உங்களைத் தொடர்ந்திருக்காங்க. பாவம். அவுங்கதான் என்ன செய்வாங்க, உத்தியோகம்'' என்று சாதாரணமாகச் சொன்னார் நடேசன்.

''ஆமா, இப்ப நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''இந்தா பாருங்க, நான் பிரஞ்சு நாட்டுப் பிரஜை. என் மேலே இவுங்க ஒரு விரலைக்கூட வைக்க முடியாது. எங்க ராசாங்கத் தூதர் இங்கே இருக்காரு. அவர் ஆபீசுக்கு என்னைக் கூட்டிப் போவாங்க. அவர் தெளிவான நிலையில் இருந்தா நமக்கு நல்லது'' என்று சிரித்துக்கொண்டே கூறினார் நடேசன்.

ஆம். அந்தப் பிரஞ்சு அதிகாரி நல்ல நிலையில்தான் இருந்தார். காரைக்கால் செனட்டர் நடேசனைக் கண்டதும் களிகொண்டார். குசலம் விசாரித்தார். ''உங்கள் வாயிதாவின்போது நான் இவரை ஒப்பிக்கிறேன்'' என்று உறுதியும் கூறினார். ஆனால் நடேசனைத் தன் ஆபீஸிலேயே வைத்துக்கொண்டுவிட்டார்.

சண்முகம் ஓட்டலுக்கு வந்தான். அவன் மனதில் நடேசனை உயிருடன் பார்த்துவிட்டோம் என்ற ஆறுதல் இருந்தது.

''அண்ணனுக்கு ஓர் ஆபத்தும் இல்லே. அவங்க தந்த நகையும் கடத்தல் நகை இல்லைனு தெரியுது. ஒரு கவலை தீர்ந்தது'' என்றான் சண்முகம்.

''இன்னொரு கவலை தீரவில்லையே!'' என்றாள் மோகனா.

''என்ன கவலை?''

''உங்கள் மனைவி நாட்டியம் ஆடுவது!''

"அடி, என்ன பொண்ணே இப்படிச் சொல்லறே? அது என்ன ஞாயம் கெட்டதா? ஆடிப் பாடி, பத்துப் பணம் சேர்க்கிறபோது, ஆட்டத்தை நிறுத்தச் சொல்லுமா?" என்று வடிவாம்பாள் முந்தினாள்.

"அம்மா, அவங்க முகம் கோணினால் எனக்கு உலகத்திலே என்னம்மா ஆனந்தம் இருக்குது?"

"புருசன் முகம் கோணினா, கொஞ்ச நேரத்திலே பூவும் பூஞ்சிரிப்புமா திரும்பி வரும். சனங்க முகம் கோணினா சல்லிக்காசு கிடைக்குமா? என்ன மருமகப் பிள்ளை, அது என்னவோ சொல்லுது, நீங்க பாட்டிலே சும்மா இருந்தா?"

"இந்தா மோகனா, உன் ஆட்டத்தைப்பற்றி நான் ஏதாவது சொன்னேனா?" என்றான் சண்முகம்.

"அத்தான், நீங்கள் சொல்லவா வேண்டும்? நான் நிறுத்துறதும்னு நிச்சயம் பண்ணிட்டேன். இனி யார் வந்து சொன்னாலும் ஆடப் போவது இல்லை."

"மோகனா, அப்படியானால் உன் ஆட்டத்தை எனக்கு ரசிக்கத் தெரியவில்லையென்ற எண்ணமா?"

"நான் சொன்னேனா, அப்படி? அக்கறை இல்லாதவங்களாயிருந்தா உங்க வாயாலே 'தில்லானா மோகனாம்பாள்'னு பட்டம் சூடுப்பீங்களா? மானம் உள்ள எந்த மனுஷனுக்கும் இந்த நிலைமை கேவலமாகத் தான் இருக்கும். என்னை ஆடாதே என்று சொல்லவும் உங்களுக்கு மனம் வரவில்லை. நான் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கவும் உங்கள் மனம் இடந்தரவில்லை. அத்தான், உங்க மனசு எனக்குப் புரிஞ்சு போயிடுத்து. அந்த நெஞ்சிலே ஏறி நின்று தித்தாம் திதிதத்தாம் என்று மிதிக்க நான் ஆசைப்படவில்லை. வேண்டவே வேண்டாம். கஞ்சியோ, கூழோ நீங்கள் அளிப்பது எனக்குப் போதும். இன்று முதல் ஆட்டத்தை நிறுத்திட்டேன்" என்று மோகனா கண்களில் வழிந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு கூறினாள். சண்முகம் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

"அத்தான் ஏன் பேசாமல் இருக்கீங்க? வாய் திறந்து சரி என்று ஒரு வார்த்தை சொல்லுங்க. இனி என் கால்கள் உங்க காலடியைப் பின்பற்றி நடக்குமேயொழிய 'கண்ட' நடையைப் பின்பற்றி ஆடாது. நான் கற்றுக்கொண்டு வந்த தலைக்கோல் சாட்சியாக யாருடைய ஆட்டத்தைப் பார்த்து நான் ஆட ஆசைப்பட்டேனோ அந்த நடராஜமூர்த்தி.... ...."

"மோகனா!" என்று அலறினான் சண்முகம். எழுந்து ஓடி வந்து அவள் வாயைப் பொத்தினான்.

"சொல்லாதே மோகனா, இனி வாயைத் திறக்காதே. நீ பணத்திற்காக ஆடக் கூடாது என்பதுதான் என் எண்ணம். நீ ஆட்டத்தையே நிறுத்திவிட வேண்டும் என்பது அல்ல" என்று சொல்லி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.



"அத்தான்" என்று துவண்ட கொடி போல் அவள், அவன் பாதங்களில் விழுந்தாள். இரு கைகளாலும் தூக்கினான் சண்முகம்.

"ரொம்ப நியாயமாயிருக்கு. மகாராஜா நாதஸ்வரத்தைப் பிடுங்கிட்டாரு. மருமகப்புள்ளே நாட்டியத்தை பிடுங்கிக்கிட்டாரு. இனிமே புருஷனும் பெஞ்சாதியும் எந்த வயலிலே இறங்கி வேலை செய்யப் போறீங்களோ?" என்று கண்களில் ரத்தம் சிந்தக் கோபித்துக்கொண்டாள் வடிவாம்பாள்.

"அம்மா, வயலிலே இறங்கி வேலை செய்தால் என்ன? வயலைக் கண்டு பயப்படும் வகுப்பிலா நான் பிறந்தேன்? அதில் ஒன்றும் குற்றமில்லையம்மா!"

"ஆடறவள் என்று தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிக்கிட்டாரு?"

"அத்தே, நீங்க சும்மா இருங்க. உங்களுக்கு என்ன? நாலு மாடி வீடு கட்டணும், நாற்பது பசு கொல்லையில் இருக்கணும், அவ்வளவுதானே. என்னால் முடியும். நான் இன்னும் வாசிப்பை நிறுத்திவிடவில்லை" என்றான் சண்முகம்.

## முப்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

# நட்பின் சிகரம் நடேசன்



"அவனுக்குப் பொறுப்பே கிடையாது. குயில் பாடுதே தெரியுமா? அது எப்பவாச்சும் குஞ்சு பொரிச்சு இரை கொண்டாந்து கொடுக்குதா? நம்ம சேவலைப் பாரு, பெட்டைக் கோழிக்கு இரை ஊட்டுது. இந்த கந்தர்வங்களே இப்படித்தான். குயிலும் குயிலும் கூடிக் குலாவினாப்பிலேதான் அவங்க வாழ்க்கையும் இருக்கும். இல்லாட்டி சொல்லாமே கொள்ளாமே அவன் புறப்படுவானா?" என்றார் தகப்பனார்.

"போங்கப்பா, குயிலும் குயிலும்தான் கூடிக் குலாவும். இல்லாட்டி காக்காயும், குயிலுமா கலியாணம் பண்ணிக்கும்?" என்றாள் அவர் மகள்.

"சும்மா இரு பொண்ணே. எவன் எக்கேடு கெட்டுப்போனா நமக்கு என்ன? இந்த வம்பிலேயெல்லாம் நம்ப மாட்டிக்கப்படாது!"

"நம்பதானே அவங்களுக்குக் கலியாணம் செய்து வச்சோம்?"

"அட, உன் பணத்திமிரு, கல்யாணத்தை நீ பண்ணிவச்சே. நீ பண்ணி வைக்காட்டி மாத்திரம் என்ன? அவங்க இரண்டு பேரும் ஒருத்தரை

ஒருத்தர் விட்டுடவா போறாங்க? காத்தடிக்காமே மழை பெய்யாதா? இல்லே, கலியாணம் பண்ணிக்காமே குழந்தை பிறக்காதா?''

அப்பா, உங்களுக்குக் கேலி செய்யத்தான் தெரியும். ஆசை, அன்பு, மானம், அவமானம் இதெல்லாம் தெரியாது. அவரு மனசிலே என்ன வருத்தம் இருக்குமோ? இல்லாட்டி அந்த அண்ணன் இப்படிச் செய்யுமா?''

''கட்டுன பெண்டாட்டி கிட்டேகூடச் சொல்லாமே ரயில் ஏறிப் போகுறாப்பிலே என்ன வருத்தம் வந்தது? காரைக்காலுக்கு ஓடிப் போறவன் கணக்கிலே இல்லே புறப்பட்டுப் போயிருக்கிறான்?''

''அவர் வித்வான். உங்களைப் போல வெத்து மனுசன் இல்லை, உசிரைக்காட்டிலும் அவங்களுக்கு மானம் பெரிசு. தஞ்சாவூரிலே அவர் மனசை என்னமோ வேதனை தொட்டிருக்கு. அவரு புறப்பட்டுட்டாரு.''

''சரிதான் பெண்ணே, மனசை அதன் போக்கிலே விடப்படாது. அதை அடக்கணும்'' என்று உரைத்தார், மனதை அடக்கி வெற்றி கண்ட திருவாளர் கடம்பவனம்.

''மாடுகூட அடங்காது அப்பா, மனசு அடங்குமா? எனக்கு இன்னைக்கே பட்டணம் போகணும்'' என்றாள் மங்கையர்க்கரசி மரகதம்.

''இல்லே மரகதம், இது எல்லாம் சீரியஸ் மாட்டர். வழுக்கி விழுகிறவனையும், வழக்கிலே விழுகிறவனையும் கைகொடுத்து இழுக்கப்படாது. நம்மையும் சேர்த்து இழுத்துக்கிட்டுப் போயிடுவாங்க!''

மரகதத்துக்குக் கோபம் தாங்கவில்லை.

''உங்க புத்தியை உங்களோடு வச்சுக்கோங்கப்பா. மாப்பிள்ளையாவது கொஞ்சம் நல்லவராக வந்தாரு. இப்ப அவரையும் நீங்க கெடுக்கிறீங்களே!''

''ஏன், எந்த விதத்திலே நான் உன் புருஷனைக் கெடுத்தேன்? என்னோடே சீட்டாடச் சொன்னேனா? ஆர். ரூமுக்கு அழைச்சுக்கிட்டுப் போனேனா? நான் எந்த விதத்திலே கெடுக்கிறேன்னு சொல்லறே?''

''ஆமாம், நீங்கதான் போலீஸ்காரனைக் கண்டவுடன் பயந்துக்கிட்டு அந்த அண்ணனையே மறந்துவிடச் சொன்னீங்களே! அது என்ன வம்பு, என்ன நகை என்று ஏதாவது கவனிச்சீங்களா?''

''அப்படிக் கேளு, இப்பத்தான் புரியுது. உன் அட்டிகை போச்சுன்னுதானே நீ வருத்தப்படறே? ஒரு அட்டிகை போனா என்ன? நான் ஒன்பது அட்டிகை வாங்கிக் கொடுக்கிறேன்!''

''அடேயப்பா, நீங்க மனசு வச்சா வாங்கியா போடணும், யார் வீட்டிலேயாவது வச்சிருந்தா திருடிக்கொண்டுகூட வந்துடமாட்டீங்களா?''

''இந்தா, என்னைத் திருடன்னு சொல்லாதே! என் சொத்து, என் மகள் சொத்து, நான் திருடினேன்.''



''ரொம்ப சரி, தன் சொத்தையே திருடறவங்க, பிறத்தியார் சொத்தை விடுவாங்களா? எனக்கு அதெல்லாம் தெரியாதப்பா. கலியாணம் ஆனதுக்கப்புறமாவது, சண்முகமும் மோகனா அக்காவும் சந்தோஷமாக இருப்பாங்கன்னு பார்த்தேன். இடைஞ்சலுக்கு மேலே இடைஞ்சலா வருது. இப்பவே போய் அவங்க எங்கேயிருந்தாலும் பார்த்துட்டு வரணும்.''

''என்னிக்குப் புறப்படச் சொல்லறே?'' என்று கேட்டுக்கொண்டே ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார் மைனர். மரகதம் எழுந்து நின்றாள்.

''இன்னிக்கே புறப்படுவோம். உங்களுக்கு ஒண்ணும் ஆபத்து வந்துவிடாது அத்தான். அது கள்ளக் கடத்தல் நகையாக இருந்தாலும் நம்பதான் கழட்டிக் கொடுத்துவிட்டோமே?'' என்று மரகதம் குறும்பாய்க் கேட்கவே, மைனர், ''நான் ஆபத்துக்குப் பயப்படலே மரகதம்!'' என்று பதில் கூறினார்.

''அந்தஸ்துக்குப் பயப்படுறீங்களாக்கும்? வீட்டிலே இருக்கிற அட்டிகையைக் கொண்டுபோய் வடிவாம்பாள் அம்மா கையிலே கொடுக்கிறபோது பயந்தீங்களா? இப்போ ஏன் பயம்?'' என்று அவள் சிரிக்கவே, மைனரும் சிரித்தார்.

''ஆமாடா, சிரிக்கறாங்க புருஷனும் பெஞ்சாதியும். அது வரவர அவ அம்மா மாதிரியே பேசுது. நீ இடங்கொடுக்கிறே!'' என்று சொல்லி, தன் மகளின் குறும்பை ரசித்தார் கடம்பவனம்.

''எனக்கு என்னமோ பயம் என்றாயே, என்ன பயம்?''

''பணம் பதவி இருக்குது; வம்பு, வழக்கு என்னாத்துக்குன்னு பார்க்கறீங்க. ஏன் அத்தான், தண்ணீரிலே பாசி பிடிக்குது, தாம்பாளத்திலே களிம்பு ஏறுது. மனசிலே மாத்திரம் மாசு படாமல் இருக்குமா? ஐயோ! சொக்கத் தங்கமா மாறினீங்களே, ஒரு நிமிஷத்திலே பதினாறாயிரம் ரூபாய் பணம்னு சொன்னவுடனே, அந்த அண்ணனைக் கவனிக்காமலே விட்டுட்டீங்களே!''

''நானா கவனிக்காமல் விட்டேன்? நான் திருவாரூர் போக வேண்டும் என்று நினைச்சேன். அவங்க மதுரைக்குப் போயிட்டாங்க. அங்கே வழக்கு, வாய்தா. அங்கிருந்து தஞ்சாவூருக்கு வந்தாங்க. அப்புறம்?''

''இதெல்லாம் எதுக்கு அத்தான்? நிசமாகவே நீங்க கொஞ்சம் பயந்துட்டீங்க. இல்லாட்டி என்னைக் கமிஷன்லே விசாரிக்கச் சொல்லுவீங்களா?''

''ஆமாம், இல்லாட்டி மதுரையிலே மோகனாவைக் கேட்ட மாதிரி உன்னையும் கேள்வி கேட்டான்னா?''

''என்ன கேப்பாங்க. 'உன்னை நாகலிங்கம் தூக்கிக்கிட்டுப் போனானா? நீ சிரிச்சியா'ம்பாங்க. உடனே உங்களுக்குச் சீதையை ராவணன் தூக்கிக்கிட்டுப் போன மாதிரி அவமானம் வந்துடும்.

அப்படித்தானே? கேள்விக்காக அஞ்சப்படாது அத்தான். அத்தனை கேள்விக்கும், அந்த அக்கா ஆணி அடிச்சாப்பிலே பதில் சொல்லிச்சே, நானும் சொல்லமாட்டேனா? சரி, இன்னிக்கு புறப்படலாமா?''

''மரகதம், நான் சொல்றேன் கேளு. தென்னை மரத்திலே ஏறுறவனை எட்டின வரையில்தான் தாங்கலாம்'' என்றார் அப்பா.

''என்னப்பா, தென்னைமரம் பனைமரம்னு, உங்களுக்கு எப்பவும் அதுவேதான் ஞாபகம்.''

கடம்பவனத்தின் முகம் சிவந்தது. ''எது? எது ஞாபகம்ங்கிறே?''

''ஏன் இப்படிக் கோவம் வருது? நான் பண்ணையைச் சொன்னேன். சண்முகம் தெய்வயோகத்துப் பிறவி. நீங்க தாங்கி ஏற்றிவிட வேண்டிய நிலைமையில் அவர் இல்லே. மாமாவும் மருமகனும் எப்பவும் பணம், பணம்னு அலையறீங்க. மனுஷனுக்கு ஆபத்து வரபோது உதவி பண்ணுவீங்களா? அதில்லாமே பணத்தைத் தலையிலே கட்டிக்கிட்டு போகப் போறீங்களா?''

''என்னைக்காவது நீ கோர்ட்டுக்குப் போயிருந்தா உனக்குத் தெரியும்!'' என்றார் கடம்பவனம்.

''நம்ப கோர்ட்டு அடுப்பங்கரையோடே சரி. எனக்கு இன்னிக்கே மதராசுக்குப் போகணும், அவ்வளவுதான்!''

''அப்படியே, கிடைச்சதுன்னா உன் அட்டிகையையும் வாங்கிக்கிட்டு வந்துடணும், அதுதானே உன் பிளான்?''

''ஆமாம் அப்பா. உங்கள் மகள் அன்பைவிட, அட்டிகையைப் பெரிசாக நினைக்கிறாள் என்பதிலேதானே உங்களுக்குத் திருப்தி.''

''சரி, பின்னே புறப்படு, போவோம்'' என்றார் கடம்பவனம்.

''நீங்க எதுக்கு அப்பா? நான் அத்தானை இல்லே கூப்பிடறேன்?''

''அவரு என்னாத்துக்கம்மா? அவருக்குக் கோர்ட் விவகாரங்கள் எல்லாம் தெரியாது. இது கஸ்டம்ஸ் கேசு. ரொம்பக் கஷ்டமான விஷயம். நம்ப பார்டர் ஏரியாவிலே இருக்கிறவங்க....''

''நீங்க சும்மா பார்டரிலேயே இருங்கப்பா. விவகாரம் இருக்கிற இடத்துக்கு நீங்க போகணும்னு அவசியமில்லே. நீங்க இருக்கிற இடத்துக்கே அது தேடிக்கிட்டு வரும். என்ன அத்தான்?''

''நான் தயார் மரகதம். உங்க அப்பா தொந்தரவினாலேதான் இத்தனை நாள் அடங்கிக் கிடந்தேன்.''

''சரி, மருமகப் புள்ளே. கூட்டிக்கிட்டுப் போறே, ஜாக்கிரதையா ஊருக்குக் கூட்டியாந்திடு'' என்று விறைப்பாகப் பேசினார் கடம்பவனம்.

''யாரை ஜாக்கிரதையாகக் கூட்டிக்கிட்டு வரணும்?''

''உன்னைத்தான். பின்னே என்ன, அந்தத் திருவாரூர் பொண்ணையா?''



''அந்தப் பெண்ணை மட்டும் இல்லே. பெண்ணு மாப்பிள்ளை இரண்டு பேரையும் நம்ப வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வாறும்!'' என்றாள் மரகதம்.

''ஏன், கலியாணம் ஆன பெண்ணை மறுவீடு அழைக்கிறீங்களா? உன் கூடப் பிறந்தவ!'' என்று திரும்பினார் கடம்பவனம்.

''ஆமா அப்பா. விருந்துக்குத்தான்.''

''ஊர் முறையெல்லாம் சிரிக்கும்.''

''உங்களைப் பார்த்தே சிரிக்கலியாம். என் நல்ல காரியத்துக்குச் சிரிப்பாங்களா?''

''ஏய் மரகதம்! என்ன, வர வரப் பிடிவாதம் தலைக்கு மேலே போகுது!'' என்று தாவி வந்தார் கடம்பவனம்.

''இந்தாங்க அப்பா உங்க கம்பு, என்னை அடியுங்க'' என்று அவள் அவர் கைத்தடியை எடுத்துக் கொடுக்கவே, அந்த மனிதருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. கம்பை வீசிக்கொண்டு வெளியே நடந்தார்.

அன்றிரவே புறப்பட்டுக் கணவனும் மனைவியும் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

## நாற்பதாம் அத்தியாயம்

# உள்ளத்தால் தீங்கெண்ணா உத்தமப் பிறவிகள்



அடுத்த நாள் காலையில், பொன்னம்பலத்தா பிள்ளை வீட்டுக்குள் அவர்கள் நுழைந்தபோது, பின் கட்டிலிருந்து பெரிய சிரிப்பொலி கேட்டது. ''அக்கா'' என்று உள்ளே ஓடி வந்தாள் மரகதம். அங்கே சண்முகம், காரைக்கால் நடேசன் இருவரும் ஊஞ்சலிலே அமர்ந்திருந்தார்கள். மோகனா, வாதன், வடிவாம்பாள் முதலியவர்கள் தரையிலே ஜமுக்காளத்தில் அமர்ந்திருந்தார்கள். மரகதம் உள்ளே நுழைந்ததைக் கண்டவுடனே, சண்முகம், நடேசன் இருவரும் எழுந்தார்கள்.

''அடே, பணக்கார வீட்டுப் பெண் வந்து இருக்குதே!'' என்றார் நடேசன்.

''காரைக்கால் வியாபாரம் இவருதானே?'' என்று மரகதமும் கிண்டலாகக் கேட்டாள். மரகதத்தைப் பார்த்தவுடனே, மோகனாவுக்குத்

தாங்கமுடியாத ஆனந்தம் ஏற்பட்டது. அதே சமயத்தில், தான் அவ்வேளை அவனுக்குக் கொடுத்த நகையையும் போலீசார் கழட்டிக்கொண்டு போய்விட்டார்களே என்ற வருத்தம் ஏற்பட்டது.

''வா மரகதம், அந்த அட்டிகையை உன் கழுத்திலே எப்படியாவது திருப்பிப் போடணும்னு பார்க்கிறேன். அது முடியலியே'' என்றாள் மோகனா. அவளுடைய கடைக் கண்களில் நீர் கசிந்தது.

''என் கழுத்துக்கு நீ திருப்பித் தந்த நகை இதைவிடப் பதினாயிரம் பங்கு பெரிது. அட்டிகை நல்லா இருக்காது அக்கா?'' என்று மழுப்பினாள் மரகதம். ஆயினும் அவளுடைய கண்கள் வாசற்பக்கம் நோக்கின. தன் கணவன் ஏன் உள்ளே வரவில்லையென்று யோசித்தாள். ஆனால் வாசற்படி அருகிலே நின்ற மைனர், உள்ளேயிருக்கும் சண்முகத்தைப் பார்க்க மனம் கூசியவண்ணம் நின்றுகொண்டிருந்தார்.

எவ்வளவோ அன்பு இருந்தும், வம்பு, வழக்குக்குப் பயப்படும் சிறிய உணர்ச்சியினால் சண்முகத்தின் விஷயத்தில், தான் சிறிது தவறு செய்துவிட்டோம் என்ற எண்ணம் அவரை உறுத்தியது. 'கள்ளக் கடத்தல் நகையாகவேயிருந்தாலும், நான் சற்றுப் போராடியிருக்கலாம். சண்முகத்தை உடனே பார்த்து, அவனுக்கு இந்த விஷயத்தில் உதவி செய்திருக்கலாம். நான் படித்த படிப்பு எனக்குத் தைரியத்தைக் கொடுக்க வேண்டியிருக்க, மாமாவின் புத்திமதியாலே தவறு செய்துவிட்டோம்' என்ற உணர்ச்சி அவரை வாட்டியது. அவர் கூசி நின்றார்.

''வாங்க கொழந்தே, வணக்கம்'' என்று சண்முகம் அவரைக் கும்பிட்டான். அவன் சிரித்த முகத்துடன் வணங்கியது அவர் உள்ளத்தை வாள்கொண்டு அறுத்தது.

''புள்ளே, என்னை மன்னிச்சுடுங்க. நாகலிங்கம் தோளிலே குத்தினான். நான் உங்க நெஞ்சிலே குத்திட்டேன்!'' என்று சொல்லிக்கொண்டே அவன் கையைப் பிடித்தார்.

''சே, சே, அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. தருமண்ணே வாசிக்கிறபோது பிசிறு அடிச்சா, ஒருத்தரும் கவனிக்க மாட்டாங்க. நான் வாசிக்கிறபோது எச்சல் பிசிறு வந்தாலும் என்னையே பார்ப்பாங்க. யானைக்கும் அடி சறுக்குமுங்க.''

''நல்ல மனிதன் தவற்றை உணருவான். சாதாரண மனிதன் உணரமாட்டான். இதைத் தவிர மனிதனாகப் பிறந்தவன் எதாவது ஒரு தவறு செய்யாமே இருக்கமுடியாது'' என்று அவன் சொன்னான். தஞ்சாவூரிலே தான் மோகனாவிடம் சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டதை நினைத்துத்தான் இப்படிச் சொன்னானோ, என்னவோ?

''சிங்கபுரம் கொழந்தே, சிவப்புத் தலைப்பாவைக் கண்டதும், அவ்வளவு நகையையும் கழட்டிக் கொடுத்தீங்களாக்கும்? இந்த காரைக்கால் நடேசன் எங்கேயாவது திருடி நீங்க பார்த்திருக்கீங்களா?'' என்று சிறிது படபடப்புடன் கேட்டார் நடேசன்.

4842701



''நான் மாத்திரமா கொடுத்தேன். நாயனக்காரரும்தான் எல்லாத்தையும் கொடுத்துட்டாரு'' என்றார் மைனர்.

''நாயனக்காரர் என்ன பி.ஏ.யா படிச்சிருக்கிறார்? நீங்கள் என்னபேர், பி.ஏ., எம்.ஏ. படிச்சு இருக்கீங்க. பிரிவு கவுன்சிலிலே போய், கேஸ் நடத்தி எஸ்டேட்டை ஜெயிச்சிருக்கீங்க. என் மானத்தைக் காப்பாத்த ஒரு ஐயாயிரம் ரூபாய் செலவு பண்ணப்படாதா? எல்லாம் உங்க மாமா கடபுடாவிலே பயந்துட்டீங்க போலிருக்கு?'' என்று இரைந்தார் நடேசன்.

நடேசனின் இரைச்சலிலே ஓர் அழகு. சுத்தமான வெள்ளி ரூபாய்கள் நிறைந்த சாக்குப்பையை சற்று உயர்த்திப் பிடித்துக் கீழே கொட்டினால் எவ்வளவு இனிமையான ஓசை இருக்குமோ, அந்தச் சத்தம் அவர் கோபத்தில் இருந்தது. அவருடைய பளிங்குபோன்ற உள்ளம், அவர் திட்டினால்கூட அதில் இனிமையை ஊட்டியது.

''சரிதான் விடுங்கள். இனிமே எதுக்காக அதெல்லாம் சொல்றீங்க. இப்போ கேசெல்லாம் என்ன ஆச்சு? நான் என்ன செய்யணும்?'' என்றார் மைனர்.

''கேசுமில்லே, மண்ணுமில்லே. மெய்யா நாலு நாளைக்கு மெட்ராசிலே இருந்து, நகையைக் கையிலே வாங்கிக்கிட்டுப் போங்க. இந்த வைத்தி, பூதிப் பெட்டிஷன் போட்டுட்டான். போலீஸ்காரங்க கேஸ் ஆம்புட்டா போதுன்னு உங்களைப் பிடிச்சாங்க. இந்தாங்க, உங்க அட்டியலுக்குப் பட்டியல்'' என்று நடேசன் தன் தோல்பையிலிருந்து ஒரு நகைக்கடைப் பில்லை எடுத்துக்கொடுத்தார். அதிலே ரூ.13654, பதினோரு அணா, ஏழு பைசாவுக்கு ஓர் அட்டிகை விற்றதாகக் கண்டிருந்தது. அதன் கூடவே போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு அந்தக் கம்பெனியார் எழுதிய அத்தாட்சிக் கடிதம் ஒன்றும் இருந்தது.

அப்பொழுது சென்னையிலே, டாக்கர் அண்ட் சன்ஸ் என்று பெரிய குஜராத்தியர் கம்பெனி ஒன்று, வைர நகை வியாபாரம் செய்து வந்தது. அவர்கள், விலைபெற்ற நகைகளைச் செய்து முடித்தவுடனே, அவைகளை ஒரு போட்டோ எடுத்து வைத்துக்கொள்வதும் வழக்கம். விளம்பரத்துக்கும், வியாபாரத்தில் மாதிரி காட்டவும் உபயோகப்படும் என்ற கருத்தில் அப்படிச் செய்தார்கள். அந்தப் போட்டோவின் காப்பி ஒன்றும் அத்தாட்சிக் கடிதத்துடன் இருந்தது. அதன் முதலாளி ஒருபுறம் வியாபாரம் செய்துகொண்டு, மற்றொரு புறத்தில் தர்மசத்திரங்கள், ஆலயத் திருப்பணிகள் முதலியவற்றையும் ஏராளமாகச் செய்து வந்தார். தன்னுடைய தர்ம சத்திரங்களைக் கவனிப்பதற்காக அவர் வெளியூர் போயிருந்ததால், அவரைப் பொன்னம்பலத்தா பிள்ளை சந்தித்துப் பேச இரண்டு நாள் தாமதம் ஆயிற்று. அவர் வந்தவுடனே, சண்முகத்தின் விவகாரத்தைக் கவனித்ததோடு மட்டுமல்லாமல் சென்னையிலுள்ள பெரிய அதிகாரிகளைச் சந்தித்து, அவ்வளவு நகைகளையும் விற்றது தங்கள் கம்பெனிதான் என்று அந்தத் தேதிவாரியாக உள்ள பில்களையும்,

கணக்குகளையும் தன்னுடைய பாங்கு வரவு செலவையும் எடுத்துக்காட்டி நிரூபித்துவிட்டார்.

இதன் பயனாகச் சண்முகத்திடம் இருந்து பறிமுதல் செய்த நகைகளை அவரிடமே திருப்பி ஒப்படைக்கும்படி போலீஸ் அதிகாரிகள் உத்தர விட்டது மட்டுமல்லாமல், அவனுக்குத் தங்களால் ஏற்பட்ட இன்னலுக்கு வருந்துவதாக ஒரு கடிதமும் எழுதியிருந்தார்கள். "உங்கள் கடமையை நீங்கள் செய்தீர்கள். எனக்கு அதனால் வருத்தம் ஒன்றும் இல்லை" என்று அவர்களிடம் சண்முகம் தெரிவித்துக்கொண்டான். நகைகள் திரும்பிவர இன்னும் சில நாட்களாகலாம். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பொன்னம்பலத்தா பிள்ளையும் தன்னால் ஏற்பட்ட தவறு எத்தனை பேர்களுக்கு இன்னலை உண்டாக்கிவிட்டது என்று வருந்தினார். அதற்குப் பிராயச்சித்தமாக சண்முகத்தைத் தன் வீட்டுக்கே அழைத்துவந்து, தன் விருந்தாளியாக அவனை இருக்கச் செய்வது, தன் பெரிய மனிதத்தன்மையைக் குறைக்காது என்றும் திருப்திப்படுத்திக்கொண்டார்.

இந்த விவகாரம் ஒழுங்காகத் தீர்ந்த பிறகுதான் நீங்கள் ஊருக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதனால்தான் சண்முகம் தான் இறங்கிய ஹோட்டலைக் காலி செய்துவிட்டு, பொன்னம்பலத்தா பிள்ளை வீட்டுக்கே வந்துவிட்டான். பொன்னம்பலத்தா பிள்ளை வீட்டிலே இன்று கலியாணக் குதூகலம் நிரம்பி இருந்தது. எப்பொழுதும் அந்த வீட்டில் அவரும் அவருடைய வேலையாட்களும் மாத்திரம்தான் இருப்பார்கள். மஞ்சள் குங்குமத்தையே அந்த மாளிகை பார்த்ததில்லை. ஆதலால், நேற்றுவரையில் அங்கு இல்லாத ஒரு லட்சுமி கடாட்சம், இன்று அந்த வீட்டிலே நிரம்பி இருந்தது.

நடேசன் கொடுத்த கவரைப் பிரித்துப் பார்த்த மைனர், "என்னாங்க, அட்டிகையைக் கொடுப்பீங்கன்னு வந்தா, காகிதத்தைக் கொடுக்கிறீர்களே!" என்றார்.

"அட்டிகை கனக்கும், காகிதம் கனக்காது இல்லே?" என்றார் நடேசன்.

"ஆமாம், கேலி பண்ணுறாரே இந்தக் காரைக்கால்காரரு. இந்த பில்லை ஏன் நம்பகிட்டே கொடுக்கிறாரு? எங்கேயாவது பசு மாடு இருந்துன்னா அதுங்கிட்டே கொடுக்கிறதுதானே? என் கழுத்திலே இருந்ததைக் கழட்டிக்கிட்டுப் போய்விட்டான். வீட்டுக்குள்ளே புகுந்து இருக்கிறதை எடுத்துக்கிட்டுப் போய்விட்டான். அப்போ எல்லாம் இவரு எங்கே தூங்கினாரு? அதைக் கேளுங்களேன்" என்றாள் மரகதம்.

"நல்ல வேளை தங்கச்சி, இந்த மட்டும் நீயாவது கேட்டியே!" என்றார் நடேசன்.

"சோபன கலியாணத்தன்னிக்குச் சாயங்காலம் நான் சிக்கலுக்கு வரதாகப் புறப்பட்டு வந்தேன். வர வழியிலே எனக்கு ஏரோபிளேன்லே இன்பர்மேஷன் வந்தது."



"அது என்ன, ஏரோபிளேன்?" என்றாள் மரகதம்.

"ஆமாம் தங்கச்சி, சீமையிலே எல்லாம் அப்படி ஒண்ணு பறக்குதாம். அதிலே ஏறிக்கிட்டு மனிதர்கள் எல்லாம் வானத்திலே பறப்பாங்களாம்."

"என்னாங்க, எங்க மானத்தை ஏன் பறக்க விட்டீங்கன்னு கேட்கிறேன். யாரோ மானத்திலே பறக்கறாங்கன்னு சொல்றீங்களே!" என்றாள் மரகதம்.

"அதைத்தானே சொல்ல வர்றேன். அந்த மாதிரி சில ஆள்கள் இருக்காங்க. ஒருவர் கண்ணுக்கும் தெரியாமே, கெடிகாரம், வைரம், தங்கம், பாக்கு எல்லாத்தையும் எல்லையைக் கடந்து கொண்டுபோய் விடுவாங்க. அந்த ஆசாமிகளுக்கு எங்க பக்கத்திலே ஏரோப்ளேன் என்று பெயர். அதிலே ஒருவன், என்னை வெளிப்பாளையத்திலே கண்டு சொன்னான்: 'முதலாளி, உங்க நகையெல்லாம் கள்ளக் கடத்தல்னு யாரோ ரிப்போர்ட்டு செய்திருக்காங்களாம். போலீஸ் இலாகா ஜரூராக வேலை செய்யுது. இப்ப நீங்க சிக்கலுக்குப் போனா சிக்கிக்குவீங்க' என்று இன்பர்மேஷன் குடுத்தான். உடனே நான் வெறும் வண்டியை ஓட்டிக்கிட்டு ரோட்டோடே போகச் சொல்லிட்டு, நாகூர் வழியாக இறங்கி, நடந்தே போயிட்டேன் காரைக்காலுக்கு."

"ஏன் போலீஸ்க, சிக்கலுக்கு வந்து, அவங்களுக்குத் தக்க பதிலைச் சொல்லி இருக்கலாமில்லே?" என்றாள் மரகதம்.

"ஏய் மரகதம், இப்படியெல்லாம் எதுத்து எதுத்துக் கேக்காதே!" என்றாள் மோகனா.

"அட, சும்மாரு அக்கா! உனக்கு 'தித்தாம்' போடத்தான் தெரியும்" என்றாள் மரகதம்.

"இல்லை, மரகதம் கேட்க வேண்டியதை கேக்குது. ஆனால் பதில் தான் என் கையிலே இல்லியே. திவான்பகதூரை நம்பி இல்ல திண்டாடிக் கொண்டு இருந்தேன்? அவ்வளவு நகைகளை வாங்கி அனுப்பினவர், பில்லை வாங்கி அனுப்பல்லே, கலியாணச் சந்தடியிலே நானும் கவனிக்கல்லே. நகையைப் பறிமுதல் செய்யறபோது நம்மையும் புடிச்சிட்டாங்கன்னா வம்பு. நான் வெளியே இருந்தாத்தான் செய்ய வேண்டியதைச் சீக்கிரம் செய்யலாம். வைத்தி இல்லே சம்பந்தப்பட்டிருக்கான்?"

"வைத்திக்கு நீங்களுமா பயப்படுறீங்க?" என்றாள் வடிவாம்பாள்.

"நல்ல மனுசன் எல்லாருமே அவருக்கு நடுங்க வேண்டியதுதான். கலியாண வீட்டிலேயே அவர் என்னிடம் வந்து 'நகை நல்லாருக்கு. எந்தக் கம்பெனியிலே வாங்கினீங்க? என்ன விலை? பட்டியலைக் காட்டுங்க'ன்னு கேட்டாரு. நான் 'பட்டியல் கைவசம் இல்லை' என்று சொன்னேன். இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்குப் போட்டு விட்டால் வைத்தி என்று எனக்குப் புரியாதா? அதுதான் காரைக்காலிலே

போய் இருந்துக்கிட்டு, என்னடா செய்யறதுன்னு யோசனை பண்ணினேன். அடுத்த நாள் காலையிலே நாயனக்காரர் வண்டியைப் போட்டுக்கிட்டு வந்தாரு. பெண்ணும் மாப்பிள்ளையும் வீட்டுக்கு வந்திருக்காங்க. நான் உள்ளே இருந்துக்கிட்டே 'ஊரிலே இல்லே'ன்னு சொல்லிப்பிட்டேன்'' என்றார் நடேசன்.

''என்ன, நீங்க உள்ளே இருந்தீங்களா?'' என்று சண்முகம் வருத்தத்துடன் கேட்டான்.

''ஆமாம் பின்னே, அன்றைக்கு நான் இருந்த நிலையிலே, உங்க துயரத்தை என்னால் பார்க்க முடியாது. மோகனா கண்கலங்கிப் பார்க்க எனக்கு விருப்பம் இல்லே. 'நல்லது நினைச்சு நான் செய்த காரியம், ஒரு தீமையை உண்டாக்கிவிட்டது' என்கிற எண்ணம் என் மனசை ரம்பம் போல் அறுத்தது. நான் உங்களைப் பார்த்தால் உபசாரம் பண்ண முடியாது. விருந்து வைக்கமுடியாது. கலியாண சந்தோஷத்தைக் கொண்டாட முடியாது. என் வீட்டுக்கு வந்து நீங்களும் நானும் வருத்தப்படறதைக்காட்டிலும், இந்த விவகாரம் தீர்ந்த பிறகு உங்களைப் பார்க்கலாம்னு முடிவு கட்டினேன். இல்லாட்டி நீங்கள் என் வீட்டுக்கு வந்தபோது அதைத் திருவிழாவா கொண்டாடி இருக்கமாட்டேனா?

''மற்றவங்களெல்லாம் நீங்க ஊதிக் கேட்டு ஆனந்தப்படறவங்க, நான் உங்கள் பேச்சிலேயே ஆனந்தப்படறவன். மற்றவங்களெல்லாம் உங்களைப் பார்த்துப் பழகி ஆனந்தப்படறவங்க, நான் உங்களை நினைச்சே ஆனந்தப்படறவன். பின்னே! நீங்க யாரு, எவ்வளவு பெரிய உத்தமர் என்கிறது எனக்குத்தான் தெரியும். மற்றவங்களுக்கு அது தெரியாது! அதனாலேதான் வீட்டிலேயே இருந்துகிட்டு இல்லேன்னு சொன்னேன்'' என்று நடேசன் ஒவ்வொரு வார்த்தையையும் ஆணி அடித்தது போல் சொன்னார். ஆனால் அவர் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

''சரி, எதுக்கண்ணே கவலைப்படறீங்க? இப்போதான் எல்லாம் ஒழுங்காயிடுத்தே!''

''ஒழுங்காகவில்லை சண்முகம். நீங்க பணத்தை மதிக்கிறவங்க இல்லே. அதனாலே பணத்தாலே வரும் விவகாரம் உங்களுக்குத் தெரியாது. மைனரை எதிரே வச்சுக்கிட்டு நான் சொல்லறேன். அவர் என்ன நினைச்சு இருப்பார் தெரியுமா? 'நடேசன் ஒரு குடிகாரன், சண்முகம் அவருடைய சிநேகிதன். இரண்டு பேரும் பொறுப்பு இல்லாமே கடத்தல் நகையை நம்பனுக்குப் பிரசண்ட் பண்ணிப் பிட்டாங்க'ன்னு நினைச்சு இருப்பாரு. இல்லாட்டி ஓடி வந்து உங்களுக்கு உதவி செய்திருக்க மாட்டாரா? மைனர்வாள், நீங்க அப்படி நினைச்சது உண்டா இல்லியா, உங்களையே கேட்கிறேன்'' என்று நடேசன் அவரைக் கேட்டார். மைனர் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து நின்றார்.



''அவங்க ஒன்றும் அப்படி நினைக்கலே. எங்கப்பா வேண்டுமானால் அப்படி நினைத்தது உண்மை'' என்றாள் மரகதம்.

''அப்படிச் சொல்லு தங்கச்சி. சத்தியத்தைச் சொல்றதுக்கு நீ ஒருத்தி போதும். மைனர் என்ன? இந்த விஷயத்திலே யாரா இருந்தாலும் அப்படித்தான் நினைப்பாங்க. நினைப்பதிலே குற்றமில்லே. இது இயற்கை. இதோ பின் வந்துடுத்து. இன்னும் இரண்டு நாளிலே நகையெல்லாம் வந்துடும். ஆனால், என் நேசத்தாலே நாயனக்காரருக்கு ஏற்பட்ட அவமானம்!'' என்று சொல்லி காமரக்கால் நடேசன் எங்கேயோ திரும்பினார். அவர் முகத்தில் நரம்புகள் புடைத்தன; கண்கள் கலங்கின; உதடுகள் படபடத்தன.

''என்ன அண்ணே, எனக்கு ஒரு அவமானமும் வராதண்ணே. அப்படி உலகமே எனக்கு எதிரியானாலும், உங்க நட்பு எனக்குப் பெரிதண்ணே!'' என்றான் சண்முகம்.

''அது நிசம் பிள்ளை, நானும் விட்டுவிட வேண்டியதுதான்.''

''என்ன அது?'' என்றார்கள் எல்லோரும்.

''ஒரு சமயம் என்னுடைய நட்பையும் மறுத்தார் நாயனக்காரர். அவர் கையிலே நான் பிராந்தியை ஊற்றிக் கொடுத்து குடிங்க என்று சொன்னேன். 'அண்ணே, என்னைக் கெடுக்காதீங்க. இது தப்பு' என்று சொல்லி, அவர் கையை எடுத்து என்னைக் கும்பிட்டாரு. அந்தத் தைரியம் எனக்கும் வருமான்னு பார்க்கிறேன்!''

''அதனாலே என்ன அண்ணே! நீங்க அதனாலே யாருக்கும் கெடுதல் செய்யலியே! உங்களுடைய உள்ளத்தை அது கெடுக்கறதில்லியே! உங்களைக் குற்றவாளியாக யாருமே கருதவில்லையே!''

''நான் கருதுகிறேன் பிள்ளை. மைனருடைய மாமனார் கருதுகிறார். மற்றவர்களும் அப்படிக் கருதுவாங்க. சரி, இந்த நடேசன் இன்று முதல் மதுவை விரலால்கூடத் தொடமாட்டான்'' என்றார் நடேசன்.

எல்லோரும் திகைத்து நின்றார்கள். ஆனால் மரகதமோ கடகடவென்று சிரித்தாள். ''என்னாத்துக்கு அதிலே பத்து ரூபாய் நமக்கு நஷ்டம் வருவானேன். ஊருக்கெல்லாம் வியாபாரத்தைப் பண்ணுவோம். அவங்க குடிச்சுக் கெட்டுப் போகட்டும்'' என்றாள்.

''இல்லே தங்கச்சி. அதை இனி விற்கவும் மாட்டேன்.''

''ஐயோ!'' என்றான் சண்முகம்.

''என்ன தம்பி, என் ஐயோங்கிறேங்க?''

''இல்லே அண்ணே, நீங்க அந்த வியாபாரத்திலே செல்வத்தை அடைந்தீங்க. அந்தச் செல்வத்தைப் பல நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுத்தினீங்க. இனிமே அதுக்கெல்லாம் கஷ்டம் வந்து விடுமே!''

''இல்லே நாயனக்காரரே. கெட்ட வழியிலே சம்பாதித்த பணத்தாலே நான் நல்லது செய்தால்கூட, அந்த நல்லதும் கெடுதலாகத்

தான் தோற்றமளிக்கும். தான் முடிவு செய்தது செய்ததுதான்! இது எனக்காக மட்டுமல்ல. சண்முகத்தின் நட்புக்காக, அவருடைய நல்ல பேருக்கு என் நாற்றம் இடையூறு என்பதற்காக'' என்று சொல்லி, நட்பின் சிகரமாக இமயத்தில் ஏறி நின்றார் நடேசன். 'இந்தச் சிறிய விஷயத்தை அவ்வளவு பெரிதுபடுத்துகிறாரே, யார் என்ன நினைத்தால் என்ன?' என்று கருதினாள் வடிவாம்பாள். ஆனால் தியாகத்தின் பெருமையை உணர்ந்த மோகனா, நடேசனை வாழ்த்தி வணங்கினாள்.

சண்முகமோ பிரமித்து நின்றான். எதையோ சொல்ல நினைத்தான்.

''அண்ணே, உங்களைக் காரைக்காலிலும் காணோம், பிரிட்டிஷ் எல்லையிலும் காணோம். என் வீட்டுக்கும் நீங்க வரலேங்கிறபோது நீங்க எங்கே போனீங்களோ என்று நான் வேதனைப்பட்டேன். நீங்க ஆண்டவன் கிருபையாலே உயிரோடு திரும்பி வந்தா, சிங்கார வேலனுக்குப் பால் அபிஷேகம் செய்து, புறப்பாடு செய்து வைக்கிறேன்னு வேண்டிக்கிட்டேன். வாங்க, ஊருக்குப் போவோம்'' என்றான் சண்முகம்.

''ஆஹா, தாராளமாகப் போய் வருவோம். அவன் தலையிலே பெய்யும் அபிஷேகப் பால், சிக்கல் சந்நிதியிலே ஆறாகப் பெருகி ஓட வேண்டும். மலை முழுவதும் பால் வழியவேண்டும். இந்த விவகாரங்கள் தீரட்டும், புறப்படுவோம்'' என்றார் நடேசன்.

அப்பொழுது, யாரோ பூட்ஸ் போட்டுக்கொண்டு உள்ளே வரும் சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள். ஸ்ரீமான் பொன்னம்பலத்தாபிள்ளை, வக்கீல் கிட்டாவய்யர் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

''என்ன சண்முகம் பிள்ளைவாள்! சௌக்கியமா? உங்க மகாராஜா திரும்பி வருகிறார் போலே இருக்கே?'' என்றார் வக்கீல்.

''அப்படீன்னா நம்ப காண்டிராக்ட் தீர்ந்து போச்சுங்களா?'' என்றான் சண்முகம் குறும்பாக.

''காண்டிராக்ட் தீரல்லே, மகாராஜாவுக்கும் அவர் மனைவிக்கும் தான் தீர்ந்து போச்சு!'' என்றார் கிட்டாவய்யர்.

✤ ✤ ✤ ✤



## வந்ததெல்லாம் வரட்டும்



இன்பம் துன்பம் இரண்டாலும் பாதிக்கப்படாதவர்கள்தாம் மனிதர்களில் உயர்ந்தவர்கள்.

முன் காலங்களில் அவர்சாயவேட்டி என்று ஒன்றை விற்பார்கள். அது பார்வைக்கு ஆந்திரா கதர் போல் இருக்கும். சலவைக்காரத்துக்கும் வெளுக்காது, அழுக்கும் தெரியாது.

இதைப்போல்தான் காவி உடையும். சந்தோஷத்திலும் களிக்காது, சங்கடத்திலும் வருந்தாது. இத்தகைய நிலையில்தான் இருந்தான் சண்முகம் வக்கீலைப் பார்த்தவுடன்.

அவருடைய நடத்தையும் பெருந்தன்மையும் அவனுக்கு இன்பத்தை அளித்தன. ஆனால் அவர் தன் எதிரியின் வக்கீல் என்ற எண்ணம் அவனுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. இரண்டுக்கும் அவன் கலங்கவில்லை. ஆயினும் அவர் வாயால் மகாராஜா இந்தியா வரப்போகிறார் என்று சொன்னவுடனே சந்தேகக்காரன் ஜாதகம் பார்த்த கதை போல் துடித்தான் சண்முகம்.

ஜாதகத்தைப் பார்க்க ஆரம்பித்து ஜோசியர் அஷ்டவர்க்கம் போடுவதற்கு முன்பே சிலர் தங்களுடைய கடந்த காலம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவார்கள். ஜோசியர் கணக்கைப் போட்டுக் கூட்டல் கழித்தல் பெருக்கலை முடிப்பதற்குள், தான் வருங்காலத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் உளறிவிடுவார்கள். இனி என்ன? பலன் ஒன்றுதானே பாக்கி! அதை ஜோஸ்யர் பட்டதும் படாததுமாகக் கெட்டதும் நல்லதுமாகச் சொல்லிவிடுவார். நல்லதோ கெட்டதோ இரண்டில் ஒன்று நடப்பது நிச்சயமாகையால், அவர் சொல்லியதிலும் பாதி உண்மை உண்டு. முழுப் பணமா கொடுக்கப்போகிறார் ஜாதகம் பார்ப்பவர்? அவரும் பாதிதானே கொடுத்திருப்பார்! ஆனால் இந்தப் பாதி உண்மைக்கே அந்த மனிதன் பதறிவிடுவான். இதைப் போலவே சனி திசை வரப்போகிறது என்றவுடன், ஜாதகனுக்கு ஏற்படும் சஞ்சலம் அத்தனையும் சண்முகசுந்தரத்துக்கும் ஏற்பட்டது. மகாராஜாவின் வருகையைத் தன் வாழ்விலேயே ஒரு திருப்பமாக அவன் கருதினான்.

''என்ன பிள்ளை, மலைத்துவிட்டீர்கள்! எதற்காக வருகிறார் தெரியுமோ?'' என்றார் வக்கீல்.

''உங்க ஜாதகத்திலே சுக்கிர தசையாக இருக்கும்; அவர் வருகிறார்'' என்றான் சண்முகம்.

கிட்டாவய்யருக்கு வெற்றிலை புரையேறிவிட்டது. அவர் சிரித்த சிரிப்பில். எப்போதும் சங்கீதப் பிரியர். அதிலும் தமாஷ் பிரியர். சண்முகத்தின் துடுக்கு அவரைக் குலுக்கியது. அவர் சிரித்து அடங்கியதும், "எனக்குத்தான் சுக்கிர தசை எப்பவும் இருக்கிறதே. இப்போது உங்கள் சேதிக்காகவே புறப்பட்டு வருகிறாராம்" என்றார் கிட்டாவய்யர்.

"அதென்ன, பாம் ஒன்று போடறீங்க?"

"நான் கேள்விப்பட்டது அப்படி."

"கேள்விதானா? உங்களுக்கு அவர் எழுதவில்லையா?"

"ஓய், கட்சிக்காரன் வக்கீலுக்கு எழுதப் பயப்படுவான். உமக்குத் தெரியாதா? களவாணிக்குப் பயந்து துப்பாக்கி வைத்திருப்பவன் அதைத் தொடப் பயப்படுவான். அதே மாதிரிதான் இவர்களும்."

"பின்னே உங்களுக்கு யார் சொன்னாங்க?"

"மிஸ்டர் வைத்திஜி."

"வைத்தியா, என்ன சொன்னாரு?"

"மகாராஜா அவருக்கு லெட்டர் எழுதியிருக்கிறாராம். இதைச் சொல்வதற்காகவே அவர் புறப்பட்டு வந்திருக்கிறார். பாவம் வரும் வழியிலே...."

"வைத்தியைப் பார்த்தா பாவம்னு சொல்றீங்க? ஏன் என்ன ஆச்சு?"

"திருவாரூரிலே இருந்து மதராஸ் ரயிலுக்குப் புறப்பட்டிருக்கிறார். இந்தச் சமயத்திலே தஞ்சாவூர் வண்டி அடுத்த பிளாட்பாரத்தில் வந்திருக்கு. நம்ம ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கிற நிலைமைதான் உங்களுக்குத் தெரியுமே! வேலியும் கிடையாது, விரட்டுகிறவனும் கிடையாது. ஒரு பசுமாடு, சினைமாடு. அந்த ரயிலுக்குப் பயந்துகொண்டு மதராஸ் ரயிலுக்குக் குறுக்கே வந்துடுத்தாம்."

"அடேடே!"

"உடனே வைத்தி பாய்ந்தாராம்."

"மாடு இல்ல பாயும், வைத்தி ஏன் பாயுறாரு?"

"இரக்கம்தான். பசு ஆயிற்றே. தண்டவாளத்துக்குக் குறுக்கே பாய்ந்து மாட்டை விரட்டியிருக்கிறார். பாவம் மனுஷனுக்கு மண்டையில் பலமான அடி......"

"ஆமாமா இருக்கும். மனுநீதிச் சோழ மகாராஜா பேரன் அல்லவா! அப்புறம்?"

"அப்புறம் என்ன, பிழைத்தார். மண்டையில் அடி. மணிபர்ஸ் போய்விட்டது."

"உங்க பர்சுதானே?" என்று சண்முகம் சிரித்தான்.

"என்ன பிள்ளை, என்னமோ சிரிக்கிறீங்களே. பர்சு அவருதுதான். பணம்தான் என்னுது. மதுரை கோர்ட்டிலே பணம் திரும்பி வந்துதாம். அதையும் எனக்குக் குடுக்க வந்திருக்கார். வழியிலே இப்படி ஆயிடுத்து.



அப்புறம் நான் அவருக்குக் குடுத்தேன் நூறு ரூபாய்." என்று முடித்தார் கிட்டாவய்யர்.

"உங்களுக்கும் பெப்பெப்பேயா? கழுதைக்குக் காலைக் கட்ட வேணும், வைத்திக்கு வாயைக் கட்ட வேணும். அது உதைக்கும், இது உளறும்."

"அப்படியானால் வைத்தி சொன்னதெல்லாம் பொய்யா?"

"பொய்னு சொல்லாதீங்க, அதுக்கு மதிப்புக் குறைச்சல்" என்று சண்முகம் ரயிலில் நடந்த விஷயங்களைக் கூறினான். வக்கீல் திகைத்தார்.

"இப்ப நாங்க பட்டபாட்டுக்கெல்லாம் அவர்தானே காரணம்" என்றான் சண்முகம்.

"அவர் மாத்திரம் அல்ல பிள்ளைவாள், நீங்களும்தான் காரணம். நான் உங்களைச் சீமைக்குப் புறப்படும்போதே எச்சரித்தேன்" என்றார் கிட்டாவய்யர்.

"அதனாலே என்ன? மகாராஜாவோ வரப்போகிறார். அவர் சீமையிலே இருக்கிறபோது நான் அவர்கூட இருக்க வேணும் என்பதுதான் ஒப்பந்தம். எப்ப அவரே சீமையை விட்டு வந்துட்டாரோ, இனிமேல் என் தகராறும் தீர்ந்ததுதான்" என்றான் சண்முகம்.

வக்கீலுக்குச் சண்முகத்தின் நியாயவாதம் சிரிப்பை மூட்டியது. அவன் உள்ளம் எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்று வியந்தார்.

"உங்கள் வாதம் தர்மமாயிருக்கலாம். சட்டம் அப்படிச் சொல்லாதே. அவர் சீமை டிரிப்பே கெட்டுவிட்டது என்றல்லவா மகாராஜா உங்கள் மேல் தொடருவார்."

"எப்படி வேணுமானாலும் தொடரட்டுங்க. நள மகாராஜனுக்கு கால் நகத்து வழியாகத் தொடர்ந்தானாம். ஆனால் நான் நிச்சயம் செய்துட்டேன். மகாராஜாவாக இருந்தா அவர் மட்டிலேதான்."

"ஆத்திரப்படாதீங்க பிள்ளே. அரண்மனைக் கோழிமுட்டை அம்மியை உடைக்கும்."

"அம்மியை உடைச்சா உடைச்சிட்டுப் போகுது. ஆள் தலையை உடைக்க விடலாமா?"

"அவர் பிடிவாதக்காரர். ஒரு நாய்க்காக இரண்டு லட்சம் செலவழித்தார்."

"நாயும் நாயனக்காரரும் ஒண்ணில்லீங்க."

"பிள்ளை, அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதீர்கள். அவர் வரட்டும். நானே ராஜி பேசிப்பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவர் பண விஷயத்தைத் தொடர்ந்தார். "இந்த வைத்தி சிலோன்லே பணத்தைக் கோட்டை விட்டதும், அது மதுரையிலே கிடைத்ததும் உண்மைதானோ?"

"அது உண்மைதான்."

"இப்ப திருவாரூரிலே விழுந்துடுத்துங்கறாரே, இது?"

"அவர் விஷயத்திலே ஒண்ணுதானுங்க உண்மை. வைத்தி கையிலே போன பணமும், வடக்கே போன மழையும் திரும்பாதுங்க" என்று சண்முகம் கூறிவிடவே, வக்கீல் கிட்டாவய்யர் தம் பணம் போன வருத்தத்துடன் எழுந்தார்.

"என்ன இருந்தாலும் பிள்ளை, உங்களுக்கு எதிராக நான் ஆஜராக வேண்டி வந்ததிலே எனக்கு ரொம்ப வருத்தம்" என்றார்.

"அதுக்காக என்னங்க? தொழிலில் எல்லாம்தான் இருக்கும்" என்றான் சண்முகம்.

## நாற்பத்து இரண்டாம் அத்தியாயம்

# வடிவேலன் கிருபை இருக்கட்டும்

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை.



'காலணாவுக்குச் சூடத்தை வாங்கிக் கற்சிலைக்கு முன் கொளுத்தினால் கடவுள் நேரில் வந்துவிடுவாரா? கடவுள் வருகிறாரோ இல்லையோ, சூடனுக்குப் போட்ட காலணாக் காசு திரும்பி வராது' என்பது எல்லோருக்கும் தெரியும்.

'சூடமும், சாம்பிராணியும் வாங்கிப் போடுவதால் யாருக்கு லாபம்? பாசி படிந்த புஷ்கரணியில் மூழ்கியதால், ஜலதோஷம் வந்தவர்களுக்கும், நோய்க்கிருமிகள் ஒட்டியவர்களுக்கும் வேண்டுமானால் கற்பூரப் புகையும் சாம்பிராணிப் புகையும் நன்மை செய்யலாம். அதனால் வேறு யாருக்கும் மிச்சம் இல்லை' என்று சில பரோபகாரிகள் சொல்லுவார்கள். ஆனால் அந்த பக்தர் சொல்லுகிறார்.

'காலணாவுக்குச் சூடம் வாங்கியதால் முதலில் காலணாவைத் தியாகம் செய்ய நான் பழகிக்கொண்டேன். கண்முன்னே வெண்மையாய் இருந்த கற்பூரக் கட்டி எரிந்து ஒன்றுமில்லாமல் போவதைக் கண்டு, வாழ்க்கை நிலையற்றது என்பதை அறிந்தேன். இன்னும் தேங்காயை என் கையால் சிதறு காயாக உடைத்து, அதை என் கண் எதிரே பிறர் எடுத்துத் தின்பதைக் கண்டு நாவை அடக்கக் கற்றேன். பக்தி, ஞானம், வைராக்



கியம் ஆகிய மூன்றையும் நான் இவைகள் மூலம் பெற்றேன். என் வரையில் இந்தப் பழக்க வழக்கமே எனக்குப் போதும். இது கூடாதென்று சொல்லுபவர்கள், வேறு விதத்தில் இவைகளைப் பழகிக்கொள்ளட்டும்' என்கிறார் அந்தப் பழங்கால மனிதர்.

ஆம்! இந்த நாட்டிலேதான் இன்றும் பக்திக்காகப் பணம் செலவழிப்பவர்களும், தன்னை வருத்திக்கொண்டு பாடுபடுபவர்களும் அதிகமாக இருக்கிறார்கள்.

நாவுக்கரசர் போன்றவர்களைக் கல்லைக் கட்டி கடலில் வீழ்த்திய போதிலும், இந்நாட்டில் உள்ள தெய்வ நம்பிக்கை என்றும் குறைந்ததில்லை.

அதிலும் இறைவன் திருமுன் நின்று, அவன் புகழையே பாடி அதில் சீரும் பெரும் அடைந்த சிக்கல் நம்பியைப் போன்ற கலைஞர்களுக்கு, தெய்வபக்தி அதிகம் இருப்பது இயற்கையே.

ஆதலால் வைர வியாபாரியின் கையில் இருந்த அந்தப் பொருள் அவன் கண்களுக்கு எந்தப் பொருளிலும் உயர்ந்ததாகத் தோன்றியது. அதைப் பார்த்ததும் அவன் உடல் சிலிர்த்தது, புல்லரித்தது. மனதில் ஆவேசம் உண்டாயிற்று. 'இப்படித் தாருங்கள்' என்று பயபக்தியுடன் அதனைக் கையில் வாங்கினான்; இரு கைகளாலும் ஏந்திக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

நெஞ்சகம் கோயிலாயிற்று. நினைவில் தெய்வமணம் பரவிற்று. அன்பு மஞ்சன நீராயிற்று. இரு கண்களிலும் அருள் சுரந்து, விழிநீர் வழிந்தது.

"எங்கள் சிங்காரவேலனுக்கும் இப்படி ஒன்று செய்து தாருங்கள்" என அவன் நாத் தழுதழுக்க உரைத்தான்.

'வேலுண்டு வினையில்லை; வேலைப் பணிவது எங்கள் வேலை' என இந்நாட்டில் உள்ள கோடானு கோடித் தமிழ் மக்கள் போற்றிப் புகழும் சமரமயில் வாகனனாம், அமரர் தொழும் நாயகன் சண்முகம் திருக்கை வேலே அது.

டாக்கர் கையில் இருந்த தங்கவேல், சென்னைக் கந்தகோட்டத்தில் திருக்கோயில் கொண்ட கந்தப் பெருமானுக்காக அவர் கடையில் செய்யப்பட்டது. அதைப் பார்த்த சண்முகம், இவ்வாறு சிக்கலுக்கும் ஒன்றைச் செய்யும்படி ஆர்டர் கொடுத்தவுடனே அவர் பிரமித்தார்.

"இதன் விலை என்ன தெரியுமா?" என்றார் வியாபாரி.

சண்முகம் சடக்கென்று பதில் சொன்னான்.

"வெற்றி வடிவேலுக்கு விலையும் உண்டா? அன்னை பராசக்தி அருளிய வேல் அல்லவா? இதற்கு என்ன கொடுத்தாலும் தகும்" என்றான் சண்முகம்.

என்றைக்கும் தடுத்துப் பேசும் வடிவாம்பாளுக்கு அவள் வாயால் தடுக்க முடியாத ஒரு காரியம் நடந்தது என்று சொன்னால், இந்த

ஒன்றைத்தான் சொல்லவேண்டும். அவனுக்கு உள்ளூர இது அதிகச் செலவு என்று தோன்றியது. அவனுக்கும் பக்தி உண்டு. தேங்காயைச் சாமிக்கும் உடைக்க வேண்டும், அது சட்டினிக்கும் ஆகவேண்டும் என்ற முறைதான் அவனுடைய பக்தி. அவனும் கோயிலுக்கு அடிக்கடி படித்தரம் கொடுத்து உபயம் செய்வான். அபரஞ்சிக்குச் சமையல் அவ்வளவாகத் தெரியாது என்ற எண்ணத்தில், வடையோ, தேங்குழலோ, பொங்கலோ, புளியோதரையோ வேண்டுமென்று நப்பாசை தோன்றிய போதெல்லாம், அவன் கோயிலுக்கு உபயம் செய்யத் தயங்கவில்லை. அங்குள்ள சுயம்பாகியைக் கண்டு, "சாமி, நல்லாச் செய்யுங்க. கமலாம்பிகைக்கு நெய்வேத்தியம் பண்ணறது" என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வான். அதன் பலனாகப் பக்தியும் கிடைக்கும். பலகாரங்களும் கிடைக்கும்.

சண்முகம் சிக்கல் சுவாமிக்கு வேல் சாத்தப் போகிறான் என்பதிலே அவனுக்குத் திருப்தி இல்லாமல் இல்லை.

ஆயினும் "மருமகப்புள்ளை, நகைசெய்யப் பக்தி மாத்திரம் போதாதே, பணமும் கேப்பாங்களே!" என்றாள் வடிவாம்பாள்.

"அதுக்கு என்ன? தங்கமும், வைரமும்தானே வேணும்" என்றான் சண்முகம்.

"அது என்ன, ரொம்ப தாராளமா சொல்கிறீர்களே! தங்கமும் வைரமும் சும்மா கிடைத்துவிடுமா?"

"எனக்குக் கிடைத்த தங்கமெடல்கள் எத்தனையோ இருக்கின்றன. திரும்பிவந்த வைர நகைகள் இருக்கவே இருக்கிறது. அவ்வளவு நகைகளையும் வைத்தி பறிமுதல் செய்தபோதே, அதை நான் தீர்ந்த கணக்காக எண்ணிவிட்டேன். இப்போது வேலன் கிருபையாலே, திரும்ப வந்திருக்கிறது. அவனுக்கே இருக்கட்டும்."

இதைக் கேட்டதும் வடிவாம்பாள் காதைப் பொத்திக்கொண்டாள். மன்னிக்கவேண்டும், காதை அல்ல. காதில் இருந்த கம்மலை.

"அவரு கையில் வெள்ளி வேலைக் கொடுத்தாலும் நல்லா இருக்கும். தம்பி, நம்ப குடுத்தா சாமிக்கு ரொம்பப் போகுது" என்றாள் வடிவாம்பாள்.

சண்முகம் அதைக் காதில் வாங்காதவன் போல், "கொஞ்சம் பச்சை, சிவப்பு எல்லாம் வேண்டாமா? எல்லாவற்றையும் நீங்களே போட்டுச் செய்துவிடுங்கள். எனக்கு இன்னும் நாலு நாளில் வேல் வேண்டும்" என்றான் வியாபாரியிடம்.

"நாலு நாளிலே நான் எப்படிச் செய்ய முடியும்?"

"என்ன மருமகப்புள்ளே, வெள்ளியிலே செய்தா நல்லா இருக்காதுன்னா, தங்கக் கிலிட்டு கொடுத்துட்டாப் போவுது" என்று முணுமுணுத்தாள் வடிவாம்பாள்.



"அத்தே, அவருக்குப் பன்னிரண்டு கண்கள். பவுனுக்கும் வெள்ளிக்கும் வித்தியாசம் தெரியாதா? இருக்குதுக்கே முலாம் பூசப் பார்க்கிறீர்களே! அப்படிச் சொல்லக்கூடாது. கடவுளுக்குச் செய்ய நினைத்ததை சீக்கிரம் செய்துவிட வேண்டும்" என்று அவன் கேட்டுக்கொண்டும் அவள் சரி என்று சொல்லவில்லை.

"அவன் கோவில் வாசலிலே யாராவது திரவியத்தைத் திரவியமாக நினைக்கிறாங்களா?"

"அதுக்காக என்ன? சாமி, எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் கிடைச்சா உனக்கு ஒரு தேங்காய் உடைக்கறேன்னு வேண்டிக்கிறவங்க ஒரு தேங்காயை மோசம் பண்ணுவாங்களா?"

"அத்தே, அவர் தேவகுஞ்சரி மணவாளன். ஒரு தேங்காய்க்கா ஆசைப்படப்போறாரு? அதுகூடக் கொடுக்கவேண்ணாலும், அவர் அருள் செய்யத்தான் போறாரு."

"அப்புறம் வேல் எதுக்கு? வெறுங்கையோடே கும்பிட்டா போவுது."

"அதுமட்டும் இல்லே அத்தே. சிக்கல் சண்முகசுந்தரம்னு சொன்னா, சீமையெல்லாம் தெரியுது. எல்லாம் அவர் கொடுத்ததுதானே. அவருக்குச் செய்ய வேண்டாமா?"

"நல்லாச் செய்யுங்க மருமகப்புள்ளே, வேண்டாமுன்னு சொல்லல்லே. ஆயிரக்கணக்கிலே பணம்போட்டு ஒரு வேல் செஞ்சு வச்சா, கோயிலுக்குப் போலீஸ் பாராவில்ல போடணும்?"

"அந்தக் கவலை வேண்டாம் அத்தே. தஞ்சாவூர் ஜில்லாவிலே மலையே கிடையாது. அப்படி இருந்தும் யாரோ ஒரு புண்ணியவான், சிங்காரவேலனுக்குக் கட்டுமலை கட்டிக் கோயில் அமைத்தான். இன்னும் யாரோ ஒருவர் சொர்ணத்தாலே திருவுருவம் வார்த்திருக்கிறார். அவனுக்குத் திருவாபரணத்திலே ஒண்ணும் குறைச்சல் இல்லே. இது நம்ம திருப்திக்கு. தயவுசெய்து நீங்க தடுக்காதீங்க!"

"அடேயப்பா, சாமி காரியம். நான் தடுப்பேனா? சும்மா ஒரு வார்த்தைக்குச் சொன்னேன். விரலுக்குத் தகுந்த வீக்கம்தானே தேவலாம். நாம் என்ன கோடீஸ்வரனா, லட்சப் பிரபுவா?" என்று சொல்லி திருத்திக்கொண்டாள் வடிவாம்பாள்.

அதற்குமேல் சொன்னால், ஆண்டவன் குறை வந்துவிடுமோ என்ற பயம் அவளுக்கு. மோகனாவுக்கோ சண்முகம் இம்மாதிரி தீவிரமாக இறங்க இறங்க ஆனந்தம் ஏற்பட்டது. 'அது பக்தியினாலா? அவனும் இந்தச் செலவுகளையெல்லாம் ஒப்புக்கொண்டானா?' என்பதையெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டாம். சண்முகத்தின் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடுவதைக் கண்டாள். அந்த ஒரு சிரிப்புக்கே எத்தனை லட்சம் செலவானாலும் பாதகமில்லை என்பதுதான் அவள் எண்ணம். நல்ல வேளையாக நடேச அண்ணனும் கிடைத்தார். நகைகளும்

கிடைத்தன. இத்தனை நாளாக ஓடி ஒளிந்திருந்த புன்னகை மறுபடியும் அவர் முகத்தில் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது என்பதிலே அவள் மனம் மகிழ்ந்தாள்.

''அத்தான், விக்ரகத்துக்குத் தகுந்த மாதிரி வேலை அளவு எடுத்துக்குங்க'' என்றாள் அவள்.

''அது தெரியும் மோகனா. உனக்கு ஒண்ணும் அம்மா மாதிரி செலவு செய்யக்கூடாது என்கிற எண்ணமில்லியே?''

''எனக்கு அதிலே என்ன? நம்ப ஆண்டவனுக்கு எதைச் செய்தாலும் தகும்'' என்று அவள் சிக்கல் முருகனைத் தன் குலதெய்வமாக்கிக்கொண்டாள்.

இதிலே மரகதத்துக்கு மாத்திரம் ஒரு சிறு குறை. 'அந்த அட்டிகையைத் தன்னிடம் தந்துவிட்டார்களே! வேல் செய்வதற்குத் தன்னிடம் ஒன்றும் பணம் வாங்கிக்கொள்ளவில்லையே' என்ற கவலை அவளுக்கு உண்டு. ஆனால் ஒருவர் தன் செலவில் பிரார்த்தனை செய்ய முற்படும்போது, அதில் என் பணமும் சேரட்டும் என்று சொல்ல அவளுக்கு விருப்பம் இல்லை.

திருவிழா ஏற்பாடுகள் பிரமாதமாக நடந்தன. ஐப்பசி பிறந்தது; கந்தர் சஷ்டியும் வந்தது.

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

# ''அழகிய சிக்கல் சிங்காரவேலன்''



''மலர்கள் மலர்ந்தன. அந்த மலர்களிலே உண்டான நறுமணம், முந்நூற்றெண்பது மைலுக்கு வாசனை அடித்தது. அந்த நறுமலர்ச் சோலையின் நடுவே வண்டுகள் பாடின. அந்த இசையைச் செவிமடுத்த வண்ணம் சிக்கல் சிங்கார வேலன் அமர்ந்திருந்தான்'' என்று சிக்கல் வடிவேலனைச் செந்தமிழால் துதிபாடுகிறார் அருணகிரி நாதர்.

'அடேயப்பா! இது என்ன அபூர்வக் கற்பனை! பூவாவது, வாசனை வீசுவதாவது!' என்பார்கள் பட்டணத்தில் உள்ளவர்கள்.

பில்ஹணன் என்று ஒரு கவி இருந்தார். அவர் கர்ணசுந்தரி என்ற நாடகத்திலே, காஷ்மீர் நாட்டை வர்ணிக்கின்றார். அதில் பொதிய மலையின் சந்தன மணத்தைச் சுமந்துகொண்டு வரும் தமிழ்த்தென்றல்



இந்த ஊரில் மணக்கிறது என்று புகழ்கிறார். ஆம், அருணகிரிநாதரின் அரிய கருத்தைத்தான் அவர் ஆமோதிக்கிறார்.

நெல்லி, புன்னை, வில்வம் முதலிய மரங்கள்தாம் பெரும்பாலும் தல விருட்சங்களாக இருக்கும். மல்லிகையைத் தலவிருட்சமாகக் கொண்டவன் மயில்வாகனப் பெருமான் ஒருவன்தான். சிக்கலுக்கு விருட்சமே மல்லிகைதான். அந்த ஊரிலே, வெண்ணெய் லிங்கமாயிற்று. மல்லிகை தல விருட்சமாயிற்று. நாகைப்பட்டினத்து சாதிப் பூவிலே உள்ள நறுமணம் வேறு எந்த மலருக்கும் இல்லையென்பார்கள். சிக்கலும் நாகையும் அதிக தூரத்தில் இல்லை.

**அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை**
**திசைதோறும் முப்பத்தெண்**
**காதம் வீசிய அணி பொழிலுக்குச்**
**சஞ்சாரமாம் அளிகளையாலே**
**அழகிய சிக்கற் சிங்கார வேலவன்**

என்ற அருணகிரிநாதரின் திருப்புகழைப் படிக்கும் போது, சிந்தை மகிழ்கின்றது. குன்றாத வாழ்வை அருளும் குமரப்பெருமான் எதிரில் வந்து நின்று ஆடுகின்றார்.

அன்றைக்குச் சிக்கலில் உள்ள புஷ்பங்கள் போதவில்லை. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மல்லிகைப் பூவெல்லாம் அங்கே வந்து சேர்ந்தன.

திருவாரூர் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர், தோளிலே பையை எடுத்து மாட்டிக்கொண்டு, ரயிலில் ஏறினார். அவருக்குத் தெரியாமல் அவர் கூடவே வந்த தம்பி குப்புசாமி நாயனக்காரர், ''அண்ணன் எங்கே போறாரு?'' என்று ஒருவரிடம் மெல்ல விசாரித்தார்.

''வேறே எங்கே போவாங்க. சிக்கலுக்குத்தான் போவாங்க'' என்றார் ஒருவர்.

திருவாரூர் கலியாணத்தில் நாதஸ்வரக் கச்சேரிகள் நிரம்ப நடக்கவில்லை என்ற குறை, இசை வேளாளர்கள் எல்லோருக்குமே இருந்தது. அந்தக் குறைதீர சண்முகம் இன்று தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அத்தனை நாதஸ்வரக்காரர்களையும் 'நீங்கள் சிக்கலில் வந்து வாசிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

''அந்தப் புள்ளே சொல்றபோது நம்ப எப்படித் தட்டறது?'' என்றார் பெரிய நாதஸ்வரக்காரர்.

''ஏதோ, தம்பிக்கே நம்ப மேளம் கேட்கணும்னு தோணிடுச்சு'' என்றார் அவரைக்காட்டிலும் பெரியவர்.

''நான் போய் அங்கே ஊதவா போறேன். அது வந்து சொன்ன மரியாதைக்குத்தான்'' என்றார் இன்னொருவர்.

அன்று, எங்கு பார்த்தாலும் பீதாம்பரங்கள், எங்கு பார்த்தாலும் நெற்றி நிறைய விபூதி அணிந்தவர்கள், நல்ல ருத்ராட்சங்களும்,

நாயத்துகளும், மடித்துக்கட்டிய வேஷ்டியுமாக மகாவித்துவான்கள் பலர் சண்முகத்தின் வீட்டுவாசலில் அமைந்துள்ள காற்றுப் பந்தலிலே வந்திறங்கிய வண்ணமிருந்தார்கள்.

''தருமன்னேன், கை பரபரக்குது'' என்றார் முத்துராக்கு.

''அப்படின்னா, நீங்களும் சொறிஞ்சுக்குங்களேன்'' என்று தன் முதுகைச் சொறிந்துகொண்டே கூறினான் ஒத்துக்காரத் தருமன்.

முத்துராக்கு கேட்டது முதுகைச் சொறிந்துகொள்ள அல்ல. அம்மாப்பேட்டையார் தவுலில் ஏற்பட்ட ஆவந்த அநுபவம்தான் அவரை அவ்வாறு கேட்கத் தூண்டியது.

நடைகளிலே ராஜ நடை வேறு, மந்திரியின் நடை வேறு. தவுலில் ராஜநடை பேசவேண்டும். மத்தளத்தின் நடை பேசக்கூடாது.

சிலர் தவுலை மிருதங்கமாகவும், மிருதங்கத்தைத் தவுல் போலும் வாசிப்பார்கள். அதேபோல பாட்டை நாதஸ்வரமாக்கும் பண்பற்றவர்களும், வாய்ப்பாட்டுப்போல் நாதஸ்வரம் வாசிப்பதாகக்கூறும் பதில் வெட்டுகளும் உண்டு. இவை இரண்டும் பேச்சுக்கு நன்றாயிருக்கலாம், ஆனால் காதுக்கோ கருத்துக்கோ இனிமையாக இராது.

சில வடக்கத்தி வித்வான்கள் ஹார்மோனியத்தை வாசித்துக் கொண்டே சங்கீதம் பயின்றுவிடுவார்கள். பாவம் அவர்கள் வாய் திறந்து பாடினால் போதும், கமகமே இல்லாமல் கட்டையில் அடிப்பதுபோல் இருக்கும். அனுஸ்வரம் பேசாது. அபசுர சங்கீதத்தைத்தான் கேட்போம். ஆனால் தம்புரா சுருதியில் வாய்ப்பாட்டுப் பழகிய நமது மகாவித்துவான்களைப் பாருங்கள். தாயும் குழந்தையும், கண்ணனும் யசோதையும் வருவதுபோல் அவர்கள் பாட்டில் கூடவே அனுஸ்வரம் அமைந்து கமக சுத்தம் கல்லையும் உருக்கும். அன்று நாதஸ்வரம் வாசித்த அந்த மகாவித்துவான்கள் அத்தனை பெரும் தமிழ் நாட்டின் அருட்செல்வங்கள்; கலைப்பொக்கிஷங்கள். தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான சங்கீத ரசிகர்களைப் பரவசப்படுத்துபவர்கள். ஏழைக்குப் பாட்டின் இன்பமும், இறைவன் திருவருளும் கிடைக்கச் செய்பவர்கள்.

ஆம்! பன்னிரண்டு சோடி நாதஸ்வரங்கள் அங்கு வந்து நின்றதே, ஒரு தனி அழகாக விளங்கியது.

நாகை, தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலான இடங்களில் இருந்து தெய்வத் தமிழிசை ஓதும் தேவார மூர்த்திகள் பலர், வரிசையாக வந்து நின்றனர். சாமவேதம், யஜுர் வேதம், சைவ சித்தாந்தம், திருப்புகழ் என நான்கு கோஷ்டியினர் சுவாமியின் பின்னே வரிசை வரிசையாக வந்து நின்றனர்.

சுவாமிக்கு முன்பு முதல் வரிசையில் சிக்கல் கோவில் நாதஸ்வரக்காரர், சிதம்பரத்தார், பொன்மாரி பெய்த புகழ்ப்பதியார், இடைமருதூரார், திருக்குவளையார், வேதாரண்யத்தார், திருமருகல் நாயனக்காரர், திருவாரூர் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர், காரைக்கால்,



திருவையாறு, மாயூரம் முதலியவைகளில் இருந்து வந்த மகாவித்வான்கள் எல்லோரும் ஒருங்கே நின்றிருந்தனர்.

இந்தப் பெரிய சங்கீத மகாநாட்டின் நடுவே அதன் தலைவனாக விளங்கினான் சண்முகசுந்தரம். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். தலைவருக்குரிய ஆசனத்தில் அவன் அமரவில்லை; வரவேற்புப் பிரசங்கம் படிக்கவில்லை!

அழகிய மயில்கண் வேஷ்டியை மடி வைத்துக் கட்டிக்கொண்டு, பெரிய பீதாம்பரம் ஒன்றை அதன்மேல் சுற்றி, மேலே சட்டை போடாமல் தன் இரண்டு கைகளையும் கட்டியவண்ணம், அந்த வித்வான்களுக்கு எதிரில் பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தான் சண்முகம்.

அவன் அடக்கமாக நின்றாலும், அங்கிருந்த அத்தனை வித்வான்களும் உள்ளத்தால் அவனைத் தலைவனாகக் கருதினார்கள். அதை மரியாதை என்று சொல்வதைக்காட்டிலும், அன்பு என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களில் ஒருவருக்காவது சண்முகம் தங்களைவிட வயதில் சிறியவன் என்ற எண்ணமோ, உலகம் அவன் இசையில் மயங்குகிறதே என்ற பொறாமையோ சிறிதும் இல்லை. 'தங்கள் சமூகத்திலே பிறந்த ஒருவன், எத்திசையும் மெச்சும் வண்ணம், தேனொடு பால் கலந்ததுபோலத் தீஞ்சுவை எழுப்புகின்றான். அவன் எழுப்பும் நாதத்தில் தேவரும் மனிதரும் மயங்குகின்றார்கள்' என்ற பெருமைதான் கொண்டிருந்தார்கள்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

# சிக்கலில் வேல் வாங்கி, செந்தூரில் வினை தீர்த்தான்.



**அ**ன்று சிக்கலம்பதி ஒரு கோகுலம் போல விளங்கியது. சண்முகம் கண்ணனைப் போலக் காட்சியளித்தான். அத்தனை நாதஸ்வரக்காரர்களும், ஆயர்பாடியிலுள்ள கோபியரைப் போல அவனைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஆம், அதுவே இசையின் மகிமை. மனிதனை மெய்ம்மறக்கச் செய்யும் இசை மன்னனை, இவ்வுலகம் மெய்ம்மறந்து போற்றத்தான் செய்கிறது. இன்னொரு புறத்திலே இசை வேளாளர் வகுப்புப் பெண்மணிகள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். மோகனாவை ஒரு

செங்கமலப்பூ போலவும், அந்தப் பெண்கள் அதனைச் சுற்றி வரும் செவ்வண்டுகள் போலவும் மொய்த்துவிட்டார்கள். பரதம் ஆடிப் பழகிய கால்களால் அவர்கள் நடந்து வரும் நடை அழகும், சேலைக் கட்டழகும் கண்டு மயங்காதவர் இல்லை. அந்த தேவதாசிகள் வரும் அழகைப் பார்த்தால், வானுலகிலிருந்து இறங்கி வந்த அப்ஸர நங்கையர் கூட்டங்களோ என்று எண்ணும்படி ஆரவாரம் மிகுந்திருந்தது. அவர்களிடையே காம்போதி பதம், அடாணா, ஜதிஸ்வரம் முதலிய ராகங்கள் சம்பந்தமான சர்ச்சைகளும், லய சம்பந்தமான தர்க்கங்களும் நடைபெற்றன.

ஆனால் இந்தக் கூட்டத்தை எட்டி நின்று பார்த்துக்கொண்டேயிருந்த பல ஆடவர்கள் மோக விஷயமாய்ப் பேசி அவலயத்தைப்பற்றித் தர்க்கம் செய்துகொண்டிருந்தனர். வடிவாம்பாள் முதலியவர்கள் கூட்டத்தில் ஒரு புறத்தில் வந்தவர்களுக்குச் சுண்டல், நீர்மோர், பானகம் இவைகளைக் கொடுத்து உபசாரம் செய்துகொண்டிருந்தார்கள்.

அன்று சிங்கார வடிவேலன் வெள்ளிரத வாகனத்தில் வீற்றிருந்தான். அழகிய பூரணி ஜோடிக்காளைகள் இரண்டு, அந்த ரதத்தில் பூட்டப் பெற்றிருந்தன. மண்ணுக்குப் பெருமை மாடுகளினால் என்பதற்கிணங்க, அவை இரண்டும் ராமலட்சுமணரைப் போல இருந்தன. இரண்டும் ஒரே அச்சில் வார்த்தவை. கொம்பு, வால் நிறம், சுழி, நெற்றிச்சுட்டி முதலிய எல்லாவற்றிலும் ஒன்றையொன்று ஒத்திருந்தன. ராம லட்சுமணர்களைக் கறுப்பு, சிவப்பு என்று நிறம் பிரிக்கலாம். இந்தக் காளைகளை அதன் சொந்தக்காரர் ஒருவர்தான் அதனதன் வித்தியாசங்களைக் கண்டு பிரிக்கலாமேயொழிய வேறு யாரும் வித்தியாசத்தைக் காணமுடியாது. அவைகளின் நடையைக் கொண்டு வலத்து மாடு, இடத்து மாடு என்று வேண்டுமானால் பிரிக்கலாமேயல்லாமல் கண்ணால் பார்த்துக் காளைகளைப் பிரித்துவிட முடியாது. அத்தகைய ஜோடி ஒன்று சிங்கபுரத்திலிருந்து வந்திருந்தது.

அந்தக் காளைகளின் கழுத்திலே வெள்ளி ரதத்தின் நுகத்தடி பூட்டப்பட்டிருந்தது. வெள்ளி ரதம் என்று சொன்னால் வெள்ளியால் கிலிட்டுக் கொடுக்கப்பட்டதல்ல. வெள்ளி ரேக்குத்தாளை ஒட்டிப் புள்ளி புள்ளியாகக் கிழிந்து, அவலட்சணமாக 'பெப்பரப்பே' என்ற விளங்கும் சப்பரம் அல்ல. உண்மையிலேயே வெள்ளித்தகடு வைத்து, அழுத்தி, இழைத்து, மெருகு போட்டு ஷட் கோண வடிவில் அமைந்த சண்முக ரதம் அது. அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்ட வந்த ஐயனின் அருள் பொழியும் முகம் ஆறும், அனைவருக்கும் தெரியும் வண்ணம் அமைக்கப் பெற்ற ரதம் அது.

அதன் நடுவே, ஆயிரத்தெட்டு இதழ்கள் வைத்த தங்கத் தாமரைப் பூவும், அந்த பூவின் நடுவே மணிமேடையும், அந்த மேடையின் மேல் அமருவதற்கு நவரத்ன பீடமும் பொருத்தப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில்



செல்வச் செருக்கையும் பக்தியின் செழிப்பையும் ஒருங்கே எடுத்துக் காட்டும் அந்த வெள்ளி ரதத்தை அக்காலத்தில் காரைக்குடியில் இருந்த அருணாசல ஆசாரி என்னும் பெரியார் ஒருவர் தம் கை வன்மையைக் கடவுள் தொண்டில் காட்டி அமைத்திருந்தார். திரு தெய்வானை ஆச்சி என்ற சிவபுண்ணியச் செல்வி ஒருவர் அக்காலத்தில் நிரம்ப பக்திப் பணிகள் செய்து வந்தார்கள். அவர்கள் பெயரே ''தெய்வி'' ஆச்சி என்றாகிற்று. அவர்களிடம் எத்தனையோ பெயர்கள் ஆங்கிலக் கல்விக்குப் பணம் தாருங்கள் எனக் கேட்டும் அவர்கள், முறை கெட்ட கல்விக்குப் பணம் கொடுத்து ஒழுக்கம் கெட்ட சமுதாயத்தை உருவாக்குவது பாவம் என்று கருதினார்கள். ஆச்சியின் உபயம்தான் அந்த ரதம்!

அந்த ரதத்தின் கோணங்களில் எல்லாம் பாரிசிலிருந்து வந்த அழகிய லஸ்தர்கள் தொங்கின. அந்த வெள்ளி ரதத்தின் அழகைப் பார்ப்பதற்காகவே லட்சக்கணக்கான மக்கள் அங்கே திரண்டிருந்தார்கள். நாகைப் பட்டினத்திலிருந்து சிக்கல் வரையில் தெருக் கொள்ள முடியாத கூட்டம் கூடியிருந்தது. ரதத்திலே சிங்கார வடிவேலன் கொலு வீற்றிருந்தான். அவன் கையிலே சண்முகம் சாத்திய வினை தீர்க்கும் வெற்றி வடிவேல், சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆறு குணங்கள்போல் பகையான அசுரகுலத்தை அடக்கிய கூர்வடிவேலன், மனிதர்களுக்கு அமரத் தன்மையை அருளி, அமரர்குடி வாழ வைக்கும் ஆறுமுகன், அன்னையிடம் வேல் வாங்கும் விழா.

ஐயன் பவனியின் முன்னே அத்தனை நாதஸ்வரக்காரர்களும் நின்றார்கள்.

'மேளம் முந்தி வந்ததா? நாதஸ்வரம் முந்தி வந்ததா?'' என்று கேட்டார் ஒருவர்.

''மேளத்தைத்தானே நாதஸ்வரம் என்று சொல்கிறார்கள். ஆதலால் எது முந்தி வந்தது என்ற கேள்விக்கே இடமில்லையே'' என்றார் அவர்.

ஆனால் உண்மை அதுவல்ல. ''அதோ மேளம் அடிக்கிறார்கள். கொட்டு மேளம் கோவிலிலே'' என்று நாம் பேச்சில் வழங்குவதை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், மேளம் என்று அவர்கள் குறிப்பிடுவது தவுலைத்தான். நாதசுரம் என்ற வார்த்தையே இலக்கியத்தில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தென்படவில்லை. அதோடு நாதஸ்வரக் கச்சேரி ஒன்றில்தான் ஆரம்பத்தில் ஒத்து, அடுத்தது தாளம், அதற்கடுத்தது தவுல், அதற்குப் பிறகுதான் நாதஸ்வரம் வாசிப்பது என்பதும் வழங்கி வருகிறது.

சங்கீதக் கச்சேரிகளில் மிருதங்கத்தை வாசித்து பிறகு பாட ஆரம்பிக்க மாட்டார்கள். நாதஸ்வரம் ஒன்றில்தான் முதலில் தவுல் மேளத்தை தட்டுவது. இதேபோல் சின்ன மேளம் என்னும் நாட்டியத்திலும், முதலில் மேளப்ராப்தி என்ற பெயரால் தாளமும் மத்தளமும் தட்டி ஜதி சொல்வது வழக்கமாயிருந்து வருகிறது. தெய்வ சந்நிதானத்தில் தெய்விக வாத்தியத்

நியத்தை ஏற்படுத்த இசைக்கலைப் பெரியவர்கள் சில தாள வழிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அந்த முறையில் முதலில் தவுலில் குமுறிய பிறகுதான் குழல் சேரும். எல்லோருக்கும் சுவாமி புறப்பாட்டுவிட்டது என்பது தெரியும். அவ்வளவு பெரிய லய முழக்கத்தில் மக்களின் மனம் ஒருவழிப்படும். ஒருவழிப்பட்டு எல்லோரும் தெய்வீகத்தில் லயித்திருக்கும்போது, நாதஸ்வரம் ஆரம்பமாகும். அதே முறையில்தான் இன்று அம்மாப்பேட்டையார் வாசித்தார்.

மலையாளத்துப் பக்கங்களில் இன்றைக்கும் 'செண்டை' என்ற வாத்தியத்தை முழக்கித்தான், திருவீதிவலம் நடைபெறுகின்றது. தேர் புறப்படுவதற்கு முன்னே தப்புக்கொட்டித்தான் தேர் புறப்படுகிறது. லயத்திலிருந்து ஒரே மாதிரியான ஓசை எழுப்புவதன் மூலம் உள்ளத்தை ஈர்ப்பது ஒரு வழி. அம்முறையில் அன்று வாசித்த அம்மாப்பேட்டையார் மகாவித்துவான்களுக்கும் மகாவித்துவான். தவுலில் அவர் கையில் பேசுவது, எல்லோர் கைகளிலும் பேசாது. சிலர் கணக்கில் வல்லவர்களாயிருப்பார்கள். ஆனால் கையிலே சொல் பேசாது. சிலருக்குக் கையிலே ஓசையும் இருக்கும். ஆனால் கையிலே வியர்க்கும். வியர்வை தவுலையே சுருதி பிசகச் செய்துவிடும். ஒரு ஆவர்த்தனத்துக்குள் அரைக் கரண்டான் சுண்ணாம்பு காலியாகிவிடும். இந்தக் குறைகள் எல்லாம் இல்லாமல், தொட்ட இடத்திலே சுநாதத்தையும், கைபட்ட இடத்திலே பரபரப்பையும் உண்டாக்கக்கூடிய ஒரு பெரிய வாசிப்பு அம்மாப்பேட்டையாருடையது. ''ஜம்தரித.... ஜகதரித.... குகும் தரித.... தத்தணத'' என்று கண்ட நடையில் அவர் கை அமர்த்தியவுடனே அந்த நடைக்கே ஜயன் நடை போட்டான்.

அம்மாப்பேட்டையாரின் அழைப்பு ஜதிகள் முடிந்தவுடன் அங்கு நின்ற கோவில் நாதஸ்வரக்காரர் வயதில் நிரம்பியவரான சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரைப் பார்த்து வணங்கி, ''அவ்விடத்திலே ஆகட்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

''இல்லே தம்பி, முறைப்படி அங்கேயே நடக்கட்டும்'' என்றார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

எத்தனை பெரிய வித்துவான்களை விசேஷமாக வரவழைத்திருந்தாலும், கோவில் காணியாட்சிக்காரர்தான் முதலில் வாசிக்கவேண்டும். பிறகு அதைப் பின்பற்றித்தான் மற்ற நாயனக்காரர்கள் வாசிக்க வேண்டும் என்பது அவர்களுக்குள்ளே ஒரு கட்டுப்பாடு. பாவம், அவர் காணியாட்சிக்காரர். அவ்வளவு பிரமாதமாக வாசிக்கும் பெரிய வித்வான் அல்ல. அவருக்கு நாதஸ்வரத்தைத் தொடவே கை கூசியது. இத்தனை வித்வான்களுக்கு முன்னிலையில் எப்படி வாசிக்கப் போகிறோம் என்ற விதயம் ஏற்பட்டது. ஆயினும், தான் சிக்கல் வடிவேலனுக்குத் தொண்டன், அவன் மெய்யடியார் என்ற முறையிலே அவர் வாயிலிருந்து மெல்லிய குரல் எழும்பியது. நாட்டை ராக மல்லாரியைத் தொட்டுக் கொடுத்தார்.



முழங்கியது இசை, வழங்கியது முழவோசை. பன்னிரண்டு ஜோடி நாதஸ்வரங்கள் ஒரே சுருதியில் கம்பீர நாட்டை மல்லாரியை வாசிக்க ஆரம்பித்தன. அத்தனையும் திமிரி நாயனங்கள் ஆகலால் உச்ச சுருதியில் ஒன்றுசேர்ந்து எழுப்பிய இசையை என்னென்பது! தமிழகமே, என்னே உன் பெருமை! கர்னாடக சங்கீதமே என்னே உன் அருமை! இருபத்து நான்கு நாதஸ்வரக்காரர்கள் ஒரே அமைப்பில் அந்த மல்லாரியை வாசித்த அழகை அதன் இசை அமைப்பை எவ்வாறு எழுதுவது? உள்ளத்தில் எண்ணித்தான் பார்க்க வேண்டும். பட்டுக் கத்தரித்தது போன்ற நடையில் ஒவ்வொருவரும் தங்களது வலது கால்களால் தாளம் போட்டுக் கொண்டு, கால்மாறி ஆடிய வண்ணம் மல்லாரி வாசித்த அந்த தேவ நாதத்தில், தேவ சேனாதிபதியின் திருக்கோலம் புறப்பட்டது.

சிங்கார வடிவேலன் நடை மல்லாரிக்கு நர்த்தனமாடினான். அவ்வளவு தலைகளும் அசைந்தன. அவ்வளவு பேர்களுடைய உடல்களும் தாளத்தில் ஆடின. வான வீதியில் உயர்த்திப் பிடித்த இருபத்து நாலு நாதஸ்வரங்களும் மேல் ஸ்தாயிக்குச் செல்லும்போது உயர்ந்தும், மந்தரத்தில் தாழ்ந்தும் பக்கவாட்டில் ஆடியும் வாசித்தபோது எல்லோரும் மெய்ம்மறந்தார்கள்.

இரு கைகளையும் கட்டிய வண்ணம் நின்ற சண்முகம் அந்த இசையில் தன்னை மறந்தான். அவனது பாதம் முதல் தலை வரையில் பரவசம் ஏற்பட்டது. ஆனந்தத்தில் மிதந்தான். குழந்தையைக் கொஞ்சுவது போல, கிளி மழலை பேசுவதுபோல, குயில் ஓசை போல தித்திக்கும் இசையிலே எத்திக்கும் மயங்கின. ''தக்க திம்.... ததிம்.... தக்க திம்'' என்று இருபத்து நான்கு தவுல்கள் ஒரே நடையில் அமர்த்தின. அடேயப்பா, அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, ஒருவர் வாசிப்பது போலவே எல்லோரும் வாசிப்பதையும், அவர்கள் தவுல்களில் பேசும் சொற்கள் ஒரே அளவில் பேசுவதையும், அன்னிய நாட்டினர் ஒருவர் வந்து பார்க்க நேர்ந்தால், எங்கே காகிதம் என்று தேடுவார்கள். இது நோட்ஸ் எழுதி உண்டான பாட்டல்ல, வழி வழியே வருகின்ற பாடம் என அறிந்து தமிழ் நாட்டின் இசை வகுப்பை இதயம் கனிந்து புகழ்வார்கள். வாயார வாழ்த்துவார்கள்.

இந்தக் கோலாகலத்திற்கிடையே மோகனாவுக்கு ஒரு சிறு குறை தோன்றியது. இவ்வளவு அருமையான திருவுலாக் காட்சியைத் தரிசிப்பதற்கு வரவேண்டிய ஒருவர் வரவில்லையே என்று எண்ணினாள். எந்தத் திருவிழாவிலும் முன்னே நிற்கும் அவர், என் வீட்டுத் திருவிழாவுக்கு ஏன் வரவில்லை? வீடு வாசல் இல்லாத அவருக்கு விலாசத்தைத் தேடி எங்கு காகிதம் போடுவது? நினையாது முன்வந்து நிற்கும் தெய்வமாயிற்றே! எங்கே அவர்? பொங்கும் கடல் போன்ற இப்பூரண இசைப் பெருக்கை அந்த அகத்தியரல்லவா அள்ளிப் பருகவேண்டும் என்று அவள் எண்ணினாள். அப்போது.

சோழ வளநாடு ஆஹா ஹ்ம்
சோறு தரும்நாடு ஏஹா ஹ்ம்
ஈழம் மலையாளம் ஆஹா ஹ்ம்
ஏதும் இல்லைஈடு ஏஹா ஹ்ம்
பூவில் வண்டுபாடும் ஆஹா ஹ்ம்
பொன்னி நதிஓடும் ஏஹா ஹ்ம்
நாவில் நலங்கூடும் ஆஹா ஹ்ம்
நஞ்செய் விளைநாடு ஏஹா ஹ்ம்

என்று பல்லக்குத் தூக்கும் போகிகளின் பாட்டுக்கிடையே மாயவரம் சாலையில் ஒரு ஊர்வலம் வந்துகொண்டிருந்தது.

அந்தச் சாலையிலே பல தீவட்டிகள் முன்னே வர, அங்கும் ஒரு திருவுலா வருவதுபோல ஒரு பல்லக்கு வந்துகொண்டிருந்தது. அதற்கு அருகில் சிவபெருமானே திருவோலக்கம் எழுந்தருள்வது போல் ஒரு சைவத் துறவி நடந்து வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே அருளே வடிவமான பரமானந்தப் பரதேசியார் வந்தார். ''சன்னிதானம் சிவிகையில் வரலாமே!'' என்றார் பரதேசியார். ''அது நடந்து வரும் போது இது பல்லக்கில் வருவது சரியல்ல. இந்தக் கட்டை கட்டையில் ஏறி வருவது பொருந்தாது'' என்றார் துறவி. ''சைவமும், தமிழும் வளர்க்கும் பெரியவர் நீங்கள், வேதமும் கீதமும் வளர்க்கும் வித்தகர் நீங்கள். மகா சன்னிதானம் பல்லக்கில் வருவதுதான் சரி. இந்த வெள்ளை வேட்டிப் பரதேசி வீதியில் நடந்து வருவதே சரி'' என்று சொல்லிக் கொண்டே பரமானந்தர் வந்தார். மல்லாரி இசையைக் கேட்டவுடனே, பல்லக்கை நிறுத்தும்படி மகா சன்னிதானம் உத்தரவிட்டது. இரண்டு குட்டித் தம்பிரான்கள் அவருக்குக் கைலாகு கொடுத்துவர, சைவமே உருவெடுத்து நடந்து வருவது போல, அந்தச் சிவத்திருக்கோலம் சிக்கல் சன்னிதானத்தை நோக்கி விரைந்தது. கூடவே பரதேசியாரும் வந்தார்.

''என்னை அழைக்கவில்லை. என்னைப் பெரிய மனிதனாக மதிக்க வில்லை'' என்ற தகராறுகள் எல்லாம் கல்யாணங்களில்தாம். இறைவன் கோவிலில் எவரையும் யாரும் அழைக்க வேண்டுவது இல்லை. அத்தனை பேரும், அங்கு ஒன்றுசேரலாம். அம்மாதிரி வந்து சேர்ந்தவர்தாம் அந்தப் பெரியவர். ஸ்ரீலஸ்ரீ அருள் நாடும் அடிகளார் எனும் அப்பெரியவர் இசையின்பால் மிக்க அன்புடையவர்கள். இறை வழிபாட்டுக்காக நாள்தோறும் திருத்தலங்களுக்கு விசயம் செய்பவர்.

ஒரு சமயம் மாயூரம் கோவில் திருவிழாவிலே ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்தது. சண்முகம் சுவாமிக்கு முன்னே வாசித்துக்கொண்டிருந்தான். பண்டார சன்னிதிகள் சுவாமி கூடவே நடந்து வந்தார்கள். அன்று சண்முகத்தின் இசையிலே மயங்கி, அவனைத் தம் ஆதீன வித்வானாக்கி அவனுக்குச் சோடிசால்வை போர்த்திக் கௌரவித்தார்கள். அவன் எங்கும் செல்லலாம், எங்கு வேண்டுமானாலும் வாசிக்கலாம். ஆனால் வருடத்



தில் ஒரு நாள், சன்னிதானத்தில் வந்து வாசித்தால் போதும் என்ற உத்தரவும் தந்து அருளினார்கள். இதைப் பார்த்தவுடனே, அங்கிருந்த கோவில் நாதஸ்வரக்காரருக்குச் சிறிது முகம் கன்டியது. தன்னை அவர்கள் இவ்வாறு கவனிக்கவில்லையே, தான், வயதில் மூத்தவ னாயிற்றே என்ற மனத்தாங்கலும் வந்தது. இதை சன்னிதானம் நிருக்குறிப் பால் உணர்ந்தது. இரண்டு நாட்கள் கழித்து அந்த நாதஸ்வரக்காரரிடம் சன்னிதானம், ''சண்முகம் அன்று வாசித்ததைக் கேட்டாயா சுந்தரலிங்கம்? மிக நன்றாக வாசித்தானல்லவா?'' என்று கேட்டது.

''அது குழல் அமைப்புங்க!'' என்றார் அந்த வித்வான். இதைக் கேட்டது முதல் சன்னிதானத்தின் மனத்தில் ஏதோ யோசனை நடந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று ஒரு நாள், சண்முகம் மாயூரம் வந்திருந்தபோது 'சன்னிதானம் உன்னை உடனே பார்க்க விரும்புகிறது' என்று ஆள் வந்தது. சண்முகம் வந்தான். ''என்ன உத்தரவாகிறது?'' என்று கேட்டான்.

''இன்று பிரதோஷமாக இருக்கிறது. நீ சற்று வாசிப்பதுதானே?'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார்கள். சண்முகம் அங்கு வாசிக்க வரவில்லை. நாதஸ்வரத்தையும் எடுத்து வரவில்லை. ஆயினும் ''அதற்கு என்ன, உத்தரவானால் செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, ''சுந்தரலிங்க அண்ணன் நாதஸ்வரத்தைக் கொண்டுவாருங்கள்'' என்றான்.

அந்தக் கோவில் என்றைக்கு ஏற்பட்டதோ, அன்றைக்கு முதல் வாசித்து வரும் ஒரு ராசியான வாத்தியம் அது. மற்ற நாதஸ்வரங்களில் எல்லாம் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள துளைகள்தாம் இருக்கும். இந்த நாதஸ்வரத்திலோ ஏராளமான விரிசல்கள்! அதைக் கையில் வாங்கியவுடனே சண்முகம், அதைத் தடவிப் பார்த்தான். கையில் சிலாம்பு குத்தியது.

''ஏன், குழல் சரியில்லையா?'' என்றார்கள் சன்னிதானம்.

''குருமகாசன்னிதானமே எதிரில் நிற்கும்போது குழல் எப்படியிருந் தால் என்ன?'' என்று சொல்லிவிட்டு, அதையே எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது போல அன்று 'பூரிகல்யாணி' அதில் கொட்டியது. இத்தனை நாளாக தான் காற்றிலும், மழையிலும் கிடந்து தவம் செய்து வெடித்தது இதற்குத்தான் என்று, தான் செய்த பாக்கியத்தை எண்ணி ஆனந்தப்பட்டது அந்த நாயனம்!

கடலில் பிறந்த சங்கு, கண்ணன் வாய் பட்டவுடனே இசை முழங்குகிறது. காட்டில் பிறந்த வேணு கண்ணன் அதரம் பட்டவுடனே மதுரக் குழலாய் மாறுகிறது. அதைப்போல் காவேரியாற்றங்கரை நாயனத் துக்கு அன்று கடலோசைபோல் முழங்கியது. வாசிக்க வாசிக்க நனைந்து கொடுத்தது. அன்று அவன் வாசித்த பூரி கல்யாணியில் சன்னிதானம் பூரித்தது. சண்முகம் உள்ளே நின்று வாசித்துக்கொண்டிருந் தான். சன்னிதானம் வெளியே நின்றுகொண்டு யாரையோ எதிர்பார்த்

இருந்தார். அந்தச் சமயத்தில் சுந்தரலிங்க நாதஸ்வரக்காரர் ஓட்டமாய் ஓடி வந்தார். தனக்கு முன் வந்து யாரோ வாசிப்பதைக் கேட்டு பிரமித்து அப்படியே நின்றார். அவர் மயங்கி நிற்பதைக் கண்ட மகாசன்னிதானம், "என்ன சுந்தரலிங்கம், நாதஸ்வரம் கேட்கிறீரா?" என்றார்கள்.

சுந்தரலிங்க நாயனக்காரருக்கு விஷயம் புரிந்துவிட்டது. உள்ளே வாசிப்பவர் யார் என்பதை ஒரு பார்வையிலேயே அவர் அறிந்து கொண்டார்.

தமிழனின் ரத்தத்திலே நாதஸ்வரம் அந்த அளவுக்கு ஊறிவிட்டது. இன்றுகூட நம்மில் பலர் ரேடியோவில் நாதஸ்வரம் கேட்கும்போது இவர் இன்னார் என்று உடனே சொல்லி விடுகின்றோம். ஊதுவது ஒரே குழல். வெளிவருவது ஏழு சுரங்கள்தாம். அதிலே ஒருவருக்கொருவர் காற்றில் எத்தனையோ வித்தியாசங்கள். குழந்தையின் குரலைக் கேட்டு தாய் அடையாளம் புரிந்துகொள்வது போல, நாதஸ்வரத்தின் இசையைக் கேட்டுத் தமிழன் ஆளைப் புரிந்துகொண்டுவிடுகிறான். அதிலும் சுந்தரலிங்கம் அதையே தொழிலாகக் கொண்டவர். உள்ளே வசிப்பது மகாவித்வானாகிய சண்முகம்தான் என்பதை அறிந்துகொண்டார். அவர் கண்களில் கண்ணீர் மல்கியது. துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு சன்னிதானத்தை வணங்கினார்.

"சிக்கலாரில்ல....!" என்றார்.

"குழல் எது தெரியுமா?"

"கோவில் நாதஸ்வரமா? என் நாதஸ்வரமா?" என்று சொல்லி விட்டு உள்ளே நுழைந்த சுந்தரலிங்கம், உடனே போய்ச் சண்முகத்தைக் கட்டி அணைத்துக்கொண்டார்.

"தம்பி, நான் அபசாரம் செய்துட்டேன். சன்னிதானம் கேட்டதுக்கு, உங்க குழலிலே இருக்குது ரகசியம்னு சொன்னேன். அது தப்பு தம்பி. உங்க தன்னானந்தத்திலே இருக்குது ரகசியம்" என்று அவனைத் தழுவி மொழிந்தார். அப்போது சுந்தரலிங்கத்தின் கழுத்திலே ஒரு சால்வை விழுந்தது. அவருடைய நாதஸ்வரத்தைக்காட்டிலும், அவருடைய நல்ல தன்மையைப் பார்த்து மகா சன்னிதானம் அளித்த மரியாதை அது.

இவ்வாறு இசை வேளாளக் கலைஞர்களை ஆதரிப்பதையும் தங்கள் கடமையாகச் செய்து வந்தார்கள் அந்த ஆதீனகர்த்தர்கள்.

கோவில் என்றவுடனே, அடுத்து ஞாபகம் வருவது கொட்டுமேளம் தான். ஆதலால், அவ்வளவு கோவில்களையும் காக்கும் திருப்பணிக்கே காவி கட்டிய அவர்கள் இறைவன் இல்லம் இசைப்பள்ளியாக அமைய வேண்டும் என்பதற்காகவே நாதஸ்வரக் கலையை வளர்த்தார்கள். கலையைக் கடவுளுடன் இணைத்தார்கள். இன்று சிக்கலில் சண்முகம் திருவிழாச் செய்கிறான் என்பது அவர்கள் காதில் விழுந்தவுடனே, அவர்கள் சிக்கலுக்குப் புறப்பட நிச்சயம் செய்துவிட்டார்களோ? அல்லது பரமானந்தர்தான் பரிவுடன் அவர்களை அழைத்த வந்தாரோ? அறியோம்.



ஒருபுறம் சிங்காரவடிவேலன் ரதத்தில் ஆரோகணித்து வந்தான். இன்னொரு புறத்திலே சைவமே உருவாகிய தொண்டர் ஒருவர் துறவிகள் புடைசூழ வந்துகொண்டிருந்தார். அவர்களைக் கண்டவுடனே அங்கிருந்த இசை வேளாளர் கூட்டம் அவ்வளவும் அவரை வணங்கின.

நாதஸ்வரக்காரர்களுக்கு இந்த ஆதீனங்களிடம் இயற்கையாகவே பக்தி அதிகம். யார் சொல்லையும் தட்டுவார்கள். சன்னிதானங்களின் சொல்லைத் தட்ட மாட்டார்கள். ஏனெனில், தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள அத்தனை கோவில்களும் ஆதீனங்களில் சம்பந்தப்பட்டவை. நாதஸ்வர இசையை நாடு எங்கும் பரப்பிய பெரும் புண்ணியம் அவைகளைச் சார்ந்தது. அந்த இசைக்கலைஞர்களுக்கு கஞ்சிக் கவலையில்லாமல் சங்கீத மான்யம் கொடுத்துவந்தன அந்த ஆதீனங்கள். நல்ல பிள்ளைகளைப் பார்த்து நல்ல நாதஸ்வரக்காரரிடம் சேர்த்து "இவன் உன்னிடம் கற்கட்டும்" என்று அவர்கள் சொல்வதும் உண்டு. அவர்கள் ஏற்றிவைத்த இசை விளக்குகள் ஏராளம். ஆதலால் இசை வேளாளர்கள் இறைவனுக்கு அடுத்தபடியாக, பண்டார சன்னிதிகளை வணங்கி வந்தார்கள். இன்று எதிரில் அவரே வந்து நின்றவுடனே, அவர்களுக்கு வாசிப்பில் இன்னும் அக்கறை பிறந்தது. பரமானந்தப் பரதேசியாரைப் பார்த்தவுடன் பரவசமே ஏற்பட்டது. வாசிப்பு உச்சநிலையை அடைந்தது. சஞ்சாரங்களிலே தென்றல் சஞ்சரிப்பது போலவும், தெய்வமணம் சஞ்சரிப்பது போலவும், வெண்முகில் விண்ணிடையே சஞ்சரிப்பது போலவும் முகில் இருந்தது.

பெரிய வித்வான்களின் சன்னிதியில் தன்னை மறந்து ஆடிக்கொண்டிருந்தான் சண்முகம். அவனுடைய நாம்புகளில் எல்லாம் சப்த சுரங்களும் சஞ்சாரம் செய்தன. அவனுடைய ரத்தத்திலே இசை எழும்பித் துடித்தது. ஒவ்வொரு காலப் பிரமாணமும் அவனுடைய முட்டுகள் ஒவ்வொன்றிலும் ஒலித்தன. அவனே தவுலானான், அவனே இசையானான், அவனே இன்ப நிலையை எய்தினான். கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அதுவரை அவ்வாறு நின்ற சண்முகம், "தருமண்ணே கொண்டுவா என் நாதஸ்வரத்தை!" என்றான்.

"பிள்ளை, இது என்ன ஆவேசம்! நீங்க வாசிக்கக்கூடாது. வேண்டாம், வேண்டாம்!" என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்து தடுத்தார் நடேசன்.

"அண்ணே, என்னைத் தடுக்காதீங்க. இந்த அற்புதக் காட்சிக்கு நடுவிலே கையைக் கட்டிக்கொண்டு இருக்க நான் என்ன முதலாளியா? அத்தனை பேருக்கும் நான் பணம் கொடுத்தா அழைத்திருக்கிறேன்? நானும் ஒரு நாதஸ்வரக்காரன் என்பதால்தானே அவர்கள் வந்திருக்கிறார்கள்? அவர்களைத் திருமுன்னே சேவை செய்ய விட்டுவிட்டு, நான் மட்டும் சும்மா நிற்பதா? வேண்டாம், என்னைத் தடுக்காதீர்கள்!" என்று அவரிடம் கெஞ்சினான் சண்முகம்.

"இந்தாங்க பிள்ளை, என் உயிரு போனாலும் நான் உங்களை வாசிக்க விடமாட்டேன். முதல் காரியம் எனக்காக இந்தச் சாமி புறப்பாட்டை நீங்கள் பண்ணுவதே எனக்குப் பிடிக்கலே. எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. என்னைச் சாக்கிட்டு நீங்க நாளைக்கு கேசிலே மாட்டிக்கிட்டா?"

"அண்ணே, எந்த வழக்கு வேண்டுமானாலும் வரட்டும். நான் முதலிலே நாதஸ்வரக்காரன். எனக்கு அதனாலேதான் மதிப்பு. என்னிடத்திலே இருக்கும் இந்தச் சால்வையைப் பார்த்தா எல்லோரும் மயங்குகிறார்கள்? அல்ல! சங்கீதத்தால்தான் எனக்குப் பெருமை. சண்முகம் கலைத்தொண்டன். தன்னை மறந்து வாசிப்பான், சுமாராக இருக்கும், கேட்கலாம் என்ற எண்ணத்தில்தானே எல்லோரும் என்னை மதிக்கிறார்கள்? அந்த நாதஸ்வரம் என் கையிலிருந்து பறிபோய்விட்டால் நான் நடைப்பிணம்தான். என்னைத் தடுக்காதீர்கள். தருமண்ணே போ, ஏன் வாய் பார்த்துக்கிட்டிருக்கே? எடுத்துக்கொண்டு வா" என்றான் சண்முகம்.

காரைக்கால் நடேசனுக்கு சண்முகத்தின் வாதம் பிடிக்கவில்லை. "பின்னே, வழக்கு தீரட்டும். பிறகு, நீங்க ஊதவேண்டாமுன்னு யாரும் சொல்லல்லை" என்றார்.

"வழக்கு தீரும்வரையில் நான் வாசிக்காமலிருக்க முடியாது. இனி ஒருகணம்கூட நாதஸ்வரத்தைத் தொடாமல் இருந்தால் என் வாழ்க்கை தீர்ந்துவிடும். அண்ணே இந்த உலகத்திலே என்னைவிடப் படித்தவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. என்னைவிடப் பணக்காரர்கள் எத்தனையோ பேர் இருக்காங்க. என்னைவிட நல்லவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. அவுங்க அத்தனை பேரும் என்னை மதிக்கும் காரணம் என்ன அண்ணே? இந்தக் காம்போதியும், கௌளையும்தானே? அதை பறிகொடுத்துவிட்டு என்னை வாழச் சொல்லாதீங்க அண்ணே. சிங்கார வேலன் கையிலே வேலைக் கொடுத்துட்டோம். இனி என்னைக் காப்பாற்றுவது அவன் வேலை" என்று சண்முகம் சொல்லிக்கொண்டிருந்த போது வடிவாம்பாள் ஓடிவந்தாள். "நல்லா இருக்குதே மாப்பிள்ளே, வந்தவங்களை கவனிப்பீங்களா?.... .... நீங்க ஊத ஆரம்பிச்சுட்டா?" என்றாள்.

"இங்கே ஒருவரும் காப்பி சாப்பிட வரவில்லை அத்தை. நான் கவனிக்கவேண்டும் என்று யாரும் காத்திருக்கவில்லை. அத்தனை பேரும் என்னை வித்வான் என்று மதித்து வந்திருக்காங்க. அவங்க முன்னே கையைக் கட்டிக்கிட்டு இருக்க நான் வெறும் ஆளில்லே" என்று அவளைப் பாராமலே தரையைப் பார்த்துக் கூறினான் சண்முகம். மோகனா ஒருத்திதான், அவன் எது செய்தாலும் சரி என்ற முடிவுக்கு வந்து, சிறிதும் சலனமின்றி நின்றாள்.



இவர்களைத் தவிர, சண்முகம் "கொண்டு வா என் நாதசுரத்தை" என்று சொல்லிய அந்த ஒரு வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே அங்கிருந்த கூட்டத்திலே ஏற்பட்ட மாறுதல்கள் ஏராளம். அத்தனை வித்வான்களும் "தம்பி தங்களுடன் வாசிக்கப் போகுது" என்ற எண்ணத்திலே ஆனந்தம் அடைந்தார்கள். திருவிழாப் பார்க்க வந்திருந்த ஜனங்களோ, இதைக் கேட்டவுடன் கரகோஷம் செய்தார்கள். "இன்று நல்ல இசைவிருந்து நடக்கப் போகிறது" என்று ரசிகர்கள் கூட்டம் முண்டியடித்துக்கொண்டு முதலிடம் பிடிக்க ஓடிவந்தது. கூட்டம் நெருக்கித் தள்ளியது. அங்கிருந்த காந்த விளக்குத் தூக்குபவர்கள் கூட்டத்தின் இடையே காற்றில் அகப்பட்ட தென்னைமரம்போல் தள்ளாடினார்கள், தடுமாறினார்கள். ஆயினும் ஒருவராவது நகரவில்லை. "தோடு வாசிப்பாரு, சண்முகப்பிரியா ஊதுவாரு" என்று சொல்லிக்கொண்டே விளக்கைத் தூக்கியவண்ணம் நின்றார்கள், உள்ளொளி படைத்த அந்த உத்தமர்கள். அதற்குள் கோவில் சிப்பந்திகள் உள்ளே புகுந்து, கூட்டத்தைப் பார்த்து 'எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள்' என்று சொல்லிக் கை அமர்த்தினார்கள். நடுத் தெருவிலே, தெருப் புழுதியிலே, பட்டுக்கரை வேஷ்டி கட்டி, சரிகைத் துப்பட்டா போட்ட அந்தச் சங்கீத ரசிகர்கள் அத்தனை பேரும் தரையில் அமர்ந்தார்கள்.

முத்துராக்கு தவுலை ஓங்கி முழங்காலில் ஒரு குத்துக் குத்தினார். கணீர் என்று நாதம் முழங்கியது. அந்த இடிமுழக்கத்தையொட்டி, சண்முகத்தின் இசைமழை பொழியத் தொடங்கியது.

அதே கம்பீர நாட்டையில் மல்லாரி ஊத ஆரம்பித்தான். அந்த நாட்டையின் கம்பீரம் தம் நாட்டையே ஒரு படி உயர்த்தியது. இது வரையில் அலங்காரம் கலையாமல் அங்கு நின்ற அத்தனை நாதஸ்வர வித்துவான்களும் இப்பொழுது ஒரு பரபரப்பு அடைந்தார்கள். சூடு பிடித்தது. ஒருவர் சீவாளியை முடுக்கினார். ஒருவர் நறுக்கை நிமிண்டினார். இன்னொருவர் யானைத்தந்த ஊசியினால் அந்த நறுக்கைச் சுத்தம் செய்தார். இன்னொரு மகாவித்துவான், ஒத்துக்காரப் பையன் கையில் இருந்த நாதஸ்வரத்தைத் தன் கையில் வாங்கிப் பிடித்துக்கொண்டார். சண்முகத்தின் நாதக்குழல் எல்லோரையும் மயங்க வைத்தது. கண்டஜாதி திரிபுடை தாளத்தில் அமைந்த அந்த மல்லாரியை அவன் திரிகாலப் படுத்தினான். இதற்கே எல்லோரும் வியந்துகொண்டிருக்கும்போது, அவன் அதை நாலாவது காலத்தில் வெகு துரிதத்தில் வாசித்தான். அந்தத் துரிதத்திலும் ஸ்வரங்கள் குண்டு குண்டாய் விழுந்தன. படபடவென்று கரகோஷம் பொழிந்தது. அதே கரகோஷத்தில் ராகமாலிகையை எடுத்தான். கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம் முதலிய ராகங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வந்தன. ராகமாலிகை ஸ்வரங்களை விரைவாக வாசிப்பதும் இடையே அமர்த்தலாக ராகத்தைக் காட்டுவதையும் கண்ட ரசிக மக்கள் 'ஆஹா, ஆஹா' என்று ஆரவாரம் செய்தனர்.

ஆமாம், நெடுநாள் பிரிந்த குழந்தையைக் கண்டவுடனே, தாய்க்கு ஏற்படும் ஆவல், நெடுநாள் பிரிந்த காதலியைக் கண்டவுடனே, காதலனுக்கு ஏற்படும் இன்பம், பிரிந்தவர் கூடினால் பேசுதல் உண்டோ என்று கம்பர் கூறியிருப்பதுபோல, அன்றுவரையில் தன்னை விட்டுப் பிரிந்திருந்த நாதஸ்வரத்தை இன்று, அவன் கையில் எடுத்தவுடன் அது அவனைக் கொஞ்சியது. அவன் மடிமேல் குதூகலமாகத் துள்ளி விளையாடியது. அவனும் குழந்தையைக் கொஞ்சுவதுபோல அதைக் கொஞ்சினான், அள்ளிச் சொரிந்தான், அருவிபோல் இசை பொழிந்தான்.

''சபாஷ், சபாஷ்!'' என்ற குரல்கள் ஒலித்துக்கொண்டேயிருந்தன. கரகோஷம் செய்தால் வாசிப்புக் கெட்டுவிடுமோ என்ற எண்ணத்திலே பலர் கைதட்டாமல் அந்தப் பேரின்பத்திலேயே ஈடுபட்டிருந்தார்கள். தங்களை மறந்துவிட்டபோது கரகோஷம் செய்யத் தோன்றுமா? சிக்கலைச் சுற்றி ஐந்து மைல் தூரத்திற்கு அவன் இசைவெள்ளம் பெருகியது. தென்றல் காற்றிலே கலந்து, திருவாரூர் வரை வந்து கேட்டது. எவ்வளவு நேரம் இவ்வாறு வாசித்தான் என்று எவராலும் சொல்லமுடியாது.

சண்முகம் தன்னை மறந்தான், உலகை மறந்தான், தானே இசையானான். தவமே கடமையாய்க் கொண்டவர்களைப் போல இசைத் தவம் செய்யத் தொடங்கினான். ஒரு ராஜயோகிக்கு உரிய அத்தனை லட்சணங்களும் அவனிடம் ஓடி வந்தன. மூச்சை உள்ளே இழுத்து அடக்கி இசையாக வெளியே விடும் அவனைப் பார்த்தவர்கள் பன்னெடுங்காலம் பிராணாயாமம் செய்து எழில்பெற்ற இளவரசன் போல அவன் விளங்குவதைக் கண்டனர். அல்ல, அவர்களும் உடனே இசைப்பெருக்கில் இழுத்துக்கொண்டு போகப் பட்டனர். தாளத்தை விரலால் போட்டுக்கொண்டே நின்ற ஒரு வித்வான் தம்மை மறந்தவர். அவன் கார்வைகளில் நிரம்பியிருந்த விரலை மடக்கியபடி நின்றார். ஜீவநாதம் அத்தனை பேர்கள் செவிகளிலும் நிறைந்தது, உள்ளத்தில் நிரம்பியது.

எல்லோரும்தான் வாசித்தார்கள். இவர் வாசிப்பில் மட்டும் ஏது இத்தனை நாதம்? எச்சஸ்தாயியில் எல்லோரும் வாசித்தபோது, சிக்கல் முழுவதுமே கேட்காத நாதசுரம் இப்பொழுது ஏன் இவ்வளவு தூரம் கேட்கிறது? நாகைப்பட்டினம் சாலையில் வரும் வண்டிகளில் உள்ள மாடுகள் இந்த நாதத்தில் மயங்கி, காதைத் திருப்பின. நாகையிலே காற்றுக் கொட்டகைபோட்டு மேலே படுத்திருந்த பலர் இந்த நாதஸ்வரத்தில் உளம் நனைந்தார்கள். நிசப்தமான இரவு நேரத்தில் நீலாயதாட்சி அம்மன் கோவில் குளத்தில் வந்து எதிரொலித்துப் பலரை எழுப்பியது. இவ்வளவு தொலைதூரம் நாதஸ்வரம் கேட்கிறதே என்று வியந்தார்கள். 'முன்பெல்லாம் தவுலின் சத்தம்தான் நெடுந்தூரம் முழங்கும். இன்று நாதசுரமே நாலு மைல் தூரம் கேட்கிறதே இது என்ன



அற்புதம்' என்று பல இசை அன்பர்கள் வியந்தார்கள். சிக்கலில் வாசிக்கும் நாதசுரம் நாகையில் அதுவரை கேட்டதில்லை. இன்றுமட்டும் அந்த ஓசை இங்கு முழங்குவது ஏன் என வியந்தார்கள்.

ஆம். அன்று ஓசையே அதிகமாயிருந்தது. நாதம் அதிக ஜீவனுடன் இருந்தது. கடல் பொங்குவது போல் இசை பொங்கியது. வீச்சென்று இராமல் கம்பீரம் மிகுந்திருந்தது. முன்னைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிக நாதத்துடன் அன்று நாதஸ்வரம் விளங்கியது. திறந்த வெளியில் இவ்வளவு தூரம் களைகட்டியிருப்பதைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

வெளியூர்களிலேயே இவ்வாறு என்றால், அவனைச் சுற்றியிருந்த கூட்டம் எவ்வாறு இருந்தது எனச் சொல்லவும் வேண்டுமா? 'கண்டறியாதன கண்டேன்' எனும் வண்ணம் அவர்கள் இதுவரை கேட்டறியாத ஒன்றைக் கேட்டார்கள். இவ்வளவு குளுமை எங்கிருந்து வந்தது என ஆச்சரியப்பட்டார்கள். இசையில் ஏதோ புதுமையைக் கண்டார்கள். அருகில் நின்ற வித்வான்களோ தங்களை மறந்து அந்த மதுர ஓசையில் பித்துப்பிடித்தே நின்றுவிட்டார்கள். அந்த நேரத்திலே ''ஊதாதே நிறுத்து!'' என்று கோபத்துடன் ஒரு குரல் கேட்டது.

''யாரடா நிறுத்தச் சொன்னவன்? அடிச்சு விரட்டுடா அவனை!'' என்ற குரல்கள் சபை நடுவே இருந்து கிளம்பின.

''என்னை அடிச்சு விரட்டினாலும் பாதகமில்லை. சம்பிரதாயத்துக்கு விரோதமான காரியம் நடக்க நான் விடமாட்டேன். தம்பி.... சண்முகம் நிறுத்து'' என்று கூறிக்கொண்டே அவன் வாசித்துக்கொண்டிருந்த நாதஸ்வரத்தைத் தன் கைகளால் பறித்தார் நமது மதிப்புக்குரிய சாமிக்கண்ணு நாயனக்காரர்.

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

## பாரி பொழிந்தது பண்மாரி



**ப**க்கத்து வீட்டுக்காரர் நம்மைத் திட்டினால் கோபம் வருகிறது. நம் வீட்டில் உள்ள தந்தையோ தாயோ திட்டினால் அழுகை வருகிறது. இதுதான் அன்புத்தளை.

சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் தமது கையால், சண்முகத்தின் கையில் இருந்த நாதஸ்வரத்தைப் பறித்தவுடனே, சண்முகத்துக்கு இந்த உணர்ச்சிதான் ஏற்பட்டது. ஆத்திரம் ஏற்படவில்லை. தனது வணக்கத்

திருக்குரியவர், தன் வாழ்க்கைக்கே பெரும் பெருமை அளித்தவர், பங்காளிகள் பகையெல்லாம் மறந்து தனக்குப் பாரி நாயனத்தைப் பழக்கிக் கொடுத்தவர். இன்று தன் கையில் இருக்கும் நாதஸ்வரத்தைப் பறிக்கிறார் என்றவுடனேயே அந்த மகாவித்துவானின் மனம் குழம்பியது. உடம்பு முழுவதும் ஒரு நடுக்கம் பரவியது.

அடேயப்பா, எத்தனை பெரிய அவமானம்! கூட்டத்தின் நடுவே, ஒருவர் வாசித்துக்கொண்டிருக்கும் வாத்தியத்தைப் பறிப்பது என்றால், அதை யாரால்தான் சகிக்க முடியும்? இந்தக் காரியத்தை வேறு யாரேனும் செய்திருந்தால் முத்துராக்குவும் தருமனும் அவருடைய எலும்பை நொறுக்கியிருப்பார்கள். யார் காலில் விழுந்து தனக்கு இசைப் பிச்சை அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டானோ, அந்த மகாவித்துவானே இந்தக் காரியத்தைச் செய்துவிட்டார். ஏகலைவனின் கட்டை விரலை துரோணாச்சாரியார் வாங்கியது போல, தன் விரலையே சாமிக்கண்ணு நாயனக்காரர் கேட்டிருந்தாலும் சண்முகம் கொடுத்திருப்பான். 'சண்முகம் இன்று நீ வாசிக்காதே!' என்று அவர் தடுத்திருந்தால் இதயம் கனிந்து அதை ஏற்றுக் கொண்டிருப்பேனே. இத்தனை வித்வான்களுக்கு இடையே என்னை அவர் அவமரியாதை செய்யும்படி நான் என்ன தவறு செய்தேன் என்றுதான் அவன் குழம்பினான்.

கூட்டம் முழுவதும், ஊசி விழுந்தால் ஓசை கேட்கும்படி திகைத்து நின்றது.

நாதஸ்வரக் கச்சேரிகளிலே இம்மாதிரி வித்தைத் தகராறுகள் அக்காலத்தில் வருவது இயற்கை. திருவிழாக்களில் இரண்டு பெரிய செட்டு நாயனங்கள் போட்டிக்கு அழைக்கப்பட்டு இருக்கும். அவர்களில் ஒருவர் தன் தவுல்காரரோடு ரகசியமாகப் பேசி, திரடான ஒரு பல்லவியை வீட்டிலே தயார் செய்துகொண்டு வந்து வாசிப்பார். தாளத்தைக் காட்டாமல், பல்லவியை எடுப்பார். இதைப் பார்த்த இன்னொரு நாயனக்காரர், ''இது தப்பு'' என்று சண்டைக்கு வருவார். ஒருவர் ராகத்தின் சாயையை காட்டாமலே ஊதுவார். இன்னொரு நாயனக்காரர், ''நிறுத்துங்கள் நாதஸ்வரத்தை! ராகத்தின் சாயையைக் காட்டி ஊதுங்கள்'' என்று சொல்வார். இருவர் கட்சியிலும் ரசிகர்கள் சேருவார்கள். மாலை, மெடல், மரியாதை, தகராறுகள் எல்லாம் நடைபெறும்.

என்னதான் ஓர் இனமாக இருந்தாலும், தாயும் பிள்ளையுமாக இருந்தாலும், வித்தையென்று வரும்போது, ஒருவரைவிட ஒருவர் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்ற ஆவல் இருக்கத்தான் செய்கிறது. அந்தப் போட்டிகளிலே விஷயம் தெரிந்த மக்களுக்கும் அக்கறை உண்டு. இலட்சண ரசிகர்கள் என்ன முடிவு என்று துடிப்பார்கள். இலட்சிய ரசிகர்களோ, எப்போது முடிவு என்று துடிப்பார்கள்.

ஆனால், 'இங்கு சண்முகம், அவர்கள் எல்லோரும் வாசித்த மல்லாரியைத்தான் வாசித்தான். அதற்காக நாதஸ்வரத்தைப் பிடுங்கு-



வானேன்?' என்று கூட்டம் திகைப்புடன் அவர்களை நோக்கியது. வடிவாம்பாள் கண் இமைக்கவில்லை. மோகனா பெருமூச்சுக்கூட விடவில்லை. பரமானந்தப் பரதேசியார் இதைப் பார்த்துக்கொண்டே இருந்தார். சன்னிதானம் அமைதியுடன் நின்றது. சாமி தாங்குபவர்கள்கூட சாமியை ஆயக்காலில் வைத்துவிட்டு வந்து, எல்லோருடனும் உட்கார்ந்தார்கள்.

ராமபிரான் ஒரு சமயம் தன்னுடைய வில்லைத் தரையில் ஊன்றிக் கொண்டு, அதன் மேல் சாய்ந்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார். நெடுநேரம் கழித்து, வில்லின் அடிப்பாகத்தில் தரையில் ஏதோ மெத்தென்று இருப்பதைக் கண்டார். குனிந்தார். அதற்கு அடியிலே ஒரு தவளை சிக்கிக்கொண்டு இருந்தது. 'ஏ தவளையே, நீ ஏன் கதறியிருக்கக் கூடாது? இத்தனை நேரம் என் கையால் உன்னை அமுக்கிக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டாயே! ஏன் என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது?'' என்று வருத்தத்தோடு கேட்டார்.

''ஏ ரகுவீரா! காக்கும் திருமால் நீ. ஈ எறும்பு முதலான எல்லா ஜீவராசிகளையும் காக்க வந்த கடவுள் நீ. வேறு யாரேனும் எனக்குக் கொடுமை செய்தால் உன்னிடம் வந்து அலறுவேன். நீயே கொடுமை செய்யும் போது, நான் யாரிடம் போய் அலறுவது?'' என்றது அந்தத் தவளை. அதைப் போல வேறு யாரேனும் சண்முகத்துக்கு இம்மாதிரி செய்திருந்தால், இசை வேளாளர் கூட்டத்திடம் வந்து சொல்லலாம். அல்லது சாமிக்கண்ணு நாயனக்காரரிடம் ஓடிச் சாற்றலாம். இன்று அவரே தன் கையிலிருந்த நாதஸ்வரத்தைப் பறித்தவுடன், சண்முகம் ஆறாத்துயரத்தில் தலை குனிந்து நின்றான். அவன் கண்கள் கலங்கின. அந்தக் கலக்கத்தோடுகூட ஒரு முறை அவரைப் பார்த்தான். அந்தப் பார்வையிலே ''நான் செய்த தவறு என்ன?'' என்ற கேள்வி ஒலித்தது.

குழந்தையை அடித்த தகப்பன் மனம் குமுறுகிறது. சீடனைப் பிரம்பால் அடித்த குருநாதர் கரும் பலகையைப் பார்த்துக்கொண்டு கண்ணீர் விடுகிறார். சோதனைக்குட்பட்ட பக்தனைப் பார்த்துக் கடவுள் அவனை அதிக தூரம் சோதித்துவிட்டேன் என்று, தானே மூட்டை தூக்கப் புறப்படுகிறார். இவர்களைப் போலவே, சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரும் இருந்தார். அந்தச் சிவத்தொண்டரின் உடல் எல்லாம் வியர்த்தது. வாயிலிருந்து வார்த்தையே வரவில்லை. அவருடைய கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. இவ்வளவு பெரிய தண்டனையை சண்முகத்துக்குக் கொடுக்கவேண்டி வந்துவிட்டதே என்ற எண்ணம் அவருடைய முகத்திலே தெரிந்தது. அப்பொழுது இடிக்குரலிலே, 'இது எல்லாம் என்னாங்க? அந்தப் புள்ளே என்ன தப்பு செய்ந்தது?'' என்றார் அம்மாப்பேட்டையார்.

''ஏன், உங்களுக்கு எல்லாம் காது கேக்கலியா? இல்லே, தம்பி வாசிப்பிலே சொக்கிப் போனீங்களா?'' என்றார் சாமிக்கண்ணு நாயனக்காரர்.

இதற்குள், தவுல்காரர்கள் தவுலைக் கட்டினார்கள். நாதஸ்வரங்கள் தாளக்காரர்கள் கைக்கு மாறின. அத்தனை இசையன்பர்களும் அங்கு கூடி நின்றார்கள்.

"ஏன், என்ன விஷயம், என்ன நடந்துடுச்சு?" என்று இரண்டொருவர் கேட்டனர். பலர் விஷயத்தை ஊகித்துக்கொண்டு தங்கள் வாயால் சொல்லாமல் இருப்பதற்காக, சும்மா இருந்தார்கள்.

"ஒண்ணும் நடக்கல்லேன்னா, அது ஊதட்டும். நாளைக்கு சாதி சனத்திலே கூட்டம் கூடி என்னைக் கேள்வி கேட்கப்படாது!" என்றார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

"என்ன அண்ணே, விஷயத்தைச் சொல்லுங்க" என்றார் ஒருவர்.

'சொல்லறதுக்கு என்ன இருக்குது? இப்பொழுது தம்பி ஊதிய நாயனம் நாம் எப்பொழுதும் ஊதற நாயனமா? இது திமிரியா? அந்தக் குழாயுடைய ஓசையைக் கேட்டீங்களா? உங்களிலே ஒருத்தருக்காவது வித்தியாசம் புரியல்லியா?" என்று அவர் கேட்டவுடனே ரசிகர் கூட்டத்தில் இருந்து பெருத்த கரகோஷம் எழுந்தது.

"பார்த்தியா தம்பி, நாயனமே வேறே. அதனாலேதான் இவ்வளவு நாதம்" என்று ஆச்சரியத்துடன் பேசத் தலைப்பட்டார்கள்.

அதற்குள், "அந்த நாயனத்தை எடுத்து ஊதிக் காட்டுங்க!" என்ற வேண்டுகோளும் பல மூலைகளிலிருந்து கேட்டது. சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர், பக்கத்திலிருந்த தேர்முட்டியின் மீது ஏறி நின்றார். அவர் கையில் சண்முகத்தின் நாதஸ்வரம் இருந்தது. அந்த நாதஸ்வரத்தை உயர்த்திப் பிடித்தார்.

"ஐயா, எங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்குது. இந்தத் தாளத்தைத்தான் இந்த இடத்திலே தட்டுவது, இந்த ராகத்தைத்தான் இந்த நேரத்திலே வாசிப்பது என்று எல்லாம் வழக்கம் உண்டு. எங்களுக்குத் தாய் போன்றது சங்கீதம். அதிலே யாரும் கட்டுப்பாட்டை மீறியது இல்லே. இந்த நாயனம் பாரி மாதிரி இருக்குது. இது எங்கள் திருவாரூர் தியாகராஜாவுக்குத்தான் ஏற்றது. இதை இந்தத் தம்பிக்கு ஒரு சங்கீதப் போட்டிக்கு நான் சொல்லிக்கொடுத்தேன். தியாகராஜாவுக்கு முன்னாலே தான் வாசிக்கிறதுன்னு நான் உறுதியும் வாங்கிக்கிட்டேன். இன்னிக்கு யார்கிட்டேயும் கேட்காமே, கொண்டாந்துவச்சு இந்தத் தம்பி வாசித்து விட்டது. அதனால்தான் நான்...." என்று அவர் தான் தடுத்த காரணத்தைக் கூறப் புகுந்தார்.

மறுபடியும் கூட்டத்திலிருந்து கரகோஷம் எழுந்தது. சாமிக்கண்ணு நாயனக்காரர் "சத்தம்! சத்தம்!" என்று கையை அமர்த்தினார். அப்படியும் சந்தோஷ ஆரவாரம் குறையவில்லை. அப்போது, "சாமிக்கண்ணு, அதனால் உனக்குப் பெருமைதானே? உன்னிடம் கற்றுக்கொண்ட அந்த நாதஸ்வரக்காரரிடம்தானே மக்கள் மயங்கியிருக்கிறார்கள்" என்று கேட்டது மகாசன்னிதானம்.



சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் மிகுந்த அடக்கத்துடன் பின்வருமாறு மொழிந்தார்: "சன்னிதானத்துக்குத் தெரியாததில்லே! என்னிக்கு இந்த ஏழை திருவாரூரிலே பிறந்தேனோ, அன்னிக்கே எனக்கும் பெருமை ஏற்பட்டுவிட்டது. முதலில் 'வாங்கா' ஊதி தியாகராஜாவுக்குத் தொண்டு செய்ய ஆரம்பித்தபோதே நான் பெரியவனாகிவிட்டேன். பேரும் புகழும், புண்ணியமும் அடுத்த பிறவி உள்ளவங்க தேடிக்கவேண்டியது. ஆரூரிலே பிறந்தவனுக்கு அடுத்த ஜன்மமே கிடையாது. ஆனதாலே எனக்குப் பேர் புகழ் இதிலெல்லாம் ஆசையில்லை. தவிரவும், பிறக்கும் போது வைத்த பேரே நிற்காத ஊரிலே, பேரையெடுத்துப் பிணமென்று பேரிடும் ஊரிலே, நடுவிலே வந்த பேரா நிற்கப்போகுது? எனக்குப் பேர் வேண்டாம் சாமி, கடமை நின்னால் போதும். ஆனதாலேதான் இந்த நாயனத்தை யாரைக் கேட்டுத் தம்பி ஊதிச்சுன்னு கேட்கிறேன்" என்று ஆத்திரத்தோடு கூறிவிட்டு, சண்முகத்தைப் பார்த்தார் சாமிக்கண்ணு.

அதுவரையில் விஷயம் என்னவென்று விளங்காமல் இருந்த சண்முகம், உடம்பை ஒரு தடவை உதறிக் கொடுத்துக்கொண்டான். துள்ளிக் குதித்து ஏறினான் தேர்முட்டிமீது.

"அவங்க சொல்றது சரியில்லை. நானும் அவுங்க மரபிலே பிறந்தவன்தான். சங்கீத சம்பிரதாயத்தைக் காப்பாற்றும் கடமை எனக்கும் ரத்தத்திலே ஊறியிருக்கிறது. சம்பிரதாயத்துக்கு விரோதம் என்றால் இந்தச் சண்முகம் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றுவான். ஆனால் இந்த விஷயத்திலே அவங்க சாட்டின குற்றம் சரி அல்ல. ஏன் என்றால், இது திருவாரூர்ப் பாரி நாயனமே அல்ல. திருநாகேச்வரத்தில் போட்ட புது நாயனம். பாரி நாயனம், திமிரி ஆகிய இரண்டுக்கும் நடுவாக இதன் நாதம் அமைந்திருக்கிறது. திருவாரூர்ப் பாரியை, தியாகராஜாவுக்கே உரித்தான அதை நான் உபயோகம் செய்துவிடவில்லை. ஆனால் அண்ணன் சந்தேகப்பட்டதிலும் தப்பு இல்லை. அன்று கதிர்காமத்திலே என் அத்தைகூட இதைப் பார்த்துச் சந்தேகப்பட்டார்கள். அதுவும் தவிர, எங்கெங்கே இனிமை இருக்கிறதோ அங்கங்கே ஓடிப்போய் அவை களைச் சேகரிப்பதுதான் கலைஞனின் வேலை. இந்த நாதஸ்வரத்தில் நாதம் நிறைந்திருக்கிறது. திமிரி ஆயிரம் பேருக்குக் கேட்டால், பாரி பதினாயிரம் பேருக்குக் கேட்கும். ஒரே சமயத்தில் அதிகமான ரசிகர் களுக்குச் சேவை செய்ய இதனால் முடியும். இதில் ஓசை நயமாயிருக் கிறது. இதை நான் ஊதியது தவறா?"

"அப்படிப் பார்த்தால் உலகத்திலே எதுவுமே தப்பு இல்லீங்க. ஆனால் எங்களைக் கேட்டுப்புட்டிலே வாசிக்கணும்? எல்லோரும் திமிரியை வச்சுக்கிட்டு ஊதறபோது, நீங்க ஒருத்தர் மாத்திரம் திமிர் பிடிச்சுப்போய் இதை வச்சுக்கிட்டு ஊதலாமா?" என்றது ஒரு குரல். இந்த அதிரடியான பேச்சைக் கேட்டு எல்லோரும் அங்கு பார்த்தனர். அங்கே மீசையில் கை போட்ட வண்ணம் நின்றார் திருவாரூர் கோடி வீட்டுக் குப்புசாமி.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று சண்முகம் அவரைப் பார்த்துக் கேட்டான்.

அதற்குள் அந்த மனிதருக்குப் பயம் வந்துவிட்டது. "நான் ஒன்னும் சொல்லலீங்க. எங்க கிட்ட சொல்லாமே இதை வாசிக்கலாமான்னு இவுங்க கேட்கிறாங்க" என்று பக்கத்தில் இருந்தவரைக் கையைக் காட்டினார்.

"ஆமாம், உங்களிடம் சொல்லியிருக்கத்தான் வேண்டும்" என்றான் சண்முகம்.

"அப்படின்னா உங்ககிட்டேயிருந்து எங்கண்ணன் அதைப் பிடுங்கினதும் சரிதானே?" என்று தகராறு வந்தவுடன், உறவு கொண்டாடினார் குப்புசாமி.

"முளுக்கக் கேளுங்க அய்யா. ஏன் முந்திரிக்கொட்டையாட்டம் துள்ளுறீங்க?" என்றான் தருமன்.

"தருமண்ணன்" என்று சண்முகம் அதட்டவே, அவன் அடங்கினான்.

சண்முகம் குப்புசாமியைப் பார்த்து அமரிக்கையாக "நான் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், இந்த நாதஸ்வரத்தை எடுத்து வாசிக்கப் போகிறோம் என்று எனக்கே தெரியாது. தரும அண்ணன்கிட்ட 'வாத்தியத்தை எடுத்து வாங்க' என்றுதான் சொன்னேன். அவரு இந்த நாதஸ்வரத்தை எடுத்துக்கிட்டு வந்துட்டாரு" என்றான்.

"கேப்பையிலே நெய் ஒழுகுதுன்னா, கேட்கிறவனுக்குப் புத்தி எங்கே போச்சு? நீங்க சொல்லாமலா கொண்டாந்துட்டாரு அவரு?" என்று கேட்டுவிட்டுக் குப்புசாமி மீசையை முறுக்கினார்.

"குப்புசாமி அண்ணே! நீங்க சும்மா இருங்க. அவுங்க வாசிக்கிறவங்க, பேசிக்கிறாங்க, உங்களுக்கென்ன?" என்றான் குறும்புடன் தருமன்.

"பின்னே நீ ஏனய்யா அதைக் கொண்டாந்தே?" என்று சொல்லிக் கொண்டே குப்புசாமி தருமன்மீது பாய்ந்தார். தருமன் யமதருமனாகி அவர் மீது பாயத் தொடங்கினான்.

"தருமண்ணே, நில்!" என்று சண்முகம் அதட்டினான். ஓடிப்போய்த் தருமன் அருகில் நின்றான்.

"ஏன் அவர் மேல் பாய்கிறீர்கள்? நாதஸ்வரத்தை அவர் எடுத்துக் கொண்டுதான் வந்தார். வாசித்தவன் நான். நீங்கள் என் மேலல்லவா பாய வேண்டும். அவர் இதைக் கொண்டுவந்ததும் குற்றமல்ல. நான் இதை வாசித்ததும் குற்றமல்ல."

"அப்படின்னா? பெரிய வித்வான்கள் எதைச் செய்தாலும் குற்றமில்லியா?" என்றார் குப்புசாமி. அதோடு கூட்டத்தைப் பார்த்து ஒரு முறை கண்ணையும் சிமிட்டினார்.

"குப்புசாமி அண்ணே! நீங்க சும்மா இருங்க. நான் பெரியவங்களையே கேட்கிறேன்" என்று சொல்லி, மரியாதையுடன் சாமிக்கண்ணு



நாயனக்காரரிடம், "அண்ணே, இது திருவாரூர்ப் பாரி நாயனமா? நீங்களே சொல்லுங்கள்!" என்றான் சண்முகம்.

"நான் திருவாரூர் நாயனம்னு சொல்லலியே. அதை அடிப்படையாகக் கொண்டது என்பதுதான் என்னுடைய வாதம்" என்றார் சாமிக்கண்ணு.

அப்போது "ஏனப்பா சண்முகம், இந்த நாதஸ்வரம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்றார் பரதேசியார்.

பரதேசியார் பேச ஆரம்பித்தவுடனே கூட்டத்தில் இருந்த குழப்பம் அடங்கியது. குப்புசாமிகூட அடக்கத்துடன் நிற்பதாக பாவம் பிடித்தார்.

"சாமி, உங்களுக்குத் தெரியாதா? என்னையா கேட்கிறீர்கள்? அன்று கதிர்காமத்திலே நீங்கள் அடிபட்டுக் கிடந்தபொழுது, சஞ்சீவிச்சாலைக் கொண்டுவந்தது இந்த நாதஸ்வரம். அன்று ஆவேசத்தில் நான் வாசித்ததும் இதைத்தானே! சிங்கபுரம் மைனர் எனக்குப் பரிசு அளித்ததல்லவா இது. இதோ மைனரே இருக்கிறார். எங்கே செய்தது என்று அவரையே கேளுங்கள். இதையும் அன்று கதிர்காமத்தில் நான் ஆராய்ந்து பார்க்கவில்லை. ஊதினேன். ஆனால் அதில் அற்புதமான நாதம் இருப்பதை மட்டும் உணர்ந்தேன். அப்படியே அது கிடந்தது. இன்று 'நாயனத்தைக் கொண்டுவா' என்று சொன்னவுடனே தருமண்ணன் இதைக் கொண்டுவந்து இருக்கிறார். சிக்கல் சிங்காரவேலன் சன்னிதியிலே இன்று நடுப்பாரி நாயனம் 'நடைமல்லாரி' அரும்பியிருக்கிறது. இதன் ஓசை, இன்று எல்லோரையும் மயக்கி இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இசையில் நாம் எதிர்பாராமலே அபிவிருத்தி ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாதா?" என்று கேட்டான். அங்கிருந்த இசை மன்னர்கள் எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

"அது என்னமோ, கொஞ்சநேரம் எங்களையும்தான் மயக்கிடுச்சு தம்பி" என்றார் அவர்களில் பெரியவராகிய சிதம்பரத்தார்.

"அப்படியிருக்கிறபோது, அதை ஏன் தடுக்கணும்? இதயத்தைத் தொட்டிருக்கிறது. இன்ப நிலையைத் தட்டி எழுப்பியிருக்கிறது. புலன்களைப் பரவசப்படுத்தியிருக்கிறது. பூரிப்படையச் செய்திருக்கிறது இதன் நாதம். நீங்கள் ஏன் இதை ஒப்புக்கொள்ளக்கூடாது?" என்றான் சண்முகம்.

"அது எப்படிங்க? அவுங்கள் எல்லாம் பெரியவுங்க. ஊதாமல் நடந்தே நல்லபேரு வாங்கிடுவாங்க. என்னைப்போல் உசிரைக் குடுத்து ஊதறவனுக்கில்லே பிழைப்புப் போயிடும்! இது ஒரு நாளிலே முடிவு கட்டற விஷயமா?" என்றார் குப்புசாமி. "ஏ குப்புசாமி! நீ சும்மா இரு. குறுக்கே பூந்துக்கிட்டு" என்றார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

"என்றைக்காவது ஒரு நாள் முடிவுகட்டித்தானே ஆகவேண்டும். புதுமை பிறந்துவிட்டது. இனி அதைத் தடுக்க முடியாது. புதுமையை

பெய்துவிட்டது. ஆற்றிலே நீரை ஓடாதே என்று சொல்லமுடியுமா?'' என்றான் சண்முகம்.

''அது எப்படிங்க. புது வெள்ளம் ஆளையே அடிச்சிக்கிட்டு ஓடிச்சின்னா? நாளைக்கி இன்னொருவர் மூங்கில் குழாயிலே பண்ணி ஊதுவாரு. அதையும் ஏற்றுக்கொள்ள முடியுமா?'' என்றார் குப்புசாமியின் கூட்டாளி.

''மூங்கில்தானே புல்லாங்குழல். அதில் நாம் ஊதவில்லையா? அண்ணேன், மூங்கில் குழாய்க்கும் முத்தின மரத்துக்கும் வித்தியாசம் உண்டு. நமது கர்னாடக சங்கீதம் முத்தின மரம். அதிலே எத்தனையோ பறவைகள் வந்து அமருகின்றன. அந்த ஒரு நிழலில்தான் நாம் இளைப்பாறுகிறோம். ஆரம்பத்திலே யாரோ நாலு மகான்கள் கல் நாயனத்தை வைத்துக்கொண்டுதான் கலைத்தொண்டு புரிந்திருக்கிறார்கள். கும்பேசுவர சுவாமி கோயில்லே இன்றைக்கும் கல்நாயனம் இருக்கிறது. இப்பொழுது நாம் கல்நாயனத்தை வச்சுக்கிட்டா ஊதறோம்?

''அதற்குப் பிறகு, வெண்கல நாயனம் வந்திருக்கிறது. அதன்பின் யானைத் தந்தத்திலும் நாயனம் செய்திருக்கிறார்கள். நம்ம சாமிக்கண்ணு அண்ணன் வீட்டிலேகூட ஒண்ணு இருக்கு. அவுங்க இப்ப அதையா வச்சு ஊதறாங்க? பிறகு தங்க நாயனம், வெள்ளி நாயனம் என்றெல்லாம் மகாராஜாக்கள் பரிசு அளித்திருக்கிறார்கள். நாம் இப்போது என்ன செய்கிறோம்? சந்தனம், கருங்காலி, வேங்கை, தோதகத்தி முதலிய மரங்களில் முத்தின மரம் பார்த்து, நாற்பத்திரண்டு வயதான மரத்தில் நாயனம் போடுகிறோம். நான் வெண்கலத்தில் இருந்ததைப் பித்தளையாக்கினால் நீங்கள் கோபித்துக்கொள்ளலாம். வெள்ளியை ஈயமாக்கினால் ஆத்திரப்படலாம். இசையை இரும்பாக்கினால் ஏசலாம். நான் இப்போது என்ன தவறு செய்தேன்?

''ஆறு அறிவும் பிறக்கிற இதய கமலத்தைப் போல ஆறு சுரங்களையும் பிறக்க வைக்கும் ஆதார சட்ஜத்தை வர்ஜம் செய்தேனா? அல்லது வர்ஜஸ்வரங்களை வைத்து ஊதினேனா? கலையை மாற்றவில்லை, கருவியை மாற்றியிருக்கிறேன். நம் சங்கீதம் பாழும் கிணறு அல்ல. அது வற்றாத கங்கை. வளம் தரும் பொன்னி. அதிலே நாள்தோறும் புதுமை கலந்துதான் அது இன்றும் புது மெருகுடன் இருக்கிறது.

''அந்த முறையில் அமைந்தது இந்த நாதஸ்வரம். இதை ஊதலாம் என்று நீங்கள் சொன்னால் ஊதுகிறேன். இல்லை, நான் இதை ஊதுவது தவறு என்று நீங்கள் தீர்மானித்தால், அது உண்மை என்று என் அறிவுக்குப் பட்டால், இந்தச் சண்முகம் இன்று முதல் நாதஸ்வரத்தையே தொடுவதில்லை'' என்று அவன் கூறியவுடனே அந்தக் கூட்ட முழுவதிலும் ஒரு கலகலப்பு உண்டாயிற்று.

''நாகபட்டினத்துக்கு கேட்டது சார். நான் வண்டியைக் கட்டிக்கிட்டு ஓடியாந்தேன்'' என்றார் ஒருவர்.



''கேட்கக் கேட்க அலுப்புத் தட்ட வில்லையே'' என்றார் அடுத்தவர்.

''திமிரியைத்தான் ஊதுவோம் என்று உள்ளவர்கள், அதை வைத்துக்கொண்டிருப்பதிலும் குற்றமில்லை. அதற்காக இதை ஊதக்கூடாது என்று சொல்வது சரியில்லை'' என்றார் இன்னொருவர்.

''இவ்வளவு நல்ல வாத்தியத்திலே இது என்ன சண்டை'' என்று சிரித்தார் வேறொருவர்.

அப்பொழுது பரமானந்தப் பரதேசியார், தேர்முட்டி மீது ஏறினார். ''இசையன்பர்களே! இந்த விஷயத்திலே நான் சற்றுத் தலையிடலாமா?'' என்று அங்கிருந்த நாதஸ்வர வித்வான்களை நோக்கி வினவினார்.

உடனே ''இது எங்க சாதி சம்பந்தப்பட்ட விஷயமுங்க'' என்றார் குப்புசாமி.

''நானும் உங்கள் சாதிதானேயப்பா?''

''என்னா! நீங்க இசை வேளாளரா?''

''ஆமாப்பா. நீ பிறப்பால் இசை வேளாளன், நான் தொண்டால். நானும் இசையைத்தான் நெஞ்சமெனும் நிலத்திலே வேளாண்மை செய்து, இறைவன் அருளை அறுவடை செய்கிறேன். சாமிக்கண்ணு நாயனக்காரர் ஒரு பெரிய உத்தமர். இந்தக் குற்றத்திற்கு அவரும் உடந்தை என்று பிறர் சொல்லக்கூடாது என்ற எண்ணத்தில் அவரே கடலைக் கடைந்து அமிர்தம் உண்டாக்கி, தர்மம் தலைதூக்கப் பார்த்திருக்கிறார். அவர் செய்தது சரி. ஆனால் எப்பொழுது கலைக் கடல் குழம்பியதோ அந்தக் குழப்பத்திலிருந்து அமிர்தம் பிறப்பதுதான் நல்லது. நானும் என் ஜன்மம் முழுவதும் நாயனம் கேட்டிருக்கிறேன். அதில் மயங்கியிருக்கிறேன். திமிரி நாயனம் தெய்வ சன்னிதிக்கே அழைத்துச் சென்றுவிடும். அதில் சுருதி அதிகம். ஊதும்போது ஒரு பிடிப்பு ஏற்படும், மனம் ஒரு வழிப்படும். வாசிப்பவன் ஒரு வழிப்பட்டால், ரசிகர்கள் வசமாகி விடுவார்கள். நமது சண்முகமும் இத்தனை நாளாக அதை வாசித்துத்தான் நாம் அத்தனை பேர்களும் ஆனந்தமடைந்திருக்கிறோம். ஆனால் இன்று அவர் வாசித்த நடுப் பாரி நாயனம் சுருதி சற்றுக் குறைவாக இருக்கிறது. அதனால் குளுமை அதிகம் இருக்கிறது.

''அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டுக்கொண்டு, ஆற்றலாக சஞ்சாரம் செய்யவும், அந்தச் சஞ்சாரத்திலிருந்து பிர்க்காக்களுக்குப் போகவும், ஏராளமான மக்களுக்கு இசையை விநியோகம் செய்யவும் இது ஏற்றதாக இருக்கிறது. குடும்பம் பெரிதானால் பெரிய வீடு கட்ட வேண்டியதுதானே? நல்லதை எடுத்துக்கொள்ள மாட்டோம் என்பது நம் சம்பிரதாயமல்ல. சிவபெருமான்தான் உத்கிருஷ்டமானவர். அவருடைய திருக்குமாரன்தான் முருகப்பெருமான். அவன் தந்தைக்கே உபதேசம் செய்துவிட்டான். இதைக் கண்டு பிள்ளை தந்தையைக் காட்டிலும் கெட்டிக்காரன் என்பதற்காக, நாம் தந்தையை வெறுத்து விட்டோமா?

''நடுப்பாரியால் திமிரியின் மதிப்புக் குறைந்துவிடும் என்பதும் அப்படித்தான். சங்கீத பரம்பரையிலே ஒரு மகாவித்வானின் சீடன் அவரைக்காட்டிலும் மேம்பட்டவராக வந்துவிடுகிறார். குருவுக்கு மிஞ்சிய சீடன் என்பதற்காக பழைய வித்வானின் பெயர் மங்கிவிடாது! நமக்குச் சிவபெருமானும் வேண்டும், முருகனும் வேண்டும். திமிரியும் வேண்டும், நடுப் பாரி நாயனமும் வேண்டும். நம் சங்கீத ரத்னாகரத்தை அள்ளிப் பருக இன்னும் ஆயிரம் ஆயுதம் கிடைத்தாலும் போதாது. முன்பு கீர்த்தனைகளில் நிரவல் செய்தால், ஸ்வரப் பிரஸ்தாரம் செய்தால் தவறு என்று சொல்லப்பட்டது. இன்று கீர்த்தனைகளிலே நிரவலும், ஸ்வரப் பிரஸ்தாரமும் நம்மிடையே பலமாக இருக்கிறது. அதைத் தவறு என்று யாரும் சொல்லவில்லை.

''சங்கீதத்தைச் சிற்றின்பத்துக்கு உபயோகிப்பதும், அதைக் காமக்களையாக்குவதும் தவறு. உள்ளத்தை உயர்த்தும் தன்மையிலிருந்து நம் கர்னாடக சங்கீதத்தை யார் மாற்றினாலும் அவர்கள் சம்பிரதாய விரோதிகள். சமூகத்தின் எதிரிகள். பல மலர் தேடி மாலை தொடுக்கும் பக்தனைப் போல நம் இசைவாணர்கள் இசைக்குப் பல செல்வங்களைத் தேடித் தந்திருக்கிறார்கள். பிலாக் நம்முடைய ராகமா? சிந்து பைரவி, கானடா, கல்யாணி, காமாஸ், காப்பி இவைகள் எல்லாம் ஆதியில் நம் கர்னாடக சங்கீத ராகங்களா? மாமியார் வீட்டுக்கு வந்த மருமகளைப் போல, இவைகள் எல்லாம் கர்னாடக சங்கீதத்திற்கு வடக்கேயிருந்து வந்த செல்வங்கள். இவைகளைப் போஷித்து நமது பண்பையூட்டி நம் வீட்டுப் பெண்ணாக்கிக்கொண்டோம். அவ்வாறு ஒவ்வொரு வித்வானும், வாக்கேயகாரர்களும் சேர்த்து வைத்த செல்வம்தான் கர்னாடக சங்கீதம்.

''காலத்தையொட்டி மாறுபாடுகள் எல்லாவற்றிலும் வரவேண்டும். அடிப்படையை மாற்றுவதுதான் தவறு- அழகு செய்வது தவறல்ல. இந்த முறையில் நடுப்பாரி நாயனம் நாம் வரவேற்க வேண்டிய ஒன்று. அன்று நம் நாட்டிற்கு ஒருவர் புகழ் தேடித்தந்தார். அவர் பெயர் பாரிவள்ளல். அவர் வள்ளலில் பாரி. இது வாத்தியத்தில் பாரி. இதுவும் வாரி வழங்கும் வள்ளலைப் போன்றது. இசைமாரி பொழியக்கூடியது. சாமிக்கண்ணு, இன்னும் உனக்கு ஆட்சேபம் உண்டா?'' என்றார் பரதேசியார்.

''அல்ல சாமி, தங்கள் திருவுள்ளம் போல்தான் எனக்கும். ஆயினும் சம்பிரதாயத்தில் ஒரு புதுமையைப் புகுத்தும்போது, சங்கீதத்தில் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துகொண்டு அதைப் புகுத்த வேண்டும். அவர்கள் அனுமதி இல்லாமல் இதை வாசித்ததுதான் தப்பு'' என்றார் பெரியவர்.

''இசை அன்பர்களே! இசைக்கலையை வளர்ப்பவர்களே! தென்னங்கீற்றுப் போட்ட எட்டடிக் குச்சுக்குள்ளே எத்தனையோ இன்னல்களுக்கு இடையில் இருந்துகொண்டு கர்னாடக சங்கீதத்திற்குத் தொண்டு செய்வதையே குலத் தொழிலாகக் கொண்டிருக்கும்



உத்தமர்களே, உங்கள் வாழ்நாளையே இசைக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் இசை வேளாளர்களே, எத்தனை பேர்கள் அவமதித்த போதிலும், எங்கு நின்று வாசிக்கச் சொன்னபோதிலும், தோளிலே சங்கீதத்தைத் தூக்கிச் சுமந்துகொண்டு, ஓடி நடந்து உழைகின்ற உயர்குடி மக்களே, நாட்டுக்கு நல்வாழ்வு நீங்கள். உங்கள் கை முழங்கவில்லை யானால், அந்த ஊரிலே இன்பமில்லை. குழந்தை பிறந்த நாள் முதல், எந்த மங்கள காரியத்திலும் வந்து கலந்துகொண்டு, மக்கள் மனதில் இசை ஞானம் ஏற்படச் செய்யும் பெரியோர்களே, நான் இப்பாரி நாயனம் இசை வயலில் பெய்த அருள்மாரி என நம்புகிறேன். இசைப்பயிர் உங்களுடையது. அதில் களையெடுக்க உங்களுக்கு உரிமை உண்டு. இது களையா அல்லது கரும்பா என்பதை நீங்கள் கூறுங்கள்'' என்று வேண்டினார் பரதேசியார்.

''சங்கீதத்தை ஏட்டில் படித்துவிட்டு நாங்கள் வாசிப்பது இல்லை. அதன் இன்பத்தை அறிந்து வாசிப்பவர்கள் நாங்கள். பாரிநாயனம் பாரியான நாதத்துடன் இருந்தது. எங்கள் இதயத்தைத் தொட்டது. எல்லோருக்கும் அது சரியென்று தோன்றினால் எங்களுக்கு ஆட்சேபணை யில்லை'' என்றார் இடைமருதூரார்.

''ஆம், அவுங்க சொல்றது சரி. இன்று தம்பியின் வாசிப்பில் நாங்கள் மெய்மறந்துபோனோம். இதோ என் வீரகண்டாமணி விருதைத் தம்பிக்குச் சூட்டுகிறேன்'' என்று, தன் கையில் இருந்த கடகத்தைக் கழட்டினார் பொன்மாரி பெய்த புகழ்ப்பதியார். அந்தக் கூட்டம் முழுவதிலும் சந்தோஷ ஆரவாரம் உண்டாயிற்று.

அப்போது தில்லைப் பெரியவர் சன்னிதானத்தின் பக்கம் திரும்பினார். ''சன்னிதானம் அவர்களே! நாங்கள் ஒப்புக்கொண்டு விட்டோம். சங்கீதத்திற்கே மனோதர்மம்தான் பெரியது. இதில்தான் ஒவ்வொருவரும் தன்மயமாகிவிடுகின்றார்கள். தானே இசையாகி நிற்கின்ற காலத்திலே சிற்சில நயங்கள் பிறக்கின்றன. அந்த நயங்கள்தான் இசைக்குச் செல்வமாகின்றன. சம்பிரதாயம் என்பது கூண்டு. அந்தக் கூண்டை விட்டு வெளியே பறக்கும்போதுதான் இனிமை பிறக்கின்றது. சண்முகம் இன்று தன்னை மறந்து வாசித்தது. அந்த வாத்தியத்தை இனி நடுப்பாரி என்று அழைப்போம்'' என்றார்.

''அப்படியே செய்வோம். அடுத்தாற்போல் வருகின்ற நமது குருபூஜையின்போது, அத்தனை நாதஸ்வரக்காரர்களுக்கும், நாமே இந்த நடுப்பாரி நாயனத்தைப் போட்டு வழங்குவோம். பாரி பரவட்டும், பண்மாரி பொழியட்டும்'' என்றது மகாசன்னிதானம்.

''சண்முகம், அரங்கேற்றம் நடக்கட்டும்'' என்றார் பரதேசியார்.

அப்பொழுது அங்கு நடந்த ஒருகாட்சி, அத்தனை பேர் உள்ளத்தை யும் உருக்கிவிட்டது. சண்முகம், சாமிக்கண்ணு நாயனக்காரர் பக்கம் திரும்பினான். அவன் திரும்பிய வேகத்திலே அவரை என்ன கேட்கப்

போகிறானோ, அவன் கேட்கும் கேள்வியில் சாமிக்கண்ணு நாயனக்காரர் தலைகுனிய வேண்டுமென்று வம்புக்காரக் குப்புசாமி போன்றவர்கள் எண்ணினார்கள். ஆனால் மகாமேரு போன்ற அந்த மகா வித்வான், சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரின் கையிலிருந்த நாதஸ்வரத்தைத் தன்னிடம் தருமாறு இரண்டு கைகளையும் நீட்டி வாங்கினான். அதை வாங்கிக் கையில் பிடித்த வண்ணம் அவர் காலடியில் விழுந்து வணங்கினான். அப்போது அவன் சிரத்தின் மீது கங்கையும் யமுனையும் பனி நீர் தெளித்து ஆசீர்வதித்தன. ஆம், அந்த இசைத்தொண்டர், சிவச்செல்வர் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் அவர்களின் கமல நயனம் இரண்டும் பொழிந்த ஆனந்தக்கண்ணீரே அது. ''தம்பீ! என்னை மன்னித்துவிடு. சங்கீதத்துக்காக நான் உன்னையும் எதிர்த்தேன் அப்பா'' என்று அவனை அந்த மகான் தழுவிக்கொண்டார். சிக்கல் திருமுன்னே, சிங்கார வடிவேலன் சன்னிதியிலே இன்று நாடெங்கும் வழங்கும் நடுப்பாரி நாயனம் அரங்கேற்றமாகியது.

''சுவாமிநாத பரி பாலயாசுமாம்,
ஸ்வப்ரகாச வல்லீஸ குரு
குஹ தேவஸேனேஸ!''

என்ற கீர்த்தனம் குருநாதன் பெயரையும் குருகுஹன் புகழையும் கூறிக்கொண்டு நாட ராகத்தில் வெளி வந்தது.

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

## அழகுமலைப் போட்டியிலே அமுத மழை பெய்ததுவே!

''நாயகர் பட்சமடி எனக்கது ஆயிரம் லட்சமடி'' என்கிறார் சமரசக் கவிஞர். தன் கணவன், தன்னிடம் பட்சமாக இருந்துவிட்டால் மனைவிக்கு அதுவே போதும். அதிலும் அன்பே உருவான தன் காதற்கணவன் இன்று எல்லா கலைஞர்களுக்கும் நடுவில் பாராட்டப்பட்டதை நினைத்து நினைத்து மோகனா ஆனந்தமடைந்தாள். ''அடேயப்பா, அவருடைய கலையை நான்தானே முதலில் தெரிந்துகொண்டேன்! உலகம் எனக்கு முன்னே தெரிந்துகொண்டிருந்தாலும் அவருடைய கலைக்கு நான்தானே முதலில் அடிமையானேன்! இன்றுஅல்லவா மற்றவர்கள் எல்லோரும் அடிமையாகியிருக்கிறார்





கள்! என்ன இருந்தாலும் நான் பாக்யசாலிதான்! தேடிப் பிடித்தாலும் பிடித்தேன், தெய்வமாக் கலைஞனைத் தேடிப்பிடித்தேன். அவர் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வதில்தான் எனக்கு எவ்வளவு ஆனந்தம்! சாமிக்கண்ணுத் தாத்தாவுக்குப் பதில் சொல்றபோது எவ்வளவு நன்றாகப் பேசினார். நான் படிக்கலே, நான் படிக்கலே என்று சொல்லிக்கொண்டே சங்கீத சாஸ்திரத்தையே கரைத்துக் குடித்தவர் போல் பேசினாரே! என்னமோ, அவர் வாசிப்பிலே தனியா ஓர் இனிமைதான் இருக்கு. நான்கூட, என் அன்பாலேதான் அப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்தேன். ஆனால் உலகமே அதில் மயங்கிக் கிடக்கிறதே!'' என்று எண்ணிக்கொண்டே தாயின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள் மோகனா. ஆனால், வடிவாம்பாள் முகத்தில் ஏதோ துயரம் வடிந்துகொண்டிருந்தது.

'அம்மா முகத்தைப் பாரு. ஏன் இப்படிச் சிடுசிடுவென்று இருக்கிறாங்க? இவ்வளவு பணத்தைச் செலவு செய்து திருவிழா செய்யறது அவங்களுக்குப் பிடிக்கவேயில்லை. அம்மாவுக்குத் தகுந்தாற்போலவே தாளம் போட இந்த நட்டுவனாரும் கூடச் சேர்ந்துவிட்டாரே! கேசு இருக்கே, வாசிக்கலாமா? என்று கேட்கிறார். இது என்ன கேள்வி! அவரே வாசிக்கிறேன் என்று முன் வந்த பிறகு, கேசு இருந்தால் என்ன, அது என்ன செய்யும்? அவர் என்ன, தெரியாதவரா? வேறு எங்கே வாசிக்கிறார்? குலதெய்வத்தின் சன்னிதியிலேதானே வாசிக்கிறார்? கேசு இருந்தால் வீட்டிலேகூட ஊத வேண்டாமென்று சொல்லுவாங்களா? இல்லே, கோவிலிலே போய்க் கும்பிட வேண்டாமென்று சொல்லுவாங்களா?' என்று எண்ணிச் சிரித்துக்கொண்டே, தன் கணவன் வாசிக்கும் அழகில் மயங்கி நின்றாள் மோகனா.

''என்ன தங்கச்சி? நான் பக்கத்திலே நிக்கிறதுகூட உனக்குத் தெரியலியா?'' என்றான் வரதன்.

''அப்படி என்ன பெருமை வந்துடுத்து எனக்கு?'' என்றாள் மோகனா.

''இதைக்காட்டியும் பெருமை வேறு ஒண்ணு இருக்குதா தங்கச்சி? அழகர்கோவிலிலே நின்னாப்பிலேயில்லே நிக்கறே? அப்படியே வாசிப்பிலே சொக்கிப் போனியே!''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே வரதா, எல்லாரும் புகழ்ந்து பேசறாங்களே, யாராவது திட்டி வச்சுடப்படாதேன்னுதான் பாத்துக்கிட்டிருக்கேன்.''

''உன் கண்ணே பட்டுடப் போகுது.''

''அதுதான் முந்தியே....'' இதற்குள் வெட்கம் வந்துவிட்டது. தன் கூட இருக்கும் பெண்கள் கூட்டத்தின் பக்கம் திரும்பினாள். அவர்கள் எல்லோரும் வைத்த கண் வாங்காமல் சண்முகத்தைப் பார்க்கவே, அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

''ஏன் வரதா, கண்ணேறு பொல்லாதுன்னு அம்மா சொல்லுவாங்களே, அது நிஜமா?''

''நீயும் அம்மாவாகிவிட்டால் சொல்லுவே!''

மோகனா சிரித்துக்கொண்டாள்.

''உன்னை அதைக் கேக்கல்லே; என் கண் பட்டால்கூட....?''

''அதுதான் ரொம்ப மோசம் தங்கச்சி. அவருக்கு வாசிப்பே ஓடாது!'' என்றான் வரதன். ஆனால் மோகனாவோ, ''ஆண்டவனே! என் கண் அவரை ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அன்றொரு நாள் பெரியாழ்வார் பெருமாளுக்குத் தன் கண்ணேச்சில் பட்டுவிடாமல் பல்லாண்டு பாடியதுபோல் இருந்தது, இந்தக் காதல் உணர்ச்சி.

அம்மாவிடம் சொல்லி அவர் வீட்டுக்கு வந்தவுடன் திருஷ்டி சுத்தச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில், வடிவாம்பாள் பக்கம் திரும்பினாள் மோகனா. வடிவாம்பாள் அங்கு இல்லை.

''பதினாயிரம் பேர் இருக்கிற கூட்டத்திலே நான் வந்தது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?'' என்று கேட்டார் அந்த மனிதர்.

''லட்சம் பேர் இருந்தால்தான் என்ன, பாம்பு வந்தால் தெரியாதா?'' என்றாள் அந்த அம்மாள்.

''அப்பவானா, பாம்பும் நானும் ஒண்ணு?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க. அது சத்தியத்துக்குக் கட்டுப்படும்; அவ்வளவுதான் வித்தியாசம்'' என்றாள் வடிவாம்பாள்.

சற்று நேரத்திற்கு முன் அவளுடைய முகத்தில் இருந்த அற்ப சந்தோஷம்கூட இப்பொழுது இல்லை. அவளுக்குப் பக்கத்திலே ஒருவர் முண்டாசைக் கட்டிக்கொண்டு நின்றார். திருக்குளத்தின் ஓரத்திலே கூட்டத்தை விட்டு விலகி இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

''ஆமா, பேச்சிலே இருக்கிற சாதுர்யம் காரியத்திலே இல்லையே!'' என்றார் முண்டாசுக்காரர்.

''காரியத்திலே என்ன தப்புங்க, என் மகள் வாழ நினைச்சது தப்பா?''

''அது எப்படி அம்மா வாழ முடியும்? வழக்கு வாழ விடுமா? சிக்கலிலே இப்படி ஏதாவது நடக்கும்னு தெரிஞ்சுதானே நான் வந்தேன்? இல்லாட்டா நான் வந்திருப்பேனா?'' என்றார் அந்த மனிதன். ஆம் அவர்தான்! இதற்குள் நீங்கள் புரிந்துகொண்ட ஸ்ரீமான் வைத்திஜிதான் அந்த மனிதர்.

''அது சரிங்க. இப்ப நடந்தது நடந்திட்டுது. இனிமேல் என் கோவிக்கக்கிறீங்க!'' என்றாள் வடிவாம்பாள்.

''நான் கோவிச்சுக்குவேனா? எதிரி ஒரு பெரிய ராஜா, அவரையே நீங்கள் மதிக்கலேன்னா?''

''ராஜாவை மதிக்கலேன்னு எப்படிங்க சொல்றது? இது அவுங்க கோவில். அங்கே மருமகப்பிள்ளை வாசிக்கிறாரு....''



''கோவில் சிலில்னு சொன்னா, கோர்ட்டார் கேட்க மாட்டாங்கம்மா. சரி, அதுதான் இத்தனை பேர்களும் ஊதறாங்களே, எதுக்கு இவன் ஊதணும்?''

''அதை வேணும்னா சொல்லுங்க. அவங்க வாசிப்பைக் கேட்டு, இது தன்னையே மறந்துட்டுது!''

''இதோ பாருங்க. இது உலகம். தன்னை மறந்தவனுக்கு இங்கே இடமில்லை. தன்னை மறந்து வீதியிலே போனா, நான் மோதிக் கொண்டாப்பிலே, வண்டியிலேதான் மோதிக்கணும்.''

''என்ன இருந்தாலும் வைத்தி ஐயா, உங்களுக்கு அந்த வக்கில்தானே பெரியவரா போச்சு?'' என்று திடீரென்று ஒரு கேள்வி போட்டாள் வடிவாம்பாள்.

''ஏன்?''

''ஆமா, அவரு பெரிய மனுஷன். அதனாலேதானே அவருகிட்ட ரயிலிலே மோதிக்கிட்டேன்னு சொன்னீங்க. நாங்கள் கேவலம்தானே! அதனாலேதான் எங்ககிட்ட வண்டியிலே மோதிக்கிட்டேன்னு சொல்லியிருக்கீங்க!''

வைத்தி சமாளித்தார். ''எங்கே மோதிக்கிண்டால் என்ன? உங்க மாதிரி பணக்காரர் பகையிலே மோதிக்கலியே?'' என்றார்.

''இப்போ, என்ன செய்யணுங்கிறீங்க நீங்க?''

''எனக்கு ஒண்ணும் செய்ய வேண்டாம். உன் குடும்பம் வழக்கிலே இருந்து தப்பினாப்போதும். ஆயிரம் கொடு, பதினாயிரம் கொடு என்று நான் உங்கிட்டே கேக்கல்லே.''

''சரிங்க வைத்தி. வாங்க, காப்பி சாப்பிடலாம்.''

''அட, காப்பி எதுக்கம்மா, இந்த நாட்டையேதான் தேவாமிருதம் சாப்பிட்டாப்பிலே இருக்கே! மாப்பிள்ளை ஊதறதைப் பார்த்து மாமியாருக்கே உடம்பு ஊதிப் போகும்போல இருக்கே!''

''சரி, அதை விட்டுத் தள்ளுங்க. என் முகத்துக்காகப் பாருங்க.''

''ஆமாம், நீ என் முகத்தைப் பார்க்க வேண்டியது, நான் உன் முகத்தைப் பார்க்க வேண்டியது. இந்த லெவல்லேதான் கொண்டு போய் விடுவான் உன் மருமகப்பிள்ளை. கொஞ்சமாவது பயமிருந்தால் சட்டத்தை மதிக்காமல் இப்படி பப்ளிக்கா ஊதுவானா?''

''பின்னே என்னங்க, நாதசுரத்தை மறைச்சு ஊத முடியுமா? தார்த்தம்பழத்தை மணக்காமல் திருட முடியுமா?''

''கொழும்புக் குமாரசாமியை ஜாமீன் கொடுக்கச் சொல்லிவிட்டு, இங்கே வந்து ஊதறான். இப்போ இவன், அவன் இரண்டு பேரும் சேர்ந்து மாட்டிக்கப் போறாங்க.''

''இதெல்லாம் என்னத்துக்குங்க வம்பு? உங்களுக்குத் தெரியாத மாதிரி இருந்திடுங்க'' என்று கெஞ்சினாள் வடிவாம்பாள்.

வைத்தி மிஞ்சினார். "வடிவாம்பா அம்மா, நீ எதைச் சொன்னாலும் சொல்லு. பிறத்தியாரை மோசம் பண்ற வேலையை மாத்திரம் என்கிட்டே சொல்லாதே!" என்றார்.

"நானா சொல்லணுமுங்க?" என்றாள் வடிவாம்பாள்.

"பார்த்தியா, ஆரம்பிச்சுட்டியே! என்னை வண்டியை விட்டுக் கீழே இறக்கிவிட்டாள் உன் பெண்ணு. அவனை வாழ்க்கையை விட்டு இறக்கிவிடறதுதான் என் வேலை. கொட்டினாய்தான் வடிவாம்பாள், தேளு....!"

வடிவாம்பாள் "தேள் அல்ல. தேள், நட்டுவாக்காலி எல்லாம் நீதான்" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டாள் வடிவாம்பாள்.

தேளுக்கும் நண்டுத் தெறுக்கால் என்ற நட்டுவாக்காலிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. தேள் சாதாரணமாய்க் கொட்டி விடும். நட்டுவாக்காலி அப்படி அல்ல. முதலில் ஆசாமியைத் தன் கைகளால் பிடித்து உறவு கொண்டாடி, பிறகு கொட்டும். அது காலைப் பிடிக்கும்போதே அந்த உறவை உதறி விட்டால் விஷம் தலைக்கு ஏறாது! ஆனால் வடிவாம்பாள் வைத்தியை அப்படி உதறவில்லையே. 'இவர் பாம்பினும் கொடியவராயிற்றே! இந்தச் சமயம் பார்த்து இங்கே வந்திருக்கிறாரே! இவர் சென்னையிலே போய் மகாராஜாவிடம் 'மாப்பிள்ளை தடையை மீறி வாசித்துவிட்டார்' என்று சொல்லி என்ன செய்வாரோ?' என்று அஞ்சிக்கொண்டே அவளும் உறவு கொண்டாட ஆரம்பித்தாள்.

"என்ன வைத்தி, மண்டை இப்போ எப்படி இருக்கு?" என்றாள்.

"எதுக்காக அதைக் கேட்கிறே? என் மண்டையை வேணுமானா உடைக்கலாம். என் மதியை மாத்த முடியுமா? என் மூளை எப்பவும் போலவே ஷார்ப்தான். இப்பவே மெட்ராசுக்குப் போகப் போகிறேன். இங்கே நடந்த விஷயத்தை நானா சொல்லமாட்டேன். ஆனால் மகாராஜா கேட்டால் உள்ளதை உள்ளபடி சொல்லிவிடுவேன். நாளைக்கு மகாராஜா பாடு, உங்க பாடு."

"அதிலே உங்களுக்கு என்ன மிச்சம்?"

"மிச்சமா? அது என் டூட்டி. அது என் கடமை. என் தர்மம். இந்த வைத்திஜி மகாராஜாவுடைய பர்சனல் செகரெட்டரி."

"இன்னும் அந்த வேலையை நீங்க பார்க்கறீங்களா?"

"ஏன், அதில் என்ன சந்தேகம்?"

"காயமா கிடந்தீங்களே!"

"உடம்பு இப்பத்தான் காயமாச்சு; ஆனால் உத்தியோகம் 'காய'மாகி ரொம்ப நாளாயிடுத்து. நீ என்னை ரயிலிலே இருந்து இறக்கி விட்டேல்லே, நான் உடனே என்ன பண்ணினேன் தெரியுமோ? அந்த கார்டு கிட்டே என் விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினேன். அந்த ஆசாமி



உடனே, தன் வண்டியிலேயே என்னை ஏற்றிக்கொண்டுபோய் மெட்ராசிலே இறக்கிவிட்டுக் கூடவே வந்தான். நேரே வக்கீல்கிட்டே போனேன். ஒரு ஐந்நூறு ரூபாய் பணத்தை வாங்கி அப்படியே அவனுக்குப் பிரசண்ட் பண்ணிட்டேன்."

"அதுவரைக்கும் அந்தக் கார்டு உங்களை விடல்லியா?"

வைத்தி அதை விழுங்கினார். "எனக்குப் பணம் முக்கியமில்லே வடிவாம்பா அம்மா, குணம்தான் முக்கியம். இந்த வைத்தி தாம்பரத்திலேயும் கூடுவாஞ்சேரியிலும் தங்கி நடந்து போவான்னு தானே நீ நினைச்சே?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க, உங்க தங்கசித்தம்........"

"என்ன?"

"தங்கமான சித்தம் எனக்குத் தெரியாதாங்கறேன்? நீங்க சந்தர்ப்பம் தெரியாமே பேசினீங்க. என் மகளுக்குக் கோபம் வந்துட்டுது."

"கோபம் வந்ததில்லே, இப்ப கோர்ட்டிலே வந்து நிக்கட்டும்" என்றார் வைத்தி. வடிவாம்பாள் பதறினாள். அப்போது, "அட, ஐயா இன்னும் உசிரோட இருக்காங்களா?" என்று கேட்டுக்கொண்டே வரதன் வந்தான்.

"ஏலே, என்னடா உன் எண்ணம்?" என்று ஆத்திரத்துடன் கிளம்பினார் வைத்தி.

"நம்பளுக்குள்ளே டா போடப்படாதுன்னு முன்னாடியே அக்ரிமெண்ட் இருக்குதே!" என்றான் வரதன்.

"ஏய் வரதா, வாயை மூடு!" என்று கோபித்தாள் வடிவாம்பாள்.

"இவர் வாயை அடியேனாலே மூட முடியாதம்மா, ஆண்டவனா பார்த்து மூடினால்தான் உண்டு. இப்போ நான் எதுக்காக வந்திருக்கேன் தெரியுமில்லே? ஐயா வந்திருக்காங்கன்னு சொல்லிக்கிட்டாங்க, அவங்களைச் சாமி சன்னிதிக்குக் கூட்டிக்கிட்டுப் போகணும். எல்லோருக்கும் முன்னாலே உக்காத்தி வைச்சு, கச்சேரி கேட்கச் சொல்லணும், என்கிற எண்ணத்திலேதான் வந்தேன்."

"கச்சேரி கேட்கவா? இல்லே என்னையே கச்சேரி வச்சப்பிட பிளான் செய்துகொண்டு வந்தியா? மெள்ளக் கூட்டத்துக்கு நடுவிலே கூட்டிக்கிட்டுப் போயி, உங்க கை வரிசையைக் காட்டலாமென்கிற எண்ணமா?"

"ஐயாவுக்கு மூளை இருக்கு. ஆனால் அது, கை வரிசை, இறக்கம், பேஸ்து இதிலேதான் போகுது."

"டோண்ட் டாக். வடிவாம்பாம்மா முதல்லே, இவனைப் போகச் சொல்லுங்க" என்றார் வைத்தி.

"எங்கே போகணும்?" என்றாள் வடிவாம்பாள்.

அப்பொழுதுதான் சண்முகம் வாசித்து முடித்து, கரகோஷம்
முழங்கிக்கொண்டிருந்தது வாதன் சண்முகத்திடம் கையில் ஒரு
காகிதத்தைக் கொடுத்தவுடனே, அங்கிருந்த பலர், "இதென்னடா
பட்டணக்கரைப் பழக்கம்? யாரோ, எதையோ வாசிக்கச் சொல்லி
எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்" என்று ஆச்சரியப்பட்டார்கள்.
சண்முகமும் அந்த எண்ணத்தில்தான் அதை ஆவலோடு பிரித்தான்,
படித்தான். கடகடவென்று சிரித்தான்.

"என்ன சண்முகம்? என்ன கடிதம்?" என்றார் பரதேசியார்.

"என் பங்காளி வந்திருக்கிறார் சாமி."

"வைத்தியா, மதன்பூர் மகாராஜாவா?" என்று சொல்லிக்
கொண்டே, பண்டார சன்னிதிகளின் முகத்தைப் பார்த்தார் பரதேசியார்.
அப்பொழுது அருள் மழை கொட்டுவதுபோல, பண்டார சன்னிதிகளின்
குரல் கேட்டது. "சண்முகம், பரதேசியார் எல்லாம் உரைத்தார்கள்,
அச்சத்தைத் தவிர. அத்தனை தேவஸ்தானங்களைக்காட்டிலும், அந்த
சமஸ்தானம் சிறந்ததா? ஆண்டவனைக்காட்டிலும் அந்த அரசர்
பெரியவரா? இசை இறைவனின் செல்வம். எம்பெருமானின் காதில்
இழும் நாத குண்டலங்களைக் கழட்ட எவருக்கும் அதிகாரம்
கிடையாது!" என்றது மகாசன்னிதானம்.

'காதவழி பேரில்லான் கழுதையிலும் கேவலம்' என்று
தமிழ்நாட்டில் ஒரு முதுமொழி உண்டு. பேர் என்றால் நல்ல பெயர்
என்றுதான் அர்த்தம். இக்காலத்தில் கழுதையும்கூட உலகில்
பெயரெடுத்துவிடலாம். ஒரு கவர்னரின் காரில் கழுதை மாட்டிக்
கொண்டால் போதும், அதன் திருவுருவப்படம் பல நாடுகளிலும்
பிரசுரமாகும். நேச நாடுகள் 'கவர்னர் தப்பியதற்குப் பாராட்டுகிறோம்'
என எழுதும்! விரோத நாடுகள் 'கழுதை தப்பியதற்குப் பாராட்டுகிறோம்
என எழுதும்! ஆனால் இருவரும் பாராட்டுவார்களே அல்லாமல் அந்தக்
கழுதைக்கு மருந்து போடமாட்டார்கள். அதன் பாரம் முனிசிபாலிடியார்
தலையில்தான் விழும். இதுவல்ல பெயர்'.

சான்றோன் எனப்படுவதுதான் பெயர். சான்றாண்மையும்
சங்கீதமும் சேர்ந்து இன்று சண்முகத்தை உயர்த்திவிட்டன. மகாசன்னி
தானம் சொல்லிய ஆதாவு வார்த்தைகள் அவனுக்கு ஆனந்தம் ஊட்டின.
அவன் இனத்தார் எல்லாரும் அவனால் இறும்பூது எய்தினர். தம்பி, தம்பி
என மறுகினர். தங்கத் தோடாக்களும், வீரகண்டா மணிகளும் பரிசு
கிடைத்தன. நாதஸ்வரத்தின் அடி வட்டத்திலிருந்து மேற்சுற்று வரை
தொங்கியபட்டுக் கயிற்றுச் சரத்தில் பலபதக்கங்கள் குடியேறின.
நல்லவேளை, நடுப்பாரி நாயனம் நீண்டிருந்ததால் தாங்கியது. பண்டார
சன்னிதிகள் பட்டுப் பீதாம்பரம் போர்த்தினார். பரமானந்தப்
பரதேசியார் அருளாடை போர்த்தினார்.



இத்தருணத்தில் சிக்கல் கோவில் மேளம் கேட்டது. திருக்கோவில்
காரியக்காரர்கள் கோவில் மரியாதை செய்ய வந்தனர். சண்முகத்தின் இரு
கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் அருவி போல் பெருகியது; எழுந்து
நின்றான். பட்டுப் பரிவட்டம் கட்டினார்கள். காளாஞ்சி கொடுத்தார்கள்.
சிங்காரவேலன் தோள்மீது புரண்ட மாலையை சந்நிதித்
தொண்டனின் தோளில் சூட்டினார்கள். சண்முகம் இரு கைகளாலும்
கும்பிட்ட வண்ணம் அதைத் தாங்கினான். அப்போது அவன் கண்
முன்னே ஐந்து வயதில் அவனை விட்டுப் பிரிந்த அன்னையின் திருமுகம்
வந்து நின்றது. 'அப்பா, நல்லா இருடா' என்று வாழ்த்தியது. "தம்பி இது
ராஜ வாத்தியம். நீ பாட்டுக் கச்சேரி செய்தால் பகவானின் தொண்டுக்கு
நேரமிருக்காது. இதையே வாசி" என்று நாதசுரப் பாதையாம் நல்வழியில்
அவனைத் திருப்பிய குருநாதர் எதிரில் வந்து நின்றார். அவன் உள்ளம்
துள்ளியது. ஆனந்தப் பரவசமடைந்தான். அத்தனை வித்வான்களையும்
வணங்கினான்.

வீட்டுக்கு அழைத்துப் போய் மரியாதையுடன் விடவேண்டு
மென்றார்கள் கோவிலார். "எம்பெருமான் கோயிலுக்கு நான்தான்
ஓடிவர வேண்டும். அவன் மேளம் என் வாசலில் முழங்குவதா?" என்று
அவன் மறுத்தபோது சிங்கபுரம் மைனர், "அவனல்லவா தங்கம்!"
என்றார். நடேசனோ, "பிள்ளை சொல்றதுதான் நியாயம். இந்த
அர்த்தமற்ற வழக்கத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லீங்க!"
என்றார். ஆனால் அப்போது சண்முகத்தின் சிந்தை எங்கோ சென்றது.

"நாமெங்கே, நடுப்பாரி நாதஸ்வரமெங்கே ! யாரால் இந்தப்
பெருமை? அவளன்றோ காரணம்? அவள் போட்டிக்கு அழைக்கா
விட்டால், நாம் பாரி நாயனத்தைப் பழகப் போகிறோமா? அழகுமலை
யாண்டவன் சன்னிதியில் வந்த போட்டி அருமையான புதுமையின்
அல்லவா வந்து முடிந்திருக்கிறது? கலையில் போட்டி வந்தால் உயர்வு
வருகிறது. காதலில் போட்டி வந்தால் அழிவு வருகிறது. இன்று எனக்கு
வந்திருக்கும் அத்தனை பாக்கியமும் அவளால்தானே! அவள் என்
மனைவியாக இருந்தாலும் இசைக்கு அவள் செல்வமல்லவா? எங்கே
என் எழிலரசி! எங்கே என் இதயக்குயில்! எங்கே என் இன்னுயிர்க் காதலி!
இன்று அவள் ஆட வேண்டும். ஆறுமுகன் திருவருள் எங்களுக்குக்
கூட வேண்டும்!" என்று ஓடினான், அவளைத் தேடினான். பெண்கள்
கூட்டத்தோடு கூட்டமாக மோகனா பிரமித்து நின்றாள். கணவனைக்
கண்டதும் ஒரு ஓரமாக வந்தாள்.

★ ★ ★ ★ ★

# ஆடியும் பாடியும் அடியிணை தொழுவோம்!



**அ**வன் ஆவலுடன் "நீ ஆட வேண்டும்" என்றான்.

"நான் நாட்டியம் செய்ய வேண்டுமா?" என்று சொல்லித் திகைத்தாள் மோகனா.

"ஏன் நீ ஆடினால் என்ன?"

"ஆட்டம்தான் உங்களுக்குப் பிடிக்காதே!"

"மோகனா, என் முகத்தைப் பார்த்துச் சொல்லு. நாட்டியம் எனக்குப் பிடிக்காதா? அதிலும் நீ ஆடினால் எனக்குப் பிடிக்காதா?"

"எதற போது தன்னை மறக்கலாம் அத்தான். உலகத்திலே வாழும் போது தன்னை மறக்கக் கூடாது" என்று குறுநகை செய்தாள் மோகனா. ஆனாலும் அவள் கடைவிழியில் நீர் சுரந்தது.

"என்ன கேலி செய்கிறாய்?" என்றான் சண்முகம்.

"கேலி அல்ல அத்தான். அன்னிக்குத் தஞ்சாவூரிலிருந்து பட்டணத்துக்குப் போனீங்க. இன்னிக்கு சிக்கலிலேயிருந்து சிங்கப்பூருக்கே போயிட்டீங்களா?"

"அன்றைக்கும் உன் ஆட்டத்தை நான் குறை சொல்லவில்லையே!"

"யாரைக் குறை சொன்னால் என்ன? இன்று மட்டும் அந்தக் குறை தீர்ந்துவிட்டதா?"

"தீராமல் என்ன? எப்பொழுது என் நாதஸ்வரத்தைக் கையில் எடுத்தேனோ, அப்பொழுதே நான் குறை நீங்கியவனாகிவிட்டேன்."

"வேண்டாம் அத்தான். யாராவது எதையாவது சொல்வாங்க. அதைக் கேட்டு உங்களுக்குக் கோபம் வரும்."

"இல்லே மோகனா. குழப்பம் இல்லாத போது கோபம் எது? உன்னைக் கல்யாணத்தில் ஆடச்சொல்கிறேனா? கலை தெரியாதவர்கள் முன் காசுக்கு ஆடச் சொல்கிறேனா? என் கோவில் முன்னேதானே ஆடச்சொல்கிறேன்? சீக்கிரம் சொல்லு கண்ணே. ஆடப்போகிறாயா, இல்லையா?"

இதைக் கேட்ட மோகனா, சற்று நேரம் பிரமித்து நின்றாள். அடுத்த வார்த்தை எப்படி வருமோ என்று அஞ்சினான். சண்முகம் மேலும் பேசினான். 'உனக்கு இஷ்டமில்லையென்றால் ஆட வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டே ஆத்திரத்துடன் கோவில்பக்கம் திரும்பினான்.



"அத்தான், நில்லுங்கள்! இந்தப் புடவையோடு ஆடச் சொல்றீங்களா? இல்லே, கச்சையைக் கட்டிக்கொண்டு வந்துவிடவா?" என்றாள் அந்த எழிலிழை.

சண்முகம் சந்தோஷத்தில் திளைத்தான். "கச்சையைக் கட்டிவாடி! கந்தன் பச்சை மயில் போலாடிப் பதம் பெறலாம் போடி!" என்று நாட்டைக்குறிஞ்சியில் பாடிக்கொண்டே அந்த நங்கையின் கன்னத்தைத் தொட வந்தான்.

"நல்ல வேடிக்கையா போச்சு, இந்தக் கூட்டத்திலே...." என்று சொல்லிவிட்டு மோகனா பரபரவென்று தன் வீட்டிற்கு ஓடினாள்.

கூட்டம் கலைய ஆரம்பித்தது. சண்முகம் அங்கு வந்து, "மோகனாவை ஆடச் சொல்லியிருக்கிறேன்" என்று பரதேசியாரிடம் தெரிவித்தான்.

இதைக் கேட்டவுடன் அந்தச் செய்தி அத்தனை பேருக்கும் பரவி விட்டது. புறப்பட்டவர்கள் எல்லோரும் திரும்பிவிட்டார்கள். கூட்டத்தில் குதூகலம் ஏற்பட்டது. சண்முகம் வீட்டையே நோக்கிக் கொண்டிருந்தான்.

ஆனால் வரதனும் வரவில்லை. நட்டுவனாரும் வரவில்லை. 'முதலில் அவர்களாவது மேளம் போடட்டும், மோகனா அலங்காரம் செய்துகொண்டு வரும்வரையில். அவர்கள் சமாளித்துக்கொள்வார்கள்' என்று துடித்தான். 'இந்நேரம் காலில் சதங்கை கட்டியிருப்பாள். இப்போது திலகம் தீட்டிக்கொண்டிருப்பாள். இப்போது பாதி வழியில் வந்துகொண்டிருப்பாள்' என்றெல்லாம் கற்பனை செய்தான். இனி, கற்பனைக்கும் இடமில்லை. அவனுக்கு மோகனாவின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன்னிடம் ஆடுவதாக ஒப்புக்கொண்டு, வீட்டிற்குள் போய் இருந்துகொண்டு வர மறுக்கிறாள் என்று கோபம் வந்தது.

"இதோ வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு ஓடினான் சண்முகம். ரேழியில் நுழையும்போதே, "ஆட இஷ்டமில் லேன்னா முடியாதுன்னு சொல்லி இருக்கணும். வீட்டுக்குள்ளே வந்து ஒளிஞ்சுக்கிட்டா....?" என்றான்.

அதற்குப் பதில் இல்லை. "என் வீட்டுக்குள்ளேயே எனக்கு எதிரிகள் இருப்பது எனக்குப் பிடிக்காது" என்றான். இதைக் கேட்டு கூடத்தில் உட்கார்ந்திருந்த வைத்தி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார். அவர் கையில் இருந்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் விழுந்தன. "எதிரியா? நான் ஒண்ணும் உங்களுக்கு எதிரியில்லியே!" என்று உளறினார்.

சண்முகம் திடுக்கிட்டான். "ஓஹோ! நீங்க இங்கேயே வந்துட்டீங்களா?" என்று வைத்தியைக் கோபத்தோடு பார்த்தான். வைத்திக்கு அந்தப் பார்வை புதியதல்ல. கைக்கே அசையாதவர் கண்ணுக்கா பயந்துவிடப் போகிறார்? "வராமல் இருப்பேனா? சீட்டுக் குடுத்தேன், நீ வால்லே, நானே வந்துட்டேன். எனக்குத் தெரியாமே நீ வாசித்துவிட முடியுமா?" என்றார்.

''அட எங்காணும்! நான் வாசிக்கிறது உமக்குத் தெரியும்னு மாத்திரம் சொல்லாதீர்'' என்று ஆத்திரத்தில் கூறிவிட்டு, ''என்ன அத்தே. மோகனா எங்கே? நான் ஆடச் சொன்னேன். சரிந்து சொல்லிக் கச்சை கட்ட வீட்டுக்கு வந்தது....'' என்றான்.

''அட, அதுவேறேயா? இரட்டிப்பு சந்தோஷம்'' என்றார் வைத்தி.

''என்னாங்க சந்தோஷம்?'' என்றான் சண்முகம்.

''ஆடச் சொல்லு. அவளையும் பிடிச்சு உள்ளே போட்டால்தான் உங்க ரெண்டு பேருக்கும் புத்தி வரும்.''

''அதைவிட இன்னும் இருநூறு கொடுத்தால் ஐயாவுக்கே புத்தி வந்துடும்'' என்றான் சண்முகம்.

''ஓய், இங்கே யாரும் பணம் கேட்கவுமில்லை, தந்த பணத்தை வேண்டாம் என்று சொல்லவும் இல்லே'' என்று கூறிக்கொண்டே கீழே விழுந்த நோட்டுகளை எடுத்து மஸ்லின் பாக்கெட்டில் திணித்துக் கொண்டார் வைத்தி.

''இல்லே தம்பி, அதுக்கு ரொம்பக் களைப்பா இருக்குது. இப்போ ஒண்ணும் ஆட்டம் வேண்டாம்'' என்று தடுக்க ஆரம்பித்தாள் வடிவாம்பாள்.

சண்முகத்தின் கண் சிவந்தது.

''ஆட முடியாதுன்னு அது உங்களிடம் சொன்னதா?''

''தம்பி வாசித்ததே தப்பு. நீங்க பாட்டுக்கு ஊதிப்பிட்டீங்க. இங்கே வைத்தி ஐயா காலிலே விழுந்துக்கிட்டு இருக்கேன்'' என்று அவள் ஆத்திரத்தோடு சொல்லவே, ''அது உங்க தலையெழுத்து'' என்று சண்முகம் முறைத்துப் பார்த்துவிட்டு உள்ளே சென்றான்.

அப்பொழுதுதான் மோகனா கச்சை அணிந்து நாட்டியத்துக்காக அலங்காரம் செய்து, கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தாள். ''பிறந்தன்னிக்கி வந்த குணம், பொங்கலிட்டா போகுமா?'' என்றான் சண்முகம்.

''என்ன அத்தான்?'' என்று திடுக்கிட்டு நின்றாள் மோகனா.

''நீ சிங்காரிக்கிறதுக்குள்ளே சிங்காரவேலன் மலையேறி விடுவார். உங்க அம்மாதான் உனக்கு முக்கியம்னா என்கிட்டே ஆட முடியாதுன்னு சொல்லியிருக்கணும்.''

''எதுக்காக உங்களுக்கு இப்படிக் கோபம் வருது?''

''உனக்கா தெரியாது? எங்கிட்டியா நாடகம் ஆடறே?''

''என்ன அத்தான் நாடகம்? சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டே மோகனா ஓடி வந்தாள். அவன் கையைப் பிடித்தாள். பளீர் என்று அவள் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. 'அத்தான்' என்று துடித்தாள் மோகனா.... ''எவனாவது பணம் கொடுத்தால் ஆடுவே, கட்டின புருஷன் சொன்னா நீ ஆடுவியா?'' என்று சொல்லி, ஆத்திரத் தோடு வெளியே போய்விட்டான்.



''சே, இது என்ன கெட்ட பழக்கம்! யாரு மேலாவது கோபம் வந்தா அதையா அடிக்கிறது?'' என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள் உள்ளே நுழைந்தாள்.

''பாத்தியா! பாத்தியா! இதுக்குத்தான் சொன்னேன்'' என்றார் வைத்தி. மோகனாவின் கன்னத்தில் விழுந்த அடி வடிவாம்பாளுக்கு அவள் வயிற்றில் இடி விழுந்தது போல் இருந்தது. ''நல்லா இருக்கு. இதுக்காகவாடி உன்னைக் கட்டிக்கொடுத்தேன்?'' என்று அவள் அழத் தொடங்கினாள். ''அம்மா, சும்மா இருங்க. நாங்க புருஷனும், பெஞ்சாதியும் அடிச்சுக்குவோம், கூடிக்குவோம்'' என்றாள் மோகனா.

''ஆமாம், அடிக்கலாம். எவளாவது பெத்து வளர்த்திருந்தா அடிக்கலாம்'' என்று தன் தலையில் மடார் மடார் என்று அடித்துக் கொண்டே அலறினாள் வடிவாம்பாள்.

''ஆமா, பெரிய குபேரன் அடிக்கிறான்!'' என்றார் வைத்தி.

''என் ஆத்திரத்தைக் கிளப்பாதீர். அவர் குபேரனோ, ஏழையோ? எனக்கு அவர்தான் எல்லாம்'' என்று சொல்லிவிட்டு, கோவிலை நோக்கி ஓடினாள் மோகனா.

அன்று அவள் ஆடவில்லை. ஏதோ ஓர் உணர்ச்சிதான் ஆடியது. என்றும் இல்லாத அழகை அன்று மோகனாவின் உடம்பிலே எல்லோரும் கண்டார்கள்.

அவள் உடலிலே ஒரு புதுப் பசுமை தெரிந்தது. சதைப் பற்றுக்கூட சற்று அதிகம் போல் தோன்றியது. தங்க விக்கிரகத்துக்குப் புது மெருகு கொடுத்தது போல, அவளது மேனியில் புதுமெருகிட்டிருந்தது. ஆடும்போது, எப்பொழுதும் இருப்பதைக்காட்டிலும் அதிகக் கவனம் இருந்தது.

அத்தனை வித்வான்களுக்கும் இடையிலே வரதன், அற்புதமாக வாசிக்க ஆரம்பித்தான். நட்டுவனாருக்கோ, மாப்பிள்ளையே வாய் திறந்து ஆடச் சொல்லிவிட்டார் என்ற ஆனந்தத்தில், வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

ஆனால் சண்முகத்தின் அந்தக் கண்கள் ஏன் சிவந்திருக்கின்றன? ஏன் அடிக்கடி கண்ணீர் பொழிகின்றன? அந்தத் தலை ஏன் நிமிரவில்லை? அந்தோ பரிதாபம்! 'ஆத்திரத்தில் அருமை மனைவியை அடித்து விட்டோமே' எனத் துடிதுடிக்கிறது அந்த மனம். அவன் கண்ணில் படிந்த கண்ணீரில் எங்கும் மோகனாவாக நிற்கிறாள். ஐயோ! தன் மார்பைக் கைகளால் அமுக்கிக்கொள்கிறானே! ஏன் நெஞ்சு வலி வந்துவிட்டதா, என்ன....?

அன்று, தஞ்சாவூரில் அவளது அழகைப்பற்றி வர்ணித்த அதே கூட்டம்தான், இன்றைக்கும் சிக்கலிலே கூடியிருந்தது. ஆனால் அன்று இருந்த சூழ்நிலை வேறு, இன்று இருக்கும் சூழ்நிலை வேறு. அன்று அங்கு நாதஸ்வரமோ, திருவிழாக் காட்சிகளோ இல்லை. இன்று

எதிரிலே சண்முகநாதனே வீற்றிருக்கின்றான். ஒருவரும் தோளில் துண்டு போடவில்லை. இசையும் இறைவனும் தாண்டவமாடும் அங்கு கலைதான் மிளிர்ந்தது. காமம் கனிநடம் புரியவில்லை. இது பணக்கூத்தல்ல; பக்திக் கூத்து.

கணபதி கவுத்துவம் முடிந்து, சுப்ரமணிய கவுத்துவம் ஆரம்பமாயிற்று. சருவ லகுவாக மேளம் முழங்கியது.

**வினையற வேல்வாங்கும் பெருமா**
**வடிவினை தொழுமனமே**
**தொங்கிடு நங்கிடு தொங்கிட கிடதகி**
**தொங்குணங்கு தோம்தோம் தத்த (வினை)**

என்று நட்டுவனார் ஜதியை எடுத்தவுடனே, எதிரில் கந்தனே நிற்பது போல் கண்டார்கள். அவளுடைய சிரம், கரம் முதலிய அங்கங்களால் அன்று அவள் அபிநயம் பிடித்ததில் தன்னையே மறந்தார்கள். 'அடேயப்பா, உலகில் கண்ணும் கையுமே போதும்போல் இருக்கிறதே, எண்ணும் எழுத்தும் வேண்டாமே' என்று வியந்தார்கள். அவள் ஆட ஆட அப்படியே பிரமித்து நின்ற சண்முகம் திடீரென்று "ஆ.... மோகனா!" என்று திடுக்கிட்டான்.

ஆம். ஆடிக்கொண்டேயிருந்த மோகனா துவண்ட வண்ணம் உள்ளே சென்றாள். அரங்கில் ஆடை மாற்றும் இடத்தில் போய் சுருண்டு வீழ்ந்தாள். பேச்சு நினைவு இல்லை. "கூப்பிடு வைத்தியரை!" என்று வடிவாம்பாள் துடித்தாள்.

## நாற்பத்து எட்டாம் அத்தியாயம்

# மனைக்குச் செல்வம் மகப்பேறே!



**ந**ம் வீடுகளில் சில சமயம் நமக்குப் பசியே தெரியாது. பகல் இரண்டு மணி வரை பல் துலக்காமல்கூட நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்துவிடுவோம். ஆனால் ஒரு கலியாண வீட்டிற்குச் சாப்பிடப் போவதாக வைத்துக்கொள்வோம். அங்கு "இப்போது தான் முதல் பந்தி நடக்கிறது, இரண்டாம் பந்தியில் நாம் எல்லோரும் சாப்பிடலாம்" என்று அந்த வீட்டுக்காரர் சொல்லட்டும். உடனே நமக்குப் பசி வயிற்றைக் கிள்ளும். அதில் கோபம் பிறக்கும். அந்த வீட்டுக்காரர் நம்மைச் சாப்பிட அழைத்துவிட்டு ஏளனம் செய்வதாகத் தோன்றும். வீட்டில் பசிக்காத



நமக்கு வேறிடத்தில் பசிப்பது ஏன்? பஸ்ஸுக்குக் காத்து நிற்கும் ஒருவருக்கு ஒரு நிமிஷமே ஒன்பது நிமிஷங்களாகத் தோன்றுவது ஏன்? அதுதான் உணர்ச்சிப் பெருக்கு. நாம் ஒன்றைச் செய்ய நினைத்துவிட்ட பிறகு நம் உள்ளம் அதே உணர்ச்சியில் இருக்கிறது. அதற்குச் சிறுதடை வந்தாலும் ஆத்திரம் அடைகிறோம்.

நாட்டியம் பார்த்த மக்கள் எல்லோரும், அரங்கத்தின் உள்ளே சென்ற மோகனா இன்னும் ஆட வரவில்லையே என்று இதே ஆத்திரத்தில் துடித்தார்கள். நட்டுவனார் பாவம்! நன்றாகத்தான் பாடினார். ஆனாலும் அதை யார் அப்போது கேட்டார்கள்? சோறு இருந்தால்தானே இலை தேவை? வெற்று இலை யாருக்கு வேண்டும்? கூட்டம் அடங்காமல் கோபம்கொண்டு முன்வர ஆரம்பித்தது. சிலரது கைகள் தட்டிகளின் பக்கம் சென்றன. தட்டியும் தாழை நாரும் தங்கள் பாடு ஆபத்தாகி விடுமோ என்று பயந்தன. தட்டியையும் பிய்த்துக்கொண்டு அரங்கத்தின் உள்ளே புகுந்துவிடுவார்கள் போல் இருந்தது கூட்டத்தின் மனநிலை.

இந்தப் பயத்தோடு உள்ளே பரபரப்பும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? சாரைப் பாம்பைப் பார்த்த ஒருவர் பதறி உளறி "பாரைச் சாம்பு! பாரைச் சாம்பு!" என்று கத்தினாராம். அதைப் போல் இருந்தாள் வடிவாம்பாள்.

"கூப்பிடு வைத்தியரை, கூப்பிடு வைத்தியை!" என்று வடிவாம்பாள் உளறியவுடனே, தருமன் "வைத்தியா? வைத்தியரா? யாரைக் கூப்பிடணும்?" என்றான். "அட வைத்தியரைத்தான், ஓடு" என்றாள் வடிவாம்பாள். "இவ்வளவு பெரிய கூட்டத்திலே யாராவது வைத்தியரும் இருப்பாங்க. இதோ ஒரு சத்தம் போடறேன்!" தருமன் ஓடினான். உடனே தடுத்தாள் வடிவாம்பாள்.

"உனக்கு ஒத்து ஊதத்தான் தெரியும். யோசனை கிடையாது. நீ போய் கூட்டத்துக்கு நடுவிலே நின்னு கூப்பிடு. அந்தக் கூட்டம் முழுக்க உள்ளே ஓடியாறட்டும்" என்று இரைந்தாள்.

தருமன் ஓஹோ என்று விழித்தான். "கையிலே மருந்து இருக்கிறப்போ காடெல்லாம் தேடுவானேன்? இதோ பரதேசியாரையே கூப்பிடுகிறேன்" என்றான்.

"தருமா, நீ சும்மா இரு. இதைக் கேட்டதும் பரதேசியார் பதறிக்கிட்டு ஓடி வருவாரு. அதைப் பார்த்துப் பண்டார சன்னிதியும் வந்துடுவாரு" என்று கூறினாள் வடிவாம்பாள். தன் மகளின் முகத்தை உற்றுப் பார்த்தாள். தண்ணீரைத் தெளித்து முகத்தைத் துடைத்தாள். 'காலம்பர எல்லாம் சும்மாத்தானே இருந்தா, இப்ப ஏன் மயக்கம்?' என்று யோசித்தாள். மகளின் மார்பில் கை வைத்துப் பார்த்தாள். ஜுரமில்லை. தன் கைகளைப் பிசைந்தாள். அப்போது அபரஞ்சி வடிவாம்பாளின் காதில் ஏதோ சொன்னாள்.

"மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்கிறார் பாரதி.

அபாரத்திலின் அந்த மந்திரத்தைக் கேட்டதும் வடிவாம்பாள் 'ஹா' என்றாள். ஆச்சரியமும் சந்தோஷமும், பண்பும் பாசமும் ஏன், உலகத்தில் உள்ள எல்லா நல்ல உணர்ச்சிகளும் அப்போது அவளிடம் ஓடி வந்து கூடிக் குலாவின. அவள் உடலில் உள்ள ஒவ்வொரு நரம்பிலும் ரத்தத்திற்கும் பதிலாகப் பாலே பெருகி ஓடுவதுபோல் இருந்தது.

"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்"

என்பார்கள். ஆனால் தன் மகளைத் தொட்டால்கூட உண்டாகாத ஒரு புதிய இன்பம் அவளுக்கு ஏற்பட்டது. அவளையும் அறியாமல் "சாமி ஆண்டவனே" என்று அவள் கைகள் தானே உயர்ந்தன. தன் மகளின் முன் தலையை வலது கரத்தால் கோதிக்கொண்டே, அவள் நெற்றியில் ஒரு முத்தமிட்டாள் அந்தத் தாய். "எல்லையம்மா, உன் கருணைக்கு எல்லையில்லை. என் ஆனந்தத்துக்கும் எல்லையில்லை" என்று அவள் எண்ணியதும் இதயக்கடல் பொங்கி இன்பக் கண்ணீர் துளித்தது.

இந்தச் சமயத்தில் "என்ன, மயக்கமா, மோகனா?" என்று துக்கத்துடன் கூறிக்கொண்டே சண்முகம் உள்ளே நுழைந்தான். வடிவாம்பாள் நாணி எழுந்தாள். ஆனால், அடபாவமே! ஒரு கணத்திலே அவள் கிழவியாகிவிட்டாளே! அவளால் சரேலென்று எழுந்திருக்கவே முடியவில்லையே!

"ஒன்றுமில்லே, சும்மா இருங்க தம்பி. நீங்க போய், கூட்டத்துக் கிட்டே, அவளுக்கு உடம்பு சரியில்லையென்று சொல்லிடலாமே, வேறே ஏதாவது சாக்குச் சொல்லி ஆட்டத்தை நிறுத்திப்பிடுங்க" என்றாள் வடிவாம்பாள்.

"பாதி ஆட்டத்திலே எப்படி அந்தை நிறுத்த முடியும்?" என்றான் சண்முகம்.

"நிறுத்தாட்டி நீங்க போய் ஆடுங்க" என்றாள் வடிவாம்பாள். அந்தக் கேலியிலே அவள் முகத்தில் பால் பொங்குவதுபோல் ஒரு அழகு தென்பட்டது.

"ஏன், என்ன செய்கிறது மோகனா உனக்கு?" என்று மோகனாவின் அருகில் வந்தான் சண்முகம். அத்தை விலகி நின்றாள்.

பொங்கிவரும் புது நிலவு போல், அத்தனை கிரணங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு உதிக்கும் அருணன் போல் மோகனாவின் முகம் அழகுக் கலையை அள்ளி வீசியது. மயங்கிக் கிடந்தாலும் மதிவதனம் வாடவில்லை. எழிலார் திருமுகத்தில் இளநகைபோடு கிடந்தாள்.

சூல் கொண்ட மேகமும், சூல் கொண்ட நெற்பயிரும், சூல் கொண்ட பசுங்கன்றும் திருமால் போல் அழகானவை. ஆயினும் சண்முகம் அதைப் புரிந்துகொள்ளவில்லை.



"எனக்கு ஒன்றும் புரியவில்லையே அத்தே! அவளுக்கு என்ன செய்யுது?"

"இது உங்களுக்குப் புரியாது தம்பி, பொம்புளைகளுக்குத்தான் புரியும். போங்க, நான் சொன்னபடி செய்யுங்க" என்று தலையைக் குனிந்துகொண்டே உத்தரவிட்டாள் மாமியார். இதைக் கேட்ட மருமகப்பிள்ளை உடனே வெளியே சென்றான். சண்முகத்தின் தலையைக் கண்டதும் கூட்டம் ஆரவாரம் செய்தது.

"ஏற்கனவே ரொம்ப நேரமாகிவிட்டது. சாமி கோவிலுக்குப் போகணும். விடியப்போகுது. ஆனதினாலே ஆட்டம் இதோடு போதும்னு நினைக்கிறேன். நட்டுவனாரய்யா, எங்களைப் பாருங்க" என்றான் சண்முகம். ஆட்டம் முடிந்தது. கூட்டம் கலைந்தது.

## நாற்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

# மோகனா, என்மேல் கோபமா?



"உங்கள் காதல் வாழ்வு களிப்புடன் இருக்கவேண்டுமானால் என்னிடம் புத்திமதி கேளுங்கள். புத்தகம் விலை பத்தே ரூபாய்" என்கிறாள் எழு பிள்ளைகளைப் பெற்ற நவயுக நல்லதங்காள்.

"அதிகம் குழந்தைகளைப் பெறாதீர்கள். அது அன்புக்கு ஆபத்து!" என்கிறார் இருபத்தேழு குழந்தைகள் பெற்ற நவீன குசேலர்.

"இன்னும் நூறு வருஷங்களில் இந்த உலகத்தில் மக்கள் வாழ இடமே பற்றாது. யாவரும் காலை நீட்டிப் படுக்க முடியாது. பஸ்ஸில் நிற்பது போல, நின்றுகொண்டுதான் வாழ்க்கைப் பிரயாணம் செய்யவேண்டும்" என்கிறார் ஸ்ரீமான் புள்ளி விவரம்.

"நீயும் உன் மனைவியும் இளமையுடன் வாழக் குழந்தைகளே சந்ததி. உன் காதல் வாழ்வுதான் முக்கியம். உன் சுயநலத்தைக் கட்டிக்காத்துக்கொள்ளாதே" என்று உபதேசிக்கிறார் தன்னலமே இல்லாத தயாபரன், ஸ்ரீமான் பரோபகாரம்.

"உலகத்தில் நாய்கள் ஏன் அதிகமாக இல்லை, தெரியுமா? பூனைகள் ஏன் கொஞ்சமாக இருக்கின்றன, தெரியுமா? அவைகளின் குட்டிகளைச் சில சமயங்களில் அவைகளே தின்றுவிடுகின்றன. மனிதன் அப்படிச் செய்வதில்லை. உணவுக்காக அவனை வேட்டையாடுபவர்களும் கிடையாது. ஆகவே ஆளைக் குறைக்க உலக யுத்தம் ஒன்றுதான் வழி"

என்று கூறி உலக நலத்துக்காகச் சிலர் உடனே போரைத் தொடங்கினாலும் தொடங்குவார்கள்.

ஆனால் அன்று யாரும் இவ்வாறு உபதேசிக்கவில்லை. "கருவே தரிக்காமல் இருக்க விரும்பும் கணிகையர் குலம்" என்ற அவச் சொல்லுக்கு ஆளான குலத்தில் பிறந்த வடிவாம்பாள்கூட அம்மாதிரி எண்ணவில்லை. அதற்கு மாறாக, தனக்குப் பேரன் பிறக்கப் போகிறான் என்ற ஆனந்தத்துடன் இருந்தாள்.

படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றையும்தான் நாம் கடவுளாக வணங்குகிறோம். படைப்பில் ஓர் இன்பம் இருக்கிறது. மணலில் வீடு கட்டும் குழந்தை முதல், மண்ணால் வீடு கட்டும் குடியானவர் வரைக்கும், மரப்பாச்சிக்குப் பாலூட்டும் மங்கை முதல், மடிக் குழந்தைக்குப் பாலூட்டும் தாய்வரை படைப்பின்பத்தில்தான் மயங்குகிறார்கள். இது பசி, காதல், மரணம் போன்ற ஆதார தத்துவங்களில் ஒன்று.

இதையே மாற்றிவிடுவதாக எண்ணிக்கொண்டு "நீ படைக்காதே! படைத்துவிட்டுக் காக்கும் பொறுப்பை என்னிடம் தள்ளாதே!" என்று காக்கக் கடமைப்பட்டவர்கள் கூறுவதும், "நீ மக்களைப் படைத்துக் கொண்டே இரு. அதைக் காக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு" என்று மடிக் குழந்தையைப் பறிப்பதும் மக்களால் மன நிறைவுடன் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஏனெனில், தனக்கென மனைவியைத் தேடும் ஒருவன் தனக்கென ஒரு மழலையைத் தேடுவதும் இயற்கை. நமக்கென்று நாட்டை அடைவதும் ஆட்சியில் அமர்வதும் போலவேதான் இதுவும்.

தங்கள் வீட்டில் செல்வம் தவழ்ந்து விளையாடப் போகிறது என்ற ஆனந்தத்தில், அன்று அந்த வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மாதவன் சிறியதாக இரண்டு கர்லாக் கட்டைகள் செய்ய செம்மரம் தேடினான். முத்துராக்கு 'நாளைக்கு இந்தப் பயல் நம்ப தவுல் கம்பை எடுத்து, கிட்டிப் புள் விளையாடிவிடக் கூடாதே!' என்று எண்ணிச் சிரித்தார். தருமனோ "நமக்குத் தெரிந்த சங்கீத நுட்பங்களை எல்லாம் அந்தப் பயலுக்குத்தான் சொல்லிக்கொடுக்க வேண்டும். இந்தத் தம்பிதான் நம்ப சொன்னாலே காதில் வாங்குவதில்லையே!" என்று சலித்துக்கொண்டான். மோகனாவோ அன்று முழுவதும் குனிந்த தலை நிமிரவில்லை. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. வடிவாம்பாளுக்கு வாயெல்லாம் பல். ஆனாலும் ஒரே ஒரு குறையும் இருந்தது. அதையும் சொல்லித்தானே ஆகவேண்டும்?

"நாலு பேர் நடுவிலே அது எங்கேயாவது பாட்டி என்று கூப்பிட்டு வைக்கப் போகுதே. இதைப் பார்த்துவிட்டுச் சில மூதேவிகள் நம்மைக் கிழவி என்று எண்ணிவிட்டால்.... ....?" என்று மட்டும் ஒரு பெருமூச்சு விட்டாள். இந்தக் கவலையோடுகூட, தன் மகள் உடம்பு நன்றாக இருக்க



வேண்டுமே என்ற ஆசையில், புடலம் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு என்று தேட ஆரம்பித்தாள்.

அதற்குள் அந்தச் செய்தி எப்படித்தான் அந்த ஊர்ப் பெண்களுக்குள் பரவியதோ? அடுத்த நாளே ஆண்களுக்கும் தெரிந்துவிட்டது. ஆனால், இந்த ஆனந்தத்தைப் பேசி மகிழ வேண்டிய இரு உள்ளங்கள் மட்டும் பொருமிக்கொண்டிருந்தன.

அவள் அவனுடன் பேசவே இல்லை. அவன் அடித்த அடி அவள் பேச்சை அடைத்துவிட்டது. ஆனால், அவனுக்கோ அது நெஞ்சை அடைத்துக்கொண்டிருந்தது.

அன்று நடேசன் முதலிய விருந்தாளிகளுடன் உட்கார்ந்து சண்முகம் சாப்பிடும்போது நெய் பரிமாறவாவது மோகனா வருவாள் என்று சண்முகம் எதிர்பார்த்தான். பாவம், வடிவாம்பாளேதான் அதையும் பரிமாறினாள். அவள் வரவில்லை.

'சரிதான், கூடத்தில் சமுக்காளம் விரித்து, வெற்றிலைத் தாம்பாளம் வைத்துக்கொண்டிருப்பாள்' என்று எண்ணினான். ஆனால் தருமன்தான் அதைச் செய்தான். விருந்தினர்கள் எல்லோரும் ஊருக்குப் போகத் தயாராகிக்கொண்டிருந்த போதும் அவள் வரவே இல்லை.

'வந்தால் என்ன? குடி முழுகியா போய்விடும்' என்று ஆத்திரம் கொண்டான் சண்முகம். "தம்பி வரதா, அது எங்கே, அவர்கள் எல்லாம் சொல்லிக்கிட்டுப் போகக் காத்திருக்காங்க!" என்று அதட்டினான். அதற்குள் வெகுளி மரகதம், "இல்லை, நான் அக்காகிட்ட சொல்லிட்டேன்" என்று கூறிவிட்டாள்.

எல்லோரும் ஊருக்குப் போய்விட்டார்கள். வீடு வெறிச்சிட்டிருந்தது. முத்துராக்கு, தருமன் முதலியவர்கள் மூன்று நாளைக்குத் தூங்குவது என்ற முடிவு செய்துகொண்டு, காற்றுக் கொட்டகைகளை நாடிப் போய்விட்டார்கள்.

நாவலா? பேப்பரா? எதைப் படிப்பது? அங்கே கிடந்த சந்திரோதயம் என்ற சுவடியை எடுத்துப் பிரித்தான் சண்முகம். ஏட்டுக் கயிற்றில் பாதியைப் பிரிக்கும் போதே சந்திரோதயம் ஆகிவிட்டது. வட்ட மதியும் களங்கமும் போல் வழிந்த கண்ணீருடன் அவள் மதிமுகம் தோன்றியது. நாதஸ்வரத்தை எடுத்து வாசிக்கவே கை ஓடவில்லை. 'ஏன் என்னை அடித்தீர்கள்? ஏன் என்னை அடித்தீர்கள்?' என்று மோகனாவின் முகம் அவனைச் சுற்றிலும் நின்று கூடக் கூடக் கேள்வி கேட்கத் தொடங்கியது.

'என் மனைவியை நான் அடித்தேன். இது தவறா?' என்று கேட்டது மனம். 'அதைக்காட்டிலும் பெரிய தவறு வேறில்லை' என்றது அறிவு.

'கண்ணான கண்ணை அடித்துவிட்டோமே! அவளுக்கு ஆறுதல் சொல்வோம்' என்று அவன் எண்ணிய நேரத்தில், அவனுக்கே யாராவது வந்து ஆறுதல் கூறினால் தேவலை போல் தோன்றியது. விருந்தாளிகள்

தொந்தரவு இல்லை என்று இரண்டாங்கட்டுக்குப் போகப் புறப்பட்டான். அங்கு பல பெண்களின் சிரிப்புக் குரல் கேட்டது. நின்றான். உள்ளிருந்து தாழம்பூ வாசனை வீசியது. ஆம்! தாய் தன் கையால் மகளுக்குத் தாழம் பூ தைத்துச் சடை போட்டுக்கொண்டிருந்தாள்.

சண்முகம் நிலைப்படியில் கையை வைத்துக்கொண்டே நின்றான். யாரும் ஏன் என்று கேட்பாரில்லை. சுமங்கலிப் பிரார்த்தனையன்று ஆடவரை யாரும் கவனிக்கமாட்டார்கள். அதே நிலையில்தான் இன்றும் அவ்வீடு இருந்தது.

''பெண்களுக்கிடையே சென்று மோகனா என்று எப்படிக் கூப்பிடுவது? அவள் முகத்தில் எப்படி விழிப்பது? 'நான் என்ன குற்றம் செய்தேன்? ஏன் என்னை அடித்தீர்கள்?' என்று அது கேட்டால் என்ன பதிலைச் சொல்வது? ஐயோ! அவள் என்ன நினைப்பாளோ? காரணமில்லாமல் அடித்துவிட்டேன் என்று நினைப்பாளா? வைத்தியின் மேல் வந்த கோபத்தால் அடித்துவிட்டேன் என்று நினைப்பாளா?

'ஆத்திரம் என் அறிவைக் குழப்பிவிட்டதே! அவள் ஆடத் தயாராகத்தானே இருந்தாள்? இந்த அடியையும் பட்டுக்கொண்டு அவள் ஆடவும் ஆடினாளே! அணைத்து மகிழ வேண்டிய தருணத்தில் அறைந்துவிட்டேனே! அவள் ஒரு சொல் பொறுக்க மாட்டாளே! இந்த அடியை எப்படித்தான் பொறுத்தாள்? அத்தான் என்ற வார்த்தையைத் தவிர மறு வார்த்தை சொல்லவில்லையே! அந்தப் பார்வை! அதற்கு என்ன அர்த்தம்? நீங்களா என்னை அறைகிறீர்கள் என்றுதானே அர்த்தம்....? நான் அடித்ததால்தானே அவள் மயக்கம் போட்டு விழுந்தாள். அவளுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால் என்ன செய்வேன்?'' என்று ஏங்கிக்கொண்டே இருந்தான்.

அவன் மாலையில் பலகாரம் சாப்பிடவில்லை. இரவிலும் பசியில்லை என்று கூறிப் படுக்கச் சென்றுவிட்டான். உள்ளே சென்றும் நிம்மதியில்லை. பசியில்லை என்று கூறிய போதாவது அவள் வந்து 'ஏன் பசியில்லை, ஏதாவது சாப்பிடுங்கள்' என்று சொல்லக்கூடாதா? நான் என்ன அவ்வளவு பாவியாகவா ஆகிவிட்டேன்?' என்று வருந்தினான்.

ஆனால், ஆச்சரியம்! அவன் படுக்கை தட்டி விரிக்கப்பட்டிருந்தது. அதில் தலையணைகள் ஒழுங்காகப் போடப்பட்டிருந்தன. சண்முகம் திகைத்தான். யார் இவ்வாறு போட்டிருப்பார்கள் என்பதை வெகுகாலம் ஒண்டிக்கட்டையாக வாழ்க்கை நடத்திய அவ்வித்துவான் அறிவான்.

'ஆம், அவள்தான் செய்திருக்கிறாள். என் முகத்தில் விழிக்க மாட்டாள். நான் இருக்கும் இடத்திற்கு வரமாட்டாள். ஆனால் என் படுக்கையை மாத்திரம் தட்டி விரிப்பாளாம்! இதைத்தான் யார் செய்யச் சொன்னார்கள்?' என்று ஆத்திரம் கொண்டான். 'அவள் போட்ட படுக்கையில் ஏன் படுக்கிறேன். தரையில் படுத்தால் உடம்பு கெட்டு விடவா போகிறது? அப்படியே கெட்டால்தான் யாருக்கு என்ன?' என்று



எண்ணெய்த் துண்டை உதறினான். இடையில் இருந்த முக்காலியைத் தள்ளினான். அந்த முக்காலியின் மேல் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் ஏதோ வைத்து, வாழை இலையால் மூடப்பட்டிருந்தது. என்னவென்று அதைத் திறந்து பார்த்தான். அதிலே ஏதோ இனிப்புப் பலகாரமும், இரண்டு தேன்குழல்களும் இருந்தன. பக்கத்தில் செம்பில் பாலும் இருந்தது. 'இது எதற்கு? ஓட்டல் பையன் சாப்பாடு கொண்டுவந்து வைப்பதுபோல் எனக்காக வைத்திருக்கிறாளா? நீ உண்டால் என்ன, உறங்கினால் எனக்கென்ன? என் கடமையை நான் செய்துவிட்டேன் என்கிறாளா? இல்லை, நான் உன் வேலைக்காரிதானே! உன் மனைவியாக எண்ணியிருந்தால், நீ என்னைக் கன்னத்தில் அறைவாயா என்று இதற்கு அர்த்தமா?' என்று அவன் எண்ணியபோது அவன் கண்கள் கலங்கின. கழிவிரக்கம் தோன்றியது.

'நான் அல்லவா அவளுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அவளா என் வேலைக்காரி? எனக்காக நாட்டியத்தையும் விட்டேன் என்று கூறினாளே அவள். நாதஸ்வரத்தை நாலு மாதமாகக் கையில் எடுக்காமல் பைத்தியமானேன் நான். அவள் நாட்டியத்தையும் மறந்தது எனக்காகத்தானே? இந்தப் பஞ்சைக்காக மதன்பூர் மகாராஜாவின் சாம்ராஜ்யத்தையே காலால் எற்றினாளே, அவளை நான் அடித்தேனே! பெற்ற தாயையும் பகைத்துக்கொண்டாளே. அவளை நான் கோபித்தேனே!' என்று நினைத்து நினைத்துப் பொருமினான். நெஞ்சு வலி எடுத்தது. மார்பை அழுக்கிக்கொண்டான். அப்போது 'ஏ, கலைஞனே! உணர்ச்சிப் பெருக்கில் மிதக்காதே. உடலைப் பாழ்படுத்திக் கொள்ளாதே. உள்ளத்தைக் கூர்மையாக்கிக்கொண்டு திண்டாடாதே! உலகம் ஒரு பட்ட மரம். அதில் ஓடியாடும் இழைப்புளி நீ. இழைப்புளி ரொம்பக் கூராய் இருந்தால் மரத்தில் சிக்கிக்கொள்ளும். ஏன் பலவாறு சிந்திக்கிறாய்?' என்று அறிவு கேட்டது.

''ஏ அறிவே, கதிரவன் குதிரைகள் காலமெல்லாம் இழுக்கின்றன. இன்னும் அவைகள் களைப்படையவில்லை. கடல் அலைகள் காலமெல்லாம் வீசுகின்றன. இன்னும் களைப்படையவில்லை. ஆதிசேடன் காலமெல்லாம் காசினியைத் தாங்குகிறான். அவன் இன்னும் களைப்படையவில்லை. அதைப்போல் கலைஞனாகிய நானும் காலமெல்லாம் சிந்திக்கிறேன். கற்பனைதான் என் ஆயுதம். அது ஓயாமல் வேலை செய்கிறது. ஆனால் கற்பனையின் சுமையைத் தாங்க முடியாத உடல் களைப்படைகிறது. என்ன செய்வது? உலகில் பிறந்துவிட்டேன். ஓயாமல் உழைத்துப் பெயர் பெற்றுவிட்டேன். பெற்ற புகழைக் காப்பது பெருந்தொல்லை.

'மழையைத் தடுக்கக் குடை பிடித்தால் மணிக்கட்டு வலிக்கிறது. அதைத் தடுக்க முடியுமா? மாசைத் தடுக்கச் சிந்தித்தால் மனம் வலிக்கிறது. அதைத் தடுக்க முடியுமா? என் தவற்றை நான்தானே

அனுபவிக்க வேண்டும். நான் கண் தெரியாமல் பிழை செய்துவிட்டேன். இருட்டில் வாசித்தாலும் நாதஸ்வரத்தில் விரல் பிசகுமா? இருளில் சாப்பிட்டாலும் கைக்கு வாய் தெரியாமல் போகுமா? இருளில் வெற்றிலை போட்டாலும் சுண்ணாம்பு அதிகமாகுமா? ஆனால் என் மன இருளில் என் இதய மோகினியை அறைந்துவிட்டேனே! என்னையே கதியென்று நம்பியவளை என் கையால் அடித்துவிட்டேனே!' என்று கதறினான்.

அப்போது கட்டிலருகே சுவரில் அடித்திருந்த ஆணியில் ஒரு மகிழம்பூ மாலை தொங்குவது தெரிந்தது. என்றோ ஒரு நாள் அதை அவளுக்கு அவனே வாங்கிக் கொடுத்தான். அவள் அதை ஆணியில் மாட்டி வைத்தாள். அது வாடி வதங்கினாலும் மணம் குன்றாமல் வாசனை வீசியது. அந்த வாசனை அவனிடம் பேசியது. 'இதைப் போலவே அவளும் என் கொடுமையால் வாடி வதங்குகிறாள். ஆயினும் மணம் வீசும் மலர் போல, குணம் குன்றாக் குலக்கொடியாய் விளங்குகிறாள். அடித்தவனுக்கு அன்புடன் பாலும் பழமும், பருகக் குடிநீரும், பலகாரமும் வைத்திருக்கிறாளே' என்று எண்ணி, வெள்ளிப் பாத்திரத்தில் இருந்த தேன்குழலைக் கையில் எடுத்தான். கண்ணீர் பொலபொலவென்று உதிர்த்தது. கை நடுங்கியது. வாய் தின்ன மறுத்தது. 'இவை எனக்கு இனித் தேவை இல்லை. அவளிடம் மன்னிப்புக் கேட்கக்கூட நான் தகுதியற்றவன்' என்று எண்ணிக்கொண்டே படுக்கையில் வீழ்ந்தான் சண்முகம். தலையணைகள் கண்ணீரால் நனைந்தன.

இரவு பதினொரு மணி இருக்கும். ஏதோ பாத்திரம் ஓசைப்படுவது கேட்டுத் திரும்பினான்.

''ஏன், சாப்பிடவில்லையா?'' என்று தலை குனிந்த வண்ணம் நின்று கேட்டாள் மோகனா.

''எனக்குப் பசியில்லை, சாப்பாடு வேண்டாம், இங்கே வா'' என்றான் சண்முகம்.

அவள் வரவுமில்லை. தலையை நிமிர்த்தவுமில்லை. ''மோகனா, என் மேல் கோபமா?'' என்று அவள் கரத்தைப் பற்றித் தன் அருகில் அழைத்தான். அவள் தலை நிமிர்ந்தாள். அவள் கண்கள் மாலை மாலையாகக் கண்ணீர் சொரிந்தன. ஏதோ கூற எண்ணினாள். அதற்குள் அழுகை தொண்டையை அடைத்தது. அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு பெருமூச்சுடன் விசும்பி விசும்பி அழுதாள், அந்தப் பெண்மயில். அவனும் பேசவில்லை. இருவர் கண்ணீரும் கலந்தோடியது. அப்போது

**அடித்தாலும் வைதாலும் அவரே துணையல்லாமல்**
**ஆர்துணை சொல்லடி மானே.**

என்று ஸ்ரீமதி வடிவாம்பாள் அம்மாள் பாடுவது கேட்டது.



காய் முற்றினால் பழம். காதல் முற்றினால் பக்தி. இருக்கிறபடி இருந்தால் இரண்டுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. இரண்டின் லட்சியமும் 'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு' என்பதே ஆகும்.

உலகில் வாழப் பிறந்தவர்களுக்குக் கஷ்டமும் உண்டு. அந்த கஷ்டங்களை மேற்சொன்ன இரண்டு மருந்துகளால்தாம் விலக்க முடியும். ஒன்று காதல், இரண்டாவது பக்தி.

சற்றுமுன் அழுதுகொண்டு நின்ற மோகனா இப்போது ஆனந்தத்துடன் அவன் அருகில் அமர்ந்திருப்பது காதலினால். அழுது தொழுத அடியார்கள் ஆண்டவனுடன் இரண்டறக் கலந்திருப்பது பக்தியினால்!

''ஏன், என்மீது கோபமா?'' என்ற கேள்விக்குத்தானே பதில் சொல்லாமல் அவள் அழுதாள்? கேள்வி பதில் இரண்டுக்கும் அப்பாற்பட்டது காதல். அது ஏன் வந்தது, எப்படி வந்தது என்று கேள்வி கேட்டுப் பதில் சொல்ல முடியாது.

காய் பழுத்துக் கனிரசம் சொட்டுவது போல் காதல் பழுத்தால் கருணை உதயமாகும். அதில்தான் தியாகம் பிறக்கிறது. மோகனாவின் காதல் அத்தகையது. அப்படியில்லாவிட்டால் அவள் சும்மா இருப்பாளா? 'டைவர்ஸ் கேஸ்' அல்லவா போட்டுவிடுவாள்?

அதே கேள்வியை அவன் மறுமுறையும் திருப்பினான். ''மோகனா, என் மீது கோபமா?''

இப்போது அவளும் திருப்பினாள்.

''உங்களைக் கோபித்துக்கொள்ள நான் யார்?''

''கோபம் இல்லை என்றால் இந்த பதிலா வரும்?''

''இருந்தால்தான் நான் என்ன செய்துவிட முடியும்?''

''நீயும் உன் கையால் என்னை அறைந்துவிடு''

''நான் ஒன்றும் பச்சைக் குழந்தை அல்ல, அடித்தால் திருப்பி அடிக்க!''

''அப்படியானால் குழந்தை திருப்பி அடிக்குமா?''

''ஆமா!''

''அப்படியானால் அது எப்போது என்னை அடிக்கும்?'' என்றான் குறும்புக்காரன்.

அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

''இதெல்லாம் என்ன கேள்வி?'' என்று சொல்லிக் குதித்துக்கொண்டு ஓடினாள். சண்முகம் ஒரே தாவலில் தாவி அவளைத் தழுவிக் கொண்டான்.

அவள் முகவாயைப் பிடித்துத் தலையைத் தூக்கினான். ''நீ ஏன் என்னிடம் சொல்லவே இல்லை?'' என்றான்.

மௌனம்!

''எனக்குச் சொல்லாமல்....''

''உம்.''

''மறைக்கப் பார்த்தாய் அல்லவா?''

''எதை?''

''அதைத்தான் கண்ணே நீ.... நீ.'' அந்த வார்த்தையில் அவளுக்கு இன்னும் அதிக நாணம் உண்டாயிற்று.

''போதுமே, அடிச்சதும் அடிச்சுவிட்டுக் கண்ணாம் மூக்காம்! அடே அப்பா, அடுப்பிலே வச்ச வெந்நீராட்டம் கோபத்திலே கொதிச்சிட்டீங்களே!'' என்று பேச்சை மாற்றினாள்.

''இப்ப ஆறிவிட்டேனா?''

''அதுக்கென்ன, தண்ணிக்குப் பேரே பச்சைத் தண்ணிதானே. அது ஆறித்தான் போகும். ஆனால் அந்த வெந்நீர் சுட்ட புண் ஆறாதே!''

''என்ன மருந்து போட்டால் ஆறும்?''

''மருந்தா? கொஞ்ச நேரம் பாடுங்கள்.''

''ஆஹா, இதோ பாடுகிறேன்'' என்று ''எந்தக மனஸு''குராதி பந்தகசாயி லோகலு''....'' என்று பாட ஆரம்பித்தான்.

''போதுமா!'' என்றாள் அவள்.

''அப்படியானால் வேறு ஒன்று பாடுகிறேன்'' என்று,

**''மன்னுபுகழ் கௌசலைதன்**
**மணிவயிறு வாய்த்தவனே!''**

என்று அதே நீலாம்பரியில் எடுத்தான்.

''அது இப்ப எதுக்கு. இன்னும் எட்டு மாசம் ஆகட்டும்'' என்றாள் மோகனா. அவன் பாடுவதை நிறுத்தவில்லை.

''ஐயோ! அம்மா காதிலே கேட்கும்'' என்று அவள் அவன் வாயைப் பொத்தினாள். அவள் கையை எடுத்துவிட்டு, ''என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ''.... என்று இரைந்து பாடத் தொடங்கினான்.

''இனிமேல் பாடினீங்களோ?'' என்றாள் கோபத்துடன்.

''என்ன செய்வாய்?''

''நான் தூங்கிப் போய்விடுவேன்'' என்றாள் அவள்.

அவன் ஏன் பாடுகிறான்? நிறுத்திவிட்டான்!

''என்னமோ நீயும் நானும்தான் பாடப் போவதாக நினைச்சுக்கிட்டிருக்கிறோம். உங்கம்மாதான் இப்பவே பாட ஆரம்பிச்சுட்டாங்களே.''

''பாவம்! அவங்களுக்கு ஆசை.''

''ஓஹோ! அதுதான் காரணமா? இல்லாவிட்டால் இந்நேரம் என்னை வீட்டை விட்டே விரட்டி இருப்பாங்களே.''

''சே! அப்படியெல்லாம் சொல்லாதீங்க. அவுங்களுக்கு உங்க மேலே உயிர்.''



''இதென்னடா புதுசா இருக்கு! உங்கம்மாவுக்குக்கூட என் மேலே கருணை பிறந்துவிட்டதா?''

''அவுங்கதானே சொன்னாங்க, ஆத்திரத்திலே அடிச்சுப்பிட்டு மருமகப்பிள்ளை அழுதுகிட்டே திண்ணைப்படியைப் புடிச்சுக்கிட்டு நிற்கிறாரு. இந்தா, உன் கையாலேயே கொண்டு போய்ப் பலகாரங்களை கொடு என்று....''

''அடேடே, எது இவ்வளவு பிரியம்?''

''உங்கள் குலமாணிக்கத்தைக் கேளுங்கள்'' என்றாள் மோகனா.

## ஐம்பதாம் அத்தியாயம்

## ''கவனிச்சுக்கிறேன் சார்''



''**நா**ன் ரொம்ப ரகசியமாக வந்திருக்கிறேன் லாயர்ஜி. நான் சென்னைக்கு வந்தது அந்த ஆஷலதாவுக்குத் தெரிந்துவிடவே கூடாது. தெரிந்ததோ, ஜோரகயாதான்'' என்றார் மதன்பூர் மகாராஜா. அவருடைய முகம் வாடியிருந்தது. இரவு முழுவதும் தூக்கம் விழித்தவர்போல் காணப்பட்டார். எப்பொழுதும் அவரிடத்தில் உள்ள கம்பீரம் இல்லை. சென்னையிலே உள்ள ஒரு பெரிய ஹோட்டல் மாடி அறையில் வக்கீல் கிட்டாவய்யரும், மகாராஜாவும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமான் வைத்திஜி தன் தலையில் ஜரிகை டர்பன் கட்டிக்கொண்டு மதன்பூர் சமஸ்தான வித்துவான் போல் ஒரு ஓரமாய் நின்றுகொண்டிருந்தார்.

''ஏன், ஏதாவது சீரியஸ் கேஸா? வேட்டையாடறபோது யாரையாவது ஷூட் பண்ணிட்டீங்களா? இவ்வளவு பயத்திற்குக் காரணம் என்ன?'' என்றார் கிட்டாவய்யர்.

''வேறு என்ன இருக்குது ஸார். ஒரே ஒரு காரணம்தானே உண்டு? உமன்தான்'' என்றார் வைத்தி.

வக்கீலிடம் ராஜா அந்தரங்கம் பேசும்போதுகூட வைத்தி குறுக்கிடுவதைக் கிட்டாவய்யர் விரும்பவில்லை. 'அனாவசியத்துக்கெல்லாம் வைத்தி பொய் சொல்லுகிறார்; நம் பணத்துக்கும் நாமம் போட்டுவிட்டார்' என்று அவருக்கு ஏற்கனவே வைத்தி மீது கோபம். என்ன செய்வது? ஜூனியர் வக்கீலாக இருந்தால் 'யூ கெட் அவுட்' என்று சொல்லிவிடலாம். அவரும் கொயட்டாகப் போய்விடுவார். வைத்தியை

அப்படிச் சொல்ல முடியுமா? மகாராஜாவின் பவர் ஏஜண்டாயிற்றே! இட்டாவய்யர் வைத்தியைக் கோபத்துடன் ஒரு பார்வை பார்த்தார். ஆனால் வைத்தி அதைப் பார்க்கவில்லை.

இட்டாவய்யர் மகாராஜாவிடம் "உமன் என்றால் யு மீன் மோகனா?" என்றார்.

"நாட் தெட், ஒதர், ஒதர்" என்றார் மகாராஜா. அந்த வார்த்தையில் என் மோகனா அப்படிச் செய்வாளா என்ற பாவம் ஒலித்தது. இந்த மோகனாவை ஒரு வருடம் முன்பு பார்க்காமல் போனோமே, வெள்ளைக்காரியால் இக்கதியானோமே என்று பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

"இப்ப அடிக்கடி இப்படியே உட்கார்ந்துவிடுகிறார் சார்" என்றார் வைத்தி.

உடனே மகாராஜா ஒரு பெருமூச்சு விட்டார். இரகசியமாய்ப் பேசலானார். "நான் அந்த வெள்ளைக்காரியை ஷாதி செய்து கொண்டிருக்கவே கூடாது சார். அதுதான் டிராபிளுக்கெல்லாம் காரணம். அவள் கண்டதற்கெல்லாம் சந்தேகப்படுகிறாள். அரசனுக்கு அந்தப்புரம் இருப்பது ராஜதர்மம் என்று நான் எத்தனை தடவை சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாள்."

"ஏக பத்னி விரதமா இருக்க ஹைனஸ் என்ன, ராமபிரானா?" என்று குறுக்கே புகுந்தார் வைத்தி.

"மிஸ்டர் வைத்தி, தயவு செய்து குறுக்கே பேசாதீர்கள். என் கவனத்தை அது கலைத்துவிடும்" என்று இட்டாவய்யர் சொல்லி வைத்தியைக் கோபக்கண்ணால் பார்த்தார். வைத்தி சிரித்துக்கொண்டே "கவனிச்சுக்கிறேன்" என்றார்.

"இதோ பாருங்கோ டைவர்ஸ் கேசிலே, அவள் தாக்கல் செய்திருக்கிற 'அபிடவிட்டை'" என்று, தன் தோல் பையிலிருந்து ஒரு நீண்ட காகிதத்தை எடுத்தார் மகாராஜா. இட்டாவய்யரிடம் கொடுத்தார்.

அதைப் படிக்கப் படிக்க இட்டாவய்யருக்குச் சிரிப்பு சிரிப்பாக வந்தது.

"என்ன லாயர்ஜீ சிரிக்கிறீங்க? அவளுடைய ஸ்கீமைப் பாருங்க சார்! என்னை விவாக ரத்து செய்துவிட வேண்டுமாம். பணத்தை ஏராளமாக என்னிடத்தில் வாங்கிவிட வேண்டுமாம். அல்லது என்னை பைத்தியம் என்று புரூப் செய்துவிட்டு, தானே ராணியாக இருந்து ராஜாங்கத்தை நடத்த வேண்டுமாம். இது சரியா ஜீ? நியாயமா ஜீ? கடவுளுக்குப் பொறுக்குமா ஜீ?" என்றார் மகாராஜா. பாவம், அவர் முகம் பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

அதைப் பார்த்துக் இட்டாவய்யர் முகத்திலும் வருத்தம் வந்தது. அந்தப் பிரமாணப் பத்திரத்தைத் தம் மனதுக்குள் பார்த்தார்.



"சும்மா இரைஞ்சு படியுங்க. வைத்திஜியும் கேட்கட்டும்" என்றார் மகாராஜா.

இட்டாவய்யர் உரக்கப் படித்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"மதன்பூர் மகாராஜாவின் தர்ம பத்னியும், லீகல் ஒய்ப்பும், பட்ட மகிஷியும் ஆகிய மேரி என்னும் ஆஷவதாதேவி எழுதிவைத்த 'அபிடவிட்டு.' இந்த மகாராஜா சில நாட்களாகப் பைத்தியம்போல் காணப்படுகிறார்.

ஆதலால் மதன்பூர் சமஸ்தானக் குடிகளின் நன்மையைக் கருதி, அதிகாரத்தை என்னிடம் ஒப்புவிக்கவேண்டும். நான் அவரிடம் காணும் மாறுபட்ட குணங்கள் பின்வருவன:

1. இரவில் அவர் சரியாகத் தூங்குவதில்லை. நாம் நன்றாகத் தூங்கும் நேரமாகிய காலை நான்கு மணிக்கே அவர் எழுந்துவிடுகிறார்.

(பி.கு.) பைத்தியத்துக்குத் தூக்கம் வராது என்பது கோர்ட்டார் அறிந்ததே.

2. அவர் உடம்பில் என்னதான் வியாதியிருக்குமோ? காலை நாலு மணிக்கே ஓடிப்போய்ப் பச்சைத் தண்ணீரில் குளிக்கிறார். சில நாட்களில் இரண்டு மூன்று தடவைகள் குளிக்கிறார்.

(பி.கு.) குளிப்பது என்றால் உடம்பை மாத்திரம் அலம்புவது இல்லை. பச்சைத் தண்ணீரையே தலையில் கொட்டிக்கொள்கிறார்.

"சரிதான், பிராதஸ்நானம் செய்யக்கூடாதுங்கறாளாக்கும்" என்றார் வைத்தி.

"மிஸ்டர் வைத்தி" என்றார் இட்டாவய்யர்.

"எஸ் சார்" என்று அடங்கினார் வைத்தி.

மேலும் படித்தார் இட்டாவய்யர்.

3. அடிக்கடி மூக்கைப் பிடித்துக்கொள்கிறாரா அல்லது ஏதாவது வியாதியா என்று எனக்குத் தெரியவில்லை.

4. வாரத்தில் இரண்டு மூன்று நாள் அவர் தலையிலே ஏதோ ஆயிலைப் பூசிக்கொள்கிறார். பாலைத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்கிறார்.

(பி.கு.) ஒரு நாள் அவர் குளிக்கும் அறைக்குப் பக்கத்தில் இருந்த ஜலதாரையில் பால் போன்ற நிறமுடைய தண்ணீர் வருவதைக் கண்டேன்.

"எண்ணெய் சீயக்காயை அந்தத் தலை கண்டிருந்தாத்தானே? ஏதோ ஷாம்பூவைத் தேய்க்கிறது. தலை சாமந்திப்பூவா மாறிவிடுகிறது."

"ப்ளீஸ்!" இது இட்டாவய்யர்.

"எஸ்." இது வைத்திஜி.

5. சில நாட்களில் காலை வேளையில் பைத்தியம்போல ஏதோ முணுமுணுத்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறார். ஸூரியனைப் பார்த்துக்கொண்டு தண்டால் எடுக்கிறார்.

(பி.கு.) வைத்தியங்கள், நாயே பேசும் என்பது கோர்ட்டார் அறிந்ததே.

6. சந்திரன் உதயமான பதினோராவது நாளில் அவருக்குப் பசியே இல்லை. அன்று சாப்பிடுவதில்லை. மிலிட்டரி உணவுகூடச் சாப்பிடுவதில்லை.

(பி.கு.) சைவ உணவாகிய முட்டைகளைக்கூட அன்று உண்பதில்லை.

7. உடையிலும் மனிதர்களைப்போல, சூட், கோட் முதலியவைகளை அணிவதில்லை. சில நாட்களில், வேஷ்டியைப் புடைவைபோலப் பின்புறம் செருகிக் கட்டிக்கொள்கிறார்.

8. நான் சீமையிலே அவரைப் பார்த்துக் காதலித்தபோது, அவர் தலையை நான் பார்க்கவேயில்லை. அப்போது டர்பன் கட்டியிருந்தார். இந்தியாவுக்கு வந்த பிறகு, ஒரு நாள் நான் கண்ட உண்மையை இங்கு சொல்வதற்கே எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஒரு நாள் விளையாட்டாக அவர் டர்பனை நான் தட்டிவிட்டேன். அப்பொழுது தான் அந்த மனிதர் எவ்வளவு பெரிய மோசக்காரர், என்னிடமிருந்து அதை மறைப்பதற்காகவே டர்பன் கட்டியிருந்தார் என்பதை உணர்ந்தேன். அவர் தலையின் உச்சியிலே ஒரு வாஷர் அகலத்தில் ஆறு அங்குல நீளத்திற்கு 'வால் பிளக்'கு செருகியதுபோல் குடுமி வைத்திருக்கிறார்.

(பி.கு.) இது எனக்கு மட்டுமல்ல, எந்தப் பெண்ணுக்குமே அருவருப்பை அளிக்கும்.

9. அமாவாசை, பௌர்ணமி முதலிய நாட்களில் அவர் காதல் உணர்ச்சி இல்லாமல் மாத்துப் போய்விடுகிறார். என் அறைப்பக்கமே வருவதில்லை.

(பி.கு.) அவருடைய நாய் மோகனுக்குப் பயித்தியம் பிடித்திருந்தபோது, அதுவும் அமாவாசையன்று பட்டினி கிடந்தது.

10. இதைத் தவிர, இரவில் தூக்கத்தில் 'மோகனா, மோகனா' என்று புலம்புகிறார். கியால் பாடுகிறார். ஒரு நாள் இரவு என்னையே மோகனா என்று கூப்பிட்டுவிட்டார்.

(பி.கு.) இது என் தூக்கத்துக்கும் வாழ்வுக்கும் இடையூறாக இருக்கிறது.

இதைப் படித்தவுடன் கிட்டாவய்யர் கடகடவென்று சிரித்தார்.

"என்ன சார் சிரிக்கிறீர்கள்? இது அவ்வளவும் பொய். அவருக்கு உண்மையாக உள்ள பைத்தியத்தைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை," என்று ஆத்திரத்தில் சீறினார் வைத்திஜி.

"அப்படியானால் உங்க மகாராஜாவுக்குப் பைத்தியம் உண்டா?"



"உண்டு சார். அவருக்கு டான்சிலே பைத்தியம், மியூசிக்லே பைத்தியம். ஆர்ட்டிலே பைத்தியம். ஒரு பட்டுப் புடவையின் கரை அழகாயிருந்ததுன்னா அவர்நாலு நாழி பார்த்துக்கொண்டேயிருப்பார். இதுக்காகப் பெண்பிள்ளையைப் பார்க்கிறார் என்று சொல்ல முடியுமா?" என்றார் வைத்திஜி.

"அச்சிபாத் வைத்திஜி அச்சிபாத்!" என்றார் மகாராஜா.

'அடச்சீ, கெடுத்தானே' என்று எண்ணிக்கொண்டார் கிட்டாவய்யர்.

"நான் ஆர்த்தடாக்சா இருப்பதை அவள், பைத்தியம் என்று கருதுகிறாள் சார். நான் ஹிந்து. சிகையும் திலகமும் இல்லாமல் இருக்க முடியுமா?" என்றார் மகாராஜா.

"எனக்குத் தெரிகிறது சார். அவர் ஊர் ஜட்ஜுக்கு உங்க வைதிகம் தெரியாதே! அதுதானே கஷ்டம்?"

"என்னைப் போய் பைத்தியம்னு நினைச்சுட்டாளே சார்!"

"நினைத்தால் நினைச்சுட்டுப் போகட்டுமே. உங்களுக்கு என்ன அதிலே நஷ்டம்?"

"இல்லே சார். வெள்ளைக்காரன் சமாசாரம் உங்களுக்குத் தெரியாது. முந்தி நம்ப ஊர் மகாராஜா நாலுபேரைப் பைத்தியம்னு சொல்லி வைத்தியத்துக்கு அழைச்சுண்டு போறேன்னு பேர்பண்ணி லண்டன்லே கொண்டுபோய் ஜெயிலிலே போட்டுட்டு, வேறே ஆளுக்குப் பட்டத்தைக் கட்டி வைச்சாங்களாம். அது மாதிரி நம்ப மகாராஜாவையும் செய்துவிட்டாங்கன்னா?" என்றார் வைத்தி.

"அப்படிச் செய்யமுடியாது சார். சட்டம் இருக்கு" என்றார் கிட்டாவய்யர்.

"ஆனாலும் அவங்க சட்டம்தானே சார் நீட்டவும் வரும், மடக்கவும் வரும்" என்றார் வைத்தி. இதைக் கேட்கக் கேட்க மகாராஜா நடுங்கினார். முகம் வெளுத்தது.

"இந்த 'அபிடவிட்'டைப் பார்த்து எனக்கே ஒரு 'டவுட்டு' சார். பைத்தியம் பைத்தியம்னு அவள் சொல்லிச் சொல்லி, நான் பைத்தியமா, இல்லே, ஒழுங்கான மகாராஜாதானான்னு எனக்கே சந்தேகம் வந்துடுத்து" என்றார் மகாராஜா.

இதைக் கேட்ட கிட்டாவய்யருக்கும் ஒரு சந்தேகம் வந்தது. பணத்தை இப்போதே வாங்கலாமா, பிறகு வாங்கிக்கொள்ளலாமா என்பதுதான் அந்த சந்தேகம்.

"ஹைனஸ், பைத்தியம்னு புரூப் பண்றது கஷ்டம். அப்படியே புரூப் பண்ணினாலும், உங்க பிரஜைகள் எல்லாம் உங்களைக் கைவிடமாட்டா" என்றார் வைத்திஜி.

"அதிலும் ஒரு கஷ்டம் இருக்கு வைத்திஜி. அந்தப் பிரஜைகள் எல்லாம் நான் இந்த வெள்ளைக்காரியைக் கல்யாணம் செய்துகொண்டு

முதலே என்னைப் பைத்தியம்னு நினைக்கிறாங்க. இந்த உலகத்திலே நீங்களும் நம்ம வக்கீலும்தான்....''

''நானும் உங்களைப் பைத்தியம்னு நினைச்சால், அப்புறம் உங்க செக்கை வாங்குவேனா?'' என்றார் கிட்டாவய்யர்.

செக்கை வாங்குவாரா? பணத்தைத்தான் வாங்குவார் என்ற எண்ணத்தில் வைத்தி சிரித்தார். ஆனால் மகாராஜா அடுத்தாற்போல் சொல்லிய வார்த்தையில் வக்கீல், வைத்திஜி இருவருமே திகைத்தார்கள்.

''கேளுங்கோ வக்கீல்ஜீ. சீமையிலே கொஞ்ச நாளைக்கு என்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் அடைச்சு வச்சு, அப்சர்வ் பண்ணிப்பார்க்கிறது அப்படின்னு அவன் பிளான் போட்டான். இது தெரிஞ்சுதான் நான் பாதிக் கேஸிலே ஓடி வந்துட்டேன்'' என்றார் மகாராஜா.

இதைக் கேட்டதும் வைத்தி துடித்தார். ''என்ன! ஆஸ்பத்திரியிலே அடைக்கிறதா? அதனாலேயே பைத்தியம் புடிச்சுடுமே. என்ன வக்கீல் சார்?''

''இந்தக் கேசுக்கு நீங்கள் சீமைக்குப் புறப்பட வேண்டியதாக இருக்கும்'' என்றார் மகாராஜா.

''அதுக்கென்ன நாளையே புறப்பட்டுட்டாப் போகுது'' என்றார் வைத்திஜி.

''நீங்க இல்லை வைத்திஜி. நான் வக்கீலைக் கேட்கிறேன்.''

''நான் எங்கே சார் புறப்படறது! மியூசிக் சீசன் வருது. கச்சேரி எல்லாம் ஏற்பாடு செய்யணும். இந்த வருஷம் என்னை செக்ரடரியாப் போட்டுட்டா'' என்று இழுத்தார் வக்கீல்.

''அப்படிச் சொல்லப்படாது. நீங்க வந்தால்தான் என் மனசுக்குத் திருப்தியாக இருக்கும். அதற்கு முன்னாலே இந்த மோகனா கேசை ஜல்தியா முடிக்கணும்.''

''கேசை முடிக்கிறதும், எடுக்கிறதும் நம்ம கையிலா இருக்கிறது? நீங்களோ இப்பொழுது வெள்ளைக்காரனைக் கண்டாலே பயப்படறேள். ஏன், இந்தக் கேசை ராஜி பண்ணிடுங்களேன்?'' என்றார் கிட்டாவய்யர்.

''ராஜியா, என்னை எதிர்த்தவனை எதிர்ப்பதுதான் என் தர்மம். நான் முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது.''

''அவன் க்ஷத்திரியனல்ல மகாராஜா, வித்வான். க்ஷத்திரியனோடு தான் நீங்கள், முன் வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது. அவர் உங்களுக்குத் தகுந்த எதிரியும் இல்லை. நீங்கள் மகாராஜா. அவான் இரண்டு பேரும் ஏதோ கச்சேரி செய்து பிழைக்கிறவர்கள். பேசாமல் கேசை வாபஸ் வாங்கிடுங்கோ. நம்ப சீமைக்குப் போகிறதைப் பத்தி யோசனை பண்ணலாம்'' என்று இரக்கம் ததும்பக் கூறினார்



கிட்டாவய்யர். அப்பொழுது வைத்தி என்ன நினைத்தாரோ என்னவோ ''அதுதான் சரி மகாராஜா'' என்றார்.

கிட்டாவய்யர் திடுக்கிட்டார். மகாராஜாவோ விழித்துப் பார்த்தார்.

''நடந்தது நடந்துவிட்டது. என்னைக் கேட்டா, இனிமே அந்தக் கேசை பிரஸ் பண்ணுவது சரியல்ல'' என்றார் வைத்தி. இதைக் கேட்டதும் பட்டாசில் நெருப்புப் பற்றுவதுபோல் மகாராஜாவுக்கு ஆத்திரம் வந்தது.

''ஏன் சரியில்லை?''

''ஆமாம், மகாராஜா. கேஸிலே ஏதாவது பாக்கியிருந்தாலோ அவளை ஆடக்கூடாது என்று தடுத்தீர்கள், அவள் இரண்டொருமுறை ஆடிவிட்டாள். இவனை வாசிக்கக்கூடாது என்று தடுத்தீர்கள். அவன் பதினாயிரம் ஜனங்களுக்கு மத்தியில் வாசித்துவிட்டான். இவ்வளவு அவமானம் வந்ததற்கப்புறம் இனிமே கேசை நடத்தினால் என்ன, நடத்தாவிட்டால் என்ன?''

''வைத்திஜி, நம்முடைய சமஸ்தானத்திலே எத்தனை பிரஜைகள் தெரியுமா?''

''மொத்தம் ஐந்து லட்சம் என்று கேள்விப்பட்டேன்.''

''இல்லே, ஓடிப்போனவங்க போக மிச்சம் ஆறு லட்சம் பேர் இன்னும் இருக்காங்க. இந்தப் பதினாயிரம் பேருக்குப் பயந்துகொண்டு ஆறு லட்சத்தின் அரசன் ஒரு கேசை விட்டுவிடுவானா?''

''உங்களுக்குப் பிரஜை ஆறு லட்சந்தானே மகாராஜா. அதை யாரு லட்சியம் செய்யறாங்க? ஆனால் அவனுக்கு ஒரு கச்சேரிக்குப் பதினாயிரம் வீதம் கணக்கு வச்சுப் பாருங்கோ.''

''அதற்காக?''

''எல்லோரும் தலையை ஆட்டுறாங்களே''

''எனக்கும் தலையாட்ட ஆள் இருக்கிறது'' என்று சீறினார் மகாராஜா.

''இல்லையா பின்னே?'' என்றார் வைத்தி. அவர் தலை ஆடுவதைப் பார்த்து மகாராஜா திருப்தி அடைந்தார்.

''என்ன இருந்தாலும் உங்களைவிட அவன்தான் பெரியவன். உங்களுக்கு மகாராஜான்னுதான் பட்டம். அவன் இனிமே சக்ரவர்த்தின்னுகூட பட்டம் வச்சுப்பான். இப்போதான் பட்டத்தை யாரு வச்சுக்கிறதுன்னு கணக்கில்லியே!''

''வைத்தி, என் பணம் முழுதும் போனாலும் சரி, நான் இதை விடப் போவதில்லை.''

''நான் சொல்றேன் கேளுங்கோ. உங்க பணமும் காணாது.''

''ஏன் காணாது?''

''அவனுக்கும் பண பலமும் இருக்கு. காரைக்கால்காரன் ஒருவன் கையிலே பணத்தை வைத்துக்கொண்டு காத்திருக்கான். போறாததுக்கு ஒரு பண்டார சந்நிதி வேறே இப்போ சேர்ந்து இருக்கார்.''

பண்டாரசன்னிதி என்று சொன்னவுடனே, "வாட் சன்னிதி?" என்று மகாராஜா பயந்து கையைக் கட்டிக்கொண்டார்.

"சன்னிதின்னா கோவில் இல்லே தர்மகர்த்தா ஒரு பண்டாரம்...."

"ஓஹோ பண்டாரி! அதாவது கோடவுன்...."

"கிட்டங்கியில்லே மகாராஜா. எங்க பக்கங்களிலே பண்டாரம்னு சொன்னா, சகல சாஸ்திரங்களையும் படிச்சவான்னு அர்த்தம். அந்த மாதிரி ஒருவர் சேர்ந்திருக்கார்."

"இவர்கள் எல்லாம் சேர்ந்து என்ன செய்யப் போகிறார்கள்?"

"ஒரு வடக்கத்திக்காரனை மட்டம் தட்டப் போறாங்க."

மகாராஜாவின் மீசை படபடத்தது. "அன்றைக்குச் சிக்கலிலே என்ன நடந்தது விவரமாகச் சொல்லும்!"

வைத்தி சொல்ல ஆரம்பித்தார். "மகாராஜா! எனக்குத் தர்மம், சத்தியம், நீதி இதுதான் பெரிசு.

"நீங்க இங்கே இல்லாத சமயத்திலே உங்க பேருக்கு அவமானம் வந்துவிடப் படாதேன்னு நான் பல விதங்களிலே டிரை பண்ணினேன். அப்படியும் அவன் அடங்கவில்லை. கடைசியில் அவன் நகையெல்லாம் பறிமுதல் செய்து அவனை ஆண்டியாக்கி உங்கள் காலிலே விழச் செய்வோம்னு நான் பார்த்தேன். அவன் என்னடான்னா, ஆளை விட்டு அடிச்சு என் மண்டையை உடைச்சுப்பிட்டான்! அதனாலே ஒன்றும் நஷ்டமில்லை. பட்டுத்தலைப்பா பாண்டேஜை மறைக்கிறது. சரி, என்ன வந்தாலும் வரட்டும். ராஜசேவையிலே இந்த உயிர் போனாலும் சரி என்று...."

"வைத்தி, நீங்க சொல்றது பொய். ஏதோ தண்டவாளத்திலே அடிபட்டேன் என்று அல்லவா என்னிடம் சொன்னீர்கள்?" என்றார் வக்கீல்.

"ஆமா சார், சொன்னேன். வக்கீல் கிட்டத்தானே பொய் சொன்னேன், கோர்ட்டிலா சொன்னேன்? நீங்களோ சங்கீத ரஸிகர். அவன் வித்வான். நான் வந்து உங்களிடம் அவன் அடித்தான் என்று சொன்னால் உங்கள் காதில் அது ஏறுமா சார்? மகாராஜாவையே கேஸை வாபஸ் வாங்கச் சொல்லுகிறீர்கள் நீங்கள். நான் அவன் மேலே ரிப்போர்ட்டு செய்தால் நடக்குமா?" என்று வைத்தி சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு சரமாரியாய்ப் பேசினார். உடனே, மகாராஜா, "ஆ, அப்படியா விஷயம்!" என்று ஆச்சரியப்பட்டார்.

கிட்டாவய்யரோ எதிர்க்கட்சி வக்கீலிடமும் கோபம் கொள்ளாதவராகையால் வைத்தியின் தப்புச் சாமர்த்தியத்தில் ஆச்சரியப்பட்டார்.

"அப்புறம் சிக்கலில் என்ன நடந்தது. சொல்லும்" என்று உறுமினார் மகாராஜா.



"ஒன்றும் நடக்கலே. 'தேவஸ்தானத்தைவிட சமஸ்தானம் பெரிசா? இந்தப் பரதேசியைவிட அந்த மகாராஜா பெரிசா' அப்படின்னு அந்தப் பண்டார சன்னிதி ஏதோ புரிஞ்சுக்காமல் கேட்டார். எனக்கு வந்த கோபத்திலே என்னென்னமோ செய்யணும்னு தோன்றியது. நீங்க ரொம்ப பயந்தவராச்சே, வம்பு வழக்குன்னா பிடிக்காதே. உங்க உத்தரவு இல்லாமே எதையும் செய்யப்படாதுன்னு பல்லைக் கடித்துக்கொண்டு பேசாமல் இருந்தேன். இல்லாட்டா........"

"யாரு? நானா பயந்தவன்? என்னைவிடப் பெரியவரா அந்தப் பண்டாரம்? இல்லே அந்த ஷெனாய்வாலா - இல்லே நாதஸ்வரம் வாலா - என்னைவிடப் பெரியவனா? என்னுடைய சீமை ட்ரிப் கான்சலானதற்கு அவன் காரணம். என்னுடைய மனைவி டைவர்ஸ் ஆவதற்கு அவன் காரணம். என்னுடைய மானம் போனதற்கு அவன் காரணம். என்னைப் பைத்தியம்னு சொல்ல அவன்தானே காரணம்?"

"போங்க மகாராஜா! இந்த வைத்தி இருக்கும் வரையில் உங்க மானத்தை வேறே எந்த ஆளும் வாங்கிவிட முடியாது. அந்தப் பண்டார சன்னிதியார் அப்படி அவமானமாய்ப் பேசினவுடனே அந்தப் பதினாயிரம் பேரும் ஒரு கிளாப்ஸ் அடிச்சாங்க பாருங்கோ; எனக்கு மகாராஜாவையே அறைஞ்ச மாதிரி இருந்தது. அப்படியே உடம்பெல்லாம் பத்தி எரிந்தது. கூடத்திலே புகுந்து, வந்தது வரட்டும்னு பிரளயம் ஆடிப்பிடலாமான்னு தோணித்து."

"அச்சாஜீ!"

"மிச்சத்தையும் கேளுங்கோ. இந்த வடிவாம்பா கையிலே ஐந்நூறு ரூபாய் பணம் கொடுத்தேன். தனியாகக் கூட்டிக்கிட்டுப் போய், கேஸ் இருக்கட்டும். இது மகாராஜாவுக்கு அவமானம், ஆட வேண்டாம், வாசிக்க வேண்டாமுன்னு சொன்னேன். அவங்க கேட்டாத்தானே?"

"வைத்திஜீ. என் வாழ்க்கையிலே இனிமே வேறே இன்டரஸ்ட் கிடையாது. இந்தப் பயலையும், அந்தப் பெண்ணையும் பிடிச்சு உள்ளே போடறதுதான் என் இன்டரஸ்ட். வழக்கு நடக்கட்டும். இந்த வக்கீல் போறாதுன்னா நான் வடக்கேயிருந்து வக்கீலை கூட்டிக்கிட்டு வர்றேன்" என்றார் மகாராஜா.

தன் எதிரிலேயே மகாராஜா இவ்வாறு கூறுவதைக் கேட்ட கிட்டாவய்யர், ஒரு கணம் யோசித்தார். "ரொம்ப சரி மகாராஜா" என்று சொல்லிவிட்டு சரேல் என்று எழுந்து வெளியே நடந்தார்.

வைத்தி கவனித்தே விட்டார். மகாராஜாவின் கேஸ் வலுவாயிற்று. கிட்டாவய்யருக்கும் பாரம் விட்டதுபோல் இருந்தது. வைத்தியும் தனக்கு இன்னும் ஆறு மாதத்திற்குச் செலவுக்கு முடை இல்லையென்று நிச்சயம் செய்துகொண்டார்.

அப்போது "சார்! வைத்திஜீ இருக்கிறாரா?" என்று கேட்டுக் கொண்டே ஒரு பையன் ஒரு சீட்டை வைத்தியிடம் கொடுத்தான். அதைப்

பார்த்ததும் வைத்திக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் வெற்றியெல்லாம் பறந்து நெற்றியில் வியர்த்தது.

"இதோ வந்துவிட்டேன்" என்று மகாராஜாவிடம் சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

அது என்னமோ அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கியதும் வைத்திக்குக் கை நடுங்கியது. அந்த விசிட்டிங் கார்டு இமயமாய்க் கனத்தது. 'ஒரு காகிதம் இப்படிக் கனக்குமா?' என்று சந்தேகம் ஏற்படலாம். தயவு செய்து பிறர் பணம் ஆயிரம் ரூபாயை உங்கள் பையில் ஒரு நாள் வைத்துப் பாருங்கள்! சட்டை எவ்வளவு கனக்கிறதென்று தெரியும்.

ஆனால் வைத்தியின் பையில் மட்டும் அது கூடக் கனப்பது இல்லை. அப்படி இருக்க, இன்று இந்த விசிட்டிங் கார்டு மட்டும் கனப்பானேன்?

மறுமுறையும் அந்தக் கார்டைப் பார்த்தார். கொல்லை வழியாக ஓடி விடத் தயாரானார். ஒருவரும் பாராத சமயத்தில் கொல்லைச் சுவர் மேல் ஏறிக் குதித்தார். கூவத்தில் விழுந்தார். அட கஷ்டமே! ராமேசுவரம் போகும் போது பாம்பன் குறுக்கிட்டாற் போல், அங்கே கூவம் குறுக்கிட்டது. அதில் இறங்கி நடந்தார். வேறு வினையே வேண்டாம். போலீஸ் ஊதுகுழல் கேட்டது. திடுக்கிட்டார் வைத்தி. "என்ன நாயினா, பட்டப் பகலிலே தற்கொலை முயற்சி?" என்றார் ஒரு போலீஸ்காரர்.

"தற்கொலை இல்லே சார். இன்னிக்குக் கிருத்திகை. சமுத்திர ஸ்நானம் செய்யணும், டயமில்லை. கூவமும் கடல்தானே என்று குளிக்க வந்தேன்" என்றார். அவர் உடம்பு நடுங்கியது.

"சரி நாயினா, குளிர் நடுக்குதா? சுபால்னு ஒரு முழுக்குப் போட்டுட்டுக் கரையேறு" என்றார் போலீஸ்காரர்.

என்ன செய்வது! வைத்தி மூக்கைப் பிடித்துக்கொண்டு முழுகினார். மூக்கைப் பிடித்தால் என்ன? காது வழியாக நாற்றம் உள்ளே ஏறியது. வைத்தி கரையேறினார்.

"குட்மார்னிங் சார்" என்றது. ஒரு குரல்.

"அடபாவி, இங்கேயும் வந்துவிட்டானா?' என்று எண்ணியபடி, "ஹௌ டு யூ டூ? மிஸ்டர் பர்னான்டஸ்" என்றார் வைத்தி.

அந்த ஆள் திகைத்தார்.

"பர்னான்டஸா? என் பெயர் ஜோசப்புன்னா?"

"ஜோசப்பா, நீ பர்னான்டஸ்னு சொன்னதாக ஞாபகம்."

"அது என் அங்கிள் ஸார்."

"ஓஹோ, உங்க அங்கிளா? நீ உன் சித்தப்பா பெயரை என்கிட்டே பேசியிருக்கே. நான் அதைக் கேட்டு உன் பெயருன்னு நினைச்சுட்டேன். அப்படின்னா செக்கை எப்படி மாத்தினே?"



"செக்கா?" என்று விழித்தார் கொழும்பு ஓட்டல் மானேஜர்.

"என்ன முழிக்கறே. உங்க சித்தப்பா மாத்திட்டானா இல்லையா?"

"சார் எனக்குத் தலையைச் சுத்துது சார்!"

"கூவத்திலே ஒரு முழுக்குப் போடு. சரியாப் போகும். அப்படியே வாட்டர் ஜில்லுஜில்லுன்னு இருக்கு."

"இல்லை சார், ஏதோ செக்குன்னு சொன்னீங்களே?"

"அதுக்கும் சேர்த்து முழுகு. ஆமா, அப்படியானா நான் அனுப்பிய செக்கு உண்மையிலேயே உன் கையிலே கிடைக்கலியா?"

"இல்லை சார். போலீஸிலே ரிப்போர்ட் பண்ணிவிடுவோமா சார், செக் வேறே பேருக்குப் போயிருக்குன்னு?"

"வேறே ஒருத்தன் பர்னான்டஸ்னு சொல்லி மாத்திவிடவா போகிறான்?"

"மாத்தினாலும் மாத்திவிடுவாங்க சார், எங்க சித்தப்பா. அந்த ஆளு குணம் உங்களுக்குத் தெரியாது. பெரிய கட் த்ரோட்டு."

"ஒருகாலும் மாத்திவிட முடியாது" என்று வைத்தி அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டார். ஏனெனில் அனுப்பவில்லையென்பது அவருக்குத்தானே தெரியும்.

"ஆமாம், இப்போ என் பெயருக்கு ஒரு செக் போட்டுக் கொடுத்து விடுங்களேன்."

"அது எப்படிக் கொடுக்க முடியும்? மகாராஜாகிட்டே கையெழுத்து வாங்கின்னா கொடுக்கணும்? எப்படியும் அந்தச் செக் இன்னும் நாலு நாளிலே திரும்பி வந்துவிடும். அது வந்தவுடனே, மகாராஜாகிட்டே காண்பிச்சு, ஒரு கையெழுத்து வாங்கி உங்களுக்கு அனுப்பிடறேன். மை டியர், உங்களுக்கு நான் பாக்கி எவ்வளவு கொடுக்கணும்?"

"கணக்குத் தெரியாமலா செக்கு அனுப்பினீங்க?"

"இதிலே கணக்கு என்ன பர்னான்டஸ்..... உம்.... மகாராஜா சீமைக்குப் போயிட்டு வந்ததும் எல்லோருக்கும் இனாம் தருவாரு. அது வழக்கம். நான் உன் பெயரையும் லிஸ்டுலே போட்டு வச்சேன். ஒரு செக்கு கையெழுத்துப் போட்டாரு."

"எவ்வளவு சார்?" என்று அதிக ஆவலுடன் கேட்டார் அந்த மானேஜர்.

"ஏன், இனாம் என்றவுடனே இனிக்கிறதோ? ஆயிரத்து இருநூறு ரூபாய்."

ஹோட்டல் மானேஜருக்கு, ஆயிரத்து இருநூறு ரூபாய் இனாம் என்றவுடனே பெரிய புதையல் கிடைத்தது போல் எண்ணினார்.

"என்ன எஜமான், இவ்வளவு பெரிய தொகையைத் தப்பா அந்த ஆளு பேருக்கு அனுப்பிச்சுட்டீங்களே!"

''அனுப்பினா என்ன? நாளைக்கே வேறே செக்கு வாங்கிக்கரேன்'' என்றார் வைத்தி.

''ரொம்ப தாங்ஸ், சார்'' என்றார் ஜோசப்.

''ஆமா, நான் பாக்கி எவ்வளவு தரணும். அதைச் சொல்லலியே!''

''ஹோட்டல் பில்லு 4800 ரூபாய்ங்க.''

''அந்த ஜுவல் பாக்ஸ் ஜாக்கிரதையா இருக்கா?''

''இருக்குங்க. அந்த ஆயிரத்தையும் சேர்த்தால் ரூ.5,800.''

''ரூ.3,800 இன்டரஸ்ட் என்ன ஆகியிருக்கிறது?''

''சே, சே, அதெல்லாம் ஒண்ணும் வேண்டாங்க.''

''தோ, தோ, நீங்கள் எல்லாம் ஏழைகள். இதை வச்சுண்டு பிழைக்கிறவாள். எவ்வளவு வட்டியாகியிருக்கிறது சொல்.''

''அது ஒரு 500.''

''ஆக 6,300, நீ கொழும்பிலிருந்து இங்கே வந்த செலவு?''

''அது என்ன நூறு ரூபாயாகப் போகிறது. நான் இதுக்காக மாத்திரம் தானா வந்தேன்? இன்னும் எத்தனையோ வேலை இருக்கே.''

''அந்த நூறு ரூபாயையும் சேரு. 6,400.''

''உங்க தயவுங்க'' என்று ஆனந்தத்தோடு கூறினார் ஹோட்டல் மானேஜர்.

''மிச்சம் 600 ரூபாய் கொடு. 7 ஆயிரமாக உனக்கு செக் அனுப்பிடறேன்.'' இதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது மானேஜருக்கு.

''என் கையிலே இந்தியன் கரன்ஸி அவ்வளவு இல்லீங்க.''

''பின்னே எவ்வளவு இருக்கு?''

''ஏதோ இருநூறு, முந்நூறு இருக்கும்.''

''சரி பின்னே, 100 கொடு. ரவுண்ட் சம்மா போட்டு அனுப்பிடறேன்.''

''இந்தாங்க 100 ரூபாய்.''

''அந்த எதிர் இடம் என்னவாச்சு?''

''அது எப்பவும் தயாருங்க. ஆமா, இந்த இனாம் 1200.''

''அதுதானே கிடைக்கிறது.''

ஹோட்டல் மானேஜருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

''சார், ஒரு சந்தேகம்! என்ன இந்த நேரத்திலே பாத் பண்றீங்க?''

''உங்கிட்ட சொல்றதுக்கென்ன? அது என்னமோ ஒன்று. விட்டில் ஓவர் டோஸ்!''

''அப்படிங்களா? என்ன சார் அது?''

''சும்மா தப்புக் கொட்டாதே! வா, என்கூட'' என்றார் வைத்தி.



# சோதிடத்தின் ஆசையிலே சொக்கினார் மகாராஜா!



''நீ சும்மா இரு மாப்பிளே. அசல்லே தோத்தால், அப்பீல் இருக்கு! அப்பீல்லே தோத்தால், புல்பெஞ்ச் இருக்கு! அதிலேயும் தோத்தால் பிரிவி கவுன்சில் இருக்கவே இருக்கு. பேசாமே சண்முகம், கேஸை நடப்ப விட்டே விட்டுடு...''

''என்னப்பா, ஆரம்பத்திலேயே தோல்வியை கணக்குப் போடறீங்க?'' என்றாள் மங்கையர்க்கரசி மரகதம்.

''ஆமாம் மரகதம். கேஸ்னு வந்துட்டா, தோல்வியை வச்சித்தான் கணக்குப் பார்க்கணும். வழக்கிலிட்டே நீளத்திலே போகும். குப்புற விழுகிறானா, மல்லாக்க விழுகிறானாங்கறதுதான் முக்கியம். கேஸ் முதல்லே முடியுதா, ஆயுசு முதல்லே முடியுதான்னு யாரும் சொல்லிப்பிட முடியாது.''

''என் மாமா, நீங்க போடற கணக்கைப் பார்த்தா... ஒரு லட்சம் ரூபாயாவது ஆகும் போலிருக்கே கேஸுக்கு?''

''ஆகட்டுமே, என்ன இப்போ நஷ்டம்?'' சண்முகத்துக்காக மைனர் வழக்காடினார். லட்சம் ரூபாயைத் தண்ணியாட்டம் வாரியிறைத்தான் அப்படீன்னு ஊர்லே சொன்னா உனக்கு நல்ல பெயர்தானே?''

''என்னப்பா, தண்ணியை வயல்லே இறைச்சா விளையும். வழக்கிலே இறைச்சா....?''

''ஓர் அளவுக்கு இரண்டும் ஒண்ணுதானம்மா. வயல்லே இறைச்சா பணம் விளையும். வழக்கிலே இறைச்சா கௌரவம் விளையும். நம்பளுக்குக் கௌரவம்தான் பிரதானம்.''

''ஆக, உங்க பிளான்?'' என்றார் மைனர்.

''என் பிளான் இப்ப ஒண்ணும் சொல்ல முடியாது. பட்டணத்துக்குப் போயி, அங்கேயுள்ள நிலைமையைப் பொறுத்துத்தான் எல்லாம். நான் நாளைக்கே போறேன் பட்டணத்துக்கு. நீ ஒரு பங்களாவை வாடகைக்குப் பிடிச்சுக் கொடுத்துடு. இரண்டு சமையல்காரனைப் போட்டுடு.''

''ஏனப்பா, கலியாணம் வேண்டாமா?''

''அட, போம்மா நீ ஒண்ணு. இத்தனை வயசுக்கு மேலே எனக்குக் கலியாணம்தான் வேண்டியிருக்கு!''

''பின்னே என்னப்பா, பட்டணத்துக்குப் போயி, வழக்கு நடத்துங்கன்னு சொன்னா, குடும்பம் நடத்தறேங்கறீங்களே!''

''வேறே என்ன செய்யச் சொல்லறே? ஹைகோர்ட்டிலே போய் வராண்டாவிலே நின்னுக்கிட்டு வக்கீல் பின்னாலே நடக்கச் சொல்றியா? இதெல்லாம் தெற்கத்தியான் செய்யற வேலையில்லே. நம்ப எவ்வளவுக்கு கெடுபிடி பண்ணறமோ, அவ்வளவுக்கவ்வளவு வழக்கும் ஜெயிக்கும். மயிலாப்பூரிலே பங்களாவைப் பிடிச்சு, 'நாதஸ்வரம் சண்முகம் பிள்ளை வழக்கு ஆபீஸ்' அப்படீன்னு ஒரு போர்டும் போட்டுடச் சொல்வேன்.''

''ஏது, மாமா போற போக்கைப் பார்த்தால், மகாராஜா ராஜிக்கு வந்தாலும், மாமா விடமாட்டாங்க போலிருக்கே?''

''ஆமாம், செய்தவனுக்குச் செய்யுறது செத்ததுக்கப்புறமா? வழக்குன்னு வந்தப்புறம் எப்படி விட முடியும்? இந்தக் கடம்பவனம் உயிரோடே இருக்கிறபோதே இன்னொரு கேசையும் ஜெயிச்சுட்டான்னு நல்ல பேரு வரட்டும். நீ ஒரு போட்டோக்கிராபரை மாத்திரம் பேசிவிடு மாசச் சம்பளத்திற்கு.''

''அது எதற்கு மாமா?''

''அதிலேதான் இருக்கு சூட்சுமம். எதிர்க் கட்சிக்காரன் எதைச் செய்தாலும் போட்டோ எடுக்கணும். கோர்ட் வாசலிலே அவனும் சாட்சியும் சந்திச்சா போட்டோ, வக்கீலும் சாட்சியும் பேசினால் போட்டோ. அப்போதான் கேசை உடைக்கலாம்.''

''அத்தான், மகாராஜா எவ்வளவு ரூபாய் நஷ்டம் கேட்கிறாரு?'' என்றாள் மரகதம். கடம்பவனம் திகைத்தார்.

''நீ ஏன் அதைக் கேட்கிறே? ஒரு லட்சம் ரூபாய் கேட்கிறாரு'' என்றார் மைனர்.

''பேசாமே, அந்த லட்சம் ரூபாயை அவர் கையிலே கொடுத்துட்டு, ராசி பண்ணிக்குங்கோ. எங்க அப்பா கையிலே கேசைக் கொடுத்தீங்க, நம்ப பணம் தொலைஞ்சதுதான்! எங்க அப்பா இப்பொழுது போடற பிளானுக்கு இரண்டு லட்சம் இல்லே. இருபது லட்சம் இருந்தாலும் போதாது!''

''சும்மா இரு மரகதம், விளையாட்டுத்தனமாகப் பேசாதே. இப்ப என் கையிலே மூணு ராஜா இருக்கு, உன் கையிலே மூணு ஆஸ் இருக்கு. விடுவியா? புரட்டச் சொல்லுவாயா? ராசியாமில்லே ராசி!'' என்று ஆத்திரத்தோடு தன் மகளிடம் கேட்டார் கடம்பவனம்.

''நான் அந்தச் சீட்டுக் கட்டையே கிழிச்சு அடுப்பிலே போட்டிடுவேன்'' என்று அவள் சொன்ன பிறகுதான், 'ஓஹோ! சீட்டாட்டத்தைப்பற்றி அவளிடம் பேசிவிட்டோமோ' என்று உணர்ந்தார். அவர் ஆத்திரம் அடங்கியது. சாந்தமாகப் பேச ஆரம்பித்தார்.



''மரகதம், இப்படிப் புலிக்குப் பிறந்து பூனையா போயிட்டியே அம்மா! வழக்கிலே மாத்திரம் விட்டுக் கொடுக்கப்படாது. அவன் ஒரு வழக்குப் போட்டானில்லே நம்ப ஒன்பது வழக்கு உண்டு பண்ணணும். ஒரு நாளைக்கு அவங்க குதிரை வண்டிக்காரனைப் பிடிச்சு யாராவது அடிச்சுவிடுவான். ஒரு நாளைக்கு வைத்தியை மண்டையிலே ஒரு தட்டு தட்டுவான். இன்னொரு நாளைக்கு மகாராஜா பிட்டலிலே கல் விழும். அந்த ராஜாவையும், அவங்க வக்கீலையும் தூங்கவிட மாட்டேன். மாசம் முப்பது நாளும் வாய்தா வாய்தான்னு இழுத்தடிப்பேன். கோர்ட் தொல்லையே வேண்டாமன்னு அவங்க ஓடணும்!'' என்று கடம்பவனம் தன்னுடைய சாமர்த்தியம் எல்லாவற்றையும் உள்ளங்கை நெல்லிக் கனியாக எடுத்து வைத்தார்.

அப்படியிருந்தும் சண்முகத்தின் மேல் மைனருக்கு உள்ள பிரியத்தால், சென்னையில் கடம்பவனம் பிள்ளையின் ஆபீஸ் திறக்கப் பட்டது. இரண்டு குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டார்கள். முன்பு வக்கீலாக இருந்து, கோர்ட்டாரால் சன்னது பறிக்கப்பட்ட வக்கீல் ஒருவர் கடம்பவனத்தின் வலது கையாக வந்து சேர்ந்தார். இருபது அடியாட்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வைத்தியும் சளைக்கவில்லை. கடம்பவனத்தின் ஆபீசு மயிலாப்பூரில் இருந்தது. அதற்குப் பக்கத்துப் பங்களாவையே வைத்தி வாடகைக்கு எடுத்துக்கொண்டார்.

மயிலாப்பூரிலுள்ள இரண்டு ஹோட்டல்கள், இவர்களின் பற்று வரவுக் கடைகளாக ஏற்பட்டன. மகாராஜாவின் பணத்தை, வைத்தி தன் பணமாகவே எப்பொழுதும் போலக் கருதிவிட்டார். ஆனால் பணம் மாத்திரம் போதுமா வழக்குக்கு? வக்கீல் அல்லவா முக்கியம்?

''மந்திரம் கால், மதி முக்கால்'' என்பது பழமொழி. ''வழக்கு கால், வக்கீல் முக்கால்'' என்பது புதுமொழி.

சில வக்கீல்கள் நல்ல வழக்கைக்கூடப் பேசத் தெரியாமல் பேசிக் கெடுத்துவிடுவார்கள். சிலருக்கு கோர்ட்டுக்கு வந்தவுடன் தொண்டை கட்டும். சிலருக்குப் பேசும்போது, முகம் விகாரமாக ஆகும். எத்தனை நாழிகையடா இந்தக் கோரத்தைப் பார்த்துக்கொண்டே இருப்பது என்று எண்ணி 'முடியுங்கள் முடியுங்கள்!'' என்பார் நீதிபதி.

ஆபதோத்தாரணம் என்று ஒரு வக்கீல் இருந்தார். அவரை நீதிபதிகள் ''தோரணம்'' என்பார்கள். கட்சிக்காரர்களோ, ஆபத்து என்பார்கள். அவர் ஆர்குமெண்ட் செய்ய ஆரம்பித்தால், அவ்வளவு [illegible]களையும் எடுத்துத் தோரணம் கட்டிவிடுவார். நீதிபதிகளை 'லஞ்ச'க்குப் போக விடமாட்டார். நீதிபதி எழுந்திருக்கும்போது இன்னொரு பாயிண்ட் என்பார். இதற்குப் பயந்தே பல நீதிபதிகள் அவர் கேசை ஒரு வழியாக ஒழித்துவிட்ட பிறகுதான் டிபன் சாப்பிடப் போவார்கள்.

வெடி வெங்கடாசலம் என்று ஒரு வக்கீல், படிப்பில் புலி. ஜெயித்தாலும் அப்படித்தான். அவர் ஆர்குமெண்ட் செய்ய ஆரம்பித்தால் கோர்ட்டே அதிர்ந்துவிடும். சங்கிலிக் கருப்பன் சாமி வந்து ஆடுவது போல, ஆடித் தீர்த்துவிடுவார். பெஞ்சியின் மேலேறி நிற்பார். நகத்தைக் கடிப்பார். கோட்டுப் பொத்தானைத் திருகி எறிவார். அவருக்கு ஒரு சாபம். ஜூனியர் வக்கீல்களைக் கோர்ட்டில்தான் கேவலமாக நடத்துவார். அதுதான் காரணமோ என்னமோ, அவர் சட்டைப் பையிலிருந்து லா பாயிண்டுக் குறிப்புக்குப் பதில் லாண்டரி பில்தான் அகப்படும். அவர் அலமாரியிலிருந்து அள்ளி வைத்த சட்டப் புத்தகங்கள் அடுத்த கோர்ட்டிலேயே இருந்துவிடும்.

டார்லிங் பொன்னுசாமி என்று ஒரு வக்கீல். அவருக்குக் கோர்ட்டரைக் கண்டவுடனே, காதல் வந்துவிடும். புது மாட்டுப் பெண் போல வெட்கம், தும்மல், இருமல், களைப்பு, நாணம் இவைகள் எல்லாம் முடிந்து அவர் கச்சேரி செய்ய ஆரம்பிப்பதற்குள், கோர்ட் கச்சேரி முடிந்துவிடும். அவருக்கு எல்லாப் பாயிண்டுகளும் கேஸின் போது ஞாபகத்துக்கு வரும். ஆனால் தன் கட்சிக்கு அனுகூலமான பாயிண்ட் மாத்திரம் ஞாபகத்துக்கு வராது. சமையல் கட்டுக்குள் நுழையும்போது, ''அடியே இந்த ஒரு பாயிண்டுதாண்டி மறந்து போச்சு'' என்று மனைவியிடம் சொல்லிக்கொண்டே நுழைவார். அந்த அம்மாளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். ''பேசாமே கோட்டைக் கழட்டிக் கொடுங்கோ, நான் ஜாக்கெட் தைச்சுக்கிறேன்'' என்பாள்.

வக்கீலுக்கும் சங்கீத வித்வானுக்கும் முகராசிதான் முக்கியம். வக்கீலே கசாப்புக் கடைக்காரர் மாதிரியிருந்தால், கேஸ் கைலாசம் போய்விடும். கிட்டாவய்யர் நல்ல அழகன். ஒரு நாளைக்காவது அவர் சாந்துப் பொட்டு வழித்தது இல்லை. கடுக்கன் தொங்கியது இல்லை. வேஷ்டி மடிப்புக் கலைந்ததில்லை. ஆர்குமெண்ட் நடுவிலே அவர் இருமியதுகூட இல்லை. அழகாகச் சுருக்கமாகத் தெளிவாக, குழந்தைகளுக்கும் புரியும்படி பேசுவார். அத்தனை பாயிண்டுகளையும் அள்ளிக் கொட்டி, தன்னையும், ஜட்ஜையும் குழப்புவதே இல்லை. ஏதாவது ஒரு விஷயத்தை மாத்திரம் வாதத்தில் வைத்துக்கொள்வார். ஆணித்தரமாய்ப் பேசுவார். இது வரையில் ஒரு நாளாவது அவருக்குக் கோர்ட்டிலே கிளப்பு ஞாபகமும், கிளப்பிலே கோர்ட் ஞாபகமும் வந்ததில்லை. எதிரில் இருக்கும் நீதிபதியை மதித்துப் பேசுவார். அவர் தமக்கு இளையவராக இருந்தாலும், ஊருக்குப் புதியவராக இருந்தாலும், கொஞ்சம் தூக்கம் வந்தாலும் அவைகளை எல்லாம் கிட்டாவய்யர் கண்டுகொள்ளமாட்டார். ''உனக்கு முன்னாலே என்னை வாதம் செய்ய வைத்தானே கடவுள்'' என்று தலையில் அடித்துக்கொண்டு 'ராமா' என்று அழமாட்டார். அவருக்கு வித்தையிலே நம்பிக்கை உண்டு. வெற்றியிலே நிச்சயம் உண்டு. கட்சிக்காரனிடத்தில் பற்றுண்டு. அதே சமயத்தில் தன் கௌரவத்தையும் இம்மியும் விட்டுக்கொடுக்க மாட்டார்.



இந்தக் கேஸிலே வைத்தி எப்பொழுது புகுந்தாரோ, அப்பொழுதே கிட்டாவய்யர் விலக எண்ணினார். தன்னாலான வரையில் இந்த வழக்கை ராஜி செய்து வைக்க முயன்றார். மகாராஜா ஒப்புக்கொள்ளவில்லை. வைத்தி கெடுத்துவிட்டார் என்ற எண்ணமும் சமயத்தில், அவருக்கு உண்டு.

பணம் அவசியம்தான் என்றாலும், தன்னுடைய படிப்புக்கும், அந்தஸ்துக்கும் வைத்தியின் இன்ஸ்ட்ரக்ஷனின் பேரில், வக்கீல் தொழில் செய்ய அவர் விரும்பவில்லை.

குமாஸ்தா ராமசாமியைக் கொழும்புக்கு அனுப்பியபோதே, 'அந்த ஆசாமி பொய்க்கால் குதிரை, நீ ஜாக்கிரதையாக நடத்திக்கொள்' என்று சொல்லவும் சொன்னார். வழக்கோ இந்த மட்டும் வந்துவிட்டது. மகாராஜாவோ விடுவதாக இல்லை. ஆகவே, கிட்டாவய்யர் தீர யோசித்து, சிறிது சந்தர்ப்பம் கிடைத்தவுடனே, வழக்கைத் தாம் நடத்த முடியாது என்று சொல்லி, மகாராஜாவிடமே கொடுத்துவிட்டார். 'ஒன்று வைத்தியை நீங்கள் விலக்கவேண்டும், அல்லது வழக்கை என்னிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று கண்டிப்பாக எழுதிவிட்டார்.

மகாராஜாவினால் தாங்க முடியவில்லை. கிட்டாவய்யர் உதவி இல்லாவிட்டால் கெட்டுவிடும் என்று அஞ்சினார். ஆனால் வைத்தியோ கிட்டாவய்யரை வழக்கிலிருந்து வெட்டிவிட நிச்சயித்துவிட்டார்.

''வைத்திஜீ....?''

''ஜீ ஹுஜூர்?''

''அந்த வக்கீல் கிட்டாவய்யர்....''

''ஹா ஜீ?''

''இவ்வளவு தூரம் கேஸைத் திருப்பித் தந்துவிடுவார் என்று எனக்குத் தெரியாதே!''

''எனக்குத் தெரியும் ஜீ!'' என்றார் வைத்தி. மகாராஜா மேலும் சிறிது நேரம் உலாவினார். ஆனால் அவர் மனமோ குழம்பிய குட்டை போல் தத்தளித்தது.

''இப்ப சீமையிலே?''

''ஜீ ஹுஜூர்!''

''அவள் கேஸ்....?''

''ஹா ஜீ.''

''என்ன ஆகுமோ தெரியவில்லை.''

''அதுவும் எனக்குத் தெரியும் ஜீ.''

''எப்படித் தெரியும்?''

''பிராடிக்ஷன் ஜீ!''

''பிராடிக்ஷனா? அப்படியானால் என்னுடைய ஜாதகம் உங்கள் கையிலே இருக்கிறதா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் மகாராஜா.

"நீங்களே என் கையில் இருக்கும்போது, உங்கள் ஜாதகம் எதுக்கு மகாராஜா? சண்முகத்தின் கேஸைக் கிட்டாவய்யர் நடத்தமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். உங்களோடு அவர் சீமைக்கு வரமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும்."

"எப்படித் தெரியும்? ஏன் வரமாட்டார்?"

"ஏன் என்று கேட்டால்....? அவர் இப்ப ஒரு திவான்பகதூருக்கு டிரை பண்ணிக்கொண்டு இருக்கார். அதனாலே வெள்ளைக்காரங்களை எதுத்துக்க மாட்டார்" என்றார் வைத்தி. ராஜாவுக்கு, 'ஓஹோ அதனால்தான் கேஸைத் தந்துவிட்டாரோ' என்ற சந்தேகம் உதித்தது.

"ஹா எ பாத்? பிர?"

"பிர்ர் என்ன? அந்தப் பட்டமும் அவருக்கு வரப் போறதில்லை. அதுவும் எனக்குத் தெரியும்."

"க்யாஜீ தெரியும், தெரியும்! எப்படி உமக்கு இதெல்லாம் தெரியும்? ஜோஸ்யம் ஏதாவது பார்த்தீரா?" என்றார் மகாராஜா.

"எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது மகாராஜா...."

"என்ன, கிரேட் அஸ்ட்ராலஜியில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"மகாராஜா கோவிச்சுக்கப்படாது. எனக்கு அந்த ஆர்ட்டிலே நம்பிக்கை உண்டு. ஆனால் ஆளிலே கிடையாது."

"ஏன் இல்லை?" என்றார் மகாராஜா கோபத்தோடு.

"ஜோசியம் ஒரு சமுத்திரம். அதிலே நீந்திக் கரையேற மனுஷா ஆயுஸ் போதாது. சும்மா ரெண்டு பஞ்சாங்கத்தைப் பாடம் பண்ணுப்பிட்டு, 'நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, குளிர்ந்த கலையினன், உடுவின்வேந்தன்' என்று பாடிப்பிட்டா குருவையும் சுக்கிரனையும் பார்க்க முடியுமோ? கண் கூசிப் போயிடும்!"

"அச்சி பாத்....!"

"சும்மா அச்சிபாத்துன்னு சொன்னா போதாது மகாராஜா. இப்ப இருக்கிறாரே, பிரஸண்ட் கிங் ஆப் நேபால்....?"

"ஆமா."

"இவா கிராண்டு பாதர் என்னை ஆஸ்தான ஜோஸியனா இருக்கச் சொல்லிக் கூப்பிட்டார். நான் தாங்க்யூனு சொல்லி ரெப்யூஸ் பண்ணிட்டேன். அதோடே 'இந்த மகாராஜா பட்டம் உமக்கு எப்போதும் நிலைக்காது' அப்படின்னும் சொல்லிட்டேன்."

"சொல்லிவிட்டீரா? பிர்?"

"பிர் என்ன, பட்டம் பிள்ளைக்குப் போயிடுத்து" என்றார் வைத்திஜீ.

இதற்கு ஜோஸ்யம் பார்க்க வேண்டுமா என்று மகாராஜா யோசிக்கவில்லை. ஆனால் 'வைத்திஜி எந்த சாஸ்திரத்தைப் பார்த்துப் பலன் சொல்லுகிறார்? அது எது?' என்று அறிந்துகொள்ள ஆசைப்பட்டார்.

"பின்னே நீர் பார்ப்பது சூரிய நாடியா?"



"நாடி நான் ஏன் ஐயா பார்க்கிறேன்? வைத்தியன்தான் பார்ப்பான்."

"போலோஜீ, ரேகை சாஸ்திரமா?"

"அதுக்கு ஐஸைட் எப்பவும் ரொம்பக் கிளியரா இருக்கணும். நம்ப கண்ணிலே ஒரு துரும்பு இருந்தா எதிர் கையிலே அது ஒரு தூணா தெரியும்."

"பின்னே என்னதான் பார்க்கிறீர்?"

"மன்னிக்கணும் மகாராஜா, அது என் பிஸினஸ் இல்லே. நான் அதிகமா பார்க்கறதும் இல்லை. ஆத்மாக்களின் சாந்தியை நான் அதிகமாகக் கெடுக்கறதும் இல்லை" என்று கெஞ்சினார் வைத்திஜி.

"பிளீஸ்!" என்று கெஞ்சினார் மகாராஜா.

"நான் பார்க்கிறது, பிளாஞ்செட்" என்றார் வைத்தி.

மகாராஜா திடுக்கிட்டார்!

"பிளாஞ்செட்டா? அப்படியானால் — இறந்து போனவர்களுடைய ஆவியுடன் நீங்கள் பேசுகிறீர்களா?" என்றார் மகாராஜா.

"ஆமாம். அதுலே என்ன குற்றம்? உயிரோடே இருக்கிறவன் பொய் சொல்லுகிறான், நிஜம் சொல்லுகிறான் என்று யார் கண்டது? ஆவிக்கு உடம்பு இல்லே. அதனாலே சொத்துக் கவலை இல்லை. பொய் சொல்லாது பாருங்கோ?"

"நான் நாலு நாளைக்கு முன்னாலே உங்கப்பாவைக் கூப்பிட்டுக் கேட்டேன். அவர்தான் சொன்னார், கிட்டாவய்யரை நம்பாதேன்னு" என்று ஒரு வெடியை விட்டெறிந்தார் வைத்திஜி. அந்தச் சத்தத்தில் மகாராஜாவின் மூளை கலங்கியது.

"யாரு, என் பாதரா! ஹரே ராம்! லேட் ரகுபீர் சிங்கா?"

"ஆமா! ஆமா! ஆமா!"

இதைக் கேட்டதும் மகாராஜாவுக்கு உடல் வியர்த்தது. 'தன் தகப்பனாரைக் கூப்பிட்டு வைத்திஜி பேசிவிட்டாரே! அப்பா என்ன சொன்னாரோ? ஏதாவது கோபித்துக்கொண்டாரோ' என்று அஞ்சினார்.

"இந்த வெள்ளைக்காரி விஷயத்திலே என்ன சொன்னாங்க....?" என்று இழுத்தார் மகாராஜா.

"அதையும் கேட்டேன். 'இது ஒன்றும் குற்றமில்லை. ராஜாக்கள் எந்த ஜாதியிலும் கல்யாணம் செய்துகொள்ளலாம். ஆனால் மதம் விட்டு மதம் கல்யாணம் செய்துகொண்டிருக்க வேண்டாம்' என்று மட்டும் கொஞ்சம் வருத்தப்பட்டார்."

"புவர் பிதாஜி" என்று வருந்தினார் மகாராஜா.

"ஏன் பயப்படுகிறீர்கள்? நான் முதலிலே உங்கள் தகப்பனாரைக் கூப்பிடவே நினைக்கவில்லை. உங்கள் தாயாரைத்தான் அழைத்தேன்."

''யாரு, மாதாஜியையா?''

''ஆமாம், ஆனால் தேவியார் வந்து 'நான் பர்தாவில் இருக்கிறேன், அன்னியர்களோடே பேசமாட்டேன்' என்று சொல்லிவிட்டார்கள்.''

''வைத்திஜி! என் தாயார் மட்டும் உயிரோடே இருந்தால் நான் இந்த வெள்ளைக்காரியைக் கல்யாணம் செய்துகொண்டே இருக்கமாட்டேன்.''

''மகாராஜா! சும்மா அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். அது போனால் ஆயிரம்'' என்றார் வைத்தி.

மகாராஜாவுக்கு இந்த வார்த்தையில் ஒரு தெம்பு வந்தது.

''ஆமா, டைவர்ஸ் கேசைப்பத்திக் கேட்டீங்களா, என்ன சொன்னாங்க?''

''ஸக்ஸஸ்!''

''யாருக்கு?''

''நமக்குத்தான். 'கிட்டாவய்யரை வக்கில் வைக்காதே, சீமைக்குப் போ. நான் சொல்கிறவனை வக்கீலாக வை' என்று எனக்கு உங்கப்பா உத்தரவு.''

''பேரைக் கேட்கல்லியா?''

''அது எப்படி நான் கேட்கிறது? சீமைக்குப் போடான்னு என்னைச் சொல்றாரே! நான் சீமைக்குப் போவேனா, சிலோனுக்குப் போவேனா? இந்தப் பழிகாரன் வேறே வந்து காத்துக்கிட்டிருக்கானே!''

''யாரு?''

''அவன்தான் பர்னாண்டஸ்! அவன் இடத்திலே ஒரு டீ எஸ்டேட்டு விலை பேசச் சொன்னேன். அட்வான்ஸ் குடுத்து பத்திரம் முடிக்கணும்.''

''யாருக்கு டீ?''

''நமக்குத்தான். நீங்கள் வந்து, முதலை டீ, லேடி மார்க்கு டீ, மீன் மார்க்கு டீ என்று கண்டதையெல்லாம் சாப்பிடுவது எனக்குப் பிடிக்க வில்லை. ஒரு தேயிலைத் தோட்டத்தையே வாங்கி, மகாராஜா டீன்னு பேரு வச்சு, அதைத்தான் நீங்கள் சாப்பிடணும்னு எனக்கு ஆசை!''

''நோ, நோ! என் உத்தரவில்லாமல் இதெல்லாம் செய்யக்கூடாது. நீர் பணத்தில் விளையாடுகிறீர்'' என்று எரிந்து விழுந்தார் மகாராஜா. ஆனால் வைத்தி சிரித்துக்கொண்டே, ''இந்த பினாஞ்செட்டைத் தூக்கி கிணத்துக்குள்ளே போட வேண்டியதுதான்'' என்றார்.

சாஸ்திரத்தைக் கிணத்துக்குள் போட மகாராஜா சம்மதிப்பாரா? சிவ, சிவ என்று காதைப் பொத்திக்கொண்டார்.

''உம்முடைய தவறுதலுக்கு சாஸ்திரம் என்ன செய்யும்?'' என்றார்.

''நான் ஏன் மகாராஜா தவறு செய்யப்போறேன்? அதுவும் மணி மாட்டரிலே. நான் சும்மாதான் இருந்தேன். உங்க பாதர்தான் சொன்னார். 'டே வைத்திநாதா, கொழும்புலே ஒரு டீ எஸ்டேட்டை வாங்கு. அதிலே வெட்டினால் இரத்தினச் சுரங்கம் கிடைக்கும்' அப்படின்னார். நீங்கள்



எனக்குக் கலாமண்டபத்துக்கு அனுப்பினபணம் கையிலே இருந்தது. அதைக் கொடுத்து என் பேராலேயே வாங்குவோம்னு பார்த்தேன். 'உன் பேரில் வாங்காதே! வெட்டினால் கிடைக்காது' என்று பினாஞ்செட் சொல்லிற்று.''

''ஓஹோ, அப்புறம்?''

''ஆமா மகாராஜா. அவர் செத்துப்போனாலும் புத்ர பாசம் விடவில்லையே! என் பிள்ளை பேருக்கு வாங்கினால்தான் அது கிடைக்கும் என்றார். உடனே நான் அந்தத் தொகையை அப்படியே குடுத்துட்டேன். இப்ப இன்னும் ரூ.7,000 குடுக்கணும்,'' என்றார் வைத்தி.

மகாராஜாவோ தன் தந்தையின் பாசத்தை எண்ணித் துடியாய்த் துடித்தார்.

''அப்படின்னா, பினாஞ் செட்டு நேருக்கு நேரே பேசறது என்கிறீர்?''

''அதிலே சந்தேகமா மகாராஜா? பேசும், எழுதும், பாடும்! போர்டு மோட்டார் கம்பெனிக்கு எப்படி இவ்வளவு பணம் வந்தது தெரியுமா? ஜப்பான்லே ராக்பெல்லர் எப்படிப் பணக்காரரானார்? எல்லாம் பினாஞ்செட்டு. அமெரிக்காவிலே இப்ப பயாஸ்கோப்பிலே என்ன பண்றாங்க தெரியுமோல்லியோ?''

''என்ன செய்கிறார்கள்?''

''பேசாமே பினாஞ் செட்டிலே ஷேக்ஸ்பியரைக் கூப்பிடுக்கறான். ஒரு கதை சொல்லுனு கேக்கறான். உடனே அதை 'டைப்' பண்ணி, படம் பிடிச்சுடறான். அதுதான் பணம் கோடி கோடியாய்க் குவியறது. எனக்குக் கூட ஒரு தடவை காளிதாசனைக் கூப்பிட்டு கொஞ்ச நாழி அவன் வாயாலே சாகுந்தலம் சொல்லிக் கேக்கணும்னு ஆசை. என்ன செய்யறது? நம்ம தலையெழுத்துத்தான் கோர்ட்டும், விவகாரமுமாய்ப் போச்சே'' என்று வருந்தினார் வைத்தி.

மகாராஜா திறந்த வாய் மூடவில்லை. ஆச்சரியத்தில் பிரமித்தே போனார். வைத்திஜியிடம் இவ்வளவு சரக்கு இருக்கிறது என்று அறியாமல் போனோமே என்று வருந்தினார். அதை வெளிக்காட்டாமல், ''அப்படியானால் ஒரு காரியம் செய்யும். இப்ப ஒரு மூவாயிரம் ரூபாயைக் கொடுத்து அந்த பர்னாண்டஸை அனுப்பும். நீர் சீமைக்குப் போய், டைவர்ஸ் கேசை ஜெயித்துவிட்டுத் திரும்பி வரும்போது, தோட்டத்தை வாங்கிவிடலாம்!'' என்று சொல்லி, மகாராஜா பச்சை நோட்டுகளாக மூவாயிரத்தைத் தள்ளினார்.

வைத்தி அதை வாங்கிக்கொண்டு புறப்படும்போது மகாராஜா, ''வைத்திஜி'' என்று அழைத்தார்.

''சண்முகம் கேசுக்கு யார் வக்கீல்?'' என்றார்.

"அதுதான் கே என்ற எழுத்தில் பெயர் ஆரம்பிக்கணும்னு உங்க பாதர் சொன்னாரே. நான் காட்டன் துரையை அமர்த்திவிட்டேன்."

"காட்டன்? அவன் கிரிமினல் லாயர் அல்லவா?"

"இருக்கட்டுமே! நம்ம ஒரு கிரிமினல் கேஸையும் போட்டுட்டாப் போகுது."

"......... உம் ......... வைத்திஜீ"

"ஜீ ஹ ஹூர்"

"உங்க பிளாஞ் செட்டிலே."

"ஹா ஜீ?"

"அந்த மோகனா விஷயம்....?" என்று குழைந்தார் மகாராஜா.

"இதைக் கேட்பீர்கள் என்று எனக்கு முந்தியே தெரியும். ஆனால் அது பெண்கள் விஷயமாயிருக்கே. உங்க பெரியவர்களிடத்திலே பேசலாமோ பேசப்படாதோ என்று விட்டுவிட்டேன்."

"எங்க பிதாஜி வேண்டாம். உங்க பிதாஜியிடம் கேட்கிறதுதானே?"

"அவரும் நானும்தான் பேசிக்கிறதே இல்லையே" என்று சொல்லி வைத்தி பணத்துடன் வெளியேறினார்.

"இந்தா பர்னாண்டஸ்! உன் துரதிர்ஷ்டம். இருநூறு ரூபா குறைஞ்சு போச்சு!" என்றார் வைத்தி.

"என்ன சார்?" என்று பதறினார் பர்னாண்டஸ்.

"உன் இனாம்லேதான். நான் வேறே செக்கு கொடுங்கன்னு மகாராஜா கிட்டே கேட்டேன். செக்கு எதுக்கு. ஆயிரம் ரூபாயைக் கையிலே குடுத்துடு என்று பணத்தையே குடுத்துட்டார்" என்று வைத்தி ஆயிரம் ரூபாயைப் பர்னாண்டஸின் கையில் கொடுக்கவே, பர்னாண்டஸ் உண்மையிலேயே மயங்கி விழப் போனார்.

"விழுந்துடாதே! இனாம் பணம்தானே என்று வேட்டு விட்டுடாதே!"

"தோ ஸார். தாங்க்யூ சார்!"

"தாங்க்ஸ் வேண்டாம். அந்தப் பெட்டி?"

"ஜாக்கிரதையா இருக்கும் சார்!"

"பின்னே 'நகைப் பெட்டி ஜாக்கிரதையா இருக்கு. பாக்கியையும் அனுப்புங்கோ'ன்னு ஒரு லெட்டர் எழுதிக் கொடுத்திட்டு நீ போயிட்டு வரியா?"

"ஆகட்டும் சார். ராத்திரி ரயிலுக்கே புறப்பட்டுட்டேன்."

– "நீ ரயிலிலே போனாலும் போ. கட்டு மரத்துலே போனாலும் போ. லெட்டரைக் குடுத்துட்டுப் போ!" என்றார் வைத்திஜீ.

ஹோட்டல் மானேஜர் லெட்டரைக் கொடுத்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டார். பர்னாண்டசின் பெயரை வாழ்த்தி, பாக்கிப் பணத்தைப் பையில் வைத்துக்கொண்டார் வைத்திஜீ.



## வடிவாம்பாள் அன்பே வடிவானாள்



"இந்த வீட்டிலே இத்தனை பேர் இருக்காங்களே, எதையாவது ஒழுங்கா செய்யறாங்களா? எல்லாவற்றையும் நான் செய்தால்தான் உண்டு" என்று சொல்லிக் கொண்டே, காப்பி டிகாக்ஷனைத் தூக்கி, கழுநீர்ப் பாத்திரத்தில் விடுவார்கள் சிலர்.

பதற்றத்தில், பாலுக்கும் அரிசி கழுவிய நீருக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது. "நானும் செய்ய வேண்டும். நான் செய்தால்தான் உண்டு. நானா தலையில் கட்டிக்கொண்டு போகப் போகிறேன்?" என்று சிலர் அடிக்கடி சொல்வார்கள். இந்த வார்த்தைகள் எல்லாம், ஸ்ரீமான் தான் தலை யெடுத்து இருக்கிறார் என்பதைக் காட்டுபவையே. பட்டமரம் மழையிலே சிறிது ஊறியவுடன், அதன் உடம்பு பூரித்துப் போகும். அந்தப் பூரிப்பில் ஒரு காளான் முளைக்கும். இதே மாதிரி, ஏழை ஒருவன் பணக்காரனானாலும் காளான் முளைக்கும். இந்தக் காளான் இருப்பதெல்லாம் எட்டு நாள்தான். இதைப்போல் அகங்காரம் ஏற்பட்டுவிடும். அகங்காரம் அறிவைக் கெடுக்கும். அத்தனை காரியத்தையும் நானே செய்கிறேன் என்று ஆரம்பிக்கச் செய்து, அத்தனையையும் குழப்பத்தில் ஆழ்த்தி விடும்.

அதிகாலை. முதற்கோழி இப்பொழுதுதான் கூவி இருக்கிறது. காப்பிப் பழக்கம் அதிகம் வராத காரணத்தால், பால்காரர்களும், பாவம், பசுக்களும் தூங்கும் நேரம். விடிய ஒரு ஜாமம் இருக்கும். இரண்டு பெண் உருவங்கள் திருவாரூர் எல்லையம்மன் கோயில் வாசலில் நிற்கின்றன. அதில் ஒன்று சிறிய பெண். அவள் கையில் கொட்டாங்கச்சியில் கோலப் பொடியும், ஒரு கிண்ணத்தில் செம்மண்ணும் வைத்திருக்கிறாள். இன்னொரு அம்மாள் வயதானவர்கள். அந்த அம்மாள், தன் கையில் சாணிச் கருணையைப் பிடித்துக் கோவில்வாசலை மெழுகுகிறார்கள். என்ன ஆச்சரியம்! வடிவாம்பாள் அல்லவா அது! ஏன் அவளே மெழுகுகிறாள்? அபாஞ்சிமீது கோபமா? அவள் அருகில் வேலைக்காரி சும்மா நிற்க, இந்த வீட்டுக்காரம்மாள் விழுந்து விழுந்து மெழுகுவானேன்? அங்கும் வடிவைரக்கு வந்துவிட்டதா என்ன? அல்லது நான் என்ற அகங்காரத்தில் வந்த ஆத்திரமா? அவள் முகத்தைப் பார்த்தால் அகங்காரமோ, ஆத்திரமோ இருப்பதாகத் தெரியவில்லையே பிறகு ஏன் அவளே மெழுகுகிறாள்?

"ஆமாம். அதுவும் நான்தான். தானே செய்யவேண்டும் என்ற எண்ணம்தான். ஆனால், தானில் பிறந்த தன்மை? நல்ல காரியத்தை தாமே செய்யவேணும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. தன் மகள் வயிற்றில் மாணிக்கம் பிறக்கப் போகிறது என்ற மகிழ்ச்சியில், அன்னை கோலமிட வந்திருக்கிறாள். என்னே தாயின் அன்பு!

சிவ புண்ணியங்களைத் தானே செய்ய வேண்டும் என்ற அவா சிலருக்கு வந்துவிடும். இரகசியமாய் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு கோயில் திருப்பணியையே தொடங்கிவிடுவார்கள். அன்று திருநாவுக்கரசர், கோவில் பிராகாரத்திலுள்ள நெருஞ்சி முட்களை எடுத்து, உழவாரப் பணி செய்ததை உலகமறியும்.

இன்னும் நம் கோயில்களில் "என்றேனும் வாகீசர் வருவார், அவர் திருக்கரம் நம்மைத் தீண்டும்" என்று நம்பி நெருஞ்சி முட்கள் முளைத்துக் காடாகிக் காத்திருப்பதை நாமறிவோம்.

சிலர் தாமே சூரிய நமஸ்காரம் செய்வார்கள். சிலர் தாமே தண்ணீர் சுமப்பார்கள். சிலர் தாமே பால் குடம் எடுப்பார்கள். அமாவாசை, கார்த்திகை முதலிய நாட்களில் தெய்வக் கடன், பிதுர்க் கடன் கழிக்க, சிலர் தாமே நோன்பு இருப்பார்கள். ஆனால் இவை யாவும் தன்னலத்திற்காகவும் தன் பிறவிக் கடனைக் கடக்கவும் செய்யும் தொண்டுகள். ஆனால் வடிவாம்பாள் செய்யும் தொண்டு தனக்கல்ல, தன் மகளுக்காக. இதுதான் தாய்க்கும் பிறருக்குமுள்ள தாரதம்மியம்.

"பெண்கள் தன்னலம் பிடித்தவர்கள். தனக்கு ஒன்று வேண்டுமென்றால், அவர்கள் தம் கணவனைக்கூட மதிக்காமல் ஏசிவிடுவார்கள். தாம் வாழ வேண்டும் என்பது ஒன்றுதான் பெண்களின் லட்சியம்" என்றெல்லாம் ஆண் உலகம் கூறும். ஆனால் ஒரு தாய்க்கு முன் அத்தனை ஆண்களும் அடி பணிந்தே ஆக வேண்டும். வடிவாம்பாள் செய்யும் தொண்டைப் பார்த்தால் சுயநலம் என்றா தோன்றுகிறது?

"நான் சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போகிறேன். நாலு முழ வேட்டி வாங்கிவிட்டேன். காவிக்கட்டி வாங்கிவிட்டேன். இதோ காவியை ஊறப்போட்டுவிட்டேன். தலையை மொட்டையடித்துக் கொள்ள நல்ல நாள் பார்த்து நாளைக் காலையில் பார்பரை வரச் சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே சிலர், சந்நியாசத்தை ஏமாற்றுவார்கள். ஆனால் வடிவாம்பாள் இன்று காதுக்கம்மலைக்கூட கழட்டிவிட்டாளே! ஆபரணங்களை அணிவதே இல்லையே! பழங் கந்தையையெல்லாம் எடுத்துச் சுருட்டி, தனியாக வண்ணானுக்குப் போட்டு வாங்கி வைக்கிறாளே, இது எதற்கு? அவளுக்கென்று இப்பொழுது ஓர் ஆசையுமில்லையே! இந்தத் துறவு மனப்பான்மை எப்படி அவளுக்கு வந்தது? அதுதான் தாய்மை. இதெல்லாம் அபரஞ்சி அறிவாளா?



"நான் கோலம் போடறேன் அம்மா" என்றாள்.

"உனக்குக் கோலம் வேறே போடத் தெரியுமா?" என்றாள் வடிவாம்பாள்.

"அம்மா! எங்கெயே இருட்டு, உங்களுக்கு வெள்ளெழுத்து. கோலப்பொடி நிதானம் தெரியாது."

"எனக்குத் தெரியாட்டியும் எறும்புக்குச் சுவை தெரியும். நீ சும்மா இரு."

"உங்களுக்கு என்ன கோலம் போடணும், சொல்லுங்க?"

"ஆமாண்டி, என்னைவிட நீ வயசிலே மூத்தவ. உனக்குத்தான் கோலம் போடத் தெரியும். இந்தக் காலத்துப் பெண்பிள்ளைகளுக்கு கோலமா போடத் தெரியும்? நீங்க கோலம் போட ஆரம்பிச்சிங்க, தகரக் கடைக்காரன் குழாய செய்து பிழைக்கிறான். இங்கே கொடு கோலப்பொடியை" என்று வாங்கிக்கொண்டு, வடிவாம்பாளே கோலமிட ஆரம்பித்தாள்.

'இது புண்யமா, புருஷார்த்தமா?' என்று சிலர் கூறுவார்கள். வடிவாம்பாள் கையில் வைத்திருப்பது இரண்டு மாவுமில்லை. கோல-மா ஆனால் அந்தக் கோலமாவிலும் சௌகாருண்யம் கலந்திருந்தது. நல்ல அரிசியைப் பொடி செய்த மாவு அது. கூடிவரும் கையால் எறும்புக்கு ஆகாரம் எவது அந்நாளில் வழக்கம். இப்பொழுதோ சிலர் பூச்சி மருந்தாலேயே கோலமிடப் புறப்பட்டிருக்கிறார்கள்! அழகான கோலத்தைக் கெடுக்கும் பூச்சிகள் மடிந்தால் என்ன என்ற கவை அன்புதான் அதற்கும் காரணம்.

நாட்டியமும், சங்கீதமும் அறிந்த வீட்டில் பிறந்த வடிவாம்பாளுக்குக் கோலம் போடவா தெரியாது? பத்தே நிமிஷத்தில் ஒரு பெரிய **காவேரி வாய்க்கால்** கோலத்திற்குப் புள்ளி வைத்துவிட்டாள் வடிவாம்பாள். கோவில் வாசலையடைத்து, இரண்டு கல் தூண்களுக்கும் நேராக வாழைமரம் போட்டு, நடுவிலே தோரணம்போல் கோலம் போட்டாள். அவள் கையால் ஒவ்வொரு புள்ளி வைக்கும் பொழுதும், 'எல்லையம்மா, புள்ளை நல்லா இருக்கணும்' என்று வேண்டிக் கொண்டாள். தன் கையாலேயே செம்மண் இட்ட பிறகுதான், வடிவாம்பாள் நிமிர்ந்தாள். அதற்குள் பொழுது லேசாக விடிய ஆரம்பித்தது. அந்தி மயங்கும் இருளில் மல்லிகை பூத்தது போல் தெரிந்தது அவள் இட்ட கோலம். அதைப் பன்முறை தன் கண்களால் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள் வடிவாம்பாள். ஒரு கூடை மல்லிகைப் பூவை விலைக்கு வாங்கிக் கொட்டினாலும் எல்லையம்மனுக்கு இத்தனை மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது. ஒருத்தி இரண்டு மணி நேரம் தன் கையால் பணி செய்தது கண்டு அன்னையும் மகிழ்ந்தாள்.

அபரஞ்சியைக் கூட்டிக்கொண்டு, வெளியார் பார்ப்பதற்கு முன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் வடிவாம்பாள். அப்பொழுது மாத்திரம்

"எங்கம்மா போய்வருகிறாய்?" என்று மகள் கேட்டிருந்தால், "அபராஞ்சியைக் கோவிலை மெழுகிக் கோலமிடச் சொல்லியிருந்தேன். கூடத் துணைக்கு நான் போயிருந்தேன்" என்று பொய் சொல்லியிருப்பாள் வடிவாம்பாள்.

வடிவாம்பாளுக்கு இப்பொழுது வேலைகள் அதிகம். ஒரு நாளைக்காவது அவள் குறித்த நேரத்தில் சாப்பிடுவதில்லை. யாரோ ஒரு தோழி ராமேசுவரத்திற்குப் புறப்பட்டாள். இது வடிவாம்பாளுக்குத் தெரிந்தது. உடனே அவளிடம் ஓடினாள்.

"முத்தம்மா, நீ போயிட்டு வரும்போது எனக்கு ஒரு சாமான் ராமேசுவரத்திலிருந்து வாங்கிட்டு வரியா?" என்று அவளைக் கெஞ்சினாள்.

"உனக்கு என்னத்தை நாங்க வாங்கிட்டு வரது? நீ பணத்திலேயே புழங்கிறவ" என்றாள் அந்த அம்மாள்.

வடிவாம்பாளுக்குத் தோழி என்றால் அவளும் பாட்டிதான் என்பதைப் பகரவா வேண்டும்?

"அதெல்லாம் இல்லே. ஒரு நல்ல சங்கு வாங்கிட்டு வாயேன். குழந்தைக்குப் பால் போட்டறதுக்கு" என்றாள் வடிவாம்பாள்.

"ஏன், உங்கவீட்டுப் பிள்ளைக்கு வெள்ளிச் சங்கிலே போட்டுவே."

"தங்கத்திலேயும், வெள்ளியிலேயும் சங்கு செஞ்சிருக்கேன். இருந்தாலும் நிசமான சங்கு ஒண்ணு வேணுமில்லே!" என்று சொல்லி, ஒரு ரூபாயை அவள் கையில் கொடுத்தாள் வடிவாம்பாள். பாவம், அந்த முத்தம்மாளுக்கு, வடிவாம்பாள் ஏன் தன்னிடம் இந்த வேலையை ஒப்படைத்தாள் என்பது தெரியாது- ஆனால் முத்தம்மாள் பத்துப் பிள்ளை பெற்ற மகராசி என்பது வடிவாம்பாளுக்கல்லவா தெரியும்?

இதே மாதிரி காசிக்கு யாராவது போனாலும், அங்கிருந்து கொஞ்சம் கருகமணி வாங்கிக்கொண்டு வரச் சொல்லுவாள் வடிவாம்பாள்.

வாசலில் யானைக்காரன் வந்தால்கூட விட மாட்டாள். அதன் வால் கண்ணியில் இரண்டை வாங்கி வைத்துக்கொள்வாள். குழந்தைக்கு ஒரு நடை செய்து போட்டால் திருஷ்டி வராதே என்ற எண்ணம்தான். தன் வீட்டில் இருந்த பொட்டுப்பொடி, தங்கம் எல்லாம் எடுத்து குழந்தைக்கு உச்சிப்பூ, தாய்க்காக, தாயத்து இவைகள் எல்லாம் செய்ய ஆரம்பித்தாள். இவைகளைச் செய்த பொன்னுச்சாமி ஆசாரியார் பொல்லாத ஆசாமி. "ஏம்மா, இவ்வளவு எல்லாம் செய்யறீங்களே, பிறக்கிறது பெண்ணாய்ப் பிறந்துட்டா?" என்று அவர் இயற்கையாய்க் கேட்டார்.

"அதற்கென்ன? அரைப் பவுன்லே ஓர் அரசிலையும் அடிச்சு வைங்க!" என்று சொல்லி, அதையும் செய்து வாங்கி வைத்தாள் வடிவாம்பாள்.

குலக்கொழுந்தைத் தாங்கி நிற்கும் தன் மகளை, அந்தத் தாய் காப்பாற்றிய விதத்தை எழுத்தால் எழுதமுடியாது. கண்ணை இமை



காப்பது போல் என்று சும்மா சொல்லிவிடலாம். ஆனால் இமை அவ்வாறு காப்பாற்றினால் இத்தனை கண் டாக்டர்கள் எதற்கு? கண்ணுக்கு இமை காவல் இருக்கத்தான் இருக்கிறது. அதற்காக ஏதேனும் கரி விழாமல் இருக்கிறதா? கண்ணை இமை காப்பது போல வடிவாம்பாள் தன் மகளைக் காப்பாற்றவில்லை. பெண்ணைத் தாய் காப்பதுபோலக் காப்பாற்றினாள்.

இப்பொழுது எல்லாம் அவள் மாலை ஐந்து மணிக்கே விளக்கு ஏற்றும் நேரம் வந்துவிட்டதாக எண்ணினாள். தன் மகளின் தலைக்கு மேலே ஒரு குருவிகூடப் பறக்க விடாமல், "மாகக் குருவி பறவாமல் கோதாட்டினாள்" என்றபடி காப்பாற்றினாள். உயரப் பறக்கும் கருடன் கூட அவளுக்குப் பயத்தை அளித்தது. ஏதேனும் எச்சம் விழுந்துவிடுமோ, அவள் தலையில் கெட்ட நிழல் பட்டுவிடுமோ என்ற அச்சத்தில், மகளை மாலையில் வெளியே உட்காரவிடுவதே இல்லை. வாச மலர்கள் எத்தனை உண்டோ, அத்தனையும் வாங்கிச் சூட்டுவாள்.

கையிலே வளையல் போடப் பெண்கள் அஞ்சும் காலம் இது. அவ்வாறு தப்பித் தவறி அணிந்தாலும் அணிகின்ற எல்லாப் பெண்களும் அர்த்தநாரீசுவரர் ஆகிவிட்டார்கள். சக்தி ஒரு பாதி, சிவன் ஒரு பாதி என்பதற்கு இணங்க, பெண்கள் எல்லாம் இப்பொழுது ஒரு கையில் மட்டும்தான் வளையல் அணிகிறார்கள். மற்றொரு கையிலே கடிகாரத்தை மாத்திரம் கட்டிக்கொள்கிறார்கள். இதில் ஒரே ஒரு வித்தியாசம். சிவபெருமானுக்கு இடது கரம்தான் உமையவள் காம். ஆனால் பெண்களோ இடது கரத்தில் கடிகாரம் கட்டுகிறார்கள். ஆண் கரத்தில் வளை அடுக்கிவிடுகிறார்கள். அதையும் மீறிச் சில பெண்கள் வளையல் அணிந்தாலும், ரப்பர் வளையல், பெட்ரோல் வளையல் என்று நெருப்புப் பிடிக்கும் வளையல்களை அணிந்துகொள்கிறார்களே தவிர, கண்ணாடி வளையல்கள் கலகலவென்று சிரித்த காலம் மாறிவிட்டது.

வடிவாம்பாள் வீட்டிலே, தினந்தோறும் காலையிலே அரக்கு மணக்கும். கங்கணத்தை வெட்டி, நெருப்பில் வாட்டி ஒட்டிவிடுவது வழக்கம். கங்கணத்தின் வாசனையில் கடவுள் மணம் கமழும். ஒரே வீட்டிலே கங்கணம் போட்டால், வீதியிலே நடப்பவர்கள் அந்த மணத்திலிருந்தே அறிந்துகொள்வார்கள். அந்த மாதிரி கங்கணங்களுக்குப் பெயர் பெற்றது தஞ்சாவூர் ஜில்லா. தன் மகளுக்கு நாளைக்கு ஒரு கங்கணம் என்று அவள் பூட்டுவாள். அதுவும் வேளைக்கொன்றாக உடைந்து விழும். தங்கத்திலே அவல் வளையல், பம்பாய் வளையல், கோகர்ஜான் வளையல் என்று எத்தனை தினுசுகள் உண்டோ, அத்தனை தினுசுகளும் செய்து வைத்திருந்தாலும், பட்டு வளையலும் கங்கணமும் போட்டுப் பார்த்து மகிழ்வதில் தாய்க்கு இன்பம் அதிகம். வேறு ஒன்றும் காரணமல்ல. அந்த வளையல்களின் ஒலியில், லட்சுமி வாசம் செய்கிறாள். ஒலியில் தீமை விலகும்; அமங்கலச் சொற்கள் காதில் விழாது என்ற கருத்துதான் காரணம்.

முன்பு எல்லாம், வாரத்தில் இரண்டு நாள்தான் வடிவாம்பாள் திருஷ்டி சுற்றுவாள். இப்பொழுதோ தினந்தோறும் சுற்ற ஆரம்பித்து விட்டாள். எந்தக் கோவில் விபூதியையாவது நெற்றியில் இட்டுக் கொண்டே இருப்பாள். இன்னும் ஒரு வேடிக்கை. அவள் செய்ததை நினைத்தாலே சிரிப்பு வரும். ஒரு நாள், அதிர்வேட்டுக்கார அடைக்கனிடம் அரை ரூபாய் கொடுத்து அவனை ஏதோ கெஞ்சிக் கொண்டிருந்தாள். தன் மகள் தூங்கும்போது, கோயில் வாசலில் அதிர்வேட்டு வெடித்தது. அதைக் கேட்டு மோகனா திடுக்கிட்டு விழித்துவிட்டாள். ஐயோ! பெற்ற தாயின் மனம் துடித்தது. ஒரு நாளும் வெடி, வாண வேடிக்கை முதலியவைகளைத் திட்டாத அந்தத் தாயார் அன்றைக்கு அதிர்வேட்டுக்காரனை ஆத்திரத்தோடு திட்டினாள்.

"வரதா, நீ போய் அந்த அதிர்வேட்டுக்காரனைக் கூட்டிக்கிட்டு வா" என்று வரதனை அனுப்பினாள். அவன் வந்தான். அதற்குள் அவள் மனம் மாறியது. ஆத்திரத்தில் அவனைக் கோபித்தால், அவன் இன்னும் கொஞ்சம் மருந்தை வைத்து கெட்டிப்பான் என்று அஞ்சினாள். அவனிடத்தில் அரை ரூபாயைக் கையில் கொடுத்தாள். 'குழந்தை நல்லா பிறக்கட்டும். உனக்குக் கோடி வேட்டி வாங்கித் தருகிறேன்" என்றாள். "நீ கமலாலயத்தின் கரையில் வேட்டுப் போடாதே! நீ ஆற்றங்கரையில் போடு" என்று அவனைக் கேட்டுக்கொண்டாள். இவ்வாறு மற்றவர்கள் எல்லாம் மாசத்தை எண்ணினால், வடிவாம்பாள் நாட்களை எண்ணிக்கொண்டே வந்தாள். அவளுக்கு, தன் பெண்ணுக்கு வளைகாப்பு, சீமந்தம் செய்துவிட வேண்டுமென்று ஆசை.

மோகனாவுக்கு அது பிடிக்கவில்லை. "போங்கம்மா, சும்மா நாலு பேருக்கு நடுவிலே மனையிலே உட்கார்ந்துகிட்டு...." என்றாள்.

"இதுக்கெல்லாம் வெட்கப்பட்டா முடியுமா? குழந்தைக்கு மூச்சு வர நோத்திலே மூக்குல மூலிகை வாடை பட வேண்டாமா?"

"இந்தக் கலியாணம் எல்லாம் இப்ப வேண்டியதில்லையம்மா. இப்போதுதான் டாக்டர் மருந்து வந்துடுத்தே!"

"ஆமாம், அந்த டாக்டருக்கு மூலிகையைப் பத்தி என்ன தெரியும்? இது எல்லாம் ஒண்ணும் குறை வச்சுக்கப்படாது" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் வடிவாம்பாள். இந்தக் கர்னாடக வழக்கங்களில் மோகனாவுக்கு மனம் செல்லவில்லை. வேண்டவே வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். வடிவாம்பாள் மனத்தில் பெருங் குறை. "வளைகாப்பு வேண்டாமென்கிறாளே. சீமந்தம் வேண்டாமென்கிறாளே! நான் சொன்னா எதையும் கேட்க மாட்டேங்குது. எடுத்தெறிஞ்சு பேசுது" என்று வருபவர் போகிறவர்களிடம் எல்லாம் சொல்லி, தன் மகளைக் கடைசியில் சம்மதிக்கவும் வைத்துவிட்டாள். அன்று தன் மகள் மடியில் இருந்த அம்பிக்குழவியை, அவள் அருமைப் பேரனாகவே கருதினாள்.



திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. 'நாளைக்குக் குழந்தை பிறக்கப் போவுதே, அது ஆணா, பெண்ணா?' என்று சந்தேகம்தான் அது. இந்த சந்தேகத்தின் பலனாக, அவள் கண் முன்னே அன்று மாலையில் கிருஷ்ண விக்கிரகம்போல அருமையான ஆண் குழந்தை ஒன்று தாழ்வாரத்தில் தவழ்ந்தது. மூக்கும் முழியும் மோகனாவைப் போலவே இருந்தது. நல்ல சிவப்பு நிறத்தில் கொண்டையில் குஞ்சலம் குலுங்க, நெற்றியில் திலகம் இலங்க, இடையில் பட்டுக்கயிறும் தங்க அரைஞாணும் கட்டி, அதிலே நாய்க்காசு, தாயத்து தொங்கியாட, கழுத்திலே தங்கச் சங்கிலியில் போட்டிருந்த பதக்கம் தரையில் புரள, தன் பேரன் தவழ்ந்துகொண்டே வருவதை உருவெளித் தோற்றத்தில் கண்டாள் வடிவாம்பாள். அவள் மெய் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. அன்பே உருவானாள். **'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, சண்பகப்பூவே சாய்ந்தாடு; ஆனை, ஆனை அழகர் ஆனை'** என்று வாய்விட்டுப் பாட ஆரம்பித்துவிட்டாள்.

'ஆம்பிளைப் பிள்ளைதான் பிறக்கும், பாதேசியார் சொல்லியிருக்கிறாரு. கதிர்காமத்திலே குலமாணிக்கம் கிடைச்சிருக்கு' என்று தானே பேசிக்கொண்டாள். அப்போது அவளுடைய தோற்றத்திலே இன்னொரு பெண் குழந்தையும் தவழ்ந்து வர ஆரம்பித்தது. பேரனும் பேத்தியும் பிறக்கும் முன்னே, அவள் வீட்டில் அவை தவழ்ந்து விளையாடுவதைக் கண்டாள் பேரன்பில் வடிவாம்பாள்.

அடுத்தாற்போல் ஓர் எண்ணம். தன் மகள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கும்போது, 'நடுவிலே குழந்தை கத்தினால் என்ன செய்வது? சும்மா கத்தினாலும் பாதகம் இல்லை. நானாவது தூக்கி வச்சுப்பேன். பசித்துப் பாலுக்கு அழுதால்?' அது கிடக்கட்டும், பச்சை உடம்பிலே அவளாலே தான் எப்படி ஆட முடியும்? நாட்டியம் ஆடிவிட்டு வீட்டிற்கு வந்து, காலையும் கையையும் வலிக்கிறதுன்னு படுத்துக்கிட்டா, நாளைக்குக் குழந்தைக்கில்லே உடம்புக்கு வந்துடும். இனி நாட்டியம் கிடையாதா?' என்று ஒரு பெருமூச்சு விட்டாள். அந்தப் பெருமூச்சு அவள் பணத் தாசையைப் புயல் போல் அடித்துக்கொண்டு போய்விட்டது. ஆம், கருமித்தனம், அந்தக் குழந்தையின் தோற்றத்தைக் கண்டவுடனே, எங்கேயோ ஓடி ஒளிந்தது. 'இன்றைக்கே பேரன் பிறந்துவிடக்கூடாதா? இன்றைக்கே பேத்தியை எடுத்து அணைத்துக்கொள்ளக்கூடாதா? நாட்டியம் ஆடி ஆடி எதைக் கண்டாள்?' 'ஆடிவரும் காசு ஓடிவிடும்' என்று அவளே சமாதானம் செய்துகொண்டாள்.

தன் மகளுக்கு மசக்கை வந்தது முதலே, வடிவாம்பாள் தினந்தோறும் அவளுக்கென்று எண்ணெய் அதிகம் இல்லாத பலகாரங்களைச் செய்து கொடுப்பாள். ஒரு தாம்பாளத்தில் நாலு பஜ்ஜிகளை வைத்து, அவளிடம் கொண்டுபோவாள். இரண்டு பஜ்ஜிகளை மகள் தின்பதற்கு முன்னே, அவளுக்கு என்ன தோன்றுமோ? மீதியை அவளே தின்றுவிடுவாள். பலாப்பழத்தை உரித்தால், ஒரு பாதிச் சுளையைத்தான் மகளுக்குக் கொடுப்பாள். மீதிப் பாதியை "எங்கே, நல்லா இருக்கான்னு நான்

பார்க்கிறேன்'' என்று அவளே தின்றுவிடுவாள். மாம்பழம் முதலிய உஷ்ணமான பழங்களைத் தன் மகளுக்குக் கண்ணில்தான் காட்டுவாள்.

அன்று ராமபிரானுக்கு சபரி தானே கவைத்த பழங்களை அளித்தது போல, இன்று வடிவாம்பாள் தன் மகளுக்கு அளிக்கும் பலகாரங்கள் ஒவ்வொன்றையும், தன் வாயில் போட்டுக்கொண்டு பார்க்கிறாள். அப்படி இருந்தும் மகள் உண்ணும் சில பொருள்களை, அவள் வாயில் போட்டுக்கொள்ள முடியவில்லை. வடிவாம்பாளுக்கும் தெரியாமல், மோகனா அவைகளைத் தின்று வந்தாள். வேறு ஒன்றுமல்ல. தெள்ளிய மண், நைஸ் விபூதி, பிஞ்சான புளியங்காய் முதலியவைகளைத்தாம்! இவற்றை மோகனா எப்படியோ சம்பாதித்துவிடுவாள். வரதனைக் கேட்டால் அவன் கோபிப்பான். அபாஞ்சியோ பெண். அவனைத் தாஜா செய்து புதுப் புளியம்பிஞ்சுகளைப் பறித்துக்கொண்டுவரச் சொல்வாள். வடிவாம்பாள் இதையெல்லாம் தின்ன முடியுமா? பல் என்ன ஆவது?

மகளின் முகம் வெளுக்க வெளுக்க வடிவாம்பாளின் மனம் களித்தது. மகளின் கண்கள் பள்ளம் விழுந்து கண்டு, வடிவாம்பாளின் கண்கள் பூரித்தன. மகளின் உடம்பில் ஓடிய பச்சை நாம்புகள் அத்தனையும், வடிவாம்பாள் உள்ளத்திலே பசுமையை அளித்தன. பால் சுரக்கக் கண்டு வயிற்றில் பால் வார்த்ததுபோல் ஆனாள். தன் மகள் இடை துவண்டு நடப்பதைக் கண்டாள்; இதயம் களித்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

'இந்த நேரத்தில் இந்த மருமகப் பிள்ளை இப்படி ஊர் ஊராக அலைகிறானே!' என்ற ஆத்திரமும் அவளுக்கு வந்தது. அவள் சண்முகத்தை 'எப்போதும் வீட்டிலே இருங்க' என்று கேட்டுக் கொண்டாள். ஆனால் அந்த வித்வான் கேட்கவில்லை. தன்மேல் வழக்கு இருக்கிறது என்ற எண்ணமே இல்லாமல், வந்த கச்சேரிகள் எல்லாவற்றையும் அவன் ஒப்புக்கொண்டுவிட்டான். நாள் தவறாமல் பிரயாணம். நடிப்பாரி நாயனத்தின் மகிமை அவனை வீட்டில் தங்கவே விடவில்லை. அதிலும் ஒரு நன்மை இருந்தது. எங்கு போனாலும் திரும்பி வரும் போது, அவன் வெறும் கையுடன் வருவதில்லை. நல்ல ரவிக்கைத் துண்டுகள் வாங்கி வருவான். பட்டுப் புடைவைகளில் எத்தனை விதமான கரைகள் உண்டோ அத்தனை கரைகளிலும் இரண்டு விதம் வாங்கி விடுவான். தன் மனைவிக்குத் தன் கையால் வாசமலரும் நல்ல பலகாரங் களும் வாங்கி வருவான். அவளை அலங்கரித்துக்கொள்ளச் செய்து, அவள் அழகைப் பார்த்துப் பார்த்து மயங்குவான். மஞ்சத்தில் சயனிக்க வேண்டுமென்று, இலவம்பஞ்சில் அழகான பட்டு மெத்தைகளைத் தைத்துக்கொடுத்தான். ஆனால் அன்றிரவில் அவள் தரையில் விழுந்து தூங்குவதைக் கண்டான்.

''ஏன் இப்படிச் செய்யறே மோகனா? உன்னை யாரு தரையிலே படுத்துக்கச் சொன்னாங்க?'' என்றான். அவள் சிரித்தாள்.

''சிரிச்சா, என்ன அர்த்தம்?''



''எனக்கு என்னமோ.... ... படுக்கையிலே படுக்கவே பிடிக்கலே அத்தான்.''

''ஏன் மெத்தை உறுத்துதா? தலையணை கல்போல இருக்கா?''

''அதெல்லாம் இல்லே அத்தான்.''

''கம்மா சொல்லு மோகனா. உனக்கு இது பிடிக்கலேன்னு சொன்னா, நான் நாகபட்டினத்துக்குச் சொல்லி அனுப்பி, பிரெஞ்சு மெத்தைப் பாய் வரவழைக்கிறேன். ஜில்லின்னு இருக்கும்; அதிலே படுத்துத் தூங்கேன்.''

''அந்த ஊர் எங்கிருக்கிறது அத்தான்?''

''நாகபட்டினம் உனக்குத் தெரியாதா? என்னைக்கூட சர்க்கஸ் கம்பெனியிலே நீ சந்திக்கல்லே?''

மோகனா சிரித்தாள். ''நாகபட்டினமில்லே, நாளைக்கு நீங்கள் கச்சேரிக்குப் புறப்படுகிற ஊர்?''

''ஓ! ஐதராபாத்தா? இதோ கிட்டத்திலே, அறுபது நாழிகை வழிதான்.''

''அப்படியானால் நாற்பத்தைந்தே மைல்தானா?''

''மைலைப்பற்றி உனக்கென்ன கவலை? முந்தி இருந்தவங்க நாழிகைக்கு முக்கால் மைல் நடந்தாங்க. ஒரு நாழிகை வழின்னு பேர் வச்சாங்க. இப்போ நம்ப காலத்திலே மணிக்கு ஐம்பது மைல் வேகத்திலே ரயில் ஓடுது.''

''உங்க பிள்ளை காலத்திலே?''

''பறந்தாலும் பறப்பார்கள்!''

''அப்படியானால் ஐதராபாத் இரண்டு நாள் பயணம்தானா?''

''ஆமா!''

''போக இரண்டு நாள், வர இரண்டு நாள்தானே?''

''நடுவிலே நான் வாசிக்க ஒரு நாள்.''

''ஆக ஐந்தே நாளில் திரும்பி வந்துவிடுவீர்கள்!''

''ஆமா, என் பேரு சண்முகம். ஒரு நாளைக்கு ஓர் எழுத்து வீதம் எண்ணிக்கொள். அந்தப் பஞ்சாட்சரம் முடிந்தவுடன், இந்த சடாட்சரம் வந்துவிடுகிறேன்.''

''எப்படி அத்தான், அஞ்சு நாள் என்னைத் தனியா விட்டுட்டுப் போக உங்களுக்கு மனம் வந்தது?''

''தனி என்ன? அத்தை இருக்காங்க; வைத்தியரும் ஒண்ணும் அவசரமில்லே, போய்விட்டு வரலாம்னு சொல்லி இருக்காரு.''

''யாரு சொல்லியிருந்தாலும் நான் சொல்லவில்லையே!''

''நான் உன்னைக் கேட்கவும் இல்லையே! புறப்படறபோது பொஞ்சாதி கிட்ட விடை கேட்கப்படாதுன்னு சும்மாவா சொல்றாங்க!''

"ஏன் கேட்கப்படாது?"

"அவ சும்மா கண்ணைக் கசக்கினா புருசனுக்கு சுருக்குன்னு இருக்கும். நிசமாவே கண் கலங்கிட்டான்னா போற காரியத்திலே புத்தியே ஓடாது. ஊரிலே இருக்கிற ரெண்டுநாளும் நெருப்பிலே நிற்கிறமாதிரி இருக்கும்."

"ஏன் அத்தான், இந்தக் கச்சேரிக்கு எத்தனை ரூபாய் பணம்?"

"ஏன், நீயே பணத்தைத் தந்து பயணத்தை நிறுத்திவிடலாம்னு பார்க்கிறாயா?"

"மரகதம் என்ன சொல்லி இருக்குது தெரியுமா? உங்க அத்தானைக் கொஞ்ச நாளைக்கு வாசிக்காமல் இருக்கச் சொல்லுன்னு சொல்லி இருக்கு."

"பின்னே என்ன, உன் பக்கத்திலேயே உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கச் சொல்லுதா?"

"அது இல்லே, கேசு."

"கடம்பவனத்தாருக்குக் கலகம் உடம்போடு பிறந்தது. எனக்குக் கலை உடம்போடு பிறந்தது. ரெண்டு பேரும் அதை விட முடியுமா?"

மோகனா கடகடவென்று சிரித்தாள். அவனுடன் பேசிக்கொண்டிருப்பதிலேயே இரவு நெடுநேரமானதையும் அவள் உணரவில்லை. காவேரிக் காற்று சில்லென்றடித்தது.

"மோகனா, தரையிலே படுத்திருக்கிறாயே, உனக்குக் குளிரவில்லையா?" என்றான் சண்முகம்.

அவளுக்குக் காரணம் சொல்லத் தெரியவில்லை. கருத்தரித்திருக்கும் பெண்களை, இயற்கை, தரையிலே படுத்துத் தூங்கச் சொல்கிறது.

உலகில் எத்தனை இன்பங்கள் உண்டோ அவ்வளவையும் தாய்மை, கருவில் இருக்கும் தன் குழந்தைக்கு ஊட்டி வைக்கிறது. இதெல்லாம் மோகனா அறியமாட்டாள். கற்று வருவதல்லவே இவை, கடவுளின் செயல் அல்லவா?

அந்த வீட்டிலே எல்லோரும் சிரித்த முகத்தோடு இருந்தார்கள். நறுமலர்கள், எழிலுடைய சித்திரங்கள், அழகான சேலைகள், நல்ல இசை, நல்ல வார்த்தை இவ்வளவும் அந்த ஒரு குல மாணிக்கத்திற்காக அங்கே குடி கொண்டிருந்தன. கணவனும் மனைவியும் களிப்பில் மிதந்து, காலம் போவதை உணராமல் விடியுமட்டும் என்னதான் பேசுவார்களோ?

பொழுது புலரும் நேரத்தில், "உடனே சண்முகம் மோகனா இருவரும் புறப்பட்டுச் சென்னைக்கு வரவும். அர்ஜண்ட்" என்று ஒரு தந்தி, கடம்பவனம் பிள்ளையிடமிருந்து சண்முகத்துக்கு வந்தது.



# வைத்தியும் வம்பனும்



**த**ந்தி, வதந்தி, இரண்டிலும் திடுக்கிடும் செய்திகள்தாம் இருக்கும். ஆனால் வதந்தி என்பது வராத தந்தி. அதனால் தான் இதன்முன் 'வ' என்ற எழுத்து சேர்ந்திருக்கிறது.

வதந்தியைக் கண்டு அஞ்சுவது இல்லை. தந்தியிலோ சந்தோஷ சமாசாரம் வந்தாலும், அதைப் பிரித்துப் படிக்கும் வரையில் அச்சம் தீர்வதில்லை.

தந்தியையும், கருத்தரித்திருக்கும் பெண் பிள்ளையையும் ஒரு விஷயத்தில் ஒன்றாக ஒப்பிடலாம். தந்தியின் உட்பொருளைப் பிரித்துப் படிக்கும் வரையில் மனம் நிம்மதியைத் தராது. தாயும், குழந்தையும் சுகமாகப் பிரிந்து பார்க்கும் வரையில் மனதுக்கு நிம்மதி ஏற்படாது.

கடம்பவனம் பிள்ளையிடமிருந்து அதிகாலையில் வந்த தந்தியைக் கண்டவுடனே, சண்முகம், மோகனா இருவரும் திடுக்கிட்டார்கள். வடிவாம்பாளோ பதறியே விட்டாள். காலையில் கடம்பவனம் பிள்ளை முகத்தில் விழிக்க யாருக்குத்தான் திருப்தி ஏற்படும்? சண்முகத்துக்கு உள்ளூர அச்சம்தான். இருந்தாலும் ஆண்மகன் ஆதலால், "இந்தா, நீ ஒண்ணும் கவலைப்படாதே! இதெல்லாம் கோர்ட்டு விவகாரம். ஏதாவது ஒரு கையெழுத்து, காலெழுத்துப் போட வேண்டியிருக்கும்! தந்தி கொடுத்திருப்பாரு கடம்பவனத்தாரு" என்றான் மோகனாவிடம்.

"கையெழுத்துமில்லே, காலெழுத்துமில்லே, இதெல்லாம் நம்ப தலையெழுத்து!" என்று சொல்லிக்கொண்டே எதிரில் வந்து புடைவையை இழுத்து மூடிக்கொண்டு நின்றாள் வடிவாம்பாள். அவள் சண்டை பிடிக்க வந்தாலும் சடங்குகளை விடுவதில்லை. மரியாதையைக் கொடுத்துத்தான் "சுத்த மக்கா இருக்காங்களே இந்த மருமகப்புள்ளே!" என்பாள். "ஏன் மருமகப் புள்ளே, சும்மா உட்கார்ந்திருக்கீங்க? ஒரு பதில் தந்தியைக் கொடுத்து, என்ன விஷயமுன்னு கேளுங்க" என்றாள். சண்முகம் சிந்தனையில் இருந்தான். அந்த ஒரு நிமிஷம் பொறுக்கவில்லை வடிவாம்பாளுக்கு.

"ஐயோ, என்னிக்குத்தான் நம்ப இனத்திலே எல்லாரும் படிக்கப் போறாங்களோ. ஒரு பி.ஏ., எம்.ஏ. படிச்ச இருந்தா, இப்படிச் சும்மா உட்கார்ந்திருப்பாங்களா?" என்றாள் வடிவாம்பாள்.

ஆமாம் அத்தே. ஆயுசுக்குள்ளே ஒரு தந்தி வரும். [illegible]க்காத ஒருத்தன் பி.ஏ., எம்.ஏ. படிச்சுவிட்டுத் தந்தி படிக்கத் தயாராகக் காத்துக்கிட்டு

இருக்கணும். சிலருக்கு ஜென்மம் முழுக்க ஒரு தந்திகூட வராது'' என்று சிரித்துக்கொண்டே கூறினான் சண்முகம்.

''என்ன இருந்தாலும் ஆபத்துச் சமயத்திலேகூட உங்களுக்குக் குறும்புப் புத்தி போவது இல்லே!'' என்று அவனைப் புகழவும் புகழ்ந்தாள். ''சரி, புறப்படுங்க தபால் ஆபீசுக்கு!'' என்றாள்.

''இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை அத்தை.''

''நல்ல ஞாயித்துக்கிழமை வந்தது போங்க. தந்திக்கு இரட்டிப்புச் சார்ஜ் வாங்கணும்னுதானே வெள்ளைக்காரன் ஞாயிற்றுக்கிழமையைப் படைச்சு இருக்கான். அர்ஜண்டாப் படி கட்டி, பதில் கேளுங்க...!''

''எனக்கு ஒரு கடம்பவனம் போதாதா? அவர் ஆம்பிளை கடம்பவனம். உங்கம்மா பொம்பளை கடம்பவனம். மனுஷனைக் கொஞ்ச நேரம் யோசிக்கவிட மாட்டாங்க போலிருக்கே!''

''அதுதான் காலம் முழுக்க யோசிக்கிறாப்லே கலகத்துலே மாட்டிக்கிட்டிருங்களே. போங்க தபாலாபீசுக்கு!''

''எதுக்கு அத்தை, ராத்திரிதான் புறப்படணுமே?'' என்றான் சண்முகம்.

''எங்கே? எதற்கு? எப்படிப் புறப்படறது?'' என்றாள் ஆத்திரத்தோடு வடிவாம்பாள்.

''ஆமாம் அத்தே! நான் ஹைதராபாத்துக்குப் போகணும். நாளைக்கு மறுநாள் அங்கே இசைக் கலைவிழா வச்சிருக்காங்க. பட்டணம் வழியாத்தான் போறேன். மோகனாவும் என்கூட வரட்டும். போயி என்ன விஷயம்னு கடம்பவனத்தாரைக் கேட்டுக்கிட்டு ஹைதராபாத்துக்குப் போயிட்டு வர்றேன்.''

''அதுவும் வருதா?''

''ஆமா அம்மா'' என்று செல்லமாக உரைத்தாள் மோகனா.

''இந்தாங்க, அது பெத்து சுகப்படற வரைக்கும் இந்த ஊரைவிட்டு ஒரு இடத்துக்குப் போகப்படாது!''

''வழக்குன்னு வந்தப்புறம் போகாமே இருக்க முடியுமா அத்தை?''

''அது என்ன, சாதா உடம்பா? ராத்திரி ரயிலிலே காற்றும் கறுப்பும்...''

''ஆமாம், அம்மாவுக்காக இனிமே ரயில்லே காற்று அடிக்கப்படாது. மானத்திலே மேகம் கறுக்கப்படாது'' என்றான் வரதன்.

''ஏய் வரதா, சும்மா இரு. இது என்ன, மத்தளத்தைத் தூக்கிட்டுப் போறதுன்னு பார்த்தியா? வயிறும் பிள்ளையுமா...''

''இப்போ வயிறும் பிள்ளையுமா இருக்கு. போகப்படாது என்பீங்க. நாளைக்குக் கைக்குழந்தையைத் தூக்கிக்கிட்டுப் போகப்படாதும்பீங்க. அம்மா, நீங்க சும்மா இருங்க. காத்துக் கறுப்பு எல்லாத்துக்கும் என் கையிலே மருந்து இருக்குது.''



''ஆமாம், மருந்திலே பேய் ஓடாது. அது மந்திரத்திலேதான் ஓடும்.''

''சும்மா இருங்கம்மா. மந்திரத்திலேயும் ஓடலேன்னா, நம்ப வரதன் மத்தளத்திலே ஓடிடும்'' என்றாள் மோகனா.

''உனக்கு வேடிக்கையும் வேண்டிக் கிடக்குதே, இருக்கிற நிலைமையிலே!'' என்று செல்லமாகக் கடிந்துகொண்டாள் வடிவாம்பாள்.

''நான் வேடிக்கையா சொல்லலேம்மா. உண்மையாகவே சொல்லறேன். மோகனா சந்தோஷமாகப் புறப்பட்டு வரட்டும். ரயிலிலே ஏறி உட்காருவோம். உட்கார்ந்தவுடனே 'ஜெய் அனுமான்'னு ஒரு சத்தம் போட்டேன்னா எந்தப் பிசாசும் கிட்டே அண்டாது'' என்று தன் பிரதாபத்தைக் கூறினான் வரதன்.

''ஆமாண்டாப்பா, 'நமக்கினி யமபயமேது இல்லை' நடராசன் இருக்கும் போது'ன்னாளாம்! ரொம்ப உண்மை. நீ போடற சத்தம் ஒண்ணே போதும்'' என்று வடிவாம்பாள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''நீ ஜெய் அனுமான்னு சத்தம் போடு. அதைக் கேட்டு அவ பயப்படட்டும். 'ஆத்தா பயப்படாதே, நான் இருக்கிறேன்' அப்படின்னு சொல்லி, உங்க அனுமாரு மோகனாவுக்கு சொப்பனத்திலே வருவாரு. அவ அலறிக்கிட்டு எழுந்திரிக்கட்டும். அப்பா வரதா, உங்க அனுமாருக்கு ஒரு வடை மாலை செய்து சாத்தறேன். நீ மாத்திரம் வயிற்றுப் பிள்ளைத்தாச்சிக்குப் பக்கத்திலே உட்கார்ந்து, அவர் பெயரை அடிக்கடி சொல்லாமல் இரு.''

''ஏன் சொன்னா என்ன?''

''உனக்கு என்னடா தெரியும்? நீ ஒரு தனி மரம். தனி மரத்திலே அனுமார் ஏறினா பாதகமில்லை. தோப்பிலே புகுந்தா என்னவாகும்?''

''சே, சே! அவரு நல்ல தெய்வம் அம்மா.''

''நல்ல தெய்வம்தான். இல்லேன்னா சொல்லறேன்? ஆனால் பார்த்தா பயமாயிருக்குதே! யார் கனவிலே வரலாம், யார் கனவிலே வரப்படாதுன்னு அவருக்கு வித்தியாசம் தெரியாது. கூப்பிட்டா வந்து குதிச்சிடுவாரு. இந்தா பாரு, இன்னும் ஒரு மாசத்துக்கு ரொம்பப் பதனமாக இருக்கணும்.''

''என்ன பெரியம்மா, அர்ஜண்டா புறப்பட்டு வான்னு தந்தி கொடுத்திருக்காங்க. நீங்க நந்தியாட்டம் பாதையிலே நின்னு மறைச்சிங்கன்னா கேசு என்னவாகும்?'' என்ற முத்துராக்கு மத்தியஸ்தம் பேச வந்தார்.

''இந்தா தவுல்காரரே, நீ நந்தின்னு சொன்னாலும் சரி, மாடுன்னு சொன்னாலும் சரி. ஊரிலே எல்லாப் பொம்பிளைங்களும் கோர்ட்டிலே ஏறி நிக்கறாங்களா? மதுரைக் கேசு ஒண்ணுலேயே எனக்குப் போதும் போதும்னு ஆயிடுத்து. என் மகள் பட்டணத்துக்கும் வரமாட்டாள், பத்துப் பேர் முன்னே கோர்ட்டேறி நிக்கவும் மாட்டாள்!''

"அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதீங்கம்மா. நம்பதான் பக்கத்திலே இருப்போமே!" என்றான் தருமன்.

"இந்தா ஒத்துக்காரரே, நீ ஏதாவது விஷயம் தெரிஞ்சு பேசறியோ இல்லியோ? திருஷ்டியிலும் திருஷ்டி ராஜா திருஷ்டி. நிறை பிள்ளைத் தாச்சி கோர்ட்டிலே வந்து நின்னா, ஜர்ச்சி பார்க்கமாட்டாரா?"

"இது என்னடா ஆபத்து!" என்றான் சண்முகம்.

"ஆபத்துதான் மருமகப்புள்ளே! கம்மா கண்டவங்கெல்லாம் போய், அந்தச் சிம்மாசனத்திலே உட்கார்ந்துவிட முடியுமா? அது தெய்வாம்சம். ராஜயோகம் இருந்தாத்தான் ஜர்ச்சியா வரமுடியும். அவங்க கண்ணிலே பட்டா, ராஜா பாத்தாப்பிலே."

"வாயிதாவுக்கு வரணும்னு சொன்னா?"

"என் உசிரு போனாலும் சரிதான். அதைக் கோர்ட் வாசலிலே ஏறவிடமாட்டேன். அவ பட்டணத்துக்கும் வரமாட்டாள்" என்று வடிவாம்பாள் மூட நம்பிக்கையில் ஆணி அடித்தது போலக் கூறி விட்டாள். அவள் சொல்வதும் உண்மைதான் என்று சண்முகத்துக்குத் தோன்றியது. தன் மனைவி நீதி மன்றத்தில் ஏறி நிற்க அவன் மனதும் இடம் தரவில்லை.

"அப்படின்னா, அத்தே! இதுக்காகவாவது, இப்போ அது பட்டணத்துக்கு வந்தாகணும். அங்கே போயி நம்ப வக்கீல் கிட்டே சொல்லி, ஒரு மூணு, நாலு மாசம் கேசைத் தள்ளிப் போட்டுக்கச் சொல்லணும். நீங்க இன்னிக்கு ராத்திரி புறப்படறதுக்கு நிச்சயம் பண்ணிடுங்க" என்று சண்முகம் கேட்டுக்கொண்டான்.

வடிவாம்பாள் அரை மனதுடன் அதற்கு ஒப்புக்கொண்டாள். ஆனால் அவளுக்கு ரயில் பிரயாணத்திலும் பாதையிலும் பல பயங்கள் இருந்தன. "வீராணத்து ஏரி ஒரு தடவை உடைப்பு எடுத்து ரயில் விழுந்த போது பத்துப் பேர் செத்துப் போனாங்களே, இவங்க ஆவி தண்டவாளத்தைச் சுத்துமே! மாடு, மனுசன், பரீட்சை தேறாதவங்க இதுங்கல்லாம் அடிக்கடி ரயில்லே அடிபடுறாங்க. அந்த ஆவிங்க வேறே தண்டவாளத்தைச் சுத்துமே! எனக்கு என்னமோ ரயிலிலே அவளைக் கூட்டிக்கிட்டுப் போறது பிடிக்கல்லே தம்பி!" என்று அவள் சொன்னாள்.

வாதத்துக்கு உட்படாத இவைகளுக்கு எவ்வாறு பதில் சொல்வது என யோசித்தான் சண்முகம்.

"அப்படியிருந்தா என்னம்மா, நம்ப ஏறிக்கிற வண்டியிலே ஒரு வேப்ப மரத்தையே வேரோடு பிடுங்கிச் செருகிவிடுவோம்" என்றான் வரதன்.

"ஆமாம், பார்த்தா மாரியம்மன் கோவில் மாதிரி இருக்கும்" என்றாள் மோகனா.



"அது சரி. வேப்பிலையும் சொருக வேண்டியதுதான். ஆனாலும் எனக்கு இப்போ ரயிலின்னாலே பயமாருக்குதப்பா" என்று வடிவாம்பாள் மேலும் சந்தேகத்திலேயே ஆழ்ந்தாள்.

வாழையில் மலடு இல்லை. வாழ்க்கையில் தோல்வியும் இல்லை. வாழ்க்கையிலே யாருக்கும் ஒரே ஒரு நல்ல சந்தர்ப்பமாவது வந்துதான் தீரும். வாழ்க்கை முழுவதும் ஒருவருக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஆனால் தமது தருமன்னனைப் பொறுத்தவரையில் இதுவரை அவர் எந்த யோசனையைச் சொல்லியும் யாரும் கேட்டது இல்லை. இந்த ஒரே ஒரு தடவை மட்டும் தருமன்னனுக்கு சுக்ர தசை பிறந்தது. அவர் சொல்லிய ஒரு வார்த்தையிலே வடிவாம்பாள் 'சபாஷ்!' என்றாள். அவர்கள் பிரயாணமும் நிச்சயமாயிற்று.

"என்ன வடிவாம்பா அம்மா, எனக்கு ஒரு சந்தேகம்" என்று ஆரம்பித்தான் தருமன்.

"உனக்குச் சந்தேகம் இன்னிக்கா, நேத்திக்கா? கச்சேரி ஆரம்பிக்கிறதிலேயிருந்து கடைசி வரையில் சந்தேகம்தான்!" என்றாள் வடிவாம்பாள்.

"அந்தச் சந்தேகம்தான் பழசாப்போயிடுத்தே. நான் நினைக்கிறேன்...."

"நீ நினைக்கிறாப்பிலே, பேய் நினைக்கணுமே?"

"இரண்டு பேரும் ஒண்ணாத்தான் நினைப்போம். ராத்திரியிலே தனியா வழி நடந்தா, கையிலே ஒரு சாவிக்கொத்தை எடுத்துக்கிட்டுப் போறோமில்லே, அது எதுக்கு?"

"இரும்பைக் கண்டா பேய் வராது."

"அப்போது ரயிலிலே மட்டும் பேய் எப்படி வரும்? ரயிலிலே தண்டவாளம் இரும்பு. சக்கரம் இரும்பு. வண்டியே இரும்பு. அதிலே அடித்திருக்கிற ஆணியிலே வேட்டி கிழிந்து போகுது. கை கிழிந்து போகுது. அவ்வளவும் இரும்பு. அதனால் பிசாசும் ரயில் பக்கத்திலே வராது!"

"ஆமாம் தருமா, நீ சொல்றது நிசம்தான்" என்றாள் வடிவாம்பாள். ஆயினும் அவள் விட்ட பெருமூச்சிலே அவள் மனக்கவலையும் குறைந்தது.

"சரி, பின்னே புறப்பட ஏற்பாடு செய்யுங்க" என்று உத்தரவும் கொடுத்தாள்.

அப்பொழுது ஒரு பையன், "வடிவாம்பா அம்மா வீட்டிலே இருக்காங்களா" என்று வாசலிலிருந்து அபாஞ்சியிடம் கேட்டான்.

இதைக் காதிலே கேட்ட வடிவாம்பாள் வாசலுக்கு வந்தாள். "என்ன தம்பி?" என்றாள்.

"அம்மா, இந்த அம்பது ரூபாயைக் கையிலே வச்சுக்குங்க. பக்கத்து ஊரிலே ஒரு கலியாணம்" என்று ரொம்பப் பதற்றத்துடன் பேசினான்.

''அட, பக்கத்து ஊரிலே கலியாணம்னா, அங்கே போய் மொய் யெழுது. என் கையிலே பணத்தைக் குடுக்கிறா?''

''அதுக்கு நாங்க சமையலுக்கு ஒத்துக்கிட்டு இருக்கோம். ஒரு பாத்திரம் வேணும் அம்மா.''

''என்ன பாத்திரம் அப்பா?''

''பெரிசா ஒரு காப்பி பில்டர் வேணும். இந்த ஊரிலே பாதிப் பேர் கந்தல் துணியிலே காப்பியை வடிகட்டறாங்க. சில பேர் பாலிலேயே பொடியைப் போட்டுக் கலக்கிக் குடிச்சுடுறாங்க. யாரைக் கேட்டாலும் வடக்குத் தெருவிலே போயி கேளு. வடிவாம்பா அம்மா வீட்டிலேதான் பில்டர்லே வடிகட்டி, டிக்கிரி காப்பி சாப்பிடுறாங்க. அங்கேதான் பில்டர் இருக்கும்னு சொல்லறாங்க.''

''அதெல்லாம் சும்மா'' என்று சிரித்தாள் வடிவாம்பாள். அவளுக்கு உள்ளூரச் சந்தோஷம். தன் வீட்டுக் காப்பியைப்பற்றியும், பாத்திர பண்டங்கள் தன் வீட்டில் நிறைய இருப்பதுபற்றியும் ஊருக்கெல்லாம் தெரிந்து இருக்கிறதே என்ற ஆனந்தம்தான் அது.

''என்னம்மா, சிரிக்கிறீங்க? உங்க வீட்டுக் கலியாணத்துக்கு நீங்க ஒரு பாத்திரம்கூட இரவல் வாங்கவில்லையாமே? எல்லாம் சொந்தப் பாத்திரத்திலேதானே ஆக்கினீங்களாம்.''

''அது சரி, நீ யாரு? நான் உன்னை எப்படி நம்பிக் கொடுக்கிறது?'' என்றாள் வடிவாம்பாள்.

''நான், அந்தச் சின்னச்சாமி கடைப் பையனுங்க. நீங்க ஒரு பில்டர் மாத்திரம் கொடுங்க, விலையை வேணுமானாலும் கையிலே கொடுத்துட்டு வாங்கிட்டுப் போகிறேன்.''

''இது பாத்திரக் கடைன்னு பாத்தியா, தம்பி?''

''அது இல்லேம்மா, விலைக்குக் கொடுக்கச் சொல்லலே. கையிலே ஐம்பது ரூபாய் பணத்தைக் கொடுத்துட்டு வாங்கிண்டு போறேன். நாலு நாளிலே திருப்பிக் கொண்டாந்து கொடுத்துட்டு, அதற்குள்ள வாடகையையும் கொடுத்துட்டுப் போறேன்.''

''இந்தா, எனக்கு வாடகையும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். என் வீட்டிலே ஒரு பில்டர் என்ன, ஆறு பில்டர் இருக்குது. தாரேன். ஆனால், இன்னிக்குக் கொடுக்க முடியாது!''

''எம்மா, இன்னிக்கே கொடுத்துடுங்களேன்!'' என்று கெஞ்சினான்.

''இல்லேப்பா, இன்னிக்கு நாங்க பட்டணத்துக்குப் போகிறோம். நாலு நாள் கழிச்சுத்தான் வருவோம். நீ வெள்ளிக்கிழமை யன்னிக்கு வா, தாரேன்.''

''அப்படின்னா, உங்க மக இருக்குமே, அவங்க கிட்டே சொல்லி விட்டுப் போங்க. நாளைக்கு வந்து நான் வாங்கிக்கிறேன்.''

4842



''ஒருத்தரும் இங்கே இல்லை. என் மக, மருமகப்புள்ளே, நான் எல்லோருமேதான் போகிறோம். கடம்பவனம் பிள்ளை தந்தி குடுத்திருக் காரு. இந்தா, முதல் வகுப்பு டிக்கெட்டுகூட ரிசர்வ் பண்ண ஆள் போயிருக்குது'' என்று தன் கௌரவத்தைச் சின்னசாமி கடைப் பையனிடம் வெளியிட்டாள் வடிவாம்பாள். அது ஆபத்து என்று அவளுக்கு எங்கே தெரியப்போகிறது? இரவு ரயிலிலே எல்லோரும் புறப்பட்டார்கள்.

அந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலை, சென்னையில் இருந்து வைத்திக்கு ஒரு தந்தி கிடைத்தது. ''அவர்கள் இன்றைக்குப் புறப்பட்டு சென்னைக்கு வருவதாகத் தெரிகிறது'' என்ற சின்னச்சாமி கொடுத்த தந்திதான் அது. தந்தியைப் படித்தவுடனே வைத்தி, ''இந்த லெவுடு மாத்திரம் இடையில் வராமல் இருந்தால், எவ்வளவோ நல்லதாக இருந்திருக்குமே!'' என்று வருத்தினார்.

''சே, இருந்தாலும் பாதகமில்லை. எங்கே ஓடிப் போய்விடப் போகிறார்கள்? எழும்பூர் ஸ்டேஷனிலே மடக்கிவிடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே, தன் வக்கீலுக்கும், மற்றவர்களுக்கும் அவசர அவசரமாகச் செய்திகளை அனுப்பினார்.

திங்கட்கிழமை காலை நான்கு மணிக்கே மயிலாப்பூரில் உள்ள வைத்தியின் ஆபீஸ் வாசலிலிருந்து இரண்டு குதிரை வண்டிகள் புறப்பட்டன. இந்த வண்டிகள் புறப்பட்டுப் போவதைத் திருமயிலைத் தெப்பக்குளத்தின் ஆளோடி மறைவிலிருந்து கடம்பவனம் பிள்ளையின் ஆட்கள் பார்த்தார்கள். குளத்திற்குள் இறங்கியபடியே குனிந்து குளத்தின் மேல்கரைக்கு ஓடினார்கள். அங்கே இரண்டு விக்டோரியா வண்டிகள் காத்திருந்தன. அந்தப் பீட்டன்கள் தேனாம்பேட்டை வழியே மவுண்ட் ரோடை நோக்கி ஓட ஆரம்பித்தன.

அன்று வைத்தியின் வண்டிகள் இரண்டும் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருவதற்கே காலை பத்து மணி ஆகிவிட்டது.

அந்த வண்டிகள் புறப்பட்ட நேரமோ அல்லது யார் செய்த பாவமோ? வழியில் பல இடையூறுகள் வந்தன. மயிலாப்பூரிலிருந்து புறப்பட்ட வண்டிகள், லஸ் முனையில் இருக்கும் ஆலமரத்தைத் தாண்டியபோது, பக்கத்தில் வந்த வண்டிக் குதிரை ஒன்று தகராறு செய்தது. வைத்தியின் வண்டிக் குதிரைகளைப் பார்த்தவுடன் கனைக்க ஆரம்பித்தது. வைத்தியின் வண்டிக்குதிரைகளும் கனைத்தன. கனைத்துக் கொண்டே, செக்கு சுற்றும் மாடுகள் போல மூன்று குதிரை வண்டிகளும் தன்னைத்தானே பிரதட்சிணம் செய்துகொள்ள ஆரம்பித்துவிட்டன. சர்க்கஸில் குதிரைகள் சுற்றுவதை வேடிக்கை பார்ப்பதுபோல மக்கள் எல்லோரும் காசு கொடுக்காமலே அதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள்.

காலை ஏழு மணி சுமாருக்கு வைத்தி வேறு வண்டிகளைப் பிடித்துக் கொண்டு எழும்பூருக்குப் புறப்பட்டார். வண்டிகள் ஆழ்வார்ப்பேட்டை

வட்டார நூலகம்

திரும்பும்போது ஒரு ஆள் ஓடிவந்து ஒரு வண்டியின் மீது மோதிக் கொண்டான். அவன் காலிலே வண்டிச்சக்கரம் ஏறிது சொய்ந்துவிட்டது. அந்த ஒரு சிறு காயத்திற்கே அவன் தெருவில் புரண்டு அழுதான். போலீஸ்காரனைக் கூப்பிட்டுவிட்டான். அவனுக்கு நஷ்டஈடு கொடுத்து, வண்டிகள் அந்த இடத்தை விட்டுப் புறப்படும்போது மணி எட்டு.

கூவத்தின் பாலத்தின் மேலேறி, கோமளீஸ்வரன் பேட்டைக்குச் செல்லும்போது, கோழிக்குஞ்சு ஒன்று குறுக்கிட்டது. அது பறந்து வந்து வைத்தியின் வண்டிச் சக்கரத்தில்தானா மாட்டிக்கொள்ளவேண்டும்! சொந்தக்காரன் ஒரு கோழிக் குஞ்சுக்கு கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டான். "பணம் கொடுக்க முடியாவிட்டால், என் கோழிக்குஞ்சைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்றான். செத்த குஞ்சை உயிருடன் எப்படித் திருப்பிக் கொடுப்பது? சூர்மார்க்கெட்டுக்கு அவனைக் கூட்டிப் போய், அதே மாதிரி ஒரு கோழிக் குஞ்சை எட்டு ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்த பிறகுதான் அவன் விட்டான்.

வண்டிகள் எழும்பூர் போய்ச் சேர்ந்தன. தெற்கேயிருந்து வரும் ரயில்கள் எல்லாம் காலையிலேயே வந்துவிட்டன. வைத்தி எழும்பூரில் வந்து பார்த்தபோது, சண்முகம், மோகனா, வரதன் யாரையும் அங்கு காணவில்லை. திகைத்தார் வைத்தி. 'நமக்கு மேலே யாரோ கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள். பாதையில் நமக்கு இடையூறுகள் ஏற்பட்டதெல்லாம் அவர்கள் சூழ்ச்சிகள்தாம்' என்ற முடிவுக்கும் வந்தார். அப்படிச் செய்வது கடம்பவனம்பிள்ளைதான் என்பது அவருக்கும் தெரிந்தது. ஆனால் இப்பொழுது கடம்பவனம் பிள்ளையைப்பற்றி யோசித்து என்ன பிரயோசனம்?

"என்ன சார், ராத்திரிகூட வீட்டுக்குப் போக விடலே சார் நீங்க. எழும்பூர் ஸ்டேஷனுக்கு வருவாங்க, அரெஸ்ட் பண்ணலாமுன்னு சொன்னீங்களே! ஒருத்தரையும் காணோமே சார்?" என்று கோர்ட் சேவகர்கள் கோபித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையின் வண்டிகள் இரண்டும் தாம்பரத்துக்கே போய்விட்டன. தாம்பரத்திலிருந்து மோகனா, சண்முகம் இருவரையும் ஒரு வண்டியின் நடுவில் உட்காரவைத்து, முன் பக்கமும், பின் பக்கமும் கடம்பவனத்தின் அடி ஆட்கள் ஏறி அமர்ந்தார்கள். அந்த வண்டியில் வருவதே சண்முகம், மோகனா இருவருக்கும் சிறைவாசம் போல இருந்தது. வடிவாம்பாளும் மற்றவர்களும் வேறு வண்டியில் ஏற்றப்பட்டார்கள்.

காலை ஏழு மணிக்குக் கடம்பவனத்தின் வண்டிகள் மயிலைப் பலாத் தோப்புக்குள் வந்து நின்றன. 'வழக்கு ஆபீஸ்' கொல்லைக் கதவு திறக்கப்பட்டது. கொல்லை வழியே சண்முகத்தையும், மோகனாவையும் வீட்டுக்குள் அழைத்துப் போனார் கடம்பவனம் பிள்ளை. அந்த வீட்டில் பின்கட்டில் சண்முகத்தின் கோஷ்டியினர் இறக்கி வைக்கப்பட்டார்கள்.



முன் கட்டிலே ஒரு பெரிய பத்திரக்கடை வேலை செய்து கொண்டிருந்தது. பழைய பாத்திரங்களை வைத்துக்கொண்டு, வேலையே தெரியாத இரண்டு பேர்கள் 'தடார்! தடார்!' என்று சுத்தியால் அடித்துச் சத்தம் உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையின் ஏற்பாடுதான் இது. சண்முகம் முதலியவர்கள் பேசும் குரல் வெளியே கேட்டுவிடக்கூடாது என்பதற்காக அவர் முன்னெச்சரிக்கையாக இவைகளை செய்து வைத்திருந்தார். சண்முகம் உள்ளே நுழைந்தவுடனே, அங்கிருந்த காரைக்கால் நடேசன், ஓடி வந்து அவனைத் தழுவிக் கொண்டார்.

"அண்ணே, நீங்க எப்போ வந்தீங்க?" என்றான் சண்முகம்.

"கடம்பவனம் பிள்ளை தந்தி குடுத்திருந்தாரு. நான் சனிக்கிழமை ராத்திரியே புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலையிலே இங்கே வந்துட்டேன்!"

"என்ன விசேஷம் மாமா, எதுக்காக அவசரமாக வரச் சொல்லித் தந்தி கொடுத்தீங்க?" என்றான் சண்முகம்.

"எல்லாம் சொல்றேன், மரகதம் இங்கே வா" என்றார் கடம்பவனம்.

மரகதம் "அக்கா" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளிருந்து வந்தாள். மோகனாவுக்கு மரகதத்தைப் பார்த்தவுடனே, ஏதோ பயம் ஏற்பட்டது. 'எதற்காக மரகதம், மைனர், நடேசன் மூவரும் இங்கு வந்திருக்கிறார்கள். இது என்ன ஏற்பாடு?' என்று திகைத்தாள். மரகதம் மோகனாவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

"முதல்லே காப்பி டிப்பன் எல்லாம் சாப்பிடுங்க. மத்தியானம் வீட்டுக்கு வர எவ்வளவு நேரமாகுமோ?" என்று வருத்தத்துடன் சொல்லிக்கொண்டே மைனர் வந்தார். அவருக்குப் பின்னால் சமையல்காரன் பலகாரம் எடுத்துக்கொண்டு வந்தான்.

"காப்பி எல்லாம் இப்போ ஒண்ணும் வேண்டாமுங்க. என்ன விஷயம், எதுக்காக வரச் சொன்னீங்க? அதைச் சொல்லுங்க முதல்லே" என்று சண்முகம் பதறினான்.

"விஷயம் என்ன, வெள்ளம் தலைக்கு மேலே போயிடுத்து!" என்றார் கடம்பவனம். அன்று அவரைப் பார்த்தால், பழைய கடம்பவனம் பிள்ளையாகத் தோன்றவில்லை. பிரிவி கவுன்சிலில் கேஸை ஜெயித்து விட்டு வந்த பெரிய வக்கீல் போல் மிடுக்குடன் இருந்தார்.

"என்ன மாமா, என்ன ஆபத்து?" என்றான் சண்முகம்.

"ஆபத்து என்ன, வைத்திப் பயல் வெள்ளைக்காரனை வக்கீலாக வச்சுட்டான்! அவனுக்கு 'பெண் கர்ப்பமாக இருக்குது. இப்போது அரெஸ்ட் பண்ணப்படாது'ன்னு எல்லாம் தெரியுமா? தனபாலத்தாரை மீறிச் சிக்கலிலே மோகனா ஆடிச்சு, நீ வாசிச்சே என்கிறதுக்காக நடவடிக்கை எடுத்துட்டானுவ. வெள்ளிக்கிழமை ராத்திரி இரண்டு பேரையும் கைது பண்ணிக் கொண்டாந்துடறதுக்காக, வைத்தி, ஆட்க

திரும்பும்போது ஒரு ஆள் ஓடிவந்து ஒரு வண்டியின் மீது மோதிக் கொண்டான். அவன் காலிலே வண்டிச்சக்கரம் சிறிது சிராய்த்துவிட்டது. அந்த ஒரு சிறு காயத்திற்கே அவன் தெருவில் புரண்டு அழுதான். போலீஸ்காரனைக் கூப்பிட்டுவிட்டான். அவனுக்கு நஷ்டஈடு கொடுத்து, வண்டிகள் அந்த இடத்தை விட்டுப் புறப்படும்போது மணி எட்டு.

கூவத்தின் பாலத்தின் மேலேறி, கோமளீஸ்வரன் பேட்டைக்குச் செல்லும்போது, கோழிக்குஞ்சு ஒன்று குறுக்கிட்டது. அது பறந்து வந்து வைத்தியின் வண்டிச் சக்கரத்தில்தானா மாட்டிக்கொள்ளவேண்டும்! சொந்தக்காரன் ஒரு கோழிக் குஞ்சுக்கு கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டான். "பணம் கொடுக்க முடியாவிட்டால், என் கோழிக்குஞ்சைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்றான். செத்த குஞ்சை உயிருடன் எப்படித் திருப்பிக் கொடுப்பது? மூர்மார்க்கெட்டுக்கு அவனைக் கூட்டிப் போய், அதே மாதிரி ஒரு கோழிக் குஞ்சை எட்டு ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்த பிறகுதான் அவன் விட்டான்.

வண்டிகள் எழும்பூர் போய்ச் சேர்ந்தன. தெற்கேயிருந்து வரும் ரயில்கள் எல்லாம் காலையிலேயே வந்துவிட்டன. வைத்தி எழும்பூரில் வந்து பார்த்தபோது, சண்முகம், மோகனா, வரதன் யாரையும் அங்கு காணவில்லை. திகைத்தார் வைத்தி. 'நமக்கு மேலே யாரோ கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள். பாதையில் நமக்கு இடையூறுகள் ஏற்பட்டதெல்லாம் அவர்கள் சூழ்ச்சிகள்தாம்' என்ற முடிவுக்கும் வந்தார். அப்படிச் செய்வது கடம்பவனம்பிள்ளைதான் என்பது அவருக்கும் தெரிந்தது. ஆனால் இப்பொழுது கடம்பவனம் பிள்ளையைப்பற்றி யோசித்து என்ன பிரயோசனம்?

"என்ன சார், ராத்திரிகூட வீட்டுக்குப் போக விடலே சார் நீங்க. எழும்பூர் ஸ்டேஷனுக்கு வருவாங்க, அரெஸ்ட் பண்ணலாமுன்னு சொன்னீங்களே! ஒருத்தரையும் காணோமே சார்?" என்று கோர்ட் சேவகர்கள் கோபித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையின் வண்டிகள் இரண்டும் தாம்பரத்துக்கே போய்விட்டன. தாம்பரத்திலிருந்து மோகனா, சண்முகம் இருவரையும் ஒரு வண்டியின் நடுவில் உட்காரவைத்து, முன் பக்கமும், பின் பக்கமும் கடம்பவனத்தின் அடி ஆட்கள் ஏறி அமர்ந்தார்கள். அந்த வண்டியில் வருவதே சண்முகம், மோகனா இருவருக்கும் சிறைவாசம் போல இருந்தது. வடிவாம்பாளும் மற்றவர்களும் வேறு வண்டியில் ஏற்றப்பட்டார்கள்.

காலை ஏழு மணிக்குக் கடம்பவனத்தின் வண்டிகள் மயிலைப் பலாத் தோப்புக்குள் வந்து நின்றன. 'வழக்கு ஆபீஸ்' கொல்லைக் கதவு திறக்கப்பட்டது. கொல்லை வழியே சண்முகத்தையும், மோகனாவையும் வீட்டுக்குள் அழைத்துப் போனார் கடம்பவனம் பிள்ளை. அந்த வீட்டில் பின்கட்டில் சண்முகத்தின் கோஷ்டியினர் இறக்கி வைக்கப்பட்டார்கள்.



முன் கட்டிலே ஒரு பெரிய பாத்திரக்கடை வேலை செய்து கொண்டிருந்தது. பழைய பாத்திரங்களை வைத்துக்கொண்டு, வேலையே தெரியாத இரண்டு பேர்கள் 'தடார் தடார்' என்று சுத்தியால் அடித்துச் சத்தம் உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையின் ஏற்பாடுதான் இது. சண்முகம் முதலியவர்கள் பேசும் குரல் வெளியே கேட்டுவிடக்கூடாது என்பதற்காக அவர் முன் ஜாக்கிரதையாக இவைகளை செய்து வைத்திருந்தார். சண்முகம் உள்ளே நுழைந்தவுடனே, அங்கிருந்த காரைக்கால் நடேசன், ஓடி வந்து அவனைத் தழுவிக் கொண்டார்.

"அண்ணே, நீங்க எப்போ வந்தீங்க?" என்றான் சண்முகம்.

"கடம்பவனம் பிள்ளை தந்தி குடுத்திருந்தாரு. நான் சனிக்கிழமை ராத்திரியே புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலையிலே இங்கே வந்துட்டேன்!"

"என்ன விசேஷம் மாமா, எதுக்காக அவசரமாக வரச் சொல்லித் தந்தி கொடுத்தீங்க?" என்றான் சண்முகம்.

"எல்லாம் சொல்றேன், மரகதம் இங்கே வா" என்றார் கடம்பவனம்.

மரகதம் "அக்கா" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளிருந்து வந்தாள். மோகனாவுக்கு மரகதத்தைப் பார்த்தவுடனே, ஏதோ பயம் ஏற்பட்டது. 'எதற்காக மரகதம், மைனர், நடேசன் மூவரும் இங்கு வந்திருக்கிறார்கள். இது என்ன ஏற்பாடு?' என்று திகைத்தாள். மரகதம் மோகனாவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

"முதல்லே காப்பி டிப்பி எல்லாம் சாப்பிடுங்க. மத்தியானம் வீட்டுக்கு வர எவ்வளவு நேரமாகுமோ?" என்று வருத்தத்துடன் சொல்லிக்கொண்டே மைனர் வந்தார். அவருக்குப் பின்னால் சமையல்காரன் பலகாரம் எடுத்துக்கொண்டு வந்தான்.

"காப்பி எல்லாம் இப்போ ஒண்ணும் வேண்டாமுங்க. என்ன விஷயம், எதுக்காக வரச் சொன்னீங்க? அதைச் சொல்லுங்க முதல்லே" என்று சண்முகம் பதறினான்.

"விஷயம் என்ன, வெள்ளம் தலைக்கு மேலே போயிடுச்சு!" என்றார் கடம்பவனம். அன்று அவரைப் பார்த்தால், பழைய கடம்பவனம் பிள்ளையாகத் தோன்றவில்லை. பிரிவி கவுன்சிலில் கேஸை ஜெயித்துவிட்டு வந்த பெரிய வக்கீல் போல் மிடுக்குடன் இருந்தார்.

"என்ன மாமா, என்ன ஆபத்து?" என்றான் சண்முகம்.

"ஆபத்து என்ன, வைத்திப் பயல் வெள்ளைக்காரனை வக்கீலாக வச்சுட்டான்! அவனுக்கு 'பெண் கர்ப்பமாக இருக்குது. இப்போது அரெஸ்ட் பண்ணப்படாது'ன்னு எல்லாம் தெரியுமா? தடை உத்தரவை மீறிச் சிக்கலிலே மோகனா ஆடிச்சு, நீ வாசிச்சே என்கிறதுக்காக நடவடிக்கை எடுத்துட்டானுவ. வெள்ளிக்கிழமை ராத்திரி இரண்டு பேரையும் கைது பண்ணிக் கொண்டாந்துடறதுக்காக, வைத்தி, ஆட்க

ளோடு திருவாரூருக்கும் புறப்பட்டான். நான் செய்த ஓர் ஏற்பாட்டினாலே, அன்னிக்குத் தப்பிச்சுது."

"என்ன ஏற்பாடு செய்தீர்கள்?"

"எல்லாம் நீ ஒண்ணும் கேட்டுக்காதே. இருக்கிற சீட்டு முப்பதுதான். நானே முப்பது பஸ்ட் கிளாசையும் விழுப்புரம் வரைக்கும் புக் பண்ணிட்டேன். ஆளுக்கு அந்த ரூபாயை விசி எறிஞ்சு, ரயிலிலே ஏறி படுத்துக்குங்கடானுட்டேன்...."

"ஐயோ!"

"என்ன ஐயோ! வழக்குன்னா அப்படித்தான் தம்பி! அன்னிக்கு ராத்திரி டிக்கெட் கிடைக்கலே. அடுத்த நாள் சனிக்கிழமை வந்துடுத்து. அதற்குள்ளே ஒரு தந்தியைக் கொடுத்து, உங்களை மடக்கி இங்கே கொண்டாந்துட்டேன். இந்தக் கடம்பவனம் பிள்ளை கிட்டே மாத்திரம் கிரிமினலிலே ஒருத்தரும் ஒண்ணும் பண்ணிவிட முடியாது" என்றார் கடம்பவனம்.

"இப்பொழுது என்ன செய்யப் போறீங்க?" என்றான் சண்முகம்.

"எக்மோர் ஸ்டேஷனுக்கு, உன்னைத்தேடிக்கிட்டு வைத்தி போயிருக்கான். அவன் எக்மோரிலே மடக்கிவிடப் பார்த்தான். நான் தாம்பரத்திலேயே உங்களை மடக்கிக் கொண்டாந்துட்டேன்!"

"அப்படின்னா, இனிமே அவுங்களை அரெஸ்ட் பண்ண மாட்டாங்களா?" என்றான் வரதன்.

"டேய் முட்டுக்காரா, உன்னைப் பக்க வாத்தியம் வாசிக்கச் சொல்றபோது நீ வாசி. இதெல்லாம் கேஸ் விஷயம்."

"இப்போ என்ன செய்வாங்க?"

"நேரே இங்கேதான் வருவான், கோர்ட் சேவகனைக் கூட்டிக்கிட்டு. உடனே மாஜிஸ்ட்ரேட் வீட்டுக்குப் போக வேண்டியது. ஜாமீன் கொடுத்து உங்களை வெளியே கொண்டாந்துடுவேன். காதும் காதும் வச்ச மாதிரி ஒருவருக்கும் தெரியாமே போகும். ஆனால் அந்த மாஜிஸ்ட்ரேட் மாத்திரம் நல்ல மனுசனா இருக்கணும்" என்று அவர் சொல்லவே, சண்முகம் அவருடைய மூளைக் கூர்மையை வியந்தான்.

"ஆமாம், என்னை எதுக்கு வரச் சொன்னீங்க?" என்றார் நடேசன்.

"உங்களை ஜாமீனுக்கு வரச் சொன்னேன். மாப்பிள்ளையே ஜாமீன் கொடுக்கிறேன்னு சொன்னாரு. கேஸ் நடத்தப் பணம் வேணுமென்னு மைனரை ஸ்பேராக வச்சுக்கிட்டேன்" என்று சொல்லிக் கடம்பவனம் சிரித்தார். ஆனால் காரைக்கால் நடேசனோ, ஜாமீன் கையெழுத்து விஷயத்தில் தன் மாப்பிள்ளை மாட்டிக்கொள்ளக்கூடாது என்று கடம்பவனம் விரும்புகிறார் என்பதை அறிந்துகொண்டார்.

அப்பொழுது ஓர் அதிகாரி வந்து கதவைத் தட்டினார். கடம்பவனம் பிள்ளை கதவைத் திறந்தார். வைத்தியும், அதிகாரிகளும் அங்கு நின்றார்கள்.



"சார், நாங்க சண்முகம், மோகனா இரண்டு பேரையும் கைது செய்ய வந்திருக்கோம்" என்றார் வைத்தி.

"இது பிரத்தியார் வீடு சார். உள்ளே புகுந்து அரெஸ்ட் பண்ண உமக்கு அதிகாரம் கிடையாது" என்றார் கடம்பவனம்.

"இது பிரத்தியார் வீடல்ல சார். 'நாதஸ்வரம் சண்முகசுந்தரம் பிள்ளை வழக்கு ஆபீஸ்'னு கவரிலே எழுதி இருக்கிங்களே?" என்றார் வைத்தி.

கடம்பவனம் பிள்ளை, "ஓஹோ! அப்படியா?" என்று திகைத்தார்.

"வாங்க, மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு" என்றார் வைத்தி.

"டேய் வைத்தி, கோர்ட்டார் கையிலே ஒப்படைச்சாச்சு. இனியே உனக்கு அதைப் பற்றிப் பேச அதிகாரம் கிடையாது" என்று கடம்பவனம் பிள்ளை தடியை ஓங்கினார்.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு சண்முகம், மோகனா இருவரையும் நடத்தியே கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்பது வைத்தியின் விருப்பம். ஆனால் கடம்பவனம் பிள்ளையோ, வாசலில் வண்டிகளைத் தயாராய் நிறுத்தி வைத்திருந்தார். இருவரும் வண்டியில் கொண்டு போகப்பட்டார்கள். இருபதாயிரம் ரூபாய் ரொக்க ஜாமீன் கட்டி, பொறுப்பை நடேசன் ஏற்றுக்கொண்டார். நல்ல நண்பர்களுடைய உதவியால் இம்முறை அவமானம் வராமல் இருவரும் காப்பாற்றப் பட்டார்கள். இருவரும் உடனே விடுதலையானார்கள்.

## ஐம்பத்து நான்காம் அத்தியாயம்

# தியாகத்தில் போட்டி



**ம**றுவற்ற வானத்தில் ஒரு சிறு மேகம் ஓடினால்கூட அது பளிச்சென்று தெரிகிறது. வெண்மதியில் உள்ள களங்கம் தண்ணீரிலும் தெரிகிறது. முகத்திலிட்ட கறுப்புப் பொட்டும், பாலில் விழுந்த துரும்புங்கூட அப்படித்தான்.

ஆனால் சேமியாப் பாயசத்தில் மட்டும் எது கிடந்தாலும் தெரிவதில்லை. அதுவும் பாயசத்தோடு சேர்ந்த பொருள்களில் ஒன்று என்றுதான் தோன்றுகிறது. இது போலவே ஆயிரம் வம்புகளுக்கு இடையே அகப்பட்டவர்கள் மனதில் எந்தக் கவலையும் தனியாய்த் தெரிவதில்லை. களங்கமற்ற மனதில் ஏற்படும் கவலை உடனே தெரியும். சண்முகத்தின் மனம் தெள்ளிய ஊற்று. பளிங்கு

நீர் ஓடை போல் சந்தோஷம் பாய்ந்தோடும் மனம். அவன் பிறருக்குக் கேடு நினைப்பதில்லை: ஆதலால் மனத்தில் கவலையும் இல்லை. அந்த உள்ளத்திலே இன்று நடைபெற்ற நிகழ்ச்சி பளிங்கில் படிந்த விரல் தூசிபோல் பளிச்சென்று தெரிந்தது. அனல் காற்றில் வாடிய மலர் போல் பொலிவிழந்து புன்னகை இழந்து அமர்ந்திருந்தான்.

''சரி, சண்முகம் பிள்ளை, குளிச்சிட்டுச் சாப்பிடுங்க'' என்று வற்புறுத்தினார் மைனர். சண்முகம் குளிக்கவும் இல்லை, சாப்பிடவும் இல்லை. கோர்ட் விவகாரம் அவனைக் குழப்பியது. சங்கீத ஆராய்ச்சியில் செல்லும் அவன் சிந்தை, சட்டத்தில் சென்றது.

'சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது' என்று சொல்வார்கள். ''ஐந்து பணத்தைக் கொடுத்து நியாயத்தை வாங்க வேணும்னா, அரைப் பணம் கொடுத்து அநியாயத்துக்கே உட்பட்டுவிடலாம். அபராதத்தைக் கட்டிவிடலாம் என்று நினைப்பதுதான் சாதாரண மக்களின் வழக்கம். இந்த வழக்கு தீரவும் இல்லை. நீண்டுகொண்டே போகின்றது. ஒருவழியாக என்னைச் சிறையில் அடைத்துவிட்டாலும் பாதகமில்லை. வெளியே விட்டு வைத்துச் சிறையில் இருப்பதுபோல வாழச்சொல்கிறார்களே. கொழும்பிலே ஒருமுறை கைது செய்து அழைத்துப் போனார்கள். சென்னையில் இன்றைக்கு அதே மாதிரி நேர்ந்துவிட்டது. எத்தனை நாளைக்கு நான் பிறர் ஜாமீனில் வாழ்வது? எனக்குப் பிணை நிற்க எவ்வளவு நாளைக்கு என் நண்பர்களை இழுப்பது'' என்று நினைத்தான். நம்மால் நம் நண்பர்களுக்கெல்லாம் கஷ்டம் என்ற சிறந்த எண்ணம் அவன் சிந்தையை உளுவாக அரித்தது. ''பத்து நாளைக்கு நீ சாப்பிடாமல் இரு'' என்ற யாரேனும் சொன்னால் சாப்பிடாமல் இருந்துவிடலாம். பத்து நாளைக்கு வெற்றிலை போடாதே என்று சொன்னால், போடாமல் இருந்துவிடலாம். வைத்தியர்கூடப் பத்தியம் இருக்கச் சொல்கிறார். இருப்பதில்லையா? ஆனால் என்னிடம் எந்த வைத்தியராவது வந்து 'சண்முகம், உனக்கு இருதய நோய் இருக்கிறது. நாதஸ்வரம் வாசித்தால் உன் இதயத்துக்கு ஆபத்து! காற்றைப் பிடித்து ஊதுவது கூடாது' என்ற உரைத்தால் நான் ஊதாமல் இருக்க முடியுமா? இசைக்குப் பயன்படாத இதயமும் ஈசனுக்குப் பயன்படாத மலரும் இருந்தால் என்ன, போனால் என்ன? நான் உயிர் வாழ்வதைவிட ஊதி ஊதி உயிரை விடுவதே மேல் என்றுதான் சொல்வேன்'' என்று பெருமூச்சு விட்டான். அதுகூட அவன் இதயத்தில் வலித்தது.

''ஒப்புக்கொண்ட கச்சேரி என்ன ஆவது? நாளை ஹைதராபாத்திலே என்ன நடக்கும்? வடக்கே இருந்து பல வித்வான்கள் வந்திருப்பார்கள். அத்தனை வித்வான்களுக்கு இடையிலே ஒரு தமிழன் மாத்திரம் வரவில்லையென்று அங்கு யாராவது சொன்னால் நமக்கு அவமானம், நாட்டுக்கு அவமானம், நாதஸ்வரத்துக்கே அவமானம்.



''அவர்கள் என்ன கண்டார்கள். இனாம் கச்சேரிதானே என்று என்னவோ வாசிக்க சோம்பல் பட்டுக்கொண்டு, வராமல் இருந்துவிட்டான் என்று அவர்கள் நினைத்தால் இழுக்குத்தானே? அங்கேயுள்ள தமிழர்கள், 'இந்த வித்வத் சபையில் கலந்துகொள்ள நம் வித்வான் வருவான், தமிழ் மக்களின் வாத்தியத்தை வாசிப்பான். உங்கள் நாட்டு நாதஸ்வரம் மிக நன்றாக இருக்கிறது என்று வடக்கத்தியார்கள் சொல்வார்கள். அதிலே நமக்குப் பெருமை' என்று எண்ணுவார்களே அத்தனை இசையன்பர்களும் மாலையோடு ரயிலடிக்கு வந்து காத்திருப்பார்களே நான் அங்கு போய் இறங்கவில்லையென்றால், அவர்களுடைய மனம் என்னவாகும்? அந்த ஏமாற்றத்தை என்னால் ஈடு செய்யமுடியுமா?.... அடுத்த வருஷம் வருகிறேன் என்று தந்தி சொல்லிவிடலாமா? அடுத்த வருஷமாவது இந்தக் கேசு முடிந்துவிடும் என்பது என்ன நிச்சயம்?

'மகாராஜாவுக்குப் பணம் இருக்கிறது. வைத்திக்கு அதில் பிழைப்பு இருக்கிறது. வழக்கை இழுத்துக்கொண்டே போகிறார். நமக்குக் கையில் நாதஸ்வரத்தை எடுத்தால் சட்டம் நினைவுக்கு வருகிறது. தடையுத்தரவு அதன் துளைகளை அடைக்கிறது. முன்பு தன்மயமாக ஊதும்போது காம்போதியும், கல்யாணியும் தோன்றிக் காட்சிதந்த இடத்தில் இப்போது, கடம்பவனம் பிள்ளையும், நடேச அண்ணனும், கொழும்பு குமாரசாமியும் தோன்றுகிறார்கள்.

'கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்தாலும் இசைப் பலத்தால் தப்பிவிடலாம். கவலையைச் சுமந்துகொண்டு இசைக்கடலில் எவ்வாறு குதிப்பேன்? அலைவீசும் அந்த ரத்னாகரத்தில் எவ்வாறு நீந்துவேன்? பவளத்தின் கொடி போன்ற ராகங்களை எவ்வாறு குழல்வழியே கொடுப்பேன்? ஆணிமுத்து வடம்போன்ற ஸ்வரக்கோவைகளை எவ்வாறு தொடுப்பேன்? நான் வழிபடும் தெய்வத்தின் முன்னே திரையிட்டது போல் வழக்கு வழி மறைக்கின்றதே! எனது நாத உபாசனை வீணாகிவிட்டதே. சீ! இது என்ன வாழ்வு? ஒரு கையெழுத்து இட்டதற்காகவா இவ்வளவு கொடுமை? கலையைக் காக்க எண்ணியதற்கா இந்தப் பாடு? பெண்மைக்கு ஏற்பட்ட அவமானத்தை தடுக்க நினைத்ததற்காக இந்தத் தகராறு? கலைஞன் சுதந்திரமாக வாழ விரும்பியதற்காக இவ்வளவு சூழ்ச்சி? ஆயிரம்தான் மக்கள் தலையாட்டினாலும், நான் அஞ்சு மணிநேரம் காற்றைப் பிடித்து ஊதினாலும், அத்தனை மாலைகளும் அத்தனை மரியாதைகளும் ஒரு வெள்ளிப்பணத்தின் காலடியில் நசுக்கப்பட்டு மிதிபடுகின்றன. என்னே கலைஞனின் வாழ்வு!

'நான் திருடினேனா, பொய் சொன்னேனா? பிறர் மனைவியை நினைத்தேனா? இம்மாதிரி ஒரு குற்றமும் நான் செய்யவில்லையே. கடவுளே, எனக்கு ஏன் இந்தச் சோதனை? சங்கீத தேவதைகளே! என்னை ஏன் சங்கடத்திற்குள்ளாக்குகின்றீர்கள்? நாத மயமான இறைவனே! என் வாசிப்பில் ஏதேனும் தவறு உண்டா? எங்கேயாவது எப்பொழுதாவது

சுரங்களை அரைகுறையாகப் பிடித்தேனா? அவைகளின் கௌரவத்தைக் காக்கத் தவறிவிட்டேனா? இசைக்கு என்னால் இழுக்கு ஏற்பட்டதா? என்னை ஏன் வழக்கில் மாட்டியிருக்கிறாய்?" என்று அவன் உள்ளங் குமுறக் கேட்டான். அவன் கண்கள் கலங்கின. நாத் தடுமாறியது. நெஞ்சு வெடித்துவிடும்போல் வலி எடுக்க ஆரம்பித்தது.

'சீ! என்ன வாழ்வு! பிடித்து உள்ளே தள்ளினால் தள்ளட்டும். சிறையிலே கிடந்து செத்தாலும் மேல்.... நம்மை நம்பியிருக்கிறாளே அவள்! எனக்கு ஒரு சிறு கெடுதல் வந்தாலும் அவள் தன் உயிரையே விட்டுவிடுவாளே. எனக்காகத் தன் வாழ்வு, தன் பெருமை, தன் கலை எல்லாவற்றையும் தியாகம்செய்த அவளுக்கு யார் பதில் சொல்வது? அதுவும் இன்று அவள் இருக்கும் நிலையில்! காலையில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குள்ளே அவள் நுழையும்போது, நான் என்ன பாடுபட்டேன்! நிறை கர்ப்பத்துடன் கோர்ட்டுக்கு வரவேண்டுமென்று அவள் தலையில் எழுதி இருக்கிறதா? குழந்தை தாயின் முகத்தைப் பார்ப்பதுபோல, என் முகத்தைப் பார்த்துக்கொண்டே அந்த எழிலரசி வந்தாள். துன்பம்! துன்பம்! எனக்குத் துன்பம்! என்னை அண்டியவர்களுக்குத் துன்பம்.

"குழந்தைகள் பிறக்கும் போது கூடவே அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்று சொல்வார்கள். இந்தக் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே, அதிர்ஷ்டம் எல்லாம் கர்ப்பத்தில் செல்லாகிவிட்டதா? தாயும், தந்தையும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தால், குழந்தை பிறந்துதான் என்ன சௌக்கியம் அடையப் போகிறது? நாளை அவன் நாதஸ்வரத்தை எடுத்து ஊதினால் இன்னொரு மகாராஜா வருவான். இன்று என்னை வெள்ளிப் பணம் அழுக்குவதுபோல, நாளை அவனைக் காலணாகூட நசுக்கி விடும். வித்தையை மதிக்கத் தெரியாத மக்களிடையே, மகாராஜாக்கள் இடையே ஒருவன் வித்வானாக வாழ்வதைவிட மண்வெட்டி பிடித்து வெட்டலாம், கூலியைப் பேசிக்கொண்டு உழைக்கலாம்.

"சே என்ன முட்டாள்தனம்! என் தவறுக்கு ரசிகர்கள் என்ன செய்வார்கள்? எனக்கு ஜாமீன் கொடுத்த கொழும்பு குமாரசாமி என் கூடப் பிறந்தவரா? இன்று எனக்காக இருபதாயிரம் ரூபாய் ரொக்கம் கட்டியிருக்கிறாரே, காரைக்கால் நடேசன். அவருக்கு என்ன கைம்மாறு செய்துவிட்டேன்? அவரும் கலைக்காகத்தானே பணத்தைக் கட்டியிருக்கிறார்? இன்பத் தமிழ் நாட்டில்தான் எத்தனை ரசிகர்கள்....! செத்தும் கொடுத்தார் சீதக்காதி. தன்னையே விற்றுத் தமிழுக்கு ஈந்தார் நெற்குன்ற வாண முதலியார். தன் தலையையே தமிழுக்கு ஈந்தான் குமணன். தானே சிதையில் ஏறி, தமிழுக்கு உயிரூட்டி அதன் பெருமையைக் காட்டினான் நந்திவர்ம பல்லவன். இவர்கள் எல்லாம் யார்? கலை ரசிகர்கள்தானே?....

"என்னடா இது, தர்மசங்கடம்? தடையை மீறி இன்று ஹைதராபாத்துக்குப் போய்விடுவோம் என்றால், நடேச அண்ணனும், குமாரசாமியும் என்னவாவது? இந்தத் துன்பம் தீர என்ன வழி?



விடுதலை, விடுதலை. நெஞ்சே ஏன் இப்படி வலிக்கிறாய்? இன்று அல்ல, நேற்று அல்ல, என்று நான் காதல் பாதையில் இறங்கினேனோ, அன்றைக்கே நீயும் வந்தாய். கலைக்கு மாத்திரம்தான் என் நெஞ்சில் இடம் இருந்திருக்கிறது. காதலையும் அதில் வைத்துப் பூட்டியவுடனே, அழுக்குத் துணியைப் பெட்டியில் அடைத்தவுடன், பெட்டியின் மூடி பிதுங்குவது போல நெஞ்சு பிளக்கிறது. எப்பொழுது அது வெடிக்கப் போகிறதோ? என்றைக்குத்தான் என் கவலைகள் தீரும் நாளோ? அது இன்றைக்காகவே இருக்கக்கூடாதா?"

'என்னை நம்பியோ அவள் பிறந்தாள்? என்னை நம்பியா இத்தனை வருஷம் அவள் வாழ்ந்தாள்? என்னால் அவளுக்கு வந்த கஷ்டங்கள் தீரவே, அவள் கலை வாழ்வு வாழ்வதற்காவது, இறைவன் என்னைப் பிரித்து விடட்டும்' என்று எண்ணி, கண்ணீரை ஆறாகப் பெருகவிட்டுக் கொண்டே சண்முகம் அமர்ந்திருந்தான்.

அப்போது உடுக்கை இழந்தவன் கைபோல உதவும் நடேசன் அங்கு மிடுக்குடன் வந்தார். "என்னங்க பிள்ளை என்ன யோசனை?"

"வாங்க அண்ணே, ஒண்ணுமில்லே."

"என்ன ஒண்ணுமில்லே. என்னங்க, கண்ணெல்லாம் சிவந்து கிடக்குது? என்கிட்டே வேண்டாமுன்னு சொல்லிவிட்டு நீங்க தனியா ஆரம்பிச்சுட்டீங்களா?"

"எதை அண்ணே? என்ன கேலி பண்ணறீங்க!"

"கேலி இல்லிங்க. கண்ணு மூஞ்சி எல்லாம் பெரிய குடிகாரன் மாதிரி இருக்கே."

"இருக்கும் அண்ணே, ஒவ்வொருவருக்கும் வெறி வருவதற்குக் கள் வேண்டும். எனக்குக் கவலையே போதும்."

"கவலையில்லே பிள்ளே, கலையே போதும்னு சொல்லுங்க. ஆமா. உங்க மனசிலே என்ன கவலை இப்போ?"

"அண்ணே, என்னாலே உங்களுக்கு எத்தனை தொந்தரவு! கொழும்பு குமாரசாமிக்குத் தொந்தரவு. மோகனாவுக்குத் தொந்தரவு. மைனருக்குத் தொந்தரவு. கடம்பவனம் பிள்ளைக்குத் தொந்தரவு."

"நீங்க நிம்மதியா உக்காந்து கவலைப்பட்டுக்கிட்டிருந்தீங்க. நான் வந்தது தொந்தரவா போச்சாக்கும்?" என்று சிரித்தார் நடேசன்.

"நிம்மதியா கவலைப்பட்டேனா?"

"ஆமா, மனிசனுக்கு எப்பவும் வேலை இருக்கணும் தம்பி. இல்லாட்டி மனப்பேய் ஆட்டிவிடும். இப்போ நான் இங்கே எதுக்கு வந்தேன் தெரியுமோ?"

"சமாதானம் பண்ண வந்திருப்பீங்க."

"நான் என்ன உங்க மாமியாளா, உங்களைச் சமாதானம் செய்ய? உங்க வாய்தாவுக்கு இன்னும் நாலு நாள் இருக்கு. அதுவரைக்கும்

உங்களைக் காப்பாத்தறது என் பொறுப்பு. அதனாலே நீங்களும் நானும் இன்னிக்குச் சாயங்காலம் ஏழு மணி ரயிலிலே வெளியூருக்குப் போகப் போகிறோம், குளிச்சுச் சாப்பிட்டு ரெடியாக இருங்க.''

''எந்த ஊருக்கு அண்ணேன்?''

''எந்த ஊரா இருந்தா உங்களுக்கு என்ன? என்கூட நீங்க வாரீங்களா?''

''சொன்னீங்கன்னா?''

''நான் சொல்ல முடியாது பிள்ளே! கோர்ட்டார் சட்டப்படி நீங்க இப்ப சுதந்திர மனிதன் இல்லே. இருபதினாயிரம் ரூபாய் கொடுத்து உங்களை நான் விலைக்கு வாங்கியிருக்கேன். வாயிதா வரைக்கும் நான் சொல்றபடிதான் நீங்க கேட்கணும்.''

''என்னை நீங்க பணத்தாலே வாங்கலீங்க. மனத்தாலே முந்தியே வாங்கிட்டீங்க'' என்று சிரித்தான் சண்முகம்.

''என்ன சிரிக்கிறீங்க. கேலியில்லே பிள்ளே! இன்னும் நாலு நாளைக்கு உங்களை விட்டு நான் பிரிகிறதில்லேன்னு உத்தேசம். நான் மோகனாகிட்டேகூட சொல்லிவிடப் போறேன். உன் புருஷனை என் பொறுப்பில் விட்டுடு; நான் இருபதினாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கேன்னு.''

''அது சரிதான் அண்ணே. எந்த ஊருக்குப் புறப்படணும், சொல்லுங்க.''

''தவுல்காரர், ஒத்துக்காரர் எல்லோரையும் கூட்டிக்கிட்டு ஹைதராபாத்துக்குப் புறப்படுங்க'' என்றார் நடேசன். சண்முகம் திடுக்கிட்டான்! தான் தரையில்தான் நிற்கிறோமா, வானவர்கள் நடுவில் ஆகாயத்தில் வசிக்கிறோமா என்பதுகூடத் தெரியவில்லை. தம் கவலையைப் புரிந்துகொண்டு, நமக்காகத் தன்னையே தியாகம் செய்ய முன் வருகிறாரே இந்த நண்பர் என்ற ஆச்சரியம் ஏற்பட்டது.

''அண்ணே, நிசமாகத்தான் சொல்லறீங்களா?''

''நான் பொய் சொல்வேனா பிள்ளே! எனக்கு உங்களுடைய சந்தோஷம்தானே முக்கியம்? நாளைக்கு நீங்க ஹைதராபாத்திலே வாசிக்கலேன்னா, உங்க மனசு என்ன பாடுபடும் என்பது எனக்குத் தெரியும். பிள்ளே, அந்தக் கச்சேரியிலே உங்களை வாசிக்கச் செய்யணுங்கிறதுக்குத்தானே நான் ஜாமீன் கொடுத்தேன்?''

''அண்ணே, உங்க அன்புக்கு நான் கும்பிடுகிறேன். ஆனால் வழக்கு உங்க மேலேயும் வந்துவிடுமே!''

''இப்ப மட்டும் என்ன விட்டுவிட்டதா? ஒரு செருப்பு அறுந்து போச்சுன்னா இன்னொரு செருப்பும் அனுதாபப்படுது. நடக்க உபயோகப்படாது. செருப்பைவிட சிநேகிதன் மட்டமானவனா? கவலையை என்கிட்டே ஒப்படைச்சுட்டு, கலையை மாத்திரம் நீங்க வச்சுக்குங்க. உங்களுக்கு எங்கே போய் வாசிக்கணுமோ, அங்கே போய்



வாசியுங்க. உம்... புறப்படுங்க ஹைதராபாத்துக்கு'' என்று நடேசன் உத்தரவிட்டார். ஆனால் அவர் குரல் உணர்ச்சியால் கரகரத்தது.

''அண்ணே, உங்களைக் காட்டிக்கொடுக்க என்னாலே முடியாது.''

''என்னைக் காட்டிக்கொடுக்கச் சொல்லலே பிள்ளே. எனக்குச் சந்தோஷத்தைக் கட்டிக்கொடுக்கச் சொல்லறேன்.''

''என்னாலே நம்பவே முடியல்லே அண்ணேன்'' என்று சண்முகம் அவரைத் தழுவிக்கொண்டான்.

''கண்ணாலே கண்டா நம்பமாட்டீங்க, காதையிலே சொன்னா நம்புவீங்க'' என்று சிரித்தார் நடேசன்.

''சட்டம் உங்களைச் சும்மாவிடாது அண்ணே!''

''சட்டம் தண்டிக்கும், அவ்வளவுதானே? வீதியிலே நடக்கிறோம். காலில் கல் படுகிறது. வண்டியிலே போகிறவன் துப்பற எச்சல் நம்ப முகத்திலே வந்து விழுது. கஷ்டம் எந்த நேரத்திலே வரும், யாரால் வரும் என்று ஒண்ணும் சொல்லமுடியாதுங்க. அதனாலே, இருக்கிற வரைக்கும் நாம் சந்தோஷமாக இருக்கணும் என்கிறதுதான் என் கொள்கை.

''நீங்க ஹைதராபாத்திலே வாசிக்க வேணும்கிறதுக்குத்தான் நான் பணம் கொடுத்தேன். நீங்க இன்னிக்கு ராத்திரி புறப்பட்டால்தான் எனக்குச் சந்தோஷம்'' என்று அவர் கூறியபோது, அவர் கண்களில் அடக்கியிருந்த கண்ணீர் ஓடி வந்தது.

'தன்னைக்காட்டிலும் தன் கணவனிடம் அன்பு உடையவர் இன்னொருவர் இருக்கிறார்' என்பதை எண்ணவே எந்தப் பெண்ணும் வெட்கமடைவாள். அத்தகைய மனைவியின் மாண்பையும் வெட்கும் படி செய்துவிட்டது நடேசனின் நட்பு. ஆம், அவள் உடம்பு குறுகியது. யாரேனும் அவளிடம் வந்து, 'உன் கணவனுக்காக நடேசன் எல்லா வற்றையும் தியாகம் செய்தார்' என்று சொல்லியிருந்தால்கூட மோகனா நம்பியிருக்கமாட்டாள். ஆனால் அன்று அவள் காது கேட்க நடேசன் சொல்லிக்கொண்டிருக்கும் மேற்கண்ட வார்த்தைகள் மோகனாவைப் புளகாங்கிதம் அடையச் செய்தன. அவள் கதவு மறைவில் நின்று கொண்டே இருவரும் பேசுவதைக் கேட்டுவிட்டாள். அவள் தன் கணவனுடன் ஏதோ அந்தரங்கமாகப் பேசுவதற்கு உள்ளே வரும்போது, அங்கு நடேசனின் பேச்சுக் குரல் கேட்கவே சற்றுத் தயங்கி வாசற்படியில் நின்றாள். நடேசனின் உத்தமப்பண்பு அவள் உள்ளத்தை மெழுகாய் உருக்கியது. ஓடிப்போய் அவர் காலடியில் வணங்க நினைத்தாள்.

''அண்ணன் சொல்வது அவ்வளவும் உண்மை. அவருடைய சந்தோஷம்தான் முக்கியம். ஆகவே, நானும் அவரைத் தடுக்கக் கூடாது'' என்ற முடிவுக்கு வந்தாள் மோகனா. ஆனால் தன் புருஷன் தன்னிடம் வந்து விடை கேட்க வேண்டுமே! கேட்காமலே இருந்துவிட்டால் தான் எப்படித் தன் கடமையைச் செய்வது?' என்று தயங்கினாள்.

"சரி நான் போய் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு நடேசன் விர்ரென்று வெளியே வந்தார். மோகனாவுக்கு வெட்கமாகிவிட்டது. விலகி மறைந்துகொள்ள வேண்டுமென்று தோன்றியது.

ஆயினும் இது என் வீடு. நான் அவர் மனைவி என்ற உரிமை அவளை மறைந்துகொள்ள வேண்டாமென்று தடுத்தது. அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். நடேசன் மோகனாவைப் பார்த்தும் அவளிடம் ஏதும் பேசாமலேயே சென்றுவிட்டார். அவர் போகும்வரை பார்த்துக் கொண்டே நின்றாள். இன்று எனக்கு நல்ல மாமனார் கிடைத்தார், அருமை மைத்துனர் கிடைத்தார் என்று எண்ணிய வண்ணம், அவர் நடந்து சென்ற அடிச்சுவட்டைக் கையால் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள் அந்த புனிதவதி. கண்ணீர் பெருகியது. அடக்கினாள். சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள். உள்ளே நுழைந்தாள். சண்முகத்தின் கவனத்தைத் திருப்பக் கடகட வென்று சிரித்தாள்.

"என்ன மோகனா, நீ எங்கே வந்தே?"

"உங்களுக்கு வேஷ்டி, சட்டை எத்தனை எடுத்து வைக்கணுங்க?"

"வேட்டி, சட்டையா?"

"ஆமாம், ஐஞ்சுநாள் பயணம்னு சொன்னீங்க. ஒரு நாள் இங்கே ஆயிடுத்து. நாலு வேஷ்டி, நாலு சட்டை எடுத்துவச்சா போதுமான்னு கேக்கறேன்?"

"நான் ஹைதராபாத்துக்குப் போகலே மோகனா."

"நல்லா இருக்கு போங்க. கச்சேரிக்கு ஒத்துக்கிட்டு, போகாமே யிருந்தா முடியுமா?"

"உண்மையாகத்தான் பேசுகிறாயா?"

"என்ன அத்தான், புதிர் போடறீங்க?"

"நான் அங்கு செல்வது உனக்கு விருப்பமாக இருக்குமா?"

"'போக விடை கொடடி, நான் பொற்சிலம்பு விற்று வாரேன்' என்று பாடுகிறதுதானே? என்றைக்காவது நீங்க என்கிட்ட சொல்லிக்கிட்டு ஊருக்குப் போகணும்னு நான் சொல்லியிருக்கேனா? என்ன இப்படியெல்லாம் கேள்வி கேட்கிறீங்க?"

"இல்லே மோகனா, வழக்கிலே இன்று காலைகூட நம்மைப் பிடித்தார்களே!"

"அதான் விட்டுட்டாங்களே!"

"இல்லே, நான் போய் வந்தால் அது வழக்கில் மேற்கொண்டும் குழப்பத்தை உண்டாக்குமே!"

"வழக்காம் வழக்கு! கொழும்புலே வாசித்ததற்கு என்ன தண்டனை கொடுப்பாங்களோ, அதைத்தானே இதற்கும் கொடுப்பாங்க? கொழுக்கட்டைக்கு ஒரு மூக்குத்தான், அத்தான். குத்தத்துக்கு ஒரு



தண்டனைதான். எனக்கு இப்போ இங்கே ஒரு கச்சேரி இருக்குன்னு சொல்லுங்க. நான் நிச்சயமாகப் போய் ஆடிவிடுவேன்."

"இந்த உடம்போடுகூட ஆடுவியா?"

"ஏன், என் உடம்புக்கு என்ன? பேஷா ஆடுவேன்! மரம் பூத்தால் உலகம் சிரிக்குதா? மங்கை கருத்தரித்தால் உலகம் சிரிக்காது. நான் ஆடுவேன்."

"என்ன மோகனா, அண்ணன் உன்கிட்டே ஏதாவது சொன்னாங்களா?"

"எந்த அண்ணன்?" என்று திகைத்தவள் போலக் கேட்டாள்.

"நடேசண்ணன்...."

"அவுங்க என்கிட்ட பேசுவாங்களா?"

"இல்லே, அவுங்களும் ஒத்தைக்காலாலே நின்னாங்க."

மோகனா சிரித்தாள், "இருக்கும், நின்னிருப்பாங்க, நடேசன் இல்லே!"

"இதுதானே கேலி?"

"கேலி இல்லீங்க. காரைக்காலிலே பிறந்தவங்க கலை கடவுள்னு சொன்னா ஒத்தைக் காலிலேயும் நிப்பாங்க, தலையாலும் நடப்பாங்க. நான் திருவாரூர்தானே, கலையிலே எனக்கு அக்கறையேது."

"கோபத்தைப் பார்."

"உலகத்திலே அவரு மாத்திரம்தான் நல்லவரா?"

"அவரும் என்னை ஹைதராபாத்துக்குப் புறப்பட வற்புறுத்தினார்."

"நியாயம் இருக்குது. அதனாலே எடுத்துச் சொல்லியிருக்காங்க. ஒத்துக்கிட்ட கச்சேரிக்கு ஊதித்தானே ஆகணும்? இல்லாட்டி அவளும் ஆடறதில்லே, உங்களையும் வாசிக்க விடறதில்லேன்னு ஊரார் என்னையில்லே பேசுவாங்க....?"

"அப்படின்னா நீயும் புறப்படச் சொல்கிறாயா?"

"நல்ல கேள்வி அத்தான். எழுந்திருச்சி, குளிங்க. நேரமாச்சு" என்று அவசரப்படுத்தினாள் மோகனா. 'மோகனா கலங்குவாள், அவளிடம் விடை கேட்டால் தடுப்பாள்' என்றெல்லாம் எண்ணிய அவன் நெஞ்சம், இப்பொழுது ஆனந்தத்தில் கூத்தாடியது.

உடனே குளித்துச் சாப்பிட்டுவிட்டு, அழகாக டிரஸ் செய்துகொண்டு ஊருக்குப் புறப்படத் தயாரானான். அதைக் கண்ட வடிவாம்பாளுக்கு மட்டும் ஏதோ நாடகம் நடப்பது போலத் தோன்றியது.

இந்த மருமகப்புள்ளை மறுபடியும் இப்போ கச்சேரி செய்யப் போகிறேன் என்கிறாரே என்ற திகில் அவளுக்கு உண்டாயிற்று.

மகளும் மருமகன் பக்கம் சேர்ந்துவிட்டாள். நடேசனோ யார் சொன்னாலும் கேட்கக்கூடியவர் அல்ல. சண்முகத்தைத் தடுக்க என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அப்பொழுது சண்முகமே அவள் அருகில் வந்தான்.

"அத்தே, ஹைதராபாத்திலே ஒரு கச்சேரி. போயிட்டு நாலு நாளிலே வாயிதாவுக்கு வந்துடறன். மோகனாவைப் பாத்துக்குங்க" என்றான்.

"அது சரி, பெத்தவங்க பெண்ணைக் காப்பாத்த மாட்டாங்களா? இதுக்கு நீங்க சொல்லணுமா?"

"என்ன அத்தே, இப்படிச் சொல்லுறீங்க?"

"உங்களுக்காக ஒரு கட்டடத்தை வாடகைக்குப் பிடிச்சு, கேசு நடத்திக்கிட்டு இருக்காங்களே, அவங்க கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போங்க!"

"அவங்க கிட்டே கேட்டால், போ என்று சொல்லுவாங்களா?"

"அப்போ போகப்படாதுன்னு உங்களுக்கே தெரியுதில்லே?"

"போகாமே இருக்க முடியாது அத்தே."

"அப்போ ஆபீசை மூடிப்பிடுங்க. வழக்கு வேண்டாம்னு சொல்லிடுங்க. வீணா உங்களுக்காக அவங்க காசைச் செலவழிப்பானேன்?"

"அதுவும் உண்மைதான். எங்கே கடம்பவனம் பிள்ளை? நான் அவரைப் பார்க்கிறேன்" என்று கடம்பவனம் பிள்ளையின் ஆபீசு ரூமுக்குள் நுழைந்தான் சண்முகம்.

வடிவாம்பாளும் பின் தொடர்ந்தாள். கடம்பவனம் பிள்ளை தன்னால் முடிந்தவரையில் தடுத்துப் பார்த்தார். ஆனால் மைனரோ, "அது சரிதான் மாமா" என்றார்.

"என்ன மாமா, வழக்கிலே நீங்க புலி. நீங்க மனசு வச்சீங்கன்னா, வடக்கையே தெற்கா மாத்திப்பிடுவீங்க. சட்டமெல்லாம் உங்க கையிலேதானே இருக்குது" என்றார்.

மாப்பிள்ளை இவ்வாறு தன் பெருமையை எடுத்துச் சொன்ன பிறகு கடம்பவனம் பிள்ளைக்கும் அது உண்மைதான் என்று மனதில் பட்டது. "அது சரி மாப்பிள்ளை, நான் பார்த்துக்கறேன். எதுக்கும், சண்முகம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கணும்."

"உங்ககிட்டே சொன்னா என்ன அர்த்தம்? 'மாமா அவசியமாக இருக்குது. நான் ஊதப்போறேன். நீங்க எப்படியாச்சும் மானேஜ் பண்ணிடுங்கோ' அப்படின்னுதானே அர்த்தம்?"

"ஏன், அதை என்கிட்டவே சொல்லியிருந்தா நான் காதும் காதும் வச்சாப்பிலே செய்திருப்பேனில்லே. சரி! பின்னே போய் வாசிக்கட்டும். ஆனால் ஒருத்தரையும் போட்டோ எடுக்க விட வேண்டாம். தேதி போட்டு எதிலேயும் கையெழுத்துப் போட வேண்டாம். மத்ததெல்லாம் நான் பார்த்துக்கிறேன்" என்று வீட்டுக் கொல்லை வழியாய்ப் போக உத்தரவு கொடுத்துவிட்டார்.

சண்முகம் தன் அறைக்குள் நுழைந்தான். சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு, மோகனாவிடம் சொல்வதற்காகத் திரும்பினான்.



அங்கே கண்ட காட்சி அவனை பிரமிக்கச் செய்தது. அவளும் நைலான் பட்டுப்புடவை கட்டி, நன்கு அலங்கரித்துக்கொண்டு தானும் புறப்படத் தயாராக நின்றுகொண்டிருந்தாள்.

"என்ன மோகனா, நீயும் புறப்படறியா?"

"என்னைத்தான் அம்மா வரவிடமாட்டாங்களே!"

"இல்லே, உன் ஆடை அலங்காரங்களைப் பார்க்கிறபோது....?"

"ஊருக்கு நீங்க போகிறபோது நான் அலங்காரம் பண்ணிக்காமே சும்மா இருந்தா உங்களுக்கு திருப்தியாக இருக்காதேன்னு செய்து கிட்டேன்."

"இப்படிச் சொல்லி என் பயணத்தைத் தடுக்க வழிபண்ணிவே போலிருக்கு. இந்த அழகோடு உன்னைப் பாத்துவிட்டு, நான் எப்படி ரயிலிலே போகிறது?"

"இன்னைக்குத்தானே பார்க்கறீங்க. கேலி போதும், அதுக்காகப் பயணத்தை நிறுத்திப்பிடாதீங்க. நானும் ரயிலடி வரைக்கும் வரப்போகிறேன். உங்களை வழி அனுப்புவதற்காக இந்த டிரஸ்."

"என்ன மோகனா, என் கழுத்தைப் பிடித்துத் தள்ளறே!"

"நானா கழுத்தைப் பிடித்து தள்ளறேன்? கடியாரமில்லே தள்ளுது? சரி, ஹைதராபாத்திலே எனக்கு என்ன வாங்கிண்டு வர்ரீங்க?"

"பூ."

"பூவா? அரையணாப் பூவிலே அடிமையாகிவிடுவேன்னு பாத்தீங்களா? அதெல்லாம் முடியாது. எனக்கு நல்ல வாசனைகள் எல்லாம் வாங்கிட்டு வரணும். என் அத்தான், அங்கு நல்ல பொம்மைகள் எல்லாம் இருக்குமாமே?"

"பொம்மை எதற்கு? விளையாடப்போறியா?"

"நான் விளையாடினாத்தானா? விளையாட வேண்டியவங்க விளையாடறாங்க" என்று சொல்லி, வெட்கத்துடன் திரும்பினாள்.

"ஓஹோ, நாளைக்குப் பிறக்கிற குழந்தைக்கு இன்றைக்கே சாமான்கள் சேர்க்க ஆரம்பிச்சுட்டியா?"

"நீங்க மாத்திரம் என்னவாம்? அதுக்காகத்தானே விழுந்து விழுந்து சம்பாதிக்கிறீங்க?"

"மோகனா, இந்த சங்கீத பரம்பரைக்கே, பிள்ளை குட்டிகளுக்குச் சொத்து சேர்க்கணுங்கிற எண்ணம் எப்போதும் கிடையாது. அப்படியெல்லாம் இருந்தால் நான் இப்ப ஊருக்குப் புறப்படுவேனா?" என்று சொல்லித் தயங்கினான் சண்முகம். மோகனா திடுக்கிட்டாள். பயணத்தை நிறுத்திவிடுவானோ என்று பயந்தாள். தன் கலக்கத்தைப் புன்னகையால் மறைத்துக்கொண்டே, "சரி, புறப்படுங்க நேரமாச்சு" என்றாள்.

சண்முகம் மேலும் தயங்கினான். அவளுடைய ஜகன்மோகன சௌந்தரியம் அவனுடைய பயணத்தை 'ஏண்டா? இன்று புறப்படு

விடோம்'' என்று எண்ணும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. ''மோகனா, இங்கே வா'' என்று அவளை அருகே அழைத்தான்.

''சே, சே, தெரியாமலா சொன்னாங்க ஊருக்குப் போறபோது பூனை குறுக்கே வந்தாலும் வரலாம், பெண்சாதி குறுக்கே வரப்படாதுன்னு'' என்றான் அவன்.

''இப்போ நான் உன்னை என்ன சொல்லிவிட்டேன்? வம்மா இங்கே வா. ஒரு ரகசியம் கேக்கணும்.''

''என்ன அத்தான்?''

அவள் காதில் எதையோ கேட்டான். அவள் கன்னம் சிவந்தது.

''நான் வருவதற்குள்ளே அவன் வந்துவிட்டா என்னைக் கவனிப்பாயா?'' என்று கேள்விதான் அது.

''போங்க அத்தான். புறப்படுங்க. வண்டி காத்துக்கிட்டு இருக்கு'' என்றாள் அவள்.

சண்முகம் வந்து வண்டியிலே ஏறினான். மோகனாவும் அருகில் அமர்ந்தாள். பட்டணத்து வீதியிலேதான் அந்தக் குதிரை வண்டி போய்க் கொண்டிருந்தது. ஆனால் இருவரும் ஏதோ இன்பலோகத்தில் சஞ்சரிப்பது போல எண்ணிக்கொண்டே போனார்கள்.

ரயிலில் சண்முகத்தை ஏற்றிவிட்டு, மோகனாவும் சிறிது நேரம் அருகில் அமர்ந்தாள். தன் கணவனை ஒவ்வொருவரும் மரியாதையுடன் நோக்குவதையும் வணக்கம் செலுத்துவதையும் கண்டு மகிழ்ந்தாள். வண்டி புறப்பட மணி அடித்தது. ''அத்தான், ஐந்து நாளிலே வந்து விடுவீங்களா?'' என்று கேட்டாள்.

''என்னாலே அங்கே ஒரு நிமிஷம்கூட அதிகமாக இருக்க முடியாது மோகனா. நீ என் கண்ணுக்குள்ளேயே இருப்பே'' என்றான் சண்முகம். உண்மையிலேயே இதய ரசம் பூசிப் படர்ந்த அவன் இரு விழிகளிலும் அவள் நிழல் நின்றது. அவளுக்குப் பதில் சொல்ல நா எழவில்லை. ஆயினும் சிரித்தாள். அந்தப் புன்முறுவலோடு அவனும் விடை பெற்றுக் கொண்டான்.

மோகனா கீழே இறங்கினாள். வண்டி புறப்பட்டது. ''குப்.... குப்'' என்று அந்த என்ஜின் பேரிரைச்சல் இட்டுக்கொண்டே நீளமான அந்த வண்டியை இழுத்துக்கொண்டு மறைந்தது. வண்டி மறைந்தது; வருத்தம் எதிரில் வந்தது. என்ஜின் சத்தம் காதை விட்டு நீங்கியது. ஆனால் அவள் இருதயத்தில் குப் குப் என்று ஏதோ அடித்துக்கொண்டது. கலகலவென்று கண்ணீர் கொட்டியது.

பக்கத்தில் நின்ற வரதன், ''என்ன மோகனா அழறே?'' என்றான்.

''பல்லைக் கடித்துக்கொண்டு போயிட்டு வாங்கன்னு சொல்லிட்டேன் வரதா என் மனசை ஏதோ கடிக்குது'' என்றாள்.

அப்போது இடியோசை போல ''ஓஹோ, வழியனுப்ப வந்தீங்களோ?'' என்ற வார்த்தை அவள் காதில் நாராசம் போல் பாய்ந்தது. எதிரில் நின்றார் வைத்தி.



குதிரை வண்டியிலே ஏறி மறுபடி உட்கார்ந்தபோது, அவளுக்குத் தன் நினைவு இருப்பதாகத் தெரியவில்லை. வீட்டிலே வந்து ''அத்தான், அத்தான்'' என்று அலறினாள். தன் துயரத்தை அடக்கிக்கொண்டு விடை கொடுத்தாலும் இப்பொழுது, அவள் உள்ளம் அவளைப் பாடாய்ப் படுத்தியது. 'ஏன் விடை கொடுத்தோம்? ஏன் அவரை ஊருக்கு அனுப்பினோம்? இதன் மூலம் வரும் ஆபத்து, எங்கு கொண்டுபோய் விடுமோ? இப்போதே ஓடிப்போய் அவரைத் திரும்ப அழைத்து வந்துவிட்டால் என்ன?'' என்று எண்ணிக்கொண்டே படுக்கையில் சாய்ந்தாள் மோகனா.

காலையில் அவள் கண்விழித்துப் பார்த்தபோது, பக்கத்திலே ஒரு லேடி டாக்டர் நிழல் வடிவில் அமர்ந்து இருப்பதைக் கண்டாள்.

''ஷீ ஈஸ் ஷாக் இன் மைண்ட். கர்ப்பிணிகளுக்கு இதுமாதிரி கவலையைத் தாங்க முடியாது. அவளை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்து விடுங்கள்'' என்றாள் அந்த அம்மாள்.

''ஆகட்டுங்க. நாங்க எல்லாம் அங்கே வரலாமா?'' என்றாள் மரகதம்.

''ஸ்பெஷல் வார்டு போட்டால் எல்லோரும் வரலாம். நான் போயி ஸ்பெஷல் வார்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் டாக்டர் அம்மாள். மரகதத்துக்கும் அதுதான் சரி என்று தோன்றியது. தனக்கு ஏற்பட்ட கொடுமை, அக்காளுக்கும் வந்துவிடக்கூடாது. ராமேஸ்வரத்தில் எவ்வளவு ஆனந்தமாக என் கணவனிடம் சொன்னேன் என்று எண்ணினாள்.

ஆனால் வடிவாம்பாளோ ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஒப்பவில்லை. ''வேண்டாம், திருவாரூருக்கே போய்விடுவோம். அங்கே எங்க மருத்துவச்சி இருக்கிறாள், பார்த்துக்குவா'' என்றாள்.

''இல்லிங்க அத்தே. உடம்பு சரியில்லே. இங்கே டாக்டர் அம்மாவே பார்த்துப்பாங்க. அவங்க படிச்ச இருக்காங்க'' என்றாள் மரகதம்.

''இல்லேம்மா, வேண்டாம். இவங்க படிச்சத்தான் இருக்காங்க. எங்க மருத்துவச்சிக்குக் கைராசி உண்டு. இவங்க விலாதிலைத்தான் நடுப்பாங்க. எங்க மருத்துவச்சி, உயிரையே கொடுப்பா'' என்று வடிவாம்பாள் சொல்லவே, அந்த டாக்டர் அம்மாளுக்குக் கோபம் வந்தது.

''யாரு அந்த மருத்துவச்சி?'' என்று கோபத்தோடு கேட்டாள்.

''அவளை உங்களுக்குத் தெரியாதுங்க. அவள் பெயர் கமலாம்பா. அவள் வாசலிலே கொண்டுபோய் போடறேன். தாயையும், குழந்தையையும் சௌக்கியமாக்கி என் கையிலே கொடுக்கவேண்டியது அவள் பொறுப்பு. இல்லேன்னா இந்தப் பாவியையும் சேர்த்து எடுத்துக்கட்டும்'' என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள், ''அடி என் அருமை மகளே, என்னம்மா செய்யுது....'' என்று அலற ஆரம்பித்தாள். பாவம் டாக்டரம்மாளுக்குக் கண்களில் நீர் சுரந்தது.

# பகையை மறந்தவரே பாரில் பெரியோர்



மது அருந்துபவன்கூடத் தன்னை மறந்து விடுகிறான் - அது பெருமையல்ல. மற்றவருக்காகத் தன்னை மறந்து விடுதல்தான் பெருமை. அம்மாதிரி வாழ்ந்த ஆண் மக்களை நாம் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' எனப் போற்றுகிறோம். ஆனால் மரணப்படுக்கையில் இருக்கும் தாய் தன் மகன் பேரைச் சொல்லிக்கொண்டே, ஊண் மறந்து உறக்கம் மறந்து கிடப்பது எதனால்? 'அதுதான் பெண்மையின் இயல்பு.

அன்றிரவு ரயிலிலே மோகனா 103 டிகிரி காய்ச்சலோடுகூட திருவாரூருக்கு அழைத்துப் போகப்பட்டாள். அவளுக்குத் தன் நினைவு இல்லை. ஆயினும் தன் கணவனின் நினைவிருந்தது. ''அத்தான், அத்தான்'' என்ற வார்த்தைகள் மட்டும் அவள் வாயில் இருந்து வந்து கொண்டிருந்தன.

மனைவியின் மனம் இவ்வாறு அதிர்ச்சியில் அகப்பட்டுத் தவிக்கையில், மணவாளனோ தன்னை மறந்து இசை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான்.

தமிழர்கள் எங்கே சென்றாலும் அவர்கள் பண்பை விட்டு விடுவதில்லை என்பதற்கிணங்க, ஐதராபாத்திலுள்ள தமிழர்களும் நடந்துகொண்டார்கள். அவர்களுக்கு என்று அங்கு ஒரு தனிச் சங்கீத சபை - அந்தச் சபையில் இந்துஸ்தானி சங்கீதம், கர்னாடக சங்கீதம் இரண்டுக்கும் இடமுண்டு. ஆண்டுதோறும் சங்கீத மகாநாடு நடத்தி வித்வான்களை கௌரவிப்பதும், அதன்மூலம் இசை நுட்பங்களை வளர்ப்பதும் ரசிகர்கள் கடமை என உணர்ந்து இருந்தார்கள்.

இவ்வாண்டு நடுப்பாரி நாயனத்தைக் கேட்கும் ஆசையில் சண்முகத்தை அழைத்திருந்தார்கள். தாங்கள் அந்த இசையைச் செவிமடுப்பதோடல்லாமல், அந்தப் புதுமையை வடநாடும் அறிய வேண்டும் என்ற சுயநலமும் அதில் உண்டு. சங்கீத சதஸ் நான்கு நாட்கள் நடைபெற்றது. அந்த நாலு நாளும் சண்முகம் வாசித்தான்.

சங்கீதக் கணக்கர்கள் என்று ஒரு சாரார் உண்டு. அவர்கள் எங்கும் இருப்பார்கள்; எப்போதும் இருப்பார்கள். மற்ற சங்கீதக்காரர்களுக்கெல்லாம் நாதம், குழல், யாழ் முதலியவைகள் வேண்டும். சங்கீத



ஆராய்ச்சிக்கு இந்தக் கணக்கர்களுக்கோ பேனா, பென்சில், சாக்கட்டி, கரி முதலியவையே போதும். இசை மாநாடுகள் வந்துவிட்டால் இந்தப் புள்ளிகள் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்துவிடும்.

எப்போதும் தங்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு, எந்த வித்வான் பாடினாலும் குறுக்கே புகுந்துவிடுவார்கள். நடுக்கச்சேரியிலே எழுந்து ''ஓய் நிறுத்தும். இந்த இடத்தில் தைவதம் பிடிக்கலாமா, வேங்கடமகி இதை ஒப்புக்கொண்டிருக்கிறாரா? இதற்குப் பதில் சொல்லிவிட்டு மேலே பாடும்!'' என்பார்கள். பாவம், அந்த சங்கீத வித்வானுக்குக் குருகுலவாசம், சாதகம் இவைதாம் தெரியும். அவருக்குப் பாடவே நேரம் பற்றாதபோது ஆராய்ச்சிக்கு நேரமேது? இந்தக் கணக்கர்களுக்கோ பாடவும் வராது, பாட்டைக் கேட்கவும் வராது. ஆதலால் ஆராய்ச்சியிலும் திருப்தியடைய வழியில்லை. இன்று வைக்கோல் போரைக் காவல் காக்கும் புலிபோல இவர்கள் சங்கீதத்தைக் காவல் காத்து வருவார்கள்.

இவர்களுக்கெல்லாம் அந்த மாநாட்டில் சண்முகத்தின் மேல் பெரிய திருப்தி வந்துவிட்டது. இவர்கள் சொன்ன ஆராய்ச்சியையெல்லாம் அவன் நாதஸ்வரத்தில் செய்தே காட்டினான். பத்தில் ஒன்பது நன்றாக இல்லையானாலும், பத்துக்கு ஒன்று முத்துப்போல் இருந்தது. அதில் அவர்களுக்கு ஆனந்தம். சங்கீதத்துக்குச் செல்வம் சேர்ந்தது. விழா முடிந்தது. அன்று இரவில் சண்முகத்தின் கச்சேரி நடைபெற்றது. குணத்தாலும் குழலாலும் உயர்ந்த அவனை எல்லோரும் தெய்வம் போல் கொண்டாடினர்.

''எங்கள் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை இவ்வளவு அழகாக பக்தியுடன் சண்முகம் வாசிப்பார் என்ற நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை. நாங்கள் 'பூப்' வாசித்தால், அதை அவர் 'மோகனம்' என்கிறார். நாங்கள் 'தர்பாரி' வாசித்தால் அவர் அதை 'கானடா' என்கிறார். கர்னாடக சங்கீத வித்வான்கள் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை அழகுபடுத்தியிருக்கிறார்கள். இசையிலே இத்தனை அபிவிருத்தியைத் தமிழ் மக்கள் செய்திருப்பதைப் பார்க்க எங்களுக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது.

''இவ்வாண்டு ஹைதராபாத்துக்கு வந்தது மாத்திரமல்ல, இனி வடஇந்தியாவில் நடக்கும் ஒவ்வொரு சங்கீத சதஸுக்கும் ஸ்ரீமான் சண்முகம் வரவேண்டும். அதுதான் எங்கள் ஆசை'' என்று பாராட்டி, அந்தச் சங்கீத மகாசபையின் தலைவரும், இசையால் இறைவனைக் கண்டவரும் ஆகிய ஸ்ரீ ஓம்காரநாத் சடோபாத்யாயா என்ற மகான், சண்முகத்தின் கையில் ஒரு தோடாவை அணிவித்தார்.

இறைவன் காதருகே நாக குண்டலமாக இருந்து நல்லிசை ஓதும் இருவர் நினைவாக அந்தத் தோடா நாக முகப்போடு இருந்தது. அந்த நாகத்தின் கண்கள் இரண்டிலும் இரண்டு பழைய சிவப்புமணிகள் பதிக்கப்பட்டிருந்தன.

சண்முகம் அதைக் கையில் போட்டுக்கொண்டு, தன் கையை ஒருமுறை பார்த்தான். அந்தச் செவப்புக்கண்கள்.... ஆம் எங்கோ பார்த்தவை போல் இருந்தன. அவன் திடுக்கிட்டான்! நாகலிங்கத்தின் கண்கள் அல்லவா அவை? அடேயப்பா! அவன் மோகனாவை என்ன பாடு படுத்திவிட்டான்! 'நாளை வழக்கு என்னவாகுமோ?' என்ற ஊர்க் கவலை உள்ளத்தில் புகுந்தது. வாசித்தால் கவலை மறைகிறது. வசித்தால் கவலை வருகிறது. நம் கதியே இதுதானோ எனச் சிரித்தான்.

புறப்பட்டான் சண்முகம் மதராசுக்கு. பக்கத்திலே ஒரு வெண்கலப் பானை நிறையத் தங்க மோகராக்கள் இருந்தன. அக்காலத்தில் நோட்டு களை சன்மானமாகக் கொடுக்கும் பழக்கம் கிடையாது. கலையால் உயர்ந்த வித்வான்களுக்கு விலையால் உயர்ந்த மோகராக்கள், பட்டு முதலிய பொருள்களைத்தான் சன்மானம் செய்வார்கள். சிலரைப்போல் ஒரு ரூபாய் நோட்டைக் கவரிலே வைத்துக் கட்டை நீட்டுவதில்லை.

மோகனாவுக்கென்று ஒரு வெற்றிலைப் பெட்டி வாங்கினான். வெள்ளை உலோகம் ஒன்றில் செய்யப்பட்டு வெண்புறா உருவில் அது இருந்தது. அதில் உள்ள ஒரு பொத்தானை அமுக்கினால் அது இறகை விரிக்கும். பாக்கு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி முதலியவை களை வைப்பதற்குச் சிறு சிறு கிண்ணங்களும் அதில் அமைந்திருந்தன.

'அவள் இனி வெற்றிலை அதிகம் போட வேண்டுமல்லவா' என்று எண்ணிய ஆசைக் கணவனின் பரிசு அது.

'ரயிலுக்கென்ன காதலியா சென்னையில் காத்திருக்கிறாள்?' என்று மெதுவாக வரும் ரயிலைத் திட்டிக்கொண்டே சென்னை வந்து சேர்ந்தான் சண்முகம்.

ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளை அவனை எதிர்கொண்டு அழைக்க ஸ்டேஷனுக்கே வந்திருந்தார்.

''மோகனா எப்படி இருக்குது?'' என்று முதல் கேள்வி கேட்டான் சண்முகம்.

''நல்லா இருக்குது.''

''கோர்ட்டுக்கு அதையும் கூட்டி வந்திருக்கீங்களா?''

''சே கூட்டிக்கிட்டு வருவேனா?''

''பின்னே, நான் வீட்டுக்குப் போயிட்டு ஓர் எட்டிலே வந்துடறேன்.''

''நேற்று முதல் விசாரணை நடக்குது. இன்று நீ வராமல் இருந்துவிடுவாயோ என்று நான் பயந்துவிட்டேன். அதனால்தான் நானே வந்தேன்'' என்று சொல்லி, அவனைக் கோர்ட்டுக்கே அழைத்துச் சென்று விட்டார் கடம்பவனத்தார். மோகனா விஷயத்தைச் சொல்லவே இல்லை. கோர்ட்டு விஷயத்தில் பொய் சொன்னால் குற்றமில்லை என்பது அவர் அபிப்பிராயம்.

ஹைதராபாத்தில் போர்த்திய சால்வை, தங்கத்தோடாவோடு சண்முகம் கோர்ட்டில் வந்து நின்றான். அங்கு குழுமிய மக்கள் அவனை வியப்புடன் பார்த்தனர். ஆனால் அவன் அதைக்காட்டிலும் ஆச்சரியத்துடன் நீதிமன்றத்தைப் பார்த்தான்.



புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடித்தன என்று படித்திருக்கிறோம். ஆனால் கோர்ட்டுகளிலே ஒரு புறத்தில் தர்ம தேவதை அமர்ந்திருப்பதையும், அதன் எதிரிலே அதர்மம் விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்த்திருக்கிறோம். நீதியின் உருவான நீதிபதிகள் எதிரிலே பொய்ச் சாட்சி சொல்பவர்கள், பொய்க் கேசு ஜோடிப்பவர்கள் முதலியவர்கள் எல்லாரும் சட்டம் என்ற போர்வைக்குள் மறைந்திருப்பார்கள்.

அன்றைய கோர்ட்டிலே சண்முகம் அதைக் கண்டு ஆச்சரியப்பட வில்லை. அவன் கண்ட வேறொரு காட்சி அவனை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. ஒரு காலமும் கோர்ட்டுக்குள்ளே அடி எடுத்து வைக்காத பலர் அன்று அங்கு வந்திருந்தார்கள். சங்கீதக் கச்சேரிகளில் முன் வரிசையில் அமர்ந்திருக்கும் பலர் வாடிய முகத்துடன் அங்கு நின்றார்கள்; மிகப்பெரிய சங்கீத வித்வான்களில் சிலர் அன்று சட்டை போட்டுக் கொண்டு கோர்ட்டிலே வந்து நின்றனர். சங்கீதமே நமக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறதோ என்று அவனை எண்ணும்படி செய்தது அக்காட்சி.

இன்னொரு புறத்திலே சீடர்கள் புடைசூழ ஸ்ரீலஸ்ரீ ஆதீன பண்டார சன்னதிகளின் பிரதிநிதி ஒருவர் அமர்ந்திருந்தார். அவர்கள் மடத்துக் காருவாரும் சிப்பந்திகளும் கைகட்டி நின்றார்கள். 'அறமே நமக்கு ஆஜராகியிருக்கிறதோ?' என அவன் எண்ணினான்.

இன்னொரு புறத்திலே தமிழ்நாட்டுத் தேவாலயங்கள் பலவற்றிலிருந்தும் வந்த பூவிடுவார், திருமுறை ஓதுவார், ஸ்தானீகர்கள், ஸ்ரீ காரியம் முதலியவர்கள் வீற்றிருந்தார்கள்.

இதைக் கண்ட சண்முகம், 'கடவுளே நம்மைக் காக்க வந்திருக்கிறார்' எனப் பெருமிதம் கொண்டான்.

இத்தனை காட்சிகளுக்கிடையே கோயில் மதிலில் குரங்கேறி அமர்ந்ததுபோல் வஞ்சகமும் அங்கு நின்றது. வைத்திதான் அது. மதன்பூர் மகாராஜாவோ, வராந்தாவில் சாதாரண உடையில் உலாவிக்கொண்டிருந்தார். அங்கிருந்த சூழ்நிலையைப் பார்த்தவுடனே, மகாராஜாவுக்கு என்னவோ செய்தது. 'இவ்வளவு பேர்களின் அன்புக்குப் பாத்திரமான வரா அந்த வித்வான்' என நினைத்தார்.

அப்போது, ''ஆண்டி பெரிசா, அரசன் பெரிசா பார்த்துடுவோம்'' என்று அவர் காதில் ஓதினார் வைத்திஜீ.

அழியாப் புகழ் படைத்த ஆங்கிலேயர்களில் விட்லி காட்டன் ஒருவர். பாரிஸ்டர் நார்ட்டன் ஒருவர். முதல்வர் ஒருவரால் படைக்கப்பட்டவர். இரண்டாமவர் வாதத்தில் புதுமுறைகளைப் படைத்தவர். ஆனால் நமது வக்கீல் காட்டன் துரை அப்படியெல்லா மில்லை. ஆடிக் காற்றிலே பஞ்சு பறப்பதுபோல் அவருடைய வாதங்கள் பறந்துவிடும் என்பது ஒன்றுதான் அவர் பெருமை.

ஸ்ரீமான் காட்டன் துரை இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு மனதிற்குள் சிரித்துக்கொண்டார். அவருக்கு இந்தக் கூட்டம் எல்லாம் கேலிக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றின. இந்த இந்தியர்களே முட்டாள்கள், காட்டுமிராண்டிகள் என்பது அந்தக் **காட்டானின்** அபிப்பிராயம். அவருடைய வாதத்தின்போது பின்வருமாறு கூறினார் :

"இந்த வழக்கில் இவர் பைப்பர் காண்டிராக்டில் கையொப்பம் இட்டிருக்கிறார் என்பது ஊர்ஜிதமாகிறது. அந்த ஒப்பந்தத்தை அவர் வேண்டுமென்றே மீறியும் இருக்கிறார். அதுவும் புலனாகியிருக்கிறது. நான்கு நாளைக்கு முன்புதான் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அந்த மை உலருவதற்குள் மறுமுறையும் தடையை மீறி இருக்கிறார் என்பதை ரயில்வே ஸ்டேஷனில் வைத்திஜி எடுத்த இந்தப் போட்டோ நிரூபிக்கிறது" என்று கோர்ட்டாரிடம் போட்டோவை நீட்டினார். அதைப் பார்த்த சண்முகம் திகைத்தான்.

தருமனோ, சண்முகமும் மோகனாவும் முதல் வகுப்பில் உட்கார்ந்திருக்கும் அழகை ரசித்தான். "தவுல்காரரே, இந்தப் படம் ஒண்ணு கிடைச்சா கண்ணாடி போட்டு வீட்டிலே மாட்டணும்" என்று முத்துராக்குவிடம் கூறினான்.

"ஆகவே, எங்கள் மகாராஜாவுடன் சீமைக்கு வராததால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக லட்சம் ரூபாயும் கொடுக்க வேண்டும். அவர் மன்னிப்பும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்பதே என் வாதம்" என்று முடித்தார் காட்டன்.

சண்முகத்துக்கு ஆஜராகியிருந்த வக்கீல் எழுந்தார். ஸ்ரீமான் அரிராவ் என்று அவர் பெயர். தன்னுடைய நேரம் முழுவதையும் தேச விடுதலைப் போரிலே செலவழித்துக்கொண்டிருந்த அவருக்கு, இந்தக் கலைஞனின் வழக்கில் அக்கறை பிறந்தது. அவனை விடுவிப்பது நாட்டின் கடமை என்ற எண்ணம் ஏற்பட்டது. அதனாலேதான் பீசும் பேசாமல், கட்டம்பவனம் பிள்ளையிருந்தும் அவர் வழக்கை ஏற்றுக்கொண்டார். அவருடைய வாதம் பின்வருமாறு :

சட்டம் ஒன்றை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால், நாதஸ்வர வித்வான் ஸ்ரீசண்முகம் பிள்ளை அவர்கள் செய்தது குற்றம்தான். ஆனால் இந்தக் கேசில் சட்டம் ஒன்றை மாத்திரம் வைத்துக்கொண்டு பார்க்கக்கூடாது! ஸ்ரீ பிள்ளை ஒரு கலைஞர். கலை ஒருவருக்கு மட்டும் சொந்தமல்ல. அது நாட்டுக்கே சொந்தம். அவரைத் தடுப்பது பல பேருடைய இசையின்பத்தைப் பறிப்பதாகிறது. எத்தனை மக்கள் ஆனந்தத்தை இழப்பார்கள் என்பதற்காக நான் சாட்சியம் சொல்லத் தேவையில்லை. இதோ வந்திருக்கும் அத்தனை தேவஸ்தானப் பிரதிநிதிகளும், அத்தனை சங்கீத ரஸிகர்களுமே அதற்குச் சாட்சி. ஆகவே பொதுமக்களின் கலையை மகாராஜா தன்னுடையதாக்கிக்கொள்ள முடியாது. வாசிக்கவும் வாசியாமல் இருக்கவும் சண்முகத்துக்கு சுதந்திரம் உண்டு' என அவர் வாதித்தார்.



இவைகளைத் தவிர, பண்டார சன்னிதியின் வக்கீல் தன்னுடைய வாதம் ஒன்றையும் தெரிவித்துக்கொண்டார். "சண்முகம் எங்கள் ஆதீனத்தின் வித்துவான். ஆதீனத்தின் திருக்கோயில்களில் வாசிக்க வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது. மதன்பூர் மகாராஜாவின் ஒப்பந்தத்திற்கும் முந்தியது எங்கள் ஊழியம். எங்களது முதல் உரிமையை மறுப்பது முறையல்ல" என்று கேட்டுக்கொண்டார். இவற்றைப் பார்த்த ஆங்கில நீதிபதி திகைத்தார்.

"முதல் உரிமை அவர்களுடையதாக இருந்தால் சண்முகம் எங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது குற்றம். ஒப்பந்தத்தை மீறியது இரண்டாவது குற்றம்" என்று காட்டன் இரட்டைத் தாழ்ப்பாள் போட்டார். உடனே அரிராவுக்கு ஆத்திரம் மிகுந்தது.

"உங்கள் ஒப்பந்தத்தை வேண்டுமென்றே அவர் மீறவில்லை. ஆனால் மகாராஜா நடந்துகொண்ட விதத்தில் எந்த மானமுள்ள மனிதனும் ஒப்பந்தத்தை மதிக்கமாட்டான். என் கட்சிக்காரர் முதலில் ஒப்பந்தத்தை மதித்தார். அதற்கு மதிப்புக் கொடுத்ததால்தான் கப்பலில் ஏறினார். ஆனால் மகாராஜா அவரை முதல் நாளே வித்துவானாக நடத்தவில்லை. சமஸ்தானத்தின் வேலைக்காரனாகக் கருதி, ஆஜர் பட்டியலில் கையெழுத்துப் போடச்சொன்னார். அடுத்தாற்போல அவர் கண்முன் ஸாரங்கி வித்வான் ஒருவரை கருதி சேர்க்க நேரமாயிற்று என்பதற்காக வாசிக்காமலே எழுந்திருக்கச் சொன்னார். அது சண்முகத்தின் மனதில் ஆழ்ந்த கவலையை உண்டாக்கியது.

"அன்றைய தினமே மதுவெறியில் மோகனாவைத் தன்னுடன் டான்ஸ் ஆட அழைத்தார்."

"ஆங்கில நாகரிகப்படி அது பெரிய கௌரவம்" என்றார் காட்டன்.

"அவள் இந்தியப்பெண்" என்றார் அரிராவ்.

"ஆனால் அவள் அப்போது கன்னிப்பெண். சண்முகத்தின் மனைவியல்ல" என்று திருப்பினார் காட்டன்.

"கன்னிப்பெண் என்பதற்காக இந்நாட்டு நங்கை ஒருத்தியின் கையை யாரும் பிடித்துவிட முடியாது! உன்னைக் காதலிக்கிறேன் என்று அவளிடம் கூறிவிடவும் முடியாது."

"அப்படிக் கூறுவது மனிதனின் பேச்சுரிமை."

"அப்படிச் சொல்பவனை ஓங்கி அடிப்பது ஒரு இந்தியனின் கடமை. தனக்கு அவள் மனைவியாக இல்லாதபோதுகூட ஒரு பெண்ணுக்கு வரும் அவமானத்தைத் தடுப்பது கடமை என்ற முறையில் இதைச் சண்முகம் தடுத்தார். இது அவருடைய பண்புக்கு எடுத்துக்காட்டு. இதற்காக அடுத்த நாள் காலையில் அவரைத் தனக்குத் திருப்பள்ளி எழுச்சி வாசிக்க உத்தரவிட்டார் இந்த மகாராஜா. அப்போதுதான் முதல் முறையாக சண்முகம் மறுத்தார்."

"இது தவறா? அல்லது மகாராஜா தன்னைக் கடவுளாக எண்ணிக் கொண்டதுதான் தவறா என்று கேட்கிறேன்."

"இந்த மகாராஜா மோகனாவிடம் தவறாக நடந்துகொள்ள முற்பட்டார். கலை அரசியை தன் காமக்கிழத்தியாக நடத்த நினைத்தார் என்பதற்கு நான் தாக்கல் செய்திருக்கும் அவர் மனைவி ஆலின்ஜேன் அம்மையாரின் விவாகரத்து நடவடிக்கை ரிகார்டுகளே போதிய சாட்சி கூறும்" என்று அரிராவ் சொல்லி அமர்ந்தார்.

அப்போது காட்டன் துரை "மகாராஜாவின் பணம் மாத்திரம் அவருக்கு வேண்டியிருந்தது? வாசிக்க மனமில்லையோ?" என்றார்.

இதைக் கேட்ட சண்முகம் திடுக்கிட்டான். மகாராஜாவோ "அச்சி பாத்" என்றார்.

"அவரிடம் என் கட்சிக்காரர் காலணாக்கூட வாங்கவில்லை. அவர் கொடுத்த செக்கையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். கொழும்பு வரை அவருடன் கப்பலில் சென்ற செலவுக்கு ஆயிரம் ரூபாயும் கொடுத்திருக்கிறார்" என்றார் அரிராவ்.

அதற்குள் காட்டன் துரை எழுந்தார். "அது பொய், அவர் திருப்பிக் கொடுக்கவில்லை" என்று மேசையில் ஓங்கி அறைந்தார். இந்த சத்தத்தைக் கேட்ட நீதிபதி "Give me some cotton" என்று கூறிக் காதை விரலால் பொத்திக்கொண்டார்.

"அப்படியானால் இம்பீரியல் பாங்கில் அந்தச் செக்கு இன்னும் பணமாக்கப்படவில்லையோ?" என்றார் நீதிபதி.

மகாராஜாவின் முகத்தில் ஈயாடவில்லை. அவர் வைத்தியைப் பார்த்தார். வைத்தி வக்கீலைப் பார்த்தார். ஆனால் வக்கீல் தன்னை ஆத்திரத்துடன் பார்த்ததைக் கண்டு வைத்தி தலை குனிந்தார்.

"செக்குக்கு மெதுவாகப் பணம் வாங்கிக்கொள்ளலாம் என்று வந்திருக்கலாம்" என்றார் வக்கீல்.

"பிறகு வாங்க முடியாதே! மூன்று மாதங்களுக்குத்தானே அது அமலில் இருக்கும்" என்றார் நீதிபதி.

"பணம் வாங்கினாரா இல்லையா என்பது இப்போது கேள்வியல்ல. கையொப்பம் இட்டாரா இல்லையா என்பதுதான் கோர்ட்டார் கவனிக்க வேண்டிய விஷயம்."

"அதை நான் நன்றாகக் கவனித்துவிட்டேன். உங்கள் கட்சிக்காரராகிய மகாராஜாதான் அதைக் கவனிக்கவில்லை. செக்கில் கையெழுத் திடுவதுதான் அவர் கடமை. பாங்கியில் பணம் போடுவது தன் திவானின் கடமை என்று அவர் எண்ணினாரோ என்னவோ! செக்கு வெட்டிக் கொண்டே இருந்திருக்கிறார். இப்போது அவர் பேரால் பாங்கியில் மூவாயிரம் ரூபாய்தான் பணம் இருக்கிறது. சண்முகத்தின் செக்குக்கு மகாராஜாவே பணம் கொடுக்கச் சொல்லி இனி உத்தரவிட்டால்கூட அங்கு பணம் கிடையாது. செக்கு திரும்பி வந்துவிடும்!" என்று சொல்லிவிட்டு, "இதுக்குப் பிறகு தீர்ப்புச் சொல்லப்படும்" என்று தன் ஆசனத்தை விட்டு எழுந்தார் நீதிபதி.



காட்டன் துரைக்கு ஆத்திரமாய் வந்தது. செக்கு பணமாகாத விஷயத்தை தம்மிடம் வைத்தி சொல்லவில்லையே என்ற கோபம் அவருக்கு. அதே சமயத்தில் வைத்தியோ பத்தாயிரம் நஷ்டமாய் விட்டதே என்று வருந்தினார். என்றைக்காவது ஒரு நாள் பண்முடை வரும்போது இதில் போலிக் கையெழுத்திட்டு மாற்றி, ஹோட்டல் மாடியில் ரூம் எடுத்துக்கொள்ளலாம் என்று அவருக்கு ஆசை.

அப்போது, "வைத்திஜீ, கொஞ்சம் வெளியே வாரும்" என்றார் மகாராஜா ஆங்கிலத்தில்.

"ஜீ ஹை ஹுசூர்" என்றார் வைத்தி.

"இந்தப் பத்தாயிரம்?"

"நமக்கு மிச்சம்தான்."

"என்னிடம் சொல்லவே இல்லையே!"

"சொல்லவில்லையா? உங்கள் முன்னால்தானே சண்முகம் கொடுத்தான்!"

"வக்கீலிடம் ஏன் சொல்லவில்லை?"

"அது வழக்குக்கு எதிரிடை."

"வைத்திஜீ, உங்கள் மாதிரி உத்தியோகஸ்தர்கள்தான் எனக்கு வேண்டும்" என்று மகாராஜா கிண்டலாகக் கூறினார்.

"என்னைப் புகழாதீர்கள். என் கடமை" என்றார் வைத்தி.

மதன்பூர் மகாராஜாவும், வைத்தியும் பேசிக்கொண்டே வெளியே வந்துவிட்டார்கள்.

கோர்ட் வாசலிலே ஏராளமான கூட்டம் காத்திருந்தது. இந்தக் கூட்டத்திலே பல மாலைகள் தென்பட்டன. சிதம்பரத்திலிருந்து வந்த தீக்ஷிதர்கள் கையில் நடராஜனுக்கு அலங்கரிக்கப்பட்ட மாலைகள் இருந்தன. ஸ்ரீரங்கம், மதுரை, திருவாரூர், அழகர்கோவில், கும்பகோணம், தஞ்சாவூர், வைத்தீஸ்வரன்கோவில், சிக்கல் முதலிய ஸ்தலங்களிலிருந்தெல்லாம் கோவில் அதிகாரிகள் அங்கு வந்து கோவில் மரியாதைகளுடன் காத்திருந்தார்கள்.

இதைத் தவிர பல்லாயிரக்கணக்கில் ஜனங்கள் வேறு நின்றார்கள். அவர்களுக்கு மகாராஜாவைப் பார்த்தவுடனே ஆத்திரம் வந்தது.

"திரும்பிப் போ, போ!" என்று கோஷம் செய்தார்கள். மகாராஜா இதைக் கேட்டு வருந்தினார். ஆயினும் தெரியாதவர்போல் "வைத்திஜீ, என்ன சத்தம்?" என்றார்.

"ஜனங்களுக்கு சந்தோஷம். ஆரவாரம் செய்கிறார்கள்."

"திரும்பிப் போ, போ, என்றால்?"

"'ஜய ஹோ ஜயஹோ' என்று அர்த்தம்."

"இந்த மாலைகள் எல்லாம் யாருக்கு?"

"உங்களுக்குத்தான், கேசு ஜயித்தபின் போட....."

"அப்படியா? பகுத் குஷி! யார் இவர்கள்?"

"எல்லோரும் சண்முகத்தின் எதிரிகள்."

"அவருக்கு எதிரியும் உண்டா?"

"ஏன் இல்லை? எத்தனை பேர் தூக்கத்தை கெடுத்திருக்கான் தெரியுமா? ராத்திரிப் பத்து மணிக்கு அதை ஆரம்பித்தால் காலம்பர பத்து மணிக்குத்தான் நிறுத்துவான். இனிமேல் நிம்மதியாய்த் தூங்கலாம் என்று அந்த ஜனங்களுக்குச் சந்தோஷம்."

மகாராஜாவுக்கு இந்த வைத்தியை இப்பொழுதே கொன்று விடலாமா என்று தோன்றியது. ஆனால் கேசுக்குப் பயந்தார். அதைக் காட்டிக்கொள்ளாமல், "அச்சி பாத்! உங்களுக்குச் சங்கீத ஞானம் உண்டோ?" என்றார் மகாராஜா.

"இந்துஸ்தானி சங்கீதம் மட்டுந்தான் நான் ரசிப்பேன்" என்றார்.

"அச்சீ பாத்" என்றார் மகாராஜா.

வைத்திக்குச் சுரீர் என்றது. மகாராஜா பேச்சு ஒரு மாதிரியாக இருக்கிறதே என்று எண்ணினார்.

"இந்த வழக்கு தோற்றால் எனக்கு ரொம்ப சந்தோஷம் வைத்திஜி" என்றார் மகாராஜா. வைத்தி ஒரு கணம் யோசித்தார்.

"உங்களுக்குச் சந்தோஷம் ஏற்படத்தான் செய்யும்" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

"எப்படி?"

"ஆமாம், மகாராஜ். உங்களுக்கு இந்த வழக்கைச் சீக்கிரம் முடிச்சுக்கிண்டு சீமைக்குப் போறதுக்கு நோக்கம் வந்துடுத்து."

"அதெல்லாம் இல்லே வைத்திஜீ. இந்தக் கோர்ட்டுக்குள்ளே நுழைந்தது முதற்கொண்டு எனக்கு ஒரு சிந்தனை!"

"என்ன மகாராஜா?"

"அங்கே ஒருவராவது உங்களையும், என்னையும் பார்க்க வில்லையே! எல்லோரும் அந்த ரிஷிகள் இரண்டு பேரையும்தானே பார்த்தாங்க!"

"ஆமாம், தாடியும், மீசையுமா பார்வைக்கு ஒரு மாதிரியாக இருந்தார்கள். அதனாலே எல்லோருடைய பார்வையும் அங்கே போச்சு."

"அப்படியில்லே வைத்திஜி. பணத்தை வைத்துக்கொண்டு பலர் அக்கிரமம் செய்கிறார்கள். பணத்துக்காகச் சிலர் அக்கிரமத்துக்கு வாய்க்கால் வெட்டுகிறார்கள். இந்த உலகத்திலே, இந்த ஞானிகள் தன்னலமில்லாமல் வாழ்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே பெரியவர்கள்."



"ஐயோ மகாராஜா!"

"என்ன வைத்திஜி, தேளா? பாம்பா?"

"கவிழ்த்து விடுவீங்க போலிருக்கே!"

"நான் ஒருவரையும் கவிழ்க்க மாட்டேன். நான்தான் கவிழ்ந்து விட்டேன்."

"ஐயோ! அரை மறை கழண்டிருக்கும் போலிருக்கிறதே!"

"எங்கே?" என்றார் மகாராஜா.

"வண்டியிலே, மறை கழண்டால் கட கட வென்று சத்தம் போடும்!"

"சில பேரை ஓட்டச்சொன்னால் வண்டியே கவிழ்ந்துவிடும்" என்று ஆத்திரத்துடன் வைத்தி பக்கம் திரும்பினார் மகாராஜா.

அப்பொழுது மகாராஜாவின் அட்டெண்டர் ஓடி வந்தான். "கோர்ட்டு கூடிவிட்டது. நீதிபதி ஆசனத்தில் வந்து அமர்ந்துவிட்டார்" என்றான்.

உடனே மகாராஜா அவசரமாக உள்ளே நுழைந்தார். தன் வக்கீலின் அருகில் போய் அவரிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னார். வக்கீலின் முகம் கன்றியது.

இதை அறிந்த நீதிபதி "என்ன?........" என்று கேட்டார்.

"மகாராஜாவுக்கு ஏதோ விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமாம்" என்றார் காட்டன்.

"சரி சொல்லட்டும்" என்று உத்தரவாயிற்று.

"மேன்மை தங்கிய நீதிபதி அவர்களே!

"ரஸிகர் இல்லாவிட்டால் சங்கீதம் இல்லை. பக்தன் இல்லா விட்டால் பகவான் இல்லை. பிரஜைகள் இல்லாவிட்டால் அரசன் இல்லை என்பதை இன்றுதான் நான் உணர்ந்தேன். ஆனால் என் எதிரியாகிய சண்முகம் அரசன் அல்ல, ஆனால் அவரிடம் அன்பு கொண்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர் அரசனிலும் பெரியவர். அவர் அவருடைய மானத்தைப் பெரிதாக மதிக்கவில்லை. கலையின் மானத்தையே பெரிதாக மதிக்கிறார்.

"நான் ஆண்டுகள் தோறும் கூடவே ஒரு சங்கீத வித்வான்கள் கூட்டத்தைச் சீமைக்கு அழைத்துச் செல்வேன். அயல் நாட்டினர் நம் இசையைப் புகழும்போது என்னையே புகழுவதாக எண்ணிக் கொள்வேன். அப்படி உள்ள நான், உன் நாட்டிலேயே ஒரு வித்வானை இத்தனை பாடு படுத்தியதற்கு மிகவும் வருந்துகிறேன். இப்போதுதான் நான் வெளியே சண்முகம் விடுதலை அடையவேண்டும் என்ற ஆவலுடன் கூடி இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களைப் பார்த்தேன். அவர்கள் எல்லாம் என்னை விஷம் போல் வெறுத்தனர். ஸ்ரீ வைத்திஜி எனக்குப் பாஷை தெரியாது என்ற காரணத்தால் ஏதோ சொல்லி ஏமாற்றப் பார்த்தார். ஆனால் பாஷைதான் எனக்குத் தெரியாது, பாவம் புரியாதா?

"அவர்கள் இட்ட கூச்சலில் என் தூக்கம் கலைந்தது. வைத்தியின் பொய் உரைகளால் எனக்கு விழிப்பு ஏற்பட்டது. என் அகக் கண் அடைபட்டது. ஞானக்கண் திறந்தது. இப்போது நான் வழக்கை மனப்பூர்வமாக வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்... மிஸ்டர் சண்முகம்ஜி என்னை மன்னித்துவிடுங்கள்" என்று சொல்லும்போது அந்த மகாராஜாவுக்கும் மனம் கலங்கியது. கண்ணீர் வந்தது.

அந்த உத்தமக் கலைஞன் ஒரு நொடியில் தன் பகையை மறந்தான். ஓடோடி வந்தான். மகாராஜாவை மார்புறத் தழுவினான். நீதிபதியின் முகத்திலே நீதி வென்றது என்ற ஆனந்தம் காட்சி அளித்தது.

"இந்த வழக்கில் சண்முகம்தான் வென்றார். மகாராஜா தோற்றார் என்பதுதான் என்னுடைய தீர்ப்பு. ஆனால் அதற்கு முன் மகாராஜாவும் வெற்றி அடைந்துவிட்டார். இப்போது வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்" எனத் தீர்ப்பளித்தார் நீதிபதி.

மகாராஜா ஜாகைக்குப் போனார். அங்கே அவருக்கு ஒரு கடிதம் காத்திருந்தது. "இதைக் கண்டவுடனே, நீர் நம்மிடம் ஆஜராக வேண்டியது" என்று ரெசிடென்டின் உத்தரவுதான் அது. மகாராஜா திகைத்தார். "சரி நான் புறப்படறேன்" என்றார்.

"வழக்கு நடந்த செலவெல்லாம் பாக்கியிருக்கே!" என்றார் வைத்திஜி.

"அதெல்லாம் ஊருக்குப் போய் அனுப்பறேன்."

"வழக்கு ஜெயித்திருந்தால், எல்லோருக்கும் கடன் சொல்லலாம். இப்போ என்னை ஆபீசுப் பக்கம் போகவிடமாட்டாங்களே!"

"நீ என் மேன் ஆபீசுக்குப் போறே? நீயும் எங்கேயாவது ரயிலிலே ஏறிடு!" என்றார் மகாராஜா.

"ஆற்றங்கரை மரம்போல ஆச்சே நமது கதி" என்று வைத்தி சிரித்துக்கொண்டார்.

"மிஸ்டர் வைத்திஜி!"

"மிஸ்டர் மகாராஜா ..."

"உங்கள் பினாங்குசெட்டியிலே உம்முடைய கதி என்ன ஆகும்னு கேட்குறார்?"

"கேட்டேனே. 'வழக்கு ஜயித்தாலும் வாதி கெடுத்துவிடுவான், என் பிள்ளையை நம்பாதே' என்று உங்க பாதர் சொன்னார்."

"பின்னே எடு ஓட்டம்" என்றார் மகாராஜா.

வைத்தி வாசலை நோக்கி நடந்தார். வாசலில் நின்று வணங்கியது ஒரு கை. அவர்தான் கொழும்பு ஓட்டல் குமாஸ்தா! "அடே ஜோசப்பா?" என்றார் வைத்தி.

"ஆமாப்பா."

"நீ எங்கே வந்தே?"



"உங்க பாக்சைக் கொண்டுவந்தேன் சார். மகாராஜாவுடைய ஜுவெல்ஸ் பாக்ஸ் இதுதானே?" என்று ஒரு பெட்டியை நீட்டினார் ஜோசப்.

திடுக்கிட்டார் வைத்தி.

"என் ஜுவல்ஸ் பாக்ஸா" என்று ஆச்சரியத்துடன் திரும்பினார் மகாராஜா.

"ஆமாம், மகராஜ்! இதை வைத்திஜீ எங்கிட்டே டிபாசிட் செய்து ஆயிரம் ரூபாய் பணம் வாங்கினார். இப்போ முதலாளிகள் பணத்துக்கு விரட்டுகிறார்கள். நான் கோர்ட்டிலே உங்களைப் பார்த்தேன். அங்கு கேட்கக்கூடாதே என்று இங்கு வந்தேன்" என்றார் ஜோசப்.

"இங்கே கொடு. என்ன ஆபரணம் இருக்கிறது என்று பார்ப்போம்!" என்று சொல்லிக்கொண்டே மகாராஜா அந்தப் பெட்டியைப் பிடுங்கினார்.

பயப்படாத வைத்திக்கு பயம் வந்தது. 'இப்படி எதிரும் புதிருமாய் இருவரும் சந்தித்துவிட்டார்களே என்னடா செய்வது' என்று யோசித்தார்.

"என்ன வைத்திஜி இது? பெட்டி என் பெட்டி மாதிரி இல்லையே!" என்றார் மகாராஜா.

"உங்கள் பணத்திலே வாங்கினது உங்கள் பெட்டிதானே? ஏ ஜோசப்! முதலில் சீல் எல்லாம் சரியாய் இருக்கா பாரு."

"சரியாய் இருக்குது சார்."

"என் நகைப்பெட்டி என்கிறாரே, எந்த நகை?" என்றார் ஆவலுடன் மகாராஜா.

"அது நான் அப்புறம் சொல்லுகிறேன். இப்ப அவனுக்கு ஓர் ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்புங்கோ. பெட்டியை வாங்கி ஜாக்கிரதையா உள்ளே வைத்துப் பூட்டுங்கோ" என்றார் வைத்தி பதறாமல்.

"அது என்ன, ஊ எஸ்டேட்டுப் பத்திரமா? அல்லது அதில் வெட்டியெடுத்த ரத்தினங்களா?" என்று கிண்டலாகக் கேட்டுக் கொண்டே மகாராஜா பெட்டியின் சீலை உடைக்கப்போனார்.

அதற்குள் வைத்தியின் மூளை அற்புதமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

"வெட்டி எடுத்த ரத்தினமில்லே மகாராஜா! பெட்டியிலே இருப்பது விஷப்பாம்பு!" என்றார் வைத்தி.

"ஹா! ஸாம்ப்" என்று அலறினார் மகாராஜா. பாம்பு என்றவுடனே எல்லோரும் திடுக்கிட்டார்கள். மகாராஜாவின் கையிலிருந்த பெட்டி தவறி விழுந்தது. வைத்தி லபக்கென்று அதைக் கையில் எடுத்துக் கொண்டார்.

"நாகரத்தினம், ஜீவரத்தினம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதற்குள்ளே நாகரத்தினம் இருக்கிறது. உங்கள் தலையிலே சூட்டப் பதினாயிரம் ரூபாய் குடுத்து வாங்கினேன்."

''அரே பத்மாஷ். என் தலையிலே பாம்பையா கடிக்கவிட இருந்தாய்?''

''நான் என்ன செய்வேன்? அந்தப் பாவி பாம்போடே குடுத்துட்டான்.''

''அப்படியானால் உள்ளே பாம்பா இருக்கிறது?'' என்றார் மகாராஜா.

''ஆமா. அதுவாத்தானே ரத்தினத்தைக் கக்கும்.''

''அதற்கு ஆகாரம்?''

''சும்மா தண்ணிப் பாம்பில்லை சார், தப்பளையைப் புடிச்சுத் தின்னுக்கிட்டிருக்க. அது ஜாதி ஸர்ப்பம். தென்றலையே சாப்பிடும். சிரஞ்சீவியாக இருக்கும்.''

''உடல் இளைக்காதா?''

''ஏன் இளைக்குது? உள்ளே அதுக்கு வேண்டிய வைட்டமின் பில்ஸ், வாட்டர், மாத்திரை எல்லாவற்றையும் வைத்து ஏர்ஹோல்ஸ் போட்டுப் பூட்டி சீல் பண்ணி இவனிடம் கொடுத்தேன்.''

''ஏன் ஸார் என்னிடம் கொடுத்தீங்க? நான் உங்களுக்கு என்ன ஸார் கெடுதல் செய்தேன்?'' என்று கெஞ்சினார் ஜோஸப்பு.

''எனக்கு ரூமிலே வைத்துக்கொள்ளப் பயமாக இருந்தது. நடுராத்திரியிலே சீறிக்கொண்டு வந்து புடுங்கித்தானால்?''

மகாராஜா வெலவெலத்தார். ஜோசப்போ பயந்துபோய் சோபாவைப் பிடித்துக்கொண்டார்.

இதைப் பார்த்த வைத்தி, ''இந்தாங்க மகாராஜா. உங்க பொருள், உங்ககிட்டே இருக்கட்டும். ஆனா பெட்டியை மாத்திரம் கொஞ்ச நாளைக்குத் திறக்காதீங்கோ. அது முத்தின பாம்பு. பறக்கும். பார்த்தாலே விஷம். குட்பை, நான் வரேன்'' என்ற சொல்லி மகாராஜாவிடம் பெட்டியை நீட்டினார். மகாராஜா கையை இழுத்துக்கொண்டு பின்னால் ஓடினார். அப்பொழுது, துரதிர்ஷ்டவசமாக லேடி கனகாம்பரம் உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டவுடனே ''கனகாம்பரம், என் துப்பாக்கி?'' என்று கதறினார் மகாராஜா.

''உங்கள் பெல்டிலே இருக்கு சார்'' என்றாள் கனகாம்பரம்.

அப்போதுதான் மகாராஜாவுக்குத் துப்பாக்கி தன் இடுப்பிலே இருப்பது நினைவு வந்தது. சரேலென்று எடுத்து வைத்திக்கு நேரே நீட்டினார்.

''வைத்திஜீ ஆடாதீர்! அப்படியே அந்தப் பெட்டியைப் பார்த்துக் குறிவைக்கிறேன். ஒரே குண்டு. அந்தப் பாம்பு செத்துப்போகும். ஆடினே நீ போயிடுவே!'' என்று சொல்லி, துப்பாக்கியைக் குறி பார்த்தார்.

''ஐயோ மகாராஜா! பாம்பு செத்தால் ரத்தினம் போய்விடும்'' என்று கத்தினார் வைத்தி.



''ரத்தினம் வேண்டாம். விஷப்பாம்பு ஒழிந்தாலே போதும். அதைப் பார்த்தாலே விஷம்'' என்று விசையில் கையை வைத்தார் மகாராஜா.

வைத்தி பயந்து நடுங்கி, பெட்டியைக் கீழே விட்டெறிந்தார். படார் படார் என்று இரண்டு குண்டுகள் பெட்டியைத் துளைத்தன. உருண்டு ஓடியது கூவரக்கிண்ணி. அதோடு ஒரு சோப்புக் கட்டியும், ஒரு பிரஷ்ஷும், சேப்டி ரேசர்செட்டு ஒன்றும் கீழே விழுந்தது.

மகாராஜா பார்த்தார், வைத்தியின் மோசத்தை. ''மிஸ்டர் ஜோசப், வைத்திக்கு இனிமே இவை அவசியமில்லே. ஜெயிலிலேயே தலையை மொட்டை அடிப்பாங்க. போலீசில் ஒப்புவி அவனை. கூப்பிடு போலீசை!'' என்று கத்தினார்.

''என்ன சார், போலீஸ் போலீஸ்? என்னமோ பயமுறுத்துகிறீர்களே ஒரு ஆறு மாசம் உள்ளே வைக்கப்போறான். அங்கேயிருந்து நிம்மதியா கொஞ்சம் பிலாஸபியை திங் பண்ணுவேன். தாடி வளர்ந்துவிடும். பெரிய வேதாந்தியா வெளியே வந்தாலும் வந்துவிடுவேன். யாரு கண்டா?'' என்றார் வைத்தி.

''நீர் வேதாந்தியாக வந்தாலும் சரி, விஷப்பாம்பாய் இருந்தாலும் சரி, இழுத்துப் போ இவரை'' என்றார் மகாராஜா.

''நமஸ்தே! திரும்பி வரும்போது பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலே சந்திக்கிறேன்,'' என்றார் வைத்திஜீ.

''அங்கே இருந்தாலும் இருப்பேன், இல்லாவிட்டாலும் இல்லை. வி வில் மீட் இன் ஹெல், நிச்சயம் நரகத்திலே சந்திப்போம்'' என்றார் மகாராஜா.

வைத்திஜீ கையில் விலங்கிட்டு இழுத்துச் செல்லப்பட்டார். தானும் நல்லவனாக மாறிவிட வேண்டியதுதானோ என்று வைத்தி பயந்தார். ஆனால் படைத்தவன் சித்தம் எப்படியோ?

சண்முகம் பிள்ளை வழக்கு ஆபீசில் தாங்கமுடியாத கூட்டம்! அத்தனை பேர்களுக்கும் அங்கு விருந்து. மைனரும் நடேசனும் கட்டித் தழுவிக்கொண்டார்கள். சண்முகம் புன்னகை பொலிய அமர்ந்திருந்தான். கோவில் மாலைகள் அவனை அலங்கரித்தன. முதலில் மோகனாவைப் பார்க்க வேண்டும். மனதில் இருந்த பெரிய குறை நீங்கிவிட்டது என்று அவளிடம் சொல்லவேண்டுமென்று துடித்தான். கடம்பவனம்பிள்ளை மோகனாவை ஊருக்கு அனுப்பிவிட்டேன் என்று கூறினாரே அல்லாமல், அவளுக்கு உடம்பு சரியில்லையென்பதைச் சொல்லவில்லை.

''மைனர்வாள், ஊருக்கு ஒரு தந்தி கொடுக்கணுமே, கேஸ ஜெயித்துடுத்துன்னு'' என்றான் சண்முகம்.

அப்பொழுது, ''தந்தி'' என்று சொல்லிக்கொண்டே ஒரு தந்திப் பியூன் வந்தான். சண்முகம் தந்தியைப் பிரித்தான். ''அபாயம், மோகனா வின் உடல்நிலை சரியில்லை. உடனே புறப்பட்டு வாவும்'' என்ற

வார்த்தைகளைப் படித்தான். ஐயோ, பளிர்! பளிர்! நெஞ்சில் தாவது எலும்பு ஒடிந்துவிட்டதா என்ன? அல்லது நெஞ்சமே நின்றுவிட்டதா?

அவன் கையிலிருந்த தந்தி கீழே விழுந்தது. நாற்காலியிலிருந்து அவன் கீழே சாய்ந்து விழுந்ததைக் கவனித்த நடேசன், "ஐயோ!" என்று ஓடித் தூக்கினார்.

## ஐம்பத்து ஆறாம் அத்தியாயம்

# அன்னையே ஆடல் அரசி



**எ**ங்கு பார்த்தாலும் தலைகள். எங்கு பார்த்தாலும் தீவர்த்திகள் ஜோதி. எங்கு பார்த்தாலும் கோலாகலம். இளம் காளைகளும், இளம் பெண்களும் தங்கள் இதயக் காதலை எடுத்துப் பரிமாறிக்கொள்ளத் திருவிழாக் கூட்டத்திலே ஓடியாடி விளையாடுகின்றனர். மல்லாரி ஊதப்படுகின்றது. பொய்க்கால் குதிரை ஆடுகிறது. திருப்புகழ் பாடப்படுகிறது. 'திருச்சிற்றம்பலம்' என்று ஓதுவார்கள் ஓதுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் வாகனத்தில் இருக்கிற தெய்வம் வழுக்கி விழுந்தால், கூடியிருக்கும் மக்களுக்கு எவ்வளவு திகைப்பு ஏற்படும்! அத்தனை திகைப்பு அங்கிருந்தவர்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது.

சந்தோஷம் அதிகமானாலும், வருத்தம் அதிகமானாலும் அதிர்ச்சி ஏற்படுவது இயற்கை. சைக்கிள் டியூப்பில்கூட காற்று அதிகமானாலும், காற்று குறைவாக இருந்தாலும், பஞ்சர் வந்துவிடுகிறது. சேகர ஜெயித்த சந்தோஷத்தில் சண்முகத்துக்கு இந்த அதிர்ச்சி ஏற்பட்டதா, அல்லது மோகனாவுக்கு உடல் நலம் இல்லையென்ற வருத்தத்தால் இந்த அதிர்ச்சி ஏற்பட்டதா என்பதை அந்த டாக்டர்கள் யோசிக்கவில்லை. நிமிஷத்திற்கு இரண்டு மூன்று ஊசிகள் ஏற்றினார்கள்.

மகாவித்துவான் சண்முகசுந்தரம். அவனை, சிங்கார உடையில் சிரித்த முகத்துடன்தான் பார்த்து இருக்கின்றனர் மக்கள். அவன் வாயிலிருந்து இசை வழிவதைத்தான் பார்த்து இருக்கின்றனர். இன்று அவன் கடைவாயில் ரத்தம் கசிவதைக் கண்டவுடனே, அங்குள்ள எல்லோருக்கும் கண்களில் ரத்தம் வந்தது. இந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல் ஒவ்வொருவரும் அந்த இடத்தைவிட்டு அகலத்துடித்தார்கள்.

ஆனால் நடேசனால் எப்படி அகன்றோட முடியும்? ஓடுவதற்குத் தான் அவருடைய கால்கள் எழுமா? செந்திற மதுவை அன்று



பருகமாட்டேன் என்று கூறிய அவன் செப்பவள வாயிலிருந்து இன்று மதுபோன்ற சிவந்த ரத்தம் கசிவதை அவர் கண்களால் காணுவாரா? "ஐயோ" என்று துடித்தார்.

ஒன்றாகப் பிறந்தவர்களுக்குள் பங்காளிக் காய்ச்சல் வருகிறது. அண்ணனுக்கும், தம்பிக்கும் தகப்பன் வைத்த சொத்தில் சண்டை வருகிறது. உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல உடன் பிறப்புக்கூட பல இடங்களில் ஒற்றுமையாக இருப்பதில்லை. ஆனால் நட்போ, எங்கோ பிறக்கின்ற இரண்டு நதிகள் ஒன்றாகக் கலப்பதுபோல் கலக்கின்றது. அந்தச் சங்கமம் கடைசிவரையில் பிரிவது இல்லை. அம்மாதிரி உண்டாகிய நட்புதானே சண்முகத்துக்கும் நடேசனுக்கும்? அன்று சண்முகத்துக்காகத் தன் வியாபாரத்தையே தத்தம் செய்தார். இன்று அவனுக்காகவே தன் வாழ்வையும் தத்தம் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனால் ஒருவருக்காக ஒருவர் ரத்தத்தைக் கொடுக்கலாம். தன் கண்ணைக் கொடுக்கலாம். தன் உயிரைக் கொடுத்து பிறரைக் காப்பாற்ற முடியுமா? ஏன் இந்த ஒரு மருந்தை இன்னும் மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடிக்கவில்லை என்பதே இப்போது அவருக்குக் கவலை.

சண்முகத்தின் முகத்தைப் பார்க்கிறார், பேச்சு மூச்சு இல்லை. இமை ஒடுகிறது. நாட்டையும், கேதார ராகமும் தவழ்ந்த அத்திருவாயின் ஓரத்தில் சொட்டுகின்ற ரத்தத்தை உறிஞ்ச இரண்டு ஈக்கள் வந்து உட்காருகின்றன. நடேசன் மனதை அடக்கிப் பார்த்தார். முடியவில்லை. "தம்பி, என்னைக் கை விட்டுடாதீங்க!" என்று அலறிவிட்டார்.

"டாக்டர், அவரை எப்படியாவது பிழைக்க வைத்துவிடுங்கள். உங்களுக்கு எத்தனை செல்வம் வேண்டுமோ தானே தருகிறேன். எனக்குத் துறவறத்தில் நம்பிக்கையில்லை. ஆனால் நான் ஆண்டியானாலும் பாதகமில்லை. அவர் மகாவித்வான் டாக்டர். அவர் இசையில் நோய் குணமாகும். அவர் வாசிப்பிலே பட்ட மரம் துளிர்க்கும். இன்று அவரை இப்படிப் போட்டு வைத்திருக்கிறீர்களே! மூச்சு இருக்கிறதா பாருங்கள்!" என்று அடிக்கொரு கேள்வி கேட்டார்.

"மிஸ்டர் நடேசன், சத்தம் போடுவதுகூட அவர் உயிருக்கு ஆபத்து உண்டாக்கிவிடும். கடிகாரத்தின் பெண்டுலத்தை ஆட்டிவிடுபவன், அதன் நிலை தவறாமல் ஆட்ட வேண்டும். அமைதி தேவை" என்று சொல்லிய வண்ணம், அவன் கையின் நாடித்துடிப்பை ஒவ்வொரு விநாடியும் கவனித்துக்கொண்டே வந்தார் டாக்டர்.

பக்கத்தில் நின்ற மைனர், 'அன்று மோகனாவின் வாழ்வைக் கெடுக்க நினைத்தேன். தவற்றை உணர்ந்துகொண்டேன். விளக்கை அணையாமல் கண்ணாடி காப்பது போல என் செல்வம், எல்லாவற்றையும் அவளுடைய வாழ்க்கை விளக்கு நின்று எரிவதற்காகச் செலவு செய்து பாடுபட வேண்டுமென்று எண்ணினேனே! இன்று, நாளும் மனைவியும் நாரும் மலரும்போல் வாழ்ந்துகொண்டிருக்க, மோகனாவின்

வாழ்க்கையில் இந்தச் சோகம் ஏன் வரவேண்டும்? சிக்கல் சிங்கார வேலா, நீதான் காக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்.

கடம்பவனம் பிள்ளையோ, 'சே, இந்தக் கேசு இப்படித் திடீர் என்று வெற்றியாகி இருக்கப்படாது. அதுவே பெரிய திருஷ்டி' என்று சொல்லிக்கொண்டார். எல்லோரும் டாக்டருடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாவம், அந்த டாக்டருக்கு நோயாளிகளிடம் பழகிப் பழகி, முகத்தோற்றம் தோற்றுவிட்டது. வெற்றியா, தோல்வியா என்று எந்தக் குறியையும் அவர் முகத்திலிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை.

இன்னொரு ஊசி ஏற்றப்பட்டது. அவர் கைகள் நாடித் துடிப்பை எண்ணிய வண்ணம் இருந்தன. பக்கத்தில் இருந்தவர்கள் கண்டு திகைத்தார்கள். அப்போது சண்முகத்தின் கையை டாக்டர் மெதுவாகக் கீழே வைத்தார். நடேசன் ஓடிப்போய் அவர் முன் நின்றார்.

''எப்படிங்க இருக்கு? அவர் முகத்தை மோகனா ஒரு முறை பார்க்க முடியுமா? அவர்களைக் கணவன் மனைவியாக ஒன்றுசேர்த்து நான் மறுபடியும் காணமுடியுமா?'' என்று இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு கேட்டார்.

''நோ, இம்பாசிபில். அவருக்கு இப்பொழுதுதான் இதயத் துடிப்பு சற்று அதிகப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் அவரைத் திருவாரூருக்கு அழைத்துச் செல்ல முடியாது!'' என்றார் டாக்டர்.

அப்பொழுது, ''டாக்டர், என்னைத் திருவாரூரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள்'' என்று சொல்வது போல, சண்முகத்தின் வாயிலிருந்து ''மோகனா'' என்ற வார்த்தை மெல்லிய குரலில் வெளிவந்தது.

யார் தடுத்தால் என்ன? நடேசன் நினைத்ததை நிறைவேற்றிவிட்டார். ஒரு முதல் வகுப்பு வண்டியில் இரண்டு நர்சுகள், ஒரு டாக்டர் முதலியவர்களை இருக்கும்படி செய்து, சண்முகத்துக்கு வேண்டிய சிகிச்சைகளை இரவு முழுவதும் ஒன்றும் குறைவில்லாமல் நடத்தி, அவனைத் திருவாரூர் கொண்டுவந்து சேர்த்துவிட்டார் நடேசன்.

முத்துராக்குவின் முகத்தில் ஈயாடவில்லை. தருமனின் கண்கள் அழுது அழுது கொவ்வைப் பழம் போல வீங்கிவிட்டன. பாவம், தாளக்காரப் பையன் தன் தகப்பன் நோயாக இருக்கும்போது, என்ன பாடுபடுவானோ அந்தப் பாடு பட்டான்.

திருவாரூர் ஜங்ஷனிலே வண்டி வந்து நின்றது. பொழுது புலர்ந்தது. செங்கழுநீர் மலர்கள் மலர்ந்தன. சண்முகத்தின் செவ்வாயும் திறந்தது. ''திருவாரூர் வந்திடுச்சா அண்ணே?'' என்று கேட்டான்.

ஸ்டெரச்சரிலே, நான்கு பேர்கள், தன் மருமகப்பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு உள்ளே நுழைவதைக் கண்ட வடிவாம்பாள், ''ஹோ'' என்று அலறினாள். பக்கத்திலிருந்த வரதன் அவள் வாயைப் பொத்தினான்.



''அம்மா, அழாதீங்க. மோகனாவுக்குத் தெரிஞ்சா குடி முழுகிப் போகும். மூன்று உயிரைக் காப்பாத்துறது உங்க கையிலேதான் இருக்குது'' என்ற அவன் சொல்லவே, தன்னுடைய சோகத்தை அப்படியே விழுங்கினாள். அடித்து வைத்த கற்சிலைபோல் ஆனாள். அந்த வீட்டிலே எல்லோரும் ரகசியம் பேசிக்கொண்டார்கள். இருபது பேர்கள் இருந்தும் சிறிதும் சத்தம் கேட்கவில்லை. ஒரு புறத்திலே ''அத்தான்... அத்தான்'' என்ற குரல் மாத்திரம் வந்துகொண்டிருந்தது. மற்றொரு புறத்திலே ''மோகனா, மோகனா'' என்ற குரல் கேட்டது. இரண்டு உயிர்கள் காதல் எனும் பட்டுக்கயிற்றால் பூமியுடன் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. வெட்டி வீழ்த்திய வாழைமரம் போல விழுந்து கிடந்தனர் இருவரும்.

அவள் மார்பு வலியால் துடித்தாள். உயிர்த்துடிப்பு இன்னும் இருக்கிறது என்பதை அதுதான் அடிக்கடி ஞாபகப்படுத்தியது. தாங்க முடியாத பேறு கால வேதனை ஒருபுறம் இருக்கத் தன் கணவனுக்கு ஆபத்து என்பதை அவள் அறிந்து, அவளுக்கு உள்ளத்திலும் வேதனை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? வைத்தியர்கள் எல்லோருக்கும் இது ஒரு பெரும் புதிர். யாரேனும் ஒருவருக்கு ஒரு சிறு ஆபத்து வந்தால்கூட, சங்கிலியிலே ஒரு கண் அறுந்ததுபோல, அவர்கள் இருவருடைய வாழ்வே போய்விடுமே!

''திருச்சிற்றம்பலம்'' என்ற ஒலி முழங்கியது. அதைத் தொடர்ந்து ''சாமி, உள்ளே வாங்க சாமி! இரண்டு பேரும் கிடக்கிற நிலைமையைப் பாருங்க'' என்ற வரதனின் குரல் கேட்டது.

''சாமி, நீங்கதான் காப்பாத்தணும். நீங்கதானே கலியாணம் பண்ணிவச்சீங்க? இசையும், நாளமும் கலக்கணும்னு சொன்னீங்க. பண்ணும் பரதமும் பாலும் சர்க்கரையும் போலேன்னு சொன்னீங்களே. இப்ப நீங்க எங்கே போயிட்டீங்க சாமி?'' என்று சொல்லிக்கொண்டு, துயரம் தாங்காத வடிவாம்பாள், தன் தலையில் ஓங்கி அடித்துக்கொண்டு அலறி, அவர் காலில் விழுந்தாள்.

''பேதைப் பெண்ணே! உனக்கு அறிவு எங்கே போயிற்று? ஏன் அழுகிறாய்? பிறவிப்பிணி தீர்க்கும் எம்பெருமான் வாசலில் பிறந்துமா உனக்குப் பேதைமை?'' என்று சொல்லிக்கொண்டே, வாசற்படி தாண்டி உள்ளே வராத பரதேசியார், அன்று முதல் முறையாக மோகனாவின் வீட்டிற்குள் நுழைந்தார். மொட்டாயிருந்த மலர்கள் ஆதவனைக் கண்டு மலருவது போல் மூடிக்கிடந்த இதயங்கள் அன்று மாதவ யோகியைப் பார்த்தவுடனே மலர்ந்தன. ஆனால் அருளொழுகும் பரதேசியாரின் திருமுகமோ அன்று என்றுமில்லாத கவலையுடன் விளங்கியது.

''சாமி, வழக்கிலே ஜெயித்து, வாழ்க்கையிலே தோற்றுவிடுவோம் போலிருக்கே?'' என்று ஓடி வந்து அவர் கால்களைப் பிடித்து மன்றாடினார் மைனர்.

பாதேசியார் பதில் சொல்லவில்லை. வரதனுக்கு என்னவோ தோன்றியது.

"சாமி, பிறந்தவங்க சாகிறது நிச்சயம்தான். ஆனால் நாயனக்காரருக்கோ, மோகனாவுக்கோ ஏதாவது ஆகும்னு தெரிஞ்சா முன்னாலேயே சொல்லிடுங்க. அவங்களுக்குப் பிறகு நான் உசிரோட இருக்க நினைக்கலே" என்று அவரிடம் மன்றாடினான்.

அதற்கும் அவர் பேசவில்லை. அவருடைய நோக்கு முழுவதும் ஆகாயத்தையே நோக்கிக்கொண்டிருந்தது. அவருடைய சித்தம் எங்கேயோ சென்றது. அவர் நிஷ்டையில் இருக்கிறாரா, நினைவோடு இருக்கிறாரா என்பதைக்கூட கண்டறியமுடியவில்லை. நெடுநேரம் அப்படியே இருந்தார். அப்போது ஒரு விசேஷம் நிகழ்ந்தது. இதுவரை அவரைப் பார்த்துக் கை எடுக்காத ஒருவர், அவருடைய துறவிக் கோலத்தைக் கேலிக்கூத்து என்று கருதிய ஒருவர், தனக்கும் பிறருக்கும் உபயோகமில்லாமல் ஒருவர் உயிருடன் இருப்பது நாட்டுக்கே நஷ்டம் என்னும் கருத்து உடைய ஒருவர், ஓடிவந்து அவர் காலில் விழுந்தார். அவருடைய கொள்கைகள் எல்லாம் இன்று மறைந்தன. மனித உணர்ச்சி தலை தூக்கியது.

"அப்பா, நடேசா எழுந்திரு. நோய் வந்திருந்தால் மருந்து கொடுக்கலாம். அவர்கள் இருவரும் நோய்வாய்ப்பட்டவர்கள் அல்ல. தன் கணவனுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்ற அதிர்ச்சியால் அவள் விழுந்து கிடக்கிறாள். அதே எண்ணத்தில், தன் காதலிக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்ற கவலையில், அவன் தன்னையே மறந்து இருக்கிறான். நான் மருந்துதான் கொடுக்கலாம், மனதைக் கொடுக்க என்னாலாகாதே!

இசையால் அவன் மனதைத் தட்டி எழுப்பிவிடலாம். ஆனால் சண்முகத்தின் சித்தத்தைத் தொடும் இசைக்கு நான் எங்கு செல்வேன்?

"பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளை, பித்தனாகப் பிறப்பதும் உண்டு. இவை எல்லாம் எடுத்தவன்தான் கொடுக்கவேண்டும். ஒன்றும் இயலாது நடேசா, இன்று உன்னைத் தெய்வம் ஆட்கொண்டிருக்கிறது. ஆரூரில் எத்தனை மலர்கள் கிடைக்குமோ, அத்தனை பூக்களையும் அள்ளிக்கொண்டு தியாகேசன் பூங்கோவிலுக்குப் போ. கஞ்சமலர் வாவியெல்லாம் தேடு. எத்தனை கமல மலர்கள் உண்டோ, அவ்வளவும் தியாகேசன் கோவிலுக்கு வரட்டும். தியாகேசன் அசபா நடன மூர்த்தி. அவன் உயிரின் உருவம். ஓடும் மூச்சுத்தான், அவன் ஆனந்த ஆட்டம். அவன் திருவடிகளில் இன்று முசுகுந்தார்ச்சனை நடக்கட்டும். அவன்மீது மலர்தூவி சேவிப்போம். அந்தப் பரம்பொருள் கண் திறந்தால்தான், இந்தக் குடும்பத்தின் வாழ்வு மலரும். இல்லையோ .... எல்லாம் அவன் திருவுள்ளம். இம்மையில் நன்றாக வாழவேண்டும். மறுமையில் இறைவனுடன் இரண்டறக் கலக்கவேண்டும். இரண்டுக்கும் ஏற்ற



மருந்து இறைவன் காலடிதான்" என்று சொல்லிவிட்டு, அந்த மகான் வெகு வேகமாக வீட்டை விட்டு வெளியேறினார்.

"சாமி சண்முகத்தைப் பார்க்கவில்லையே! மோகனாவைப் பார்க்கவில்லையே!" என்றாள் வடிவாம்பாள்.

"இருவரும் என்னுள் இருக்கிறார்கள்" என்று கூறி விரைந்து விட்டார். அவர் சென்ற வேகத்திலே எங்கே செல்கிறாரோ என்று எல்லோரும் பயந்தார்கள்.

"கமலாம்பிகே" என்று கூறிக்கொண்டே அவர் கமலாலயத்துக்குள் இறங்கி நடந்தார். அந்தத் துறவியின் கண்ணீரால் அன்று கமலாலயம் கொதித்தது.

"தியாகேசா, என் கண்களைத் திரும்பக் கொடு. அன்று நம்பியாரூரருக்குக் கண்ணை அளித்தாய். இசைப்புலவன் கண் பெற்றான். இன்று இசையுலகின் கண்களைக் குருடாக்காதே.

**விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன்**
**விரும்பி யாட்பட் டேன்**
**குற்ற மொன்றுஞ் செய்த தில்லை**
**கொத்தை யாக்கினீர்**
**எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்**
**நீரே பழிப்பட்டீர்**

என்று அன்று, சுந்தரமூர்த்தி கேட்டார். ஆம், கலைத் தொண்டர்களை நீ காவாக்கால் உனக்குத்தான் பழியும் பாவமும். உன் சடா மகுடத்தில் தரித்திருக்கும் கலைக்கு அது அவமானம். ஏழிசையாய் இசைப் பயனாய் எனப் போற்றும் தமிழுக்கவமானம். சண்முகம் என்ன குற்றம் செய்தான்? எதற்காக அவனுக்கு இந்தச் சிறு வயதிலேயே இந்த இதய நோயை உண்டாக்கினாய்? உன் காது குளிர வேண்டும், உலக மக்கள் மனதில் நீ தலைதூக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதானே, அவன் தன் உயிரை மறந்து ஊதினான். அவனுடைய நெஞ்சத்திலே ஏன் துளைகள் ஏற்பட வேண்டும்? நாதமே, இது நியாயமா? பிறர் இதயம் குளிரச்செய்தவனுக்கு, இதயம் குளிர்ந்த வாழ்வு அல்லவா அளிக்க வேண்டும்? நாதாந்த வடிவே, இது நீதமா? அவன் ஒரு குற்றமும் செய்ததில்லை. உன் மக்களுக்குச் சந்தோஷத்தை அளித்தான். அவன் ஒரு குற்றமும் செய்ததில்லை. உன்னை நாத வடிவில் உபாசனை செய்தான். அவன் ஒரு குற்றமும் செய்ததில்லை. பிறர் நன்மைக்காகவே வாழ்ந்தான்; அவன் ஒரு குற்றமும் செய்ததில்லை. கலை, கலை என்று கலைக்காகவே வாழ்வைத் தத்தம் செய்தான். தியாகேசா, அவன் காதலைக்கூடப் பெரிதாகக் கருதவில்லை, கலையைப் பெரிதாகக் கருதினான். கமலாம்பிகையே அவன், எலும்பும் சதையும் போர்த்த சரீரத்தை மோகனாவிடம் காணவில்லை. அவள் கலையில் மயங்கினான். கலைக்காகவே அவளைக்

காதலித்தான். அந்தக் கலைஞனைக் காப்பாற்றுங்கள் அம்மையப்பா, பழிக்கு ஆளாகிவிடாதீர்கள்'' என்று உளம் உருகித் துதித்துக்கொண்டே இருந்தார் பரதேசியார்.

ஆனால், ''யாரோ ஒரு பரதேசி கமலாலயத்தில் தண்ணீருக்கு மேல் பத்மாசனத்திலே அமர்ந்து ஜல ஸ்தம்பனம் செய்கிறார்'' என்று சில மக்கள் கூடிப் பேசிக்கொண்டார்கள்.

அதே சமயத்தில் தியாகராஜாவின் சன்னிதியிலே மல்லிகை, முல்லை, இருவாட்சி, மரு, மருக்கொழுந்து, சம்பங்கி, சாதி சண்பகம், செங்கழுநீர் முதலிய மலர்கள் மலைபோல் குவிந்தன. இறைவனின் திருமார்பிலே மல்லிகை மலர்கள் வாரி இறைக்கப்பட்டன. ஒரு புறத்திலே ''கூற்றாயினவாறு விலக்க கிலீர்'' என்று தேவாரம் ஓதிக்கொண்டேயிருந்தார்கள் ஓதுவார்கள். ''தியாகேசா காப்பாற்று, கமலாம்பிகையே காப்பாற்று'' என்று சிவாச்சாரியார்களின் குரல்கள் திருமுன்னே வேண்டிக்கொண்டிருந்தன.

பகல் பொழுது எரிந்தது. மந்திரங்களும், இசையும், சாமிக்கண்ணுத் தாத்தாவின் பாரி நாதஸ்வரமும் எழுந்துகொண்டே வந்தன. கற்பூர தீபாராதனை நடந்தது. தீபமங்கள் ஜோதி எழுந்தது. ஆராய்ச்சி மணிகள் முழங்கின.

''அம்மா, அம்மா'' என்று அலறி அன்று ஒரு பசு அடித்ததே, அதே ஆராய்ச்சி மணிதான். அந்த ஆராய்ச்சி மணியின் முழக்கம் ஆடும் தியாகரின் அருள் விழிகளைத் திறந்தன. வடிவாம்பாள் என்ற தாய்ப்பசு, இன்று 'மகனே மகனே' என அழுதுகொண்டிருப்பதைக் கண்டார். தன் பக்தன் சாமிக்கண்ணு இசையால், தன் ருத்ரபாதங்களைப் பிடித்துக் கொண்டு கதறுவதைக் கண்டார். அதுமட்டுமல்ல, சிறிது சிறிதாக அந்த நாதயோக மூர்த்தி பரமானந்தர், ''என் உடல் உயிராகியவெல்லாம் நீ எடுத்துக்கொள்'' என்று தன் ஜீவஜோதியைக் கொண்டு ஆரத்தி செய்ய முன் வருவதைக் கண்டார். ஆராய்ச்சிமணி டணார்.... .... டணார் .... என்று அடித்துக்கொண்டே இருந்தது.

அப்போது வீடே அதிரும் வண்ணம், ''அத்தான்....'' என்று அலறினாள் மோகனா. நிசப்தம், எங்கும் நிசப்தம். ''குவா.... குவா'' என்ற மங்கலப் பேரொலி எழுந்தது. மதலையாய், இசையே மலர்ந்ததோ! மாணிக்கவேலன் பிறந்தானோ! அந்தக் குரலிலே, குலமாணிக்கத்தின் அழைப்பிலே 'குழல் இனிது, யாழினிது' என்றுள்ள அந்தத் தத்தை விழித்துக்கொண்டான். ''முருகா குழந்தை பிறந்துடுச்சா?'' என்றான் சண்முகம்.

''ஆம்பிளைப் புள்ளே!'' என்றாள் மரகதம். குலமாணிக்கம் தோன்றினான். குறைகள் நீங்கின. பிள்ளையென்ற போதே துள்ளி யெழுந்தாள் மோகனா. அன்பின் குரலாலும் ஆண்டவன் அருளாலும் சண்முகமும் மோகனாவும் சௌக்யமடைந்தனர்.



தொட்டிலிடும் நாளில் ''வடிவாம்பா, ஆடல் வேண்டுமா, அருளும் மகன் வேண்டுமா? பேரன் வேண்டுமா, பெரும் பணம் வேண்டுமா? உன் மகளுக்கு இறைவன் உயிரைக் கொடுத்தார். ஆனால் கலையை எடுத்துக்கொண்டுவிட்டார். குழந்தை பிறந்த பிறகு அவள் ஆடவே கூடாது'' என்று கூறிவிட்டார் பரதேசியார்.

''உடனே குழந்தையை எல்லோரும் ஆவலுடன் அவரிடம் எடுத்துக் கொடுத்தார்களாம். அவர் தில்லையம்பலம் எனச் சொல்லித் திருநீறு பூசி வாழ்த்தினாராம்'' என்றார் பேராசிரியர் தில்லைநாயகம். நான் சற்றுத் திகைத்தேன்.

''ஐயா, நீங்கள் ஆரம்பத்தில் சொல்லியபோது, மோகனாவின் வாழ்வு சோகக் கதையாக முடியுமென்று எதிர்பார்த்தேன். கதையை மங்களகரமாக முடித்துவிட்டீர்கள்! உமது வாய்க்குச் சர்க்கரை போடுகிறேன்'' என்றேன் நான்.

''குழந்தை பிறந்தால் சர்க்கரை கொடுக்கவேண்டியதுதானே. அதை வரதன் வழங்கினாராம்.''

''ஒரு கதையின் பெருமைக்காக, கதாநாயகனையோ, கதா நாயகியையோ கொல்வது கற்பனைக் கதைகளில்தாம். இயற்கையான கதைகளில் அப்படி ஏற்படுவதில்லை. அவளை ஆட்டி அலைக்கழித்தார். அவள் நடனத்தைக் காட்டி மறைத்துவிட்டார் என்பதுதான் இதில் சோக முடிவு'' என்றார் பேராசிரியர் தில்லைநாயகம்.

''குழலூதிய கண்ணன், வில்லேந்திய ராமன் இவர்களைத்தானே உலகம் போற்றுகிறது. கலையை மறந்து வாழ்ந்த கதையைக்கூடப் படிப்பதில்லையே. கலைஞர்களின் மறைவு கலை மறைந்துவிட்டதே என்பதனால்தான் வருத்தத்தை உண்டாக்குகிறது. அன்று முதல் மோகனா ஆடவே இல்லையா?'' என்றேன் நான்.

''இல்லை, பரதம் பத்தாண்டே.''

''சண்முகம்?''

''அவர் வாசித்தார், உலகெலாம் புகழ்பெற்றார்! மோகனாவுக்கு அதுவே ஆனந்தம்.''

''இப்பொழுது அவர்கள் இருவரும் எங்கிருக்கிறார்கள்?'' என்றேன். பேராசிரியரின் கண் கலங்கியது. அவர் நாத் தழுதழுத்தது.

''இசையன்பர்கள் இதயத்துள்; எனக்குள்'' என்றார் பேராசிரியர்.

''உங்களுக்குள்ளா?''

''ஆமாம். என் தாய்தான் மோகனாம்பாள், என் தந்தைதான் சண்முகசுந்தரம் பிள்ளை.''

''அப்படியானால் உங்கள் குலத்தொழிலை நீங்கள் கொள்ளவில்லையே!''

"அப்பாவிற்குப் பிறகு நான் எவ்வளவு நன்றாக வாசித்தாலும் எடுபடாது! ஆதலால்தான் அதை என் இஷ்ட தெய்வமாக வைத்துக் கொண்டு மக்களுக்கு அறிவூட்டும் ஆசிரியப் பணியில் இறங்கினேன். பரமானந்தரும், பண்ணும் அதாவது, பக்தியும் பாடலும் எனக்கு ஆசிரியர்களாக இருக்கின்றன."

பேராசிரியர் தில்லைநாயகம் அவர்கள் பெரும் புலவர். பன்மொழிகளில் பாடஞ் சொல்லுபவர். ஆயினும் இசையும் தமிழும் அவரது இரு கண்கள்.

சண்முகத்துக்கும் மோகனாவுக்கும் பிறந்த பிள்ளை இவ்வாறுதான் விளங்குவார் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடிந்தது.

## "முடிவுரை"

அன்பர்களே! தில்லானா மோகனாம்பாள் கதையை நான் எழுத ஆரம்பிக்கும்போது, ஆழம் தெரியாமல் சமுத்திரத்தில் இறங்குகின்றோமே என்று அஞ்சினேன். இரண்டு வாரங்களுக்குள், வாசகர்களாகிய நீங்கள் அளித்த ஆசி மொழிகள், என்னுடைய அச்சத்தை நீக்கிவிட்டன. உங்களைக் கலைக் கடலில் இறக்கி விட்டுவிட்டேன். கலை ரசிகர்களாகிய நீங்கள் என்னைத் தட்டிக்கொடுத்து, ஊக்குவித்து, நான் கனவிலும் காணமுடியாத ஒரு பெரிய படைப்பைப் படைக்கும்படி செய்துவிட்டீர்கள். இதற்காக ஒவ்வொரு வாசகருக்கும் தலை வணங்குகிறேன்.

என் வாழ்க்கையிலே இறைவன் அருளால் எத்தனையோ பொற்காலங்கள் எனக்கு வாய்ந்து வருகின்றன. அவைகளிலே தில்லானா மோகனாம்பாளும் ஒன்று. இதை எழுதும்போதெல்லாம் ஆனந்தக் கண்ணீரும், அன்பும், அருளும் எனை ஆட்கொண்டிருந்தன. இந்த மாபெரும் பாக்கியத்தை எனக்கு அளித்த ஆனந்த விகடன் ஆசிரியர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

"நாம் படிப்பது நமக்குக் கீழாக இருக்கக்கூடாது. நாம் எழுதுவதும் நமக்கு மேம்பட்டதாக இருக்கவேண்டும்" என்று பெரியோர்கள் உரைப்பார்கள். இந்த நாவலின் மூலமாக யாருடைய இதயத்தையேனும் யான் தீங்கு நோக்கச் செய்திருந்தால் அது என் மதியின் விளைவு. அதற்காக என்னை மன்னியுங்கள். பெருமை தரும் வகையில் எழுதி இருப்பேனேயானால் அது தமிழ்த் தாயின் அருள்.

(கலைமணி)

139563
2707